# கௌரி

## நீதிக்கான குரல்



# GOWRY: VOICE FOR JUSTICE

K. V. THAVARASHA PRESIDENT'S COUNSEL

# கௌரி

## நீதிக்கான குரல்

## GOWRY: VOICE FOR JUSTICE




Author:

K. V. Thavarasha President's Counsel



Published by

Sim Publications

**Gowry: Voice for Justice**

| | |
|---|---|
| **Author** | : **K.V.Thavarasha P.C.** |
| **First Edition** | : **1st October 2022** |
| **Design & Printing** | : **Unie Arts (Private) Ltd., Colombo 13, Sri Lanka**<br>**E-mail: uniearts@gmail.com** |
| **Publishers** | : **SIM-Publication**<br>**Riverbank Road, Kawathamunai,**<br>**Vahanery -30424, Sri Lanka**<br>**E-mail: simpro2002@gmail.com**<br>**Tel: +94 77 761 7227** |
| **Copyright** | : **SIM-Publication** |

கௌரி: நீதிக்கான குரல்

| | |
|---|---|
| ஆசிரியர் | : கே.வி.தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி |
| முதல் பதிப்பு | : 2022 அக்டோபர் 01 |
| வெளியீடு | : எஸ்.ஐ.எம்.பதிப்பகம் |
| வடிவமைப்பு அச்சுப்பதிப்பு | : யுனி ஆர்ட்ஸ் (தனியார்) நிறுவனம், கொழும்பு- 13, இலங்கை |
| பதிப்புரிமை | : எஸ்.ஐ.எம்.பதிப்பகம் |

**ISBN: 978-955-1447-25-0**

The opinions expressed in this publication are those of the author. They do not represent or reflect the opinion or the views of the printers Unie Arts (Private) Ltd.



# In Loving Memory of
# Late Mrs. Gowry Shangary Thavarasha LL.B
## Senior Attorney-At-Law

1955 - 2021

# சமர்ப்பணம்

மாசுமறுவற்று மகத்தான மனிதாபிமானியாகி

அன்பெனும் பேரொளியால் மனிதர் மனங் கவர்ந்து

கருணையின் பேரூற்றாய் மண்ணெங்கும் பிரவகித்து

மனிதத்தின் அடையாளமாகி பாரினில் நிலைபெற்று

அநீதிக்கெதிரான சிம்மக்குரலாகி ஓங்கியொலித்து

நீதியைநிலைநாட்ட இறுதிக்கணம் வரைப் பயணித்த இரும்புப் பெண்

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவுக்கு இந்நூல் சமர்ப்பணம்

# *Dedication*

*This Publication is devoted to*
*The Gowry Shangary Thavarasha Senior Attorney-at-Law*
*for her devotion of serving during to lifetime to safeguard*
*and maintain the human dignity*
*who was enchanted everyone with her vivacious smile*
*who was the exemplary and foundation of the cordiality & sincerity*
*who was the everlasting portrait of humanity and human dignity*
*who made very loud roaring voice against injustice*
*It is to say that she is a iron lady who fought to uphold justice & fairness.*



# பொருளடக்கம் | CONTENTS


i. பயங்கரவாத வழக்குகளின் சரித்திர முக்கியத்துவமிக்க பொக்கிசம் - பதிப்புரை xiii

ii. மனவலிமையால் தவராசாவும் கௌரிசங்கரியும் உறுதிபெற்று உயர்ந்தே இருக்கின்றனர் : **உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா Hon. Justice S.Thurairaja, P.C.** xv

iii. நீதியை நிலை நிறுத்தும் போரில் சட்டப்போராளிகளாய் : எழுத்தாளர், ஊடகவியலாளர், **முஸ்டீன், Musdeen**-Writer-Journalist xx

iv. கண்ணீரோடும் காத்திருப்போடும் நீங்காத நினைவுகளோடும் : **கே.வி.தவராசா**, ஜனாதிபதி சட்டத்தரணி, **K.V.Thavarasha,** P.C. xxxi

v. நிபுணத்துவமிக்க சட்ட ஆளுமை சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசா (1955-2021) : **தர்மராஜா தர்மஜா,** கனிஷ்ட சட்டத்தரணி **Tharmarajah Tharmaja** Junior, Attorney-at-Law xxxvii

vi. In Memory of Mrs. Gowry Shangary Thavarasha L.L.B. Senior Attorney-at-law- A life of Diversity with a mind of Service Attitude xlix


## அனுதாபச் செய்திகள் | Condolence Messages


1. அனுதாபச் செய்தி : **மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்ஹ** இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி 2

2. Condolence Message : **Hon. Ranil Wickremesinghe**, President, Democratic Socialist Republic of Sri Lanka. 3

3. A kind and warm lady with great affection : **Hon. Chief Justice Jayantha Jayasuriya P.C.** 4

4. In memory of Gowry Shangary Thavarasha, Attorney at Law : **Justice Dr. Shirani A. Bandaranayake** 5

5. Condolence Message : **Sidonia Gabriel,** First Secretary of Embassy of Switzerland to Sri Lanka and the Maldives 6

6. இரங்கல் செய்தி : **சிடோனியா காபிரியல்,** முதலாம் செயலாளர், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகம் 6

7. Message from the President of Bar Association of Sri Lanka : **Saliya Pieris P.C.** 7

8. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக துணிச்சலுடன் செயற்பட்ட வீரப்பெண்மணி : **சாலிய பீரிஸ்,** ஜனாதிபதி சட்டத்தரணி. 8

9. She was an Iron Lady : **Rajeev Amarasoorya,** Attorney-at-Law 9

10. துணிகரமாக நிமிர்ந்து நின்ற இரும்புச் சீமாட்டி : **ரஜீவ் அமரசூரிய** சட்டத்தரணி 9

11. She is a Friend in need a friend indeed : **Hon.Nishantha Hapuarachchi,** High Court Judge. 10

12. In memory of Gowry : **Gihan Pilapitiya** High Court Judge. 11

13. In Tribute to a Benignant Soul; Mrs. Gowry Thavarasha : **Sujatha Alahapperuma**, Retired High Court Judge. 12

14. ஒரு நல்ல ஆத்மாவுக்கான எனது இதய அஞ்சலி : **சுஜாதா அழகப்பெரும**, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி. 13

15. A Loving tribute to Gowry : **S. Anil Silva**, President's Counsel. 14

16. A Loving tribute to Gowry : **Sanjeeva Jayawardena**, President's counsel. 15

17. Gowry Shangary Thavarasha, A True Friend : **JC Weliamuna**, President's Counsel. 16

18. கௌரி சங்கரி தவராசா, என் உயிர் நண்பி : **ஜே.சி. வெலியமுன**, ஜனாதிபதி சட்டத்தரணி. 18

19. A Tribute to Iron Lady : **Chula Bandara,** Senior Attorney-at-Law. 20

20. The legendary header 'Gowry Shangary Thavarasha' : **Hejaaz Hizbullah**, Senior Attorney-at-Law 21

21. ඔබට සුබ ගමන් මිතුරිය : **Sanjaya Gamage JPUM**, Attorney-at-Law. 24

22. Deep From The Heart : **R. Navodayam**, Attorney-at-Law, 26

23. அறிவுசார்ந்த பிரகாசமான சிந்தனை கொண்டவர் அமரர் கௌரி சங்கரி தவராசா : **இரா.நவோதயம்** சட்டத்தரணி முன்னைநாள் உயர் நீதிமன்ற பிரதி பதிவாளர். 27

24. Mother to us all : **Asthika Devendra** Senior Attorney-at-Law. 29

25. A Loving tribute to Gowry Madam : **Pulasthi Hewamanna**, Senior Attorney-at-Law. 30

26. Goddess of Law who Strengthened Democratic Camp : **Dr Rajitha Senaratne** MP. 31

27. ஜனநாயக முறைமையை வலுப்படுத்திய சட்ட தெய்வம் : **வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன** (பாராளுமன்ற உறுப்பினர்) 33

28. අපේ ආදරණීය ගෞරි - **එස්.බී. දිසානායක** පාර්ලිමේන්තු මන්ත්‍රී 35

29. எங்களின் அன்புக்குரிய கௌரி : **எஸ் பி திசாநாயக்க** பாராளுமன்ற உறுப்பினர். 36

30. Gowry Thavarasha : A brilliant lawyer with a heart of gold. A humanitarian who always put her best foot forward : **G.Shani Abeysekara**, Former Director of Criminal Investigation Department. 37

31. பெண்ணின் பெருமை, சான்றாண்மை மிக்கவர் கௌரிசங்கரி தவராசா : **மாவை. சோ. சேனாதிராசா**, தலைவர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி. 40

32. அரசதரப்பின் அதிகாரத் திணிப்புகளை சட்டரீதியாக நீர்த்துப்போகச் செய்தவர் : **சிவஞானம் சிறீதரன்**, நாடாளுமன்ற உறுப்பினர். 42

33. தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் பலமான உதவிக்கரம் : 43
**சித்தார்த்தன்,** தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், பாராளுமன்ற உறுப்பினர்.

34. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டவர் திருமதி கௌரி சங்கரி தவராசா : **செல்வம் அடைக்கலநாதன்,** 44
தலைவர் - தமிழ் ஈழ விடுதலை இயக்கம். பாராளுமன்ற உறுப்பினர்.

35. கௌரி சங்கரி தவராசா : ஒரு இரும்புப் பெண், சட்ட தொழிலில் சிங்கப் பெண்மணி : 45
**டாக்டர் என். குமரகுருபரன்,** முன்னாள், மேல்மாகாணசபை உறுப்பினர்,

36. An Iron lady but a Lion Lady in her Legal Profession Late Ms Gowry Shangary Thavarasha : **Dr.N.Kumaragurubaran**, ExMPC 46

37. சட்டப்போராளி கௌரிசங்கரி தவராசாவின் மறைவு நீதிக்காக ஏங்கும் மக்களுக்கு பேரிழப்பு : **திருமதி விஜயகலா மகேஸ்வரன்,** 47
முன்னாள் இராஜாங்க அமைச்சர்.

38. இதய அஞ்சலி : **சீ. வீ. கே. சிவஞானம்,** அவைத்தலைவர், வடக்கு மாகாண சபை. 48

39. ஆற்றலைத் தன் மக்களுக்காக அர்ப்பணித்த ஆளுமை : **சசிகலா இரவிராஜ்.** 49

40. அநீதிகளுக்கு எதிராய் துணிந்து குரல் கொடுத்து வந்த துணிச்சலான பெண்மணி : **நடராஜர் காண்டீபன்**, சட்டத்தரணி, தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம். 50

41. துணிந்து போராடுவது அவருடன் பிறந்தது : **கௌரி அக்கா, விக்கி அத்தான், கரன், நிதா, ஹரி, சிவானி** (மொனாக்கோ. பிரான்ஸ்) 52

42. சங்கரி எல்லாவற்றுக்கும் துணிந்தவள் : 53
அன்புச்சகோதரி, **கௌரிமலர் சிவசுதன்** (கனடா)

43. பசுமையான நினைவுகள் : **கௌரி மோகன்** (லண்டன்) 54

44. மொழி மீதும் இலக்கியத்தின் மீதும் இருந்த பற்று அளவிட முடியாது : 55
அன்புத் தங்கை **தர்ஷினி நந்தகுமார்** (லண்டன்)

45. என் உடன்பிறப்பானாய் அது இறைவன் அருளிய கொடை : 56
என்றும் உங்கள் தங்கை, **விஜி** (ரொறன்டோ, கனடா)

46. அழியாத நினைவுகள்… அவவின் கால் தொட்டு வணங்கினார்கள் : 57
**விக்கி அத்தான்** (மொனாக்கோ, பிரான்ஸ்)

47. அம்மாவுக்கு நிகராக அன்பு காட்டியவர் அண்ணி : 58
**வேலாயுதபிள்ளை கனகராசா,** மைத்துனர் (சுவிஸ்)

48. மரணம் வரை மறக்க முடியாத உறவு கௌரி சங்கரி : 59
**சாந்தி லோகராஜா,** சகோதரி (லண்டன்)

49. அண்ணியிடமிருந்துதான் வாழ்வைக் கற்றுக்கொள்ள முடியும் : 60
**வேலாயுத பிள்ளை யோகராசா**, மைத்துனர் (சுவிட்சர்லாந்து)

50. அவரின் தைரியம் ஆச்சரியப்பட வைக்கும் : அன்பு மகன், **கரன்** (பிரான்ஸ்) 61

51. வழிகாட்டியாக விளங்கிய நட்சத்திரம் : **சிறிமாமா ஞானம் அக்கா.** 61

52. எமக்குள் தாக்கங்களை ஏற்படுத்தினார் : **சுகன்யா** (கனடா) 62

53. Your heartfelt laugh will be missed :
Loving Children, **Franziska and Daniel** (Germany) 63

54. We were always the centre of her attention : **Kapilan Nandakumar** (UK) 63

55. How can I put into words : **Abbey Nandakumar** (UK) 64

56. My Dearest Madam, : **Chandra Wickramaratne**. 64

57. உங்கள் புகழ் உலகளாவியது : மருமகள் **நிதர்சனா** (பிரான்ஸ்) 65

58. வரலாறு கூறும் உங்கள் வாழ்க்கை : **செந்தில்ராஜா குடும்பம்** (France) 66

59. ஆருயிர் நண்பிக்கு!! : பால்ய சிநேகிதி **மலர் இராமநாதன்** 67

60. A Tribute to Aunty Gowry : **Minoli Ratnayake** Attorney-At-Law. 68

61. சட்டத்துறையின் சரித்திர நாயகிக்கு ஒரு புகழுஞ்சலி :
**தர்மராஜா தர்மஜா**, கனிஷ்ட சட்டத்தரணி. 69

62. என் குரு தேவதைக்கு. : **பிருந்தா சந்திரகேஷ்**, கனிஷ்ட சட்டத்தரணி. 70

63. Au Revoir Gowry Nenda : **Chithmina Weliamuna** 71

63. மனித உரிமைகளுக்காக ஒலித்த குரல் மௌனித்தது : **சுரேஸ் பிரேமச்சந்திரன்**, 72

64. தமிழ்தேசிய அரசியத்துக்காக பல வழக்குகளை வாதாடி வென்ற சிரேஷ்ட
வழக்கறிஞர் அமரர் கௌரி சங்கரி தவராசா! : **பா.அரியநேத்திரன்** மு.பா.உ 73

65. பலரின் விடுதலைக்கு காரணமான கௌரி சங்கரி தவராசா :
**ஈஸ்வரபாதம் சரவணபவன்**, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், உதயம் குழுமத் தலைவர். 75

66. கௌரியின் சட்ட ஆளுமை :
**சு. இரத்ணவடிவேல்**, இலங்கை தமிழரசுக் கட்சி (மத்திய குழு உறுப்பினர்). 76

67. துணிச்சல் மிக்க பெண் சட்டத்தரணியை இழந்தது தமிழ் சமூகம் :
**ச. ஆனல்ட் பிரியந்தன்**, சட்டத்தரணி. 78

68. வீர அன்னையின் வீழாப் புகழோடு :
**நா. சத்தியமூர்த்தி**, பிரதித் தலைவர், தந்தை செல்வா நற்பணி மன்றம். 80

69. சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அர்ப்பணிப்புக்கள் :
**வே. இளஞ்செழியன் (செழியன்)** குளோபள் பணிப்பாளர் "பூம்புகார்" கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 81

70. சரித்திரம் படைத்த தமிழச்சி கௌரிசங்கரி தவராசா : **சிவ.சந்திரபாலன்** (சுவிஸ்லாந்து) 83

71. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அயராது செயற்பட்டவர் கௌரி சங்கரி :
**தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள்.** 85

72. புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரின் நினைவு அஞ்சலி : **புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்** (கனடா) 86

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்


| | | |
|---|---|---|
| i. | பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 1979-2022 | 89 |
| ii. | ஆயுதப் போராட்டமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் | 105 |
| iii. | பயங்கரவாத தடுப்புச்சட்டமும் சிங்கள தலைமைத்துவங்களும் | 115 |
| iv. | அவசரகாலச் சட்டத்தின் தோற்றம் | 121 |
| v. | கைதுகளும் வழக்குகளும் (1981-2022) | 133 |
| vi. | 1981ஆம் ஆண்டு இனக்கலவரம் (Central Camp) | 135 |
| vii. | 1983ஆம் ஆண்டின் இனவழிப்பு | 138 |
| viii. | அரசியல் கைதிகளின் வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணிகள் துரோகிகள் | 144 |


## 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான முக்கிய 40 வழக்குகள்


| | | |
|---|---|---|
| 1. | குட்டிமணி, ஜெகநாதன், ஞானவேல் வழக்கு - 1982 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முதல் வழக்கு | 149 |
| 2. | முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை வழக்கு 1989-1994 Mariyathas Vs The State (1995) 1 SLR | 156 |
| 3. | புலிகளின் உளவாளி அகிலனின் வித்துடல் - 1991 | 165 |
| 4. | டென்மார்க்கிலிருந்து நாடுகடத்தப்பட்ட சித்ரா கைதும் விடுதலையும் (டென்மார்க் ஊடகவியலாளர்கள் நால்வர் கைதும் 1996) | 169 |
| 5. | ஜரிஸ் தாயும் மகனும் இணைந்தனர் - 1996 | 178 |
| 6. | கலதாரி ஹோட்டல் குண்டுவெடிப்பு 1997–2004 | 183 |
| 7. | வர்த்தகர் ராஜன் கைதும் விடுதலையும் 1998-1999 (கெபிடல் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர்) | 191 |
| 8. | தர்மகர்த்தா வீரசுப்பிரமணியம் கொலை -2000-2002-2008 | 198 |
| 9. | நவாப்தீன் கைதும் வழக்கில் விடுதலையும் 2000-2014 | 203 |
| 10. | செல்வராசா காந்தன் கைதும் விடுதலையும் 2001-2006 | 208 |
| 11. | யாழ் பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜயவர்தன கொலை -2005 -2006 | 212 |
| 12. | வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை – 2005-2018 | 215 |
| 13. | ஞானகோன் கைதும் விடுதலையும் 2005 | 229 |
| 14. | மேஜர் துவான் நிஸாம் முத்தலிப், மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க கொலை முயற்சி 2006 – 2017 | 231 |
| 15. | காலி கடற்படை முகாம் தாக்குதல் வழக்கு 2006–2022 | 233 |

16. ரவிராஜ் சுட்டுக்கொலை — 2006-2016 237

17. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கொலை முயற்சி 2006-2018 241

18. பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் கொலை முயற்சி 2006-2022 249

19. பாதுகாப்புச் செயலாளர் கொலைமுயற்சி வழக்கு 2006 -2011 251

20. கோட்டபாய ராஜபக்ச கொலை முயற்சி-2006-2020 (புற்றுநோயாளி 14 வருடத்தின் பின் விடுதலை) 260

21. ஊடகவியளாளர் பரமேஸ்வரி, சுகந்திகா கைது 2006 265

22. புலனாய்வாளர் தர்மதாச விடுதலை 2007-2019 273

23. கொழும்பில் குண்டுவெடிப்பு ராஜீவ் விடுதலை 2007 -2014 282

24. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு எதிரான வழக்கு 2008-2009 286

25. மின் மாற்று நிலையத்தை தகர்த்தெறிய சதி 2008-2018 (ஜெயராம் ராமநாதன் ஏழு வழுக்குகளிலிருந்தும் விடுதலை) 292

26. கொழும்பில் கடற்படையினரால் ஐந்து மாணவர்கள் உட்பட 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம் 2008-2022 295

27. மோகனருபன் கைதும் விடுதலையும் (தடுப்புக்காவல் உத்தரவுகளும்) 2008-2015 304

28. ஊடகவியளாளர் யசிதரன் வளர்மதி கைதும் விடுதலையும் 2008-2009 310

29. சிறுமி சோபிகா 2009 331

30. வித்தியாதரன் கைதும் விடுதலையும் 2009 334

31. சேலான் வங்கி முகாமையாளர் விடுதலை 2009-2013 343

32. சாந்ததேவன், கோமகன் விடுதலை 2009 – 2016 345

33. சயந்தன் தற்கொலையா? கொலையா? 2008 -2012 349

34. சுவிஸ் கருணாகரன் விடுதலை 2010-2013 358

35. வேலமாலிதனும் லட்சுமி காந்தனும் கைதும் விடுதலையும் 2013 362

36. பெண் கடற்புலிகளின் தலைவி பகிரதி விடுதலை 2015 – 2016 366

37. விஜயகலா மகேஸ்வரன் கைதும் பிணையும்-2019 371

38. சி.ஐ.டி.யின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கைதும் பிணையும் 2020-2021 376

39. உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநர் விடுதலை 2021 379

40. முன்னாள் மாகாண ஆளுநர் அசாத் சாலி கைதும் விடுதலையும் 387

நன்றி நவில்கின்றோம் 393

# பதிப்புரை

## பயங்கரவாத வழக்குகளின் சரித்திர முக்கியத்துவமிக்க பொக்கிசம்

எமது பதிப்பகத்தின் 18வது வெளியீடு இந்நூல். ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவின் முதலாவது படைப்பாக்கம். இந்நூல் மூன்று முக்கிய விடயதானங்களைக் கொண்டிருக்கின்றது. முதலாவது மறைந்த சிரேஸ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசாவின் நினைவுகளைச் சுமந்திருக்கின்றது. இரண்டாவது பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றிய தெளிவைப் பதிவு செய்திருக்கின்றது. மூன்றாவது இந்நாட்டில் பேசு பொருளாக இருந்த, இருக்கின்ற மிக முக்கியமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய பதிவுகள் போன்றனவே இந்நூலின் பெறுமதியைக் கணிப்பிடப் போதுமானவை.

### சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி பற்றிய நினைவுகள்

சட்டத்துறை சார்ந்த செயற்பாட்டாளர்களின் நெகிழ்ச்சி மிக்க உணர்வுக் கதம்பங்களாலும் அமரர் கௌரி சங்கரி தவராசா மீது அபிமானங் கொண்டவர்களின் ஆராதிப்புகளாலும் நண்பர்களின் நன்றிப் பெருக்காலும் அவரது சேவையைப் பெற்றுக்கொண்டவர்களின் நினைவுக் கீற்றுகளாலும் அழகு பெறுகின்றது. அமரர் கௌரி சங்கரி வாழும் போதே பெருமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய ஆளுமை என்பதை இங்கு பதிவு செய்யப்பட்டுள்ள கருத்துகள் மிக ஆழமாக நிலைநிறுத்துகின்றன.

### பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் பற்றிய தெளிவு

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத்தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றிலிரு பெரும்பான்மையால் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டதில் இருந்து தற்போது 2022ஆம் ஆண்டு 12ஆம் இலக்கச் சட்டமாக திருத்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வந்தது வரைக்குமான கட்டம் கட்டமான படிமுறைப்படுத்தல்களை

இங்கு மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியுமான வகையில் எழுதியிருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

### குறிப்பிடத்தக்க பேசுபொருளான வழக்குகள்

இலங்கை வரலாற்றில் மிகப் பிரபலமான வழக்குகள் பலவற்றை இங்கு நாம் படிக்க முடிகின்றது. இந்த வழக்குகளையெல்லாம் அமரர் கௌரி சங்கரியும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் எப்படி வெற்றிகரமாக எதிர்கொண்டார்கள் என்பதை மிகச் சுவாரஸ்யமாகப் படிக்க முடியும். ஒரு சட்டம் எப்படி அதிகாரத்தின் பிடியில் சிக்குண்டு சின்னாபின்னமாகி எடுத்த எடுப்புக்கெல்லாம் விருப்பப்படி பயன்படுத்தப்பட்டது என்பதைத் துண்டாக உடைத்து நம் முன்னால் போட்டுவிடுகின்றார் கே.வி. இதனாலேயே இந்நூல் வெளியீடு மிகவும் அவதானத்துக்குரியதாகின்றது.

எமது வெளியீட்டுப் பட்டியலில் இந்நூல் வெளியீடு என்பது மிகவும் பெறுமதியானதாக மாறுகின்றமைக்கு முக்கிய காரணம் கே.வி பற்றியதாவும் அமரர் கௌரி பற்றியதாகவும் இருப்பதே.

இந்நூல் சட்டத்துறை மாணவர்கள் அனைவருக்கும் நிச்சயம் மிகுந்த பயனளிப்பதாய் இருக்கும் என்பதில் துளியும் ஐயம் கிடையாது.

**செய்ஹ் இஸ்மாயில் ஞாபகார்த்த பதிப்பகம்.**
காவத்தமுனை

# அணிந்துரை

## மனவலிமையால் தவராசாவும் கௌரிசங்கரியும் உறுதிபெற்று உயர்ந்தே இருக்கின்றனர்

கௌரி சங்கரி என்ற மிகச் சிறந்த மனித நேயமுள்ள சட்ட ஆளுமையை இழந்திருக்கும் பொழுதொன்றில் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுகின்றேன். கௌரி சங்கரியும் கே.வி. தவராசாவும் எனக்குத் தூரமானவர்கள் கிடையாது. சட்டத்துறைச் சார்ந்தவர்கள் என்பதால் எமக்கிடையே இருந்த நெருக்கம் இக்குறிப்பை மன நெகிழ்ச்சியோடு எழுத வைக்கின்றது.

இந்நூலை ஆழமாக வாசிக்கின்ற போது எனக்கேற்பட்ட ஒரேயொரு உணர்வு "சட்டத்தரணிகளாக இருந்து கொண்டே தனது மக்களுக்காக இத்தனை தைரியமாகக் களத்தில் நின்று எல்லாச் சவால்களையும் எதிர்கொள்ளும் திறன் எத்தனை பேருக்கு இருக்கும் என்பதுதான்." என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்த முக்கியமான விடயமும் அதுதான். சட்ட ரீதியில் ஒரு வழக்கை எதிர்கொள்ளுதல் என்பது பொதுவானது. முழுக்க முழுக்க மனிதாபிமானத்தோடும் கருணையோடும் காருண்யத்தோடும் எப்போதுமே இயங்குதல் என்பது சாதாரணமானதல்ல தவராசாவும் கௌரி சங்கரியும் இந்த விடயத்தில் ஒருவர்க்கொருவர் சளைத்தவர்களே அல்ல. ஒத்த இயல்புடைய இருவர் எப்படியெல்லாம் முரண்களேயில்லாமல் ஒருமித்துப் பயணிக்க முடியும் என்பதற்கு இவர்கள் இருவரும் நமக்கு முன்னால் இருக்கின்ற நடைமுறை உதாரணம் என்றே சொல்ல முடியும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்ததில் இருந்து அதன் கீழ் தொடுக்கப்பட்ட முதல் வழக்கில் இருந்து இன்று வரைக்கும் எந்த விட்டுக்கொடுப்புகளுமில்லாது எந்தவொரு அதிகாரத்துக்கும் சற்றும் தலைசாய்க்காது அனைத்தையும் நேர்கொண்டே பழக்கப்பட்ட இருவரும் இணைந்த சட்டவாழ்க்கையின் அறுவடையாகவே இந்நூலை என்னால் பார்க்க

முடிகின்றது. இருவரும் வழக்காடிய பலநூறு வழக்குகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட நாற்பது வழக்குகளை இங்கு தவராசா எழுதியிருக்கின்றார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பற்றிக் கற்போருக்கு இந்நூல் மிகவும் சிறப்பான ஒரு வழிகாட்டியாகவும் துணையாகவும் நிச்சயம் இருக்கும் எனக் கூறுவதில் எந்தத் தயக்கமும் இல்லை.

இலங்கை வரலாற்றில் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ன விதமான அதிர்வுகளையும் விளைவுகளையும் ஏற்படுத்தி இருக்கின்றது என்பதைச் சாதாரணமாகப் பார்க்கின்ற போது அது தேசியப்பாதுகாப்புக்குஅச்சுறுத்தல்விடுக்கின்றதனிநபர்களையும்குழுக்களையும்கட்டுப்படுத்தப் பயன்படும் ஒன்றாகவே கருதத் தக்கதாகத் தெரியும். ஆனால் இந்நூலை வாசித்து முடிக்கின்ற போது இச்சட்டம் எந்தளவுக்கு தவறான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் நீதிக்குப் புறம்பாக எப்படியெல்லாம் கையாளப்பட்டிருக்கின்றது என்பதையும் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இலங்கை வரலாற்றில் இச்சட்டத்தைத் திறம்பட எதிர்கொண்டவர்களில் தவராசாவே முதன்மையானவர் என்பதற்கு அவர் எதிர்கொண்ட வழக்குகளே போதுமான சான்றாக அமைகின்றது. அது போலவே அவருக்கு அனைத்து வழக்குகளிலும் மிகச் சரியான பக்கபலமாகவும் உறுதுணையாகவும் மனித உரிமைச் செயற்பாடுகள் சார்ந்தும் தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் சார்ந்தும் சட்ட ரீதியில் புயலாக இயங்கிய கௌரி சங்கரியும் இப்பெருமைக்கு உரித்தானவரே. இவர்கள் இருவரும் இந்த வழக்குகளை எதிர்கொண்ட விதத்தைப் படிக்கும் போது ஒரு சட்டச் செயற்பாட்டளனுக்கு வருகின்ற உயிரச்சுறுத்தல் இயல்பானதாகவே தோன்றும். ஆனாலும் மரண அச்சுறுத்தலுக்கு எப்போதும் சவால் விட்டபடியே தமது சட்டப் போராட்டத்தில் நீதியை நிலைநாட்ட இருவரும் தம்மை இணைந்து அர்ப்பணித்திருக்கும் விந்தை இலங்கைச் சட்ட வரலாற்றில் கட்டாயம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டியதே.

இந்நாட்டில் பயங்கரவாதத்தடைச் சட்டமும் சரி அவசரகாலச் சட்டமும் சரி மக்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் நீதியை நிலைநாட்டும் பொறிமுறையில் அவை தவறிவிட்டன என்பதையும் ஒரு தலைப்பட்சமாகவே அரச இயந்திரத்துக்கு அவசியப்பட்ட முறையில் அமுலாக்கப்பட்டன என்பதையும் தவராசா இங்கு தான் எதிர்க்கொண்ட வழக்குகளின் நேரடி அனுபவத்தில் இருந்து தெளிவாக எடுத்துரைக்கின்றார். சட்டத்துறை மாணவர்களுக்கும் சரி சமகாலத்தில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் வழக்குகளை எதிர்க்கொள்ள நேர்கின்ற சட்டத்தரணிகளுக்கும் சரி அனுபவ ரீதியில் அத்தகு வழக்குகளை எதிர்கொள்வதற்கான உட்சாகத்தையும் வழிகாட்டலையும் இந்நூல் வழங்கத் தவறவில்லை. நாற்பது வழக்குகளிலும் நாற்பது விதமான சட்டக் குறிப்புகள் கிடைக்கின்றன. இங்கு மிகவும் ஆழ்ந்து நோக்க வேண்டிய மிக முக்கியமான அம்சம் உண்மை வெற்றி பெறுவதும் பொய் தோற்றுப் போவதும்தான். சட்டத்துறைச் செயற்பாட்டில் எப்போதும் ஒரு சட்டப் போராளியை உயிர்ப்புடன் வைத்திருப்பது இந்த வாய்மையுணர்வுதான். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தவராசாவும் கௌரி சங்கரியும் எதிர்கொண்ட அனைத்து வழக்குகளிலும் குற்றஞ்சாட்டப்பட்டு எதிராளிகளாக அல்லது பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பெருவாரியானவர்கள் விடுதலை செய்யப்படுகின்றார்கள். அவர்களின் வாழ்க்கை நீதியால் காப்பாற்றப்படுகின்றது. அந்நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு

நீண்ட போராட்டம் செய்ய வேண்டியேற்படுகின்றது என்பதை இங்கு தெளிவாக அவதானிக்க முடிகின்றது. சட்டத்தை அமல்படுத்த நினைப்பவர்கள் காவல்துறையாகட்டும் அல்லது இந்நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நினைக்கும் ஆயுதப் படைத்தரப்பாக இருக்கட்டும் ஏன் ஒரு சட்டத்தை சத்தியத்தின் பக்கமாக அல்லது உண்மையின் பக்கமாக நகர்த்தத் தவறினார்கள் என்ற கேள்வி நீதித்துறையின் மீதும் நீதியின் மீதும் பற்றுக் கொண்ட இந்நாட்டின் ஒரு பிரஜைக்குத் தோன்றுவது மிகவும் இயல்பானது. இது மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டியதாகும் என்று கருதுகின்றேன்.

பொதுவான பார்வையில் இந்தத் தேசத்துக்கு சேதம் விளைவித்தவர்களாக முன்னிலைப்படுத்தபட்டவர்கள் பல தசாப்தங்கள் கடந்து நிரபராதிகளாக விடுதலை செய்யப்படும் பொழுது ஏற்படுகின்ற மனவுணர்வுக்கு மதிப்புரை வழங்க இயலாது. வார்த்தைகளில் அதை நிறைப்படுத்தவும் முடியாது. அத்தகைய உணர்க்கதம்பங்கள் விருவிருப்பான நாவலொன்றை அல்லது சிறுகதையொன்றைப் படிப்பது போன்று வாசகனை இறுக அணைத்துக் கொண்டு அழைத்துச் செல்லும் எழுத்தாக்கம் ஒரு சட்ட வழிகாட்டி நூலைப் படிக்கும் மனநிலையில் இருந்து விடுபடச் செய்கின்றது. எனது வாழ்நாளில் எத்தனையோ சட்டத்துறைச் சார் நூல்களைப் படித்திருக்கின்றேன். ஆனால் உணர்வுகளாலும் உறுதியாலும் இனப்பற்றோடும் தடைகள் அனைத்தையுமே சமரசம் செய்துகொள்ளாமல் எதிர்கொள்கின்ற உணர்வுநிலைப்பாற்பட்ட இதன் ஒவ்வொரு பக்கமும் நம்மை உணர்ச்சி பெறச் செய்கின்றன. மனவலிமையால் தவராசாவும் கௌரி சங்கரியும் உறுதிபெற்று உயர்ந்தே இருக்கின்றனர்.

சட்டத்துறைச் செயற்களத்தில் எத்தகைய முக்கியத்துவம் இவர்கள் இருவருக்கும் இருக்கின்றதோ அதேயளவுக்கு அவர்களது தனிப்பட்ட உறவில் மதிப்புமிக்க இனிமையான உயர் எண்ணப்பாடு எனக்கு இருக்கின்றது.

பல்கலைக்கழகத்திலும் சட்டக்கல்லூரியிலும் நான் அவருக்கு நேரடி கனிஷ்டமானவர். சட்டக்கல்லூரியில் நாங்கள் ஏற்பாடு செய்த விழாவொன்றுக்கு நிதி திரட்டிக்கொண்டிருந்தோம் பொதுவாகக் கல்லூரி வளாகத்தில் நிதி திரட்டும் போது அதிசிரேஷ்ட சட்டமாணவர்களிடம் மட்டுமே செல்வது வழக்கம். மற்றவர்களிடம் கேட்பதுமில்லை அவர்கள் தருவதுமில்லை. அப்படித்தான் நாங்களும் அதிசிரேஷ்ட சட்டமாணவர்களிடம் பணம் திரட்டிக்கொண்டு கௌரி சங்கரியைத் தாண்டிச் சென்றோம் அவரிடம் நாங்கள் நிதியளிக்குமாறு கேட்கத் தயாராக இருக்கவில்லை காரணம் வளாகத்தில் நிலைக்கொண்டிருந்த வழக்கம் அப்படி. அதனாலேயே இயல்பாகவே அவரைப் பொருட்படுத்தாமல் தாண்டிச் சென்றோம். அவர் எம்மை அழைத்து விடயத்தைக் கேட்டுவிட்டு தானாக முன்வந்து ஒரு தொகையை எமக்களித்தார். இப்படித்தான் எங்களின் அறிமுகம் தொடங்கியது. அந்த நிகழ்வுக்குப் பின்னர் அவர்மீது ஒருவிதமான மதிப்புமிக்க விருப்பம் இருந்தது. இதே விருப்பு ஒரு கட்டத்தில் இனம்புரியாத குரோதமாக மாறியது.

சட்டமாஅதிபர் திணைக்களத்தில் பணிபுரிந்த காலம் இளரத்தம் மிக வேகமாகத் துடிப்புடன் செயற்பட்டகாலமுந்தான். நாங்கள் நினைப்பது சரியென்றும் எடுக்கின்ற முடிவுகள்

தரமானதென்றும் வீறுகொண்ட காளையாக எம்மை நாமே கருதிச் செயற்பட்ட நிலையில் ஒருவர் சந்தேக நபராக இருந்து குற்றஞ்சாட்டப்பட்டால் அவரைக் குற்றவாளியாகவே பார்த்தும் முடிவெடுத்தும் அறிக்கையிட்டுக் கொண்டிருந்த காலத்தில் எங்களது செயற்பாடுகளுக்கு பெரும் இடரை அளிப்பவராக கௌரி சங்கரி மாறியிருந்தார். நாங்கள் குற்றவாளி என்ற கோதாவில் பைல்களை நகர்த்திக்கொண்டிருக்கும் போது அவர் அவர்களை நிரபராதிகள் என்று அறிக்கையிட்டு அவர்களுக்கான சட்டப் போராட்டத்தைச் சற்றும் சளைக்காமல் செய்வார். இதனால் அவர் எங்களுக்கு நேரடியாகச் சவால் விடுத்துக் குடைச்சல் கொடுப்பவராகவே எங்களால் பார்க்கப்பட்டார். இதனாலேயே அவர்மீது அளவிலாத கோபம் ஏற்பட்டது. எந்தளவுக்கென்றால் எங்களிடம் நேரங்கேட்டால் கூடத் “தெரியாது” என்றே சொல்லிக் கடந்து போவோம். அவரைப் பொருட்படுத்தவே தோன்றாது. காலங்கடந்தது எங்களுக்கும் அனுபவம் வந்தது. நாங்கள் குற்றவாளிகளாக அறிக்கையிட்டவர்கள் கௌரியின் முயற்சியால் விடுதலை பெற்றார்கள் அந்த இடத்தில் இருந்துதான் எங்களது சிந்தனையில் மாற்றம் வரத் தொடங்கியது. நான் அறிக்கையிடல்களை ஆழமாகப் பார்க்கத் தொடங்கினேன். உண்மையொன்றுக்காக அவர் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொண்டியங்கும் பாங்கு புரிந்தது நீதியின் பாதையில் சட்டவாட்சியின் மீது அபிமானங்கொண்ட ஒருவனாக எனக்குள் அதன் பின்னர் குரோதம் மொத்தமாக மறைந்து மதிப்பு உருவானது பின்னர் ஒரு கட்டத்தில் அந்த மதிப்பு மனிதாபிமானமிக்க தாய்மையின் மீதான விருப்பாக மாறியது.

சுகயீனமுற்ற செய்தி கேள்விப்பட்டால் தன்கையாலேயே சமைத்துக் கொண்டு வருவார். அல்லது எமக்குச் சிரமமே இல்லாதபடி பொருத்தமான இடத்தில் ஓடர் செய்திருப்பார். நலனோம்புவதில் தெரியும் தாய்மையை யாரும் உணர்ந்துகொள்வர். மற்றவர்களுக்கு உதவுவதில் தன்னை அவர் ஈடுபடுத்திக்கொள்ளும் பாங்கு உண்மையிலேயே ஆச்சரியப்பட வைத்தது. குறிப்பாகக் குழந்தைகள் பெண்கள் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்காக தன்னால் முடிந்த உயர்ந்தபட்ச முயற்சியையும் உதவியையும் முன்னிறுத்துவதில் அவர் பின்நின்றதேயில்லை. நீலாவனையில் இருந்து பாதிக்கப்பட்ட ஒருவர் வந்திருந்தார். கௌரியிடம் அவரை உதவிக்காகப் பரிந்துரைத்தேன். அவர் கௌரியைச் சந்தித்தார். அவரிடம் பெருமளவில் பணமிருக்கவில்லை. தன்னிடமிருந்த ஐந்நூறு ரூபாவை மட்டும் அவர் கௌரியிடம் வழங்கிவிட்டுச் சென்றார். மறுநாள் அவருக்காக வாதாடியவர் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. நிச்சயமாக ஐந்நூறு ரூபாவுக்கு ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியை நியமிக்க முடியாது. ஆனால் அவருக்கான கொடுப்பனவைத் தன் சொந்தப் பணத்தில் இருந்து கௌரி வழங்கி அந்த வழக்கில் அவரை ஆஜராகப் பணித்திருந்தார். இப்படி எத்தனையோ எளியவர்களை உதவிக்காக நான் கௌரியிடம் பரிந்துரை செய்திருப்பேன். அத்தனை பேருக்கும் கௌரி மிகத் தரமான உயர்நிலையில் இருக்கின்ற சட்டத்தரணிகளையே நியமிப்பார். இனப்பற்றுக்கு அவரை வரைவிலக்கணமாகக் கொள்ளலாம். அந்தளவுக்குத் தன்மக்கள் மீது ஈடுபாடு காட்டினார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற ஒரு கோசம் நம் நாட்டில் இன்னும் முழங்கிக் கொண்டிருக்கின்றது. எல்லார் பார்வைக்கும் புரிதலுக்குமப்பால் முகாமுக்குள் அடைக்கலத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களின் தகவல்கள் உத்தியோகப்பூர்வமாகப்

பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதற்காக அவர் கையாண்ட யுக்திகள் விநோதமானவை. பலர் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதில் கௌரியின் பங்கு மிகக் காத்திரமானது அறிவுஜீவித்துவமிக்கது. உண்மையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் மட்டுமே இருக்கும் ஆற்றல் வழியாகத்தான் அத்தகைய இக்கட்டான நிலைமைகளை விகடமாகக் கையாளும் திறன் கொண்டவராக கௌரி நிலைப்பட்டு நின்றார்.

எத்தனையோ பேரை உதவிக்காக கௌரியைப் பரிந்துரை செய்து செய்து அனுப்பியிருப்பேன் அவர்களில் யாரும் வெறுங்கையுடன் திரும்பியது கிடையாது. சிறிது காலத்தில் நான் நீதியரசராகினேன் கடைசி வரையும் என்னிடம் ஒரு உதவியைக்கூட அவர் கோரிவரவில்லை. இது போல் எனக்குத் தெரிய மற்றவர்களுக்கு உதவுவதில் மட்டுமே அவர் முன்னின்றார் யாரிடமும் தனிப்பட்ட முறையில் உதவி கோருவதே இல்லை. கொஞ்சம் தெரிந்தாலே போதுமென்ற இக்காலத்தில் அவரது இப்பண்பு அதிசயமானதுதான். இப்படி இருக்கத் தக்க அவரிடம் உதவிபெற்றுவிட்டு அவருக்கே உபத்திரவம் செய்தவர்களைக் கூட நான் அறிவேன். அவர்களை தெரிந்துகொண்டாலும் கூட அந்தத் துரோகம் குறித்து ஒரு வார்த்தை பேசாமல் கடந்து போகும் கௌரியின் பண்பு அபரிமிதமானது. இப்படிப்பட்ட மனிதத்தின் மேன்மை பொருந்திய தொழில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு சட்ட ஆளுமையை நாம் இழந்துவிட்டோம் எனும் போது மனது நிரந்தரமானதொரு துயரை தன்னில் பதித்துக்கொள்கின்றது.

உயர் நீதிமன்ற நீதியரசர்

**எஸ்.துரைராஜா**

உயர் நீதி மன்றம் - இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு.

***Justice S. Thurairaja, PC***

***Judge of the Supreme Court of Sri Lanka.***

# நீதியை நிலை நிறுத்தும் போரில் சட்டப்போராளிகளாய்!

புங்குடுதீவில் பிறந்து சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று 1981 முதல் அவர் முக்கியமான நபராக அடையாளப்படுத்தப்படக் காரணம் அவரது தைரியமும் மனிதாபிமானமும்தான். எதற்குமஞ்சாத தைரியசாலிகளையும் எதையும் எதிர் கொள்ளும் நெஞ்சுரமிக்கவர்களையும் மிகவிரைவிலேயே எனக்குப் பிடித்துப் போகும். அதிலும் குறிப்பாக உண்மைக்காகப் போராடுதல் என்பது மிக முக்கியமான விடயம்.

ஒரு கட்டத்தில் தவராசா என்ற பெயர் ஓர் மீட்பரின் ஸ்தானத்தில் முகாமிட்டிருந்ததையும் நான் அறிவேன். பலருக்குள்ளும் அந்நம்பிக்கை துளிர்விடக் காரணம் யாராலும் திட்டமிட்டுக் கற்பிக்கப்பட்டதல்ல அது இயல்பாக உருவாகிவிட்டிருந்தது. சிலவிடயங்கள் அப்படித்தான் அற்புதமான கவிதை போல மனதில் இடம்பிடித்துவிடும் கவிதை ரசிகனாக இராதபோதும்.

தவராசா என்ற பெயர் எப்போதுமே எனக்குள் சிம்மாசனமிட்டிருந்த பெயர். வே.சு.கருணாகரண் அவர்கள் எழுதிய கனவுகளும் நினைவுகளும் புத்தக வெளியீட்டு விழாவில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டபோது நான் புத்தகத்தின் திறனாய்வுரைக்காக அழைக்கப்பட்டிருந்தேன். அப்போதுதான் அவரை முதன் முதலாக நேரடியாகக் காண்கின்றேன். ஒரே மேடையில் அவருடன் அமர்ந்திருப்பது எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. கைகுலுக்கிக் கதைப்பதற்குக்கூட நான் பின்வாங்கினேன். மிகவும் மதிக்கும் ஒருவர் நமக்கு நேரெதிர் தோன்றுகையில் அப்படியே உறைந்து போய் இருப்பது இயல்புதானே. அதனாலேயே மேடையில் அமர்வதை பெரும்பாலும் தவிர்த்துக் கொண்டேன்.

நாம் அதிகம் நேசிக்கும் இலக்கியப் படைப்பாளியை நேரடியாக நமக்கு முன்னால் காண்கின்ற போது இரண்டு அடிதள்ளிக் கால்கள் தாமாகப் பின்னகருமே அத்தகைய

மரியாதைக்கு முன்னால் வார்த்தைகள் மௌனமாக, மெய்சிலிர்த்து எமக்குள் குடிகொள்ளும் அமைதிக்கு முன் நாம் சரணடைந்திருப்போம். மனதில் பெருமிதம் மட்டுமே நிறைந்திருக்கும். அத்தகைய உணர்வுதான் சட்டத்தரணி தவராசாவைக் கண்டபோதும் ஏற்பட்டது.

எல்லாவற்றுக்குமப்பால் தமிழர்களுக்குத் தலைமையை வழங்குமளவுக்குப் புதைந்துகிடக்கும் ஆளுமையை வெளிக்காட்டித் தம்பட்டமடித்து ஆரவாரிக்கத் தெரியாத அமைதியான சுபாவம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்று நான் எப்போதும் யோசிப்பதுண்டு.

அவரது சிந்தனைகளையும் அவரது அறிவையும் நல்லெண்ணங்களையும் ஏன் இந்த சமுதாயம் முழுமையாகப் பயன்படுத்தத் தெரியாது அமைதியாகக் கடந்து போகின்றது என்பது இன்னும் புரியாத புதிர்தான். இப்போதுள்ள அரசியல் சக்கரத்தின் ஆர்ப்பாட்டமிக்க சுழலுக்குள் சிக்கிக்கொள்ளாமல் மிக நிதானமாகப் பயணப்படும் அவருக்குச் செங்கம்பளம் விரிக்க இளைஞர் குழாம் தயாராக வேண்டும்.

நாம் எத்தனையோ பேரைக் கடந்து போகின்றோம். ஆனால் நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கும் ஆகர்சனம் வெகுசொற்பமான சிலருக்குத்தான் வாய்க்கும். அந்த ஈர்ப்பும் ஆகர்சனமும் அவர்களின் தூய்மையான உள்ளத்தின் அடி ஆழத்தில் இருந்து வெளிப்பட்டு நம்மைக் கவர்ந்து சொக்கச் செய்வதாகும். அதில் போலியோ அல்லது நடிப்பு கலந்த பிரமாண்டத்தைக் கற்பிக்கும் செயற்கையான எதுவுமோ கலந்திருக்காது. அத்தகையவர்கள் எதற்காகவும் எவருக்குப் பின்னாலும் வலிந்து செல்லமாட்டார்கள். காலம் அவர்களை நமக்கு அடையாளங் காட்டும் அப்போது அவர்களின் கரங்களைப் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். அச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் நாமே நஷ்டவாளிகள்.

தரமான மனிதர்களின் தலைமைக்குக் கீழ் நாமெல்லாம் நடைபயிலும் போது நம் நெஞ்சில் உட்காரும் திமிருக்கு ஒருமதிப்பீடு இருக்காது. அந்த முறுக்கு நம்மை நெஞ்சை நிமிர்த்தியபடி எதுவானாலும் எதிர்கொள்ள உந்தித் தள்ளும். வரலாறுசில இடங்களில் அடிக்கோடிடப்பட்டு எழுதப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களைப் பார்த்தால் அனைவரும் வாழவேண்டும் என்ற அடிப்படை எண்ணத்தால் புடம்போடப்பட்ட தலைமைகளின் செயற்பாடுகளால் விளைந்த விளைச்சலை சகல மக்களும் அனுபவிக்கும் தருணங்களாகத்தான் இருக்கும்.

1981ஆம் ஆண்டுசத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டசட்டத்தரணி கே.வி. தவராசாஅவர்கள் ஆஜரான முதல் வழக்கே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதுதான். நம் நாட்டடில் தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் இடம்பெற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரேயொருவழக்கு இதுதான். அத்தோடு பயங்கரவாதத்தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கும் இதுதான். இவ்வழக்கில் இவருக்குக் கிடைத்த அனுபவந்தான் அவரைத் தனித்துவமிக்க அடையாளமொன்றினை நோக்கி நகர்த்தியது. இவர் ஆஜரான பெரும்பான்மையான வழக்குகள் பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டவைகளே. மேல் நீதிமன்றில் அரசியல்

கைதிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு மேல் நீதிமன்றங்களால் விசாரணைகள் நடாத்தப்பட்ட பெரும்பாலான வழக்குக்களில் தனது வாதத்தினால் அதிகமான நிரபராதிகளை விடுதலை செய்ய வைத்தார்.

இந்த வழக்குகளுக்கெல்லாம் அவர் ஆஜராகும் போது அவரைப் பார்த்துத் துப்பாக்கி புன்னகைத்தது மரணம் வியந்து நின்றது. அவருக்கு விடப்பட்ட அனைத்து அச்சுறுத்தல்களையும் தாண்டி அவர் பயணித்தார். அவைகளை அவர் கணக்கிலெடுக்கவுமில்லை பொருட்டாக மதிக்கவுமில்லை, இனத்தின் மீதுகொண்டபற்று என்றால் என்னவென்று தவராசாவைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள் என்று நான் சொல்வேன்.

சட்டத்தரணி தவராசாவுக்கு அருகில் இருக்கின்ற மாபெரும் பலம் அவரது மனைவி கௌரி சங்கரிதான்.

மனித உரிமை வழக்குகள் என்றால் நிச்சயம் அங்கு சட்டத்தரணி கௌரி சங்கரி பிரசன்னமாகி இருப்பார். பல ஆயிரக் கணக்கான மனித உரிமை வழக்குகளை இவர் தாக்கல் செய்திருக்கின்றார். மனித உரிமை வழக்குகள் என்றால் நீங்கள் நாடவேண்டிய ஒரேயொரு உன்னதமும் உண்மையுமிக்க உறுதியான நபர் இவர்தான். பல சட்டத்தரணிகள் மேற்கொள்ளும் கண்கட்டுவித்தைகளுக்கு அப்பால் இவர்கள் இருவரும் விதைத்திருக்கும் நேர்மை என்றும் சாய்ந்திடாதவாண்மை மிக்கது.

சுயநலம் ஏதுமற்ற ஒரு அரசியல் ஈடுபாட்டாளரைப் பார்ப்பதென்றால் நீங்கள் சட்டத்தரணி தவராசாவின் புன்னகை தவழும் முகத்தைப் பாருங்கள். உறுதியும் பற்றுமிக்க ஒரு மக்கள் செயற்பாட்டாளரைப் பார்ப்பதென்றால் அமைதியே உருவான அவரின் மனைவி சட்டத்தரணி கௌரிசங்கரியின் சலனமற்ற முகத்தைப் பாருங்கள்.

(தமிழ் மிரர்-2016)

தமிழ் மிரர் பத்திரிகையில் ஆறாண்டுகளுக்கு முன்னர் எழுதிய இப்பந்திக்கு சட்டத்தரணி தவராசா-மனிதம் கொண்ட பேரியக்கம் என்று தலைப்பிட்டிருந்தேன். குறிப்பிட்ட சொற்களுக்குள் எழுதப்பட்ட சுருக்கக் குறிப்பாகவே அது அமைந்திருந்தது. அப்போது எழுதிய குறிப்பு எப்போதும் அவர்களுக்குப் பொறுத்தமாகவே இருக்கும். ஏனெனில் மாற்றமுறாத மனிதப் பண்புகளின் இருப்பிடமாகவே இருவரும் திகழ்ந்தனர். இந்நூலின் செம்மையாக்கப் பணியினைப் பொறுப்பேற்ற போது மிக நெருக்கமாக அவரை அவதானிக்கக் கிடைத்தது. அந்த அவதானிப்பில் இருந்துதான் இக்குறிப்பு விரிந்து செல்கின்றது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடிப்படைமனித உரிமை மனுக்களையும் ஆட்கொணர்வு மனுக்களையும் தாக்கல் செய்த கௌரி சங்கரியும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை எதிர்கொள்வதில் அதி உச்ச ஆளுமையாகவும் அனுபவஸ்தராகவும் இருக்கின்ற ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக நின்றே வழக்குகளை எதிர்கொண்டனர். சட்டத்துறையில்

இவ்வளவு இணக்கமாக இணைந்து பயணித்த ஒத்துழைப்பு மிக்க தம்பதியரைக் காண்பதரிது. ஆதலால் காண்கின்ற அனைவரது மனத்திலும் வியப்பை மொத்தமாக விதைத்துச் செல்லும் ஆற்றல் மிக்க தம்பதியராய் இவ்விருவரும் நிலைப்பட்டு நின்றதில் ஆச்சரியமில்லை.

மக்களின் போராட்டங்களை நசுக்க உலகின் எந்தவொரு நாட்டு அரசாங்கமும் எப்போதும் தயாராக வைத்திருக்கும் ஒரேயோர் ஆயுதம் அவசரகாலச்சட்டத்துடன் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். நம்நாட்டில் 1979ம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் பல்வேறு அப்பாவிகளின் வாழ்க்கையைக் காவுகொண்டு அவர்களை இருள் சூழ்ந்த உலகினுள் தூக்கி வீசி விட்டு அமைதியாகத்தான் இருந்தது. ஆனால் இனப்பற்றும் மனிதமும் கொண்ட குறிப்பிட்ட சில சட்டத்தரணிகள்தான் இந்த அநீதிக்கு எதிராகச் சற்றும் பயப்படாமல் தீரத்துடன் குரல் கொடுத்தார்கள். அவர்களில் மிக முக்கியமானவர்தான் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இன விடுதலைக்காகப் போராடி இந்தச் சட்டத்தின் கீழும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழும் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டவர்களின் ஆயிரக்கணக்கான வழக்குகளுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா ஆஜராகி இருந்தார். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்னரும் கூட மேல் நீதிமன்றங்களில் பல நூறு குற்றப்பத்திரங்களை சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்தது ஆயினும் தவராசா சளைக்காமல் இன்னும் தீரத்துடன் அவற்றுக் கெதிராக வழக்காடிநீதியைப் பெற்றுக் கொடுக்கப் போராடுகின்றார் எந்தவிதமான விளம்பரங்களும் இல்லாமலேயே.

யுத்தகாலத்து இலங்கையில் அனைத்து ஊடகங்களிலும் தலைப்புச் செய்தியாகவும் விசேட செய்தியாகவும் அதிகமாகப் பரபரப்பாகப் பேசப்பட்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு தொடுக்கப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் போடப்பட்டன. அவற்றில் அதிகமான வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவே குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணியாக ஆஜர் ஆகினார். மும்மொழிகளிலும் புலமைமிக்க அவருக்குத் தனிச் சிங்களத்தில் வழக்குகளை எதிர்கொள்வதில் கூட எவ்விதமான சிக்கல்களும் இருக்கவில்லை.

சிங்கள மக்களுக்கு மத்தியிலும் பாதுகாப்புத் தரப்பினருக்கு மத்தியிலும் அதிக கோபத்தையும் ஆத்திரத்தையும் வெறுப்பையும் விதைத்த பல்வேறு வழக்குகளில் பயங்கரவாதியாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்காக ஆஜராவதற்கே அதிக நெஞ்சுரம் தேவைப்பட்ட போது பல சட்டத்தரணிகள் நமக்கேன் அதிகாரத்துடன் வம்பு என்று ஒதுங்கிக் கொள்ள முயற்சிக்கும் போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா வாதாடினார். பாரதூரமாக சில வழக்குகள் உயிரச்சுறுத்தல் மிகுந்த சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன அப்போதும் கூட அவர் கொஞ்சமும் அசராமல் அச்சுறுத்தல்கள் பற்றி சற்றும் பொருட்படுத்தாமல் அல்லது அது குறித்துப் புலம்பிக் கொண்டிருக்காமல் தன் கடமையில் மட்டுமே கவனஞ் செலுத்தியதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது.

ஒருவர் மீது பயங்கரவாதத்த தடைச்சட்டம் பாய்கிறதென்றால் அவரைக் காப்பாற்றப் பொருத்தமானவர்கள் கௌரி சங்கரியும் தவராசாவும்தான் என்ற எண்ணப்பாடு நிலைப்பெறும் அளவுக்கு அவர்கள் இருவரினதும் செயற்பாட்டுத்தளம் மக்கள் மத்தியில் அடையாளமாகி நின்றது. ஏனெனில் பயங்கரவாதத்த டைச்சட்டத்தின் கீழ் தொடரப்படும் வழக்குகளை அவர்கள் இருவரும் எதிர்கொண்ட விதம் அப்படி. குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நீர்த்துப் போகச் செய்யவும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டவும் இருவேறு தளங்களில் இயங்க வேண்டிய தேவை இருந்தது. அதுவும் குறிப்பாக படைத்தரப்பை நேரடியாக எதிர்த்துக் கொண்டும் பகைத்துக் கொண்டும் செயற்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தம் இந்தவழக்குகளின் போக்கில் இயல்பாகவே எதிர்ப்படும் ஒரு அம்சமாகவே இருந்தது. குற்றவியல் திணைக்களம், தேசியப் புலனாய்வுப் பிரிவு, படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவுகள், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு என்று அவசரகாலச் சட்டத்தின் வாயிலாக மட்டற்ற அதிகாரம் அதுவும் எதையும் எப்படியும் செய்யத்தக்க அதிகாரம் சட்டவாட்சியை மிஞ்சி அதன் நடைமுறைகளைக் கண்டுகொள்ளாமல் கூடச் செயற்படக் கூடிய கேள்விக்குட்படுத்த அனைவரும் தயங்கி நின்ற அதிகாரத்தின் முன்னால்தான் கௌரி சங்கரி மனித அடிப்படை உரிமைகள் என்ற சுலோகத்தோடு சட்டத்தின் பாதையில் அச்சந்துறந்து எழுந்து நின்று அதிர்வுகளை உண்டுபண்ணினார். வழக்குகளில் தன்னை எதிர்கொண்ட இந்த அனைத்துத் தரப்பையும் தவராசா கேள்விகளால் துளைத்தெடுத்தே வார்த்தைகளற்றவர்களாய் மௌனங்கொள்ளச் செய்தார்.

இந்த நிலை நாற்பது வருடங்களாகத் தொடர்ந்தது. ரவிராஜினுடைய படுகொலைக்குப் பின்னர் அவரது நண்பர்கள் அவரிடம் “தவா, நீங்களும் கௌரியும் கொஞ்சம் அமைதியாக இருங்களேன். PTA வழக்குகளில் இருந்து விலகியிருந்தால் நல்லதுதானே. அப்போதுதான் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்” என்று எச்சரித்தபோது அவர்கள் இருவரும் ஒரு புன்சிரிப்பால் அதனைக் கடந்து சென்றனர். இறுதியில் எந்தளவுக்கென்றால் பயங்கரவாதத்தடைச்சட்ட வழக்கில் தவராசா ஆஜராகின்றார் என்றால் வழக்குத் தொடுத்த தரப்பு நம்பிக்கையிழந்துவிடும், அடிப்படை மனித உரிமைகள் சார்ந்து வழக்குத் தாக்கல் செய்ய கௌரி சங்கரி பைல் தயார் செய்கின்றார் என்றால் அல்லது ஆட்கொணர்வு மனுவொன்றைச் சமர்ப்பிக்கப் போகின்றார் என்றால் மேற்சொன்ன அதிகாரத் தரப்பு அச்சங்கொண்டு தடுமாறும் அளவுக்கு நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டன. எந்தவொரு சட்டவிரோதத் துப்பாக்கியும் அவர்களைக் குறிவைக்கப்பயப்பட்டன. உறுதியான நிலைப்பாடுகள் அனைத்துவிதமான அசாதாரணங்களையும் சாதாரணமாக்கிடும் வல்லமை மிக்கவை. இவர்கள் இருவரினதும் மனவுறுதிக்கு முன்னால் அத்தகைய சதித்திட்டங்களால் ஈடுகொண்டு நிற்கமுடியவில்லை. அதற்காக அவர்கள் இருவரும் ஒருபோதுமே கவசவாகனங்களைக்கொண்டு தமக்கான பாதுகாப்புச் சுவரை அமைத்துக்கொள்ளவே இல்லை. மிகச் சாதாரணமான எல்லாரும் அணுகும் விதமாக இருந்தார்கள். அவர்களைக் கண்டு கொள்வது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கவில்லை.

எல்லாத்தரப்பினரும் மிக இலகுவாக அணுகும் வண்ணம் இருவரதும் வாயில் திறந்தே இருந்ததென்றால் அவர்கள் எத்தகைய எளிமையாள வாழ்க்கையைக் கடமையாக்கிக் கொண்டு

வாழ்ந்தனர் என்பதை விளங்கிக்கொள்வது அவ்வளவு கடினமானதல்ல. அந்த எளிமையோடு மனிதாபிமானம் மிக ஆழமாகவும் இறுக்கமாகவும் இணைந்திருந்தது. வழக்குகளுக்காக வந்தவர்கள் நிர்க்கதியான நிலையை உணருகின்ற போதும் சரி பாதுகாப்பின்மையை உணருகின்றபோதும் சரி அவர்களைத் தமது வீட்டில் வைத்து அரவணைக்கும் அளவுக்கு நெகிழ்ச்சியான உள்ளம் இருவருக்கும் இருந்தது. நண்பர்கள் பாதிக்கப்பட்டால் முதலாவது ஆதரவுக்குரல் இவர்களிடமிருந்தே செல்லும் அந்தளவுக்கு மற்றவர்கள் மீது கரிசணை கொண்டு செயற்பட்டார்கள்.

வடக்கு கிழக்கில் வழக்காடுவதைக் காட்டிலும் பெரும்பான்மை மக்கள் அதிகளவில் புலங்குகின்ற தலைநகரில் வழக்காடுதல், அதுவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப்புலி சந்தேக நபர்களாகச் சித்தரிக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது அவர்களைக் குற்றமற்ற நிரபராதிகள் என்று வாதாடுவது எத்தனை சவால் மிக்கது என்பதை விளங்கிக்கொள்வது அவ்வளவு கடினமானதல்ல. இங்கு பார்வைகளும் சைகைகளும் அசைவுகளும் வார்த்தைகளுக்கும் கருத்துகளுக்கமப்பால் நின்று சவால் விடத்தக்கன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டு நீண்டகாலமாக சிறையில் வாழ்கையைக் கழித்து துன்பமே வாழ்வாகிப் போயிருந்த ஒரு கைதி இவர்கள் இருவரினதும் தொடர் முயற்சியாலும் வாதாட்டத்திறனாலும் விடுதலை பெற்றார். அவருக்கு விடுதலை கிடைப்பது சாத்தியமில்லாதவொன்றாகத் தோன்றிய காரணத்தால் குடும்ப உறவுகள் யாரும் வழக்குகளுக்காக அலைவதைத் தவிர்த்திருந்தார்கள். அப்படி யாருமே வந்திராத பொழுதொன்றில்தான் அவரது விடுதலையும் நிகழ்கின்றது. நிர்க்கதியான நிலையில் அவரை அப்படியே விட்டுவிட்டுச் செல்லாமல் அவரை தமது அலுவலகத்துக்கு அழைத்து வந்து அவருக்கு உணவளித்து அவருக்குப் போக்குவரத்துக்காகப் பணமும் கொடுத்து தமது காரிலேயே அவரை அழைத்துச் சென்று புகையிரத நிலையத்தில் விட்டுவந்தனர். இதற்கிடையே வருடக்கணக்கில் அவர்கள் வாதாடி வென்ற அந்த வழக்குக்காக ஒரு சதமேனும் பெற்றுக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்கள் மிகத் தாராளமாக இவர்களது வாழ்க்கை நெடுகிலும் மலிந்து கிடக்கின்றன.

2008ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் கௌரி சங்கரி தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி வெலியமுன, ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஸ் டி சில்வா ஆகியோர்களின் பெயர்கள் விடுதலைப் புலிகளின் சட்டத்தரணிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது . அந்த அரச வர்த்தமானி ஹல்ஸ்டொப் நீதி மன்ற வளாகத்தில் பலத்த அதிர்வினையுண்டுபண்ணியிருந்தது. அதன் பின்னர் மற்றவர்கள் அவர்களைப் பார்த்த விதம் வேறுமாதிரியானது. அப்போது இது குறித்து கௌரியிடம் பிரஸ்தாபித்த ஒருவர் உங்கள் எதிர்காலச் சட்டத்துறைச் செயற்பாடுகளுக்கு இத்தகைய வர்த்தமானி அறிவி த்தல் தடையாக இருக்கும் அத்துடன் உங்கள் பெயருக்கும் அது சிறந்ததல்ல என்ற அடிப்படையில் கருத்துக் கூற அதற்கு கௌரி சங்கரி தவராசா அளித்த பதில் மிகவும் குறிப்பிடத்தக்கது. “இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்த விமர்சனங்களுக்கெல்லாம் பதில் அளித்துக் கொண்டு இருப்பதைவிட இதைக் கடந்து செல்வது மட்டுமே சரியானது. எந்தப் பழுதுமில்லாமல் சாகும்வரைச் சட்டத்தரணியாக இருந்து எனது

பணிகளைச் சிறப்பாகச் செய்வேன். அதை இத்தகைய விமர்சனங்களால் ஒருபோதும் தகர்க்க முடியாது. இத்தகைய விமர்சனங்கள் இயலாமையின் வெளிப்பாடு, ஆகவே இதில் நமக்கு எந்தப் பயனும் இல்லை" என்று சொல்லியவாறு கடைசிவரையும் அவர் சட்டத்தரணியாகச் சிறப்புறப் பணியாற்றினார் அவரது செயற்களத்தை யாராலும் அசைக்க முடியவில்லை.

சட்டத்தரணிகளுக்கான அலுவலகத் தொகுதியொன்றை நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் அமைப்பதற்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வொன்றுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதம அதிதியாக வந்திருந்தார். அந்நிகழ்வு இடம்பெற்ற இடம் கௌரி சங்கரி தவராசாவின் அலுவலகத்துக்கு முன்னால் இருந்தது. யுத்தகாலமென்பதால் பாதுகாப்புக் கெடுபிடிகள் மிகமிக அதிகமாக இருந்தது. ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் இரண்டொரு நாட்களுக்கு முன்னரே பாதுகாப்புக் கடமைகளைப் பொறுப்பேற்று அனைத்து இடங்களையும் பரிசோதனை செய்தனர். ஜனாதிபதி வருகை தரும் இடத்துக்கு முன்னால் இருந்த சட்டத்தரணிகளின் அலுவலகக் கட்டடத்தொகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட அலுவலகங்கள் இயங்கி வந்தன. ஜனாதிபதியின் பாதுகாப்பு கருதி அனைத்துச் சட்டத்தரணிகளும் தமது அலுகலத்தை மூடிவிட்டு அதன் திறப்புகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பாதுகாப்புத் தரப்பினர் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தனர். எந்த எதிர்ப்புமில்லாமல் அனைத்துச் சட்டத்தரணிகளும் தமது அலுவலகங்களை மூடிவிட்டு அதன் திறப்புகளை பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளித்தபோது கௌரி சங்கரி தவராசாவும் முன்னாள் நாளுமன்ற உறுப்பினரும் சிரேஸ்ட சட்டத்தரணி யுமான சூழ பண்டாரவும் மட்டுமே தமது அலுவலகங்களின் திறப்புகளைக் கையளிக்க முடியாது என்று மறுத்தனர். "எனது அலுவலகத்தில் இருக்கும் ஆவணங்கள் என்னுடையவையல்ல, அவை எனது சேவைநாடுனர்களுக்குரியது. அவற்றின் பொறுப்புதாரி மட்டுமே நான். எனவே எனது அலுவலகத்தின் திறப்புகளைத் தரமுடியாது. என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார். அவரது உறுதியை பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளால் எதுவும் செய்துவிட முடியவில்லை. இறுதிவரையும் அவர் அவர்களைப் பொருட்படுத்தவுமில்லை தன் திறப்பைக் கையளிக்கவுமில்லை. அவரது உறுதிக்கு முன்னால் எல்லாம் மௌனித்து அமைதியாகின. பாதுகாப்புத் தரப்பினர் செய்வது பிழையானது நடவடிக்கை என்பதை அவர்களுக்குத் தெளிவாகவே உணர்த்துவதில் அவர் கொஞ்சமேனும் பின்வாங்கியதில்லை. இப்படிப்பட்ட ஒரு நிதானமான ஓர்மையான ஒருவரை தான் சந்திக்கவில்லை என்பதை இப்போதும் சட்டத்தரணி சூழ பண்டார நினைவுறுத்துவார்.

தமக்கிழைக்கப்படும் துரோகத்தைக் கூட அவர்கள் எதிர்கொண்ட விதம் ஆச்சரியப்படவைக்கவல்லது. கௌரி சங்கரியின் நம்பிக்கையை வென்ற உதவியாளராக நீண்ட காலம் செயற்பட்ட பெண் ஒருவர் தான் கொழும்பிலிருந்து விடைபெற்றுக்கொண்டு சொந்த ஊரான கண்டியில் சட்டத்துரைசார் செயற்பாடுகளில் ஈடுபடப்போவதாக அறிவித்த போது அந்த உதவியாளரின் இத்தனை வருட கால உழைப்பைக் கௌரவிக்கும் வண்ணம் அவருக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் நிதியையும் அன்பளிப்பாகக் கொடுத்து ஒரு மகிழ்ச்சிகரமான உல்லாசப் பயணமும் அழைத்துச் சென்று மனங்குளிரும்படி பிரியமான விடைகொடுத்தனுப்பினார். ஆனால் அந்த உதவியாளர் ஒரு முன்னணி ஜனாதிபதி சட்டத்தரணியின் மகளின் பசப்பு வார்த்தைகளில் சிக்கி அவரது உதவியாளராகச் சேர்ந்து அவரது அலுவலகத்திலேயே பணியாளராகச் சேர்ந்து, கௌரி சங்கரி கையாண்டு

வந்த முக்கியமான பல வழக்குகளைச் சூட்சுமமாகப் பிடுங்கிக்கொண்டு கொஞ்சம் கூட மனச்சாட்சியின் உறுத்தல் இல்லாமல் செற்பட்டுக்கொண்டிருந்ததை அறிந்ததும் கௌரி சங்கரி அதைத் தான் அறிந்திருந்ததாகக் காட்டிக்கொள்ளவே இல்லை. அத்தோடு தன் துணைவரிடமும் அலுவலகத்திலும் இது குறித்து யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசக் கூடாது என்று ஒரு புன்னகையால் கடந்து சென்றார். கௌரி சங்கரியின் மரணத்தின் பின்னர் அந்த பிரபல முன்னணி ஜனாதிபதி சட்டத்தரணியின் மகள் அதே உதவியாளரை வைத்து கௌரி சங்கரி கையாண்டு வந்த முக்கியமான அணைத்து வழக்குகளையும் வருமான நோக்கத்துக்காகப் பிடுங்கிக்கொண்டு “கௌரியின் அலுவலகத்தை இனி மூட வைப்பேன்” என்று வக்கிரம் கொட்டிய போது தவராசா தடுமாறவும் இல்லை நிலைகுழைந்து போகவும் இல்லை. அவருக்கு மனைவியின் இழப்புக்கு முன்னால் எதுவுமே பெரிதாகத் தெரியவே இல்லை. இப்போதும் கௌரியின் அலுவலகத்தையும் சேர்த்து அவர் இயக்கிக் கொண்டும் இயங்கிக் கொண்டும் இருக்கின்றார் அனைத்தையும் வழமைபோல் ஒற்றைப் புன்னகையால் கடந்து போய்விட்டார். துரோகத்தையே அன்பால் எதிர்கொள்ளும் இத்தகைய பண்புகள் வாய்க்கப்பெற்றவர்கள் நேசத்தையும் அன்பையும் எப்படி ஆரத்தழுவி இருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

அன்பு என்ற ஆராதிப்பில் தூய அன்பை மட்டுமே பொழிந்தார்கள். அதற்கு இன, மத, மொழி, சாதிப் பாகுபாடுகள் இருக்கவே இல்லை. அதற்கு இங்கு சாட்சியாக இருக்கும் பதிவுகளே போதுமானவை. மிகமிக நெகிழ்ச்சியான தருணங்களை ஒவ்வொருவரும் பதிவு செய்துள்ளார்கள். ஒவ்வொரு பதிவில் இருந்தும் வெவ்வேறுவிதமான குணநலன்கள் வெளிப்படுகின்றன. இந்தளவு நற்பண்புகளின் நாயகியாகவும் நாயகராகவும் இருவரும் திகழ்ந்தது சாதாரணமான ஒருவரை சாலவும் வியப்பூட்டும். ஏனெனில் அவர்கள் வெளிப்படையாகவே இயல்பாக இருந்து பழக்கப்பட்டுவிட்டார்கள். எதற்காகவும் திரைகளைப் போட்டுக் கொண்டு பொய்மையாக நடிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. அதனால்தான் குடும்ப உறவுகளைப் பேணுவதிலும் அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதிலும் இவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் சலைக்காமல் முன்னிற்பார்கள். சின்னச் சின்னச் சலசலப்புகள் எதிர்பார்ப்புகளோடு நிலைப்பெறும் போது அதைப் பக்குவமாகக் கையாள்வதில் கௌரிசங்கரிக்கு இருந்த முதிர்ச்சியை தவராசா ஒருபோதும் இடையறுத்ததுமில்லை ஊறுவிளைவித்ததுமில்லை. இந்தப் புள்ளியில் இருந்துதான் நேசமிகு தம்பதியர் என்ற உண்மையான அடையாளம் வெளிப்படுகின்றது. அந்த அடையாளத்தை கடைசிவரையும் எதனாலும் கேள்விக்குட்படுத்த முடியாமல்தான் போயிற்று.

இங்கு கட்டாயம் தவராசாவின் அரசியல் பங்களிப்பு குறித்துப் பதிவு செய்தாக வேண்டும். மேலோட்டமாகச் சில இடங்களில் அவரின் அரசியல் தூய்மை குறித்தும் திறமை குறித்தும் தன்மை பற்றியும் சிலாகித்திருப்பேன். ஆனால் அதை முழுமையாகப் பதிவு செய்வதே சிறந்தது. தமிழர் தரப்பு அரசியல் ரீதியில் தன்னை பொறுப்புடன் ஸ்திரப்படுத்திக் கொள்வதில் கவனங்கொள்ள வேண்டும் என்பதும் நீண்டநாள் திட்டமிடலோடு தம்மை நிலைப்படுத்திக்கொள்வது முக்கியமானது என்பதிலும் எப்போதும் கரிசனையை வெளிப்படுத்தும் நிலைப்பாட்டையுடையவர். அதற்குச் சான்றாக அமைவது அவரது அரசியல் அறிக்கைகளே.

சாமரம் வீசி பரஸ்பரம் தாஜா பண்ணிக்கொள்ளும் அரசியல் நிலைப்பாட்டிலிருந்து எப்போதும் விலகியேஇருப்பார். தமிழர்அரசியல்தடம்எங்கெல்லாம்பிழையானதளமென்றினுள்தன்னைப் பதித்துக்கொள்ளத் தலைப்படுகின்றதோ அப்போதெல்லாம் நீண்டகாலப் பார்வையடிப்படையில் தனது அவதானத்தை வெளிப்படையாக அவர் வெளிப்படுத்தத் தவறியதே இல்லை. தனிப்பட்ட ரீதியில் குறித்த அரசியல்வாதிக்கு சொல்ல வேண்டியதை அவருக்குத் தனிப்பட்டரீதியிலேயே எடுத்துரைப்பதும் மக்கள் பிரச்சினை சார்ந்து எடுக்க வேண்டிய நிலைப்பாட்டில் கட்சியாகப் பிரதிநிதித்துவப்படுத்தி எடுக்க வேண்டிய தீர்மானங்களில் விடுபாடுகள் வருகின்றபோது அதைப் பகிரங்கமாக மக்கள் மன்றில் சமர்ப்பிப்பதன் மூலமே கட்சியை கவனங்கொள்ளச் செய்வதும் மிகவும் அவதானத்துக்குரியது. ஏனெனில் தவராசா எப்போதும் சொல்கின்ற ஒரு விடயம் "கட்சியென்பது மக்களுக்கானதே தவிர மக்கள் கட்சிக்காக அல்ல, கட்சி எப்போதும் மக்கள் நலன் சார்ந்து மட்டுமே அரசியல் செய்ய வேண்டும், தனிநபர் விருப்புவெறுப்புகளைக் காவிக்கொண்டு திரிந்தால் நிச்சயம் கட்சி மக்கள் மயப்பட்ட அரசியல் செயற்றளத்திலிருந்து விலகி சுயநலத்துடனான சகதிக்குள்ளும் சாக்கடைக்குள்ளும் வீழ்ந்து சிக்கிக் கொள்ளும் அப்போது அசிங்கப்படுவதும் துன்பமடைவதும் அந்தத் தனிநபர்களோ கட்சியோ கிடையாது, மக்களே அதை ஏந்தியாக வேண்டும்"

மக்களின் பொதுத் தேவைகளை அதுவும் அபிவிருத்தி சார்ந்து அல்லாமல் உரிமைசார்ந்து அடைவதில் கட்சி நெகிழ்வுத்தன்மையோடும் தெளிவோடும் செயற்பட வேண்டும் என்பதிலும் தவராசா எப்போதும் தெளிவான நிலைப்பாடுடையவராகவே இருந்தார். தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளைத் தலைவராக அவர் செயற்படத் தொடங்கிய காலம் மிகவும் முக்கியமானது. தமிழருக்கான அரசியல் நிலைப்பாடு எத்தகைய தெளி வோடும் வெளிப்படையோடும் மக்களுக்கு நம்பிக்கையாகவும் உண்மையாகவும் எடுக்கப்பட வேண்டும் என்பதை தெளிவாகவே எடுத்துரைக்கத் தொடங்கினார். இன்றுவரையும் அந்த எடுத்துரைப்பில் ஒரு குறைபாட்டையும் வைக்கவில்லை. "கட்சி என்பது மக்களுக்கான அரசியலைத் தீர்மானிப்பதில் தனிநபர் நிகழ்ச்சி நிரல் மயப்படுதலில் இருந்து விடுபட முயற்சிக்க வேண்டும். அது ஒரு கூட்டு முயற்சி ஆலோசனைகளினதும் கூட்டான கருத்துப் பரிமாறல்களில் இருந்தும் சரியானதைக் கண்டடைந்து தீர்மானிக்க வேண்டும்" என்று தெளிவாக அறிவுறுத்துவதில் அவர் எப்போதும் தவறியதே இல்லை. எவ்வளவு அறிவுறுத்தியும் அதில் எவ்வித மாறுதலும் வரவில்லையென்றால் மௌனமாக இருப்பதில் இருந்து தனது எதிர்ப்பையும் விருப்பின்மையையும் பதிவு செய்வார். பிறரின் சுயாதிபத்தியத்திலும் தன்மானத்திலும் கை வைக்கும் ஈனத்தனமான அரசியல் வழிமுறையை அவர் பின்பற்றியதே கிடையாது. அதே அரசியல் வழிமுறையால் அவர் பின்னடைப்பட்டு தாக்கப்படும்போது கூட அதைப் புறந்தள்ளிச் செல்ல முயல்வாரே தவிர அதே வழிமுறையாரல் பதிலிறுக்கமாட்டார்.

"எனக்கு யாரோடும் தனிப்பட்ட ரீதியில் பகைமை பாராட்ட வேண்டிய அவசியமே இல்லை. தமிழ்தேசியத்தின் இருப்பைச் சிதைக்கும் போக்கு எனக்குத் தென்பட்டால் அதை எனது முழுச் சக்தியையும் திரட்டி எதிர்ப்பேன். ஏனெனில் தமிழ்தேசியம் என்பது மக்களுக்கான இருப்பு சார்ந்தது அதை விரும்பியோ விரும்பாமலோ அரசியல் ரீதியில் உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றுதான் இப்போது நமக்கு முன்னால் இந்நாட்டின் அசைவியக்கத்தில்

இருக்கின்றது எனவே அதைத்தான் நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதனால்தான் தமிழ்த் தேசியத்தின் மீது உண்மையான பற்றுக் கொண்டவர்களை நமது அரசியல் பிரதிநிதிகளாக்கிக் கொள்ள வேண்டும், இல்லையேல் தமிழ்தேசியத்தைச் சிதைத்து மலினப்படுத்தி அரசியலுக்காக அதை விற்றுவிடுவார்கள். அப்படியொன்று நடந்தால் நமது இருப்பின் அத்திவாரம் ஆட்டங்கண்டுவிடும், நமது சந்ததியரின் எதிர்காலம் ஸ்திரமற்றதாகிவிடும்"

கொள்கை ரீதியில் தனது நிலைப்பாடு என்ன என்பதை இதைவிட ஒருவரால் உறுதிப்படவும் தெளிவாகவும் வெளிப்படுத்த முடியாது. "இந்த அரசியல் செயற்பாடுகளால் நீங்கள் எதையும் தீர்க்கமாகச் சாதிக்க முடியாது எனவே இதிலிருந்து விலகியே இருக்கப் பாருங்கள்" என்று கௌரி சங்கரி அவருக்கு ஆலோசனை வழங்கினாலும் அவரது செயற்பாடுகளுக்குத் தடையாக ஒரு போதுமே இருந்ததில்லை. இப்போதுள்ள அரசியல் கட்டமைப்பு தவராசா போன்ற மக்கள் மீது அன்புகொண்ட நபர்களை இயங்கவிடாது என்பதை கௌரி அறிந்திருந்தார் அதனாலேயே தனது கணவரை இந்தச் செயற்றளத்தில் இருந்து தள்ளி இருக்குமாறு அறிவுறுத்தினார். ஆனாலும் தவராசா தன்னால் முடிந்தவரைச் செய்ய இயலுமானதைத் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காகச் செய்வதில் ஆர்வங்காட்டினார். அந்த ஆர்வத்துக்கு கௌரிசங்கரி தடையாக இருக்கவில்லை என்பதுதான் புரிதலின் முக்கியமான புள்ளி.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் பதவிகளுக்காவும் சலுகைகளுக்காகவும் தனது விருப்பை வெளிப்படுத்தாதவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா. அவருக்கு அத்தகைய அலங்காரங்களின் மீது நாட்டமிருக்கவுமில்லை, எதிர்பார்ப்பு இருக்கவுமில்லை. அதனால்தான் அவர் பதவிமோக வலைக்குள் சிக்குண்டு அலைக்கழியவில்லை. கட்சியில் அவருக்கு வழங்கப்பட்ட பதவி நிலைகள் அனைத்துமே அவர்களாவே அளித்தன்றி அவராக எதையும் கேட்டுப்பெறவுமில்லை தானே சூட்டிக்கொள்ளவுமில்லை. அத்துடன் பெரும்பான்மையோரின் விருப்பின் பேரில் அவருக்களிக்கப்பட்ட பொறுப்பாகவே அதைக் கருதினார். அதில் முடிந்தளவு உண்மையாகச் செயற்பட்டார். உண்மையாகச் செயற்படுதல் என்ற ஒரு நிலைப்பாட்டை ஒருவர் எடுத்தால் அரசியல் களத்தில் அது எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை நாம் விளங்கிக் கொள்வது அவ்வளவு கஸ்டமாக இருக்காது.

சட்டத்தரணிகளாக தவராசா-கௌரி தம்பதியர் தமது பணிகளை விருப்பு வெறுப்பு என்ற எல்லைகளுக்கப்பால் செய்துள்ளனர் என்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட வழக்குகளும் அவர்கள் செயற்பட்ட விதமும் தெளிவான சான்றாக இருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்காக அவர்களிடம் சட்ட உதவி கேட்டு வந்த அனைவருக்காகவும் அவர்கள் தமது கடமையைச் செய்தார்கள். அடிப்படை மனித உரிமைகளை நிலைநாட்ட கோரிக்கை விடுக்கப்பட்ட போதெல்லாம் அந்த உரிமை மீறல் தொடர்பில் கரிசனை கொண்டார்களே தவிர நபர்களைக் கருத்தில் கொள்ளவே இல்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளவே இல்லை. இன மத மொழி பேதங்களுக்கப்பால் அரசியல் பேதத்தைக்கூட அவர்கள் பார்க்கவில்லை. முன்னால் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, எஸ். பி.திசாநாயக்க, ரவி கருனானாயக்க, ரிசாட் பதியுதீன் போன்றவர்களுக்காகவும் ஆஜராகினர்.

பல்வேறு தரப்பால் எதிர்ப்புக்காட்டப்பட்டபோதும் ரிசாட்பதியுதீனின் மனைவி மற்றும் அவரது சதோரர் ரியாஜ், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சானி அபேசேகர, மனிதவுரிமையார்வலரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, முந்நாள் ஆளுநர் அசாட்சாலி ஆகியோருக்காவும் சட்ட உதவிகளைச் செய்தனர்.

எப்போதுமே நீதியின் பாதையிலும் சட்டத்தின் ஏற்பாட்டிலும் நம்பிக்கை கொண்டிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கடைசியாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை மையமாக வைத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தமக்கும் அவரது சட்ட உதவி கிடைத்தாலே தவிர விடுதலையைக் காண முடியாது என்ற அடிப்படையில் தமக்காகவும் வாதாடும்படி வேண்டிக்கொண்டதற்கிணங்க அவர்களுக்காகவும் சட்ட உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளார். அப்படிப்பார்க்கும் போது பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்ந்த அனைத்து மக்களுக்காகவும் அவரது உதவி என்றும் இருந்துள்ளது என்பதை உறுதிப்படுத்தி சரித்திரத்தில் தனித்துவமான மனிதராக அவரை நிலைநிறுத்தப் போதுமானது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியும் மனிதங்கொண்ட பேரூற்றாகவும் நீதியை நிலைநாட்டும் போராட்டப்பாதையில் சட்டப்போராளிகளாகவும் என்றும் வரலாற்றில் நிலைத்திருக்கவும் இனிவரும் தலைமுறையால் மீளமீள வாசிக்கப்படவும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை ஒன்றே போதுமானது. யாராலும் சிதைக்க முடியாத சரித்திரமாக அது எப்போதும் இருக்கும்.

**முஸ்டீன்**
எழுத்தாளர் - ஊடகவியலாளர்
காவத்தமுனை
30.07.2022

***Musdeen***
***Writer - Journalist***

# கண்ணீரோடும் காத்திருப்போடும் நீங்காத நினைவுகளோடும்

இந்நூல் எமது நீண்டகாலக் கனவாகவே இருந்து வந்தது. எங்கிருந்து தொடங்குவது எங்கு முடிப்பது எதையெல்லாம் உள்ளடக்குவது என்பதில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாமை என்ற விடயத்தில் அதிகமாகத் தாக்கம் செலுத்தியது இடையறாத ஓட்டமும் வேலைப்பலுவும்தான். ஆனாலும் இந்நூலாக்கப் பணிகளுக்கு எனக்குப் போதுமான அவகாசத்தை அளித்து விட்டு நான் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் தன் தலைமேல் இழுத்துப் போட்டுக்கொண்டு ஓய்வில்லாத இயந்திரமாக இயங்கியவர் என்னில் பாதியாயும் உயிராயும் வேராயும் எல்லாமாயும் இருந்த எனது துணைவி கௌரிசங்கரிதான். பொதுவாக ஒரு மனிதனின் வாழ்வின் அடையாளமாகிப் போவதிலும் அவனது சமூக அங்கீகாரத்தின் பெறுமானத்தைத் தீர்மானிப்பதிலும் மிக முக்கிய அளவுகோளாக நின்று நிலவுவது வாழ்க்கைத்துணைதான். சாதாரணமாக ஒரு மனிதனின் நடத்தை பற்றிய சிறந்த மதிப்பீடொன்றை அல்லது மிகச் சரியான மதிப்பீடொன்றை அவரவரது வாழ்க்கைத் துணையினாலேயே வழங்க முடியும். அதுதான் திறம்பட்டதொரு மதிப்பீடாக இருக்க முடியும். ஏனெனில் கணவன் மனைவியிடமோ மனைவி கணவனிடமோ நீண்ட காலத்துக்கு நடிக்க முடியாது அவரவரின் உண்மை முகமும் யதார்த்தமும் மிகச் சிறப்பாக வெளிப்பட்டுவிடும். அதனாலேயே ஒருவரைப்பற்றிய சிறந்த மதிப்பீட்டை அவரவரது வாழ்க்கைத் துணையினாலேயே வழங்கமுடியும் என்று கூறினேன்.

எமது திருமண வாழ்க்கை ஆரம்பமான சூழல் இந்நாட்டில் அமைதி சூழ்ந்து சாந்தம் சொட்டிக்கிடந்த காலமல்ல. கலவரங்களால் ரணகளப்பட்டு இந்நாடே அல்லோலகல்லோலப்பட்டு மக்கள் என்ன செய்வதென்றறியாது உயிரையும் உடமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்காக உச்சபட்ச அழுத்தத்துடனும் மனக்குழப்பத்துடனும் உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்த காலம். அப்படிப்பட்டதொரு சூழலின் தாக்கம்தானோ என்னவோ எம் இருவரதும் வாழ்க்கை எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்தின்

மீதிருந்து தீர்வு தேடிப் பயணிப்பதாகவே அமைந்துவிட்டது. அதில் எப்போதுமே எம் இருவருக்கும் சலிப்பு ஏற்பட்டதில்லை. அடுத்தவர் பிரச்சினை கண்டு எப்போதும் பதைபதைப்புறும் மனத்தினளாயே கௌரிசங்கரி இருந்தார். எனக்குள்ள அதேபடபடப்பு அவருக்கும் இருந்ததால் எமக்கிடையே பொதுப்பணி செய்வதில் அல்லது மக்களுக்காகக் காலத்தையும் செல்வத்தையும் செலவு செய்வதில் எப்போதுமே முரண்பாடு வந்ததில்லை. எனக்கு முன்னரே மக்களின் பிரச்சினையில் ஆர்வங்கொண்டு அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பார். ஒரு விடயத்தை நேசத்தோடும் விடாப்பிடியோடும் அவர் செய்வார் என்றால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டும் அல்லது பெற்றுக்கொடுக்கும் சளைத்துப் போகாத முயற்சியும் போராட்டமும்தான்.

1983 கலவர சூழல் மிகப்பெரிய அதிர்வையும் அடுத்த கட்டச் செயற்பாட்டுக்கான திடத்தையும் எல்லாவற்றிலிருந்தும் மீளவும் புத்தெழுச்சியுடன் திடமாக எழுந்து நிற்கவும் கற்றுத் தந்தது எனலாம். எனது அனுபவத்தில் கலவர சூழலை எதிர்கொள்வதென்பது 1958இல் இருந்தே ஆரம்பமாகிற்று. செயற்களத்தில் இயங்கத் தொடங்கிய 1981இல் மீளவும் இன்னொரு கலவரம், அதில் எமது சொத்துகள் அனைத்தும் தீக்கிரையாகின. இழப்பின் வழியை அது மிகவும் ஆழமாகப் பதித்துச் சென்றது. அந்த வலியிலிருந்து விடுபடுவதற்கு முதலே மீண்டும் இந்நாடு வன்மமிக்க இன்னொரு கலவரத்தை எதிர்கொண்டது. 1983 ஜூலைக் கலவரம் கொளுத்திவிட்ட தீப்பிழம்பின் புகை அடங்குவதற்குள் அடைக்கலம் புகுந்த ராஜகிரிய முகாமிலிருந்து பிறந்த மண்ணை நோக்கி அகதியாய்த் தூக்கி வீசப்பட்டோம். அப்போதும் கூட மக்களின் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வுத்தளமொன்றினை நோக்கி நகர முடியும் நமது சட்ட அறிவை நமது மக்களின் பிரச்சினைகளுக்காக மட்டுமல்லாது நிர்க்கதிக்குள்ளாகும் மனிதர்கள் அத்தனை பேருக்காகவும் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தே கௌரிசங்கரி சிந்தித்துக் கொண்டிருந்தார். அது வெறும் சிந்தனையாக மட்டும் இருக்கவில்லை. மீளவும் தலைநகரில் எல்லாச் சவால்களையும் எதிர்கொள்ளும் தைரியத்தோடு காலெடுத்து வைத்தோம். கௌரிசங்கரி தனது மனதில் பதிந்திருந்த மனிதநேயத்தின் பிம்பத்தை நடைமுறையில் பிரதிபலிக்கத் தொடங்கினார். அதில் எப்போதும் பிடிவாதமாகவே இருந்தார். ஒரு விடயத்தில் அவர் மனம் வைத்து இயங்கத் தொடங்கிவிட்டால் நிச்சயம் தீர்க்கமான முடிவுகளோடும் தெளிவான பார்வையோடும் அவர் செயற்படுவார். அதில் எத்தகைய சவால்கள் எதிர்ப்பட்டாலும் அவை அனைத்தையும் தீட்சண்யமிக்க அறிவுப்பார்வையால் எதிர்கொள்ளும் திறனை அவர் எப்போதுமே கொண்டிருந்தார். அதனால்தான் அனைத்துச் சவால்களும் அவரிடம் தோற்றுப் போயின. அனைத்துப் பிரச்சினைகளும் அவரிடம் மண்டியிட்டன. அதற்காக இறுமாப்புக் கொண்டு வீம்புகொண்டு பெருமையடித்துக்கொண்டு அலையும் மனநிலையில் அவர் ஒருபோதுமே இருந்ததில்லை. அமைதியாக அனைத்தையும் உள்வாங்கி தெளிவான முடிவொன்றைத் தீர்வாக முன்னிறுத்தும் பாங்கு அலாதியானது.

கடைசித் தருணம் வரையும் அவர் தனது சட்டத்துறை சார்ந்த செயற்பாட்டுக் களத்திலேயே இருந்தார். தான் சுகயீனமாக இருப்பதைக்கூடப் பொருட்படுத்தாது அவர் ஓயாது ஓடிக்கொண்டிருந்தார். தான் பொறுப்பெடுத்துக் கொண்ட வழக்கில் காட்டிய ஈடுபாட்டில் ஒரு வீதத்தைக்கூட தனது உடல் நலத்தில் காட்டியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்

என்று இப்போது நினைக்கத் தோன்றுகிறது. அவருடைய கடைசி வழக்கில் தன்னுடைய கட்சிக்காரருக்குப் பிணை கிடைப்பதற்கான சட்டரீதியான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ஒரு திருப்தியை உணரும் போதுதான் அவருக்குத் தனது உடல் வலிமையற்று இருப்பது தெரிகின்றது. அதன் பின்னர் அன்றைய தினமே மருத்துவமனைக்குச் சென்றோம். உலகையெலாம் ஆட்டிப்படைக்கும் கொடிய வைரஸ் அவரையும் என்னையும் பாதித்திருந்தது தெரியவரும் போது காலம் கடந்திருந்தது. மிகச் சரியாகச் சொல்வதென்றால் அவர் தன்னைக் கிஞ்சிற்றும் பொருட்படுத்தாது ஓடிய வழக்கின் தனது கட்சிக்காரர் பிணையில் வெளிவந்த அதே தினத்தில் அவரது திருமேனி அக்னியில் சங்கமமானது. கௌரியின் இத்தகைய ஈடுபாட்டைக் குறிப்பிட்டுச் சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை.

எனது வாழ்வில் நிழல் தந்துகொண்டிருந்த பெருவிருட்சமாக எனது மனைவிதான் இருந்தார் என்பதைச் சொல்வதில் எனக்கு எத்தகையதொரு தயக்கமும் கிடையாது. சட்டத்துறை வாழ்விலும் குடும்ப வாழ்விலும் அதாவது அலுவலகத்திலும் சரி வீட்டிலும் சரி எமது வாழ்க்கைப் பாதையில் பிரித்தறிய முடியாதளவுக்கான பிணைப்பு எப்போதும் இருந்தே வந்துள்ளது. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு விதாமன முகங்களோடு அலையும் மனிதர்களுக்கு மத்தியிலும் நேரத்துக்கு நேரம் வினாடிக்கொரு முகமூடியைக் கவிழ்த்துக் கொண்டு கோர முகங்களை மறைத்துக் கொண்டு நடித்துக் கொண்டு திரியும் கொடூரமானவர்களுக்கு மத்தியிலும் எப்போதும் ஒரே முகத்துடன் எல்லா இடங்களிலும் மாறாத அன்போடும் பரிவோடும் இரக்கக் குணத்தோடும் இளகிய இதயத்தோடும் உறுதியான உள்ளத்தோடும் மனிதத்துக்கு முன்னுரிமையளித்தபடி செயற்பட்டுக் கொண்டிருந்த கௌரி சங்கரியைத்தான் எனக்குத் தெரியும். ஏனெனில் கௌரிக்குப் போலியாகப் பழகத் தெரியாது, நட்பு கொள்வது போன்றும் நேசிப்பது போன்றும் நடிக்கத் தெரியாது. உள்ளத்தில் தோன்றும் உண்மையின் முகத்தை அப்படியே வெளிப்படுத்தும் இயல்பான ஆளுமை அவர்.

கௌரி நிதானமிழந்து தவித்ததை எப்போதுமே நான் கண்டதில்லை. எவ்வளவு சிக்கல் மிகுந்த சந்தர்ப்பங்களாக இருந்தாலும் அவர் அவற்றை எதிர்கொள்ளும் விதமே தனியானது. பிரச்சினைகளை டென்ஷனால் எதிர்கொள்ள முடியாது அதை எப்போதுமே நிதானத்தால் எதிர்கொள்ளும் போதுதான் தீர்க்கமானதும் தெளிவானதுமான தீர்வுகளைக் கண்டடைய முடியும் என்பார். அதனையே நடைமுறையில் வைத்திருந்தார். ஓயாத வேலைப்பலுவுக்கு முன்னால் சளைக்காது திடங்கொண்டு நிற்கும் போது அவரிடம் அந்த நிதானத்தை முழுமையாகக் காணக் கூடியதாக இருக்கும். வீட்டிலும் சரி அலுவலகத்திலும் சரி உறவுகளைக் கவனிக்கும் போதும் சரி அவர்களது தேவைகளை நிறைவேற்றும் போதும் சரி குடும்ப உறவுகள் ஊடாக இயல்பாகவே உள்நுழையும் வீட்டுச் சச்சரவுகளானாலும் சரி அவற்றையெல்லாம் நிதானத்தோடு கையாண்டு செல்லும் பக்குவத்தை இயல்பாகவே பெற்றிருந்தார் என்றுதான் நான் அறிவேன். அப்படிப்பட்ட ஆற்றல் மிகுந்த பெண்ணை எதிர்கொள்ளவதில் நான் தினமும் புதிதுபுதிதாக என்னைத் தரவேற்றிக் கொள்ளவேண்டியிருந்தது.

எமது சட்டத்துறை சார் செயற்பாடுகள் எப்போதும் இரண்டறக் கலந்திருப்பவை. குற்றவியல் வழக்கில் நான் ஒரு பக்கத்து அதிர்வைக் கொடுத்தால் மறுபக்கத்து அதிர்வை அடிப்படை உரிமைகள் சார்ந்தும் தனிமனித உரிமைகள் தனிமனித சுதந்திரம் சார்ந்தும் கொடுப்பவர் கௌரி சங்கரிதான். எனது வெற்றிகள் வெறுமனே எனது மட்டுமேயான வெற்றிகள் கிடையாது. இதற்குள்ளிருந்துதான் நாம் எமது அடையாளத்தை திறம்பட நிலைப்படுத்தினோம். ஒரு காலத்திலும் ஒரு கட்டத்திலும் பிரித்துப் பார்க்க முடியாத ஒரு இணைப்பும் பிணைப்பும் எமது செயற்பாடுகளுக்குள் இரண்டறக் கலந்திருக்கும். அதுதான் எம்மை முரண்பாடுகளுக்கப்பால் நேசத்தோடும் பரிவோடும் நிலைநிறுத்தியது. யாராலும் இடைநுழைந்து சிக்கலைத் தோற்றுவிக்க முடியாமைக்கான காரணமாயும் அத்தகைய இறுக்கமானதும் தூய்மையானதும் உண்மையானதுமான பிணைப்பே திகழ்ந்தது. ஐயந்துறந்த நேசத்துக்கு முன்னால் எல்லாமே சரணாகதி அடைவது போன்றதுதான் அது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் சந்தேகத்தின்பேரில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும் ஒருவர் மீது நான் கொண்டிருக்கும் பரிவுக்கு கொஞ்சமும் குறையாத பரிவை அவரும் கொண்டிருப்பார். அதனாலேயே எமது சமூகச் செயற்பாடுகள் ஒரு போதுமே முரண்பாடு என்ற எல்லையைத் தொட்டதில்லை. அதற்கான அவசியமும் இருக்கவில்லை. எமது சமூகத்தின் நலன் சார்ந்த ஒரு விடயத்தில் நான் கரிசனை கொள்ளும் போதும் அதற்காகக் களமிறங்கும்போதும் சரி அதுசார்ந்து கௌரி சங்கரி கொண்டிருக்கும் அபிமானம் எப்போதும் எனக்கு உந்துதலாகவே இருந்திருக்கின்றது. அதனால் எனது பயணங்கள் ஒரு போதுமே தனிப்பட்டதாக இருந்ததே இல்லை. அது கௌரியுடன் இணைந்ததே. ஒரு காலத்திலும் பிரித்துப் பார்க்கமுடியாத நுண்ணிய பிணைப்பைக் கொண்டுள்ளது. அந்தப் பிணைப்புதான் எமது வாழ்க்கையின் உயிர்நாடியாகவும் திகழ்ந்தது.

இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் கௌரியின் அர்ப்பணிப்புகளாலும் திறமையாலும் அபார ஆற்றலாலும் அழகு பெறுகின்றது. கௌரியும் நானும் இணைந்து முன்னெடுத்த ஒரு நீண்ட பணியின் அறுவடையாக இந்நூல் உங்கள் கைகளில் தவழ்கின்றது. எமது தொடர் போராட்டத்தின் அடையாளமாக இங்கு பேசப்படுகின்ற ஒவ்வொரு வழக்கும் என்றும் அழியாத சித்திரமாகத் தீட்டப்படுகின்றது. அத்தனையும் கௌரியின் நினைவுகளால் மட்டுமே ஆளப்படுகின்றது.

எத்தகைய ஒரு பிரமாண்டம் என்னைச் சுற்றியிருந்தது என்பதை நினைவிற்கொள்ளும் போதுதான் அந்த இடைவெளிக்குள் நான் காணாமல் போகின்றேன். கண்ணீரின் கனதி எத்தகையது என்பதையும் அன்பின் இறுக்கமான பிடி எத்தகைய வலிமைமிக்கது என்பதையும் ஆற்றா மனத்தோடு அசைபோட முயல்கின்றேன். அப்படிப்பட்ட ஒரு பிரிவை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியவில்லை. ஏனெனில் எனக்கு அது சாத்தியமானதல்ல. தன்பார்வைகளிலேயே அர்த்தம் கொண்டிருக்கும் ஒப்பற்ற ஆளுமையாகவே அவரை அவதானித்திருக்கின்றேன்.

கௌரியின் பிரிவு என்னை உடைத்துப் போட்டாலும் துன்பத்தின் ஊற்றில் எனை அமிழ்த்திவிட்டாலும் மட்டிட முடியா அழுத்தத்தை எனக்குள் விதைத்தாலும் ஒரு சூனியப்பரப்பில் எனைச் சிறைவைத்தாலும் ஒரு காலத்திலும் மீள முடியாதபடி என்மீது அது சாசனம் எழுதிச் சென்றுள்ளது. அப்பிரிவு எனக்கு மட்டுமானதல்ல எனக்கு மட்டுமான இழப்புமல்ல கௌரியின் இழப்பு தமிழ் மக்களின் இழப்பு. மனிதத்தை நேசிக்கும் நீதியின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருக்கும் அனைத்து நபர்களினதும் இழப்பு. அந்த இழப்பின் இடைவெளி இனி அப்படியேதான் இருக்கும்.

கௌரி பற்றிய நினைவுக் குறிப்புகளும் ஆவணவாக்கங்களும் எனக்குள் ஏற்படுத்திய தெளிவான விடயம் கௌரி சங்கரி மிகவும் கௌரவமானதொரு நிலையில் அவரது பணிக்காகவும் இயல்புகளுக்காகவும் போற்றப்படுகின்றார். என்பதுதான்.

கண்ணீரோடும் காத்திருப்போடும் நீங்காத நினைவுகளோடும்.

**கே.வி.தவராசா**
ஜனாதிபதி சட்டத்தரணி.

***K.V. Thavarasha***
***President's Counsel***




# நிபுணத்துவமிக்க சட்ட ஆளுமை சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் கௌரி சங்கரி தவராசா

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் பல்லாயிரம் சட்டத்தரணிகள் தமது பணிகளை ஆற்றிச் சென்றிருக்கின்றார்கள், ஆனாலும் குறிப்பிட்ட சில சட்டத்தரணிகளே சரித்திரமாகி இன்றும் மக்களால் நினைவுகூறப்படுகின்றார்கள். அவர்கள் இந்நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவையின் கனதி அத்தகையது. அதனால்தான் அவர்களின் ஒவ்வொரு நினைவும் பசுமையாக மீளமீள மக்களால் மீட்டப்படுகின்றது. சுதந்திரத்துக்குப் பிந்திய இந்நாட்டின் கடைசி ஏழு தசாப்தங்களும் அமைதியின்மையின் அடையாளமாகி இனமுரண்களைத் தோற்றுவித்து மனிதத்தை வேட்டையாடி பிரிவினையை விதைத்து மக்களுக்கிடையே இருந்த நேசத்தைப் பிடுங்கிக்கொண்டு வெறுப்பைப் பரிசளித்து அதைப் பரிபாலிக்க வைத்த காலப்பகுதியின் உச்சகட்டத்தில்தான் கௌரிசங்கரி என்ற மனிதநேயத்தின் சின்னம் செயல்படத்தொடங்குகின்றது. அவர் அன்பினதும் நேசத்தினதும் மனிநேயத்தினதும் கௌரவத்துக்குரிய அந்தஸ்துடன் தனக்கான இடத்தை ஆழமாகப் பதித்துக்கொள்கின்றார்.

1955ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி சண்முகசுந்தரம் ஜமுனாதேவி தம்பதிகளுக்குப் புதல்வியாக யாழ்ப்பாண அளவெட்டியில் பிறந்தார். புஷ்ப கௌரி, கௌரி மலர், கௌரி நாதன், கௌரி மோகன், கௌரி பிரியதர்சினி, விஜய கௌரி ஆகியோரின் சகோதரியான கௌரி சங்கரி சிறுபராயத்தில் இருந்தே ஆற்றல்மிக்கவராகத் திகழ்ந்தார். வீட்டுச் சூழலில் எப்போதும் சோராத துடிப்போடு இயங்கிக்கொண்டிருந்த அமரர்கௌரி சங்கரி

தனது ஆரம்ப கல்வியை அருநோதயா கல்லூரியில் கற்றார். அவரது உட்சாகத்தினதும் திறமைகளினதும் பயனாக பாடசாலையில் அதிபர் ஆசிரியர்களால் பெரிதும் விரும்பப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ் மகாஜன கல்லூரிக்கு அவரை மாற்றுவதற்கு பெற்றோர் முடிவெடுத்தபோது அருநோதயா கல்லூரி அதிபர் தனது பாடசாலையில் இருந்து சங்கரியை மாற்ற வேண்டாம் என விடாப்பிடியாக நின்றார். ஆயினும் வீட்டாரின் முடிவை அவர் திருப்தியின்றி ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. யாழ் மகாஜன கல்லூரிக்குச் சென்ற பின்னர் ஆற்றல்களின் தனித்துவமான அடையாளமாகவே அவர் இருந்தார். கற்றலில் மட்டுமல்லாது அவர் திறமைகாட்டிய விளையாட்டுப் போட்டிகள், இலக்கியப் போட்டிகள், பேச்சு, கவிதை, நடனம், நாடகம் சிறுகதை என்று அனைத்திலும் பரிசுகளை அள்ளிக் குவித்தார். தலைப்பைக் கொடுத்தால் போதும் உடனேயே அதற்குத் தயாராகி அளிக்கை செய்யக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார்.

பள்ளிப்படிப்பை முடித்த கையோடு கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட இளமானிப்பட்டப் படிப்பை நிவர்த்தி செய்தார். பல்கலைக்கழகத்தில் அவரது தாராள குணத்தினாலும் அன்பாலும் மற்றவர்களை அரவணைப்பதாலும் தானாக முன்வந்து உதவுவதாலும் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றவராகவே இருந்தார். அதனாலேயே அவர் அனைவராலும் மதிப்புடன் நேசிக்கப்பட்டார். சட்டக்கல்லூரியிலும் மாறாத அதே குணத்துடன் நேசத்தின் அடையாளமாகவே அவர் இருந்தார்.

சிரேஷ்ட சட்டதரணி கௌரி சங்கரி என்ற அன்பினதும் மனிதாபிமானத்தினதும் சின்னத்துக்கு தன்னலமற்ற சமூக அக்கறைகொண்ட சினக்கத் தெரியாத கே.வி.தவராசா என்ற மற்றுமொரு அடையாளம் கணவனாக வாய்த்தார். இவர் யாழ். புங்குடுதீவைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை (ராஜா ஸ்டோர்ஸ் - இரத்தினபுரி) செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாவார். 1984 ஜுன் 16ஆம் திகதி இருவரதும் திருமணம் நடந்தேறியது. ஒத்த இயல்புகளையுடைய இருவரும் இணைந்த பயணம் முரண்பாடுகளைக் கடந்து சுமூகமானதாகவே இருந்தது. கேவி.தவராசா 1981ஆம் ஆண்டு சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு இயங்கத்தொடங்கியவர். அவர் எதிர்கொண்ட முதல் வழக்கே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த முதல் வழக்குதான். அப்போதிருந்தே அவர் தன் சட்டப் பாதையில் சிக்கலுக்குரிய பிரவேசத்தை அடையாளப்படுத்திக் கொண்டார். பொதுவாக இத்தகைய பாதை குடும்பத்தில் சலசலப்பை உண்டுபண்ணக் கூடியது. ஆயினும் கௌரி சங்கரி அத்தகைய சிக்கல்கள் எது குறித்தும் அலட்டிக்கொள்ளத்தக்கவராக இருக்கவில்லை. அவர் தனது கணவருக்குப் பக்கபலமாகவே இருந்தார். 1987ஆம் ஆண்டு ஜுன் முதலாம் திகதி உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் கௌரிசங்கரி தவராசாவின் இயங்குதளம் மற்றுமொரு புதுப் பரிமாணத்தைப் பெற்றுக் கொள்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் மக்களின் இருப்பை நசுக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அவற்றில் மிகுந்த ஈடுபாட்டுடனும் இனவுணர்வுடனும் கே.வி.தவராசா போராடிக் கொண்டிருந்தார். அப்போது சட்டச் செயற்பாடு

என்பது ஒரு போராட்டமாகவே இருந்தது என்பதுதான் உண்மை. இந்தச் சட்டப்போரில் குற்றவியல் வழக்குகளை உடைத்தெரியும் மிகப் பிரமாதமான அஸ்திரமாக இருந்தது சிரேஷ்ட சட்டதரணி கௌரிசங்கரி தவராசாவின் மனிதவுரிமைகள் சார்ந்த செயற்பாட்டுக் களம்தான். ஒவ்வொரு வழக்கையும் தனித்தனி யுத்தமாக தவராசா செய்துகொண்டிருக்க அவருக்கு உச்சநீதிமன்றில் இருந்தும் மேன்முறையீட்டு நீதிமன்றில் இருந்தும் பெற்றுக்கொண்ட பலமான அஸ்திரங்களால் வழக்குகளின் அடிப்படைகள் தகர்ந்துபோகும் அளவுக்கு கௌரி சங்கரி கொடுத்த அதிர்வு தவராசாவின் யுத்தகளத்தில் வெற்றிகளைக் குவித்தது. கிருஷ்ணரும் அர்ஜுனனும் போன்றதொரு போர்க்களச் செயற்பாட்டாளர்களாக பிரித்தறிய முடியாதளவுக்கு இணைந்த ஒரு ஆகர்சம் இருவரதும் செயற்பாட்டுத்தளத்தில் பிணைந்திருந்தது.

மரண தண்டனைக்கெதிரான 11 அடிப்படை மனிதவுரிமை வழக்குகளை அவர் தனியாகத் தாக்கல் செய்திருந்தார். அதுபோலவே கொரோனா-கொவிட்19 தாக்கத்தால் மரணித்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கெதிராக சமய நம்பிக்கையின் அடிப்படையில் தமது அடிப்படை மனித உரிமை பாதிக்கப்படுவதாக அவதிப்பட்டவர்களின் சார்பில் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி கோரிய அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்குகளையும் தாக்கல் செய்திருந்தார். கொரோனாவால் இறந்தவர்கள் எரிக்கப்படுவதை அரசியலாக்கி அதை அனைவரும் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்ட அரசியல் அழுத்தத்துக்கு எதிராக அவர் அடக்கம் செய்யப்படுவதை ஆதரித்து சட்டரீதியில் அசராது நின்றார். இத்தனைக்கும் கௌரி சங்கரி தவராசா அவர்கள் தனது சமய நம்பிக்கைப்படி எரிக்கப்படுவதை ஏற்றுக் கொண்டவர். அந்த இக்கட்டான நிலையில் மிகுந்த மனவுளைச்சலுக்கு ஆட்பட்டு நின்ற முஸ்லிம் சமுதாயத்துக்கு ஆறுதலாக கௌரி சங்கரி தென்பட்டார்.

## சிரேஷ்ட சட்டத்தரணி

கௌரிசங்கரி தவராசாவின் இத்தனை வருட கால சட்டப் போராட்டத்தில் அதிக கவனயீர்ப்பைப்பெற்ற சில வழக்குகள் குறித்த சுருக்கமான பதிவுகளை மேலோட்டமாகப் பட்டியல் படுத்தினால் கூட மலைப்பாக இருக்கும்.

01. பிரதம நீதியரசராக இருந்த போது பதவி பறிக்கப்பட்டு சிராணி பண்டார நாயக்க அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டு நீதித்துறையின் சுயாதிபத்தியம் கேள்விக்குட்படுத்தப்பட்டபோது அதற்கெதிராக வீறுகொண்டெழுந்து நீதித்துறையின் சுயாதீனத்தை நிலைநிறுத்த முன்னெடுக்கப்பட்ட சட்டப்போராட்டத்தில் இறுதி வரையும் கௌரி சங்கரி தவராசா முன் அணியில் அச்சமற்று அதிகாரத்துக்குச் சவாலாக நின்றார்.

02. கல்வியைத் தனியார் மயப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட சைட்டம் (SAITM) பல்கலைக்கழக விவகாரத்தில் தீர்வினைப் பெற்றுக்கொள்ள கௌரி சங்கரி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு வழிகோலியது. இலங்கையின் இலவசக் கல்வி

வரலாற்றில் ஏற்பட இருந்த பாரிய அபாயங்களைத் தடுக்க இந்த முயற்சி மிகவும் உறுதுணையாக இருந்தது.

03. மரண தண்டனை அமுலாவதை இடை நிறுத்தக்கோரி 11 அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

04. கொவிட் 19 தாக்கத்தால் மரணிப்போரின் சடலங்களை கட்டாய தகனத்துக்கு உட்படுத்துவதை ஆட்சேபித்தும் அவற்றை நல்லடக்கம் செய்யவும் அனுமதியளிக்கக் கோரி அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

05. அரசியலமைப்பின் 20 ஆம் திருத்த சட்ட மூலத்துக்கு எதிராக 4 விஷேட மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தார். நம் நாட்டின் எதிர்கால அரசியல் ஸ்திரப்பாட்டில் 20ஆம் திருத்தச் சட்டமூலம் ஏற்படுத்தப் போகும் சிக்கல்களையும் அதிகாரப் பிரச்சினையையும் எச்சரிப்பதாக அந்த மனுக்கள் அமைந்திருந்தன.

06. இலங்கை வரலாற்றில் எப்போதாவது மிக நியாயமாகச் செயற்படுகின்ற அதிகாரிகள் பொறுப்பான பதவிகளில் அமர்வார்கள். அப்படிப்பட்ட ஒருவர்தான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான இலங்கையின் முன்னணிக் குற்றப் புலனாய்வாளர் ஷானி அபேசேகர, ஆட்சி மாற்றத்தின் பின்னர் கைது செய்யப்பட்டபின்னர் அவருக்குப் பிணைப் பெற்றுக்கொள்ள மேன் முறையீட்டு நீதிமன்றிலும் அவரது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க உயர் நீதிமன்றிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் மேன் முறையீட்டு நீதிமன்றம், பிணை தொடர்பிலான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றினை அளித்து, பிணையும் வழங்கியிருந்தது.

07. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமையை ஆட்சேபித்து அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

08. சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பபட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். அதே வேளை ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை ஓர் அரசியல் கைதியாக சர்வதேச மன்னிப்புச் சபை பிரகடனம் செய்துள்ளது.

09. உயிர்த்த ஞாயிறு தாக்குதலோடு தொடர்பு படுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி உட்பட்டவர்கள் சார்பில் தானே மனுதாரராகக் கையொப்பமிட்டு உயர் நீதிமன்றில் மனுக்களைத் தாக்கல் செய்தார். 2019 ஆட்சி

மாற்றத்தின் பின்னர் தமது வாக்காளர்களைத் திருப்திப்படுத்த அரசாங்கம் பல்வேறு விடயங்களைச் செய்ய வேண்டி இருந்தது. முஸ்லிம் அரசியல் வாதிகளையும் மற்றும் பலரையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஊடாகவே இலக்கு வைக்கப்பட்டது. இந்நிலையில் இவர்கள் மீதான வெறுப்பு நாடளாவிய ரீதியில் அரசியல்மயப்பட்டபோது அவர்களுக்காக யாரும் முன்வரத் தயங்கி நின்ற போதுதான் கௌரி சங்கரி சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நீதியை நிலைநாட்ட அபாயகரமான நிலையிலும் தன்னையே மனுதாரராக்கிக் கொண்டது சாதாரணமான விடயமல்ல.

10. தனியார் ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு தீர்வு தேடி சுதந்திர வர்த்தக வலைய ஊழியர்களினால் 30-05-2011 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிசாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட கொடூரமான தாக்குதலினால் படுகாயமடைந்த 14 ஊழியர்களின் சார்பாக கௌரி சங்கரி தவராசாவே மனித உரிமை வழக்குகளைத் தாக்கல் செய்தார்.

11. 1997இல் இடம்பெற்ற கொழும்பு கலதாரி ஹோட்டல் குண்டுவெடிப்பில் கந்தசாமி பற்குணராசா என்பவர் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டார். ஆனாலும் பொலிசார் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு முன்னரே மிக விரைவாக உயர் நீதிமன்றில் கௌரிசங்கரி தவராசா அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தமை கந்தசாமி பற்குணராசா நீதிமன்றினால் 2004இல் விடுதலை செய்யப்பட முக்கிய காரணமாக அமைந்தது.

12. வீரகேசரி நாளிதழின் மூத்த பத்திரிகையாளர் சிறிகஜன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்படுவதாக சந்தேகத்தில் 1998 ஆகஸ்ட் மாதம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். ஆயினும் அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டையும் அரச தரப்பால் நிரூபிக்க முடியாமல் போனதன் காரணமாக 1999 ஆம் ஆண்டு நீதிமன்றால் விடுதலை செய்யப்படக் காரணமாக அமைந்ததும் அவருக்காகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல்மனுதான்.

13. மௌபிம பத்திரிகையின் ஊடகவியலாளரான பரமேஸ்வரியும் 10 கிலோ எடையுள்ள தற்கொலை வெடிகுண்டை உடமையில் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சுசந்திகாவும் 2006 இல் விடுதலை செய்யப்பட்டனர்.

14. 'ஈகுவாலிட்டி' நிறுவனத்தின் உரிமையாளரும் நன்கு அறியப்பட்ட பத்திரிகை வெளியீட்டாளரும் ஊடகவியலாளருமான வடிவேலு யசிகரனும் சக்தி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான வளர்மதியும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது 2008 இல் குற்றமற்றவர்களென விடுதலை செய்யப்பட்டார்கள்.

15. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான இறுதி யுத்தத்தில் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய புலிகளின் இலகுரக விமானங்கள் இரண்டு கொழும்பிலும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகாமையிலும் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலோடு தொடர்புண்டு என்ற சந்தேகத்தில் உதயன், சுடரொளி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் தற்போதைய காலைக் கதிரின் பிரதம ஆசிரியருமான வித்தியாதரன் 2009 பெப்ரவரியில் கைதுசெய்யப்பட்டார். இருந்த போதிலும் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை அரச தரப்பால் நிரூபிக்க முடியாமல் போனது. இறுதியில் நிரபராதியாக அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஊடகத்துறையைச் சார்ந்த பல்வேறு ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டாலுங் கூட அவர்களை அநியாயமாகத் தண்டிப்பதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை. காரணம் அவர்கள் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவும் களத்தில் இருப்பார். அவருடன் இணைந்து கௌரிசங்கரி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் எப்போதும் ஆர்வங்கொண்டிருந்தார்.

16. பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவானந்தன் கிசோர் செஞ்சிலுவை சங்க உத்தியோகத்தராக கடமையாற்றியபோது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக 1999 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டாலும் 2000 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலை செய்யப்படவேண்டிய சட்ட அழுத்தத்தை கௌரி சங்கரி கொடுத்திருந்தார்.

17. அரசாங்கத்தின் மின் விநியோகத் திட்டத்தைச் சிதைப்பதற்கு நாடாளாவிய ரீதியில் மின்மாற்றிகள் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தாக்குதலில் ஈடுபடுகின்ற தாக்குதல்தாரிகளைக் கண்டுபிடிக்கமுடியாத பாதுகாப்புத்துறை சாதாரண மக்களை இலக்கு வைக்கத் தொடங்கியது. அந்தவகையில் 2001 ஆம் ஆண்டு மின்மாற்றிகள் சேதப்படுத்தப்பட்டதாகத் செல்வராசா காந்தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் இருந்து ஐந்தாண்டுகளின் பின்னர் களுத்துறை மேல் நீதிமன்றால் 2006 இல் செல்வராசா காந்தன் விடுதலை செய்யப்பட்டார்.

18. விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவில் மருத்துவ தாதியாகச் செயற்பட்டு டென்மார்க் சென்று புலிகளுக்கு நிதி சேகரித்ததாகக் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த டென்மார்க் கல்லூரி மாணவி சித்திரா மீதான வழக்கு சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருந்தது. அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் 1996ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். அவரை மீண்டும் டென்மார்க் குடியுரிமை வழங்கி அழைத்துக் கொண்டது. இந்தச் சம்பவத்தை பதிவு செய்ய இலங்கை வந்திருந்த டென்மார்க் ஊடகவியலாளர்கள் நால்வர் பாதுகாப்புத்தரப்பால்

தடுத்து வைக்கப்பட்டாலும் கௌரி சங்கரியும் கே.வி.தவராசாவும் இணைந்து மேற்கொண்ட சட்ட நடவடிக்கைகளால் அவர்கள் நால்வரும் விடுவிக்கப்பட்டார்கள். டென்மார்க் கல்லூரி மாணவி சித்திரா நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் டென்மார்க் பயணமாகும்வரை தவராசா கௌரி சங்கரி தம்பதியரின் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

19. ஜோன் என்ற பெண் தனது மகனைத் தேடி ஐரிசில் இருந்து இலங்கை வந்த போது 1996 இல் விடுதலைப் புலிகளின் உளவாளி என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இவரது வழக்கு முடியும் வரை தவராசா கௌரி சங்கரி தம்பதியரின் வீட்டிலேயே தங்கியிருந்தார். வழக்கு வெற்றிபெற தனது மகனுடன் மீண்டும் ஐரிஸ் திரும்பினார்.

20. மட்டக்களப்புப் போரதீவிலிருந்து கொழும்பில் தாக்குதல் நடாத்துவதற்காக ஆயுதங்களுடனும் வெடிபொருட்களுடனும் வந்ததாக 2004இல் கைது செய்யப்பட்ட கங்காதரன் 2013 இல் விடுதலையானார்.

21. யாழ்ப்பாண பிரதான பொலிஸ் அத்தியட்சகர் திரு. சால்ஸ் விஜயவர்தன யாழ் இணுவிலில் வைத்து 2005 ஒகஸ்ட் 4 இல் விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டு மல்லாகத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் யாரையும் கைது செய்ய முடியாத பாதுகாப்புத்தரப்பு கோபி என்றும் வீரபாண்டியன் என்றும் அழைக்கப்படும் கதிரமலை வைதீகனை கைது செய்து நீதிமன்றில் முந்நிலைப்படுத்தினாலும் அவர் நிரபராதியாக 2006 இல் விடுதலை செய்யப்பட்டார்.

22. வெளிநாட்டு நாணய மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் வர்த்தகர் வின்சேந்திரராஜன் அரசதரப்பால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் 1999ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

23. விடுதலைப் புலிகளுக்கு கடற்படையின் இரகசிய தகவல்களை வழங்கியதாக கடற்படை வீரர் நவாப்தீனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட நான்கு வழக்குகளிலிருந்தும் 14 வருடங்களுக்குப் பின்னர் 2014 இல் விடுதலை செய்யப்பட பிரதான காரணம் அவரது வழக்கு உரிய முறையில் கௌரி சங்கரியாலும் தவராசாவாலும் நகர்த்தப்பட்டமையாகும். நீதிக்காக அவர் 14 வருடங்கள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது.

24. தற்கொலை அங்கிகள், பிஸ்டல் 02, கைக்குண்டு 2 உட்பட்ட வெடிபொருட்களை கொழும்பு 12 கதிரேசன் கோவிலில் மறைத்து வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட தர்மகர்த்தா வீரசுப்பிரமணியத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2000 ஆம் ஆண்டு விடுதலையானார்.

25. சுவிஸ் பிரஜையும் பேர்ன் மாநிலத்தில் 'தாய் வீடு' பணமாற்று நிறுவனத்தின் உரிமையாளருமான நடராஜா கருணாகரன் புலிகளுக்கு நிதி உதவி வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரசு தரப்பு சமர்ப்பித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தையும் சாட்சியங்களையும் நிராகரித்த மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய வழக்கிலிருந்து நடராஜா கருணாகரனை விடுதலை செய்தார்.

26. விடுதலைப் புலிகள் அமைப்பில் 1991 இல் இணைந்து, தமிழீழ விடுதலைக் கடற் புலிகளின் மகளிர் பிரிவின் ஒரு தலைவியாகப் பணியாற்றிய பகிரதி முருகேசு 1998 ஆம் ஆண்டு பிரான்ஸுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், சுகவீனம் அடைந்திருந்த தனது தாயாரைப் பார்ப்பதற்காக இலங்கை வந்து மீண்டும் பிரான்ஸ் செல்வதற்காக 2015 மார்ச் 2ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு தனது ஒன்பது வயது மகளுடன் வந்திருந்த போது பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டாலும் உரிய சட்ட நடவடிக்கைகளின் காரணமாக 2016 ஆம் ஆண்டு வைகாசி மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

27. பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய கொலை முயற்சி வழக்கில் 2006 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பிரித்தானியப் பிரஜையான ரவிகுமார், கோட்டாபயவைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி தற்கொலைக் குண்டுதாரிக்கு முச்சக்கர வண்டியைக் கொள்வனவு செய்ய நிதி வழங்கியதான குற்றச்சாட்டிலிருந்து ஐந்து வருட விசாரணையின் பின்னர் 2011 ஆம் ஆண்டு விடுதலையானார்.

28. 2006 இல் கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரவிராஜ் கொலை தொடர்பான நீதவான் நீதிமன்ற வழக்கிலும் 2016இல் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் பாதிக்கப்பட்ட இரவிராஜ் குடும்பத்தின் சார்பில் கே.வி. தவராசா முந்நிலையாக வழக்கை நெறிப்படுத்தும் பொறுப்பை முழுமையாகச் சுமந்தவர் கௌரி சங்கரிதான்.

29. 2006லும் 2008லும் ஜேர்மனியிலும் அவுஸ்திரேலியாவிலும் பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் கூடியிருந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் ஈழத்தைப் பெறப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பொங்கு தமிழ் நிகழ்வில் உரையாற்றியதாக ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேத்திரன், எஸ். கஜேந்திரன், சிவாஜிலிங்கம் ஆகிய த.தே.கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமெதிராகப் பொலிஸ் மாஅதிபர் குற்றப்புலனாய்வுத் துறைக்கு முறைப்பாடு செய்ததையடுத்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் விடுதலை செய்யப்பட்டனர்

30. விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மானின் வேண்டுகோளுக்கு இணங்க விடுதலைப்புலி அங்கத்தவர்களுக்கு தெஹிவள

செலான் வங்கிக் கிளையில் வங்கிக் கணக்குகளைத் திறந்து கொடுத்துப் புலிகளின் நிதிப் பறிமாற்றத்துக்கு ஒத்தாசை நல்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 2010இல் கைது செய்யபட்ட தெகிவளை செலான் வங்கி முகாமையாளர் இரண்டாண்டுகளின் பின்னர் விடுதலையானார்.

31. மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவன் தாமோதரம் பிள்ளை சயந்தன் ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் தற்கொலை அங்கியையும் உடமையில் வைத்திருந்தமைக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு 2009இல் கைது செய்யப்பட்ட சயன்தனின் தாய்க்கும் தங்கைக்கும் எதிராகக் கொழும்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. 2012இல் விடுதலை.

32. இலங்கை குடியரசின் இராணுவத்துடன் சேர்ந்து கடமையாற்றிய கருணா அணியின் உறுப்பினர்களான தங்கராஜா தப்பரமூர்த்தி, செங்குராஜா நல்லையா, குகராஜா, ராஜா ராசவேலி ஆகியோரைக் கொலை செய்வதற்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியதாக 2010ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட கணேசுஷரத்னம் சாந்ததேவன் யாழ் மாநகரசபை உறுப்பினர் முருகையா கோமகன் ஆகியோருக்கு எதிராகக் கொழும்பு மேல்நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குகளிலிருந்தும் 2017இல் விடுதலை செய்யப்பட்டனர்.

33. புலனாய்வுத்துறை அதிகாரி சுனில் தாப்ரு தெகிவளை பொலிஸ் விடுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கு மிகுந்த இடர்களைச் சந்தித்த ஒன்றாகும். உண்மைகள் கண்முன்னே இருக்கும் போது சட்டத்தை பொய்மையின் பக்கம் அழைத்துச் செல்ல முயன்ற அனைத்து நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இடையராது போராடிய ஒரு முக்கியமான வழக்குமாகும். (2003- 2018).

34. பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி வழக்கில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பசீர் அலி முஹம்மத் என்பவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி 2006 ஒகஸ்ட் 14 ஆந் திகதி குண்டுத் தாக்குதல் நடாத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட கனகரத்தினம் ஆதித்தன் மற்றும் இருவருக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கனகரத்தினம் ஆதித்தனால் வழங்கப்பட்ட அரச சான்றாக மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்படப் பிரதான காரணமே கௌரி சங்கரியின் நுணுக்கமான சட்ட நகர்வுதான்.

35. கொழும்புச் செட்டியார்த் தெரு நகைக் கடை உரிமையாளர் சிவானந்தம் 2010 இல் கைது செய்யப்பட்டாலும் அவருக்கெதிரான வழக்கைக் கொண்டுநடாத்த முடியாதளவுக்கு அரசதரப்ப தள்ளப்பட இறுதியில் சிவானந்தம் விடுதலை செய்யப்பட்டார்.

36. வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்மாற்றி நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெரிய சதித் திட்டடியதோடு கொழும்புலிருந்து கட்டுநாயக்க செல்லும் புகையிரதத்தினை வெடி குண்டு வைத்துத் தகர்க்கச் சதித் திட்டம் தீட்டியதோடு கடும்சேதம் விளைவிக்கக் கூடிய குண்டுகளை உடமையில் வைத்திருந்ததாக 2008இல் கைது செய்யப்பட்டு கொழும்பில் மூன்று வழக்குகளும் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நான்கு வழக்குகளும் தாக்கல்செய்யப்பட்டு குற்றவாளியாகக் கொண்டு போய் நிறுத்தப்பட்ட ஜெயராம் இராமநாதனுக்கு எதிரான ஏழு வழக்குகளில் இருந்தும் 2019 இல் அவர் விடுதலை பெற ஒரு நீண்ட சட்ட யுத்தமே செய்யவேண்டி இருந்தது.

37. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரான வேலமாலிதன், செயலாளர் பொன்னம்பலம் லட்சுமி காந்தன் ஆகியோர் 2013 ஜனவரி 12ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ ாரினால் கைது செய்யப்பட்டு, மாவட்டக்கிளைக் காரியாலயத்தில வெடிபொருட்களை வைத்திருந்ததாக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும் அவர்கள் நிரபராதிகளாக விடுதலையாகினர்.

38. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவையும் மேஜர் துவான் நிசாம் முத்தலிபையும் 2005ம் ஆண்டு குண்டுவைத்து கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக 2006இல் கைது செய்யப்பட்ட வாசுகோபாலுக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2009ஆம் ஆண்டு கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதும் இரண்டு வழக்குக்களில் இருந்தும் 2017இல் விடுதலை செய்யப்பட்டார்.

39. 2009 ஆண்டு சுதந்திர தின விழாவிலும் தியத்தலாவ இராணுவ முகாமிலும் மகிந்த ராஜபக்ச. கோட்டாபய ராஜபக்ச, சரத் பொன்சேகா ஆகிய பிரமுகர்களைக் கொலை செய்யச் சதித்திட்டம்தீட்டி கொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கனகரெத்தினத்தின் மகன் ஆதித்தியன் பத்தாண்டுகளின் பின் விடுதலையானார்.

40. வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 2005 ஒகஸ்ட் 12ஆம் திகதி இரவு 10.45 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் இசிதோர் ஆரோக்கியநாதன் 2005இல் கைதுசெய்யபட்டு பதின்மூன்று வருடங்களின் பின்னர் நீதிமன்றால் 2018இல் விடுதலை செய்யப்பட்டார்.

41. ஐந்து மாணவர்கள் உட்பட 11 இளைஞர்கள் 2008 இல் கடற்படையினரால் கடத்தப்பட்டு திருகோணமலையில் அமைந்துள்ள சித்திரவதை முகாமில் தடுத்து வைத்து கப்பம் கோரப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு விசாரணையில் திடுக்கிடும் பல தகவல்கள் வெளியாகின. திருகோணமலையில்

அமைந்துள்ள சித்திரவதை முகாம், முல்லைதீவில் இயங்கிய கோட்டாபய சித்திரவதை முகாம் ஆகியவற்றின் தகவல்கள் பகிரங்கமாகின. குற்றப்புலனாய்வுத் திணைக்களக்கின் பணிப்பாளர் சானி அபேசேகர, பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா போன்றவர்கள் மிக நியாயமான முறையில் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேல் நீதிமன்றில் இவ்வழக்கு ட்ரைல் அட் பார் முறையில் இடம்பெற்று வருகின்றது.

42. 2018 ஆடி 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இடம்பெற்ற அரச வைபவத்தில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையில் முரண்பாட்டைக் கொண்டுவரும் விதத்தில தண்டனைச்சட்டக் கோவை பிரிவு 120ன் படி தண்டனை வழங்கக் கூடிய குற்றத்தை புரிந்துள்ளார் என பொலிசாரால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அன்றைய தினமே இராஜாங்க அமைச்சர் பிணையில் விடுதலையானார்.

43. கொள்ளுபிடிய பித்தளை சந்தியில் 2006ம் ஆண்டு பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய கொலைமுயற்சி வழக்கில் கைதுசெய்யப்பட்ட புற்றுநோயாளியான சந்திரபோஸ் செல்வச்சந்திரன் 12 வருட விசாரணையின் பின்னர் 2019 இல் விடுதலை பெற்றார்.

கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக இடம்பெற்ற நீதிக்கான இந்தச் சட்டப்போரில் எந்த இடத்திலும் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரிதோற்றுப் போகவில்லை. ஆயிரத்திற்கு மேற்பட்ட அடிப்படைமனித உரிமை மனுக்களையும் பல நூற்றுக்கணக்கான ஆட்கொணர்வு மனுக்களையும் தாக்கல் செய்து நீதிக்கான பாதையை விசாலப்படுத்தினார். எல்லாப் பக்கங்களிலிருந்தும் கிளம்பிய அனைத்து அச்சுறுத்தல்களையும் தாண்டி அவரது முயற்சியில் மிகத் தெளிவோடு பயணித்தார். இன,மத,மொழி பேதங் கடந்து மனிதம் என்ற பொதுத்தளத்தில் தனது இருப்பை நிலைப்படுத்தினார். சட்டவிரோதத் தடுத்து வைப்பு முறையற்ற கைது என்று அனைத்துக்கெதிராகவும் அவர் முறையான சட்டத் தாக்குதலைச் செய்தார். அதனால் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், அரசாங்க அதிபர்கள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், மருத்துவர்கள், உயர்மட்ட அரச நிருவாகிகள், வங்கி முகாமையாளர்கள் என்று தொடங்கி கோவில் தர்மகர்த்தாக்கள், பாடசாலை அதிபர்கள், ஊடவியலாளர்கள், கிராம சேவகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என்று அந்தத் தளம் விரிந்து தமிழ்ப் போராளிகள், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர் போன்றவர்கள் உட்பட சாதாரண பொதுமக்கள் வரைப் பயனடைந்தார்கள். சட்டத்துறைச் செயற்பாட்டாளர்கள் தொடக்கம் முக்கியமான அதிகாரிகள் மீது சட்டம் முறையற்ற விதத்தில் பாவிக்கப்பட்டால் அதற்கெதிரான முறையான சட்டப்பிரயோகத்தின் பாதையில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி முதலாவது அணியில் முன்னிற்பார்.

நீதிக்காக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரியின் அலுவலகத்தை நாடும் ஒருவர் அவரின் முதல் வார்த்தையில் தனக்கு நீதி கிடைத்துவிட்ட திருப்தியை உணரமுடியும். அப்படித்தான் அபாயகரமான பல வழக்குகளில் அவர் முந்நிலையாகினார். அதை விட மிகவும் ஆபத்தானது

அதிகாரத்துக்கு எதிராகக் களமிறங்கி தன்னையே மனுதாரராக்கிக்கொண்டு கையொப்பமிட்டு எதைப்பற்றியும் கொஞ்சமும் அச்சப்படாமலும் அலட்டிக்கொள்ளாமலும் நீதியை இலக்கு வைத்து அவர் பயணப்படுவதாகும். நீதிமன்ற வளாகத்தில் அனைவரும் இன்றுவரையும் அவரை ஆச்சரியத்துடன் பார்ப்பதற்கும் அவர் குறித்து விதந்து கூறுவதற்கும் பிரதானமான காரணமாக அமைந்தது அவரது இந்த அசட்டுத் துணிச்சல்தான். நமக்கு எதற்கு வீண் வம்பு என்று ஒதுங்கிச் செல்லும் பலருக்கு மத்தியில் கௌரிசங்கரி தவராசா அவர்கள் புயலாகி நின்றார். அநீதியை அடித்து நொறுக்கும் அப்பண்பு அவருக்கு இயல்பானது எனவேதான் அவர் எப்போதும் இயல்பாகவே இருந்தார். அவர் கோபப்பட்டு யாரும் பார்த்திருக்கவாய்ப்பில்லை ஏனெனில் அவர் கோபப்பட்டால் அதை நிச்சயம் யாராலும் எதிர்கொண்டிருக்க முடியாது. அதனால்தான் எல்லாவற்றுக்கும் புன்னகையைப் பயன்படுத்தினார். அந்தப் புன்னகை மிகவும் அர்த்தம் பொதிந்ததாக இருக்கும்.

என்றும் நிரப்பப்படாத இடைவெளியை இந்நாட்டின் சட்டத்துறைச் செயற்களத்தில் ஏற்படுத்திவிட்டு 2021 ஆகஸ்ட் 23ஆம் திகதி எம் எல்லாரிடமிருந்தம் விடைபெற்றுக் கொண்டார். கொரோனா பெருந்தொற்று உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் போதும் கூட தன்னிடம் சட்ட உதவி நாடி வந்தவர்களை நிராசையாகச் செல்லவிடவில்லை. கடைசி நிமிடம் வரை அவர் அவர்களுக்காகக் களத்தில் இருந்தார். மற்றவர்களுக்காகவே தம் வாழ்வை அர்ப்பணிக்கின்ற மனிதத்தின் அன்புருவாகவே அவர் என்றும் எம் நினைவுகளில் நிலைத்திருப்பார்.

**தர்மராஜா தர்மஜா**
கனிஷ்ட சட்டத்தரணி

***Tharmarajah Tharmaja***
***Junior - Attorney at law***

In Memory of
# Mrs. Gowry Shangary Thavarasha L.L.B
Senior Attorney-at-law

## *A life of Diversity with a Mind of Service Attitude*

### Biography

Mrs. Gowry Shangary Thavarasha (1955 -2021), Senior Attorney-at-law, was born on 29th day of October 1955 in Alaveddy in Jaffna, Sri- Lanka, to Shanmugasundaram and Jamunadevi.

She was the loving sister of Pushpa Gowry (Monarch), Gowry Malar (Canada), Gowry Nathan (Germany), Gowry Mohan (London), Gowry Priyadarshini (London) and Vijaya Gowry (Canada).

She got married to Mr. K.V. Thavarasha on 16th of June 1984 who is the son of Karthirgamu Velayuthapillai (Proprietor of the Raja Stores, Ratnapura) and Sellamma (Punguduthivu). Mr.Thavarasha and Mrs.Gowry Shangary always had a lovelybond of affection and fondness each other in their legal and family life as well.

Mr. K.V Thavarasha, President's Counsel who was the greatest pillar in supporting to Mrs. Gowry Shangary in circumstances when the Colombo- Hulftdorp Courts complex testified her remarkable services in the dispensation of Justice, Rule of Law, Human Rights and redemption from Arbitrary Arrests, Unlawful Detentions and accordingly safeguarding and protecting the democracy.

Mrs. Gowry Shangary secured her prominence in the cases of unlawful arrests and detention of militants, cases against Journalists, Doctors, Temple trustees, Customs

officers, Naval officers, Police officers, Public servants, Bank managers etc. She is the one who presided over many cases on a humanitarian basis in the courts of law for the violation of the human rights and in that effort she was able to file more than 1000 petitions in cases of human rights violations and appeals in the Supreme Court and as well as in the Court of Appeal without having any racial prejudice *viz* on behalf of former Ministers and Members of Parliament, Former Director of CID and Former Governor of the Western province ; she is an Iron Lady who appeared and challenged many laborious cases with great courage until her last minute of breath.

While she was in the legal field for the past 35 years, she has widely recognized by others therefore she has become a well renowned lawyer in Sri Lanka and as well as internationally, and further she has been accoladed by the Swiss Embassy for her impeccable and selfless service.

## Education

Mrs. Gowry Shangary had her primary and secondary education in Jaffna. She secured a Bachelor of Laws Degree from the University of Colombo and thereafter completed her final year of law at the Sri Lanka Law College and took her oath in the Supreme Court on 1$^{st}$ of June, 1987.

## Voice for the Voiceless

> *Every stone of the Sri-Lankan Supreme Court building bears witness to all the steps Gowry Shangary has taken to raise the voice for the voiceless.*

Her free service to the affected indigent people and her service to the underprivileged and in securing their human rights and the ways she preserved human rights to her community are immense and enomous

Gowry Shangary played very active roll very particularly in many Fundamental Rights Applications. Fundamental Rights Petition filed on behalf of 14 employees who were injured with brutal attack by the Police and Army during a protest campaign held on 30$^{th}$ of May 2011 organized by Free Trade Zone employees against the Private Pension Scheme, the Fundamental Rights petition related to a Private Medical College popularly known as the SAITAM affair, the Fundamental Rights petition against the detention of former Minister Rishad Bathiudeen and Senior Attorney at Law Hejaaz Omer Hizbullah under the Prevention of Terrorism Act and 11 Fundamental Rights Petition filed in the Supreme Court in the year of 2019 seeking suspension of death penalty that are some of the remarkable petitions she filed to protect the fundamental rights of the citizens of this country.

## Services as a lawyer

Gowry Shangary waged a number of legal battles in the Court of law to uphold the Rule of Law against arbitrary detention and to protect human rights to safeguard democracy and to get the release of the illegally detained Prisoners. Some of the important cases in which she played a significant role in upholding the rule of law are:

1. Legal battles for the independence of the judiciary, particularly seeking Justice for Shirani Bandaranayake, who was ousted from her office of Chief Justice.

2. Four petitions in the Court seeking permission to bury the remains of the dead bodies of those who died due to Covid 19 situation.

3. Alleged arbitrary and malicious arrest of Former Director of the Criminal Investigation Department Shani Abeysekara, Sri Lanka's Leading criminal Investigator. Gowry Shangary was able to secure his release on an bail application in the Appeal Court. Some cases in the Supreme Court were also filed to defend his patentrights.

4. Challenged the arrest and detention of Mr.Hijaz Hezbollah who was declared political prisoner allergy had some in connection with Easter Sunday's attacks by the Amnesty International in the High Court.

5. Arrest of Srikajan, a Senior Journalist of the Veerakesari Daily News paper by the Anti-Terrorist Squad in August 1998 on suspicion of having links with the Liberation Tigers of Tamil Ealam (LTTE). He was acquitted by the Court in 1998 after failing to prove any of the charges that were leveled against him.

6. Journalist Vadivelu Yasikaran, proprietor of '*Equality*' who is well- known journalist, and Valarmathi, producer of Shakthi TV Show, were arrested and they were acquitted in 2008 when they were produced before the Court.

7. Arrest and detention of Deportee Chitra, a Danish college student detained under the Prevention of Terrorism Act. This was reported in 1996. Four Danish Journalists who arrived in Sri Lanka and they were arrested and later released.

8. British women John was arrested in 1996 on the basis of charges of spying for the LTTE while returning to Sri-Lanka from Iris who came to Sri Lanka in search of her son and she was later released, since there was no any evidence.

9. Arrest of Veerasubramaniamin who was the Trustee of the Hindu Kathiresan Temple, Colombo 12 for alleged charge of concealing 20 suicide vests, 2 pistols, 2 grenades and explosives and he was later released in2008.

*10. Uthayan,* former Editor of *Sudaroli* News Paper and Editor-in-Chief of *Kalaik Kadir magazine* were arrested and later he was released. Despite the arrest of Senior Journalist Vidyadharan on February 26, 2009 on suspicion to have involvement in two LTTE light air craft attacks near the Katunayake Free Trade Zone porting Colombo on February 20, 2009,which caused great deal of controversy in the final stages of the civil war between the Sri Lankan government and the Liberation Tigers of Tamil Eelam (LTTE), he was later released on failing to prove the charges leveled against him.

11. Former Member of Parliament Sivanandan Kishore was arrested by the Anti-Terrorist Squad in April 1999 for aiding and abetting the Liberation Tigers of Tamil Eelam (LTTE) while he was serving as a Red Cross official and he was released in May2000.

12. Nadarajah Karunakaran, a Swiss Citizen and owner of a Thai Real Estate Company in Bern, was acquitted by High Court Judge Lalith Jayasuriya Nadarajah Karunakaran, who rejected prosecution testimony and a source of confession in a case filed by the Attorney General in the Colombo High Court on alleged charges of providing financial assistance to LTTE.

13. Four charges were framed in the Colombo High Court, including seven cases against Jayaram Ramanathan, who was arrested in 2008 for plotting to blow up a power plant in Elakanda, Wattala, and possessing grenades that could cause severe damage to a train that was moving from Colombo to Katunayake, later he was released in 2019.

14. She appeared on behalf of her clients in the case that was filed in the Colombo Chief Magistrate's Court after filing a complaint by the Inspector General of Police attached to the Criminal Investigation Department against TNAMPs Jayanandamoorthy, P.Ariyanethran, S. Kajendran and Sivajilingam, four Parliamentarians and the leader of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) who made a speech in support of the struggle for Eelam among the Diaspora who had arranged a public rally in Germany and Australia in 2006 and 2008 during the *Pongu Tamil Uprising.*

15. The Manager of the Dehiwala Seylan Bank was released in 2012 after being arrested in 2010 on the alleged charges of aiding and abetting LTTE militants said to have pen bank accounts and transfer funds at the request of agent of Pottu Amman at the Dehiwala SeylanBank.

There are many more remarkable matters and cases that one could relate about Gowry Shangary as her legacy. She is an excellent mentor and guide for the budding lawyers, besides a mother who has nurtured countless junior lawyer under her tutelage. She has fought valiantly for justice in many cases where many lawyers reluctant to appear before some Court and in front of anyone. Her legal history can only be traced back to the lines. Whatever the challenges that Gowry Shangary faced during her 35 years of active practice, there is no doubt that her life was one of diversity and service motivated.

Her demise is an irreparable loss to the society as a whole and her loving family. There is no doubt that the immortal memories of This beloved heroine will remain in our heart forever and forever.

# Memories of Gowry

















A Journey of
Thava
&
Gowry



சிரேஷ்ட சட்டத்தரணி சிவகடாட்சம், ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா, பேராசிரியார் வீ. ரி. தமிழ்மாறன், ஜனாதிபதி சட்டத்தரணி ஏ. டபிள்யு. அப்துஸ் சத்தார் 1981.03.16 சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் எடுத்தபோது.




















Gowry With Thava










YAMAHA














# Moments with Family







































# Growing and strengthening in the Legal Profession












# Gowry Shangary with her loving Seniors & Juniors
















Oath Taking Ceremony of
President's Counsel
Mr. K.V.Thavarasha
18.01.2018





K. V. Thavarasa *President's Counsel* | ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா





நீதிவான் நீதிமன்றம், மட்டக்களப்பு
මහේස්ත්‍රාත් අධිකරණය, මඩකලපුව
MAGISTRATE'S COURT, BATTICALOA



## Gallery of Memories on 18.01.2018











































இரங்கற்
செய்திகள்
Condolence
Messages

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

# அனுதாபச் செய்தி

திரு. தவராசா அவர்களே!,

உங்களுடைய அன்பிற்குரிய மனைவியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி. கௌரி சங்கரி தவராசா அவர்களின் முதலாமாண்டு நினைவஞ்சலி நிகழ்வில் நான் மிகுந்த கவலையுடனேயே பங்கு பற்றுகின்றேன். அமரர் கௌரி சங்கரி தவராசா அவர்கள் தனித்துவமானதும் துணிவுமிக்கதுமான ஒரு சட்டத்தரணியாவர். போராளிகள், வைத்தியர்கள், ஊடகவியலாளர்கள், கோவில் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், அரச பணியாளர்கள் போன்றோர்கள் சட்ட விரோதமான முறையில் கைது செய்து தடுத்து வைத்தல் தொடர்பான மனித உரிமைமீறல் வழக்குகளில் அவர் பங்கு பற்றியதுடன் அவ்வாறான வழக்குகளில் அவர் ஒரு முதன்மைச் சட்டத்தரணியாகவும் திகழ்ந்து வந்துள்ளார்.

அத்துடன் அவர் மனித உரிமைகள் பாதுகாப்பதற்கு துணிந்து போராடியதுடன் பல நீதிமன்றங்களில் மனிதாபமான ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக தோன்றி எதிர்வாதம்மாற்றி அதில் வெற்றி கண்டு எல்லோரினதும் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

தனது சேவையை நாடியோர்களுக்கு குறிப்பாக இயலாதோர்க்கும் தேவையை கண்டறிந்து அவர்களுக்காக மிகவும் திறமையாக சேவையாற்றியமை அவரின் தனிச் சிறப்பாகும். திருமதி. கௌரி சங்கரி தவராசா அவர்கள் பல முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தோன்றியதுடன் அவ்வாறான வழக்குகளில் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக அவர் முக்கிய பங்கையும் வகித்துள்ளார்.

அவர் ஒரு சட்ட ஆலோசகராக மாத்திரமின்றி இளம் சட்டத்தரணிகளுக்கோர் வழிகாட்டுபவராகவும் தன்னிடம் பயில்கின்ற பல இளம் சட்டத்தரணிகளின் திறமையான ஒரு போதானாசிரியாகவும் இருந்து வந்துள்ளார். அவரின் இழப்பு இந் நாட்டு மக்களுக்கும் சட்டத்துறைக்கும் ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். அமரர். திருமதி. தவராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

**ரணில் விக்கிரமசிங்ஹ**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

# Condolence Message



*Dear Mr. Thavarasha,*

*It is with deep sadness that I reach out to you on the death anniversary of your beloved wife Senior Attorney-at-law Mrs. Gowry Shangary Thavarasha.*

*The Gowry Shangary Thavarasha, I recall was an exceptional courageous lawyer who secured her prominence in the cases of unlawful arrests and detention of militants, journalists, doctors, temple trustees and public servants. She was an ardent defender of human rights and represented many cases on a humanitarian basis in the courts of law.*

*She was always available to those who needed her services, especially those most marginalized.*

*Mrs. Thavarasha played a significant role in upholding the rule of law in a number of prominent cases.*

*She has been an excellent mentor and guide for young lawyers, and nurtured many under her tutelage.*

*Her passing has been a great loss for the country and the legal fraternity.*
*May the late Mrs. Thavarasha's Soul Rest In Peace.*

***Ranil Wickremesinghe***
*President*
*Democratic Socialist Republic of Sri Lanka*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

## A kind and warm lady with great affection

*No doubt, memories of Mrs. Gowry Thavarasha nee Shangary are jealously treasured by all those who had the opportunity to experience her warm and kind disposition in her personal as well as professional life. Her parents and six siblings had been blessed to share their love and affection with a person of such a pleasing character. When Gowry commenced her married life in her late twenties, she became a partner who brought not only love and affection but strength and courage to Mr. Thavarasha, President's Counsel. Her active engagement in professional matters in her capacity as an attorney-at-law, who was also decorated with a law degree, together with Mr. Thavarasha, had been a strong common foundation that contributed to the success of their personal and professional lives, immensely. The guidance and support Mr. Thavarasha extended to Gowry, gave her the courage and paved the way for her to discharge all her professional duties with commitment and dedication.*

*During her thirty-five year professional life she did not confine her services to any particular area of work. Mrs. Thavarasha was not selective in accepting responsibilities as a lawyer. The contribution she made as an attorney-at-law paved way to numerous persons to seek redress through judicial proceedings.*

*Many vacuums had been created following her untimely departure. We have not only lost a committed and dedicated professional, but a sincerer friend and a great human being too. Her loss reaffirms the basic element - impermanence. Yet, all her contributions and their positive impact on mankind give us the strength to move forward selecting the correct path while managing grief and sorrow we encounter due to the unexpected early demise of Mrs. Gowry Thavarasha nee Shangary - a kind and warm lady with great affection.*

***Jayantha Jayasuriya PC***
*Chief Justice*

## In memory of Gowry Shangary Thavarasha, Attorney at Law



*I got to know Gowry, closely, during the time Hulftsdorf was ablaze with the movement to impeach the Chief Justice in 2012/13. Prior to that I had met her at many functions organized by the lawyers and had seen her in the Supreme Court almost daily appearing with Senior President's Counsel as the Instructing Attorney.*

*Before all these took place, we had met each other at the Faculty of Law of the University of Colombo.*

*Irrespective of all these, Gowry had never visited me in my Chamber at Hulftsdorp, although I was there from 1996, until after November 2012. That clearly highlights the true nature of Gowry. Whenever I saw her in the Supreme Court, either in Court No. 502 or 403, she was always carrying a bundle of files and most of those cases she instructed, were pertaining to either violations of human rights or related to controversial issues. She was a person who wanted to be a friend for those in need. She wanted to assist people who had unfairly and unjustly been thrown into difficulties. She wanted to extend her support to eradicate unreasonable decisions or unfair treatment. Gowry devoted her precious time for those who were in need of her services and in her own way fought for them and their rights. She was fearless and by nature, Gowry was a fighter.*

*It brings to my mind the protest march against the impeachment of the Chief Justice, where thousands of Lawyers participated, notwithstanding the efforts by many at that time to scuttle it. A photograph of the protest was published in several newspapers. In one of those, a closeup of Gowry was highlighted, donning a black headband and raising her hand in protest of what was happening at Hulftsdorp.*

*That photograph, which is embedded in my mind, speaks the true nature of Gowry Shangary Thavarasha.*

*It brings deep sadness to think that Gowry is no more. Many who obtained her assistance as well as those who knew her closely would feel the void, she had left at Hulftsdorp. It is hard to fill such a vacuum. Gowry's demise was indeed a loss.*

*Our heartfelt condolences are extended to her beloved husband, Thava.*

***Justice Dr. Shirani A. Bandaranayake***
*43rd Chief Justice of the Republic of Sri Lanka.*

## Message from the First Secretary
### of Embassy of Switzerland to Sri Lanka and the Maldives

*Dear Mr. Thavarajah,*

*We are deeply saddened by the loss of Mrs. Gowry Shankary Thavarajah. We have lost an exceptional courageous lawyer who continued to fight fearlessly also during difficult times. Being always available to the most affected persons was a special part of her impartial work. She was serving humanity and defending the human rights of the most marginalized people. Her passing away is a great loss for the country and the legal community.*

*Please accept our condolences.*

*Sincerely,*

***Sidonia Gabriel***
*First Secretary*

அன்புடையீர்,

திருமதி. கௌரி சங்கரி தவராசா அவர்களின் மறைவு குறித்து நாங்கள் மிகுந்த மன வேதனையடைகிறோம். மிகவும் கஷ்டமான காலகட்டத்தில் மக்களுக்காக தொடர்ச்சியாக போராடிய ஒரு துணிச்சல்மிக்க சட்டத்தரணியை நாம் இப்போது இழந்து நிற்கின்றோம். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக எவருக்கும் உயர்வு தாழ்வோ பாராபட்சமோ காட்டாமல் தைரியத்துடனும் துணிகர மனோபாவத்துடனும் போராடிய ஒரு பெண்மணியை நாம் இழந்து விட்டோம். அவர் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டு ஒடுக்கப்பபட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்து அவர்களின் உயர்வுக்காக என்றென்றும் அளப்பரிய சேவை செய்து வந்துள்ளதை எவரும் மறக்க முடியாது. அவரின் இழப்பு சட்டத்துறையைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல இந்நாட்டு மக்களுக்கே ஏற்பட்ட பேரிழப்பாகும். எங்களது இதயபூர்வமான இந்த இரங்கல் செய்தியை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**சிடோனியா காபிரியல்**
முதலாம் செயலாளர்

## Message from the President Bar Association of Sri Lanka



*Gowry Shangary Thavarasha, Attorney-at-Law our friend who fearlessly took up difficult causes of clients over several decades often standing up to the might of the State, is no more. She was a brave lady fighting tooth and nail for her clients.*

*On a day in January 1997 a few days after I left the AG's Department, I received a call. The caller said she was Mrs. Thavarasa and that Mr. Ameen had told her that I had left the Department and to send me work. She retained me to appear for a surety in the High Court who was to be remanded by a furious judge since the accused had decamped. I appeared for the surety and was able to spare him from remand. From that day on she would retain me for many cases supporting me to build up my practice. Through Gowry we came to know Thava.*

*Gowry had friends in the highest of places. Yet she would go out of her way to help those from whom she had nothing to expect. When her friends were down and out, she was there for them. I have seen the commitment with which she handled matters for people not when they were in office but when they were out of office and fallen.*

*She would appear for difficult and sometimes even controversial causes. She stood up for people who were downtrodden some of whom were detained for a long time. Once retained she went all out for her client leaving no stone unturned.*

*She was the instructing Attorney in many human rights cases including the cases challenging the death penalty devoting her time and resources for these cases.*

*Her loss will be felt at Hulftsdorp*

*Our deepest sympathies to our friend K.V.Thavarasa PC.*

***Saliya Pieris P.C.***
*President of Bar Association of Sri Lanka*

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக துணிச்சலுடன் செயற்பட்ட வீரப்பெண்மணி

பல தசாப்த காலத்திற்கு மேலாக தனது சேவைபெறுநர்களின் சிரமமான வழக்குக்களை அச்சமின்றி எடுத்து தைரியத்துடன் நிமிர்ந்து நின்ற எமது நண்பரான சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இப்போது எம் மத்தியில் இல்லை. அரசின் அதி பலத்திற்கு அஞ்சாது துணிச்சலுடன் அடிக்கடி சவாலாக எழுந்து நின்று பல தசாப்த காலமாக கடினமான வழக்குக்களை துணிகரமாக முன்னெடுத்தவருமான எமது சகோதரி சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தவறிவிட்டார். தனது சேவை பெறுநர்களுக்காக சளைக்காது போராடிய வீரப்பெண்மணி அவர் ஜனவரி 1997 ஆம் ஆண்டு ஒருநாள். நான் சட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து விலகி சிலநாட்களில் எனக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அழைத்தவர் திருமதி கௌரிசங்கரி தவராசா. நான் திணைக்களத்திலிருந்து விலகிவிட்டதாகவும் எனக்கு வேலை கொடுக்கும்படி சிரேஷ்ட சட்டத்தரணி திரு. அமீன் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் முன்னிலைப்பட தவறியதால் பிணையாளி ஒருவர் சிறையிலடைக்கப்படக் கூடிய ஒரு வழக்காகும். கடுகடுப்பான மேல்நீதிமன்ற நீதிபதிமுன் ஆஜராக வேண்டி இருந்தது. அந்த வழக்கில் பிணையாளி சார்பாக என்னை ஆஜராகும்படி வேண்டிக்கொண்டதையடுத்து நான் வாதாடி பிணையாளியைக் காப்பாற்றினேன். அன்றிலிருந்து அவர் பல வழக்குகளில் என்னை அமர்த்தினார். இவ்வாறு எனது வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். அவர் மூலம் தவா அறிமுகமானார். உயர் பதவிகளில் இருந்தவர்கள் பலர் அவருக்கு நண்பர்களாக இருந்தார்கள். இருப்பினும் அவர் தனது வழியில் சென்று எதிர்பார்ப்பு எதுவுமின்றி வலிந்து பலருக்கும் உதவுவார். அவரது நண்பர்கள் நிலைதாழும் போது அவர் அவர்களுக்காக அங்கிருந்தார். அவர் பதவியில் இருப்பவர்களுக்காக அல்லாது அவர்கள் பதவியில் இல்லாத போதும் வீழ்ந்த போதும் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியதை நான் பார்த்துள்ளேன் அவர் சில சமயங்களில் சர்ச்சைக்குறிய மற்றும் சிரமமான வழக்குகளில் ஆஜராகுவார். அவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நின்றார். அவர்களில் சிலர் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் அவர் வழக்கைப் பொறுப்பேற்கத் தீர்மானித்துவிட்டால் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சாத்தியமான அனைத்தையும் செய்தார். அவர் மரண தண்டணைக்கு சவால் விடுப்பது உள்ளடங்களாக பல மனித உரிமைகள் வழக்குக்களை தனது நேரத்தையும் வளங்களையும் அர்பணித்து வழிநடத்தியிருந்தார் அவரது இழப்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் உணரப்படும்.

எமது நண்பர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**சாலிய பீரிஸ்**

ஜனாதிபதி சட்டத்தரணி

தலைவர்- இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

## She was an Iron Lady



*Deeply saddened by the loss of Mrs. Gowri Shangary Thavarasha, AAL to this dreaded Covid-19. She was an Iron Lady who courageously stood by the Bar whenever there were serious issues or threats to the Profession or the Rule of Law. Yet she was humble, humane and kind and I recollect she never missed returning a call. She now leaves behind a huge void at Hulftsdorp.*

*May her soul Rest in Peace.*

*My deepest sympathies to Mr. K.V. Thavarasha, PC*

***Rajeew Amarasoorya***
*Attorney-at-Law*
*Former Secretary – Bar Association of Sri Lanka*

## துணிகரமாக நிமிர்ந்து நின்ற இரும்புச் சீமாட்டி

படு பயங்கரகோவிட் 19 ஆல் இழந்துவிட்ட சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசாவின் இழப்பால் ஆழ்ந்த துயரடைந்தோம். தொழில் நிபுணத்துவத்துக்கோ சட்டவாட்சிக்கோ பிரச்சினை அல்லது அச்சுறுத்தல்கள் வரும்போதெல்லாம் துணிகரமாக நிமர்ந்து நிற்கும் இரும்புச் சீமாட்டி அவர். இருப்பினும் தன்னடக்கமான மனிதாபிமானி. தொலைபேசி அழைப்புகளுக்கு தவறாது பதிலளிக்கும் பண்பாளர். சட்டவளாகத்தில் பெரும் நிரப்பமுடியா வெற்றிடத்தை விட்டுச்சென்றுவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

**ரஜீவ் அமரசூரிய**
சட்டத்தரணி
முன்னாள் செயலாளர் - இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்.

## She is a Friend in need a friend indeed

*Having realizing the nice heart of her*
*with profound deep in heart, I say*

*In the voyage of our life the persons who*
*were helpless and have no starting point*
*she helped all those who sought her assistance*
*with soft and lovely heart but without having any selectivity*

*I now bring to my recollection of her virtues*
*of all those instances she helped*
*in a friendly manner to all those*
*who associated with her with her pleasing words?*

*In a full and perfect meaning, I would say that*
*"She is a friend in needs a friend indeed"*

**Hon. Nishantha Hapuarachchi,**
*High Court Judge*

## In memory of Gowry



*Some people come into our lives and quickly go. Some stay for a while and leave footprints on our hearts, and we are never, ever the same. Gowry was one of the best friends. that I have ever met throughout this journey of life. She was a remarkable person who helped us throughout our good times as well as the bad times. She never forgot to bring us souvenirs when returning from foreign tours and she loved my kids as if they were her own. I remember how happy she was to see us whenever we visited her. She knew my children's favorite dishes & surprised them on special occasions. Those special memories of her will always bring a smile, to our hearts. We can never forget her. She still lives in our heart. I still see her smiling when I close my eyes. Some souls are too beautiful for this world, and so they leave. May she be in peace.*

***Gihan Pilapitiya***
*High Court Judge*

# IN TRIBUTE TO A BENIGNANT SOUL; MRS. GOWRY THAVARASHA



*I understood Gowry as a lady with utmost kind heartedness and humanity towards the mankind. She marked her great disposition in our hearts by extending helping hand to the people around her. It was not relevant to her whether she supports a closest one or not. Her ultimate aim is to console all the human beings and relieve them from the grievances.*

*My professional life as an Attorney At Law was commenced at Matara Courts. In 1989, my marriage caused me to reach Colombo. I started my practice as an Attorney At Law at Hulftsdorp but I was helpless due to the lack of cases. This helpless time period was a turning point in my life. I met Gowri and that encounter was a blessing to me. Gowry was an epitome of generosity and graciousness. She introduced me to the office she worked and cleared my professional pathway. In the true sense of the word, she was a supportive pillar to build up my practice as a Lawyer. In other words, she extended the warmth of sisterly affection to me.*

*Gowry's qualities and her work are indescribably praiseworthy. She was a successful professional and a lawyer with humanity. She devoted her time, knowledge and professional integrity to do the maximum justice to the cases.*

*She was a loving wife to her husband Mr. K.V Thavarasha PC. Gowry was the shadow behind her husband and all the colleagues and the relations witnessed the loving bond and the mutualism they both had with each other. The parents of herself and her husband were blessed to have Gowry as a daughter and daughter in law. She performed all her duties and responsibilities to the parents, in laws and siblings.*

*My honest hope is that, Gowry will never face this type of an untimely death in her later births and may her soul rest in peace!*

***Sujatha Alahapperuma***
*Retired High Court Judge*

# ஒரு நல்ல ஆத்மாவுக்கான எனது இதய அஞ்சலி

மனித குலத்தின் மீது மிகுந்த கருணையும் மனிதாபிமானமும் கொண்ட பெண்மணியாக கௌரியை நான் புரிந்து கொண்டேன். தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் மூலம் அவர் எங்கள் இதயங்களில் தனக்கான சிறந்த இடத்தைப் பிடித்தார். தன்னை நாடி வருபவர்கள் தன்னுடன் நெருங்கிப் பழகியவர்களா? இல்லையா? என்பது அவருக்குத் தேவையற்றது. எல்லா மனிதர்களுக்கும் ஆறுதல் கூறுவதும் குறைகளில் இருந்து அவர்களை விடுவிப்பதும்தான் அவருடைய இறுதி நோக்காக இருக்கும்.

சட்டத்தரணியாக எனது தொழில் வாழ்க்கையை மாத்தறை நீதிமன்றில் ஆரம்பித்தேன். 1989இல் நிகழ்ந்த எனது திருமணம் என்னைக் கொழும்புக்கு வரச் செய்தது. நான் வழக்கறிஞராக புதுக்கடையில் தொழிலை ஆரம்பித்தேன். போதியளவு வழக்குகள் இல்லாததால் சட்டத்தொழில் வாழ்க்கை சிறப்பாக அமையவில்லை. இந்த உதவியற்ற கால என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது நான் கௌரியை சந்தித்தமைதான். அந்த சந்திப்பு எனக்கு ஓர் ஆசீர்வாதம். கௌரி பெருந்தன்மை மற்றும் கருணையின் உருவகமாக இருந்தார். அவர் பணிபுரிந்த அலுவலகத்துக்கு என்னை அறிமுகப்படுத்தி என் தொழில்முறை பாதையைத் தெளிவுபடுத்தினார்.

சரியான வார்த்தைகளிற் சொல்வதாயின் உண்மையான அர்த்தத்தில் ஒரு வழக்கறிஞராக எனது நடைமுறையைக் கட்டியெழுப்ப அவர் ஒரு துணைத் தூணாக இருந்தார். இன்னும் சொல்லப்போனால் தனது சகோதர பாசத்தின் அரவணைப்பை என்னிடம் காட்டினார். கௌரியின் குணங்களும் அவரது பணிகளும் விவரிக்க முடியாத வகையில் போற்றத்தக்கவை. அவர் ஒரு வெற்றிகரமான தொழில் முறை மற்றும் மனித நேயத்துடனான ஒரு வழக்கறிஞராவார். வழக்குகளுக்கு அதிகபட்சம் நீதியை வழங்குவதற்கு அவர் தனது நேரத்தையும் அறிவையும் தொழில்முறை நேர்மையையும் அர்ப்பணித்தார் அவர் தனது கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி திரு கே. வி. தவராசா வின் அன்பான மனைவியாகவும் அவருக்குப்பின்னால் நிழலாகவும் இருந்தார். எல்லா ஊழியர்களும் உறவுகளும் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பான பிணைப்பு மற்றும் பரஸ்பரநல்லுறவு ஆகியவற்றை கண்டனர்.

பெற்றோர், உடன்பிறப்புகள், மாமனார் மாமியார் உட்பட அனைத்து உறவுகளுக்கும் தனது கடமையைச் சரியாகச் செய்துவந்துள்ளார்.
அவரது ஆத்மா சாந்தி அடையட்டும்

**சுஜாதா அழகப்பெரும**

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி

## A Loving tribute to Gowery

*It was with great sadness that we heard the news of Gowery Shangary Thavarasha's untimely death. I had the privilege of working with her since 1989. She had been the Instructing Attorney as well as my Junior in numerous cases. She acted with complete dedication to the cause of her clients. Her commitment to the cause of her clients is a clear example which should be emulated by all young Attorneys-at-Law.*

*Gowry was a much sought after Lawyer. She was always ready to undertake what appeared to be unpopular cases. Persons who were harassed for various reasons sought her assistance to seek justice. She acted with complete commitment in those cases to the utmost satisfaction of her clients. When She undertook a case she attended to it promptly and meticulously. She sometimes went out of her way to ensure that justice was meted out to her clients.*

*In addition to working with Gowry in my professional capacity she and her husband K.V. Thavarasha, President's Counsel were close family friends. She was always very concerned about the wellbeing of her friends and we could count on her in any difficulty.*

*Having associated with Gowry and Thava very closely we are aware she was a very caring wife and was concerned about Thava's health sometimes even neglecting of her own. That is the very reason why it is very difficult for Thava to come to terms with her sudden demise.*

*I am also aware that she took a very keen interest in the wellbeing of her Juniors and the Staff that worked in her office. She helped many a young Lawyer to develop in their professional careers for which they are very grateful to her and remember her with affection.*

*We shall miss Gowry.*

***S. Anil Silva***
*President's Counsel.*

## A Loving tribute to Gowry



*It was with utter shock and disbelief, that I had to process the devastating news of Gowry's most untimely and sad demise. And that was the sentiment of all who knew her, because she deeply touched the lives and souls of everyone, with her infinitely honest and loyal friendship, care, and extraordinarily nurturing ways.*

*She was like a mother and sister to many and numerous were the times that she went out of her way to help people, especially those who needed medical care, with her constantly attentive ways. I have heard from my friend Faiza, how truly caring Gowry was to her whenever she was even mildly ill.*

*I too personally experienced that when many years back, I had an epileptic seizure in Court and it was Gowry who had come with me, together with Uditha, in the Court Ambulance, to the hospital and I faintly remember that my head was on her lap and she was reassuring me and making sure that I was in the correct posture and not choking.*

*I never ever forgot that and I was and will be eternally grateful to her for that. She had the blessings of so many people in the greatest of abundance but it was her destiny to pass prematurely and tragic as it is, who are we are mortals to question that or even try to understand the complexities of the universe.*

*My Dear friend Thava, I cannot imagine the loss that you are enduring, but I can only wish for you, the strength of mind and fortitude, with time at least, to come to terms with your immense loss. You can however be comforted that Gowry's passing is deeply lamented by all of us and that she has left an indelible mark on all our lives and that she is and will be greatly missed.*

*May the gods bestow upon you, their blessings and guidance always and may our dearest friend Gowry attain Moksha.*

*With Love always,*

***Sanjeeva Jayawardena***
*President's counsel*

## Gowry Shangary Thavarasha, A True Friend



*In the 1990s several families of detainees, whom I later represented in Court of Law came to see me with Gowry. She had one message for the families, that she will bear the full cost of litigation to protect their loved ones from being unfairly detained. Her pro bono approach to "victim cases" made a sizeable contribution to the human rights jurisprudence in Sri Lanka. There were quite a few strong NGOs that assisted the victims around that time, but not many that had courage and capacity to represent Tamil detainees, terror suspects or those who challenged the powerful executive. Towards 2006, I represented a fairly large number of pro bono briefs from detainees from the North and East. The dialogue with those families was an exposure beyond any formal learning on conflict, racial discrimination, or Sri Lankan politics. Gowry genuinely felt for people and unconditionally stood for the rights of the victims.*

*That is not all, she was known amongst the prisoners and detainees, from any part of the country, as someone who fearlessly filed cases to protect their rights. In my early professional career, I had the privilege of visiting prisons and detention centers to speak to the detainees across the country. Among the lawyers I often met was Gowry. The failure of our law enforcement and legal system can be easily judged by the systemic bias against the "suspects". Gowry did not have social bias against prisoners or detainees. Our law enforcement was known for brutally killing unarmed prisoners and detainees. Gowry was one who spoke openly against the so called "search operation killings, whilst being taken to recover weapons". She warned me on many instances against a potential white van attack on me, later to find that she too was listed as a "terrorist lawyer" amongst others with me and Mr. Romesh De Silva P.C in the Defence Ministry website in Mid-2008.*

*Gowry moved with many circles, and never did she expect favors. She enjoyed giving. I have not seen, in our generation, a person who practiced philanthropy or generosity, as she did. Hundreds of deserving people lived on her charity. Something that only few in Hulftsdorp knew was how she treated poor clients and those who were victims of all forms of abuse. Many instances, she accommodated clients during the stay in Colombo preparing the legal documents; then when they leave Colombo, she herself drops them at the Fort Railway Station and give them handful of money for travel. She did not fail to check up on them till they reached their destination. That is not all.*

*People in diverse backgrounds, from lawyers to judges, businessmen to policemen, from ordinary citizens to politicians trusted her to share their grievances. Richest to poorest,*

*powerful to powerless - all had same welcome and she was one of them. She was an excellent Ombudsman for anyone.*

*To conclude this short eulogy, let me reveal a little-known fact. When my house was bombed by then unknown military agents on 27 September 2008, our family, on advice moved into a safe house. She was keen that my toddler and infant children were safe and comfortable and took all of us to her place for weeks. She was among the first group of friends to reach our house on that dreadful day, when I experienced that many other Sri Lankan had to face in challenging abuse of human rights in the country. She cared for many others in similar situations, and we too benefited from her unreserved love, care and protection.*

*Thank you Gowry for your endless kindness and true friendship. Our family always considered Gowry and Thava part of our own family and vice versa. We had amazing memories with this extraordinary and truly wonderful human being. This nasty pandemic took her away from us amidst a more messy, chaotic, and failed system in the country, which she dedicated her life to changing. Good Bye Gowry, until we meet again!*

***JC Weliamuna***

*President's Counsel*

# கௌரி சங்கரி தவராசா, என் உயிர் நண்பி...

1990களில் பல குடும்பங்கள் தடுத்து வைக்கப்பட்டனர். பின்னாட்களில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பலர் நீதிமன்றத்தில் கௌரியோடு என்னைச் சந்திக்க வந்தார்கள். அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளள தமது அன்புக்குரியவர்களை எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் மிகைப்பட்டிருந்து. அப்போது கௌரி அவர்களுக்குச் சொன்ன வார்த்தைகள் “சட்டரீதியாக அவர்களை மீட்டெடுக்க உண்டாகும் அனைத்துச் செலவுகளையும் நான் பார்த்துக் கொள்கின்றேன்” என்பதுதான். பாதிக்கப்பட்டவர்களின் வழக்குகள் தொடர்பான அவரது அணுகுமுறை மிகவும் ஆச்சரியமானது.

இலங்கையில் மனித உரிமைகள் சார்ந்து நீதித்துறைக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியவர் அவர். அந்நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட சில பலமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இருந்தன. ஆனால் பயங்கரவாத சந்தேக நபர்களாக அல்லது அரசுக்கு சவால் விடுக்கும் சக்தி வாய்ந்த மனிதர்களாக தமிழ்க் கைதிகள் பார்க்கப்பட்டபோது அத்தகையவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தைரியமும் ஆற்றலும் பல பேர்களுக்கு இருக்கவே இல்லை. 2006ஆம் ஆண்டு வரை வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான கைதிகளிடம் இருந்து சுயசார்பு விளக்கங்களைப் பெறுவதற்கான பிரதிநிதியாகச் செயற்படுகையில் அந்த குடும்பங்களுடனான உரையாடல் முரண்பாடு, இனப்பாகுபாடு அல்லது இலங்கை அரசியல் பற்றிய எந்த ஒரு முறையான கற்றலுக்கும் அப்பாற்பட்டு அமைந்திருந்தது. கௌரி அந்த மக்களுக்காக உண்மையாகவே கவலைப்பட்டார். நிபந்தனையின்றி பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக அவர் எழுந்து நின்றார். அது மட்டுமல்ல நாட்டின் எந்தப் பகுதியிலும் கைதிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அச்சமின்றி வழக்குப் பதிவு செய்தவராக அறியப்பட்டார். எனது ஆரம்பகால தொழில் வாழ்க்கையில் நாடு முழுவதும் உள்ள கைதிகளுடன் பேசுவதற்கு சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு மையங்களுக்குச் செல்லும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. நான் அடிக்கடி சந்தித்த வழக்கறிஞர்களில் கௌரி இருந்தார். எங்கள் சட்ட அமுலாக்கம் மற்றும் சட்ட அமைப்பின் தோல்வியை சந்தேகநபர்களுக்கு எதிரான பிடியை முறையாகவும் எளிதாகவும் தீர்மானிக்க முடியும். அப்போதெல்லாம் கைதிகள் அல்லது தடுத்துவைக்கப்பட்டவர்களின் சமூகச் சார்பை அவர் ஒரு போதும் கருத்தில் கொண்டதில்லை. ஆயுதங்களை மீட்கும் போர்வையில் நிராயுதபாணிகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் கொடூரமாக கொன்றதற்கெதிராக வெளிப்படையாகப் பேசியவர் கௌரி. என்மீது வெள்ளைவேன் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே பல சமயங்களில் அவர் என்னை எச்சரித்தார்.

2008ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் என்னுடனும் ஜனாதிபதி சட்டத்தரணி திரு ரொமேஷ்

டி சில்வாவுடனும் கௌரியும் 'பயங்கரவாத வழக்கறிஞர்' எனப் பட்டியலிடப்பட்டிருந்ததை பின்னர் கண்டறிந்தேன். கௌரி பல தளங்களிலும் எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றிச் செயற்பட்டார். மற்றவர்களுக்கு அவரைப் போல் கொடுப்பதில் திருப்தி காண்கின்ற ஒருவரை நான் எனது தலைமுறையில் காணவில்லை. அவருடைய பெருந்தன்மையிலும் கொடையிலும் பலநூறு பேர் வாழ்ந்தார்கள். பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்காக அவர் எப்படியெல்லாம் தன்னை வருத்திக் கொண்டார் என்பதில் ஒரு சிலதை மட்டுமே ஹல்ட்ஸ்ரொப் வளாகம் அறியும். கொழும்பில் இருந்து சட்ட ஆவணங்களை தயாரிக்கும் போது சேவைபெறுநர்களிடம் நடந்துகொண்ட முறை மிகவும் மனிதாபிமானமிக்கது. அவர்கள் கொழும்பிலிருந்து புறப்படும் போது அவரே அவர்களை கோட்டை ரயில் நிலையத்தில் இறக்கிவிட்டு பயணத்துக்காக கை நிறைய பணத்தையும் கொடுத்தார். அவர்கள் இலக்கை அடையும் வரை அவர்களைப் வழிநடாத்தத் தவறவில்லை அதுமட்டுமல்லாமல் வழக்கறிஞர்கள் நீதிபதிகள் வரை தொழிலதிபர்கள் முதல் போலீஸ்காரர்கள் வரை சாதாரண குடிமக்கள் முதல் அரசியல்வாதிகள் வரை பலதரப்பட்ட பின்னணியில் உள்ளவர்கள் தங்கள் குறைகளை பகிர்ந்து கொள்ள அவரை நம்பினர் பணக்காரர்கள் முதல் ஏழைகள் வரை அதிகாரமுள்ளவர் முதல் சக்தி அற்றவர் வரை அனைவருக்கும் ஒரே மாதிரியான வரவேற்பு அவரிடம் இருந்தது. இந்தச் சிறிய புகழ் அஞ்சலியை முடிக்க அதிகம் அறியப்படாத ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறேன் நாங்களும் கௌரியின் உபசரிப்பில் பயனடைந்தவர்களே. 2008ஆம் செப்டம்பர் 24ஆம் திகதியன்று தெரியாத இராணுவ முகவர்களால் எனது வீடு வெடிகுண்டு வீசப்பட்ட போது எங்கள் குடும்பத்தினர் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பான வீட்டுக்கு குடி பெயர்ந்தனர். எனது குறுநடைபோடும் குழந்தை மற்றும் கைக்குழந்தைகள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருப்பதற்காக அவர் அதிக ஆர்வமாக இருந்தார், மேலும் எங்கள் அனைவரையும் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று வாரக்கணக்கில் கவனித்துக் கொண்டார். அந்த பயங்கரமான நாளில் எங்கள் வீட்டை வந்தடைந்த முதல் நண்பர்கள் குழுவில் அவரும் ஒருவர். இதே போன்ற சூழ்நிலைகளில் பலரை அவர் கவனித்துக் கொண்டார். உங்கள் எல்லையில்லா கருணைக்கும் உண்மையான நட்புக்கு நன்றி கௌரி.

எங்களின் குடும்பத்தில் எப்போதும் பிரிக்க முடியாத குடும்ப உறவாகவே கௌரியும் தவராசாவும் இருப்பார்கள். தோல்வியடைந்த நாட்டின் நிருவாக இயக்கத்தில் மிகச் சிறந்த ஒரு மனிதாபிமானியை இந்தத் தொற்று நோய் பறித்துக் கொண்டது. சென்று வாருங்கள் வாருங்கள் கௌரி மீண்டும் நாம் சந்திக்கும் வரை.

**ஜே.சி. வெலியமுன**

ஜனாதிபதி சட்டத்தரணி

## A Tribute to Iron Lady

*Gowry, whom I got to know in early 90s' carried a very charming, charismatic and simple personality. She was much loved and cherished by everyone who knew her. Her Legal chamber where she practiced Law with her husband was in close proximity to mine.*

*She was the loving wife of Mr. Thavarasha PC. Whom she always addressed "APPA". They both got on well and were fond of each other. They were a good example for the present day young couples who were keen to maintain a good contended married life.*

*Gowri, was a very courageous lady who bravely fought through many serious medical encounters. When I was made to understand that she was receiving treatments I prayed for her immediate recovery. I was confident that she would pull through this episode too. Unfortunately, she had to leave us at the time when we never expect her to do so.*

*In spite of failing health condition she dedicated her time to assist her clients specially those who needed her assistance. She was very fearless and took many risk in assisting these clients who really needed her help. The state machinery was against some of these clients and for her appearance for these clients both and Gowry and Thava's names were published in a ministry website as Lawyers assisting the terrorists.*

*Gowry, your untimely death was a great loss to our legal profession and to those who needed legal assistance when they were helpless.*

*May your soul rest in Peace!*

***Chula Bandara***
*Senior Attorney-at-Law*

## The legendary header 'Gowry Shangary Thavarasha'…



*On April 14th, 2020 a week before the 1st year commemoration of the Easter Sunday bombings, I was arrested by the CID under the Prevention of Terrorism (Temporary Provisions) Act No 48 of 1979 [PTA]. By April 19th, 2020 the Police spokesman had conducted two media conferences on the investigations. I was featured in both. According to him I was arrested after extensive investigations and there was sufficient evidence to prosecute me. Sub judice rules prevent me from commenting further except to say that I have pleaded not guilty and I am innocent. Nevertheless, the media conferences had had their effect. I was now one of the 'worst of the worst'.*

*Article 13(3) of the Constitution and section 41(2) Judicature Act No: 2 of 1978 assure to every person the right to legal representation, especially in criminal cases. However how meaningful is this right when your case is so unpopular that lawyers are reluctant to represent you? It is an open secret that lawyers who appear for unpopular clients get branded and even ostracized just for doing their job. This is antithetical to a system that is based on adversarial justice, assures the right to legal counsel and which promotes the cab - rank rule.*

*In my case, the State launched a full-scale offensive. They kept it regularly in the news and watered it with sensational headlines. Two DSG's and a SSC were appearing in the Fort Magistrate's Court. I was described as being the 'Anton Balasingham' of the National Thowheed Jamaath which carried out the attacks. Even some lawyers got activated in pressurising the BASL to not intervene on my behalf. In Parliament I was repeatedly called a 'terrorist'. I was public enemy no: 1. As a family we were devastated.*

*It was during these bleak times locked up and closed off from the rest of the world, in despair and feeling destitute that I saw a letter left at the CID under the legendary header 'Gowry Shangary Thavarasha'. She was writing on behalf of her client. I was her client. Until then I did not know that she had undertaken to represent me. I said a silent prayer of thanks to God and I knew I was going home.*

*The Late Mrs Gowry Shangary Thavarasha was a central cog in a 'Mission Impossible' operation of a group of lawyers who came together to fight for justice for me. A group I call with profound admiration as the 'Justice League'. This group launched an unprecedented campaign for my release that resulted in me being*

*granted bail at the relatively short period of 22 months. As a senior member of the Justice League from the very inception and until her demise Mrs Thavarasha functioned not just as a legal advisor but also as a friend, confidante and a source of tremendous strength to my family.*

*Her coming aboard my case is not surprising. I first worked with the her in a case with some similarities - a case of a Sri Lankan Tamil expatriate threatened with arrest under the PTA, labelled as a terrorist, but all for reasons that had nothing to do with guilt, terrorism or evidence. Starting off my private practice I was thrilled to be retained by her. She was an amazing attorney to work with and to receive instructions from. Absolutely scrupulous, ethical and vigilant of the client's interest over all else. She did her work with consummate diligence. To me as counsel she was very supportive, watched my back and made sure that we tied up all loose ends.*

*During a career that spanned three decades Mrs Gowry Thavarasha has stood many times between the State juggernaut and an oppressed individual. She should have written a book. A chapter each on each epic battle she fought. Her clients included Free Trade Zone workers, a Chief Justice, minority politicians, a former Director of the CID, many journalists and many others who had one key common factor which was that the government at that time wanted them 'finished off'. In all of this Gowry Thavarasha stood fearlessly like a lone ranger in a Hollywood western.*

*Why did she take these cases up? Being a Tamil born in Alavety, Jaffna I think she was all too familiar with how the system can work against a person and the critical importance of competent and effective legal representation in our adversarial justice system. The criminal justice system depends on the 'presumption of innocence', 'proof beyond reasonable doubt' and the right to legal representation to deliver justice. However, could these theoretical safeguards actually protect accused in the face of an expert, experienced and well trained prosecutorial outfit that is out for a conviction? The investigating officer giving evidence, the State Counsel leading it and the government analyst / JMO are all experts. Most accused on the other hand are first timers.*

*As a detainee and a remand prisoner I saw the underbelly of the criminal justice system. I realised that if the justice system is going to work and deliver, we needed not just more*

*courts and more judges but we also needed more Mrs. Gowry Thavarasha's. Lawyers who are ready to take up difficult, unpopular and even bad cases and give their clients skilful representation. This was something which the Late Mrs. Gowry Thavarasha remained dedicated to.*

*The Late Mrs Gowry Shangary Thavarasha did not do the mundane. She wasinto the exceptional and special. It took courage and she had plenty of it. A fitting celebration of the life and work of the Late Mrs Gowry Shangary Thavarasha would be developing a bar capable of providing skilful, competent and robust advocacy at all levels of seniority and experience. We also need to develop a culture that respects lawyers for doing their work and one that does not seek to punish and judge lawyers based on their clients. I emphasise its importance as if she and the rest of the Justice League did not withstand the hostile environment they worked in and continue their brilliant advocacy representing me I might not have been available to write this article.*

*I join the many who pray for the Late Mrs. Gowry Shangary Thavarasha and thank God for the role she played in my life.*

**Hejaaz Hizbullah**

*Attorney-at-Law*
*Former PTA detainee*
*Amnesty International Prisoner of Conscience*

# ඔබට සුබ ගමන් මිතුරිය...



මුවග රැඳි ඇය මා හට හඳුනා ගැනීමට ලැබුනුයේ මීට දශක තුනකට පෙරය. එනම් මා නීති වෘත්තියට පිවිසුණු කාලයේදීය. වෘත්තිය ආරම්භයේ දී බොහෝ සෙයින් උදව් උපකාර කළ ඇය ඕනෑම නවක නීතිඥවරයෙක්ට අත හිත දී උපකාර කළ මානව හිතවාදි චරිතයකි. බිය යන වචනයක් ඇයගේ ශබ්දකෝෂය තුළ තිබුනේ නැත. යුක්තිය ඉටුකිරීම සඳහා නිර්භයව නොපැකිලිව තම සේවාදායකයින් වෙනුවෙන් ඇය කටයුතු කළාය. ඇය දරන දේශපාලන මතය කුමක් වුවත් ඇය කිසි දිනක වෘත්තිය තුලට දේශපාලනය ගෙනාවේ නැත.

දේශපාලනික ලෙස නඩු තෝරා බේරා ගෙන කටයුතු කළේ ද නැත. අසාධාරණය කාට වුව ද ඒ වෙනුවෙන් පෙනී සිටීමට කිසිදිනක දෙවරක් සිතුවේ ද නැත. එවන් ගුණාංගයන්ගෙන් හෙබි ඇගේ චරිතය ගැන කෙටියෙන් ලියා අවසන් කර නොහැකි දෑ බොහෝය.

නීති වෘත්තියට පිවිසුණු ඕනෑම අයෙකුගේ වෘත්තිය ආරම්භය වන්නේ අලුත්කඩේය. වෘත්තියට පිවිසුණු නවකයින්ගේ සේවය ලබා ගැනීමට සේවාදායකයින් පැමිනෙන්නේ නැත. එය අත්දැකිම්, පළපුරුද්ද අඩු කෙනෙකුගේ සේවාව ලබා ගැනීමට ඇති අකමැත්ත නිසාය.

තව ද නීති වෘත්තියේ ජ්‍යේෂ්ඨයින් ද නවකයෙකුට අතදීමට කැමැත්තක් දක්වන්නේ ද නැත.එය වෘත්තියේ ඇති තරඟකාරීත්වය නිසා විය හැක. නමුත් එම තත්වයට බොහෝ සෙයින් වෙනස් වු ඇය නවකයින්ට අතදීම කිසිවිටකත් පැහැර හැරියේ නැත.

නීති වෘත්තියේ දි තම ඉදිරියට පැමිණෙන සේවාදායකයා වෙනුවෙන් උපරිමයේ කටයුතු කිරීම යන වෘත්තිය අචාර ධර්මය එලෙසින්ම ඇය ඉටු කළාය.තමන්ගේ වැඩ කොටස සේවාදායකයා වෙනුවෙන් නොපිරිහෙළා ඉටු කිරීමට උත්සුක වුවාය.

වෘත්තිය ජීවිතය තුළ නවකයින්ට ඇයගෙන් ඉගෙන ගැනීමට බොහෝ දේ ඇත. නඩුවක් ගොනු කිරීමේදි පැවතිය යුතු පිලිවෙල ඉතා වැදගත්ය. ඇය සකස් කරන ලද ගොනුවක කිසිදු අඩුපාඩුවක් නොවීමට ඇය වග බලාගත්තාය. නඩුවකදි සේවාදායකයින් වෙනුවෙන් උපරිම සේවය ලබා දිමට කටයුතු කළාය.

ඔබගේ වියෝවයේ වේදනාව කවියකට නගමින් මා ඔබට සුබ ගමන් පතන්නෙමි.

ඔබගේ අකල් වියෝව අප සැමට බලවත් වේදනාවකි. ඔබට සුබ ගමන් මිතුරිය
සුබ ගමන් පතන්නට
ඉක්මන් වැඩි වුනත්,
සැම හමුවීමකම අවසන
වෙන් වීමක්ම බව,
නැවත නැවතත් පසක් කරමින්, නොකල්හි සමුගත්
දයාබර මිතුරිය...

ඔබ සමුගෙන වසරක් ඉකුත්ව ඇතත්,
ඔබ ඉතිරිකර ගිය
මිනිසත් කමේ සොඳුරු මතකයන්
සදා අප සිත් සතන් තුළ
රැඳී තිබෙනු ඇත...
ඉතින් සුව නින්දක් ඔබට තාවකාලික විරාමය අවසන නැවත හමුවෙමු!

***Sanjaya Gamage JPUM***
*Former Secretary of BASL*
*Attorney-at-Law*

## DEEP FROM THE HEART



*Very often people are respected and honored for the services they have rendered in their lifetime to the society. Mrs. Gowry Shangary Thavarasha was highly respected and admired for her sterling qualities of honesty, forthright words and actions, loyalty and commitment to her professional duty. She spent numerous unrecorded hours and days in her chambers studying the cases and consulting the clients and finding ways and means to find remedies for their grievances. She was endowed with a keen intellectual and brilliant mind and she utilized it for the fullest in the service of her professional career and to help her fellow men.*

*I have known Mrs. Gowry Shangary Thavarasha from the time I started my career as Deputy Registrar of the Supreme Court in 1995. From that time onwards, she came to me whenever she needed my assistance in her professional career. She was always charming compassionate and caring person who gave herself willingly voluntarily and totally to serve the needs of those who sought her assistance. She was readily helping hand to the people in times of need in emergencies and whenever they faced with challenges and then she took very high and keen responsibility in finding ways and means in resolving the problems of them and provide relief however without any expectations in return. She was always enthusiastic and was liked dearly by all her clients, friend, relatives and assistants. Her sudden death has created a great vacuum that it cannot be filled easily by anyone else. It is a great loss at this juncture to the people who are faced with numerous challenges for their survival. The rare phenomenon and greatness in her life was that one can have confidence in their controversial and confidential issues and seek redress, and advice and guidance with full confidence. She has never made any attempt to reveal it to anyone else under any circumstances.She always made use of the pleasing words which made everybody comfortable and confident in her presence. She is a woman with no fear but brave and cheerful. She leaves her beloved husband and her relatives. May His Almighty grant them sufficient courage and strength to overcome the grief and sorrow of the irreparable loss that had been caused by her untimely demise. I can say that with her pleasing smile, her deep sense of optimism, her courtesy and tact, her compassion and kindness, and her unfailing sense of humor , she made this world a better place for all of us.I would like to convey my deepest sympathies to her beloved husband, family members and friends.*

*Let her soul attain Moksha!*

**R. Navodayam**

*Attorney-at-Law*

*Former Deputy Registrar of the Supreme Court*

# அறிவுசார்ந்த பிரகாசமான சிந்தனை கொண்டவர் அமரர் கௌரி சங்கரி தவராசா

மனிதர்கள் தமது வாழ்க்கைக் காலத்தில் தமது சமூகத்துக்குச் செய்த சேவைக்காக மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவதோடு அவர்கள் எக்காலத்திலும் போற்றப்பட்டும் வந்துள்ளார்கள். திருமதி கௌரி சங்கரி தவராசா அவர்கள், அவரது மாற்றுக் குறையாத நேர்மை குணத்துக்காகவும் நேர்மையான சொல்லுக்கும் செயல்களுக்காகவும் தனது தொழில் சார்ந்த சேவையில் காட்டும் கடமைப்பாட்டுக்கும் விசுவாசத்துக்காகவும் மற்றவர்களால் மிகவும் கௌரவிக்கப்பட்டு வந்துள்ளதுடன் எல்லாராலும் பாராட்டப்பட்டும் வந்துள்ளார். அவர் தனது சேவை நாடுநர்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவைகளை நிவர்த்தி செய்வதற்காக அவர்களின் வழக்குகளை ஆழ்ந்து படிப்பதிலும் சேவை நாடுநர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்தாலோசனை செய்வதிலும் உரிய பரிகாரத்தை கண்டு கொள்வதற்கான வழிவகைகளை கண்டுபிடிப்பதிலும் அதிகமான நேரத்தையும் எண்ணற்ற நாட்களையும் தனது பிரத்தியேக அறையில் செலவிட்டுள்ளார். அவர் பிறவியில் இருந்தே நற்பண்புகளைக் கொண்ட அறிவுசார்ந்த பிரகாசமான சிந்தனை கொண்டவர். இந்தப் பண்பைத் தனது தொழில் சார்ந்த துறையிலும் தன் சேவையை நாடி வருபவர்களுக்கு உதவுவதிலும் முழுமையாகச் செலவிட்டுள்ளதை நாம் ஒரு பெருமைக்குரிய விடயமாகக் கருத முடியும்.

நான் 1995 இல் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் பிரதி பதிவாளராக எனது கடமையைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்தே திருமதி கௌரி சங்கரி தவராசா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அக்காலப் பகுதியிலிருந்து, தனது தொழில் சார்ந்த விடயங்களில் எனது உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவர் என்னிடம் வந்து எனது சேவையை பெற்றுக்கொள்வதுண்டு. அவர் எப்போதும் வசீகரமான, இரக்க குணம் உள்ள ஒருவராகவே செயற்பட்டுள்ளார். தன்னிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கு தனது சுய விருப்புடனும் தானாகவும் முழுமையாகவும் சேவை செய்ய தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் ஆவார். அவசர நிலைமையில் தேவை ஏற்பட்ட நேரங்களிலும் மக்கள் சவால்களைச் சந்தித்த போதெல்லாம் அவர்களுக்கு எப்போதும் உடனடியான உதவிக்கரமாகச் செயல்பட்டுள்ளார். தனது சேவை நாடுநர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை கண்டு கொள்வதில் மிகவும் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்பட்டு வந்துள்ளார். தனது சேவைநாடுநர்களின் மனதை அறிந்து தன்னால் அவர்களுக்கு ஆற்றப்படும் சேவைகளுக்குப் பிரதியுபகாரமாக எந்தவிதமான எதிர்பார்ப்புமில்லாமல் தனது சேவையை மனநிறைவுடன் வழங்கி வந்ததே அவரின் தனிச்சிறப்பாகும்.

அவர் எப்போதும் உற்சாகத்துடனும் மன மகிழ்ச்சியுடனும் இருப்பார். அத்தோடு தனது சேவைநாடுநர்களாலும் நண்பர்களாலும் உறவினர்களாலும் உதவியாளர்களாலும் நேசிக்கப்பட்டும் வந்துள்ளார். வேறு எவராலும் நிரப்ப முடியாத ஒரு பெரிய இடைவெளி அவரது திடீர் மறைவினால் ஏற்பட்டுள்ளது என்பதை எவராலும் நிராகரிக்க முடியாதுள்ளது. எமது நாட்டில் வாழும்

பலரும் தமது உயிர்வாழ்வுக்காக எண்ணற்ற சவால்களையும் எதிர்ப்புகளையும் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவரது இழப்பு வேறு எவராலும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்று கருதவேண்டியுள்ளது.

ஒரு சட்டத்தரணி என்ற முறையில் அவரது வாழ்க்கையில் அருமையான நட்புக்கு பெருமைக்குரியனவாக இருந்தவை யாதெனில், ஒருவர் தன்னுடைய மிகச் சர்ச்சைக்குரியதும் இரகசிய பாதுகாப்புக்குரியதுமான பிரச்சினைகளில் அவர் மீது நம்பிக்கை வைத்துக் கலந்தாலோசித்து அதில் இருந்து விடுபடக் கூடிய சட்ட ரீதியான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் உறுதியுடனும் இரகசியத்துடனும் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகும். இவ்வாறான இரகசிய விடயங்கள் பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த சூழ்நிலையிலும் வேறொருவரிடம் வெளிப்படுத்தி அதன் மூலம் நன்மை பெற அவர் எந்த முயற்சியும் எடுத்ததாக எவராலும் ஊகித்துக் கொள்ளக்கூட முடியாது.

அவர் மற்றவர்களுடன் பேசும் போதெல்லாம் எப்பொழுதும் மிகவும் மிருதுவான சொற்களையே பயன்படுத்துவார். இப்பண்பான சொற்கள் ஒவ்வொருவருக்கும் அவர் மீது சௌகரியத்தையும் , அளவற்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தின.

அவர் மிகவும் துணிச்சலான பெண்மணியாவார். ஒரு தீர்மானம் எடுத்த பின் அவர் எக்காரணம் கொண்டும் அத்தீர்மானத்தில் இருந்து பின்வாங்கவோ அல்லது மாற்றம் செய்யவோ மாட்டார். அவர் தன்னுடைய புன்னகை,பண்பான கருத்து, ஆழ்ந்த நம்பிக்கை, அத்துடன் மரியாதையும் பணிவும் சாமர்த்தியமும் இரக்கமும் கருணையும் போன்ற நற்பண்புகளால் இந்த உலகத்தை நாம் எல்லோரும் மனநிறைவுடன் வாழ்வதற்கு ஏற்ற ஒரு அற்புத உலகமாக்கியுள்ளதாக என்னால் துணிந்து கூற முடியும்.

**இரா.நவோதயம்**
சட்டத்தரணி
முன்னைநாள் உயர் நீதிமன்ற பிரதி பதிவாளர்

## Mother to us all



*I first met Mrs. Gowry Shangary Thavarasha in the year 2000 when I started apprenticing under Mr. Saliya Pieris P. C. For me and my chamber mates Mr. Upul Kumarapperuma, Mr. Pamila Rathnayake High Court Judge, Mr. Upali Mohotti P.C, Mr. Prasanna Sandanayake, Mr. Chamath Madanayake High Court Judge she always treated like her children. She would always greet us with a smile. Would never keep us standing even when senior lawyers were in her office. She knew of our financial hardships I guess, on some occasions when there were no fees allocated for us by the senior she would always try to quote a fee for us and sometimes pay us out of her pocket.*

*As and when we made a mistake (which happens sometimes) she would always help us out. Sometimes when we were too scared to go to our senior she would try to remedy the issue and keep it from the senior. I have had the privilege of meeting and working with many seniors in the profession through her and my senior, Mr. Faiz Musthapha PC, Mr. Ameen PC would be to name few. I have seen how dedicated she was to her work. She was always thinking about the case, updated on the stage of the case and to the word she was truly an Instructing Attorney as she could instruct regarding the case to any counsel. From her office and the Chambers of Mr. K. V Thavarasha many juniors have entered the profession who are doing quite well in the profession undoubtedly as a result of their guidance. I am now happy to be working with several of them, Thushani, Anoma, Arnold, Dushyanthan and Tharmaja would be to name a few.*

*Once I started practicing on my own she encouraged me and when possible was good enough to send a brief my way, which was always an encouragement. Last time I met her was in the chambers of Mr. Thavarasha where she was to hand over a criminal brief. It was just after avrudu, after the consultation she handed me an envelop. I very well knew that the client was to pay me only for my appearances in court. When I refused she said that she can't let me leave empty handed after meeting her just after avurudu.*

*Dear Madam You will be sadly missed. The void you have left in husfsdorp and in our hearts will always remain. According to my faith madam may you attain the supreme bliss of Nirvana!*

***Asthika Devendra***

*Senior Attorney-at-Law*

## A Loving tribute to Gowry Madam

*One of my first memories of Gowry madam was from the start of my practice. I had been going to court for less than a month, and my senior had given me a brief to support in the Supreme Court, which I promptly lost on behalf of my client. I don't know if she came up and spoke to me because I looked so dejected sitting outside court, or because she knew my senior (who was a dear friend of hers, though at that time I don't think she knew I worked with him), but I feel she did it, because that is just the type of person she was. Kind and empathetic. She came up to me and patted me on the shoulder and said "You tried. What more can we do." and then took me to the canteen for a cup of tea. I remember that day not for the client I failed, or the case I lost, or the judge who was hard on me, or even that it was probably the first time I handled a case in the Supreme Court on my own, but I remember it for her kindness and her laughter. She was always kind to me, and helped me whenever she felt I needed it, especially in establishing a practice of my own. It was only a little later that I learnt that her kindness should never be misconstrued for weakness. She was both fierce and fearless. Qualities of hers, that I watched her impart on my own juniors, as I started an independent practice. They say you can't buy happiness, but you can buy a cup of tea. That day, for me, sitting and listening to her whilst having that cup of tea, they were both kind of the same thing. I will miss her strength, and her courage.*

***Pulasthi Hewamanna,***

*Attorney-at-Law*

# Goddess of Law who Strengthened Democratic Camp



*Gowry is the mother of Lord Ganesha in Hindu religious culture. She is one of the manifestations of Goddess Parvathi and the divine energy, considered as a perfect wife for her husband, Lord Shiva.*

*In the same way Gowry Thavarasha, whose soul now is in heaven, had been a divine blessing with her expertise and knowledge in law and socio-politics in this nation.*

*She had been the guiding light and inspiration for many thousans who had no other help in the face of oppression and rendered her assistance and yeoman service to uphold justice. She was certainly the pulse of those fought in the democratic camp to realize principles of justice.*

*Her courage and inspiration had been the sine qua non force in many struggles that changed the political landscape of this country during the past two decades. She had been the indispensable and essential action, condition, or ingredient in those battles for democracy.*

*She always stood unconditionally and uncompromisingly for the cause of democracy against dictatorship and rulers' coercion and fought in support of the leaders of democratic camp. She dedicated her life for the benefit of the oppressed and her legacy is incomparable.*

*As per my personal experience when entire state machinery was set against me as a part of conspiracy of suppression, she was at the forefront spending her time, money and effort to uphold the rule of law. Gowry Thavarasha fought in the same way for thousands of others who had no means of wherewithal against the mighty and powerful seeking to deprive people of their rights to justice. Before the blindfold Lady of Justice, she had been a force to be reckoned with in upholding the rule of law. In such battles for the rights of man against unjust, she never gave into the sentiments of race, religion or language differences knowing well that the blindfold over the eyes of Lady Justice represents a justice system that is meant to be blind to power, wealth, race, ideology and gender. Gowry rendered her services to the downtrodden and those who suffered under the pressure of jackboots of dictatorship.*

*Gowry and Thava had been a combination that had been exemplary both in and out the courtrooms. She had always been a strength to Thava and his shadow in his responsibilities.*

*Today Thava and this nation have lost a great woman. We are witnessing great persons such as Gowry are departing from us daily owing to the pandemic. The loss and void created by her death would be felt in our legal system as well as in the democratic camp for years to come. Her absence would be felt in our battles for justice and righteousness.*

*She was not only an honourable person and a friend but also a courageous comrade in our battles for the cause of democracy. We hereby offer the expression of our condolences to K.V. Thavarasha PC over the loss of your wife.*

*Gowry you are a woman of courage and strength in your lifelong fight to uphold the rule of law in a country where the rulers at any given chance have always been trying to poke fun at the Lady Justice and principles of the rule of law.*

***Dr Rajitha Senaratne MP***

# ஜனநாயக முறைமையை வலுப்படுத்திய சட்ட தெய்வம்

இந்து சமயக் கலாசாரத்தின்படி கௌரி என்பவர் விநாயகப் பெருமானின் தாயாவார். அவர் பார்வதி தேவியின் வெளிப்பாடுகளில் தெய்வீக ஆற்றலைக் கொண்டவர். அவர் தனது கணவனான சிவபெருமானுக்குத் தகுதியான மனைவியாகக் கருதப்படுகிறார். அதேபோல்தான் கௌரி தவராசா அவர்களும்கூட. இப்போது அவரது ஆத்மா சொர்க்கத்தில் இருக்கும். இந்த தேசத்தின் சட்டம் மற்றும் சமூக அரசியலில் தனது நிபுணத்துவம் மற்றும் அறிவால் தெய்வீக ஆசீர்வாதமாக இருந்தார்.

அடக்கு முறையை எதிர்கொள்வதில் வேறு எந்த உதவியும் இல்லாத பல ஆயிரக் கணக்கானோருக்கு வழிகாட்டி வெளிச்சமாகவும் இருந்தார். மேலும் ஜனநாயக நீரோட்டத்தில் நீதியை நிலை நிறுத்துவதற்குப் போராடியவர்களின் உயிர்த்துடிப்பாக அவர் இருந்தார். கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்த நாட்டின் அரசியல் சூழ்நிலையை மாற்றிய பல போராட்டங்களில் அவரது தைரியமும் உத்வேகமும் பெரும் சக்தியாக இருந்தன.

அடக்குமுறைக்கெதிராக சமரசம் செய்துகொள்ளாமல் நிபந்தனைகளின்றியே அவர் தைரியமாக முழுப்பலத்துடனும் எழுந்து தனித்துவமாக நின்றார். ஜனநாயகப் பாசறையின் தலைவர்களுக்காக அவர் எப்போதும் குரல்கொடுத்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த அவருடைய மரபு ஒப்பற்றது.

எனது தனிப்பட்ட அனுபவத்தின் படி ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் எனக்கு எதிராகச் செயற்பட்டபோது சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு தன் நேரத்தையும் பணத்தையும் முயற்சியையும் செலவளிப்பதில் அவர் முன்னணியில் இருந்தார். நீதிக்கான மக்களின் உரிமைகளை பறிக்கும் வலிமைமிக்க அதிகாரத்துக்கும் வலிமை மிக்கவர்களுக்கும் எதிராக கௌரி போராடினார், அதே வழியில் தவராசாவும் போராடினார். கண்களை மூடிக்கட்டி இருக்கும் நீதிதேவதையின் முன்னால் செல்வமும் அதிகாரமும் கண்மூடித்தனமாக மனித உரிமைகளுக்கான வெளியை தகர்க்கும் போது அவர் இனம் சித்தாந்தம் பாலினம் மதம் அல்லது மொழி என்ற எல்லாவிதமான பாகுபாடுகளுக்குமப்பால் நின்று அப்பாவிகளுக்கெதிரான சர்வாதிகாரத்தின் அழுத்தத்தினை முறியடித்தார். பாதிக்கப்பட்டவர்களுக்கு கௌரி தனது சேவைகளை வழங்கினார். கௌரியும் தவராசாவும் நீதிமன்றுக்கு உள்ளும் வெளியிலும் முன்மாதிரியாக இருந்து ஒரே நோக்கத்துக்காகப் போராடி வந்துள்ளனர்.

கௌரி எப்போதும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் பொறுப்புகளில் அவரது நிழலாகவும் இருந்தார். இன்று தவராசாவும் இந்த தேசமும் ஒரு சிறந்த பெண்ணை இழந்துள்ளனர் கௌரி போன்ற பெரிய மனிதர்கள் தொற்றுநோயால் நம்மை

விட்டு தினமும் பிரிந்து செல்வதை நாம் காண்கிறோம். அவரது மரணம் ஏற்படுத்திய இழப்பும் வெற்றிடமும் நமது சட்ட அமைப்பிலும் ஜனநாயக நீரோட்டத்திலும் பல ஆண்டுகளாக உணரப்படும். நீதி மற்றும் நீதிக்கான எங்கள் போர்களில் கௌரி இல்லாதது உணரப்படும். அவர் ஒரு கௌரவமான நபராகவும் தோழியாகவும் மட்டுமல்லாமல் ஜனநாயகத்திற்கான எங்கள் போராட்டங்களில் ஒரு துணிச்சலான தோழியாகவும் இருந்தார் அதற்கு நாங்களே சாட்சியாளர்களாவோம்.

நீதி மற்றும் சட்டவாட்சியையும் கொள்கைகளையும் கேலி செய்ய முயற்சிக்கும் ஒரு நாட்டில், சட்டவாட்சியை நிலைநிறுத்த வாழ்நாள் முழுவதும் அதீத துணிச்சலோடும் திடத்தோடும் தைரியமும் வலிமையும் கொண்ட பெண்ணாக நீங்கள் எழுந்து நின்றீர்கள் கௌரி.

மனைவியை இழந்து வாடும் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா அவர்களுக்கு எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்

**வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன**

பாராளுமன்ற உறுப்பினர்

# අපේ ආදරණීය ගෞරී



ගෞරී මට හා මගේ බිරිඳට හමුවන්නේ පලාත් සභා මන්ත්‍රී කිත්සිරි කහටපිටිය මහතා හරහායි. අපි ඉතා ඉක්මනින් මේ තවරාසා යුවලට ලංවීමු.

අපි අපේම සහෝදර සහෝදරියන්ට වඩා මේ දෙදෙනාට සමීප වීමු.

ගෞරී අපට අපේම සහෝදරියකි.

අපේම ලඟම මිතුරියකි.

විටෙක ඇය අපට මවක් විය.

තවත් විටෙක ඇය අපට ගුරුවරියක් විය.

මා බරපතල වැඩ ඇතිව වසර 2ක් සිරගත කරණ තීන්දුව දුන් පසු

ඇය උසාවියේ මහ හඬින් වැලපුනාය. මම ඇය සැනසීමි.

සිරමැදිරියට ගොස් ජම්පරය ඇඳගෙන එළියට එන විට ගෞරී මගේ බිරිඳ තමරා සමඟ එතනය.

ජාත්‍යන්තර අධිකරණයෙන් මා නිදොස් කොට නිදහස් කරන තුරු ගෞරී සටන අතහැරියේ නැත.

ගෞරී කාගේ උනත් දුකේදී ඔවුනට ලංවේ. නඩු හබ වලදී ගෞරිට පුද්ගලයා දුප්පත් බව වැටහුණොත් කිසිදා ඔවුන්ගෙන් සතයක්වත් අය නොකරන අතර, අවශ්‍ය යයි හැගුනොත් ඇය ඔවුනට අතට මුදලක්ද ලබා දෙයි.

ඇය LTTE කාරයන් වෙනුවෙන්ද පෙනී සිටියාය. ඒ ඇය LTTE හිතවතියක් නිසා නොවේ. ඇය එ.ජා.ප යේ උනත්, පොදු පෙරමුණේ උනත්, ජේ.වී.පී. උනත් දුකේදී ඔවුන් ලඟවිය. ශ්‍රිරානී බණ්ඩාරනායක.

අගවිනිසුරියගේ ප්‍රශ්නයේදී සියල්ල අතහැර ඇයට එක්විය.

ගෞරී වැනි උතුම් කතක් සොයාගැනීම අති දුෂ්කරය.

ඇය මිය ගියේ ඇගේ ආදරණීය සැමියාට පුනර්ජීවය ලබාදීමෙන් පසුවයි.

මා හිතන ලෙස අද ඇගේ සැමියා ජීවත්වන්නේ ගෞරී නිසාමයි.

මටත්, තමරාටත් ගෞරී නැති අඩුව කිසිදා කිසිවෙකුගෙන් පිරිමසා ගත නොහැක.

අපට එසේ පිරිමසා ගත යුතුද නැත. ඒ අපේ ආදරණීය සොයුරිය ගෞරී අපට නැති නිසයි.

මතු උපදින හැම භවයකම ඇය අප අතර ජීවත් වේවා.

ගෞරිට අමාමහ නිවන්සුව ප්‍රාර්ථනා කරමි.

**එස්.බී. දිසානායක**
ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ පාර්ලිමේන්තු මන්ත්‍රී නුවරඑළිය දිස්ත්‍රික් සම්බන්ධීකරණ කමිටු සභාපති

# எங்களின் அன்புக்குரிய கௌரி

மாவட்ட சபை மந்திரி கித்சிரி கஹப்பிடிய ஊடாகவே கௌரி எனக்கும் எனது மனைவிக்கும் அறிமுகமானார். நாங்கள் வெகு சீக்கிரம் இந்த தவராசா குடும்பத்திற்கு நெருக்கமானோம். எமது சகோதர சகோதரிகளை விட அதிகமாக இந்த இருவரோடும் சமீபமானோம். கௌரி எங்களின் இதயங்களை வென்ற இனிய சகோதரி, நம்பிக்கைக்குரிய நெருங்கிய நண்பி, சிலவேளை எங்களுக்குத் தாய் போல இருந்தார், பல சமயங்களில் எங்களுக்கு ஆசிரியையாக இருந்தார். எனக்கு நீதிமன்றால் ஈராண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு அவர்கள் நீதிமன்றத்தில் எனக்காகக் கண் கலங்கினார்கள். நான் அவர்களைத் தேற்றினேன்.

சிறைக் கூடத்திற்குச் சென்று சிறை உடை அணிந்து வெளியே வரும்போது கௌரி எனது மனைவி தமராவுடன் அங்கு இருந்தார். நீதிமன்றத்தில் நான் நிரபராதியாக விடுதலை செய்யப்படும் வரை கௌரி தனது முயற்சியை கைவிடவே இல்லை.

கௌரி யாருடைய துக்கத்திலும் அவர்களுடன் பங்கெடுத்துக் கொள்வார். வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் ஏழ்மையானவர் எனத் தெரிந்துவிட்டால் ஒரு பொழுதும் அவர்களிடம் ஒரு சதமும் பெறமாட்டார். மாறாகத் தேவையேற்படும் போது அவர்களுக்குப் பணம் கொடுத்து உதவுவார். இத்தம்பதியினர் விடுதலைப் புலி ஆதரவாளர்களின் வழக்குகளிலும் ஆஜராகினர், அது அவர்கள் விடுதலைப் புலிகள் என்பதற்காக அல்ல. அவர்கள் ஐ.தே. கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி பொதுஜன பெரமுனகாரர்களாக இருந்தாலும் சரி, ஜேவிபிகாரர்களாக இருந்தாலும் சரி அவர்களது துன்பத்தில் இவர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அந்தத் துன்பத்தின் பக்கமாக இவர்கள் இருப்பார்கள். பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க பிரச்சனையில் சிக்குண்ட பொழுது எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருடன் சேர்ந்து இருந்தார்.

கௌரி போன்ற ஒரு உயர்ந்த குணம் உள்ள பெண்ணைத் தேடுவது கடினம். கௌரி காலம் சென்றது அவரது கணவனுக்கு மறுவாழ்வு கொடுத்த பின்பே, என நான் நினைக்கிறேன் அவருடைய கணவர் உயிரோடு இருக்கிறார் எனில் அது கௌரியினால்தான்.

எனக்கும் தமாராவுக்கும் கௌரி இல்லாத குறையை எப்போதும் யாராலும் ஈடு செய்ய முடியாது. எங்களுக்கு அதனை சமாளிக்கத் தெரியவில்லை. எங்கள் அன்பான சகோதரியே நாங்கள் உன்னை இழந்து விட்டோம். மறுபிறப்பில் மாத்திரமல்ல எல்லா பிறப்பிலும் அவளோடு நாங்களும் ஒன்றாக இருப்போம்.

**எஸ் பி திசாநாயக்க**

பாராளுமன்ற உறுப்பினர்

## Gowry Thavarasha: A brilliant lawyer with a heart of gold. A humanitarian who always put her best foot forward.



*I first met Mrs. Gowry Thavarasha many years ago when I was working as a mid-level CID officer. As a senior instructing attorney, she would frequently represent suspects who were arrested or detained by the CID. Like many lawyers, she would frequently contact me and other CID officers in a professional capacity, on behalf of her clients.*

*Mrs. Thavarasha was one of a small number of lawyers who stood out to many of us as someone who was always polite and never condescending. The requests that she made were never improper or unethical. She would more frequently, seek permission from, coordinate family members to visit detainees held in our custody and to provide them with food or other reasonable accommodations.*

*In many cases where issuing of bail was pending before the courts, it was necessary for the CID to submit a report to the Honorable Attorney General, upon whose advice we would make submissions to court on the issue of bail. Mrs. Thavarasha would contact us on occasion in exceptional circumstances to ask if it was possible for us to expedite the submission of our bail reports to the Attorney General.*

*On many occasions, we were able to oblige her and send these reports early. On those occasions, she would always call to thank us afterwards. And in those times that we were unable to make an early filing, she was always very understanding. She never tried to force us, drop names or try to intimidate or badger us. Unlike some lawyers, she never ever tried to dictate the contents of the bail reports to us or otherwise asked us to do anything improper.*

*Whenever she saw police officers in court or elsewhere in public, she would always make it a point to at least acknowledge us with a smile or a pleasant 'hello', no matter how busy she was. My colleagues and I always had the highest respect for her.*

*Mrs. Thavarasha would also represent victims of crimes that were being investigated by the CID. One case that stands out to me is the role played by her and her husband, Presidents Counsel K.V. Thavarasha, representing the families of the 11 youth who were abducted and murdered in 2008 and 2009, a crime for which several naval officers are currently standing trial.*

*They were fearless in their advocacy and always came to the assistance of the CID when elements of the state under various governments tried to impede or obstruct our investigations. At sometimes we felt that she would treat victims of crime and their family as if they were her own.*

*I got to experience the magnificent personality of this lady - "of treating victims and their family as if they were her own" - from the other side of the fence, in 2020. After I was arrested and remanded in 2020, she was one of many upright and courageous lawyers who eagerly and willingly volunteered herself to my family to take on critical aspects of my legal defense.*

*She was one of handful of lawyers, including Mr. Saliya Peiris (P.C) , Mr. Wasantha Navaratne Bandara (P.C), Mr. Viran Corea, Mr.Upul Kumarapperuma, Mr.Shantha Jayawardhane and Mr. Nipuna Wimalasekara, who came to my aid at a time when many people were scared to even mention my name in public or acknowledge that they knew me, for fear of being arrested.*

*While I was in jail, Mrs. Thavarasha personally spent days drafting and checking every aspect of my bail revision papers. She frequently telephoned and spoke to my wife, daughter and son, explaining every aspect of the legal process to them with patience, kindness and compassion. She and her juniors, Ms. Tharmarajah Tharmaja and Ms. Brintha Chandragesh left nothing to chance, perfecting our papers with Mr. Viran Corea's team.*

*Whenever there was a setback of any kind, my family found out from Mrs. Thavarasha before anyone else. She would call them or meet with them and reassure them with honesty and confidence that I would be safe and finally released unharmed. She demonstrated a mastery of the legal system when she spoke to them, quoting provisions of laws and sections of judgments from memory. My wife and children were humbled that such a senior lawyer would spare them so much time and care.*

*When finally I was released, I went to meet Mrs. Thavarasha to personally thank her for all of her work. After learning that she and her juniors had refused to accept any legal fees from my family and insisted on doing their work pro bono, I offered to at least compensate them for the costs of printing the hundreds of papers that went into our legal filings. Even then, she refused to accept any money.*

*"Shani," she said. "After the way you devoted your life to serving my country, after seeing your integrity and hard work with my own eyes for so many*

*years, I know exactly what kind of police officer you are. I cannot possibly accept even one cent from someone like you. This was our honour, our duty. Please forget about it."*

*I was almost moved to tears, and started to object, but she cut me off. "I know you will normally never accept favours from anyone, so I will tell you what I want in return. If you do this for me, you can consider the debt repaid."*

*"One day," Mrs. Thavarasha continued, "you may return to public service, in the police or another role. We may cross paths again. You earned my respect over so many years by never bending the rules and always being decent, honest and professional. You would say yes when it was proper to say yes, and no when it was proper to say no. You never asked me for personal favours, and I never asked you for any either. You have done me this great favour of allowing me to show my gratitude to police officers like you. I will ask you for nothing more, other than to always remain the same professional in the future. That is all I ask of you."*

*She left me speechless. I learned thereafter that Mrs. Thavarasha had very often appeared pro bono for the poor and underprivileged. She would regularly spend her own money out of pocket to help such people in times of need. The same was true for many police officers who fell into trouble for doing their jobs. She would represent them at every step in the legal process from internal inquiries all the way to the Supreme Court. To lawyers like her, the law and legal system were not just a profession. It was a creed. Her qualification carried with it a sense of duty, and she sought to protect the system as well as to protect anyone who served the system well, or who was treated unfairly. In the tragically short time that Mrs. Thavarasha was with us, she left an indelible mark on me, my family, the police, the courts, and the legal fraternity at large. Many people who would have otherwise lost hope in the legal system they served, had their faith restored through her dedication, courage, kindness and care.*

*She had a level of selflessness and purity of character and karma that is extremely rare. Followers of any religion would agree that such people rarely spend much time on this earth before ascending to heaven for all eternity. To me, as a Buddhist, all that is left to do is to offer my sincerest blessings and hopes that she would attain Nirvana and take her place among the gods. And that is something my wife, children and I have done every day since her passing. It is something I will continue to do until the end of my days.*

***G.Shani Abeysekara,***

*Senior Superintendent of Police (Retired),*
*Former Director of Criminal Investigation Department.*

# பெண்ணின் பெருமை, சான்றாண்மை மிக்கவர் கௌரிசங்கரி தவராசா



இலங்கையில் கொழும்பு நீதிமன்ற வளாகத்திலும், வழக்கறிஞர்கள் குழாமிலும் மதிப்பும், பெருமையும் மிக்கவராய் விளங்கிய மூத்த வழக்கறிஞர் கௌரிசங்கரியை இழந்து விட்டோம், உயிர் பிரிந்துவிட்டது என்ற செய்தி அறிந்தவர் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.

கௌரியின் அன்புக் கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா தனிமைப்படுத்தப்பட்டு விட்டார் என்ற துயரம் எம்மையும் ஆழப்பாதித்து விட்டது. அதிலும் "கொரோனா" எனும் கொடிய நோய் தீவிரமாய் பரவியிருந்த காலம், இருவரும் மருத்துவமனையில், கௌரியின் உயிர் பிரிந்த வரையும், இறுதி நிகழ்ச்சி வரையிலும் அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டிருந்த நாமெல்லாம் கொழும்பு வரமுடியாத துன்பம், துயரத்தை பகிர்ந்து கொள்ளத்தான் முடிந்தது. உற்றார் உறவினரும் சட்டத்துறை நண்பர்களும் இறுதி நிகழ்வில் பங்கு கொண்டமை ஆறுதல் தான். கௌரி சட்டத்துறையில் முப்பத்தைந்து ஆண்டுகள் மேல் நீதிமன்றத்திலும், மேன் முறையீட்டு நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும், மனித உரிமை வழக்குகள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட வழக்குகளை தாக்கல் செய்திருக்கிறார், வாதாடியிருக்கிறார், வெற்றி பெற்றிருக்கிறார் என்ற பெருமையையும் பெற்றிருந்தார்.

வழக்குகளில் தன்னை நாடி வருபவர்கள் இன, மத பேதமின்றி அணுகி மனித நேயத்துடன், மனிதாபிமானத்துடன் ஏற்றுக் கொண்ட வழக்குகளை நடத்தி வந்துள்ளார். பெரும்பாலும் மனித உரிமை மீறல் வழக்குகளில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் வாதாடி விடுதலை பெற்றுக் கொடுத்துள்ளார். இவ்வாறான வழக்குகளில் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வித்துறை மருத்துவத்துறை. ஊடகத்துறை முதலான பல துறைகளைச் சார்ந்தவர்களும் அடங்குவர். முக்கியமான வழக்குகளில். அனேகமாக அடிப்படையுரிமை வழக்குகளைக் குறிப்பிடலாம். அவற்றில் சட்ட ஆட்சி, நீதித்துறைச் சுதந்திரம், ஜனநாயக அடிப்படை உரிமைகளை சுட்டிக்காட்டலாம். குறிப்பாக பிரதம நீதியரசராக இருந்த சிராணி பண்டாரநாயக்க பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக குரல் கொடுத்தமையையும் குறிப்பிடத்தக்கது. ஊடகத்துறை சார்ந்த வழக்குகள் 1998ல் வீரகேசரி மூத்த ஊடகவியலாளர் சிறீகஜன், 2009ல் மூத்த ஊடகவியலாளர், உதயன், சுடரொளி, காலைக்கதிர் ஆசிரியர் வித்தியாதரன், விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்றும், பல கைதுகள் ஆயுதம் வைத்திருந்தார்கள் என்போர் மீதான வழக்குகளையும் குறிப்பிடலாம். இவ் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டும், வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டும் உள்ளார்கள். 2008ல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்

நால்வருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளிலும் முன்னின்று அவர்களை விடுவிக்க வாதாடியிருக்கிறார். முன்னணி வழக்கறிஞராக விளங்கிய கௌரி தாக்கல் செய்து வாதாடிய வழக்குகளில் எல்லாம் திரு. தவராசா பேருதவியாகவிருந்திருக்கிறார். அதுபோல தவராசாவினால் நடத்தப்படும் வழக்குகளிலும் கௌரி உதவியாகவிருந்திருக்கிறார். கௌரி யாழ்ப்பாணம் எம்மூருக்கு பக்கத்திலுள்ள அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அதே போல திரு.தவராசாவும் யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பதும் பெருமையேயாகும்.

திரு.தவராசா இளமைக் காலங்களில் தமிழ் வாலிபர்கள் முன்னெடுத்த போராட்டங்களிலும் 1972 காலங்களில் தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். 1976ம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சியிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும், த.தே.கூட்டமைப்பிலும், 2010ம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவராக செயல்பட்டுக்கொண்டிருக்கும் திரு.தவராசாவிற்கு கௌரியும் முழு ஒத்துழைப்பு வழங்கியதை குறிப்பிடலாம். கொழும்பில் அவர்கள் இல்லத்திலேயே பல தடவைகள் தமிழரசுக்கட்சியின். செயற்குழுக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. பல சந்திப்புகளும் இடம் பெற்றன. அவ்வேளைகளில் கௌரிசங்கரி அனைவரையும் உபசரித்து உணவு வழங்கி உதவியமையை நன்கு அறிவோம்.

கௌரி தமிழின விடுதலை உணர்வும், ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கையும் கொண்டிருந்தார். குரலற்றவர்களின் குரலாகவும், மக்கள் மத்தியிலும், உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களிலும் நீதியையும் சட்ட ஆட்சியையும் நிலைநாட்டுவதற்காக வாதாடி வந்துள்ளவராய் விளங்கினார்.

திரு.தவராசா ஜனாதிபதி சட்டத்தரணியாக விளங்கிய பெருமை கொண்டிருந்த பொழுதிலும் கௌரி சங்கரியும் அத்தகுதியும் மாண்பும் கொண்டிருந்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.கௌரி சங்கரியும், தவராசாவும் மூத்த சட்டத்தரணிகளாக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்விலும், சட்டத்துறையிலும் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்துள்ளனர். அவர்களின் சட்ட அறிவு, ஆளுமை, அனுபவம், அர்ப்பணிப்பு இன்னும் பல ஆண்டுகள் நாட்டுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் பயன்பட வேண்டிய காலகட்டத்தில் திரு. தவராசா மட்டுமல்ல எம் மக்களும் சட்டத்துறையும் கூட கௌரி சங்கரியை இழந்து விட்டோமென்பதை இனி ஈடுசெய்ய முடியாத துயரத்துடன் என்றும் நன்றியுடன் நினைவு கூறுவோம்.

**மாவை. சோ. சேனாதிராசா**

தலைவர், இலங்கை தமிழ் அரசுக் கட்சி

# அரசதரப்பின் அதிகாரத் திணிப்புகளை சட்டரீதியாக நீர்த்துப்போகச் செய்தவர்



அரசதரப்பின் அதிகாரத் திணிப்புகளை சட்டரீதியாக நீர்த்துப்போகச் செய்தவர் சட்டத்துறையில் சாணக்கியமும் அனுபவமும் வாய்ந்த பெண் ஆளுமையும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாருமான திருமதி கௌரி சங்கரி தவராசா சர்வதேச ரீதியிலான கவனத்தை ஈர்த்த பல்வேறு குற்றவியல் வழக்குகளில் ஆஜராகி நீதியை நிலை நாட்டிய சட்ட ஆளுமை. தமிழ்த்தேசியத்தின் பாதையில் பயணிக்கும் எமது கட்சி மீதும் அதன் உறுப்பினர்கள் மீதும் காலத்துக்குக் காலம் ஆளும் அரசுகளால் வலிந்து சுமத்தப்பட்ட அதிகாரத் திணிப்புகளையெல்லாம் சட்டரீதியாக நீர்த்துப் போகச் செய்ததில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.விதவராசாவைப் போலவே அவரது பாரியார் திருமதி கௌரி சங்கரிக்கும் பெரும்பங்குண்டு.


கொள்கையின் பாற்பட்ட அரசியலுக்கு அப்பால் குடும்ப நண்பர்களாகவும் தனிப்பட்ட சட்ட ஆலோசகர்களாகவும் திருமதி தவராசா தம்பதியினருக்கும் எனக்குமான தனிப்பட்ட உறவு ஆழமானதும் ஆத்மார்த்தமானதுமாகும்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட தொடங்கிய 2010ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரசாலும் அரச படைகளாலும் என் மீது வலிந்து மேற்கொள்ளப்பட்ட அத்தனை அச்சுறுத்தல்களையும் கடந்து வருவதில் கௌரி சங்கரி தவராசாவின் பங்கும் வழிகாட்டலும் கனதியானது. 2013ஆம் ஆண்டு அரச படைகளாலும் புலனாய்வாளர்களாலும் எனது அலுவலகம் மீது திட்டமிடப்பட்ட வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்ட எனது அலுவலக உத்தியோகத்தர்கள் இருவரினதும் விடுதலைக்கான சட்டரீதியான முதற்படி இவரின் முன்னெடுப்பே ஆகும் இது போன்றே உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எத்தனையோ இளைஞர்களின் விடுதலையை சட்டரீதியாக சாத்தியமாக்கியதிலும் இவருக்குப் பெரும் பங்குண்டு. இன்னமும் அவர் ஆற்ற வேண்டிய பணிகளின் பரப்பு அதிகமாய் உள்ள காலச்சூழலில் யாரும் எதிர்பாராத விதமாய் நிகழ்ந்துள்ள அவர்களின் இழப்பை என்னால் ஏற்க முடியவில்லை.

**சிவஞானம் சிறீதரன்**

நாடாளுமன்ற உறுப்பினர்

# தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் பலமான உதவிக்கரம்



சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் மறைவு விடுதலைக்காகப் பயணிக்கும் தமிழினத்துக்கு மற்றுமொரு பேரிழப்பாகும். தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் மனைவியான கௌரி சங்கரி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் யுவதிகளின் விடுதலைக்காகத் தொடர்ச்சியாக ஈடுபாட்டோடு போராடி வந்துள்ளார். பல வழக்குகளில் அவர்களுக்காக ஆஜராகியுமுள்ளார். குறிப்பாகப் பெண்கள் சிறுவர்கள் விடயத்திலும் அவர்களது உரிமைசார்ந்த விடயங்களிலும் அவர் அர்ப்பணிப்புடன் போராடியுள்ளார். தமிழீழ விடுதலைக்கழகத்திற்கும் அவரது ஆதரவுக் குரல் பிரச்சினைகளின் போது ஒலிக்கத்தவறியதில்லை.

தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் அரசியல் சமூகப் பொருளாதார ரீதியிலும் அவரது பலமான உதவிக்கரம் இருந்தே வந்துள்ளது. கௌரி சங்கரியின் மறைவின் இடைவெளி இனி அப்படியேதான் இருக்கும்.

**சித்தார்த்தன்**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

பாராளுமன்ற உறுப்பினர்.

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டவர் திருமதி கௌரி சங்கரி தவராசா



அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றினால் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்காகவும் அரசியல் கைதிகள் விடுதலைக்காகவும் நீண்ட காலமாக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்தவர் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா
அவரது மரணம் தமிழ் மக்களுக்குப் பாரிய இழப்பாகும். இவரின் இழப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நம்பி இருந்தவர்களுக்கு மிகப் பெரிய சவாலை விட்டுச் சென்றுள்ளது. ஆள் கடத்தல் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் அரசியல் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்காக உயர் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேசப்பட்ட ஒரு பிரபல சட்டத்தரணி ஆவார்.

என்னை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்தபோது எனது விடுதலைக்காக நீதிமன்றத்தில் வாதாடி என்னை பிணையில் செல்ல அனுமதி பெற்றுத் தந்தவர் அவரின் இழப்பை ஈடு செய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

**செல்வம் அடைக்கலநாதன்**

தலைவர் - தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

பாராளுமன்ற உறுப்பினர்.

# கௌரி சங்கரி தவராசா : ஒரு இரும்புப் பெண், சட்ட தொழிலில் சிங்கப் பெண்மணி



மறைந்த திருமதி கௌரி சங்கரி தவராசா எதற்குமஞ்சாத வழக்கறிஞர். அவர் இந்நாட்டின் சட்டத்துறை வரலாற்றில் ஒரு வெள்ளிக்கோடு போல மினுமினுப்பான தனித்துவ அடையாளமாகச் ஜொலித்தார். இது அவரது வாழ்நாள் சாதனையாகும். பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற அவரது தொழில்முறை சேவைகளுக்காக அவரை நம்பிக்கையோடு நாடினார்கள். அவர் தன் தொழிலில் அயராத உழைப்பாளியாக இருந்தார். சட்ட உதவிகளை அல்லது நீதியை பெறுவதற்காக அவரை அணுகியவரை இனம் மதம் சாதி அரசியல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் நேர்மையாகப் பணியாற்றினார். தனது வாழ்நாளின் கடைசி நேரத்தில் கூட அரசியல் தத்துவங்களுக்கு அப்பால் செயற்படும் அற்புதச் சட்டத்தரணியாக ஆஜராகி வரலாறு படைத்தார். மேலும் முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் வழக்கறிஞராகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் வழக்கில் குறிப்பிட்ட அளவுக்கும் அவர் பங்களிப்புச் செய்தார். மறைந்த குமார் பொன்னம்பலம் மற்றும் மறைந்த விநாயகமூர்த்தி ஆகியோருக்கு இணையாக எமது ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட பல சேவை நாடுனர்களுக்கு தனது தொழில்சார் சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதில் முன்னணியில் இருந்தார். அதற்காக அவரின் வலிமையின் தூணாக பின்னால் இருந்த பெண்மணி அவரது அன்பு மனைவி கௌரி சங்கரிதான். சட்டவல்லுனர்களான மறைந்த திருமதி கௌரி சங்கரியும் கே.வி தவராசாவும் தங்கள் சேவைநாடுநர்களுக்கு சேவை செய்வதற்காக பல சந்தர்ப்பங்களில் இணைந்தே தம்மை அர்ப்பணித்தனர். அவர்கள் தமது தொழிலில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் எப்போதும் ஒன்றாகவே இருந்தார்கள். எனது நண்பர் தவராசாவின் திறமைகளை நான்தெளிவாகக் கண்டுகொண்டது 1980களில்தான். அப்போதுதான் சட்டக் கல்லூரியில் அவர்களுக்கிடையேயான பரஸ்பர நேசத்தையும் நான் அறிந்தேன். இதற்கெல்லாம் காரணம் எனது நல்ல நண்பரும் தவராசாவின் சட்டக்கல்லூரித் தோழருமான கே.வி.ஸ்ரீஸ்கந்தகுமார்தான். பின்னாளில் இவர் சிரேஷ்ட அரசசட்டவாதியாவும் செயற்பட்டார்.

கௌரி சங்கரி மற்றும் தவராசா என்ற இந்த ஜோடி ஒருவருக்கொருவர் மிகப் பொருத்தமாக இருந்தனர். இருவரும் அவர்கள் தேர்ந்தெடுத்த சட்டத்துறையில் தங்களின் திறமையை நிரூபித்துள்ளனர். மற்றும் குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட கைதிகளுக்கு மகத்தான சேவைகளை வழங்கி உள்ளனர். தவராசாவின் அனைத்து வெற்றிகளுக்குப் பின்னாலும் கௌரி சங்கரி இருந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் தவாவுக்கு இழப்பைத் தாங்கும் வலிமையை அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். கௌரியின் பெயர் ஏலவே சமகால வரலாற்றில் மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் என். குமரகுருபரன்**

முன்னாள் மேல்மாகாணசபை உறுப்பினர்

முன்னாள் பொதுச் செயலாளர் - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

தலைவர் தமிழ் தேசிய செயற்குழு

## An Iron lady but a Lion Lady in her Legal Profession Late Ms Gowry Shangary Thavarasha.

*An undaunted fearless Lawyer, Late Mrs Gowry Shangary had earned a paramount place a Glittering Silverline in the history of legal Profession of this country. It is a lifetime achievement for her where clients flock together for her professional services to seek justice. She had been a tireless workaholic in her profession. Whoever approached her for legal assistance or to receive justice, she served sincerely irrespective of nationality, race, religion, caste, political shade and creed.*

*Beyond political philosophies she made history in appearing as an instructing Attorney even at the eleventh hour of her span of life, and had been the lawyer for former Governor Azath Salley, and to certain extent in the case of the Parliamentarian. Rishard Badudeen.*

*Parallelly in par with late Kumar Ponnambalam and late Hon.Vinayaga moorthy our President's Counsel K.V. Thavarasha was on the lead providing his professional services successfully to many more Clients who were charge under Prevention of Terrorism act, the lady behind his success and the piller of strength was Gowry Shangary his beloved Wife. Both late Mrs Gowry Shangary and K.V.Thavarasha extended their services very efficiently in numerous cases sheerly as Legal Professionals to serve their clients.*

*Not only in their profession but also in their life too they were together. Their love bloomed in Law College. I came to know the talents of our good friend Thavarasha since 1980 and about their love for each other, chiefly because of my good friend Mr K.V.Sriskanda kumar later a Senior State Counsel and a colleague of Thavarasha in Law College. This association between Gowry Shangary and Thavarasha had been made for each other. These both have proved themselves in their Legal profession as well. She has delivered immense services in their chosen Legal field and specially to detainees under PTA. Since her demise I pray to God to give strength to Mr. Thavarasha to bear this irreparable loss, the lady behind his every success. No doubt her soul, rest in peace within the soul of her affectionate Thava.*

*The name of late Mrs Gowry Shangary Thavarasha has already been engraved in our contemporary history.*

***Dr.N.Kumaragurubaran** ExMPC WP*
*MIMgt (SL),ACMA,FIMS(UK),CBA(Canqda)*
*Former General secretary of All Ceylon tamil Congress*
*Chairman -Tamil National Action Council*

# சட்டப்போராளி கௌரிசங்கரி தவராசாவின் மறைவு நீதிக்காக ஏங்கும் மக்களுக்கு பேரிழப்பு



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் பெண்ணுரிமைக்காகவும் செயற்பட்டு வந்த சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் இழப்பானது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அன்றுதொட்டு இன்றுவரை கௌரிசங்கரி தவராசா பாடுபட்டு வந்தவர். அவரது கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையில் அவர் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்தார்.

மனித உரிமை விவகாரம் தொடர்பிலும் பெண் விடுதலை மற்றும் உரிமை தொடர்பிலும் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர்.

தன்னை நம்பி வந்தவர்களுக்காக எத்தகைய இடர்களுக்கு மத்தியிலும் சளைக்காது சட்ட பணியாற்றிய ஒருவராகவே இவர் திகழ்ந்தார். மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாகச் சட்டத் துறையில் பணியாற்றி சாதனை படைத்ததுடன் தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவரான தனது கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் அரசியல் விவகாரத்திலும் பக்கத்துணையாக அவர் செயலாற்றி வந்தார் தமிழ்த் தேசியப் பரப்பிலும் அக்கறை கொண்டு செயற்பட்டிருந்தார்.

சட்டத்துறையில் சிங்கப் பெண்ணாக திகழ்ந்த கௌரி சங்கரி தவராசாவின் இழப்பானது தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டில் நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் சகலருக்கும் பேரிழப்பாகும்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன்**

முன்னாள் இராஜாங்க அமைச்சர்

# இதய அஞ்சலி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அவர்களின் அன்புப் பாரியார் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரியின் மறைவு தமிழர் சமுதாயத்துக்கு பெரும் இழப்பாகும்.

வெறுமனே ஒரு தொழில் ரீதியான சட்டத்தரணியாக இல்லாமல் பல நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்களுக்காக (சிங்களத்தின்) கோட்டையான கொழும்பில் வாழ்ந்து கொண்டு நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து துணிந்து வாதாடிக் கொண்டிருந்தவரை கொரோனா 19 என்ற கொடிய நோய் காவு கொண்டது மிகவும் வேதனைக்குரியது.

குறிப்பாக, அரக்கத்தனமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டும், செய்யப்படாதுமிருந்த நூற்றுக்கணக்கானவர்களுக் காக வாதாடும் போது எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் பல வெளிவராததாகவே இருக்கும். இன வெறித்தனமாக செயற்படும் புலனாய்வுப் பிரிவினர் தாக்கல் செய்யும் வழக்குகளில் வாதாடுவது என்றால் அவர்களுக்கு எதிரான வாதாட்டங்களே அவை. இதனால் அவர்களின் எதிர்ப்பையும், வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டே செயற்பட்டார். அவரது துணிச்சலின் வெளிப்பாடே பல அரசியல் கைதிகளின் நீதிமன்ற விடுவிப்புக்கான சாதனைகள். இவரினதும் அவரது கணவரினதும் சட்ட வாதத்தினால் விடுதலை பெற்றவர்கள் ஏராளம். அவர்களுக்கெல்லாம் இவர்களே தந்தையும், தாயுமாகவும், சகோதரருமாகவும் பார்க்கப்படுகின்ற நிலையில் இன்னும் விடுதலை பெறாதவர்களுக்கான சட்ட வாதாட்டம் தேவையான தருணத்தில் திருமதி கௌரிசங்கரி எம்மை விட்டு பிரிந்தது வேதனைக்குரியது. இந்தப் பெருந்தகையின் இழப்பு அன்புக்குரிய கே.வி. தவராசா அவர்களுக்குத் தாங்கமுடியாத வேதனையைக் கொடுக்கக்கூடியதே. எனினும் “எம் இனத்தின் பேசமுடியாதவர்களின் குரலாக மிளிர்ந்தவர் அவரது பாரியார் என்ற மன ஆறுதல் அவருக்கு கிடைக்க வேண்டும். அமரர் கௌரிசங்கரியின் ஆத்மா ஆண்டவனின் பாதாரவிந்தத்தில் அமைதி பெற பிரார்த்திக்கின்றேன்.

**சீ. வீ. கே. சிவஞானம்**

அவைத்தலைவர்

வடக்கு மாகாண சபை

# ஆற்றலைத் தன் மக்களுக்காக அர்ப்பணித்த ஆளுமை



சட்டமாமேதை சகோதரி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அவர்களின் மறைவு மிகவும் அதிர்ச்சியானது. எனது கணவர் படுகொலை செய்யப்பட்ட போது நான் செய்வதறியாது கலங்கிநின்ற வேளையில் முதன்முதலில் அந்த இடத்துக்கு வந்து எனக்குத் துணையாக நின்றவர்களில் கௌரிசங்கரியும் அவரது கணவர் கே.வி.தவராசாவும்தான் முக்கியமானவர்கள்.

எனது கணவரின் பூதவுடல் கொழும்பிலிருந்து அவரது பூர்விக மண்ணான தென்மராட்சிக்குக் கொண்டு செல்லப்படும்வரை அனைத்துக் கருமங்களையும் கே.வி.தவராசாவுடன் துணையாக நின்று ஒழுங்குபடுத்தியவர் கௌரி சங்கரிதான். அரசியல் கைதிகளுக்கான அவரது பங்களிப்பு அளப்பெரியது. குற்றவியல் வழக்குகளில் கே.வி.தவராசா எப்படியொரு நிகரற்ற ஆளுமையோ அதே போன்று குற்றவியல் மற்றும் குடியியல் வழக்குகளில் கௌரி தடம்பதித்திருந்தார். சட்டத்துறைச் செயற்பாடுகளுக்கூடாகவே பலநூறு குடும்பங்களின் வாழ்வை ஒளிரச் செய்தவர்.

மனோவலிமைக்கும் மனிதநேயத்துக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த ஓர் ஆளுமை கௌரி சங்கரி. அவருக்கு கனத்த இதயத்தொடு கண்ணீர் மல்க விடை தருகின்றேன்.

**சசிகலா இரவிராஜ்**

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
Colombo Tamil Sangam Society Ltd.

ஆரம்பம் : 1942

பதிவு இல. 73

# அநீதிகளுக்கு எதிராய் துணிந்து குரல் கொடுத்து வந்த துணிச்சலான பெண்மணி

கௌரிசங்கரி தவராசா என்னும் ஆளுமை என்னை மிகவும் பாதித்த ஆளுமைகளில் ஒன்று. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் அறுவடைகளில் ஒன்றாக நான் அவரை அறிந்தபோது பெருமைகொண்டேன். மகாஜனாக் கல்லூரியின் தாரக மந்திரம் ("Know thyself" "உனை நீ அறி") என்பதாகும். எனது கிராமமான பன்னாலையைச் சேர்ந்த ஆசிரியர் அமரர் செ.விநாயகரத்தினம் அவர்கள் மகாஜனாவில் கௌரிசங்கரி அவர்களுக்கு ஆசிரியராக இருந்து பின்பு எனக்கும் ஆசிரியராக இருந்தமையினால், நான் சட்டத்தரணி ஆகிய பின்பு என்னை சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கௌரிசங்கரி அவர்களைப் பற்றி என்னிடம் விசாரித்து அறிந்து கொள்வார். அவருடைய பேச்சாற்றலைப் பற்றியும், திறமைகளைப் பற்றியுமான தனது நினைவுகளை பலதடவைகள் என்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். கௌரிசங்கரி அவர்கள் தன்னைத் தானே அறிந்து கொண்டவராக தானகவே அவர் வெளித்தெரிய மகாஜனாக் கல்லூரி அவருக்கு வழிசமைத்திருந்தது.

என்னுடைய சட்டத்துறை குருநாதரான ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் A.R.சுரேந்திரன் அவர்களுடைய பால்ய நண்பர்களாக ஜனாதிபதி சட்டத்தரணி மு.ஏ.தவராசா அவர்களும் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி அவர்களும் சட்டக் கல்லூரியில் சமகாலத்தில் இணைந்து கொண்டமையினால் இவர்களிடையேயான நட்பு வட்டத்திற்குள் இருந்த பசுமையான நினைவுகளை நானும் அறிந்து கொள்ள முடிந்தது. அதில் குறிப்பாக தவராசா அவர்களுடன் வழக்கொன்றில் தெரிபட்டிருந்த சுரேந்திரன் அவர்கள், ஒருமுறை தவராசா அவர்கள் தனது காற்சட்டைக்கு ஒப்பான விதத்தில் அழகான இடுப்புப்பட்டி (Belt) ஒன்றை அணிந்திருப்பதைக் கண்டு தவராசா அவர்களிடம் "இந்த அழகான இடுப்புப்பட்டியை எங்கே வாங்கினீர்கள்" எனக் கேட்க, உடனே தனது இடுப்புப்பட்டியைக் கழற்றிச் சுரேந்திரனிடம் கொடுத்துவிட்டார் தவராசா அவர்கள். இவ்வாறு நட்பிற்கு இலக்கணமாய் இருந்த தவராசா அவர்களிடம் கௌரிசங்கரி அவர்கள் தனது மனதைப் பறிகொடுத்திருந்ததும் பின்னர் இந்த இரு ஆளுமைகளின் சேர்க்கையும் அதன் ஒருமித்த வெளிப்பாடும் தமிழ்ச் சமூகத்தின் சமூக அரசியல் பண்பாட்டுத் தளங்களின் அசைவியக்கத்தில் காத்திரமான மாற்றங்களை உண்டு பண்ணியிருந்ததும் யாமறிந்த ஒன்றே.

சட்டத்துறையில் தம்பதிகளாக இணைந்து இவர்கள் ஆற்றியிருக்கும் பங்களிப்பு அளப்பரியது. விடுதலைப் போராட்ட காலங்களில் சட்டத்தரணிகள் எவரும் கையாள விரும்பாத அல்லது கையாளத்தயங்கிய

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சார்பாக தெரிபட்டு துணிச்சலாக தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தியவர்கள். யுத்தம் கொடூரமாக இடம்பெற்ற காலங்களில் BBC தமிழோசையில் இரவுச் செய்திகளின்போது முறையற்ற கைதுகள் பற்றியும் தமிழ்க் கைதிகளின் மீதான ஒடுக்குமுறை பற்றியும் சட்டத்தரணியாக கௌரிசங்கரி அவர்கள் துணிந்து தனது கருத்துக்களைப் பகிர்ந்து வந்தார். தமிழ்கைதிகளிடம் பலவந்தமாக பெறப்படும் வாக்குமூலங்களை வைத்துக்கொண்டு அரசு வேண்டுமென்றே போலியாக புனைந்த வழக்குகளில் அதன் உண்மைத்தன்மையை வெளிக்கொணர்ந்தவர் கௌரிசங்கரி அவர்கள்.

**“சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து”**

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க சட்டத்துறையில் தனது வாதத்திறமையால் எதிர்த்தரப்பினரை வாயடைக்கச் செய்தவர். அடிப்படை உரிமை வழக்குகள், அரசியல்சார் வழக்குகள், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், குற்றவியல் வழக்குகள் என பரந்துபட்டவகையில் வழக்குகளை கையாண்டுள்ளதுடன் பலதீர்க்கப்பட்ட வழக்குகளில் முன்னுதாரணமான பல தீர்ப்புக்களையும் நீதித்துறையிடமிருந்து பெற்றும்கொடுத்துள்ளார்.

இவ்வாறு பல்துறை ஆற்றல் கொண்டிருந்த கௌரிசங்கரி அம்மையார் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரும் கூட. இவரது இழப்பின் மூலமான வெற்றிடம் இட்டு நிரப்பமுடியாத ஒன்றே. அன்னார் ஆற்றிச் சென்றிருக்கும் பணிகள் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் என்பதுடன் என்றும் அவரை எம் நினைவில் வைத்திருக்கும்.

**“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு”**

என்னும் வள்ளுவன் வாக்கின் வழி நின்று “நேற்று இருந்த ஒருவன் இன்று எம்மத்தியில் இல்லை” என்னும் வாழ்வின் நிலையாமைப் பற்றிய உண்மையை உணர்ந்து சாந்தி கொள்வோமாக.

**நடராஜர் காண்டீபன்**
சட்டத்தரணி
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# துணிந்து போராடுவது அவருடன் பிறந்தது

மதிப்பு மிக்க என் அன்புத் தங்கை கௌரிசங்கரியுடன் கூட பிறக்க என்ன புண்ணியம் செய்தேனோ தெரியவில்லை. இன்று எங்கள் முழுக் குடும்பத்திற்கும் அழியாத புகழைதேடித் தந்துவிட்டு, அவர் அமரத்துவம் அடைந்துவிட்டார். சின்னஞ் சிறுவயதில் எனது தம்பிகளுடன் சண்டையிடும் போது கூட வாதாடி அவரது தரப்பு நியாயத்தை நிருபித்து அவர்களுக்கு என் தாயிடம் தண்டனைவாங்கிக் கொடுத்துவிடுவார். என்றுமே எதற்கும் அஞ்சியது கிடையாது. துணிந்து போராடுவது அவருடன் பிறந்தது. ஆச்சிக்கு துணையாகப் போய் படுப்பது, அனாதையாக இருந்த மனநலமற்ற வயோதிப மாதுக்கு உணவு கொண்டு போய்க் கொடுப்பது என்று கருணை நிறைந்த புரட்சி பெண்ணாகத் திகழ்ந்தார். அளவெட்டியில் முதன் முதல் மிதிவண்டி பழகி அதில் பாடசாலைக்குச் சென்ற பெண்ணாவார். எனது மகனின் திருமணத்திற்கு எல்லாப் பொறுப்புகளையும் தானே சுமந்து முன் நின்று நடத்தினார். அவர் என்றும் எம் நினைவில் அழியாத தடமாகி நிற்பார்

**கௌரி அக்கா, விக்கி அத்தான், கரன், நிதா, ஹரி, சிவானி**

மொனாக்கோ. பிரான்ஸ்

# சங்கரி எல்லாவற்றுக்கும் துணிந்தவள்

“சொல்லடி சிவசக்தி எனைச் சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய் வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே“ என்ற பாரதியின் இந்த வரிகளோடு நான் ஆரம்பிப்பதற்கு காரணம் எனது அன்பு சகோதரி கௌரி சங்கரி இன்னும் கொஞ்ச காலம் உயிரோடு இருந்திருந்தால் இன்னும் எவ்வளவோ சாதனைகளை அவர் சாதித்திருப்பார் என்பதே.

சிறு வயதில் நிகழ்ந்த மறக்க முடியாத நினைவுகள் இன்னும் என் மனதில் அழியாது பதிந்திருக்கின்றன. நான் எல்லாவற்றுக்கும் பயந்தவள். சங்கரி எல்லாவற்றுக்கும் துணிந்தவள். எங்கள் குடும்பத்தில் யாருக்காவது ஒரு பிரச்சனை என்றால் சங்கரி தான் முதலில் ஓடி வந்து நிற்பாள். சங்கரிக்கு மிகவும் இனிமையான குரல்வளம். எனது மச்சான் சிறி, மச்சான் தங்காவுடன் நாங்கள் பழைய பாடல்களைப் பாடி மகிழ்ந்த காலம் என் மனக்கண் முன் நிற்கிறது.

என் தந்தை இறந்த பிறகு சங்கரியைப் பார்க்கும்போதெல்லாம் என் தந்தையின் ஞாபகம் வரும். ஏனென்றால் என் தந்தையின் எல்லாவிதமான திறமைகளையும் சீதனமாகக் கொண்டு வந்தவர்தான் சங்கரி. இவருடைய அத்தனை புகழுக்கும் பெருமைக்கும் பக்கபலமாக நின்ற என் மைத்துனன் தவராசா பெரும் பெருமைக்கு உரியவர். கடைசியாக என் சகோதரியுடன் நான் கதைத்த போது உமக்கு என்ன அனுப்புவது என்று கேட்டேன். ‘எனக்கு எல்லாம் இருக்கிறது ஒன்றும் வேண்டாம் இதற்குத்தான் சகோதரங்களுடன் பிறக்க வேண்டும் என்று சொல்லுவது’ என்று சொன்னார். அதுவே எங்கள் கடைசி உரையாடலாக அமையும் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எங்கள் குடும்பத்திற்கு அழியாத புகழைக் கொடுத்துவிட்டுப் போன எனது அன்பு தங்கை கௌசங்கரியை நினைக்கும்போது கவிஞர் கண்ணதாசன் பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன “வாழ்ந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர் போல யாரென்று ஊர் சொல்லவேண்டும்”

இதுவரை அவர் செய்திருக்கும் சாதனைகளே அவர் புகழை என்றென்றும் நிலைபெறச் செய்யும்.

அன்புச்சகோதரி,

**கௌரிமலர் சிவசுதன்**

கனடா

# பசுமையான நினைவுகள்...

சிறு வயதில் நாங்கள் சங்கரி அக்காவை நிழல் போலப் பின் தொடர்வோம். அவரின் செயல்கள் யாவற்றையும் அவரைப் போலவே செய்ய முற்படுவோம். தோல்வியடைவோம் என்று தெரிந்திருந்தாலும் முயற்சி செய்வதில் எங்களுக்கும் பெரு மகிழ்ச்சி.

சங்கரியக்காவின் சிந்தனையும் வாழ்க்கைத் தத்துவமும் எனக்கு சிறு வயதில் நடந்த ஒரு சம்பவத்தை வஜினைவூட்டுகிறது. 1976 ஆம் வருடம் மகாஜனக் கல்லூரி கவிதை மன்றக் கூட்டத்தில் மூன்று கவிஞர்களும் (சேரன், ஆதவன், சங்கரி) கலந்து கொண்டு ஒரு கவியரங்கம் அதன் தலைப்பு “வள்ளுவன் இன்றிருந்தால்” தலைப்பை அறிவித்ததும் எழுந்து மூன்று நிமிடத்தில் கவி சொல்ல வேண்டும். அதில் சங்கரி தான் ஒரு வானொலி அறிவிப்பாளராக வள்ளுவரை பேட்டி காண்பது போலவும் அவரிடம் நீங்கள் எழுதியவற்றில் இன்றைய சூழலில் எதையாவது மாற்றி எழுத நினைக்கிறீங்களா எனக் கேட்பது போலவும், அதற்கு வள்ளுவர் தான் வாசுகிக்கு எழுதிய,

**அடியிற்கினியாளே அன்புடையாளே**
**பதிசொல் தவறாத பாவாய் அடி வருடி**
**பின்தூங்கி முன் எழும் பேதாய்**
**இனிதா(அ)ய் என் தூங்கும் என் கண் இரவு**

இக் கவிதையை இப்போது பலர் பெண் உரிமைகளை கட்டுப்படுத்தப் பயன்படுத்துவதாலும், தான் பாரதியின் இரசிகையாக பெண் உரிமைக்கு குரல் கொடுக்க அந்த வரிகளை மாற்றியமைக்க விரும்புவதாகவும் முடித்திருந்தார்.

இது விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது போல அவரின் சிந்தனையைப் பிரதிபலித்தது.
அக்கா வள்ளுவன் வழி வாழ்ந்தார் என்பதற்கு அவர் தனது கணவரை மதித்து நேசித்த விதமும் வீட்டுக்கு வரும் மனிதர்களை விருந்தோம்பி உபசரித்த பண்பும் போதுமானது.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கென” அவர் எங்கள் எல்லோர் மனதிலும் எப்போதும் நிறைந்திருப்பார்.

**கௌரி மோகன்**
லண்டன்

# மொழி மீதும் இலக்கியத்தின் மீதும் இருந்த பற்று அளவிட முடியாது

அக்கா எனக்கு ஒரு சகோதரியாக மட்டுமன்றி பாசமிகு தாயாகவும் இருந்தார். 60 வயதை நெருங்கிய என்னை கடைசிவரை ஒரு சிறுபிள்ளையைப் பாதுகாப்பது போல மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார்கள் .அவருடைய வாழ்வின் முக்கியமான தருணங்களில் நானும், எனது வாழ்வின் முக்கிய தருணங்களில் அக்காவும் அருகில் இருந்தோம். பள்ளிப்பருவத்தில் படிப்பில் மட்டுமன்றி விளையாட்டுப் போட்டிகள், பேச்சு போட்டிகள், நடனம், நாடகம், கவிதைப்போட்டிகள், கதை எழுதுதல் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டு பரிசுகளை வாங்கிக் குவித்தவர். அருநோதா கல்லூரியில் இருந்து மகாஜன கல்லூரிக்கு மாறும் போது கல்லூரி அதிபர் அம்மாவிடம் அக்காவை தங்கள் கல்லூரியில் இருந்து மாற்ற வேண்டாம் என மிகவும் வேண்டி கொண்டார். அக்கா எல்லோருக்கும் தாயாக இருந்தார் சகோதரர்களின் பிள்ளைகளை மட்டுமன்றி அவர் வீட்டில் பணிபுரிவோர் குழந்தைகள் உட்பட சகலரையுமே தன் பிள்ளையாக நினைத்து அன்பு காட்டுவார் பராமரிப்பார். சிறு வயது முதலே அவரது பல்வேறு திறமைகளைப் பார்த்து வியந்திருந்தாலும். என் மனதில் அவர் பழமையை மதிக்கும் புதுமைப் பெண்ணாகவே நிலைத்துள்ளார். தனது கணவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அக்கா செலுத்திய அன்பும் மரியாதையும் எங்களை வியக்க வைத்திருக்கிறது .அவரது மரணத் தருவாயில் கூட அத்தானை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது மருத்துவர் அக்காவை பார்த்து "உங்களையும் பார்க்க களைப்பாக உள்ளது" எனக் கூறி சோதனை செய்தமையால் தான் அன்று அவரும் அத்தானோடு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். மொழி மீதும் இலக்கியத்தின் மீதும் அக்காவுக்கு இருந்த பற்று அளவிட முடியாது. விடுமுறை காலங்களில் ஒவ்வொரு வருடமும் சந்திக்கும் போது மணிக்கணக்கில் தமிழ் இலக்கியங்களை பற்றி உரையாடுவோம். கல்கி காண்டேகர், ரசு, நல்ல பெருமாள், அகிலன், பாரதியார் நாடேர் புத்தகங்கள் எப்போதும் அவர் அருகில் இருக்கும் வந்து குவியும் வழக்குகளின் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் இரவு தொலைபேசியில் அரை மணிநேரமாவது நெருநல் வாடையோ சிலப்பதிகாரமோ சிந்தாமணியோ ஒரு கவிதையாவது என்னுடன் சேர்த்து ரசித்து விட்டு அப்பாடா இப்போது தான் நல்ல நித்திரை வருமென தூ ங்கப் போவார். மிகவும் களைப்பாக இருந்தால் பழைய தமிழ் பாடல்களின் வரிகளையாவது சொல்லி இரசிப்பார் .ஆகஸ்ட் 8ம் திகதி அவர் கடைசியாக என்னுடன் சேர்ந்து ரசித்த பாடல் அவரையும் அவரது அழகான கண்களையும் நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது.

**"உன் விழி வாசல் அழகான மணிமண்டபம்**
**அன்பு விளையாடும் புதுப்பார்வை உயிர்த்தாண்டவம்"**

அன்பொளி வீசி உயிர் வழிந்தாடும் விழிகளோடு பார்த்த திசையெல்லாம் பாதிக்கப்பட்ட இதயங்களுக்கு ஒத்தடம் கொடுத்து எல்லோரையுமே தன் குடும்பமாக நேசித்த அக்கா அன்பின் உருவாகவே மனதில் நிலைத்திருப்பார்.

**"ஆசை நெஞ்சில் குடியிருந்த அன்பு என்னும் தெய்வ மகள்**
**காலமெலாம் துணையிருந்தாள் கனவாகி மறைந்து விட்டாள் "**

அன்புத் தங்கை

**தர்ஷினி நந்தகுமார்**

லண்டன்

# என் உடன்பிறப்பானாய் அது இறைவன் அருளிய கொடை

நம்ப மறுக்குது என் நெஞ்சம். நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை என் அன்பு அக்கா ஷங்கரி இன்று எம்முடன் இல்லை என்று. சிறு பிள்ளைகளாய் நாம் ஒன்றாக வாழ்ந்தோம், சிரித்து மகிழ்ந்தோம், சண்டையிட்டோம், அழுதோம், அரவணைத்தோம் ஒருவரையொருவர். எங்களது கனவுகளைப் பகிர்ந்தும் கொண்டோம்.

ஷங்கரி என் சகோதரிக்கும் மேலாக என்னுடைய நண்பி. அவள் அற்புதமானவள், அன்பானவள், வலிமையானவள், மன்னிப்பவள். என் உடன்பிறப்பாய் எனக்குக் கிடைக்க நான் என்ன செய்தேனோ எனக்குத் தெரியாது. அது இறைவன் அருளிய கொடை.

எங்களது உறவின் இனிய அனுபவங்களை மீட்டுப் பார்க்கிறேன். நெஞ்சுகனக்கிறது. தூரத்திலிருந்தாலும் ஒருதொலைபேசி அழைப்புத் தொலைவில் தானே இருந்தோம். அவ்வப்போது உரையாடி மகிழ்ந்தோம் அல்லவா? எங்கள் சந்தோஷத்தில் மகிழ்ந்தாயே. எங்களது கஷ்டங்களில் கைகொடுத்தாயே. இனி நான் என்னசெய்வேன்? உங்களைப் பற்றிய நினைவுகள் என்னைத் துன்புறுத்துகின்றன. ஆனால் அவை எனக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்றன்றோ! ஷங்கரி இல்லாமல் என் வாழ்க்கையைக் கற்பனை செய்து பார்க்க என்னால் இயலவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் அவளுக்காய் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். மறுவாழ்விலும் சகோதரிகளாகவே பிறப்போம்.

உங்கள் ஆன்மா நித்திய இளைப்பாறுதல் பெறட்டும் என என்னோடு சேர்ந்து கலாதரனும் அன்புப் பிள்ளைகள் பிறிந்தா, பிறீத்தா, பிரியனும் பிரார்த்திக்கிறார்கள்.

என்றும் உங்கள் தங்கை

**விஜி**

றொறன்டோ, கனடா

# அழியாத நினைவுகள்...
# அவவின் கால் தொட்டு வணங்கினார்கள்

நான் ஆசை மச்சாள் என்று அழைக்கும் கௌரி சங்கரியை 1976 இல் இருந்து எனக்கு தெரியும். நான் அவவின் மூத்த சகோதரியை திருமணம் செய்தேன். அவ நல்ல பேச்சுத் திறனும், நடிப்புத் திறனும் கொண்ட சிறந்த மாணவியாக மகாஜனக் கல்லூரியில் விளங்கினார். எனது மகள் கௌரி சங்கரி இந்த நாட்டில் ஒரு பெரிய சட்டத்தரணியாக வருவார். கறுப்பு அங்கி அணிந்து நீதிமன்றத்தில் அவர் வாதாடும் அழகை இந்த நாடு பார்க்கும் என்று அவரது தகப்பனார் என்னிடம் அடிக்கடி கூறுவார்,

அப்படியே அவர் சொன்னது பலித்தது. பிற்காலத்தில் எனது மாமனாரை நான் சந்தித்த போது அதை நினைவூட்டினேன். அந்தத் தந்தையின் பெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் அளவில்லை. என் மகள் இன்னும் பெரிய வழக்குகளில் வென்று பிரபலமாவாள். அவரை பார்க்க நான் இருக்க மாட்டேன் நீங்கள் பார்ப்பீங்கள் என்று சொன்னார். எனது மகனை தான் பெற்ற பிள்ளை போல பெண் பார்த்து, தனது வீட்டில் எல்லோரையும் தங்க வைத்து சகல பொறுப்புக்களையும் ஏற்று மிகச் சிறப்பாக திருமணம் செய்து வைத்தார்.

அவர் வீட்டில் நான் தங்கியிருந்த போதெல்லாம், எனக்குப் பிடித்த உணவுகளை தான் கையால் தானே சமைத்து அன்பாக, என் தாய் போல் பரிமாறியதை என்னால் மறக்க முடியவில்லை. இனி என்றுமே அந்த சுவையான உணவு கிடைக்காது. நான் கொழும்பு விமான நிலயத்தில் போய் இறங்கினால், அவருடைய செல்வாக்கில் (VIP) செல்லும் வழியாகத் தான் வெளியில் வருவேன். எனது பேரனை அழைத்துச் சென்ற பொழுது அவருக்குத் தேவையான சகலவற்றையும் வாங்கி வைத்து அன்பு பாராட்டி எங்களை சகல பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்ததை மறக்க முடியுமா?

இந்தியாவில் அவாவையும் தவாவையும் நாங்கள் சந்தித்த போது, எங்களை திருச்சிக்கு அழைத்து சென்றார். அங்கு ஐந்து பேர், இருபத்தைந்து முதல் நாற்பது வயது வரையானவர்கள் அவவின் கால் தொட்டு வணங்கினார்கள். அம்மா உங்களால் உயிர் காப்பாற்றப்பட்டு, இன்று நான்கு நட்சத்திர விடுதி நடாத்துகிறோம். நன்றாக வாழ்கிறோம், நீங்கள் எல்லோரும் இரண்டு நாட்கள் தங்கிப் போக வேண்டும் என்று உபசரித்தார்கள். அதில் ஒருவர் என்னிடம் தாங்கள் அனைவரையும் விடுவித்து தனது செலவில் இந்தியாவில் உள்ள தனது நண்பரிடம் அனுப்பி வைத்தார், எங்களுக்கு மறுவாழ்வு தந்த கடவுள் என்று அழுதார். அவரது மகத்தான சேவையை நினைத்து கண்ணீர் வடித்தேன்.

அவரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

**விக்கி அத்தான்**
மொனாக்கோ, பிரான்ஸ்

# அம்மாவுக்கு நிகராக அன்பு காட்டியவர் அண்ணி

1983ஆம் ஆண்டு இனக்கலவரம் ஒன்று இடம்பெறும் வரைக்கும் அண்ணன் தவராசாவுடன் தான் எனது அதிகமான காலம் கழிந்திருக்கும். பிரச்சினைகள் தொடங்கிய பின்னர்தான் ஒவ்வொருவரினதும் அடுத்தவர் மீதான அன்பின் மொத்த மதிப்பீட்டையும் செய்ய முடியுமாக இருக்கும். காரணம் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றிக் கவலைப்படக்கூடிய நிலையில் அடுத்தவர்களைக் குறித்து அவ்விக்கட்டான நிலையிலும் கவலை கொள்ளும் மனம் வாய்ப்பதே பெரும் பாக்கியம்தான். அப்படித்தான் எனது அண்ணி. அவர் அதிகமாக மற்றவர்களைப் பற்றியே யோசித்தார். அந்த அன்பில் அன்னைக்கு நிகரான நிலையிருக்கும். அண்ணி என்னைத் தன் பிள்ளையாகவே கவனித்துக் கொண்டார்.

கலவரம் நிகழ்ந்த போது நான் பொரளையில் இருந்து புறக்கோட்டைக்குப் போய்க் கொண்டிருந்தேன். ஆனந்த கல்லூரிக்கு அருகில் வைத்து தமிழ் இளைஞர்கள் அனைவரும் தாக்கப்பட்ட போது நான் தெய்வாதீனமாக அவர்களிடம் மாட்டிக்கொள்ளவில்லை. நான் கலவரத்துக்குள் அகப்பட்ட செய்தி வீட்டார்க்குத் தெரியவந்தபோது அதிகம் பதைபதைபுற்றவர் அண்ணிதான்.

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வரை அவரது முழு அவதானமும் என்மீதே இருந்தது. என்னை எங்கும் அசையவிடவில்லை. கண்டிப்பான அம்மாவாக அவர் அப்போது தென்பட்டார். எதைச் செய்தாலும் அதில் மற்றவர்க்குப் பயன் இருக்கும் படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பார். சொல்வது போலவே இறுதிவரை வாழ்ந்தும் காட்டினார். எங்கள் குடும்பத்தில் அவருக்கு இருந்த இடமும் அம்மாவுக்கு நிகராகத்தான் இருந்தது. அம்மாவின் மரணத்துக்குப் பின்னர் அண்ணிதான் எங்களுக்கான ஆறுதலாக மாறியிருந்தார்.

அண்ணன் ஒரு போதும் அண்ணி குறித்து அதிர்ந்து கதைத்ததில்லை. அந்தளவுக்குப் பக்குவமாக அனைத்து விடயங்களிலும் மிகவும் தெளிவான பார்வையுடன் கவனம் செலுத்தியவர் அண்ணி. அண்ணனுக்கு எல்லாவிதத்திரும் அவர் துணைாயக இருந்தார். நாங்கள் அண்ணனை விட்டுப் பிரிந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட பின்னர் நாங்கள் இல்லாத இடைவெளி ஒரு போதும் அண்ணனுக்குத் தெரியாதபடி இருக்கக் காரணமே எங்கள் அண்ணியின் உண்மையான கலப்படமற்ற அன்புதான்.

**வேலாயுதபிள்ளை கனகராசா**

மைத்துனர்

சுவிஸ்

# மரணம் வரை மறக்க முடியாத உறவு கௌரி சங்கரி

ஒருவரைப் பிரிந்த பின்னர்தான் அவருடைய அன்பும் அரவணைப்பும் நமக்குத் தெரியும். அதுவரைக்கும் நாம் பெரிதாக அதைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் இருக்கும் போதே தனது இணக்கத்தை மற்றவர்கள் தெளிவாக உணரும்படி செய்வதில் சகோதரி கௌரி தனித்துவமாகத் தெரிந்தார். ரத்னபுரி ராஜா ஸ்டோர்ஸ் வேலாயுதபிள்ளை என்றால் தெரியாதவர்களே இல்லை. அப்படிப்பட்ட வேலாயுத பிள்ளையின் குடும்பத்தில் வாழ்வதற்காகக் கண்டியிலிருந்து சென்றவள் நான். அது போலவே கௌரியும் அந்தக் குடும்பத்தில் வாழ்வதற்காக வந்தவர். அந்த ஒன்றே எங்களுக்கிடையில் உன்னதமான நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. குடும்பத்தில் இணக்கத்தை ஏற்படுத்தி எல்லாரையும் அன்பினால் கட்டிப்போடும் இயல்பு கௌரிக்கு எப்படி வாய்த்ததோ தெரியவில்லை. மிகையாக எதையும் வலிந்து செய்யாதவர் கௌரி. அவர் எப்போதும் தனது இயல்புகளுடனேயே இருந்தார். அந்த இயல்புகளில் இருந்துதான் அவர் தனித்துவமாகத் தெரிந்தார்.

எனது கணவர் லண்டனுக்குச் சென்றுவிட்டார். நானும் அங்கு செல்வதற்கு சில வருடங்கள் பிடித்தன. அக்காலப்பகுதியில் நான் அதிகமாக கௌரியுடன்தான் இருந்தேன். தன்னுடைய உடன்பிறந்த ஒரு சகோதரியை எப்படி உபசரிப்பாரோ அப்படி என்னை அரவணைத்துக் கொண்டார். ஒரு நாள் கூட அவரது அன்பில் மாற்றம் காண முடியாது. நான் அவருடன் இருந்த அத்தனை வருடங்களும் இன்னும் பசுமையாக நினைவில் இருக்கின்றது. நாட்டுக்கு நான் வந்தால் முதலாவது சந்திக்க விரும்புவது கௌரியைத்தான். காரணம் அப்படியொரு நெருக்கத்தை ஒரே குடும்பத்து உறவாக சகோதரியாக அவர் எம்மில் ஆழமாகப் பதித்துவிடும் அடையாளம் என்றும் மாறாதது.

குடும் உறவுகளைப் பேணுவதில் கௌரியை மிகைக்க யாராலும் முடியாது. தனது உறவுகள் தன்னை எப்படிப் பார்க்கின்றார்கள் என்பதைத் தாண்டி தன்னால் அவர்களை எப்படியெல்லாம் பார்க்க முடியும் என்று அக்கறை கொள்பவர். அந்த அக்கறையை முழுக் குடும்பமும் இறுதிக்கணம் வரை அனுபவித்தது. இனி கௌரியை மறக்காமல் இருப்பது ஒன்றுதான் அவரது அன்புக்கு நாம் செய்யக்கூடிய ஒரேயொரு கைமாறு.

**சாந்தி லோகராஜா**

சகோதரி

லண்டன்

# அண்ணியிடமிருந்துதான் வாழ்வைக் கற்றுக்கொள்ள முடியும்

1981 இல் ஏற்பட்ட கலவர சூழலில் இரத்தினபுரியில் இருந்த சொத்துகள் தீ மூட்டி எரிக்கப்பட்டதனால் அனைத்தையும் இழந்து நானும் அப்பாவும் கொழும்புக்கு வந்து சேர்ந்தோம் அதிலிருந்து நான் சுவிட்சர்லாந்து செல்லும் வரை எனக்குப் பாதுகாப்பாகவும் பக்க பலமாகவும் இருந்தது அண்ணன் தவாவும் அண்ணி கௌரியும்தான். மீண்டும் 1983ஆம் ஆண்டிலும் ஒரு மோசமான இனக் கலவரத்தைச் சந்திக்கும் போது நம்பிக்கை மொத்தமாக இல்லாது போய் இருந்தது. அப்போது நம்பிக்கையும் தெம்பும் அளித்தவர் அண்ணிதான்.

பிரச்சினைகளில் துவண்டு போகாமல் பிரச்சினைகளின் போது அதிலிருந்து எப்படி மீள்வது என்பது குறித்தே அண்ணி எப்போதும் சிந்திப்பார் என்பதை அக்கலவர சூழலில்தான் விளங்கிக்கொள்ள முடிந்தது. எப்போதும் நேர்மறையாகச் சிந்திக்கும் அவரது பண்புதான் மிகப் பெரிய பலமாக இருந்தது. அவர் சட்டத்தரணியாகச் செயற்பட்ட காலம் முழுவதும் இந்தப் பண்பை மற்றவர்களிலும் விதைத்தார். மற்றவர்களுக்காக தம்மை அர்ப்பணிப்பது எப்படி என்பதை அண்ணியிடமிருந்துதான் கற்றுக்கொள்ள முடியும். அதனால்தான் எப்போதும் அண்ணியின் பக்கமே சாந்திருந்தேன். அவரிடமிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய அல்லது கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கையின் அர்த்தம் பொதிந்த பாடங்கள் பல இருக்கின்றன. அவற்றை அண்ணி போதிக்கவில்லை வாழ்ந்து காட்டினார். நடைமுறையில் செயல்படுத்தி நமக்குள் பாதிப்பை உண்டு பண்ணினார். அதுதான் அவருடைய சிறப்பம்சம்.

நாங்கள் நாட்டுக்கு வரும்போதெல்லாம் தங்கும் ஒரே இடம் அண்ணி இருக்கும் இடந்தான். அண்ணனின் அமைதிக்கும் ஆளுமைக்கும் ஏற்ற ஆழமும் பக்குவமும் நிறைந்த ஒரு இணையற்ற துணையாக அவர் இருந்தார். ஒருபோதும் குடும்பத்துக்குள் அவரால் எந்தக் குழப்பமும் விளைந்ததில்லை. குடும்ப உறவுகளை அவர் அன்பினால் கட்டிப்போட்டிருந்தார். அந்தக் கட்டு ஒரு காலமும் அவிழ்ந்துவிடவில்லை. ஏனெனில் அது உண்மையான பாசத்தினால் போடப்பட்ட நிலையான கட்டு அதனால்தான் அண்ணியின் பிரிவு இந்தளவுக்கு எம்மைப் பாதித்தது. அண்ணியின் பிரிவினால் விளைந்த இடைவெளி தமிழ் சமூகத்துக்கும் சட்டத்துறைக்குள்ளும் மட்டுமல்ல எமது குடும்பத்துக்குள்ளும் இனி நிரப்பப்படாமல் அப்படியேதான் இருக்கும்.

**வேலாயுத பிள்ளை யோகராசா**
மைத்துனர்
சுவிட்சர்லாந்து

## அவரின் தைரியம் ஆச்சரியப்பட வைக்கும்

நான் மிகவும் சிறுவனாக இருந்த காலத்திலே சங்கி சித்தியுடன் இருந்தேன். அவரின் தைரியம் ஆச்சரியப்பட வைக்கும். என் வாழ்வின் புது அத்தியாயத்தை அவரே துவக்கி வைத்தார். இன்று நான் மனைவி மக்களுடன் மிகச் சிறப்பாக வாழ வழியமைத்தவர் அவர்தான். அவரது தைரியத்தை துனிச்சலையும் இப்போது என் மகளில் காண்கின்றேன்.

அன்பு மகன்

**கரன்**

பிரான்ஸ்

## வழிகாட்டியாக விளங்கிய நட்சத்திரம்

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். எனது அம்மா சுகவீனமுற்றிருந்தபோது தாமாகவே முன் வந்து யாழ் வைத்தியசாலையில் எனது துணைவியாருக்கு மாற்றுத் துணையாக நின்ற கௌரிசங்கரி பின்னர் பாதிப்புற்ற பலருக்கு சட்டத்துறையில் உதவிய ஒரு நட்சத்திரம். யேசு பிறந்த போது வழிகாட்டியாக விளங்கியது நட்சத்திரமே. அந்த வழிகாட்டி இன்று இல்லை. அன்றே துடுக்குடனும் மிடுக்குடனும் கர்சித்தது இன்றும் காதுக்குள் ஒலியாக மட்டுமே உள்ளது. என் செய்வோம். அவரது ஆன்ம சாந்தியாக வேண்டும்

**சிறிமாமா ஞானம் அக்கா**

# எமக்குள் தாக்கங்களை ஏற்படுத்தினார்

எனது வாழ்வில் நான் விரும்பி ரசித்த இரு இரும்புப் பெண்களில் ஒருவர் மறைந்த தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா. மற்றைய ஒருவர் கௌரிசங்கரி தவராசா. அவர் எனது சிறிய தாயாக அமைந்தது எனது பாக்கியம் என்றே கூறுவேன். எனது சிறு பிராயத்தில் அவர் கொழும்பிலிருந்து விடுமுறைக்கு வீட்டுக்கு வருவதைப் பலமுறை கண்டிருக்கிறேன். அவர் வரும் வேளை நானும் எனது தம்பி ஹரனும் ஓடிப்போய் வாசலில் நிற்போம்.

அவர் காரிலிருந்து இறங்கும்போது அவருடைய அந்த நீண்ட கூந்தலும் தாவணியை நீளமாக விட்டுப் புடவை அணிந்திருக்கும் அழகும் காலில் கொலுசு அணிந்து இசையோடு அது அசையும் ஓசையும் நெஞ்சை அள்ளும். பார்ப்பதற்கு ஒரு சினிமா நட்சத்திரம் போலவே காட்சி அளிப்பார். அவர் எம்மை நெருங்கி வந்து தன்னுடைய அழகிய அகன்ற விழிகளை அசைத்து இனிமையாகவும் அன்பாகவும் பேசும்போது ஒரு தேவதை போலவே தோன்றுவார்.

மிகச்சிறந்த ஆளுமையான சித்தி பலவழிகளிலும் எமக்குள் தாக்கங்களை ஏற்படுத்தினார். அவர் ஒரு வகையில் எமக்கு நல்ல வழிகாட்டியாகவும் விளங்கினார்.

பின்னர் நான் ஜெர்மனியில் நடன ஆசிரியராக இருந்தபோது இவரை போலவே நீண்ட கூந்தல், புடவை அணியும் விதம் என எல்லாவற்றிலும் சித்தியைப் பின்பற்றினேன்.

எனது அழகான சித்தி என்றும் என் மனதில் நீங்காது வாழ்வார். அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**சுகன்யா**

கனடா

## Your heartfelt laugh will be missed

*Whenever we saw each other, we felt how much love you had to give. You did everything possible to read our every wish from our eyes.*

*Even when we were talking in German, you picked up single words and instantly set every wheel in motion to make us happy.*

*Especially in tough times you always took care of us and we are sure you will continue to do so.*
*Auntie, you and your heartfelt laugh will be missed.*

*Loving Children*
***Franziska and Daniel***
*Germany*

## We were always the centre of her attention

*Much and more has been said about my aunty since she passed last week. How she was an incredible lawyer and humanitarian. But to me she was just my aunty. She was kind, she was funny, and she adored my sister and me. Whenever we were with her, in Sri Lanka, England, Monaco or Canada we were always the centre of her attention. She was tireless in her efforts as woman devoted to her career and as a loving aunty. An aunty who would happily spend her time with her 6 year old nephew singing some childish song and at the next minute be dealing with complex legal matters. I will miss her more than I can say. Her warmth and her love has stayed with me all my life, and it breaks my heart that I will never get to hear her laugh again. She's now gone where none of the problems of the world can hurt her. I hope that wherever she is she can rest.*

***Kapilan Nandakumar** UK*

## How can I put into words

*How can I put into words the profound and complex emotions that I feel. How can I sum up a life so epic and grand.*

*I can only try by grasping the small seemingly insignificant moments thay fill my heart with joy and my eyes with tears. Her warm greeting smile radiating from within whenever she saw me. The way she threw her head back as she laughed, eyes creasing and watering. It was a laugh that sounded like a cascade of windchimes. Embraces so warm and safe like the inside of a cocoon whenever I needed comfort. Hands that were strong but so delicate and gentle as she washed and combed my hair. A mind and demeanour so wise and solid like an oak tree, that taught me so much about how to navigate through the world.*

*A heart bursting with kindness and compassion that showed me what to value the most in life- love for others and leaving the world a better place than it was when you entered it. There are many great things she has done for me and many others. Amazing trips, gifts and experiences. But within all of these are those moments full of purity, nurturing and joy that fill my lungs with air and flow through me like water.*

***Abbey Nandakumar*** UK

## My Dearest Madam,



*You were rendering yeoman service to the people of Sri Lanka and you left this world suddenly on 23. 08. 2021.*

*I have been serving you since 2006. I have been assigned the Court work. You helped not only to me but also to all of the people who came to you. Your sudden demise shocked me a lot.*

*Your sudden demise is a great loss not only to me but also to the people of this country. You helped everybody without any discrimination.*

*I cannot bear your loss Madam.*

*I pray for Nibbana.*
***Chandra Wickramaratne***

## உங்கள் புகழ் உலகளாவியது

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர் அதற்கிணங்க நான் அவரைப் பார்த்த முதல் கணமே எனக்கு அவரைப் பிடித்துப் போனது. இவ்வளவு பெரிய சாதனை செய்யினும் அவர் முகத்தில் ஒரு துளி பெருமையையும் கண்டதில்லை. எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். என்னைப் பெண் பார்ப்பதற்கு என வீட்டாரைத் தன் மாளிகைக்கு வரும்படி அழைப்பு தந்திருந்தார்.

எனது அம்மாவுடன் என் இரண்டு அண்ணன்மார்கள் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தோம். அப்போது எம்மை கவனித்த விதம் கண்டு திகைத்தேன். அவரின் ஆசீர்வாதத்துடனும் உடன்பாட்டோடும் என் திருமணம் நடந்தேறியது.

உறவுகளைக் கவனிப்பதில் அவர் ஈடுபாடுகாட்டும் விதம் ஆச்சரியப்பட வைக்கும். அவர் பிள்ளைகளைக் கொஞ்சும் விதமே மனதைக் கொள்ளை கொள்ளும்.

அவரை இரும்புப் பெண்மணி எனப் பத்திரிகைகளும் ஊடகங்களும் புகழ்மாலை பாட அவரது சகோதரிகள் "உம்மால் எமக்கு எவ்வளவு பெருமையடி" என்று தலையில் தூ க்கிவைத்துக் கொண்டாட அவர் ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்தார்.

இலங்கையின் இரும்புப் பெண்மணி உங்கள் புகழ் உலகளாவியது உங்களுக்காகவே உலகமே அழுகிறது.

மருமகள்

**நிதர்சனா பிரான்ஸ்**

# வரலாறு கூறும் உங்கள் வாழ்க்கை

வரலாறு கூறும் உங்கள் வாழ்க்கையிலே
வசந்தங்கள் வீசியதை நாம் அறிவோம்
பிரபலமான சட்டவாளராக இலங்கையிலே
பேசிவந்த காலங்களையும் நாம் அறிவோம்

அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
அரவணைத்து உதவியதும் நாம் அறிவோம்
சிறிய தாயாக இருந்து எமக்கு
செய்துவிட்ட உதவிகளையும் நாம் மறவோம்

கொரோனா என்ற கொடிய தொருவைரஸ் - உலகில்
கோடி கோடியாக மனித உயிரைப்பலி எடுக்க
சின்னம்மாவின் உயிரும் கொரோனாவுக்குள்
சிக்கித்தான் எம்மை விட்டுப்பிரிந்ததுவே

பட்டமரம் ஒரு போதும் தளிர்ப்பதில்லை
பகல்வாணர் திசை மாறி உதிப்பதில்லை
விட்ட இலை மரத்தை வந்து சேர்வதில்லை
விதியாரையும் விட்டு மட்டும் வைத்ததில்லை

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதியானாலும்
மறைந்த எங்கள் சின்னம்மாவை
கோடி ஆண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ எங்கள் இதயம் உங்களை

**செந்தில்ராஜா குடும்பம்**
*France*

# ஆருயிர் நண்பிக்கு!!

பள்ளிக்கூட சினேகிதியே
பாதியிலே சென்றது ஏன் -

ஐம்பது வருடங்கள் அன்போடு பழகிவந்தோம்
குடும்பங்கள் வந்தபின்பும் நம் சினேகிதம் குறையவில்லை
என் குடும்பம் உன் குடும்பம் வேருரிபார்த்ததில்லை
என் பிள்ளைகள் எப்போதும் உன் பிள்ளைகள் தானன்றோ
கண்ணுறங்கும் போதிலுமே - உன் கனிந்த முகம் தெரியுதம்மா
மண்ணைவிட்டு உன்னையுமே காலனவன் பிரித்துவிட்டான்.

என்னதான் பிரிந்தாலும் - உன்னை
இம்மையில் மறப்பேனோ
என் கண்மூடும் வேளைவரை - உன் நினைவுடன் இருப்பேனே

பழகிய நாட்கள் எல்லாம் நினைத்துப் பார்க்கின்றேன்
அழகிய தருணங்களை அசைபோட்டுப் பார்க்கின்றேன்

உன்னைப் பிரிந்து தவிக்கின்ற அண்ணனுக்கு என்ன செய்வேன்
என்னவென்று நான் சொல்லி ஆறுதல் அடையு வைப்பேன்

கடைசி நேரத்திலும் - உன் கனிந்த முகம் பாராமல்
நொந்து நின்றேன் நித்தமும்தான்.
பிழாவளையான் பாதத்தை பணிந்து நிற்கும்

பால்ய சிநேகிதி
**மலர் இராமநாதன்**

## A Tribute to Aunty Gowry

*I had known Aunty Gowry since I was little. Aunty Gowry was a kind, humble and a very generous person who was loved by many.*

*When I go down the memory lane, I remember how she looked after me when I was suffering from chicken pox. When she had got to know that I was ill, aunty and uncle immediately visited me with food and other medicinal herbs. She even bought me new clothes, which I think was an attempt to comfort the sick little me. In a world where nobody would even visit a person who is suffering from an infectious disease, aunty Gowry visited me and even cared for me. As an adult, when I recollect this incident, I feel that she is a Goddess in disguise.*

*Several years later when I joined her chambers as an intern (for a very short period) I noticed how hard working and committed she was at work. She was a mother and a friend to her juniors as well as her fellow lawyers.*

*She was a role model to me. Her kindness, generosity as well as her commitment to work has groomed me to who I am today.*

*Aunty Gowry, thank you for everything that you have done for me and to everyone whom you knew and associated. Though death had parted you from us, you will always be loved and remembered.*

*I can never forget you*
*I can never forget your smile*
*I can never forget your beauty*
*I can never forget your kindness*
*I can never forget you*

*Even though, death has taken you,*
*I remember you today*
*I will remember you tomorrow*
*I always will.*

***Minoli Ratnayake***
*Attorney-At-Law*

# சட்டத்துறையின் சரித்திர நாயகிக்கு ஒரு புகழஞ்சலி



சட்டத்துறையின் சரித்திர நாயகியே
உம் சாதனைகள் பார்புகழும் அம்மா
சட்டவாட்சி இருள் கொள்ளும் போது
நீதிக்கான உம் போர்வாளின் ஓசை
எங்கணும் எதிரொலித்தது
சாமர்த்தியமும் சாதுரியமும்
உங்கள் சாதனைகளில் வாயிலில்
சாதனைப்பெண் ஜோதியாய்

உங்கள் நாமம் நிலைபெற்றாயிற்று
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
ஆன்றோரும் சான்றோரும் போற்றும்படி
ஆரம்ப நீதிமன்று முதல் உச்சநீதி மன்று வரை
ஆளுமையின் பெருவிம்பமாய்ப் படிந்தீரே தாயே...
கடமை தவறாத கண்ணியம் உம் பாதை எங்கணும் பட்டு விரிக்க
உம் கம்பீரக் குரல் கணீர் என ஒலித்தது காலம் முழுதும்.
உம் வழக்குகளின் செம்மையும் கோப்புகளின் நேர்த்தியும்
காலாதி காலமாய் வெள்ளிக்கோடாய் ஒளிரும்.

இணையில்லா இலக்கியப் பிரியராய்
இன்முகம் மலரும் இன்சொல் பேசியே
இயன்றவரை இரப்போர்க்குதவி
இனிதான இல்லத்தரசியாய் எழில் பெற்று
இன்னா செய்தாரை ஒறுத்து இனிதாய் நன்னயம் செய்து
இலட்சியங்கொள் முன்மாதிரியான சரித்திரமானீர்.

அர்ப்பணிப்பைத் தாரக மந்திரமாக
அனைத்தின மக்களுக்காய் அந்தம்வரை
வழக்குகளுக்காய் வாழ்வை அர்ப்பணித்து
அகிலம் போற்றும் நீதியின் தேவதை வடிவாய் நீங்கள்...
அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரமங்கை உம்மிடம்
அருகிலிருந்து நாம் கற்றநுணுக்கங்கள் பல
எமைப் புடம்போட நீங்கள் கையாண்ட வழிமுறைகளே வடிவு
உம் நினைவுகளை என் நெஞ்சிலிருத்தியபடி

**தர்மராஜா தர்மஜா**
கனிஷ்ட சட்டத்தரணி

# என் குரு தேவதைக்கு..



அகிலம் சூழ் கொண்ட
ஆற்றொணா பிணியால்
இமைக்கும் நொடியில்
இறையடி தழுவிக் கொண்டீர்
ஈன்ற பொழுதினும் உவந்து போயினர்
உம்மை ஈன்றோர்..
ஊர் புகழும் சேவையால்,
எம்மாலும் இயலவில்லை
ஏற்றத்தின் விளிம்பில் நீர் நின்ற போதும்
ஐயம் சிறிதுமின்றி,
ஒழுக்கத்தின் விளைநிலமாய்
ஓங்கி நின்ற உம் நடத்தை,
ஓராண்டு கடந்து மட்டுமல்ல
நீதி தேவதையின் கரங்களுக்கு
வலு சேர்த்த உன் பணி
ஆண்டாண்டு காலம் வாழும் .
ஆறுதலோ அஞ்சலியோ
உம்மிடத்தை எம் மனங்களில் அத்தனை சுலபமாய்
நிரப்பிட இயலாது போயினும் நீதியுள்ள வரை
நின் புகழ் வாழும் என்பது திண்ணம்.

நீர் விதைத்த விதைகளில் துளிர்விட்டவளாய் இன்று நான்...

**பிருந்தா சந்திரகேஷ்**
கனிஷ்ட சட்டத்தரணி

## Au Revoir Gowry Nenda



*There exists an assemblage of people who are determined to make this world a better place for the rest of us just because it's the right thing to do. If one sentence can paint a picture of who Gowry nenda was, it'd be that. My recollections of that almighty bang down the hallway of our home in September of 2008 are quite shallow, possibly because I was only three, but one thing I do remember is that a friendly face showed up at our door early next morning and took us to a safe place. That face was hers and this was the only first of many, many more instances where that friendly face showed up, bringing with it the kindest and most compassionate heart one could dream of and a helping hand at the first sign of a day gone wrong. We'd often find ourselves itinerant with her and her family. She was always glad to join us and would regularly invite us to join her as well. She added emphatically to the enjoyable experiences that were so profuse during those retreats by means of her bubbly and sociable personality. We'd often go to see her at her place and we were greeted every time to a warm hug from her and a table full of the most appetizing food in the world - her signature Jaffna Chicken Curry was my favorite. She'd also come by our place quite often and never did she show up empty handed. Giving was in her blood. I'm not qualified to speak to her standing in her profession, but from what I saw and heard she was as genuine as advocates for justice get. She didn't see class or race or the other things that tend to so often divide Sri Lankans - she only saw the human in them and the injustices they faced. I could go on about the time we had together but this serves as a rationale to why I was as delighted and excited as I was, every time I was told that we were going to see her and it is why I will always, for all time cherish the delightful experiences and memories we shared together I'm still in shock and misery at the utterly undeserved and depressing turn of events of August 23. To her I say thank you, thank you for your unconditional love and care for both me and my brother Maanikya - Podda. You represent the best of humanity. May your Soul Rest in Peace.*

***Chithmina Weliamuna***

# மனித உரிமைகளுக்காக ஒலித்த குரல் மௌனித்தது



எமது இனிய நண்பரும் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசாவின் பாரியாரான கௌரிசங்கரி தவராசா அவர்கள் இயற்கை எய்தியமை முழு ஈழத்தமிழர்களுக்கு பேரிழப்பாகும். பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகாலச்சட்டம் என்ற பெயரில் நூற்றுக்கணக்கில் எமது இளைஞர்கள் யுவதிகள் கைது செய்யப்பட்ட பொழுது இரவு பகல் பாராது அவர்களின் வழக்குகளை எடுத்து வாதாடுவதற்காக நேர்மையாகக் கடமையாற்றிய ஒரு சட்டத்தரணி. தமிழ்ச் சமூகம் மத்தியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு வாதாடிய பிரபல சட்டத்தரணி மாத்திரமல்ல அவரது கணவர் தவராசா மற்றும் ஏனைய சட்டத்தரணிகளின் உதவியுடன் அவர்களை விடுவித்தார். பல்வேறு சிறைச்சாலைகளுக்கும் சென்று அரசியல் கைதிகளின் தேவைகளை, பிரச்சினைகளை அறிந்து வந்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதில் முன்நின்று உழைத்தவர். மனித உரிமைகள், பெண் விடுதலை போன்ற விடயங்களில் மாத்திரமன்றி தமிழ் மக்களின் அரசியல் விடுதலை தொடர்பாகவும் ஆழமான அறிவு கொண்டவர். அவரது கணவரின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருந்தவர். யாரும் எப்பொழுதும் அணுகக்கூடிய வகையில் எளிமையாக வாழ்ந்தவர். அத்தகைய ஒருவர் எம்மை விட்டு நீங்கியமை அவரது குடும்பத்துக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் ஒரு இழப்பாகும். திருமதி கௌரி சங்கரி தவராசாவின் ஆத்மார்த்தமான பணிகள் என்பது தமிழ் மக்கள் மத்தியில் நீண்ட காலம் வாழும்.

**சுரேஸ் பிரேமச்சந்திரன்**

தலைவர் - ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி

# தமிழ்தேசிய அரசியத்துக்காக பல வழக்குகளை வாதாடி வென்ற சிரேஷ்ட வழக்கறிஞர் அமரர் கௌரி சங்கர் தவராசா!



நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த 2004, ம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு கிழக்கை சேர்ந்த 22, பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்போது இருந்தோம்.

2008இல் ஜேர்மனியில் புலம்பெயர் உறவுகளால் பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்றது அதில் என்னை இலங்கையில் இருந்து அழைத்திருந்தனர் இந்த விழாவில் நான் உரையாற்றிய விடயத்தை அப்படியே வீடியோ (Video) எடுத்து இலங்கை புலனாய்வாளர்களுக்கு யாரோ ஒருவர் அனுப்பி இருந்தார்.

நான் இலங்கைக்கு திரும்பியபோது 2008, நவம்பர்,18, ம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவில் 4ஆம் மாடியில் சுமார் எட்டு மணித்தியாலங்கள் நான் ஜேர்மனியில் உரையாற்றிய பேச்சை அப்படியே இணைந்தளத்தில் ஒளிபரப்பி வரிக்கு வரி நான் பேசியதன் விளக்கத்தை கேட்டு வாக்குமூலம் பெற்றனர்.

இதன் பின்னர் எனக்கு எதிராக 2008 டிசம்பர் 05இல் எனக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு எதிராக பிறிதொரு அரசை நிர்மாணிப்பதற்காக பிரசாரம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. நான் 2008 டிசம்பர் 07ஆம் திகதி இந்தியாவில் தமிழ்நாட்டில் ஒரு ஆலய வழிபாட்டுக்காக செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்றபோது விமான நிலையம்தில் வழிமறித்து என்னை திருப்பி அனுப்பினர்.

இந்த விடயம் தொடர்பாக நானும் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தங்கேஷ்வரி, செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் வழக்கறிஞர் கே.வி.தவராச அவரின் பாரியார் கடந்த 2021ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 23இல் இறையடி சேர்ந்த அமரர் கௌரி சங்கர் தவராசா அவர்களின் இல்லத்திற்கு சென்று விபரங்களை கூறினோம்.

எந்த தடைகளும் இன்றி முகமலர்சியுடன் இந்த வழக்கை தாம் ஏற்று நடத்துவதாகவும், தைரியமாக இருக்குமாறும், ஜேர்மனியில் நான் பேசிய ஒளி வடிவத்தை எடுத்து தருமாறும் கூறினார். நான் ஒருவாரத்தால் அந்த வீடியோவை (Video) எடுத்து கொடுத்தேன். பின்னர் அந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரண்டு தவணையுடன் வழக்கு எமக்கு சாதகமாக 2009, ஜனவரியில் தீர்ப்பு வழங்கப்பட்டது, வழக்கு தீர்ப்பு கிடைத்து மறுநாள் நானும் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

சிவநாதன் கிஷோர், தங்கேஷ்வரி ஆகிய ஆறுபேரும் அவரின் இல்லத்திற்குச்சென்று நன்றியறிதலை கூறிய பின்னர் மாவை வழக்கறிஞர் தவராசாவையும், அவரின் துணைவியார் கௌரி சங்கரையும் தனியாக அழைத்து இரகசியமாக வழக்குக்குக்கான செலவுகள் தரவந்துள்ளோம் என கேட்டார். உடனே வழக்கறிஞர் கௌரி சங்கர் மற்றும் கணவர் தவராசா இருவரும் சத்தம்போட்டுக்கொண்டு வெளியில் வந்து கைகளை கூப்பி வணங்கி எந்தப்பணமும் எமக்கு தரவேண்டாம் இது தமிழ்தேசியத்திற்காக நாங்கள் செய்கின்ற பணி எனக்கூறி எம்மை திருப்பி அனுப்பினர்.

அது எனது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்று அந்த வழக்கில் நான் விடுதலை பெறாமல் இருந்திருப்பின் வெளிநாட்டு தடைமட்டுமல்ல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக தண்டனைகளையும் சிலவேளை பெற்றிருப்பேன். எமது வழக்கு மட்டுமல்ல என்னைப்போன்ற பலரின் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் பலதை பணம் பெறாமல் வழக்கறிஞர் அமரர் கௌரி சங்கர் தவராசா வாதாடி விடுதலைகளை பெற்றுக்கொடுத்தவர் என்பது பலருக்கு தெரியும்.

இலங்கை தமிழரசு கட்சி கொழும்பு கிளை தலைவராக வழக்கறிஞர் கே.வி.தவராசா அவர்கள் இன்றுவரை எந்த தளம்பலும் இல்லாமல் தமிழ்தேசிய கொள்கைக்காக பணிபுரிந்து கொண்டுள்ளார். ஒரு தடவை இலங்கை தமிழரசு கட்சி மத்திய குழுக்கூட்டம் கொழும்பில் அவரின் இல்லத்தில் இடம்பெற்றபோது அவரின் துணைவியார் அமரர் கௌரி சங்கர் தவராசா அவர்களும் மதியபோசன உணவுகளை அவரின் இல்லத்தில் கலந்துகொண்ட 60, மத்திய குழு உறுப்பினர்களையும் வரவேற்று உபசரித்த அந்த நாளை மறக்கமுடியாது.

மனிதனின் இறப்பு என்பது எப்போது எவ்வாறு இடம்பெறும் என்பது எவருக்குமே தெரியாது 65, வயதில் ஆளுமையுடன், சட்டத்துறையில் சாதனை படைத்து எமைவிட்டு பிரிந்த செய்தி என்றும் எமைவிட்டு நீங்காது.

அன்னார் எமைவிட்டு பிரிந்து ஒருவருடமாகிறது இன்னும் அந்த பிரிவுத்துயரை தாங்காமல் வேதனையுடன் வாழும் அன்னாரின் அன்புக்கணவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா அவர்களுக்கும் அவரின் குடும்ப உறுவுகளுக்கும் எல்லாம் வல்ல இறைவன் மனச்சோர்வை நீக்கி ஒளிமயமான வாழ்வை தர பிரார்திப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் இறைவனை வேண்டுகிறோம்.

**பா. அரியநேத்திரன்** மு.பா.உ,

இலங்கை தமிழரசு கட்சி ஊடகச்செயலாளரும், மத்திய குழு உறுப்பினரும்,
பட்டிருப்பு தொகுதி தலைவரும்

# பலரின் விடுதலைக்கு காரணமான கௌரி சங்கரி தவராசா



பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளில் மூத்த சட்டத்தரணிகள் முன்னிலையாகப் பயந்த காலங்களில் துணிச்சலாகக் களமிறங்கி பலரின் விடுதலையை சாத்தியமாக்கியதுடன் தொடர்ந்தும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் காரணமாயிருந்தவர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா. நாட்டில் அதிகம் பேசப்படும் பல வழக்குகளில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா முந்நிலை ஆகியிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளுக்காக வாழ்நாள் முழுவதும் போராடியவராகவும் மறைந்த கௌரி சங்கரி போற்றப்படுகிறார். பல வழக்குகளை எதிர்கொண்டு புகழ்பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணி மட்டுமல்ல தலைசிறந்த மனித உரிமைச் செயற்பாட்டாளருமாவார். அத்துடன் தமிழ்த் தேசியத்தின் பால் அதீத பற்றுக் கொண்டவர் 1983களின் பின்னரான கால கட்டத்தில் எதுவித குற்றமும் அறியாத பல தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட போது தன்னலம் கருதாது தாமாக முன்வந்து பல தமிழ் இளைஞர்களைக் காப்பாற்றியவர். நாட்டின் முக்கியமான வழக்குகளிலும் சர்வதேச அளவில் பேசப்படும் வழக்குகளிலும் கௌரி சங்கரி தவராசா முன்னிலை ஆகியிருந்தார். அதுமட்டுமல்ல எமது உதயன் பத்திரிகை நிறுவனம் மீது அதிகார வர்க்கத்தினர் திட்டமிட்டு பொய் வழக்குகள் பலவற்றைத் தாக்கல் செய்தபோது அதைச் சட்டரீதியாக எதிர்கொண்டவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவும் அவரது பாரியார் கௌரி சங்கரி தவராசாவும்தான். இச்சட்டத்தரணி தவராசா தம்பதியர் பல சவால்களுக்கு முகம் கொடுத்து நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளிலிருந்து உதயம் நிறுவனம் விடுபட பேருதவி புரிந்துள்ளனர்.

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயம் குழுமத் தலைவர்.

# கௌரியின் சட்ட ஆளுமை...



கௌரியின் சட்ட ஆளுமையின் பெறுபேறுகள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டனவா என்ற கேள்வி கேட்கும் காணொளியை இப்போதான் பார்த்தேன். அவரது வாழ்க்கை வரலாறாக அமைந்திருந்த மற்றய காணொளியை நான் ஏற்கனவே பார்த்திருந்தேன்.

நான் முதலாவதாகக் குறிப்பிட்டுள்ள காணொளி பலவேறு விதமான ஆக்கபூர்வமான விமர்சனப் பார்வையை எமது கண்முன் விரித்துச் சென்றுள்ளது. இறுதியாக உலகமும் நாடும் பதில் சொல்ல வேண்டும் என்ற மிகவும் பெறுமதியான வேண்டுகோளுடன் நிறைவுற்றிருக்கிறது.

இத்தகைய பெறுமதி வாய்ந்த பெரும் பெண் ஆளுமையின் திறன் ஏன் அவர் உயிருடன் இருந்தபோது வெளிக்கொணரப்படவில்லை என்ற ஆதங்கம் என் மனத்துள்ளே இப்போது எழுகின்றது. உங்களுடன் இத்துணை நெருக்கமாக இருந்த நானே அவரை நான்க் தடவைகள் மட்டுமே சந்தித்திருக்கிறேன். அதிலும் ஒரு தடவை மட்டுமே கலந்துரையாடியிருக்கிறேன். பேசவும், பழகவும், கலந்துரையாடவும் ஏன் எனக்கு வாய்ப்பு கிட்டாதிருக்கிறது என்று அவர் வாழ்ந்த காலத்திலேயே நான் பல தடவைகள் அங்கலாய்த்திருக்கிறேன். இன்று அது கிட்டாமலே போய்விட்டதே என்று உளமார வருந்துகிறேன்.

இவற்றுக்கெல்லாம் காரணம் அவர் தன்னை முன்நிலைப்படுத்த அதாவது, பேச்சுவழக்கில் சொல்வதாயின்- தன்னைப் பற்றித் தம்பட்டம் அடிக்க விரும்பாதமையா? அல்லது தனது கணவரின் ஒளியை அது ஏதோ ஒரு வகையில் மங்கவைத்துவிடும் என்ற அன்பு மனைவியாக ஒரு நிலைப்பாட்டை எடுத்தமையா? இவற்றில் எதுவென்று தெளிவாகத் தீர்மானிக்க முடியாதவனாக இருக்கிறேன்.

ஒரு ஆளுமை மிக்க பெண்மணியாக தமிழ் மக்களிடையே அவர் வெளிப்படுத்தப்பட்டு பகிரங்கமாக எமது மக்களிடையே பாராட்டப்படாதமை ஏன் என்று எனக்குப் புரியவில்லை. சிறு சிறு சமூக காரியங்களைக்கூடப் பெரிதாகப் பாராட்டி மேடைகளில் ஏற்றிக் கௌரவப்படுத்தும் எமது சமூகம் எப்படி இவருக்கு உரிய கௌரவத்தை அவர் வாழ்ந்த நாட்களில் அளிக்கவில்லை? இதுதான் எமது சமூகம் ஜடமாக வாழ்கிறது என்பதற்கான சரியான மறுமொழி. சிறையிலிருந்து மீண்டவர்கள் எப்படி வெறுமனே ஜடமாக ஆக்கப்படுகிறார்கள் என்பதனை இந்தக் காணொளி விமர்சகர் தெளிவாக விளக்குகிறார். ஆனால் உண்மை எதுவென்றால் எமது சமூகம் சிறை செல்லாவிடினும் ஜடமாக வாழப் பழகிவிட்டார்கள் என்பதே நிதர்சனம்.

வாழ்ந்த நாளில் அவர் பல மேன்மைகளுக்குத் தகுதியானவராக இருந்தார். அது பகிரங்கமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லையென்ற ஆதங்கம் எமக்கு இருந்தாலும் அதுவே உண்மை. அது பற்றி இனிமேல் நாம் வருத்தமடைவதில் பயனில்லை. அவர் சமூகத்தில் எந்தளவு மேன்மையான இடத்தில் வைத்துப் பார்க்கப்பட்டார் என்பதை அவர் இறந்த பின்பே நாம் காண்கின்றோம். அதை வாழ்ந்த காலத்தில் கண்டுகளிக்க முடியவில்லையாயினும் அவரின் ஆன்மா நிச்சயமாக அறிந்து மகிழ்ச்சியடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர் விட்டுச்சென்றுள்ள பணிகள் பல உங்கள் வருகைக்காகக் காத்திருக்கின்றன. அவரது அத்தகைய பணிகளில் பல உங்களது பணிகளுடன் சேர்ந்த ஒரு வலைப்பின்னல் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரது பணிகளைத் தொடர்வதும், முடிப்பதும் உங்கள் கடமை. அவை உங்கள் ஆன்ம பலத்திலேயே தங்கியிருக்கின்றன. புதுப் பிறப்பொன்றை நீங்கள் எடுக்கவேண்டும். இதுவரையான உங்கள் வாழ்க்கையினின்றும் அது முற்றிலும் வேறுபட்ட- கௌரியின் ஆன்மா மெய்ச்சும் வாழ்க்கையாக அமையவேண்டும். அது உங்களுக்கும் மகிழ்ச்சிதரும், கடந்த காலம் வழிகாட்டி நிற்கும் அறவாழ்க்கையாக அமையவேண்டும். அதற்கான வல்லமையும், தென்பும், புத்துணர்வும், ஆன்மபலமும் உங்களுக்குக் கிட்டவேண்டும் என நான் உளமாரப் பிரார்த்திக்கின்றேன். இறைவனின் ஆசிர்வாதம் என்றும் உங்களுடன் இருக்கும்!

**சு. இரத்னவடிவேல்**

இலங்கை தமிழரசுக் கட்சி
(மத்திய குழு உறுப்பினர்)

# துணிச்சல் மிக்க பெண் சட்டத்தரணியை இழந்தது தமிழ் சமூகம்



என் வாழ்வில் மிகுந்த அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக அமரர் திருமதி கௌரி சங்கரி தவராசா அவர்களிடம் எனது சட்டத்தொழிலைப் பயில்வதற்கு எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை எனது வாழ்வில் நான் செய்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். நான் அவரது கனிஷ்ட சட்டத்தரணியாகச் சேவையாற்றிய காலத்தில் ஒரு தாய்க்கு நிகராக அவர் என்னில் கொண்டிருந்த அன்பையும் உரிமையுடன் என்னைக் கண்டித்த தருணங்களையும் எப்பொழுதுமே என்னால் மறக்க முடியாது. அறிவு, ஆற்றல், துணிச்சல், அன்பு, நற்பண்பு ஆகிய அனைத்துமே உள்ளடங்கிய ஒருவராக அவர் விளங்கினார்.

சட்டக் கல்வியை நிறைவு செய்து சட்டத் தொழில் பயிலுனர்களாக உதவி கேட்டு வரும் அனைவருக்கும் மறுப்பு தெரிவிக்காது சந்தர்ப்பத்தை வழங்கியும் வேறு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தியும் கொடுக்கும் அவரது உயர்ந்த நற்பண்பு எப்பொழுதுமே அவரின் சிறப்பைக் காட்டி நின்றது.

சட்டத்துறையில் பெரும் அநீதி இழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் அந்த அநீதிகளுக்கு எதிராகத் துணிச்சல்மிக்க பெண் சட்டத்தரணியாக முன்னால் நின்று போராடும் அவரது குணத்தை தற்போதும் யாருமே மறக்க மாட்டார்கள். இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக முன்னாள் பிரதம நீதியரசர் கௌரவ திருமதி சிராணி பண்டாரநாயக்க அவர்களின் சட்டத்துக்குப் புறம்பான முறையில் பதவி விலக்கப்பட்டமைக்கு எதிராகப் போராடிய விதம் அவரது துணிச்சலையும் இக்கட்டிலுள்ள ஒருவருக்கு உதவி செய்யும் மனப்பாங்கையும் எடுத்துக்காட்டியது.

விசேடமாக யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் சிறையில் வாடிய அரசியல் கைதிகளும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் யுவதிகள் மீது மிகுந்த அக்கறை கொண்ட ஒருவராகக் காணப்பட்டார். அவரின் வழிநடத்தலின் கீழ் பல அரசியல் கைதிகளை பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் சென்று அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆயிரக் கணக்கான அடிப்படை உரிமை மனுக்களை உயர் நீமன்றில் தாக்கல் செய்து அவர்களை விடுதலை செய்யும் கடைசி நாள் வரை அவர் தொழிலில் காட்டும் அக்கறையும் வேகமும் விடாமுயற்சியும் தற்பொழுதும் எனது கண்கள் முன் நிற்கின்றன.

வைத்தியர்கள், குருமார்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என அனைத்து வகை தொழிலில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட பலரை துணிச்சலுடன் நின்று வழக்காடி விடுதலை செய்த ஒரே பெண் சட்டத்தரணி இவர் தான் என்றால் அது மிகையாகாது. தனக்கு கீழ் பணிபுரியும் அனைத்து கனிஷ்ட சட்டத்தரணிகளும் விசேடமான அக்கறையையும் அன்பையும் கொண்டிருந்தார். அவர்களின் எதிர்காலத்துக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் உயர்ந்த உள்ளம் அவரிடம் இருந்தது. தொழிலில் இருந்த அக்கறைக்கு நிகரான அன்பையும் அக்கறையையும் தனது கணவரான ஜனாதிபதி சட்டத்தரணி திரு தவராசா அவர்கள் மீது வைத்திருந்தார். பல சந்தர்ப்பங்களில் பல மாதங்களாக நோய்வாய்ப்பட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த திரு தவராசா ஐயா அவர்களை வைத்தியசாலையில் அவருடன் கூடவே இருந்து பராமரித்து அன்பு காட்டிய விதம் அவர் தனது கணவரின் மீது வைத்திருந்த மிகையான அன்பை எடுத்துக் காட்டியது. அமரர் திருமதி கௌரி சங்கரி தவராசா அவர்கள் இன்று எம்முடன் இல்லை என்றபோதிலும் அவர் எங்கள் அனைவரதும் உள்ளத்தில் நிரந்தரமாகக் குடி இருக்கின்றார் என்பதுடன் அவரது நினைவுகள் எப்போதும் எமது மனங்களில் நிலைத்திருக்கும்.

**ச. ஆனல்ட் பிரியந்தன்**

சட்டத்தரணி

# வீர அன்னையின் வீழாப் புகழோடு

குற்றவியல் சட்டக்கோவை கண்ணீர் சிந்தியது
நீங்கள் நீதி மன்றம் செல்வதை நிறுத்திய போது
ஏமாற்றத்தில் எரிமலையாய் குமுறுகிறதெம் இதயம்
வெஞ்சமரில் வீழ்ந்து மடிந்தோம்
விதிவசத்தால் உறுப்பிழந்து மீதமானோம்
வீணர்களின் சூழ்ச்சியதால்
வெஞ்சிறையில் வீழ்ந்தோம்
இழப்பதற்கேதுமற்ற இடர்மிகு காலமது

அன்னை சங்கரி சதிகளின் சங்கறுத்து
நீதிக்காய்ப் போராட நாம் வாழ்வு மீண்டோம்
அவர்தம் திறமையின் பொருட்டாலே
கொடிய காலன் கொடுங்காலத்தில்
காவுகொண்டான் உங்களை அம்மா
நிலையற்ற மானுடவுடல் மறைந்திட
நிலைப்பெற்று நிற்கிறதும் நினைவுகள்
வீர அன்னையின் வீழாப் புகழோடு
இதயத்தின் ஆழத்தில்

**நா. சத்தியமூர்த்தி**
பிரதித் தலைவர்
தந்தை செல்வா நற்பணி மன்றம்.

# சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அர்ப்பணிப்புக்கள்

தாய் மண்ணில் பிறந்து
தலை நகரில் வாழ்நத் போதும் கூட - உன்
தளராத சேவை அனைத்தும்
தமிழ் மண் காப்பதறகே

தனித்து விடப்பட்ட
தாய் தந்தை இழநத்
தமர் பிறர் அறியாத
தனையன்களைக் காப்பதற்கு
இரவு பகலாக நீ செய்த சேவை
இரக்கமில்லா இறைவனுக்குத்
தாங்கவில்லை போலும்
உலகையே உலுக்கிய நோய்
உன்னையும் விட்டு வைக்கவில்லை
உற்றம் சுற்றம் உறவு சூழ்நது
போற்ற வேண்டிய உன்னை
எட்டி நின்று பார்தது
இமை மூடச் செய்ததுவே.

உன் பணிகள் அளவிட முடியாதவை
உன் சேவைக்கும் அர்ப்பணிப்புக்கும்
அழியாப் புகழ் நிலைத்து நிற்கும்.
உறுதுணையாகக் கணவனைக் கொண்டு
தன்னம்பிக்கையை உற்ற துணையாக்கி
“குற்றமற்றவர்கள் நம் தனையன்கள்”
எனறு வாதிட்ட உன் வலிமை -
வதைக்கும் உள்ளங்களை
மாளவிடாது தூக்கி நிறுத்தியது.

உன் நம்பிக்கையில் வாழ்ந்தவர்கள்-
ஊசலாடிய அவ்வுறவுகள்.

சட்டப்புத்தகத்தின் -
நெழிவு சுழிவுகளையும்
ஓட்டை ஒடிசல்களையும் தட்டிப் பார்த்து
பெற்றுக் கொண்ட தேடல்களில்
வெற்றி நடை போட வைத்தாய்

தரம் பார்த்து
பயங்கரவாத தடைச் சட்டங்களை
தள்ளி உடைத்து - நம் இளைஞர்களுக்கு
விடி வெள்ளியாகவிருந்த வழக்குரைஞர் - நீ
முக்கிய வழக்குகளில் முதல் நிலையில் நின்று
வாதிட்ட உன் திறத்தால்
சட்ட வல்லுனராகி
சட்டப் புத்தகங்களில் இடம் பிடித்தாய்!

சட்டத்துறைக்கு உன்பணி
அளப்பரியது.

மங்காப் புகழையும்
மழுங்காத அறிவையும்
உன் குடும்பத்திற்கும்
தாய் நாட்டிற்கும்
தாரை வார்த்து சென்று விட்டாய்.
உன் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.

**வே. இளஞ்செழியன்** (செழியன்)
குளோபள் பணிப்பாளர்

"பூம்புகார்"
கரவெட்டி கிழக்கு
கரவெட்டி

# சரித்திரம் படைத்த தமிழச்சி
# கௌரிசங்கரி தவராசா

1955 இல் யாழ் மாவட்டம் அளவெட்டியில் பிறந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டஇளமாணிப்பட்டம் பெற்று, சட்டக்கல்லூரியில் சட்டக்கல்வி பயின்று புங்குடுதீவை சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவை காதல் மணம் கொண்டு கொழும்பில் குடியேறி 2021 ஆகஸ்ட் 23 இறைவனடி சேர்ந்த அதியுன்னத சிறப்பு மிகு சட்டவல்லுநர் தமிழ் பெண்மணிதான் கௌரிசங்கரி தவராசா. 1987ம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி சட்டவாளராக நீதிமன்றம் ஏறிய இவர். 35 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் மாறி மாறிவந்த இரு பெரும்பான்மைக் கட்சி அரசுகளும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஆட்சிக் காலத்தை ஓட்டிய போது அந்த பெரும் தீச்சுவாலையினுள்ளே சுழியோடி வெற்றி கண்ட வரலாற்றுப் பதிவைச் சாதனையாக்கியவர். சட்டக்கல்லூரியில் இருந்து இணை சேர்ந்த கௌரிசங்கரியும் தவராசாவும் வாழ்வில் மட்டுமல்ல தொழில் ரீதியாகவும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்று அடிக்கடி நிரூபிப்பதும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சட்டத்துறையில் வருகின்ற சிக்கல்களை தீர்ப்பதிலும் வழிகாண்பதிலும் ஒட்டிக்கொண்டவர்கள்.

குமார் பொன்னம்பலம், ரவிராஜ் போன்ற இவர் வழி நின்ற சகசட்டவாளர்களை உயிர்ப்பலி வாங்கிய இனவாதக் காட்டுமிராண்டி அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தம்முயிரைத் துச்சமென எண்ணி இனத்துக்காக நீதிக்காக நித்தமும் நெஞ்சுரம் கொண்டு நீதிமன்றப் படிகளேறி தன்னினம் காத்த வீரத்தமிழச்சி இவர். கடந்த 35 வருட இலங்கை வரலாற்றில் பதிவான பரபரப்பான பேசப்பட்ட எந்த வழக்கை அலசிப்பார்த்தாலும் இவர்களது சட்டநுணுக்க தூக்கலும் வாதத்திறமை வழிகாட்டலுமே உயர்ந்து நிற்கும்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் வாடிய வாடிக் கொண்டிருக்கின்ற தமிழரின் அத்தனை வழக்குகளிலும் இவரும் துணைவருமாக உதவிய காலச்சுவடுகள் தான் படிந்திருக்கும், மொழி, மதம், இனம் என்ற வேறுபாடு கடந்து ஏழை பணக்காரன் வர்க்கபேதம் மறந்து, நீதி நியாயம் ஒன்றே மூச்சாகக் கொண்டு போராடி மீட்டவர்கள் இவர்கள். அரசியல் கைதிகள், ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகள் அரசியல் பழிவாங்கல் கைதிகள். நிதிமோசடி வழக்குகள் என அத்தனையையும் தனது சட்டமூளை கொண்டு தகர்த்தெறிந்து நீதி தேவதையை வாழ வைத்தவர். பலரின் ஏழ்மை நிலைகண்டு இலவசமாக ஆஜராகி வெற்றி பெற்றுக்கொடுத்து அவர்களது வாழ்வை மீட்டுக்கொடுத்தவர் இவற்றை வைத்து எந்தவித சுயவிளம்பரமும் செய்து கொள்வதே இல்லை. பெரும்பான்மை இனம் சார் அரசுகள். கட்சிகள் அரசியவாதிகள். அமைப்புக்கள் மூலம் இவரது திறமையைப் பயன்படுத்துமுகமாக அங்கீகரிக்குமுகமாக பல உயரிய பதவிகள் வரக்கூடிய சந்தர்ப்பங்களைக் கூட உதறிதள்ளியவர். அந்தப் பதவிகளுக்கு அடிமையாகினால் தான் சார்ந்த இனத்துக்கு நேர்மையான உண்மையான

நீதியை பெற்றுக்கொடுப்பது இயலாத காரியம் என்ற எண்ணத்தில் இறுதிவரை சட்டத்தரணியாகவே வாழ்ந்து காட்டியவர் கொழும்பில் வாழ்ந்து கொண்டே எத்தனையோ அரசியல் ஆடுபுலி ஆட்டத்துக்குள்ளும் பண முதலைகளின் சதிவலைகளுக்குள்ளும் நீந்திகரைசேர்ந்தவர். கே.வி.தவராசா.அவர்கள் கொழும்பு மாவட்ட தமிழரசுக்கட்சித் தலைவராக இருக்கும் வேளையில் அதனால் வருகின்ற உயிராபத்துக்கள், பயமுறுத்தல்கள், சட்டக்குறுக்கீடுகள், அரசியல் பழிவாங்கல்கள், என அத்தனையையும் வெட்டியெறிந்து கணவருக்கு உறுதுணையாகவும் உதவிக்கரமாகவும் வாழ்ந்து பெருமைசேர்த்தார்.

கொரொனா பெரும்துயர் காலத்திலும் கடமையொன்றே பெரிதென எண்ணி மற்றுமொரு பரபரப்பான வழக்கில் நீதிமன்று ஏறிய இந்த இரும்புப் பெண்மணி தன் வாழ்நாள் முழுக்க உயிருக்குயிராய் நேசித்த சட்டதொழில் கடமை நேரத்திலேயே காலனின் பிடிக்குள் சிக்கி பலியானது கொடுமை. எத்தனை எதிரிகளையும் தனியொருத்தியாக நின்று நேரில் எதிர்கொண்டு தன் சட்டப்புலமையால் தூக்கியடித்து வெற்றிகண்ட தமிழச்சியே உன் வெற்றிகள் மட்டுமே மாலையாக உன் கழுத்தில் வீழும் கோலங்கள்தான் நாம் கண்டோம். நீதிக்காய் வாழ்ந்தாய் வரலாறுபடைத்தாய். உனது இந்த நேரிய வாழ்க்கை இலங்கை வரலாற்றில் எழுதப்படும் உன் ஆத்மா சாந்தியடையட்டும்.

**சிவ.சந்திரபாலன்**
சுவிஸ்லாந்து

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அயராது செயற்பட்டவர் கௌரி சங்கரி

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்படுகின்ற தமிழ் இளைஞர் யுவதிகளின் விடுதலைக்காக மிக நீண்டகாலமாக செயற்பட்டு வந்த சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரண செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம்.

தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி தங்கத்துரை போன்ற முக்கியமானவர்களின் வழக்கு விவகாரங்களில் ஆட்சியாளர்களால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்களையும் மீறி துணிவோடு நீதிமன்றப்படி ஏறி வழக்காடிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுக்கு எப்போதும் பக்கபலமாக நின்று வந்திருக்கின்றார்.

பிரதானமாக குடிமக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு விடயங்களில் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். மனித கடத்தல்கள் திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலைகள் போன்ற வழக்குகளை உயர் நீதிமன்றில் சட்டத்தரணிகள் குழுவோடு நின்று அவற்றை நெறிப்படுத்துவதன் மூலம் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் பேசப்பட்ட பிரபல சட்டத்தரணி ஆவார்.

பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சட்ட ஆலோசகராகப் பல பணிகளை ஆற்றியுள்ளதுடன் நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தின் உயிர்ப்பையும் தக்க வைப்பதில் தனது சட்டத்துறை மூலம் முக்கிய வகிபாகத்தை செய்து வந்திருக்கின்றார்.

மேலும் குடியியல் வழக்குகள் பெண்களுக்கு எதிரான அத்து மீறல் செயற்பாடுகள் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகி நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு போதும் பின் நின்றதில்லை. இவரின் திடீர் இழப்பு எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள்**

# புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரின் நினைவு அஞ்சலி

சர்வ வல்லமை பொருந்தியவரும் இரும்புப் பெண்மணி என்று வர்ணிக்கப் பெற்றவருமான கௌரிசங்கரி தவராசாவின் இழப்பு. ஈழத்தமிழர்களால் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என கௌரிசங்கரி தவராசா அவர்களின் நினைவாக கனடா அஞ்சலி நிகழ்வில் புகழாரம்.

2021 ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி கொழும்பில் காலமான சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா அவர்களின் மறைவையொட்டி கனடாவில் இயங்கிவரும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் கனடா ஸ்காபுறோவில் அஞ்சலி நிகழ்வொன்றை நடத்தினர். மேற்படி அஞ்சலி நிகழ்ச்சியை சங்கத்தின்சார்பில் அதன் செயளாளர்திரு.பகிரதன் தொகுத்து வழங்கினார்.

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி திரு.தவராசாவின் உறவினர்கள் நண்பர்கள் என பலரும் உரையாற்றினார்கள். அவர்களுடன் ஊடகவியளாளர் சார்பில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.என் லோகேந்திரலிங்கமும் உரையாற்றினார்.

அங்கு உரையாற்றிய அனைவரும் மறைந்த சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் ஆற்றலையும் மனிதநேய உணர்வையும் மற்றும் இன உணர்வையும் பாராட்டியும் வியந்தும் குறிப்பிட்டு சொல்லியும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

சிவாச்சாரியார்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார் குமுக்கள் மற்றும் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் உட்பட அங்கு உரையாற்றிய அனைவரும் மறைந்த சட்டத்தரணியான கௌரி சங்கரி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக உடனேயே நீதிமன்றங்களில் ஆஜராகும் துணிவு மிகக் கொண்டவர் என்றும் தங்கள் உரைகளில் தெரிவித்தனர்.

**புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்**
கனடா

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்





# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்

1979–2022

01. உயர்நீதிமன்றம் தனது ஒருபக்கத் தீர்ப்பை வழங்கிய இரண்டு நாட்களின் பின்னர் 1979 ஜுலை 19ஆம் திகதி கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதுவிவாதம் நடத்தப்பட்டு ஒரேநாளில் நிறைவேற்றப்பட்டது.

02. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்ற பொழுது வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எதிர்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உட்பட 18 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சட்டத்துக்கு எதிராக வாதிட்ட போதும் வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்தனர், எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

03. எதிர்க் கட்சியின் சார்பில் பிரதான உரை ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்கவினால் ஆற்றப்பட்டது. இச்சட்டமூலத்தின் அம்சங்கள் பற்றி மட்டுமன்றி அதனைச் சட்டமாக்குவதற்கு முனைந்த முறை பற்றியுமான சில முக்கிய கவலைகளை வெளிப்படுத்தினார்.

04. தற்காலிக (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமாகவே பயங்கரவாத தடுப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதாக தமிழ்த் தலைமைகளிடம் வாக்குறுதியளித்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன 1982ஆண்டு 10ம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிரந்தரச் சட்டமாக்கினார்.

## 05. 'ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசாங்கத்தின் விருப்பப்படி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஆக்கிக் கொடுத்தார் சட்டமா அதிபர் சிவா பசுபதி' என அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூறியமை குறிப்பிடத்தக்கது

இலங்கைத் திருநாடு 1802இல் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டு பதிமூன்றாண்டுகளின் பின்னர் 1815இல் முழுமையாக மன்னராட்சியிலிருந்து விடுபட்டது. அதன் பின்னர் அனைத்துக் கொலனிய நாடுகளிலும் அமுலான கொலனிய சட்டம் இங்கும் நடைமுறைக்கு வந்தது. பிரித்தானியர் ஆக்கிரமிப்புக் பின்னர் இந்நாடு முழுமையாக ஆங்கிலேயப் பாணியிலான பராமரிப்புக்குட்பட்டாலும் இந்நாட்டின் போக்கிலும் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் இறுக்கமான பிடியொன்றை எந்த இனக்குழுமத்தின் மீதும் ஆக்கரமிப்பு அரச திணிக்க முயவில்லை. தமது ஆக்கிரமிப்புக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட சுதந்திரத்தின் தாகங்கொண்ட அனைத்து எதிர்ப்புகளையும் முறையான அரசியல் கட்டமைப்புக்குள்ளால் கட்டுப்படுத்தி நீர்த்துப் போகச் செய்ய முடியும் என்பதை பிரித்தானியர் அறிந்திருந்தனர். அதனால் இந்நாட்டில் ஆரோக்கியமான ஆட்சிமுறையொன்றே எப்போதும் அமுலில் இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். அதன் பயனாக ஆக்கிரமிப்பு காலத்திலும் கூட நிலவி வந்த ஆரோக்கியமான பாராளுமன்ற ஜனநாயக மரபுகளையும் நீதித் துறையின் சுதந்திரத்தையும் மனதிற்கொண்டு பார்க்கும்போது, இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பான பெரும்பாலான விமர்சனங்கள் மிக நியாயமாகவே தெரிகின்றது. அச்சட்டத்தின் உள்ளடக்கங்கள், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுடனான அதன் ஒவ்வாத் தன்மை மற்றும் அமுலாக்கலில் மேவி நிற்கும் துஸ்பிரயோகம் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்தும் போது மிகவும் துரதிஸ்டமானதாகக் காணப்படும் நாட்டின் ஜனநாயக அமைப்புகளின் துரிதமான மோசமடைதலை அது வெளிச்சமிட்டுக் காட்டுவதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

1977 ஜுலை பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான அரசாங்கத்தின் 'முரண்பாடுகளைத் தீர்க்கும்' பண்பில் காணப்பட்ட இயலாமையை அப்பட்டமாக மறைக்க எடுக்கப்பட்ட ஒரு முயற்சியே பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். 1978ஆம் ஆண்டுகளில் முனைப்புப் பெற்ற தமிழர் விடுதலையுணர்வு பலமான இயக்க அமைப்பில் மக்களை மையப்படுத்தி நகரத் தொடங்கியது. அதன்படி பலமாகத் தென்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அதனை ஒத்த அனைத்து விடுதலை இயக்கங்களையும் தடை செய்யும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதே பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். அவசர அவசரமாக ஒரே நாளில் 1979 ஜுலை 19ஆம் திகதி தற்காலிகச் சட்டமாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் 1982ம் ஆண்டில் 10ம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டு நான்கு தசாப்தங்கள் முடிவடைந்து விட்டன. 2009ஆம் ஆண்டு இந்நாட்டின் உள்ளக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் 'பயங்கரவாதம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டதாக' அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்ட நிலையில் 2015ம் ஆண்டு நல்லாட்சி காலத்தில் இந்தச் சட்டத்தை நீக்குவதாக இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித

உரிமைப் பேரவைக்கு வாக்குறுதி வழங்கிய போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இன்றும் இச்சட்டம் அமுலிலுள்ளது.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் முன்னோடிகள்

1979ஆம் ஆண்டு 48ம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகள் முன்னைய சட்டங்களில் காணப்பட்ட ஏற்பாடுகளின் ஒத்த சில அம்சங்களைக் கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

1979ஆம் ஆண்டு 48ம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களில் காணப்பட்ட ஏற்பாடுகளை ஒத்த சில அம்சங்களும் காணப்பட்டன. பொதுவான நம்பிக்கைக்கு மாறாக, இவ்வொப்புவமைகள் அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது, பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் வேறு சில சட்டங்களிலும் காணப்பட்டன. அதற்கமைய 1972 ஆம் ஆண்டின் குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம், 1972 ஆம் ஆண்டின் செலாவணி கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த ஏனைய இயக்கங்கள் ஆகியவற்றை தடைசெய்யும் சட்டம் ஆகியவற்றில் காணப்பட்ட ஏற்பாடுகளின் ஒத்த சில அம்சங்களை அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது 1979ஆம் ஆண்டு 48ம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டன.

## அவசரகால ஒழுங்குவிதிகள் 1947

அவசரகால ஒழுங்கு விதிகள், 1947ஆம் ஆண்டின் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டன அவை, வழமையான சட்டவாக்க நடைமுறைகளைப் புறந்தள்ளி, அரசத் தலைவரினால் ஆக்கப்படுவதோடு, கோட்பாட்டளவில் அவை தற்காலிகமானவை அரசியச் சேவைகள் முதலிய விடயங்களைக் கையாளும் அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) 'ஒழுங்கு விதிகள்' என்று அழைக்கப்படும் நீண்ட ஒழுங்கு விதித் தொகுதியொன்றை ஆக்குவதாகும். அதன் பின்னர் பொதுவாக, காலத்துக்குக் காலம் தேவை உணரப்படும்போதெல்லாம் ஏனைய விடயங்களைக் கையாளும் பெருமளவு மேலதிக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்.

நாங்கள் தற்போது எந்த காலப் பகுதியைப் பற்றி எழுதுகின்றோமோ, அந்தக் காலப்பகுதியில் அவசரகால ஒழுங்குவிதிகள் ஒவ்வொரு மாதமும் புதிதாக ஆக்கப்பட வேண்டியிருந்தது. எனவே, நடப்பு ஒழுங்குவிதிகளுக்கான மாற்றங்கள் எப்போது இடம்பெற்றன என்பதைக் கண்டறிவது எளிதானதாக இல்லை. எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்குவிதிகள் 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரகடணப்படுத்தப்பட்டவையே, நடைமுறையிலுள்ள மேம்பட்ட விதிகள் அவசரகால நிலைமைகளின் கீழ் 1975ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆக்கப்பட்டவைகளாகும்.

## குற்றவியல் நீதி ஆணைக் குழுக்கள் சட்டம் 1971

1971ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்களைக் கையாள்வதற்காக 1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதன் ஏற்பாடுகள் செலாவணிக் கட்டுப்பாட்டு குற்றமிழைத்தோரையும் உள்ளடக்கியிருந்தது. இச் சட்டத்தினால் ஏற்படுத்தப்படும் ஆணைக்குழுக்களுக்கு ஆயுள் தண்டனை அடங்கலான சிறைத் தண்டனை விதிக்கும் அதிகாரம் இருந்தது. இச் சட்டம், எட்டு வருடங்களுக்கு அமுலிலிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்ததோடு, சாதாரண பெரும்பான்மையோடு நிறைவேற்றப்படும் ஒரு பாராளுமன்ற தீர்மானத்தினால் காலத்துக்குக் காலம் ஐந்து வருடங்கள் வரை புத்துயிரூட்டப்படுவதற்கான ஓர் இலகு ஏற்பாட்டையும் கொண்டிருந்தது. 1977 இல் அரசாங்கம் மாறிய பின்னர், அது இல்லாதொழிக்கப்பட்டது.

## செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் 1972

1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதோடு, குற்றமிழைத்தோர் தொடர்பான தீவிரமான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. 1977இல் அரசாங்கம் மாறிய பின்னர், இதுவும் இல்லாதொழிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் 1970 இல் பதவிக்கு வந்த சிறிமா. ஆர்.டீ.பண்டாரநாயக்க அவர்களின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் காலப்பகுதியில் இயற்றப்பட்டன.

## தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை 1978

1977 பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த ஜே ஆர் ஜயவர்தன தலைமையிலான அரசாங்கத்தின் படைப்பாகும். 1978 ஆம் ஆண்டின் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களைத் தடை செய்யும் சட்டமே இது. இது பொது மக்கள் விவாதத்துக்கான வாய்ப்பின்றி ஓர் 'அவசர' சட்டமாகப் பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது. ஆரம்பத்தில் அதன் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடமாக மட்டுப்படுத்தப்பட்டது எனினும் அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தத்தின் மூலம் அது மேலும் ஐந்தாண்டு காலத்துக்கு நீடிக்கப்பட்டது.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 1979

1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) அதன் பிரிவு 30 இல், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க தடைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது. என்று ஏற்பாடு செய்த அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் பிரிவு 30 ற்கு விதிவிலக்காக அமைந்திருந்தது. எனவே, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தடைச் சட்டமானது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மேவிச் சென்று 1980 மே 23 ஆம் திகதி வரையான அதன் முழுக் காலப் பகுதிக்கும் நிலைத்திருந்தது. சட்டவாக்கச் சட்டமியற்றல்களின் 1980 ஆம் ஆண்டு (உத்தியோகபூர்வமற்ற) திருத்திய பதிப்பானது, விளக்கக் குறிப்பு அடையாளமொன்றின் மூலம் பிரிவு 30க்கான ஒரு குறிப்பில் இதனை குறிப்பிட்டுக் காட்டுகின்றது: அது கூறுவதாவது, "1980 மே 23 ஆம் திகதி வழக்கொழிந்தது எனினும், இது எவ்வாறு நிகழ்ந்தது என்பது இன்றைய ஆய்வாளர்களுக்கு

எளிதாக புரிந்துகொள்ளக்கூடியதாக இல்லை. 1979 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சட்டத்தின் பிரதியில் பார்த்தறிய வேண்டியுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 1 இன் முழுமையான பிரதி பின்வருமாறு அமைந்துள்ளது:

இச் சட்டம் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என்று எடுத்துக் காட்டப்படலாம் என்பதோடு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நிர்ணயிக்கக்கூடிய அத்தகைய திகதி அல்லது திகதிகளில் அதன் அனைத்து அம்சங்களிலும் அல்லது அதன் ஏதேனும் ஒரு ஏற்பாட்டிலும் அமுலுக்கு வருதலும் வேண்டும்

1980 ஆம் ஆண்டு சட்டவாக்க சட்டம் இயற்றல்கள் (உத்தியோகபூர்வமற்ற) திருத்திய பதிப்பில் பிரசுரிக்கப்பட்ட பிரதியில் சேர்த்துக் கொள்ளப்படாதுள்ளன. இது, விதித்துரைக்கப்பட்ட பாராளுமன்ற உறுதிப்படுத்தல் நடைமுறைக்கு இன்னமும் உட்படுத்தப்படவில்லை என்ற வகையில் “உத்தியோகபூர்வமற்ற” தாகவிருப்பினும், அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்படுவதோடு, அதுவே தற்போது பரவலாக பயன்பாட்டிலுள்ள பிரதியுமாகும்.

## பயங்கரவாத தடுப்புச் சட்டமும் நீதித் துறையின் வகிபாகமும்

1972இலும் 1978இலும் பதவிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களும் முதலாவதாக, தமக்குத் தேவையான தமது சொந்த அரசியலமைப்பை வகுத்து நிறைவேற்றக்கூடியவர்களாக இருந்தனர்.

இரண்டாவதாக, மாற்ற முடியாதவாறு விசேட பெரும்பான்மை நிபந்தனைகள் என்ற வடிவில் அமைந்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட தடைகளும் சமப்படுத்தல்களும் என்ற எண்ணக்கருவை அரசியல் யாப்பு தர்மத்தின் பேரில் விதிப்பதை அவை உதாசீனம் செய்தன. இவை அனைத்தும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் சட்டமாக்கப்படுவதற்கு வசதியாக அமைந்தது.

அரசியலமைப்பினால் அனுமதிக்கப்பட்டவாறு தான் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் இச் சட்டத்தை நிறைவேற்ற எண்ணியிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. இதன் பொருள் என்னவெனில் அவ் உத்தேசச் சட்டத்தில் உள்ள வாசகங்கள் அரசியலமைப்புக்கு ஒவ்வாததாக இருப்பினும்கூட, அவற்றை சட்டமாக நிறைவேற்ற முடியும் என்பதேயாகும். எனவே, சட்டமாஅதிபர் திணைக்களத்தினால் சட்ட வரைவு நிலையில் அல்லது உயர் நீதிமன்றத்தால் நிறைவேற்றலுக்கு முந்திய மீளாய்வு நிலையில் அல்லது பாராளுமன்றத்தால் கலந்துரையாடல் நிலையில் கவனமாக அரசியலமைப்பு ரீதியாக நுணுகி ஆராய்தல் முக்கியமற்றதாகியது.

அவ் விடயம் உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டபோது, அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் இச் சட்டத்தை நிறைவேற்ற சித்தங் கொண்டிருப்பதாக அறிவித்திருந்ததால், அரசியலமைப்பில் மிகக் கடுமையாக பாதுகாக்கப்பட்டிருக்கும் (இறைமை பௌத்தம் மற்றும் ஏனைய அடிப்படை அம்சங்கள்

ஆகியவற்றைக் கையாளும்) ஏற்பாடுகளை இச் சட்டத்தின் ஏதாவது வாசகங்கள் மீறுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அச் சட்டமூலத்தை நுணுகி ஆராயும் மட்டுப்படுத்தப்பட்ட பணியே தனக்கு உள்ளதென நீதிமன்றம் அறிவித்தது.

இது அத்தகைய வாசகங்கள் நிறைவேற்றப்படுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மட்டுமன்றி ஒரு கருத்தறி வாக்களிப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்தையும் தேவைப்படுத்தியிருக்கும். ஒரு பக்க கட்டளையொன்றில் இலங்கையின் உச்ச நீதிமன்றம் அரசியலமைப்பில் விசேடமாகப் பாதுகாக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளோடு இச் சட்டத்தில் எந்த ஒரு பிரிவும் ஒவ்வாததாக இல்லை என்று அறிவித்ததோடு, மனித உரிமைகள் மீதான அரசியலமைப்பு ஏற்பாடுகள் தொடர்பான இச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீளாய்வு செய்ய மறுத்து அதன் மூலம் இச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு எந்தச் சிக்கலுமின்றி மிகவும் வசதியாக அமைந்தது.

1979 ஜுலை 19ஆம் திகதி கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடத்தப்பட்டு ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டது. இது உச்ச நீதிமன்றம் தனது ஒரு பக்கத் தீர்ப்பை வழங்கிய இரண்டு நாட்களின் பின்னராகும்.

ஆளும் ஐதேக பாராளுமன்றத்தை மதிப்பிறக்கம் செய்யும் நடைமுறையை ஆரம்பித்திருந்தது. கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களில் முதல் தடவையாக சட்டவாக்கச் சபையிலிருந்து பிரதான நிறைவேற்று மையத்தை வேறு இடத்துக்கு மாற்றி அது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்தது. அது, பாராளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருந்ததோடு, தனது பாராளுமன்றக் குழுவிலிருந்து கருத்து வேறுபாடு எதனையும் சகித்துக் கொள்ளாமலும் இருந்ததனால் பாராளுமன்ற விவாதமும் கலந்தாராய்வும் சிறிதளவே பயனுள்ளதென உணரத் தொடங்கியிருந்தது.

விரைவாகச் சட்டங்களை இயற்றுவதற்கும் நுணுகி ஆராய்தல், விவாதித்தல், கலந்தாராய்தல் மற்றும் கருத்து முரண்படுதல் ஆகிய பாராளுமன்ற வழக்கங்களை அதைரியப்படுத்துவதற்காகவும் சட்டவாக்க நடைமுறையை குறுகியதாக்கும் முகமாக பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை நிறுத்தி வைக்கும் நடைமுறையையும் அரசாங்கம் ஆரம்பித்திருந்ததுடன், 1979 ஜுலை 19ஆம் திகதி பகல் உணவுக்குப் பின்னர், பாராளுமன்றம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டது.

பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா அன்றைய தினமே அச்சட்டமூலம் நிறைவேற்றப்படக்கூடியதாக நிலையியற் கட்டளைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமெனப் பிரேரித்தார். நீதி அமைச்சர் கே.டபில்யூ.தேவநாயகம் அச்சட்டமூலத்தை அறிமுகம் செய்தார். அச்சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பு அன்றிரவு 9.45 வரைத் தொடர்ந்து நடைபெற்றது.

## மைத்திரிபால சேனநாயக்காவின் அதிருப்தி

எதிர்க் கட்சியின் சார்பில் பிரதான உரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சேனநாயக்கவினால் ஆற்றப்பட்டது. இச்சட்டமூலத்தின் அம்சங்கள் பற்றி மட்டுமன்றி அதனைச் சட்டமாக்குவதற்கு முனைந்த முறை பற்றியுமான சில முக்கிய கவலைகளை அவர் எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

“இந்தப் பாராளுமன்றத்தில் எந்த மக்களின் பெயரினால், எந்த மக்களின் அதிகாரத்தைக் கொண்டு சட்டங்கள் ஆக்கப்படுகின்றனவோ, அந்த மக்கள் அதன் உள்ளடக்கங்களை ஆராய்வதும் விளக்கமாக அவற்றை நுணுகி ஆராய்வதும் ஒரு புறம் இருக்க, அவற்றை அவர்கள் வாசித்துக்கூடப் பார்க்கவிடாது தடுத்து, இச்சட்டமூலத்தை இன்றிரவே பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்ற அரசாங்கம் இப்போது முயலுகிறது.

இது ஒன்றும் ஆச்சரியமளிப்பதல்ல. ஏனெனில், கடந்த இரண்டு வருடங்களில், மக்களின் அடிப்படை உரிமைகளில் ஏதாவதொன்றை பறித்துக்கொள்ள முயன்ற ஒவ்வொரு சட்டமூலமும் தேசிய நலனில் அவசர முக்கியத்துமிக்கதாக விபரிக்கப்பட்டு, எந்த மக்களின் வாக்குகள் அரசாங்கத்துக்கு இம்மிகப் பெரிய பெரும்பான்மை கிடைப்பதற்கு உதவியதோ, அதே பெரும்பான்மையை பயன்படுத்தி அந்த மக்களின் முதுகுக்குப் பின்னால் பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தைப் பொறுத்தவரை, நாங்கள் அதில் எந்த அவசர முக்கியத்துவத்தையும் காணவில்லை. வடக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கையாளும் நோக்கத்துக்காகவே அது தேவைப்படுகிறது. ஏலவே, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களை தடை செய்யும் சட்டமும் அதற்கு மேலதிகமாக பொதுமக்கள் பாதுபாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையும் உள்ளன. அதன் கீழ் எந்த நிலைமையையும் எதிர்த்துச் சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கு முழுமையான அதிகாரம் உண்டு.”

அமைச்சர் தேவநாயகம் தமது தொகுப்புரையை நிகழ்த்துவதற்கு இரவு 9.58 மணிக்கு எழுந்து நின்றார் என்று ஹன்சாட் பதிவு செய்துள்ளது. இதன் பின்னர் குழு நிலையும் (இங்குதான் சட்டமூலத்தை பாராளுமன்றம் வாசகம் வாசமாக ஆராயுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது) முன்றாம் வாசிப்பும் ஆரம்பமாகியது. சட்டமூலம் எல்லா நிலைகளிலும் நிறைவேறியது. பயங்கரவத தடுப்புச் சட்டத்தோடு தொடர்பில்லாத, பொது மக்கள் பாதுபாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, இரவு 10.25 மணியளவில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்கள்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பாதுகாப்பு அமைச்சருக்கு தாம் இச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் விபரிக்கப்படும் ஏதேனும் சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் என்று

சந்தேகிப்பதற்கான காரணம் இருக்கும் ஒரு நபரை தடுத்து வைக்குமாறு கட்டளையிடுவதற்கு வகை செய்கின்றது. அத்தகைய தடுத்து வைப்பு தொடாந்தேர்ச்சியாக மூன்று மாதங்கள் வரையாகும் என்பதோடு, அதனை மொத்தம் 18 மாதங்கள் வரை புதுப்பிக்கவும் முடியும்.

அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்குவிதிகள் அதன் 18 ஆவது ஒழுங்குவிதியின் மூலம் பாதுகாப்புச் செயலாளருக்கு ஒரு நபரைக் கைது செய்து கால வரையறையின்றி அதாவது, அவசர கால நிலைமை அமுலில் இருக்கும் வரைத் தடுத்து வைக்கக் கட்டளை இடுவதற்கான அதிகாரத்தை வழங்கியது. ஒரு நபரை, பொதுமக்கள் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு விதத்திலும் செயல்படுவதை தடுக்குமுகமாகவும் பொது ஒழுங்கை அல்லது அத்தியாவசிய சேவைகளின் பராமரிப்பை பேணும் முகமாகவும் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளில் ஏதேனும் குறிப்பிட்ட ஒன்றுக்கு முரணாக செயல்படுவதைத் தடுக்கும்முகமாகவும் அவ்வாறு செய்வது தேவையானதென்று செயலாளர் காணுமிடத்து இவ்வதிகாரம் பிரயோகிக்கப்பட முடியும்.

## குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம்

ஓர் ஆணைக்குழு ஒரு நபரைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்குப் பரிந்துரை செய்ய வகை செய்கிறது. எனினும் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லது சாதாரணச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே தடுப்புக் காவலில் இருக்கும் நபர்கள் தொடர்பான செயற்பாடுகளைக் கையாள்வதே இச் சட்டத்தின் பிரதான நோக்கமாகும். இச் சட்டம் செய்ததென்னவெனில், அவர்கள் அங்கே தங்கியிருப்பதை- நிறைவேற்றுத் துறை விரும்பிய காலம் வரை அவர்கள் அங்கேயே தங்கியிருப்பதை- உறுதி செய்ததேயாகும். நீதிமன்றக் கட்டளைகள் எதுவும் அல்லது ஓர் ஆணைக்குழுவினால் விசாரணையின் பின்னரான விடுதலையோ சட்டபூர்வ விடுதலையைக் கொண்டுவரவில்லை. அவ்விடுதலை நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் தற்றுணிபில் தங்கியிருந்தது. அச் சட்டத்தின் பிரிவு 14 (2) (அ) பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது.

> *"ஓர் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட நேரத்தில் நீதவான் ஒருவரின் கட்டளையின் பேரில் தடுப்புக் காவலில் அல்லது ஏதேனும் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அத்துடன் இச் சட்டத்தின் கீழான ஆணைக்குழுனவின் முன் ஏதேனும் விசாரணைக்கான ஒரு விடயமாக இருக்கக்கூடிய ஏதேனும் ஒரு குற்றத்தைப் புரிந்தார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ் சாட்டப்பட்ட எந்தவொரு நபரும் நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளரினால் விடுக்கப்படும் ஒரு கட்டளையின் பேரில் விடுதலை செய்யப்படும் வரை அத்தகைய தடுப்புக் காவலில் தொடர்ந்து இருக்க வேண்டும்"*

1972 ஆம் ஆண்டின் செலாவணி கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம் அதன் பிரிவு 30ஆ (1) இன் மூலம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் ஒருவரை ஒரு நீதவான் தடுப்புக் காவலில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தது. நடைமுறையில் அத்தகைய கோரிக்கைகள் தவிர்க்க முடியாதவாறு வழங்கப்பட்டன. அதேபோன்று முக்கியமான விடயம்

என்னவெனில், தடுப்புக் காவலில் வைப்பதற்கான கட்டளை ஒரு முழு மாதத்துக்குமானதாக இருக்க வேண்டும் (அது "ஒரு மாதத்தை விஞ்சாத" என்றவாறு அமையவில்லை) என்பதோடு, அதன் பின்னர் இன்னொரு மாதத்துக்கு புதுப்பிக்கப்படவும் முடியும். நடைமுறையில் இது, இரண்டு மாதங்களுக்குத் தடுத்து வைப்பதற்கான அதிகாரத்தைப் பொலிசாருக்கு வழங்கியது. அதுவும் மிகவும் கவலையான நிலைமைகளின் கீழ் சட்டமா அதிபரின் வேண்டுகோளின் பேரில் உயர் நீதிமன்றத்தினால் மேலும் ஒரு மூன்று மாத கால தடுத்து வைப்புக்கு அனுமதியளிக்கப்பட முடியும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களைத் தடை செய்யும் சட்டத்தின் பிரிவு 11 அமைச்சரின் கட்டளையின் பிரகாரம் ஒருவரை மூன்று மாதங்களுக்கு தடுத்து வைப்பதற்கு வகை செய்தது. அது மொத்தமாக ஒரு வருடம் வரை புதுப்பிக்கப்பட முடியும்.

## நிறைவேற்றுத் துறையால் தீர்மானிக்கப்படும் தடுப்புக் காவல் இடமும் நிலைமைகளும்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 9ன் கீழ் அமைச்சரின் கட்டளைக்கிணங்க தடுத்து வைக்கப்படும் ஆட்கள் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய இடத்திலும் நிலைமைகளிலும் தடுத்து வைக்கப்படுவர். அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்கு விதிகளின் 18 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் தடுத்து வைக்கப்படும் ஆட்கள் பொலிஸ்மா அதிபரினால் அனுமதிக்கப்படும் அத்தகைய இடத்திலும் அவரால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமையவும் தடுத்து வைக்கப்பட்டனர். (ஒழுங்கு விதி 18 (3) அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பொலிசார் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டோரின் தடுப்புக் காவல் இடங்களையும் அவற்றின் நிலைமைகளையும் தீர்மானித்தனர். தடுத்து வைக்கப்படுபவர் சிறைச்சாலையொன்றில் வைக்கப்பட்டால், பாகம் IX ஐ (சிறைச்சாலைக்கு வருகை தருவோர் சபை தொடர்பான) தவிர்ந்த சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் விஜயங்கள், கடிதப் போக்குவரத்துகள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் விதிகள் தவிர்ந்த சிறைச்சாலைகள் விதிகளும் அவர் தொடர்பில் பிரயோகிக்கப்படும். எனினும் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இத் தடுப்புக் காவலில் உள்ளோர் தொடர்பில் பிரயோகிக்கப்படும் வேறு எந்தச் சட்டங்களையும் மாற்றியமைக்க முடியும் என்பதோடு, விஜயங்கள் மற்றும் கடிதத் தொடர்புகள் தொடர்பாகத் தான் விரும்பும் விதிகளை ஆக்கவும் முடியும்.

அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏனைய பொறிமுறைகளின் கீழ் அதாவது, ஒழுங்குவிதி 19ன் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் நபர்கள் தொடர்பாக, "அவர்கள் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து இலங்கையில் அமைந்துள்ள வேறு எந்த இடத்துக்கும் மாற்றப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்படலாம்" என்று ஏற்பாடு செய்யப்பட்டது (ஒழுங்குவிதி 19 (8) (அ)). மேலும், அத்தகைய எந்த ஒரு நபரும் "பொலிஸ் மா அதிபரினால் அனுமதிக்கப்படும் அத்தகைய இடத்திலும் அவரால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமையவும் தடுத்து வைக்கப்பட வேண்டும் (ஒழுங்குவிதி 19 (8) (இ)). இது, பதினைந்து நாட்களுக்கு நீடிக்கலாம். அக்கால

முடிவின்போது அவர் விடுவிக்கப்படாதவிடத்து, அந்நபர் நீதவான் ஒருவர் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட வேண்டும். அவர் அந் நபரை சிறைச்சாலையில் தடுத்து வைப்பார்.

இத் துறையில் செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்த) சட்டத்தின் ஏற்பாடுகள் புதினமானவையாகும். நாம் ஏற்கெனவே கண்டுள்ளவாறு, நடைமுறையில் பொலிசார் ஒரு நபரை இரண்டு மாதங்களுக்கு தடுத்துவைத்திருக்கச் செய்ய முடியும் (அது உயர் நீதி மன்றத்தினால் மேலும் ஒரு மூன்று மாத காலத்துக்கு நீடிக்கப்படலாம்). இத் தடுத்து வைப்பு பிஸ்க்கால் தடுப்புக் காவலில் ஆகும். இதன் வழமையான பொருள் சிறைச்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு சிறையில் தடுத்து வைத்தல் என்பதாகும். இச் சட்டத்தின் உரிய பிரிவினை இங்கு முழுமையாகக் குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும்:

> *(5) இப் பிரிவின் கீழ் சந்தேகிக்கப்படும் ஒரு நபர் சட்டபூர்வமான பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும் காலப்பகுதியில் அத்தகைய நபர் நீதி அமைச்சின் செயலாளரினால் எழுத்து மூலமான அனுமதிக்கப்பட்ட அத்தகைய இடத்தில் தடுத்து வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய இடம் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு சிறைச்சாலையோ இல்லையோ, அத்தகைய நபரை பொறுப்பேற்று தடுப்புக் காவலில் வைத்திருப்பது அத்தகைய இடத்துக்கு பொறுப்பாக இருக்கும் நபரின் அல்லது உத்தியோகத்தரின் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு, சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் அதன் கீழ் ஆக்கப்படும் விதிகளும் அத்தகைய நபருக்கு பொருந்துவதாய் இருத்தல் வேண்டும்.*

எனினும், நீதி அமைச்சின் செயலாளர் காலத்துக்குக் காலம் அந்த நபருக்கு அல்லது நேரடியாக அத்தகைய இடத்துக்கு பொறுப்பாக இருக்கும் நபருக்கு விடுக்கும் கட்டளை மூலம் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் எந்த ஒரு ஏற்பாடும் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளும் அத்தகைய கட்டளையில் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது திருத்தங்களுக்கு உட்பட்டு அத்தகைய நபருக்கு பொருந்துவதாகாது என்று கட்டளையிடலாம்

> *(6) உப பிரிவு 5இன் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு கட்டளையையும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதோடு, அதற்கிணங்க அத்தகைய கட்டளை நீதி அமைச்சின் செயலாளரினால் கையெழுத்திடப்பட்டதும் அமுலுக்கு வருதலும் வேண்டும்.*

இவ்வாறாக, தடுப்புக் காவல் இடமும் நிலைமையும் நீதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டது (பின்னர் அது பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு மாற்றப்பட்டது). இந்த ஏற்பாட்டின் கீழ்தான் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பான சந்தேக நபர்கள் தாம் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் மீது புலன்விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் போதும் அவர்களது குற்ற ஒப்புதல்

பெறப்பட்டபோதும் பெஜட் வீதியில் அமைந்துள்ள ஒரு பங்களாவில் தடுத்து வைக்கப்பட்டு, தன்னந் தனியான அறைகளில் வாசிப்பு உபகரணங்கள் மறுக்கப்பட்டும் அவர்கள் வெளியில் உள்ளவற்றைப் பார்க்க முடியாதவாறு ஜன்னல்கள் கடதாசியால் மறைக்கப்பட்டும் மிகக் கொடூரமான அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களைத் தடை செய்தல் சட்டம் அமைச்சரின் கட்டளையின் பேரில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடிய அத்தகைய இடத்திலும் நிலைமைகளிலும்" தடுத்து வைப்பதற்கு ஏற்பாடு செய்தது (பிரிவு 11). இந் நிபந்தனைகள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினால் அப்படியே பின்பற்றப்பட்டது.

## நீதித்துறையின் அதிகாரம்?

ஒரு தடுத்து வைத்தல் ஆணையைப்பற்றி கேள்வி எழுப்புவதற்கு நீதவானுக்கு அதிகாரம் இல்லை என்பதோடு, சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிற்கு (ஆணைக்கு) செயல்வலு வழங்க மாத்திரமே முடியும். கைதின் தன்மையை சுயாதீனமாக மதிப்பிட்டு, கைதிற்கான காரணம் அற்பமானது என்று அவர் கருதினாலும் ஒரு நபரை தடுப்புக் காவலில் இருந்து விடுவிப்பதற்கான அதிகாரம் நீதவான் வழங்கப்படவில்லை. மேலும், ஒரு நபர் சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளார் என்று நீதவான் கண்டால், அந்நபரை விடுதலை செய்வதற்கும் நீதவானுக்கு அதிகாரம் இல்லை

## மௌனம் ஒரு குற்றம்

பயங்கரவாதச் சட்டத்தின் 5ம் பிரிவின் படி பொலிசாருக்குத் தகவல் வழங்கத்தவறினால் அச்செயல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்பட்டு ஆகக்கூடிய தண்டணையாக நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டணை வழங்க முடியும்

பயங்கரவாதச் தடுப்புச் சட்டத்தின் 31ம்பிரிவில் வெறுமனே பயங்கரவாத செயல்கள் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஓர் ஆளுக்கு அபயமளித்தலை அல்லது அவருடன் தொடர்பு கொண்டிருத்தலை ஒரு குற்றமாகக் கருதுகிறது. ஓர் ஆளின்மீது சந்தேகம் கொண்டதும் (இச்சட்டத்தின் கீழ் இது எந்தவொரு பொலீஸ் உத்தியோகத்தரினதும் தற்றுணிபில் அமையும்), பயங்கரவாதச் சந்தேக நபர் ஒருவருடன் தொடர்பு கொண்டுள்ள எல்லா நபர்களும் சம்பந்தப்பட்ட நபரை சிறிது தள்ளி வைக்கவேண்டுமென்று அல்லது அதைவிட மோசமாக, அவரது சந்தேகத்துக்குரிய செயற்பாடுகள் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டுமென்று பயங்கரவாதச்தடைச் சட்டம் கோருவதோடு, அதன்படி செயல்படத் தவறும் பிரஜைகளுக்கான தண்டனைகளையும் விதித்துரைக்கிறது. மிக முக்கியமாக, எந்த வடிவத்திலுமான பயங்கரவாதச் சட்டத்தின் தன்மை யாதெனில், அதன் பிரசைகள் மத்தியில் அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்த அரசிற்கு இடமளிக்கிறது என்பதாகும்.

## குற்ற ஒப்புதலின் ஏற்றுக் கொள்ளும் தன்மை

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து நமக்கு வழி வழியாக வந்து சேர்ந்த சான்றுகள் கட்டளைச் சட்டம் பொலிஸ் தடுப்புக் காவலில் இருக்கும் போது உத்தியோகத்தருக்கு வழங்கிய குற்ற ஒப்புதலுக்கு விசேட பாதுகாப்பு வழங்கியது. அத்தகைய குற்ற ஒப்புதல்கள் ஒரு நீதவான் முன்னிலையில் வழங்கப்பட்டிருந்தால் ஒழிய, அவை சான்றுகளாக சேர்த்துக் கொள்ளப்படாது விட்டன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இப் பாதுகாப்பை நீக்கி ஒரு குற்ற ஒப்புதல் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டுமெனில் அது உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குக் குறையாத பதவி வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் முன்னிலையில் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தது. இதே போன்ற ஏற்பாடு ஒன்று அவசர கால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்கு விதிகளின் 60ஆவது ஒழுங்கு விதியிலும் காணப்படுகிறது. குற்றவியல் நீதி ஆணைக்குழுக்கள் சட்டம் இதனை விட வெகு தூரம் சென்றது.

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறு இருப்பினும் குடியியல் அல்லது குற்றவியல் நடைமுறைகளின் பிரிவுகள் 6 (i) (ஈ) மற்றும் பிரிவு 11ஆகியவற்றின் கீழ் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கக்கூடிய ஏதேனும் சான்று ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது ஏற்பாடு செய்தது. இதில் பிந்திய பிரிவு ஒரு சந்தேக நபரினால் எவருக்காவது அல்லது எந்த சூழ்நிலைகளிலும் வழங்கப்பட்ட ஒரு குற்ற ஒப்புதலை அல்லது வேறு ஏதேனும் குற்றவாளியாக்கும் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்வதற்கு விசேடமாக ஏற்பாடு செய்தது, பிரிவு 11 (2) (ஆ). செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்தச் சட்டம்) தடுப்புக் காவலில் இருக்கும்போது அல்லது உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குக் குறையாத பதவியுடைய உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளத்தக்கதென ஏற்பாடு செய்தது: பிரிவு 30 (எ) (1).

## ஒரு நபரை பிஸ்க்கால் தடுப்புக் காவலில் இருந்து எடுத்து இடத்துக்கு இடம் கூட்டிச் செல்லுதல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருப்பவரைச் சென்று பார்க்கும் உரிமை பொலிசாருக்கு இருப்பதோடு, அத்தகைய நபரை நியாயமான மணித்தியாலங்களில் விசாரணைக்காக எந்த ஒரு இடத்துக்கும் கூட்டிச் செல்வதற்கும் புலன் விசாரணைக்காக அவரை இடத்துக்கிடம் அழைத்துச் செல்வதற்கான உரிமையும் இருக்கின்றது. இதன் பொருள் என்னவெனில், பிஸ்கால் தடுப்புக் காவலின் ஒப்பீட்டு ரீதியான பாதுகாப்பிலிருந்து அகன்று ஒரு நபர் தான் மீண்டும் பொலிசாரின் தடுப்புக் காவலிலும் தயவிலும் இருக்கின்ற நிலையைக் காண்கிறார் என்பதாகும். இவ் உரிமை பொலிசாருக்கு பயங்கரவாதச் சட்டத்தின் பிரிவு 7 (3) (அ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

இது போன்றதொரு ஏற்பாடு 1970ஆம் ஆண்டுகளில் நிலவியவாறான அவசர கால நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் ஒழுங்குவிதிகளிலும் காணப்பட்டது. எந்த ஒரு அவசரகால ஒழுங்குவிதியிலும் கைது செய்யப்பட்ட ஒரு நபர் பொலிசாரினால் அல்லது ஆயுதப்

படைகளின் தலைவரினால் அனுமதி அளிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஒரு உத்தியோகத்தரால் கேள்வி கேட்டு விசாரிக்கப்பட முடியும். மேலும் அவர் தனது தடுப்புக் காவல் இடத்திலிருந்து கூட்டிச் செல்லப்பட்டு ஒரு தடவையில் ஏழு நாட்கள் வரை அத்தகைய உத்தியோகத்தரின் தற்காலிக தடுப்புக் காவலில் வைத்திருக்கப்படவும் முடியும். இவ்வாறாக, இங்கும் ஒரு நபர் தான் பிஸ்கால் பாதுகாப்பிலிருந்து அகற்றப்பட்டு பாதுகாப்புப் படைகளின் தடுப்புக் காவலிலும் தயவிலும் இருக்கக் காண்கிறார்.

உண்மையில் இந்த ஏழு நாள் எல்லை என்பது வெறும் கண்துடைப்புதான். ஏனெனில் நடைமுறையில் ஓர் "உள்ளே" மற்றும் "வெளியே" எனும் பதிவு சிறைச்சாலை வாயிலில் ஒவ்வொரு ஏழு தினத்துக்கும் ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு இவ்வாறு ஒரு சிறைக் கைதி இந் நிலையில் வாரக் கணக்கில் முடிவின்றி வைத்திருக்கப்படுவார்.

1972ஆம் ஆண்டின் செலாவணிக் கட்டுப்பாட்டு (திருத்த) சட்டம் இதே மாதிரியான ஒரு ஏற்பாட்டினைக் கொண்டிருந்தது. அச் சட்டத்தின் கீழ் ஒரு நபர் பிஸ்கால் தடுப்புக் காவலில் இருக்கும் காலப்பகுதியில் சுமத்தப்பட்ட குற்றம் தொடர்பாக புலன் விசாரணை செய்யும் எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் நியாயமான மணித்தியாலங்களில் அவரை அணுகுவதற்கான வாய்ப்பினைக் கொண்டிருப்பதோடு, புலன் விசாரணைக்காக அவரை இடத்துக்கிடம் கூட்டிச் செல்லவும் முடியும் என்று பிரிவு 30ஆ (4) ஏற்பாடு செய்கின்றது.

## இயக்கங்களைத் தடை செய்தல்

இயக்கங்களைத் தடை செய்வதற்கான எந்த ஒரு ஏற்பாட்டையும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை ஆக்கும் அதிகாரமானது, தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்யும் ஒரு முயற்சியில் நாடப்பட்டுள்ளது. 2001 நடுப்பகுதியில் அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு அரசாங்கத்துக்கு பாராளுமன்றப் பெரும்பான்மையொன்று இல்லை என்று தெளிவானபோது, அவசர காலச் சட்டம் தானாக வழக்கொழிந்து போக விடப்பட்டது. அதன் பின்னர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை ஆக்கும் அதிகாரத்தின் கீழ் முன்னைய அவசரகால ஒழுங்குவிதிகளை அப்படியே பிரதிபண்ணி தொடரான பல ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று தமிழிழ ஈழ விடுதலைப்புலி இயக்கத் தடையாகும்.

இத் தடை முன்னதாக 1998ஆம் ஆண்டு தலதா மாளிகை குண்டுத் தாக்குதலின் பின்னர் அவசரகால ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்டிருந்தது. இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்ட ஒழுங்கு விதி 2002 செப்டெம்பரில் இரத்து செய்யப்பட்டது.

இந்த ஒழுங்கு விதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அலட்ராவைரஸ் என்பதோடு அதற்கு எவ்வித சட்ட தாக்கமும் இருக்கவில்லை. அவ்வகையில் கண்டிப்பாகப் பார்க்கும் போது, அது இங்கு பரிசோதனையைக் கோரவில்லை. இருப்பினும், அவசரகாலச் சட்ட ஒழுங்குவிதி

68உம் விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களைத் தடை செய்தல் சட்டத்தின் பிரிவு 2உம் இயக்கங்களைத் தடை செய்வதற்கு ஏற்பாடு செய்தன.

## மரண தண்டனையை நீக்குதல்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் ஆறுதலளிக்கும் ஓர் அம்சம் என்னவெனில், அச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர்கள் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களல்ல என்பதாகும். குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் மரண தண்டனை அளிக்கப்பட வேண்டிய ஒரு குற்றத்துக்காக ஒரு நபர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படும்போது அத் தண்டனையானது, ஆயுட்கால சிறைத் தண்டனையாகும்: பிரிவு 3. இது அரசியல் எதிராளிகளை தியாகிகளாக்கிவிட வேண்டியதில்லை என்ற ஒரு விருப்பத்தினால் தூண்டப்பட்டிருக்கலாம். அதற்கு மேலாக, நீதியின் வழமையான நியமம் மிகவும் பாரதூரமாக நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ள விசாரணைகளைத் தொடர்ந்து ஆட்களை தூக்கு மேடைக்கு அனுப்புவது சிந்திப்பதற்கு மிகவும் கொடூரமான அம்சமென உணரப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்பொதுச் சட்டமான தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 296 ஏற்பாடு உள்வாங்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரினால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்த எந்த வழக்கிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில். உள்வாங்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 296 ன் கீழ் குற்றச் சாட்டுகள் சுமத்தப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தில். உள்வாங்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 296ன் கீழ் குற்றச் சாட்டுகள் சுமத்தப்படுமாயின் தமிழ் அரசியல் கைதிகள் வழக்கு விசாரணையில் தமிழ் பேசும் ஜூரி சபையின் முன்னிலையில் வழக்கு விசாரணையை கோரமுடியும் அதனைத் தவிர்ப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில். உள்வாங்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 296ன் கீழ் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதில்லை.

அரசாங்கத்தின் நிறைவேற்றுக் கிளையில் அதிகாரங்களனைத்தும் குவிந்து கிடப்பதை, இரண்டாவது குடியரசு அரசியமைப்பிலுள்ள ஒரு பிரதான குறைபாடாக கடந்த நான்கு தசாப்தங்களாக் விமர்சகர்கள் பலரும் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

அத்தகைய பலமிக்க நிறைவேற்றுத் துறையின் ஆபத்துகள், அரசாங்கத்தின் ஏனைய இரு கிளைகளான சட்டவாக்கத்துறை மற்றும் நீதித் துறை அகியவற்றின் அதிகாரங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் மேலும் அதிகரிக்கப்பட்டது. எனினும், தாங்கள் கொண்டிருக்கும் அற்பசொற்ப

அதிகாரங்களைக்கூட உச்ச அளவில் நிலைநாட்டிக்கொள்வதற்கு அரசாங்கத்ததின் இவ்விரு கிளைகளும் விருப்பமின்றியிருப்பதனால் அந்த நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கதையும் அது நிறைவேற்றப்பட்ட முறையும் அதன் அம்சங்கள் தொடர்பில் இவ்வளவு விமர்சனங்களுக்கு உட்படத்தப்பட்டபோதும் 43 ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் நடைமுறையிலுள்ள சட்டமாகும்

## 2022 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பயங்கரவாதத்தடுப்புச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்)

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத்தடுப்பு(தற்காலிகஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது அது 2022ஆம் ஆண்டு 12ஆம் இலக்கச் சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது. பயங்கரவாதத்தடுப்பு (தற்காலிகஏற்பாடுகள்) சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு நான்கு சகாப்தங்களாக பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் இந்தச் திருத்தச் சட்டம் மிகவும் விசேடமானது. பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களிளிருந்து இருபத்தியாறு வருடங்கள் வரையில் சிறைகளில் தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகள் ஓரளவுக்கு நிவாரண பெறக் கூடிய ஏற்பாடுகள் இதற்குள் அடங்கியிருப்பதே ஆறுதலானது.

## நீதித்துறையின் அதிகாரம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவரை 18 மாதங்கள் தடுத்துவைக்க முடியும் என்றகால எல்லை 12மாதங்களாக் குறைக்கபட்டுள்ளதுடன் கைதுசெய்யப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் ஆகக்குறைந்தது மாதத்தில் ஒருமுறையேனும் கைதி தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்துக்குச் நீதிபதி நேரடியாகச் சென்று கைதியின் நலன்களைப் பார்வையிட்டு கைதியின் முறைப்பாட்டைப்பதிவு செய்வது நீதிபதியின் கடமையென திருத்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு கைதி சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் சட்டவைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி சட்டவைத்திய அறிக்கையைப் பெற்று சித்திரவதை செய்யப்பட்டமை உறுதிப்படுமிடத்து தோதான மருத்துவச் சிகிச்சை பெறகட்டளையிடமுடிவதோடு சித்திரவதை தொடர்பில் புலனாய்வு விசாரணையொன்றை தொடங்க பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கலாம் என்பதுடன் சித்திரவதை மேற்கொண்ட நபர்களுக்கெதிரான குற்றவியல் வழக்கொன்றைத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்குப் பரிந்துரை செய்யவும் முடியும்

மனித உரிமை ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் சந்தேகநபரைப் பார்ப்பதற்கும் அவரது நலன்கள் தொடர்பில் கவனம் செலுத்தவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுள்ளதுடன் சட்டநலன்களைக் கவனிக்க சட்டத்தரணியொருவரின் அணுக்கத்தைக் கொண்டிருக்க முடியும் அத்தோடு உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## விசாரணையின் காலஎல்லையும் பிணையும்

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் கைதிகளின் விசாரணைகள் குறிப்பிட்ட கால வரையரைக்குள் முடிக்கப்பட வேண்டுமென்றோ குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டுமென்றோ எந்தவொரு கால வரையறையும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 2022ம் ஆண்டின் திருத்த சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்துக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் மேன்முறையீட்டு நீதிமன்று பிணை வழங்கமுடியுமென்பதுடன் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்குள் விசாரணைகள் தொடங்கப்படாதவிடத்து மேல்நீதிமன்று பிணையளிக்க முடியும்.

நீதிமன்ற விசாரணைகள் தொடங்கப்பட்டால் வழக்கு தினமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகள் சூட்சுமமாகக் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்று அதை சான்றாக முன் வைத்து கைது செய்யப்பவரை குற்றவாளியாக்கும் நிலையிலிருந்து தெளிவான பாதுகாப்பையளிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்டிருந்தாலும் கைது செய்யப்பட்டவருக்கு இத்தகைய பயன் நல்கும் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 1979ஆம் ஆண்டு பாராளுமன்றில் பயங்கரவாதத் தடைச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, எதிர்க்க வேண்டிய தருணத்தில் தமிழ் அரசியல் தரப்பு மௌனமாக இருந்தது. 2022ஆம் ஆண்டு திருத்தச சட்ட மூலத்தை ஆதரிக்க வேண்டிய தருணத்தில் தமிழ் அரசியல் தரப்பு பாராளுமன்றத்தில் எதிராகவே செயற்பட்டது. இந்த திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டிருக்காவிடின் பல்லாண்டுகளாக சிறையில் வாடும் பலநூறு தமிழ் அரசியல் கைதிகளின் பிணையும் விரைவான விடுதலையும் கேள்விக்குறியே?

# ஆயுதப் போராட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும்

இனம், மொழி அல்லது மதம் ஆகியவற்றால் வேறுபட்டு வரையறுக்கப்பட்டட பல சமூகங்கள் ஒரு நாட்டில் வாழும்போது அப்பல்வேறு சமூகங்களின் உரிமைகள், அரசின் நிறுவனங்களில் அவர்தம் பிரதிநிதித்துவம் மற்றும் அரச அதிகாரத்தில் அவர்களின் பங்கு என்பவை குறித்து பல நிலையிலான கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

பெரும்பாலான தருணங்களில் ஆகக் குறைந்தது ஆரம்ப நிலைகளில் மட்டும் என்றாலும் அரச அதிகாரத்தைப் பகிர பெரும்பான்மைச் சமூகங்கள் மறுத்துவிடுகின்றன. இப்பெரும்பான்மை வாதம் ஏறத்தாழ உலகளாவியது. நட்பிணக்கமான பெரும்பான்மை இனங்கள் இல்லை அதேபோன்று நட்பிணக்கமான சர்வாதிகாரிகளும் இல்லை. அரச அதிகாரத்தைப் பகிர்வதை மறுத்தலினால் சுயாட்சிக்கான கோரிக்கை வரை பிரச்சினை உயர்ந்துபோய் விடுகிறது. சில சமயங்களில் அது பிரிவினைக் கோரிக்கை வரை கொண்டு போய் விடும். இலங்கை இதற்கு விதிவிலக்கல்ல.

சிறுபான்மை சமூகங்கள் பரந்து வாழும் நாடுகளில் தேவைப்படுவது சமவுரிமை என்பதேயாகும். அப்படியான சமூகங்கள் தமது காத்திரங்களுக்கு அமைவாக சட்ட வாக்கத்திலும் நிறைவேற்று அதிகாரத்திலும் உரிய பிரதிநிதித் துவத்தைக் கேட்டு நிற்கின்றன. அத்துடன் சமவுரிமைக்கான அரசமைப்பு உத்தரவாதங்களையும் பாரபட்சமற்ற நிலைப்பாட்டையும் வற்புறுத்துகின்றன. வேலைவாய்ப்பில் தமக்குரித்தான பங்கினை எதிர்பார்க்கின்றன. பொருளாதார வாய்ப்புக்கள், கல்வி, பல்கலைக்கழக அனுமதி ஆகியவற்றில் வாய்ப்பின்மை போன்ற விடயங்களும் தோன்றி விடுகின்றன. அவர் தம் கலாசாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் உரிமை, அரசாங்கத்துடன் தொடர்பாடலில் ஈடுபடும் போது தமது மொழியை உபயோகிக்கும் உரிமை என்ற தேவையும் காணப்படும். தாமும் 'மக்கள்' அல்லது தமக்குரியது 'தம் நாடு; எனக் குறிப்பிட்டு, ஆகவே தாம் சிறுபான்மையினர்;

என விளிக்கப்படுவது குறித்து சில சிறிய சமூகங்கள் சினங்கொள்கின்றன. சில மொழிகளில் சிறுபான்மை; என்ற சொல் சிறுமைப்படுத்தும் அர்த்தத்தைக் குறித்து நிற்கின்றது.

ஒரு புலத்தில் செறிந்து வாழும் இனம் ஒன்று காணப்படுகின்ற இடங்களில் எல்லாம் பிராந்திய தன்னாட்சிக்கான வற்புறுத்தல் எழுந்து கொள்கிறது. அந்தக் கோரிக்கை எப்போதும் குறைகளுடன் தொடர்புபட்டதல்ல. சொல்லப்போனால் இழப்புக்களின் துயரங்கள் காணப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது முக்கியமற்றதாகக் காணப்படுகிறது. கலாசாரத் தனித்துவம் என்பதிலிருந்தே கோரிக்கை பிறக்கின்றது. எனினும், குறைகள் காணப்படுமிடத்து, கோரிக்கை மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. இதுதான் இலங்கையிலும் நடைபெறுகின்றது கொலனித்துவ கால முடிவின் விளைவாகவே குறிப்பாக பிரித்தானிய கொலனித்துவத்தின் பின்பு பெரும்பான்மை சிங்கள இனத் தலைமைகள் அரசியல் அதிகாரத்தினைத் தாங்களே வைத்துக் கொள்வதற்காக பயங்கரவாத தாக்கம் வெளியே தெரியாத வண்ணம் மேற்கொள்ளும் நடவடிக்கையான ‘மென் பயங்கரவாதத்தை (Soft-Terrorism) மேற்கொண்டனர்.

இவை அதிக அளவில் பதவி மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது. பயங்கரகரவாதத் தாக்கம் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். அதிகார மீறல், ஊழல், பாகுபடுத்தல், ஒருசார்பாய் நடத்தல், மதம், மொழி, கலாச்சாரம் போன்றவற்றைத் தாக்குதல், பொருளாதார அழிவுகளை ஏற்படுத்துதல் போன்ற செயல் வடிவமாக வெளிப்பட்டன.

மென் பயங்கரவாதத்தின் பாதிப்பை அனுபவப்பட்டவரன்றி பிறர் அறிய இயலாது வெளிப்படையாகத் தெரியாது. இது, பணம், அதிகாரம், பதவி, ஆசை எனும் கருவி கொண்டு, பொருண்மை கருவி துணையுடனோ அல்லது துணையின்றியோ, செயல்படுத்தப்பட்டது.

பயங்கரவாதம், (Terrorism) தீவிரவாதம் (Extremism) மற்றும் அடிப்படைவாதம் (Fundamentalism) ஆகியன ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. அடிப்படைவாதம் தமது கருத்தை பிறர் அடியொற்றி பின்பற்ற வேண்டுமெனும் நோக்கில் வன்முறை சார்ந்தோ அல்லது அதிகாரத்தின் வழியோ மேற்கொள்வது. அரசு முன்னெடுத்ததாக குற்றஞ்சாட்டப்படும் பயங்கரவதாத செயற்பாடுகள் அரச பயங்கரவாதம் எனப்படுகிறது அரசப் பயங்கரவாதம் என்பது தம் மக்கள் மீதே அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் குறிக்கும். அரசப் பயங்கரவாதம் எனும் போது தமது நாட்டு மக்களுக்கிடையே இனக்கலவரங்களை ஏற்படுத்துதல் மக்களின் அடிப்படை மனிதவுரிமைகளை மீறுதல், சட்டத்துக்குப் புறம்பான சித்திரவதைகளுக்கு தம் நாட்டு மக்களை உட்படுத்துதல், சட்டத் திட்டங்களை மதிக்க வேண்டிய அரசே சட்டத்திட்டத்துக்கு புறம்பான ஆயுதக் குழுக்களை உருவாக்கி ஆட்கடத்தல்கள், காணாமல் போதல்கள், மக்களை அச்சுறுத்தலுக்கு உற்படுத்துதல், அடிப்படை சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்களை மீறுதல், தமது நாட்டுப் பொதுமக்களைப் படுகொலை செய்தல், சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை மறுத்து, அவர்களை இனவழிப்பு செய்தல் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகள் அரசப் பயங்கரவாதம் ஆகும்.

தமிழ் தேசியத்தின் நியாயமான அரசியல் அபிலாசைகள் நிராகரிக்கப்பட்டன. சிறுபான்மை மக்கள் அச்சத்துடன் வாழ்வைக் கொண்டு செல்லும் சூழல் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையே பிரிவினை கூர்மைப்படுத்தப்பட்டது, இப்படியே பெரும்பாலான இனமோதல்கள் ஏற்படுத்தப்பட்டன. தனிச் சிங்களச் சட்டம், 'பௌத்தம்' அரச சமயமாக்கப்படல், இலங்கைக் குடியுரிமைச் சட்டம் தரப்படுத்துதல், தமிழ் மக்களின் நிலப்பரப்பு ஆக்கிரமிப்புச் சட்டங்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், காணிப்பதிவு, சிறுபான்மையினரின் வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, சிங்கள மயமாக்கம், வேலைவாய்ப்பில் இனத்துவேசம், இனக்கலவரம், சிங்களப் பேரினவாதம், படைச்சேர்க்கை, சட்டரீதியற்ற கைதுகளும் தடுத்து வைப்புக்களும் ஆட்கடத்தல்களும் காணாமல் போதல்களும் இன்னோரன்ன துறைகளில் பாரிய பாதிப்புக்களை எல்லா முனைகளிலும் திட்டமிட்டு விழுங்கியது இவ்வாறு ஆயுதப் போராட்டத்துக்கு பல காரணங்கள் காணப்படினும் 1970 ஆண்டு காலகட்டத்தில் மாணவர்களை ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளிய முக்கிய காரணங்களில் ஒன்றான தரப்படுத்தலிலிருந்து எனது அனுபவங்களையும் பதிவது பொருத்தமானதென கருதுகின்றேன்

## "தரப்படுத்துதல்" (standardization)

இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்துக்குள் தள்ளப்பட்டமைக்கான மேலேயுள்ள காரணங்கள் போல் இனரீதியான தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டு கல்வி மறுக்கப்பட்டமையாலும் தமிழ் மாணவர்கள் ஆயுதப்போராட்டத்துக்குள் தள்ளப்பட்டார்கள். 1958ஆம் ஆண்டுக்கும் 1972ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் நாடாளுமன்ற பகிஸ்கரிப்பு தேசிய எதிர்ப்புகள் எனப் பல்வேறு போராட்டங்கள் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எழுதப்பட்ட ஒப்பந்தங்களும் கிழித்து எறியப்பட்டதோடு தொடர்ச்சியாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டன. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டதன் விளைவு யாதெனில் விரும்பியோ அல்லது விரும்பாமலோ சாத்வீகவழிப் போராட்டத்தின் வடிவம் திசை மாறி ஆயுதப்போராட்டமாக மாறத் தொடங்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது.

1956ஆம் ஆண்டு நீதி நியாயத்துக்குக் குரல் கொடுத்த கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவை கால ஓட்டமும் கடும் போக்கும் பதவி ஆசையும் 1972ஆம் ஆண்டு முற்றாக மாற்றிவிட்டது இவர்களின் வழிவந்த உழைக்கும் வர்க்கத்தின் தோழர்கள் எனத் தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்ட இடதுசாரித் தோழர்கள் முதலாளித்துவத்தின் தோழர்களாகி அமைச்சர்களுமாகினர். காலமும் தேவைகளும் அடிப்படைக் கொள்கைகளையே புறந்தள்ளின.

இலங்கையில் தனித்தேசிய இனமான தமிழ் சமூகம் அரசுத் துறைகளில் செல்வாக்குச் செலுத்தியமை சிங்களவர்களிடையே எரிச்சலையும் பொறாமையையும் உருவாக்கியது. இதனால் தமிழர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் காலத்துக்கு காலம் பல தமிழர் விரோதச் சட்டங்களை கொண்டுவந்தனர். 1956ல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தைத் தொடர்ந்து 1972ஆம் 1978ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட புதிய

அரசியல் அமைப்புக்கள் அந்த அரசியலமைப்புகளின் மூலம் கொண்டு வரப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட சில பாதகமான சட்டங்களால் தமிழ் தேசியத்தின் மொழி மதம் கலாசாரம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன. தமிழ் மக்கள் சமத்துவத்துவமாக சுயாதிபத்தியத்துடன் கௌரவமாக வாழ விரும்பிய போதிலும் சிங்கள பௌத்த தேசியவாதிகளினால் அவை முற்றாக மறுக்கப்பட்டன.

1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பைப் புறக்கணித்து கண்டனமும் எதிர்ப்பும் கறுப்புக் கொடிகளையும் தாங்கிய சில இளஞர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார்கள். இந்த இளைஞர்கள் எந்த வன்முறைச் செயல்களிலும் ஈடுபடவில்லை ஆனால் இந்த நிராயுதபாணியான இளைஞர்கள் பல வருடங்களாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள். இந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்ட காலகட்டத்தில் வடக்கில் எந்த ஆயுதக்குழுக்களும் இயங்கவில்லை. உண்மையில் தடுப்புக்காவலில் இருந்தவர்கள் இந்த ஆயுத இயக்கங்களை ஆரம்பிக்கவும். இல்லை ஆனால் வன்முறையற்ற ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்காக நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்தனர்.

வன்முறையற்ற செயற்பாட்டுக்காக சிறையிலிருந்த அவர்களது நிலை ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு எந்த விடயத்துக்குமான இடமோ அல்லது அர்த்தமோ கிடையாது என்கிற வாதத்துக்கு வலுவூட்டியது. தரப்படுத்தல் தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்க முடியாததாகிற்று. ஈழத்தமிழரின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது பல்கலைக்கழக அனுமதிக் கல்வியே தமது சொத்து எதிர்காலம் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருந்த தமிழ் மாணவ சமூகத்தின் எதிர்காலத்தை கேள்விக் குறியதாக்கியது. இது இளைஞர்களை ஆயுதப்போராட்டத்தின் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியபொழுதில் 1983 திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச ஆதரவுடன் இடம்பெற்ற பயங்கரவாத இனக்கலவரமும் போராட்ட அமைப்புகளின் தீடீர் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலப் பகுதியில் (1948) இலங்கைத் தமிழர்கள் கல்வியில் சிறப்புற்று இருந்தமை மட்டுமன்றி குறிப்பாக வடக்கில் பல கல்லூரிகளை நிறுவி உயர் கல்வி பெற்று மேம்பட்டனர். தமிழ் மக்கள் கல்வியிலேயே மிகுந்த பற்றுடையவர்களாக, கல்வியிலேயே வளர்ந்தவர்கள். கல்வியை ஆதாரமாகக் கொண்டு தங்களுடைய சிந்தனையையும் வாழ்கையையும் நடத்தியவர்கள். தமிழர்கள் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவம் அவர்களின் புலமைசார் மரபு ஆகியவை அவர்கள் கல்வியில் சிறப்புற ஏதுவாக்கின. ஒப்பீட்டளவில் சிங்கள மாணவர்களைவிட விட அதிக விழுக்காடு தமிழ் மாணவர்கள் உயர் கல்வி கற்றனர் இதைச் சீர் அற்ற ஒரு நிலையாகக் கருதிய சிங்களப் பெரும்பான்மை அரசுகள் கல்வி தரப்படுத்தல் சட்டங்களைக் கொண்டுவந்தன. இந்தத் தரப்படுத்தல் சட்டங்கள் உயர் கல்வி வாய்ப்புக்களை சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களின் தொகை அடிப்படையில் பிரித்தது. அதாவது அதிக புள்ளிகள் பெற்ற திறமை வாய்ந்த தமிழ் மாணவர்கள் வாய்புக்களை இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

இலங்கையில் கொண்டுவரப்பட்ட கல்வித் தரப்படுத்தல் சட்டங்கள் ஒரு பார்வையில் சீர்திருத்த செயலாக்கங்கள் ஆகும் அதாவது காலனித்துவ சட்டங்களால் பின் தள்ளப்பட்ட சிங்கள மாணவர்களுக்கு கூடிய வாய்புக்களை வழங்கி இலங்கையில் தமிழ் சிங்கள கல்வி நிலையில் ஒரு சீர் நிலையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக சிலர் வாதிடலாம். இருப்பினும் இதை அன்றைய அரசுகள் நிறைவேற்றிய முறை தமிழ் மாணவர்களுக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியது தனிச் சிங்களச் சட்டம் இனக்கலவரங்களின் பின் புலத்தில் நின்று பார்க்கையில் இது தமிழ் மாணவர்களின் கல்வி வளங்களை வழி மாற்றும் செயற்பாடு என்றும் தோன்றுகின்றது. இனரீதியான தரப்படுத்தலினால் கல்வி மறுக்கப்பட்டது தமிழ் இளைஞர்கள் கல்வித்துறையில் தாங்கள் கொண்ட ஏமாற்றத்தையும் தாக்கத்தையும் ஒதுக்கலையும் கண்டு தங்களுடைய எதிர்காலம் ஒரு கேள்விக்குரியாகியதனால் தமிழ் மாணவர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்பட்டனர் இது அரச கொள்கை வகுப்பாளர்கள் செய்த பெரும் பிழை. இனப்பிரச்சினைக்கு வித்திட்ட இந்தத் தரப்படுத்தல் எப்படி வளர்ச்சியைச் சீர்ப்படுத்தியது?

1967, 1971, 1979ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட கல்வித் தரப்படுத்தல் சட்டங்களில் 1971 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் தமிழ் மாணவர்களின் கல்வி வளங்களை வழி மாற்றும் செயற்பாடாக காணப்பட்டது மட்டுமின்றி பாதிக்கப்பட்ட தமிழ் மாணவ சமூகம் உணர்வு பூர்வமான போராட்டங்களை முன்னெடுக்க வழியமைத்து சிறிமாவோ அமைச்சவையில் கல்வி அமைச்சர் இலங்கை இனப்பிரச்சனையில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தார். 'தரப்படுத்துதல்' (standardization) முறையை மீண்டும் கொண்டுவரப்பட்டமையாகும் இவ்வாறு தரப்படுத்துதல் முறையைக் கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் யாதெனில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளில் தேர்வு பெறும் தமிழர்களின் விழுக்காடு 37.2 மருத்துவத்தில் 40.5 வேளாண்மைத் துறைகளிலும் 41.9 எனக் காணப்பட்டது இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத பெரும்பான்னையினர் முக்கிய துறைகளில் பெரும்பான்மையின மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதற்காக பெரும்பான்னையினரின் ஒரு பகுதியினரின் தூண்டுதலினால் அன்றைய பிரதமர் சிறிமாவோ அம்மையாரின் அரசினால் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் க.பொ.த. உயர்தரக் கல்வியில் நான்கு பாடங்களிலும் ஆகக் கூடுதலான புள்ளிகைப் பெற்றவர்கள் (Aggregate) என்ற அடிப்படையில் பல்கலைக்கழகத் தெரிவு இடம் பெற்றது. ஆரம்பத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப்புள்ளியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதில் 1970களில் கூடுதலான மாணவர்கள் வடக்கிலிருந்தே தெரிவு செய்யப்பட்டார்கள். இதனால் பெரும்பான்மை இனமாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்படும் வாய்ப்புக் குறைவடைந்தது.

பல்கலைக்கழக அனுமதிக்கு தரப்படுத்தல் முறை சட்டமாகக் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வட மாகாணத்தில் பல்கலைக்கழக நுழைவுக்காகப் பரீட்சை எழுதி அதன் பெறுபேறுகளை எதிர்பார்த்திருந்த மாணவ மாணவிகள் அதிகமான

புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும் தரப்படுத்தல் முறை மாவட்டரீதியின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்பட்டதனால் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் சந்தர்ப்பங்களை இழந்தனர். இந்தத் தரப்படுத்தல் முறையினால் குறிப்பாக பெரும் பாதிப்பை சந்தித்தவர்கள் யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும் அந்த மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதர (க.பொ.த) உயர்தர பரீட்சை எழுதிய மாணவ சமூகமேயாகும்.

முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது யாதெனில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் கொண்டுவரப் பட்ட பொழுது தமிழ் மொழியும் தொடர்பு மொழியான ஆங்கில மொழியும் புறக்கணிக்கப்பட்டன. 1950ஆம் 1956 ஆம் ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் பிறந்தவர்களே 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தினாலும் 1970ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அம்மணியின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தலினாலும் பெரும் பாதிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டனர். போராளிக் குழுக்களை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கிய போராளிக் குழுத் தலைவர்கள் 1950ஆம் 1956ஆம் ஆண்டிற்கு உட்பட்ட காலகட்டத்தில் பிறந்தவர்களேயாவர். இந்தத் தரப்படுத்தல் மசோதா நடை முறைக்குக் கொண்டு வரப்பட்டு தமிழ் மாணவ மாணவிகளின் எதிர்காலம் கேள்விக்குட்படுத்தப்பட்டது மட்டுமின்றி தமிழ் மாணவ சமுதாயத்தின் கடும் கோபத்தையும் தூண்டுவதாக இந்த மசோதா அமைந்தது. தரப்படுத்தல் முறை ஏற்படுத்திய பாரதூரமான பாதகமான பாதிப்புக்களை முழுமையாகவும் உடனடியாகவும் அன்று உணரத்தவறிய மிதவாதத் தமிழ் அரசியல் தலைமைகளிடமிருந்து மாணவர்களும் இளைஞர்களும் தூரப்படுத்தப்பட்டனர்.

அந்தக் காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியில் இளைஞர் பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்த அமிர்தலிங்கத்தைச் சந்தித்த சில இளைஞர்கள் தமிழரசுக் கட்சியின் சார்பாக தரப்படுத்தல் மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை வைத்தனர். அதைத் தொடாந்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளையடுத்து தந்தை செல்வா தலைமையில் 11பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு அக்குழு பிரதமர் சிறிமாவைச் சந்திக்க முயன்ற போதும் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தக் கோரிக்கையை ஏற்காது கல்வி அமைச்சரைப் போய்ப் பார்க்கும் படி கூறியுள்ளார்.

## யாழ் கல்லூரிகள் ஐந்து நட்சத்திர விடுதிகள்

கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தைச் சார்ந்த அமைச்சர் பதிவுதீன் மொகமட் அவர்களிடம் இந்த மசோதா சட்டரீதியான அந்தஸ்த்தை பெறும் நிலையில் ஏற்படப் போகின்ற பாதிப்புக்களையும் பிரச்சனைகளையும் எடுத்துக்கூறிய பொழுது கல்வி அமைச்சரின் பதில் யாதெனில் இது அமைச்சரவை முடிவு அதை மாற்றும் அதிகாரம் தன்னிடம் இல்லை தன்னால் ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறி கையை விரித்ததுடன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கல்லூரிகளை ஐந்து நட்சத்திர விடுதியெனவும் குறிப்பிட்டமையை இங்கே குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த தரப்படுத்தலினால் ஆயிரக்கணக்கான தமிழ் மாணவ மாணவிகளின் எதிர்காலம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது இளைஞர்கள் யுவதிகளின் எதிர்காலம் கேள்விக்கு உட்படுத்தப் பட்டமையினாலும் அதனைத் தொடர்ந்து வந்த இனக் கலவரங்களினாலும் குறிப்பாக 1983ஆம் ஆண்டில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனக்கலவரத்தினால் பல்லாயிரக்கணக்கானோர் திசை மாறிய பறவைகளானார்கள். தரப்படுத்தலைக் கொண்டுவந்த சிறிமா அம்மையாரும் 1983ஆண்டு ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் ஆட்சி காலத்தில் நடந்தேறிய இனக்கலவரமும் போராட்டத்தின் வடிவம் மாறியமைக்கு முக்கிய காரணங்களாகும். தரப்படுத்தல் முறையினால் குறிப்பாக வடமாகாண மாணவ சமூகத்தை பாதிப்புக்கு உட்படுத்தி திட்டமிட்டு வாழ்கைப் பாதையை திசை திருப்பியமை அன்றைய ஆட்சியாள்களால் திட்டமிட்டு நடை முறைப்படுத்தப்பட்ட வரலாற்றுத் தவறாகும். இந்த மசோதாவினால் தமது எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகும் என உணர்ந்த இளைஞர்கள். 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பினை நிராகரித்து தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் பதவி விலக வேண்டுமென மிகப் பெரிய போராட்டங்களை தொடர்ந்து நடாத்தியதுடன் 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பின் அடிப்படையில் உறுதிப்பிரமாணம் எடுக்க வேண்டாம் என்றும் மிதவாதத் தலைவர்களை கேட்டுக் கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுக் குழுக்கூட்டம் திருநெல்வேலியில் நடைபெற்ற பொழுது இளைஞர்களின் வேண்டுகோள்பற்றிய விடயம் விவாதிக்கப்பட்டு தந்தை செல்வா மட்டும் பதவியைத் துறந்தால் போதுமெனப் பொதுச் சபை ஏகமனதாக முடிவெடுத்ததையடுத்து தந்தை செல்வா மட்டும் பதவி துறந்தார்.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் எழுந்ததுடன் சேகுவேராவின் சிந்தனையும் கம்யுனிசமும் தமிழ் இளைஞர்களிடையே செல்வாக்கு செலுத்த அதன் போக்கில் ஆயுதப் போராட்டமாக உருமாற்றம் அடைந்தது. தமது எதிர்காலம் சூனியமயமாக்கப்பட்டு விட்டதாக ஏற்பட்ட மனக்குமுறல் மிதவாதத் தலைமைகளின் செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்தமையால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாகவும் மாறிமாறி பதவிக்கு வந்த அரசுகளின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகவும் காலாகாலமாக தமிழ் மக்களால் நடாத்தப்பட்ட அகிம்சை வழிப்போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் எல்லாமே எந்த ஒரு தீர்வையும் பெற்றுத்தர தவறியமையினாலும் பல தமிழ் இராணுவக் குழுக்கள் மேலெழுந்தமை ஆச்சரியத்துக் குரியதல்ல. அதன் பேறாக முழு அளவிலான பிரிவினைப் போர் தொடர்ந்து வெடித்தது.

வட பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பல ஆயுதக் குழுக்கள் முளைத்தன பின்னர் அவை பல இயக்கங்களாக மாற்றமடைந்தன. ஈழத்துக் காந்தி தந்தை செல்வா போன்ற உன்னதமான அரசியல் தலைவர்களால் ஈழத்தமிழினத்தின் இருப்பைக் காக்க தொடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் அனைத்தும் சாகடிக்கப்பட்டபோது அகிம்சை முறைப்போராட்டங்கள் அனைத்தையும் அதிகாரவர்க்கம் ஆயுதம் கொண்டு அழித்தொழித்த போது, ஈழத்தமிழினத்தின் இருப்பைக் காப்பாற்ற இறுதி முயற்சியாய் கையிலே ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாய நிலைக்கு

தமிழினம் தள்ளப்பட்டது. இந்நிலையில் 1971ஆம் ஆண்டு தரப்படுத்தலினால் பாதிக்கப்பட்ட அன்றைய மாணவச் சமூகத்தின் பெரும்பான்மையானவர்களினால் ஈழ மாணவர் பொது ஒன்றியம் மற்றும் ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பு என ஆரம்பிக்கப்பட்ட அமைப்புக்கள் 1980ஆம் ஆண்டுவரை பல போராளிக் குழுக்களாகச் செயற்படத் தொடங்கின.

## நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1974

1974ஆம் ஆண்டு விமரிசையான கொண்டாட்டங்களுடன் யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு கூட்டப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள வீரசிங்கம் அரங்கத்தில் ஜனவரி 3 முதல் ஜனவரி 10 வரை மாநாடு நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது உலகம் முழுவதும் இருந்து பல தமிழ் அறிஞர்கள் இலக்கிய ஆர்வலர்கள் யாழ்ப்பாணத்தில் குவிந்து கொண்டிருந்தார்கள். ஐம்பதாயிரம் பேர் மொத்தமாகத் திரண்டு வருவார்கள் என்பதை யாருமே எதிர்பார்க்கவில்லை. இதனால் விழா அமைப்பாளர்கள் ஒரு திறந்தவெளி அரங்கில் இடம் கிடைத்தால் வசதியாக இருக்கும் எனக்கருதி, அன்றைய யாழ்ப்பாணத்தின் மேயர் அல்பிரட் துரையப்பாவிடம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்துவதற்காக திறந்தவெளி அரங்கைத் தந்து உதவும்படி வேண்டிக்கொண்டபோதிலும் துரையப்பா நிர்த்தாட்சண்யமாக மறுத்து விட்டார்.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அமைப்பாளர்கள் பல நெருக்கடிக்கு மத்தியிலும் மாநாட்டை ஆரம்பிக்கவே செய்தார்கள். மாநாடு ஆரம்பிக்கப்பட்டு சில நிமிடங்களில் காவல்துறை வண்டிகள் உள்நுழைந்ததைத் தொடர்ந்து கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. எல்லோரும் கலைந்து ஓடினார்கள் கீழே விழுந்தார்கள், மிதிபட்டார்கள் அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல் சிதறினார்கள் எல்லாம் முடிந்தபோது ஒன்பதுபேர் மிதிபட்டு மூச்சுத் திணறி இறந்துபோயிருந்தார்கள். அல்பிரட் துரையப்பா மீதான் முதல் கோபம் இங்கிருந்துதான் முளைவிட்டது எனலாம்.

மூர்க்கம் நிறைந்த பொழுதுகள் எங்கனும் வியாபித்தன. அரசியல் திறம்பட் பேசுபொருளாகியது. விடுதலை தமக்காக பாரிய இலக்கு என்ற எண்ணவுணர்வு இளைஞர் யுவதிகளில் ஆழப்பதியத்தொடங்கியது. இந்நிலையில்தான் 1976ஆம் ஆண்டு தமிழர் அரசியலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் இலங்கை தொழிளாளர் காங்கிரஸ் என்பன இணைந்து மேற்கொண்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) உருவாக்கப்பட்டது. தனி நாடு ஒன்றே தீர்வு என்ற கோரிக்கை வெளிப்படையாகவே சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையாக 1976ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டை பன்னாகத்தில் நடந்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

## 1977ஆம் ஆண்டுத் தேர்தல்

1977ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 4/5 பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஜயவர்த்தன 1977ஆம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்களுடைய கோரிக்கைகளான கல்வி அரசவேலைவாய்ப்பு சிங்களக் குடியேற்றத்தை

தடுத்தல், தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படும் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் தேர்தலில் பெரும்பான்மை கிடைத்ததையடுத்து அந்த உறுதிமொழிகள் எல்லாம் வழமைபோல கைவிடப்பட்டன.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழீழத்துக்கான அங்கீகாரத்தை தமிழ்மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியதைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி 24தேர்தல் தொகுதிகளில் 18 தொகுதிகளை கைப்பற்றியது இதன் எதிர் வினையாக மலையகத்தில் கலவரம் வெடித்தது அங்கிருந்து ஆரம்பமாகியது தமிழ் இளையோரின் ஆயுதப் போராட்டத்தின் தொடக்கப்புள்ளி. தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியீட்டியதை யடுத்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் முதன் முதலாக இலங்கை அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி ஏற்ற முதலாவது தமிழ் தலைவராவார் இந்தப் பதவியின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடையமுடியும் என மிதவாதத் தலைமைகள் நம்பிக்கை கொண்டபோதிலும் அதிலும் ஏமாற்றமே மிஞ்சியது.

1978 அரசமைப்பு, தீர்வு ஒன்றுக்கான இன்னுமொரு சந்தர்ப்பமாக அமைந்தது. ஆனால் சரியான முறையில் பதிலளிக்க ஐ.தே.க தவறியமையால் தமிழர்கள் அரசமைப்பை உருவாக்குவதில் பங்கேற்க மறுத்தனர். இலங்கை வரலாற்றில் இரண்டாம் முறையாக தமிழ்ப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாமல் அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிங்களவரிடம்தான் அரச அதிகாரம் உள்ளது என்பதனை இது தெளிவாகக் காண்பித்து நிற்கின்றது. இலங்கையில் பௌத்த மதத்தின் மேன்மையான இடத்தையும் ஒற்றை யாட்சித் தன்மையையும் மாற்றவே முடியாது என 1978 அரசமைப்பு அறுதியிட்டதுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கான வழியையும் சமைத்தது.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொத்துவில் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கனகரத்தினம் 1977ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் திகதி ஆளும் கட்சிக்கு போய் சேர்ந்து கொண்டார். 1978ம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி கனகரத்தினம் கொழும்பு கொள்ளுப்பிட்டி 5ஆம் ஒழுங்கையில் அமைந்திருந்த தனது வீட்டிலிருந்து கிளம்பி காரை நெருங்கும் பொழுது கனகரத்தினத்தின் மீது குண்டு பாய்ந்தது படுகாயம் அடைந்த கனகரத்தினம் சிகிச்சை பலனின்றி மூன்று மாதங்களில் இறந்துபோனார். கனகரத்தினம் கொலை செய்யப்பட்டமையைப் புலன்விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் பஸ்தியாம்பிள்ளை மன்னார் சென்றிருந்த வேளையில் 1978ஆம் ஆண்டு ஏப்பிரல் 7ஆம் திகதி மன்னாரில் வைத்துக் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து கடும் கோபமும் ஆத்திரமுமடைந்த அன்றைய ஜனாதிபதியாகிய ஜே.ஆர்.ஜயவர்தனா 1978ம் ஆண்டின் 16ம் இலக்கச் சட்டத்தின்கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட பின்னர் 1978ம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் திகதி பலாலியிலிருந்து கொழும்பு வந்த (AVRO) விமானம் இரத்மலானை விமான

நிலையத்தில் தரையிறங்கிய சில நிமிடங்களில் வெடித்துச் சிதறியது. 1978ஆம் ஆண்டு டிசம்பர் 5ம் திகதி யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலி மக்கள் வங்கிக் கிளை கொள்ளையிடப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் 1978ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜயவர்த்தனா புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து தன்னை இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணமும் செய்து கொண்டார்.

தனது அரசியலமைப்பின்படி ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாக்கவும் மாற்ற முடியாதே தவிர மற்றைய சகலதையும் செய்யமுடியும் என்று கூளுரைத்த ஜே.ஆர் ஜயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் 1979ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ம் திகதி பயங்கரவாத (தடைச்) சட்டம் நாடாளுமன்றத்தில் மூன்று வருடங்களுக்கு (தற்காலிகச்) சட்டமாக கொண்டுவரப்பட்டது. இவ்வாறு கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தை மக்கள் தீர்ப்புக்கு (Referendum) விடவேண்டுமா? இல்லையா? என்ற முடிவை எடுக்கும் கடப்பாட்டை அரசியலமைப்பின் பிரகாரம் உயர்நீதிமன்றமானது கொண்டிருந்த போதிலும் மக்கள் தீர்ப்புத் தேவையில்லையென உயர்நீதிமன்றம் எடுத்த எதிர்பார்க்காத முடிவுக்கமைய இந்தச் சட்டமூலமானது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப்பலத்துடன் 1979ஆம் ஆண்டு ஆடி மாதம் 19ஆம் திகதி அன்று ஜனாதிபதியின் சான்றுரையைப் பெற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

1978ஆம் ஆண்டில் 16ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருந்த நிலையில் 1979ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் பிரகாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமானது மீண்டும் தடைசெய்யப்பட்ட இயக்கமாக வலியுறுத்தப்பட்டது. பயங்கரவாத (தடைச்) சட்டத்தின் 29ஆம் பிரிவில் இந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் நாளிலிருந்து மூன்று வருடங்களுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறப்பட்டிருந்த போதிலும் பின்னர் 1982ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டு இன்றுவரை நடைமுறையிலுள்ளது.

இவ்வுலகில் அனைத்து உயிரினங்களும் தங்களால் தாங்கும் நிலைக்கு பொறுத்துப் போகின்றன. பொறுமை காப்பதனால் பலன் இல்லை எனும் நிலையில் அனைத்து உயிரினங்களுமே போராடத் துணிகின்றன. ஏனெனில், அவை போராடாவிட்டால் வாழ்கை என்பதே இல்லாது போய்விடும். சமத்துவமின்மை நிலவும் போது இது பயங்கரவாதமாகவோ அல்லது தீவிரவாதமாகவோ வெளிப்படுகிறது. தீவிரவாதம் மென்பயங்கரவாதத்தின் குழந்தையாகும். மென் பயங்கரவாதம் அதிகரிக்கும் போது அதை எதிர் கொள்ள வேறு வழியின்றி நாடும் செயல்… இதனால் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்துக்குள் தள்ளப்பட்டனர்.

# பயங்கரவாத தடுப்புச்சட்டமும் சிங்கள தலைமைத்துவங்களும்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னாள் உயர் கல்வி அமைச்சர் எஸ் பி. திசாநாயக்க அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மங்கள முனசிங்க நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், ஆகியோர் ஆற்றிய நாடாளுமன்ற உரைகள் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதற்கும் யார் யார் பொறுப்பு என்பதை ஒப்புறுதிப்படுத்துகின்றன.

1. **பயங்கரவாதம் தோன்றவும் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டதற்கும் சிங்கள தலைவர்களே முக்கிய காரணமானவர்கள என மங்கள முனசிங்க நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சியமும்**

2. **முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவிலுள்ள (University of Verginia) பல்கலைக் கழகத்தின் மாணவர்களுடன் 04/11/2011ஆம் ஆண்டு நடைபெற்ற (THE ABSENCE OF WAR IS NOT PEACE) கலந்துரையாடல் ஒன்றின் போது தெரிவித்த கருத்தும்**

3. **உயர் கல்வி அமைச்சர் எஸ் பி. திசாநாயக்க யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு 2011ஆம் ஆண்டு ஜப்பசி மாதம் 21ஆம் திகதி ஆற்றிய உரை**

4. **நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் அமைச்சர் டலஸ் அழகப்பெருமா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்**

**விக்கிரமசிங்க, ஆகியோர் ஆற்றிய உரைகள் அவர்களது கருத்துக்கள் என்பன இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதற்கும் யார் யார் பொறுப்பு என்பதை ஒப்புறுதிப்படுத்துகின்றன.**

## மங்கள முனசிங்கவின் சாட்சியம்

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வினை எட்டுவது விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தியாவிற்கான தூதுவராக பணியாற்றியவரும்மான மங்கள முனசிங்க ஆணைக்குளு நியமிக்கப்பட்டு அதன் சிபார்சுகள் தூக்கி எறியப்பட்டமை யாவரும் அறிந்ததே பயங்கரவாதம் தோன்றவும் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டதற்கும் சிங்கள தலைவர்களே முக்கிய காரணமானவர்கள் என மங்கள முனசிங்க நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு 2010ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி அளித்த சாட்சியத்தில் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

பெரும்பான்னை இனத்தை சார்ந்த அரசியல்வாதிகளிலும் நியாயமாக சிந்தித்து செயலாற்றும் சில விதிவிலக்கானவ்ர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். என்பதை .இவர் அளித்த சாட்சியம் உறுதிசெய்கின்றது. அவர் மேலும் தனது சாட்சியத்தில் 1956ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தின் காரணமாக தமிழ் மக்களின் எதிர்காலம், பொருளாதாரம் கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்தும் இங்கு சிதைவடைந்தமை முக்கியமாக குறிப்பிடக்கூடிய விடயம் என்றும் கூறியுள்ளார்.

மேலும் காலத்துக்குக் காலம் தமிழ் தலைமைகள் அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாடுகள் நடைமுறைப் படுத்துவதை எதிர்க்கட்சிகள் தீவிரமாக எதிர்த்ததாலேயே தீர்வு எதுவும் சாத்தியமாகவில்லையென்றும், விசேடமாக பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா கண்டியிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்டதையும் காலத்துக்குக் காலம் செய்து கொள்ளப்பட்ட பல உடன்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படாமையே பயங்கரவாதத்தின் தோற்றம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

இனம் மதம் மொழி என்பவற்றை மூலதனமாகக் கொண்டு அரசியல் நடாத்தும் பேரினவாத அரசியல்வாதிகளின் மத்தியில் இனம் மதம் மொழி பேதங்களுக்கு அப்பால் சரியானதை சரியென்றும் பிழைகளை பிழையென்றும் உறுதியாகக் கூற வேண்டிய இடத்தில் கூறும் நியாயமாக யதார்தரீதியாக சிந்திக்கும் கண்ணியமான அரசியல்வாதிகளும் காணப்படுவது ஆச்சரியத்துக்குறியதே எனினும் ஆறுதலானது.

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒப்புதல் வாக்குமூலம் 2011

பௌத்த மேலாதிக்கமும் அதற்கு துணைபோன சக்திகளுமே தமிழர்களிற்கு எதிரான இனவாதத்துக்கு காரணம் என சுவீடனைச் சேர்ந்த பேராசிரியரான பீற்றர் சால்க் ரொறன்ரோவில் இடம்பெற்ற கருத்தரங்கில் குறிப்பிட்டள்ளார் இந்தக் கூற்றை ஒப்புறுதிப் படுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க

1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று இந்த நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதியாக பதவி வகித்து மீண்டும் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்று மொத்தமாக பதினொரு ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகித்தவரும் தனிச் சிங்களச் சட்டத்தை 1956ஆம் ஆண்டு ஆனி மாதம் 05ஆம் திகதி. நடைமுறைக்கு கொண்டு வந்த சாலமன் பண்டாரநாயக்காவின் புதல்வியுமான சந்திரிகா குமாரதுங்க அமெரிக்காவிலுள்ள (University of Verginia) பல்கலைக் கழகத்தில் 04/11/2011ஆம் ஆண்டு மாணவர்களுடன் நடைபெற்ற ( கலந்துரையாடல் ஒன்றின் போது தெரிவித்தது யாதெனில். எனது தந்தையார் பண்டாரநாயக கொண்டு வந்த தனிச சிங்களச் சட்டமே இலங்கை இனப்பிரச்சனையின் மூலத் தவறாக அமைந்து விட்டது என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் தனிச் சிங்களச் சட்டத்தால் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் சொல்ல முடியாத அளவுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்டன அவர்கள் கல்வி வேலைவாய்ப்பு என்பவற்றை அடைந்து கொள்வதில் தனிச்சிங்களச் சட்டம் பெரும் தடையாக அமைந்ததுடன் குறிப்பாக தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதைச் சிக்கலுக்குள்ளாக்கக் கூடிய சட்டங்கள் அனைத்தையும் ஆட்சியில் இருந்தவர்கள், கொண்டு வந்தனர். இது இன முரண்பாடுகளை இன்னும் அதிகரிக்கச் செய்தது இனத்துவ அரசியல் ஒரு தவறான பாதையாகும் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமெனில் பன்மைத்துவமே பயன்படுத்தக் கூடிய சிறந்த தெரிவாகும்.

போர் முடிந்த பின்னரும் கூட தாம் எதிர்பார்த்த எதுவுமே நடை பெறாததால் மக்கள் சோர்வடைந்துள்ளனர் இளைய தலை முறையினரிடமிருந்து உருவாகக் கூடிய புதிய அரசியல் தலைமை மூலமே போருக்குப் பின்னான காலத்திலாவது இனப் பிரச்சனைக்கு தீர்வினைக் காணமுடியும். இலங்கையின் இனப்பிரச்சனை காரணமாக அங்குள்ள மக்கள் எப்படி ஒரு சொர்க்கத்தை இழந்தார்கள் என்பதைத்தான் நீங்கள் (அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள்)எம்மிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த நாட்டில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமைக்கும் இன கலாச்சார அழிவிற்கும் இந்த நாட்டை ஆட்சி புரிந்த அரசியல் தலைமைகளே காரணமாகும் என்பதை சந்திரிகா குமாரதுங்கவின் காலம் கடந்த ஒப்புதல் வாக்கு மூலம் மிகத் தெளிவாகக் வெளிப்படுத்துகின்றதெனினும். தமிழர் வந்தேறு குடியினர் என்று இதே முன்னால் ஜனாதிபதி குமாரதுங்க தென்னாபிரிக்காவில் ஊடகவியலாளருடனான நேர்காணலில் குறிப்பிட்டிருந்தமை நினைவுபடுத்தப்பட வேண்டியதொன்றாகும்

1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச்சட்டம் 1972ஆம் ஆண்டுகொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பு பல்கலைக்கழகத் தரப்படுத்தல் (standardization) என்பவற்றினால் தமிழ் மக்கள் அன்று தொட்டு இன்றுவரை பாதிக்கப்பட்டார்கள், என வடக்கு- கிழக்கைப் பிரிக்க உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான சரத் சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழாம் வழங்கிய தீர்ப்பைப் பெற்ற மக்கள் விடுதலை முன்னனியானது காலம் கடந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது இதுதான் அரசியல்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை உருவாக்கியவர்கள் சிங்களத் தலைமைகளேயென்று 2011ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனும் கூறியிருந்தார்.

## உயர் கல்வி அமைச்சர் எஸ் பி. திசாநாயக்க 2012

யாழ் பல்கலைக்கழகத்துக்கு 2012ஆம் ஆண்டு தை மாதம் 11ஆம் திகதி விஜயமொன்றை மேற்கொண்ட உயர் கல்வி அமைச்சர் எஸ் பி. திசாநாயக்க அங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் 1972ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் புள்ளித்திட்டத்தினால் மாவட்டரீதியாக மாணவர்களின் உள்வாங்கல்கள் தடைப்பட்டு குறைவடைந்தது. இதுவே இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு காரணமாக இருந்தது என தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமைக்கு இந்த நாட்டை ஆட்சி புரிந்த அரசியல் தலைமைகளே காரணமாகும் என்பதை உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திசாநாயக்காவும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையின் மூலம் பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளார்.

## பிரதமர் ரணில் விக்கிமசிங்க

கல்வித் துறையில் தற்பொழுது உருவாகியுள்ள பிரச்சனைகள தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் ஓய்வு பெற்ற மேல் நீதி மன்ற நீதிபதி வராவெவ தலைமையில் அமைக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவின் கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிமசிங்க உரையாற்றுகையில்

1973, 1974, 1975 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள குளருபடியினாலேயே வடக்கில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானதை அரசாங்கம் மனதில் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு பல இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக் கழக வாய்ப்புக்கள் கிடைக்காமல் போனதே வடக்கில் தீவிரவாதம் உருவாகுவதற்கு காரணம் என்பதனை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

2012ஆம் ஆண்டு பல்கலைக் கழக மாணவ தெரிவில் (Z.Score) இசற் புள்ளி குளருபடி காரணமாக 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக் கழக வாய்ப்புக்கள் கிடைக்காத நிலையேற்பட்டுள்ளது என தெரிவித்திருந்தாா்.

## டலஸ் அழகப்பெருமா

டலஸ் அழகப்பெருமா ஆற்றிய உரையில் மும்மொழித் கொள்கைத் திட்டம் சரியான முறையில் அமுல் நடாத்தப்பட்டிருந்தால் புலிகளும் உருவாகியிருக்கமாட்டார்கள் யுத்தமும் நடைபெற்றிருக்காது என்று தனது கருத்தைக்கூறி முன்னாள் பிரதம மந்திரி டி.எஸ் சேனநாயக்காவே இதற்கு காரணம் எனக் கூறியுள்ளார்.

13ஆம் நூற்றாண்டிலிருந்து இரண்டு மொழிவாரி மாநிலங்களாக இருந்து பிரித்தானியரால் ஒன்றிணைக்கப்பட்ட சிலோனில் சுதந்திரம் அடைந்த பின்னர் முன்னாள் பிரதம மந்திரி டி.எஸ் சேனநாயக்கா மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடிறேற்றங்களால் இனப்பரம்பல் மாறுதலடைந்தது மட்டுமின்றி இன்றும் நில ஆக்கரமிப்பு ஒரு தொடர்கதைதான் எனவே இந்த நாட்டை ஆட்சி புரிந்த சிங்களத் தலைமைகள் அனைத்தும் ஆயுதப் போராட்டத்தின் தொடக்கத்துக்கு ஏதோ ஒரு வகையில் தமது பங்கை அளித்துள்ளனர்

இலங்கையில் தமிழரின் ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றதற்கு ஒரு புறத்தில் சிங்கள மேலாதிக்க ஆட்சியாளர்கள் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறைகளும் அதற்கும் மேலாக அரச பயங்கரவாதத் தாக்குதல்களும் மறு புறத்தில் அன்று குறிப்பாக சிங்கள மேலாதிக்க ஆட்சியாளர்கள் தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை ஏற்க மறுத்ததமையும் முக்கியமான காரணங்களாக அமைந்தது

## நியாயமான கோரிக்கைகள் நிராகரிப்பு

பல்லின மக்கள் வாழ்ந்த இந்த நாட்டில் ஆட்சியை கைப்பற்றி அரசியல் நடாத்துவதற்கு மொழியையும் மதத்தையும் மூலதனமாக்கிக் கொண்ட தேசியவாதிகள் என தங்களை அழைத்துக் கொள்ளும் இனவாத மதவாத தீவிரவாத சக்திகளின் கடும் போக்கினாலான சட்டங்களும் பிரகடனங்களும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் அதன் அடிப்படையில் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் கிழித்தெரிய வைத்தன.

ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தி நியாயமான தீர்வை வழங்கியிருந்தால் யுத்தத்தினால் ஈடுசெய்ய நியாயப்படுத்த முடியாத உயிர் இழப்புக்களும் உடல் உறுப்புக்களை இழந்து ஊணமானவர்களும் காணாமல் போனவர்களும் பெற்றோர்களை இழந்த சிறார்களும், மேலும் யுத்தத்தின் பின்னர் வடக்கில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அதிகரித்த இராணுவ மயமாக்கல், பிரதேசத்தில் நிலவிவரும் சமூகச் சீரழிவுகள், பாலியல் வன்முறைகள், காணி அபகரிப்புக்கள், மற்றும் வாழ்வாதார பிரச்சனைகள் போன்ற பாரிய பிரச்சனைகளுடன் வடக்கில் 49ஆயிரம் விதவைளும் கிழக்கில் 40ஆயிரம் விதவைகளுமாக மொத்தமாக எண்பத்தி ஒன்பது ஆயிரம் (89.000) விதவைகளும் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளும் உருவாகும் சூழ்நிலை தவிர்க்கப்பட்டிருக்கும்.

2011ஆம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டு திணைக்களத்தினால் (The Census and Statistics Department)எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் வடக்கில் 38,126 விதவைகள் உள்ளனர் எனவும் வடக்கின் மொத்தமாக உள்ள பெண்களின் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் விதவைகள் 10 வீதம் வடக்கில் உள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் துணைவியை இழந்தவர்கள 8,783பேர் எனவும் வடக்கின் மொத்த ஆண்களின் குடிசனமதிப்பீட்டின்படி 2.5 வீதமென குறிப்பிடப்பட்டுள்ளது இந்தப் புள்ளிவிபரங்கள் குடிசனமதிப்பீட்டு திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ள போதிலும் குடிசனமதிப்பீட்டிற்கு உட்படாதவர்கள் எத்தனைபேர் என்பது கேள்விக் குறியே?

1958ஆம் ஆண்டுக்கும் 1972ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் நாடாளுமன்ற பகிஸ்கரிப்பு தேசிய எதிர்புக்கள் என பல்வேறு போராட்டங்கள் பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எழுதப்பட்ட ஒப்பந்தங்களும் கிழித்து எறியப்பட்டதோடு தொடர்ச்சியாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டன. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டதன் விளைவுயாதெனில் விரும்பியோ அல்லது விரும்பாமலோ சாத்வீகவழிப் போராட்டத்தின் வடிவம் திசை மாறி ஆயுதப்போராட்டமாக மாறத் தொடங்கியது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் நடைமுறைக்கு வந்தது.

மகாத்மா காந்தி ஏழு பாவங்களை பட்டியலிட்டிருந்தார் அவையாவன: கொள்கை இல்லாத அரசியல், உழைப்பு இல்லாத செல்வம், நன்னெறி இல்லாத வியாபாரம், குணமற்ற கல்வி, மனிதத் தன்மையற்ற விஞ்ஞானம், மனச்சாட்சியற்ற இன்பம், தியாகம் இல்லாத வழிபாடு இந்த ஏழு பாவங்களில் கொள்கை இல்லாத அரசியலே மகாத்மா காந்தி முதலாவதாக பட்டியலிட்ட பாவமாகும். இந்தப் பாவமும் பல ஆயுதக்குழுக்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் உருவாக முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.



# அவசரகாலச் சட்டத்தின் தோற்றம்

ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சி புரியும் அரசிற்கு எதிராக திடீரென ஏற்படுத்தப்படுகின்ற புரட்சிகள், கலவரங்கள் மற்றும் கலகப் போராட்டங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர மிக அத்தியாவசியமானதாக கருதப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் தேவைக்கு ஏற்ப காலத்துக்குக் காலம் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின்கீழ் அவசரமானதுமாகக் கொண்டுவரப்படுகின்ற தற்காலிக ஒழுங்குவிதிகள் எனப் பொதுவாக பொருள்படுகின்ற போதிலும் ஒரு ஆட்சியில் ஜனநாயக நடைமுறையிலான மக்கள் வெளிப்பாடுகளை எதிர் கொள்கின்றபோது கறுப்புச் சட்டங்களை ஏந்திக் கொள்கின்றது ஜனநாயகப் பிறழ்வு ஏற்படுகின்ற காலகட்டங்களில் அவசரநிலை அறிவிப்பு அரசினால் கொண்டு வரப்படுவதாக எதிர்க்கருத்தும் கூறப்படுகின்றது.

1947ஆம் ஆண்டு ஆனி மாதம் 16ஆம் திகதி பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் (Public Security Ordinance) (Chapter 40) நடை முறைப்படுத்தப்பட்டது (25 of 1947) இந்த பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின 2ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியினால் அவசரகால ஒழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்படும் குறித்த பிரகடனப்படுத்துடன் 5ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதி அவசரகாலப் பிரமாணங்களை வெளியிடுவதற்கு தத்துவமளிக்கப்பட்டிருந்தார். பொதுவாக இந்தப் பிரகடனம் நாட்டின் அவசரநிலையென குறிப்பிடப்படுகின்றது. இது ஏனைய பலவற்றுடன் நாடாளுமன்றத்தைக் கடந்த நிலையில் சட்டத்தின் விளைவுகளைக் கொண்ட பலம் வாய்ந்த ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கினற விதிவிலக்கானதொரு நிலைமையாகும்.

அவசரகால ஒழுங்கு விதிகள் என அழைக்கப்படும் இவ் ஒழுங்கு விதிகள் அரசியல் அமைப்பைத் தவிர நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு முரணானதாகக் கூட அமையலாம். எவ்வாறாயினும் ஜனாதிபதியால் அறிமுகப்படுத்தப்படும் இவ் ஒழுங்கு விதிகள் பிரகடனம் செய்யப்படும் கால எல்லை நீடிக்கும் வரையே வலுவானதாக இருக்கும்

நாடாளுமன்றம் மாதாந்த அடிப்படையில் இதனை சாதாரண பெரும்பான்மையினால் அங்கீகரிக்க முடியும் இவ் அங்கீகாரம் மாதாந்த அவசரகாலநிலை விவாதத்தின் போது வழங்கப்படுகின்றது. அவசரகாலநிலை விவாதம் எனப்படும் பொது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவது ஜனாதிபதியின் பிரகடனமேயொழிய ஜனாதிபதியால் ஒருதலைப்பட்சமாக சட்டமாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்ல. இந்தச் சட்டம் சரியான முறையில் அமுல்படுத்தப்படாமையால் இந்தச் சட்டத்தின் மூலம் அதிகமான துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை காணக்கூடியதாக உள்ளது

1947ஆம் ஆண்டு ஆனி மாதம் 10ஆம் திகதி பொது மக்கள் கட்டளைச் சட்டம் ஒரு சட்ட மூலமாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பொழுது நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஏ.பி.டி. சொய்சா அவர்கள் கீழ் குறிப்பிட்ட தீர்க்க தரிசனக் கருத்தை வெளியிட்டிருந்தார். சட்ட ஒழுங்கிற்கமைய தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இப்படியான சட்டமொன்றினை அனுமதிப்பது விவேகமான செயலாக இருக்குமா? எதிர் காலத்தில் முறை கேடான அமைச்சரோ அல்லது முறைகேடான பிரதமரோ அப்பாவி மக்களைத் தடுத்து வைப்பதற்கு எதிர் காலத்தில் இச் சட்டத்தை பயன்படுத்த முடியுமல்லவா? அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொருவரும் தங்களுடைய விருப்பு வெறுப்புக்களின்படி செயற்படுவதற்கு இந்தச் சட்டத்தை பாவிக்க முடியும் அல்லவா?’

ஒரு குற்றமும் அறியாத நூற்றுக்கனக்கான மக்கள் எதேச்சதிகாரமாகவும் சட்டத்துக்கு மாறாகவும் கைது செய்யப்பட்டு தடுத்தும் சிறைச்சாலைகளிலும் வைத்திருப்பதை சட்டப்படி நியாயப்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டம் சட்டரீதியான அந்தஸ்தை வழங்குகின்றது அரசாங்கத்திற்கு தேவைப்படும் போதெல்லாம் அவசர கால நிலையை உருவாக்கி பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரமாணங்களின்படி கைதுகளையும் நீண்டகால சிறைக் காவல்களையும் நியாயப்படுத்த முடியும்.

1948ஆம் ஆண்டு பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து 2011ஆம் ஆண்டுவரையுள்ள 63 வருடங்களில் 37 வருடங்கள் சில சில கால இடைவெளிகளைத் தவிர்த்து மொத்தமாக 445 முறை அவசரகால நீடிப்பு மாதாந்தம் நாடாளுமன்றத்தில் நீடிப்புப் பிரேரனைகள் மூலம் 2011ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதிவரை நிறைவேற்றப்பட்டது.பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தில் அடங்கியுள்ள தடுத்தல் மற்றும் தண்டனையிலிருந்து விலக்களிப்புப் பற்றிய ஏற்பாடு அதன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளுக்கும் ஏற்புடையதாகும் என்பதோடு அவசரகால ஒழுங்கு விதிகளிலும் அதே அணுகுமுறை மீளக் குறிப்பிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சட்டரீதியான ஆராய்வை தடுக்கும் மூன்று தெளிவான மற்றும் விரிவான பிரிவுகளை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் குறிப்பிடுகின்றது சுயமான உள் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட செயல்களுக்கும் பயங்கரவாத சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சரால்

(ஜனாதிபதி) விடுவிக்கப்படும் தடுத்து வைத்தல் மற்றும் தடைவிதித்தல் கட்டளைகள் சட்டப்படி இறுதியானவை எனக் கணிக்கப்பபட்டுள்ளன.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பிலும் பொது பாதுகாப்புத் தொடர்பில் தனியானதொரு அத்தியாயத்தைக் கொண்டிருக்கின்றதுடன் அது பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் அதன் செயற்பாடுகளையும் அங்கீகரிக்கின்றது மீளப்பெற்றதாக சொல்லப்பட்ட அவசரகாலச் சட்டம் முக்கியமாக இரண்டு அவதானிப்புக்களைக் கொண்டிருப்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது

முதலாவது 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் 6ஆம் திகதி ஜனாதிபதி அவர்கள் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் 25 மாவட்டங்களிலும் இராணுவப் படையினர் பொது ஒழுங்கைப் பராமரிக்கும்படி ஒரு கட்டளையை மீள அறிமுகப்படுத்தினார்

இரண்டாவது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய பிரமானத் தொகுதியொன்று 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம 9ஆம் திகதி வெளியிடப்பட்டது குறித்த பிரமாணங்களையும் அறிவித்தல்களையும் நன்கு ஆராய்ந்து பார்க்கின் உண்மையில் என்ன நடந்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையானது பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியின் கீழ் வருகின்றது 1959ஆம் ஆண்டு சாலமன் பண்டாரநாயக்கா ஆட்சிகாலத்தில் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக பிரச்சனைக்குரிய இவ் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1959ஆம் ஆண்டு மாசி மாதம் 12ஆம் திகதி நாடாளுமன்ற விவாதத்தின் போது கலாநிதி பேர்னாட் சொய்சா அவர்களால் நாடாளுமன்றத்தில் நிகழ்தப்பட்ட உரையானது நாடாளுமன்ற உரைகளில் மிகவும் சிறப்பான உரையாகக் கருதப்பட்டது

ஆளுநர்-நாயகத்துக்கு அளிக்கப்படவிருக்கும் புதிய தத்துவங்கள் குறித்து பகுப்பாய்வு செய்ததுடன் புதிய திருத்தங்களுடன் நாட்டின் நிறைவேற்றுத்துறைத் தலைவர் பொதுமக்கள் நலனில்பேரால் ஒரு அவசரகால நிலையின்றியே தனக்களிக்கப்பட்டிருக்கும் அதிகூடிய அதிகாரங்களுடன் செயற்பட முடியுமென அவர் சுட்டிக்காட்டினார். புதிய அதிகாரங்களை பற்றி ஆராய்ந்து புதிய திருத்தங்களை எடுத்துக்காட்டி அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதபொழுது பொது மக்கள் நன்மைக்காக நிறைவேற்று அதிகாரத்தில் உள்ளவர் எவ்வாறு செயல்பட வேண்டு எனறு விரிவாக எடுத்தியம்பினார். காலனித்துவ ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை விடமோசமான முறையில் எமது தலைவர்கள் பொது மக்கள் பிரச்சனைகளை கையாள்கின்றார்கள் என்பதை அவர் சுட்டிக் காட்டினார் கடுமையான அவசரகால நிலை இருக்கும் பொழுது நிறைவேற்று அதிகாரங்களை துரிதப்படுத் துவதற்காக குறிப்பாக அத்தியாவசிய சேவைகளைத் தொடரும் பொருட்டு ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன ஆயினும் பின்னர் அது துஷ்பிரயோகம் செய்யப்பட்டது.

ஏதாவது ஒரு பிரதேச்தில் பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பில் ஆபத்தான நிலை காணப்படுமானால் அல்லது அவ்வாறான நிலை உடனடியாக நிகழக் கூடிய நிலை காணப்படுமாயின் அவ்வாறான நிலையை சமாளிப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த பிரதேசத்தில் போதாது என ஆளுநர்- நாயகம் கருதுவாரேயானால் குறித்த பிரதேத்தில் பொது மக்கள் ஒழுங்கை நிலைநாட்ட ஆளுநர்- நாயகம் இராணுவப் படையை அழைக்கலாம். இவ்வாறான நிலை காணப்படுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள் இராணுவப் படையை அழைப்பதற்கு குறித்த சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்துவதற்கும் 12ஆம் பிரிவு 1959ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது

முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயம்யாதெனில் ஆளுநர் - நாயககத்தின் அதிகாரங்கள் யாவும் தற்போதைய ஜனாதிபதி கொண்டுள்ளார் இப்போதும் ஜனாதிபதியே இராணுவப்படையை அழைக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளார். இவ் அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பில் உண்மையான அல்லது உடனடி பாதுகாப்பிற்காக அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் இவ்வாறான நிலையை பொலிசாரினால் சமாளிக்க முடியாத சூழ்நிலையிலேயே ஜனாதிபதியால் இராணுவம் அழைக்கப்படவேண்டும்

2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்கமானது இச் சட்டத்தின்படி நாட்டின் சகல மாவட்டங்களிலும் சேவையிலுள்ள இராணுவத்தினரையும் அழைத்தது. அவசரகாலச் சட்டம் பின்வாங்கப்பட்டதும் 2ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியின் பிரகடனம் இல்லாதொழிந்து விடும் 2ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியால் பிரகடனம் ஒன்றினை வெளிப்படுத்துவதற்கு முன் பல முன் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் குறித்த பிரிவு கீழ்க் குறிப்பிட்டவாறு கூறுகின்றது

பொது மக்கள் அவசரகால நிலை இருப்பதாக அல்லது அவ்வாறான உடனடி அவசரகாலநிலை தோன்றியுள்ளதாக கருதுமிடத்து பொதுமக்களின் வாழக்கைக்கு அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பது அல்லது சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது அவசியம் எனக் கருதும் இடத்து பொது மக்களின் பாதுகாப்பைக் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என ஜனாதிபதி அவர்கள் கருதுவாரேயானால் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாம் பாகத்தின்படி ஜனாதிபதி அவர்கள் நாட்டின் ஒரு பகுதிக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதிக்கோ அதனைச் செயல்படுத்தலாம்.

ஜனாதிபதியானவர் பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் உள்ள அதிகாரங்களின்படி பொது மக்கள் பிரகடனத்தை வெளியிடுகையில் உண்மையாகவோ அல்லது உடனடியாகவோ அவசரகால நிலை காணப்படுதல் வேண்டுமெனினும் தொடர்ச்சியாக இச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

## அவசரகால ஒழுங்கு விதிகள் காலாவதியானதா 2005-2011 ?

இலங்கை பிரித்தானியிரிடமிருந்து விடுதலை பெற்றபின்னர் 2005ஆம் ஆண்டுவரை நான்கு முறை அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது

1. 1953ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசு 25 சதமாகயிருந்த அரிசியின் விலையை 75 சதமாக விலை உயர்த்தியதால் ஆத்திரமும் கோபமும் கொண்ட பொது மக்கள் அரசிற்கு எதிராக பெரும் ஆர்பாட்டத்தில் இறங்கிய வேளையில் 1953ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதன் முதலாக அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு 1953ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டது

2. 1958ஆம் ஆண்டு இனக்கலவரம் உருவாக்கப்பட்ட நிலையில் அதனை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர இரண்டாவது முறையாக 1958ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது

3. 1958ஆம் ஆண்டு பிரதம மந்திரியாக பதவிவகித்த சாலமன் பண்டாரநாயக்கா துப்பாக்கிதாரியினால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் அடுத்து மே மாதம் 27ஆம் திகதி மூன்றாவது முறையாக அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது

4. 1958ஆம் ஆண்டிலிருந்து காலத்துக்கு காலம் பல புதியவிதிகள் திருத்தங்கள் என தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால நிலை 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முன்னால் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் துப்பாக்கிதாரியினால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி மீண்டும் அவசரகால நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து சிலகால இடைவெளியைத் தவிர்த்து 445 முறை (அதாவது 445 மாதங்கள்) அவசரகால நீடிப்பு நாடாளுமன்றத்தில் பிரேரணை மூலம் நீடிக்கப்பட்டு 2011ஆம் ஆண்டுவரை 63 ஆண்டுகளில் ஏறத்தாள 37 வருடங்கள் அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் ஆட்சி நடாத்தப்பட்டது.

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் கபடமற்றுத் தெரிவதும் பாராட்டத்தக்க விதத்திலுமாக அவசரகாலநிலை தொடர்ச்சியற்றதாகும் என்பதுடன் அது நீடிக்கப்படமாட்டாது என்ற பிரகடனப்படுத்துகின்ற அறிவிப்பொன்றை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் செய்தார். இதன் கருத்துயாதெனில் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் 2ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்படும் அவசரகாலச் சட்டம் இல்லாது போய்விடும் என்றும் இச் சட்டத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்ட சகல அவசரகால ஒழுங்கு விதிகளும் வலுவற்றவையாகிவிடும் என்பதேயாகும்.

அவசரகாலச் ஒழுங்குவிதிகளில் இறுதியாக 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகள் (இல. 1405/14) நடை முறையிலிருந்ததுடன் அதற்கும் அதன் பின்னர் காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்ட சில புதிய விதிகளிலுமுள்ள சகல கட்டுப்பாடுகளும் இல்லாதொழிக்கப்படும் என்றும் எந்த ஒரு அவசரகால நிலையும் இல்லாமல் நாடு சாதாரண நிலைக்குத் திரும்பிவிடும் என பொதுமக்கள் கருதினர். அதே போன்று அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கால வரையின்றி தடுத்தும் சிறையிலும் வைக்கப்படடிருக்கும் அரசியல் கைதிகளும் தாங்கள் விடுதலை செய்யப்படுவோம் என எதிர்பார்த்தனர்

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவித்த ஐந்து நாட்களில் அதாவது ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இந்த காலகட்டத்தில் சட்டமா அதிபராக கடமையாற்றிய் மொஹான் பீரிஸ் கருத்து தெரிவிக்கையில். அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்ட போதிலும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என தெரிவித்திருந்தார்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமையானது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு காத்திரமான நடவடிக்கை எனவும் இந்த அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுள்ளதால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 1200 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் நீதி அமைச்சர் ரஹுப் ஹக்கீம் குறிப்பிடடிருந்தார். நீதி அமைச்சராலும் சட்ட மா அதிபரினாலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இறுதியில் எதுவுமே நடைபெறாமல் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களிலும் சிறையிலும் புனர்வாழ்வின் கீழும் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்த வைக்கப்பட்டனர் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

என்ன காரணங்களுக்காக எந்தச் சூழ்நிலையில் பயங்கரவாதச் சட்டமும் அவசரகால ஒழுங்குவிதிகளும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதோ அந்தச் சூழ்நிலை மாற்றம் அடைந்து ஏழு வருடங்கள் முடிவடைந்த நிலையில் அவசரகால ஒழுங்குவிதிகள் நீக்கப்பட்டுவிட்டன என 2011ம் ஆண்டு அரசினால் அறிவிக்கப்பட்ட போதிலும் அவசரகால ஒழுங்குவிதிகளில் முக்கியமான சில விதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குள் உட்புகுத்தப்பட்டு நிரந்தரமாக சட்டமாக்கப்பட்டு நடைமுறையில் இருப்பதுதான் நிதர்சனமான உண்மை.

அவசரகால நிலை தொடர்ச்சியற்றதாகி ஏறத்தாழ ஒரு வாரத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குறிப்பிட்ட சில ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தியிருப்பதாக அரசாங்கம் கூறியது ஆனால் அத்தகைய ஒழுங்கு விதிகள் எவையும் காணப்படவில்லை. இறுதியில் அவை பகிரங்கத் தளத்தில் தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ளது. அந்த ஒழுங்கு விதிகள் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவித்த நான்காவது நாளான 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்

29ஆம் திகதியிடப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது பயங்கரவாத தடைச்சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியால் ஆக்கப்பட்டிருக்கும் பல்வேறு ஒழுங்குவிதிகள் பின்வருமாறு வகைப்படுத்தக்கூடியன.

## பயங்கரவாத தடைச் சட்டத்தினுள் உள்வாங்கப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள்

1. தமிழீழ விடுதலை புலிகளை தடை செய்தல் (வர்த்தமானி இலக்கம் 1721/2)

2. அவசரகாலநிலை ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கான விண்ணப்பங்கள் நீடிப்பு (வர்த்தமானி இலக்கம் (1721/3) அவசரகாலநிலை தொடர்ச்சியற்றதாகிய போதிலும், பல்வேறு அவசரகால ஒழுங்குவிதிகளைத் தொடர்தல்.

3. சந்தேக நபர்களை தடுத்து வைத்தல் (வர்த்தமானி இலக்கம் 1721/4) முன்னரே அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகள்.

4. சரணடைந்த நபர்களை புனர்வாழ்வின் கீழ் வைத்திருத்தல். (வர்த்தமானி இலக்கம்: 1721/5)

இந்த ஒழுங்கு விதிகளது சட்டத்தன்மை குறித்து பரிசீலனை செய்வதற்கு முன்னதாக, விதிகள், உபவிதிகளது அரசியலமைப்பு நிலையினை விளங்கிக் கொள்வது தேவையாகும். நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், சட்டத்தின் வலுக் கொண்டிருப்பதுடன் உண்மையில், அச்சட்டங்கள் பொதுவாக அமைச்சருக்கு சட்ட ஏற்பாடுகளை அமுலாக்குவதன் பொருட்டு ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அதிகாரமளிக்கின்றன.

நியதிச் சட்டமொன்று ஒரு குறிப்பான விடயம் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்குவதற்கு அமைச்சர் ஒருவருக்கு அதிகாரமளித்தால், அத்தகைய விடயங்கள் நியதிச் சட்டத்தில் குறிப்பாக விளக்கப்படுகின்றன. ஒரு குறிப்பான விடயம் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சர் ஒருவருக்கு சட்டம் அதிகாரம் அளித்தாலே ஒழிய அவர்/அவள் வேறு ஏதேனும் சட்டத்தை மீள்செல்வதான ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்த முடியாது. அனுமதிக்கபட்ட சட்ட மட்டுப்பாடுகளின் நோக்கெல்லைக்கு வெளியே அமைச்சர் புதிய சட்டவாக்கம் எதனையும் செய்ய முடியாது.

அரசியலமைப்பு குறிப்பாக கூறுவது என்னவெனில், நாடாளுமன்றம் தனது சட்டமாக்கும் தத்துவத்தை துறத்தல் முடியாது என்பதாகும். எவ்வாறெனினும், பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை இக் கோட்பாட்டிற்கு ஒரு விதிவிலக்காக சட்டம் அங்கீகரிக்கிறது. ஏனெனில் இது அவசரகால நிலையின் போது சட்டவாக்கம் செய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கிறது அவ்வாறானவையே அவசரகால ஒழுங்குவிதிகளுமாகும்.

இதுவே நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு முரணாக நிறைவேற்றுத்துறை ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்த முடியுமாயுள்ள ஒரேயொரு விதிவிலக்காகும் ஆனால் ஜனாதிபதி அரசியலமைப்புக்கு முரணாக ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்த முடியாது. ஆனால் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தைப் போலன்றி பயங்கரவாத தடைச்சட்டம் குற்றங்களை அல்லது வேறு ஏதேனும் குறிப்பான நிலைப்பாட்டை சட்டவாக்கத்துடன் அறிமுகம் செய்வதற்கு ஜனாதிபதிக்கு (பாதுகாப்பு அமைச்சர்) அதிகாரமளிக்கவில்லை என்று சொல்வதற்குப் போதுமானது.

பயங்கரவாத தடைச்சட்டம் பிரிவு 27 (1) சொல்வதாவது: இச்சட்டத்தின் கோட்பாடுகளை மேற்கொள்வதற்கு அல்லது விளைவைக் கொடுப்பதற்கு அமைச்சர் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். இதுவே எமது அநேகமான சட்டங்களின் கீழான அமைச்சரின் விதி ஆக்கமாகும்.

பொருள் கோடல் கட்டளைச்சட்டம் -17ஆம் பிரிவின் கீழ் (Under the Interpretation Ordinance s.17) நியதிச்சட்டம்மொன்றால் வழங்கப்பட்ட தத்துவத்தின் கீழ் ஏதேனும் அதிகார அமைப்பால் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், மற்றும் துணைச்சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுடன ஒவ்வாததாக இருக்கமுடியாது. சுருக்கமாக இவ்வொழுங்கு விதிகள் மேலதிக தத்துவங்களை வருவிப்பதற்கல்ல இருக்கின்ற இயற்றுசட்டத்தின் ஏற்பாடுகளுக்கு விளைவைக் கொடுப்பதற்கு மட்டுமே அறிமுகப்படுத்தப்படமுடியும்.

## 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் திகதி

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள் முழுவதும் ஒரு புதிய சட்டவாக்கத்தின் விளைவைக் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தின் தத்துவத்தை சட்டமுறையின்றி தன்னிச்சையாக எடுத்து சில ஏற்பாடுகளையும் அறிமுகம் செய்தமை அவர் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மட்டுமே செய்திருக்கக் கூடியதாகும்.

இவ்வொழுங்கு விதிகளின் வெளியிடுகை என்பது அவசரகால நிலைமை காலத்தொடர்ச்சி அற்றதாகியிருந்துங்கூட ஜனாதிபதியால் அவசரகால நிலையின் சில அத்தியாவசியமான படிகள் சட்டபூர்வமற்ற முறையில் பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குள் உட்புகுத்தப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டமையேயாகும். இவ் ஒழுங்குவிதிகள் நிறைவேற்றுத்துறையின் அதிகாரத் துஷ்பிரயோகத்தின் தொடர்ச்சியே, இம்முறை எதுவித நியாயப்படுத்தல் கூடவின்றி கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் நாடப்பட்டுள்ளது.

மேலுள்ள பகுப்பாய்விலிருந்து சீர்தூக்கிப் பார்க்கையில், ஜனாதிபதி அவசரகாலநிலையை விலக்கிவிட்டார் என்பது தெளிவு ஆனால் அதிகாரபூர்வமான அவசரகாலநிலைமை தொடருமாறு எல்லாப் படிகளையும் எடுத்துவிட்டார்.

அவசரகாலநிலை காலத் தொடர்ச்சியற்றதாயுள்ள போதும் அரசாங்கம் உணர்வுபூர்வமான அவசரகால நிலைமையை அகற்றுவதற்கு ஏதாவது படிகளை எடுத்துள்ளது என்று ஸ்தாபிப்பதற்கு சான்று இருப்பதாக தெரியவில்லை. நீண்டகால இராணுவப் பிரசன்னத்துள் விடப்பட்டிருப்பதுடன் உயர் பாதுகாப்பு வலயங்களும் தொடருகின்றன. வடக்கும் கிழக்கும் கடும் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் தொடர்ந்தும் உள்ளன.சிறைச்சாலைகளில் ஏற்படும் கலகங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு கூட இராணுவம் 2012ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் திகதி வெலிகட சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டது.

இந்நிகழ்வமைவிலேயே, அரசாங்கம் ஏன் அவசரகால நிலையை எடுத்தது என்று பார்ப்பது முக்கியமானது. பிரதானமாக சர்வதேசத்தின் கோரிக்கைக்குப் பதிலளிக்கு முகமாகவே அவசரகாலநிலை நீக்கப்பட்டது. அதிக முதலீடுகளும் குறைந்த சர்வதேச வெட்கமும் இருப்பதற்கு அரசாங்கத்துக்கு அவசியமானது. நாடு வழமைக்கு திரும்பிவிட்டது என்று சர்வதேச சமூகத்தின் கவனத்தில் பதிப்பதாகும். உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப்பட்டதுடன், அரசாங்கம் இவ்வாறு அவசரகாலநிலையைப் பேணுவதற்கு இவ்வளவுதூரம் விரும்புவது ஏன்? இது ஒரு சூட்சுமமான அரசியல் வினா.

அநேகமான சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்கள் அவசரகால நிலைமையின் போது மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்படுவதை அனுமதிக்கின்றன. அப்பொருத்தனைகளுக்கு திறத்தவர்களாகவுள்ளோர் தமது கடப்பாடுகளிலிருந்து விலக உரித்துள்ளவர்கள். அரசாங்கங்கள் அவசரகாலநிலை மற்றும் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் தமது மனித உரிமைகளிலிருந்து விலகும் போது இது சர்வதேசசட்டத்தின் கீழ் எவ்வாறு தொழிற்படுகிறது என்று நாம் பார்ப்போம்.

மனித உரிமைகள் அமுலாக்கம் விசேட உபகுழுவினால் செய்யப்பட்ட 6 வருடகால நீண்ட கற்கை மற்றும் மேலதிக இரு வருடங்கள் முழுக்குழுவனாலும் செய்யப்பட்ட மீளாய்வின் பின்னர் 1981 ல் பரிசில் நடைபெற்ற சர்வதேச சட்ட சங்கங்களின் 61 வது மாநாடு அவசரகாலநிலை பிரகடனம் மற்றும் முகாமையை ஆளும் ஒரு தொகுதி குறைந்த தராதரங்கள் மீது உடன்பட்டது. இந்த தராதரங்கள; (Paris Minimum Standards of Human Rights Norms in a State of Emergency) அவசரகாலநிலைமையின் போதான மனித உரிமைகள் நியமங்களின் குறைந்தளவு பரிஸ் தராதரங்கள் என்று அழைக்கப்படுகிறது.

இது நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட அவசரகாலநிலைப் பிரகடனத்தின் போது கூட உறுப்பு நாடுகள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச சமவாயம் உறுப்புரை (4) (ICCPR) இன் கீழானதும் பிராந்திய மனித உரிமைகள் சமவாயத்தின் அதனை ஒத்த எற்பாடுகளதும் அந்த விலகிச்செல்ல முடியா உரிமைகளை இடைநிறுத்தாது விலகியிருப்பதை உறுதிப்படுத்தும் நோக்காகக்கொண்டது.

ஒருநாட்டில் அவசரகாலநிலை காலத்தொடர்ச்சியற்றதாகும் போது பிரயோகிக்கக்கூடிய முக்கியமான சர்வதேச தராதரத்தைக் இங்கு குறிப்படுவது பொருத்தமாமானது. பிரிவு (அ) இன் உட்பிரிவு 6 (ஆ) குறிப்பிடுமாறு:

ஸ்ரீ"அவசரகாலநிலை நீக்கப்பட்டதன் மேல் அவசரகாலநிலையின் போது இடைநிறுத்தி வைக்கப்பட்ட எல்லா உரிமைகள் மற்றும் சுதந்திரங்களது தன்னியக்கமான மீள்த்திரும்புகை இருத்தல் வேண்டும் அதன் பின் அவசரகால நிலையின் எந்தப்படிகளும் பேணப்படக்கூடாது".

இலங்கை அரசாங்கமானது அவசரகாலநிலை நீக்கப்பட்டபோதிலும் எல்லா உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பழையநிலைக்கு கொண்டுவர தவறிவிட்டதோடு அவசரகாலநிலையின் போது ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்த அவசரகாலப்படிகளை அகற்றவும் தவறியுள்ளது என்பது தெளிவு.

இன்னுமோர் கவனிக்கத்தக்க (கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டிய) அம்சமாவது, தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்ட ஒழுங்கு விதிகளின் அதே ஒழுங்குவிதிகள் தம்மாலே சுதந்திரம் மற்றும் சுயாதீனம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளபோது அவை ஒரு சுவாரஷ்யமான கலைச்சொற்தொகுதியை பயன்படுத்துகின்றன. ஒழுங்கு விதிகளின் பின்வரும் பாகங்கள் சுவாரஷ்யமானவை.

அ) புனர்வாழ்வு என்ற போர்வையின் கீழ் தடுத்துவைப்புகளை தொடந்து கொண்டு, ஒழுங்கு விதியின் இல. 1721/5 உட்பிரிவு -2 இன் ஒழுங்குவிதிகளின் நோக்கம் சரணடையும் எவரேனும் நபரை இவ்வொழுங்குவிதிகளின் பிரகாரம் முன்னர் (பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் அவசரகால ஒழுங்கு விதிகளின் பிரகாரம்), அனுபவித்துக் கொண்டிருந்த அதே கவனிப்பு மற்றும் பாதுகாப்பின் அனுபவிப்பை தொடர்வதை உறுதிபடுத்துவதாய் இருத்தல் வேண்டும்".

அரசாங்கம் இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாடுவதைத் தேவைப்படுத்தும் அத்தகைய அளவுக்கு அதே கவனிப்பு மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்கு சரணடைந்தவர்கள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பை முன்னர் பெற்றவர்கள் என்று நாங்கள் நம்புவதற்கு உள்ளோமா? இது ஒரு கற்பனை செய்யமுடியாத அரசியல் வினோதக் கதை!

ஆ) அவசரகாலநிலை காலத்தொடர்ச்சியற்றதாகிய பின்னர் பல்வேறு அவசரகால ஒழுங்கு விதிகளின் செயற்பாடு தொடர்ந்து கொண்டிருக்கையில், பயங்கரவாதத்தடைச் சட்டம் ஒழுங்குவிதி இல. 1721/3 கூறப்படுவதாவது "அவசரகால ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளின் பிரயோகம் (அவை தொடர்ந்த வண்ணம் உள்ளன) நாட்டினுள் சமாதானத்தின் தொடருகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்குாக இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட நல்லெண்ண முயற்சிகளுக்கு மேலதிகமாக வலுவிலிருத்தல் வேண்டும் இவ் ஏற்பாடுகளில் சில பயங்கரவாதத்துடன் எதுவுமே செய்வதற்கில்லை.

உதாரணமாக 2011 ம் ஆண்டின் 6ஆம் இலக்க அவசரகால ஒழுங்கு விதிகள் (உள்ளூர் அதிகாரசபைகளை நிர்வகித்தல்) அவசரகாலநிலையுடனோ அல்லது பயங்கரவாதத்துடனோ எதுவுமே செய்வதற்கில்லை. அவ் ஒழுங்கு விதிகளால் பல்வேறு உள்ளூர் அதிகாரசபைகள் செயற்படுதல் முடிவுறுத்தப்படுவதாக பிரகடனப் படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கம் தாம் என்ன செய்ய முன்மொழிகிறார்கள் என்பதில் மிகவும் வெளிப்படையாகவுள்ளது.

முன்னாள் ஐக்கிய அமெரிக்க செனட்டர் வில்லியம் புறொக்ஸ்மயர் (William Proxmire) ஒரு முறை கூறியது போல: 'அதிகாரமானது எப்போதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பட வேண்டியிருக்கிறது விசேடமாக தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில், இரகசியமாகச் செயற்படுத்தப்பட்ட தத்துவம், இரட்டிப்பு அபாயகரமானது". எமது அரசியலமைப்பின் கீழ் ஜனநாயக உலகில் உள்ள பல வேறு ஒத்த சட்டச் சாதனங்களைப் போல், நிறைவேற்றுத்துறை அவசரகால நிலைமையைக் கையாள போதுமான தத்துவமுடையதாயுள்ளது. எவ்வாறாயினும், இத்தத்துவங்கள் ஆட்சியாளரதும் அவர்களது அரசியல் கூட்டாளிகளதும் நன்மைக்காக அல்லாது நாட்டினதும் மக்களதும் நன்மைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். நாம் பல தசாப்தங்களாக அவதானித்தது யாதெனில் நிறைவேற்றுத்துறையின் இத்தத்துவங்கள் காலத்துக்கு காலம், மக்களின் சேதாரம் வரை, துஷ்பிரயோகம் செய்யப்பட்டன,

ஒரு உண்மையான அவசரகாலநிலை இருக்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலநிலைத் தத்துவங்களும் சட்டபூர்வமாக அமுல்படுத்தப்படலாம் ஆனால் ஒரு உண்மைத்தன்மையான அவசரகாலநிலை இல்லாத போது அவ் ஏற்பாடுகள் நாடப்படக் கூடாது.

நாம் தற்போது காண்பது என்னவென்றால் தேசிய மற்றும் சர்வதேச அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணாக சமாதானத்தையும் சட்ட ஆட்சியையும் எற்படுத்தும் நடவடிக்கைகளை கையாளாமல் சில முக்கிய அவசரகாலத் தத்துவங்களை மீள்திருப்புவதன் மூலம், நீக்கப்பட்டு விட்டதாக கூறப்பட்ட சில அவசரகால விதிகளை பொதுச்சட்டத்துக்குள் உட்புகுத்தி நிரந்தரச் சட்டவாக்கத்தை உருவாக்கவதுமேயாகும். (பிடியாணையின்றி கைது செய்தல் பொலிசாரினால் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 48 மணி நேரம் தடுத்து வைத்தல்) நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்ட அவசரகால ஒழுங்கு விதியின் 18, 19, 21 ஆம் ஒழுங்கு விதிகள் மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்து விட்டது அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டு விட்டன என கூறப்பட்ட போதிலும் அவசரகால ஒழுங்கு விதிகளின் சில முக்கியமான விதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27ஆம் பிரிவிற்குள் உட்புகுத்தப்பட்டிருப்பதுடன் குற்றவியல் நடவடிக்கைக் கோவைக்குள்ளும் உட்புகுத்தப்பட்டு நிரந்தரச் சட்டமாக்கப்பட்டுள்ளது

நிறைவேற்றுத்துறைக்கு சட்டக்கோட்பாடுகளை மீறுவதற்கு ஆலோசனை வழங்குபவர்களும் இத்தேசிய மற்றும் சர்வதேச நியமங்களை மீறுதலுக்கு குற்றவாளிகளே! எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விசேடமாக நாடாளுமன்றம் இயற்றிய நியதிச் சட்டங்கள்


அந்த அந்த நாட்டின் நிலவுகின்ற சூழ்நிலைகளுக்கு அமைய மரபுரீதியாக கையாளப்படும் முறைகளை விளங்க கையாளும் நடவடிக்கை முறைச் சட்டத்தை கையாளாமல் விசேட நடவடிக்கைகளைக் கையாண்டு விளங்க விசாரிக்க இடமளிக்கலாம். ஆயின் அந்தச் சூழ்நிலை மாறினால் அந்நியதிச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் இல்லையேல் அச்சட்டத்துக்கு கொடுக்கும் வியாகியானம் தவிர்க்கப்பட்டு மரபுவழி வியாக்கியானம் கொடுக்க வேண்டும் அவ்வாறில்லையேல் சட்ட ஆட்சி அந்நாட்டில் இல்லாது போய்விடும்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டால் தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என அரசியல் கைதிகள் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டோர் விடுதலை செய்யப்படுவோம் என்ற நியாயமான நம்பிக்கை அவர்களிடம் காணப்பட்டது என்னிடமும் பல கைதிகள் தங்களுக்கு விடுதலை கிடைக்கும்தானே என வினவினர் அவர்களுக்கு நான் தெளிவாகக்கூறியது உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும் சாத்தியமில்லை

இந்த விடயத்தையே 21.08.2011 அன்றைய வீரகேசரி வாரவெளியீட்டில் குட்டிமணி முதல் லக்ஸ்மன் கதிர்காமர் வரை எனது அனுபவங்கள் என்ற கட்டுரையில் அவசரகால ஒழுங்கு விதிகள் இருந்தாலும் இல்லாதுவிட்டாலும் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையில் அவசரகால ஒழுங்கு விதிகளைப் பகுதி பகுதிகளாக நீக்குவதனாலோ அல்லது முற்றாக நீக்குவதனாலோ எந்தவித தீர்வும் ஏற்படப்போதில்லை எனக் குறிப்பிட்டிருந்தேன்

2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் அவசரகால ஒழுங்கு விதிகள் நீக்கப்பட்டுவிட்டன என பிரகடனப்படுத்துகின்ற அறிவிப்பொன்றை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பதிவு செய்தபோதிலும் அவசரகால ஒழுங்கு விதிகளினால் பாதிப்பிற்கு உட்பட்டவர்களுக்கும் ஏமாற்றமே மிஞ்சியது.

அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகளில் எதிரிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்ட பல அரசியல் கைதிகள் இன்றும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் பல வருடங்களாக விசாரணையில் உள்ளன.



# கைதுகளும் வழக்குகளும்

(1981–2022)

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளுக்கு எதிராக 1981ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தாக்கல்செய்யப்பட்ட வழக்குக்களில் நடைபெற்ற விசாரணைகளையும் விளக்கங்களையும் நிகழ்வுகளையும் அதன் முடிவுகளையும் பார்க்கின்

பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தபின்னர், அக்காலகட்டத்தில் இந்தச் சட்டத்தின கீழ் கைது செய்தல், தடுத்து வைத்தல் காணாமற்போதல் அதிக அளவு நடைபெற்றதுடன் கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா? எங்கே வைக்கப் பட்டிருக்கிறார்கள், என்ற பல கேள்விகளுக்கு விடை கிடைக்காத சூழ்நிலையில், பல ஆட்கொணர்வு மனுக்கள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. சட்டரீதியற்ற கைது தடுத்துவைப்பு சித்திரவதை என்பவற்றிற்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் உச்ச நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு விளக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இந்த வழக்குகளில் தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக சட்டமேதைகளான காலம் சென்ற இராணி சட்டத்தரணி நடேசன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான காலம் சென்ற முருகேசு சிவ சிதம்பரம். சிவா ராஜரத்தினம்.- புள்ளேநாயகம், எஸ்.மகேந்திரன், மோதிலால்நேரு. பாலாதம்பு. ஜி.குமாரலிங்கம், சி.வி. விவேகானந்தன். துரையப்பா பாக்கியநாதன். உருத்திரமூர்த்தி அப்பாபிள்ளை விநாயகமூர்த்தி, குமார் பொன்னம்பலம், மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளான நடேசன் சத்தியேந்திரா. நவரட்ணம் (கரிகாலன்), செல்வநாயகம். சந்திரஹாசன். கனகஈஸ்வரன்.பேரின்பநாயகம். K.S.ரட்ணவேல், சிறிஸ்கந்தகுமார் ஆகியோர் மனுதாரர்களுக்காக நீதிமனறங்களில் ஆஜராகி வாதாடி வந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு கைது செய்யப்பட்டு நாட்டின் பல இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்கு எதிராக 1981ஆம் 1982ஆம் ஆண்டில் சட்டமா அதிபரினால் பல வழக்குகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இக்காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் முருகேசு சிவசிதம்பரத்துடனும், சிரேஷ்ட சட்டத்தரணி நவரட்னத்துடனும் (கரிகாலன்) கனிஸ்ட சட்டத்தரணியாக இணைந்து செயல்படும் சந்தர்பத்தை சிரேஷ்ட சட்டத்தரணி நவரட்னம் (கரிகாலன்) எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்.

## கைதும் தடுத்து வைப்பும்

இந்த கால கட்டத்தில்தான் பல இளைஞர்கள், யுவதிகள் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் இராணுவத் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணையென்ற போர்வையில் உடல் மன ரீதியாக சித்திரைவதை செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களையும் பெற்று நாட்டின் பல இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான முருகேசு சிவசிதம்பரம், நவரட்ணம் (கரிகாலன்), மனோகரன், A.R.சுரேந்திரன் சிறிஸ்கந்தகுமார் ஆகியோர்களுடன் நானும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளை பார்வையிட்டு தேவையான தகவல்களை பெற்று சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நாட்டின் பல பகுதிகளில் அமைந்திருந்த ராணுவ முகாம்களுக்கு சென்று வருவதுண்டு

1981ஆம் ஆண்டு கைதாகிய அரசியல் கைதிகளில் பலர் பனாகொடை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இந்தக்காலப் பகுதியில் வடக்கில் தாக்குதல்கள் நடக்கும் வேளைகளில் பனாகொடைமுகாமில் தமிழ்க் கைதிகளின் மீது தாக்குதல்கள் நடாத்துவது இராணுவத்தினரின் வாடிக்கையாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறைவீதியில் இரண்டு இராணுவத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டபோது சீற்றம்கொண்ட இராணுவம் பனாகொடைமுகாமில் விளக்குகளை அணைத்துவிட்டு சிறைச்சாலை அறைகளினுள் கூட்டமாககூடிவந்து தமிழ்ப் போராளிகளை அடித்துத் துன்புறுத்தினார்கள்.

இக்காலகட்டத்தில் சட்டத்தரணிகளான நவரட்ணம் (கரிகாலன்), சிறிஸ்கந்தகுமார் ஆகியோர்களுடன் இராணுவ முகாம்களுக்கு அரசியற் கைதிகளைப் பார்வையிடச் சென்ற வேளையில் முன்னாள் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (E.P.R.L.F) இராணுவப்பிரிவுத் தலைவராக செயல்பட்டவரும் பின்னர் ஈழ மக்கள் ஜனநாய கட்சியை. (E.P.D.P) ஸ்தாபித்தவரும் அந்த அரசியல் கட்சியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவும், பனாகொட மகேஸ்வரனும் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்தக் காலகட்டத்தில் கொழும்பில் மட்டுமின்றி வெளிமாவட்டங்களில் கைது செய்யப்பட்டு பொலிசாரினால் நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் அரசியல் கைதிகள் சார்பாக ஆஜராக சிரேஷ்ட சட்டத்தரணிகளான சிவசிதம்பரமும். நவரட்னமும் என்னை அனுப்பி வைப்பது வழமையாக இருந்தது.

இவ்வகையில் முதலாவதாக என்னை ஹட்டன் நீதிமன்றிற்கு அனுப்பி வைத்த வழக்கு பொகவந்தலாவையில் எரிக்கப்பட்ட மகாவித்தியாலயம் சம்பந்தமாக கைதான சந்தேநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும் இவ்வாறு நாட்டின் பல பகுதிகளில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பல இளைஞர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராகி அரசியல் கைதிகளுக்காக வாதாடும் சந்தர்ப்பம் கிடைத்தமையை இன்றும் என்றும் மறக்க முடியாத அழியாத நினைவுகளே.

## 1981ஆம் ஆண்டு இனக்கலவரம் (Central Camp)

இந்நிலையில் 1981ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் அம்பாறை சென்றல் முகாம் அமைந்திருந்த பகுதியில் சிறியளவில் இனக்கலவரமொன்று உருவாக்கப்பட்டு இதில் தமிழர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களது உடமைகள் சூறையாடப்பட்டு இருப்பிடங்கள் எரியூட்டப்பட்டன. இதனையடுத்து (Central Camp) இந்நிலையைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகவும் அடுத்த சட்ட நடவடிக்கை என்ன என்பதை தீர்மானிப்பதற்காக சிவசிதம்பரம் அவர்களுடன் சட்டத்தரணிகளான நவரட்ணத்தினம். மனோகரன். சிறிஸ்கந்தகுமார் ஆகியோருடன் நானும் அம்பாறை சென்றல் முகாமை நோக்கிப் பயணமானோம்.

நாம் சென்றல் முகாமை அண்மித்தபொழுது கலவரம் உச்சக் கட்டத்தையடைந்து அந்தப் பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருந்தன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட இராணுவத்திடம் அனுமதி கேட்க அவர்கள் மறுத்ததுடன் நாம் சென்ற வாகனத்தையும் சோதனையிட முயற்சித்தனர்.

அப்பொழுது கடும் கோபம் கொண்ட சிவசிதம்பரம் உடனடியாக வாகனத்திலிருந்து இறங்கி தான் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எனவும் தனக்கு தனது மக்களைப் சந்திக்க, அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்க உரிமை உண்டென உரத்த குரலில் இராணுவ அதிகாரிகளுடன் வாதாடினார். அதனைத் தொடர்ந்து சிறிது நேர வாக்குவாதத்தின் பின்னர் இராணுவத்தினர் எங்களை உட்செல்ல அனுமதித்தனர்.

Central Campல் தொடங்கிய கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறி கொழும்பு திரும்பியிருந்த நிலையில் கலவரம் மற்றைய பகுதிகளுக்கும் காட்டுத் தீ போல பரவ ஆரம்பித்தது

1981ஆம் ஆண்டு சென்றல் முகாமில் தொடங்கிய இனக்கலவரம் தொடர்ச்சியாக பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, பலாங்கொடை, காவத்தை, நிவித்திகல, இரத்தினபுரி எனப் பல பகுதிகளுக்குப் பரவியதுடன் காடையர்களால் தமிழருக்குச் சொந்தமான பல நூற்றுக்கணக்கான மனைகள் வர்த்தக நிலையங்கள் யாவும் தீயிட்டு கொழுத்தப்பட்டு நாசமாக்கப்பட்டதுடன், இப்பகுதிகளில் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்த தமிழ் மக்கள், உடுத்த உடையுடன் ஒரே இரவில் துரத்தியடிக்கப்பட்டனர்.

## இரத்தினபுரியில் வர்த்தக நிலையங்கள் தீக்கிரை

அம்பாறையிலிருந்து இரத்தினபுரி வழியாக கொழும்பிற்கு திரும்பிக் கொண்டிருக்கையில் இரத்தினபுரி நகரத்தில் எமக்கிருந்த மனையும் வர்த்தக நிலையமும் தீயிட்டு எரிக்கப்பட்டதுடன் இரத்தினபுரி நகரத்தின் பிரதான வீதியில் அமைந்திருந்த 22 தமிழ் வர்த்தக நிலையங்களும் எரித்து சாம்பலாக்கப்பட்டன.

40 வருடங்களாக இரத்தினபுரியில் வர்த்தக நிலையம் நடாத்திவந்த எனது தந்தையும் எனது சகோதரனும் சகல சொத்துக்களையும் இழந்து உயிருடன் தப்பி வந்தமை அழியாத நினைவே 1981ம் ஆண்டு கலவரத்தில் இழந்தது சொத்துக்கள் மட்டுமே 1983ஆண்டு கலவரகாலத்தில் இரத்தினபுரியில் இருந்திருந்தால் உடமை மட்டுமல்ல உயிரையும் பறித்திருப்பார்கள்.

இதில் முக்கியமான விடயம் யாதெனில் அம்பாறை சென்றல் முகாமிற்கு வந்து எங்களுடன் இணைவதாகக் கூறிய வடமாகாண தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பிற்கு வந்திருந்த போதிலும் கலவரம் தீவிரமாக பரவி உச்சமடைந்ததாகக் கேள்வியுற்ற உடன் சென்றல் முகாமிற்கு வந்து எங்களுடன் இணையாமல் உடனடியாக - மட்டக்களப்பிலிருந்து கொழும்பு வந்து அன்றிரவே யாழ்தேவியில் ஏறி யாழ்ப்பாணம் சென்று விட்டனர்.

## மாவட்ட அபிவிருத்தி சபை

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் தமிழீழமே தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற ஒரே வழி என்ற நிலையிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடாக அரசினால் முன்வைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக் கொண்டது.

இந்தக் காலகட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் நடைபெறத் தொடங்கியது. இந்தத் தேர்தல் பிரசாரத்துக்குாக ஊர்காவற்துறை நாடாளுமன்ற உறுப்பினரான திரு. பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களின் வேண்டுகோளையேற்று நானும் எனது சில நண்பர்களும் ஊர்காவல்துறை வேலணை புங்குடுதீவு நைனாதீவு நெடுந்தீவு ஆகிய இடங்களில் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி தேர்தல் பொதுக் கூட்டத்தில் கலவரம் ஏற்படுத்தப்பட்டு மிகக் கோரமான வரலாற்று அவலம் நடந்தது சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலிருந்த கோவில்கள் வீடுகள் பல மோட்டார் வாகனங்கள் யாழப்பாண சந்தைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. இருபதாம் நூண்றாண்டின் மிகக் கேவலமான கலாச்சார அழிப்புக்களில் ஒன்றாக மேற்குலகில் பேசப்படுவது 1933ஆம் ஆண்டு ஹிட்லர் நிர்வாகம் நடத்திய நூல் எரிப்பு வைபவமாகும் அப்போது கூட 20.000 நூல்களே எரிக்கப்பட்டன ஆனால்

1981ஆம் ஆண்டு ஆனிமாதம் முதலாம் திகதி ஆசியாவிலேயே மிகச்சிறந்த நூலகங்களின் ஒன்றான யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது இதில் 95.000 நூல்கள் எரிந்து சாம்பலாகின தெற்காசிய வரலாற்றில் நடந்தேரிய மிக மோசமான கலாச்சார அழிப்புக்களில் மிகவும் முக்கியமானது யாழ் நூலகம் தீக்கிரை ஆக்கப்பட்டமையாகும்.

மாவட்ட அபிவிருத்தி சபைக்கு (District Devolopment Councils) தமிழ் மக்கள் திருப்திப்படும் வகையில் தேவையான அதிகாரங்களை வழங்குவதாக அரசு அளித்த வாக்குறுதியில் வழமைபோல நம்பிக்கை கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 1981ஆம் ஆண்டு ஆனி மாதம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் வடக்குக் கிழக்கில் போட்டியிட்டு வெற்றியீட்டியது.

## செனடர் நடராஜா தனது பதவியைத் துறந்தார்.

அரசினால் உறுதியளிக்கப்பட்ட எந்த விதமான குறைந்த அதிகாரங்கள் கூட மாவட்ட அபிவிருத்தி சபைக்கு கிடைக்கப்படாத காரணத்தினால் கதிரை மேசை வாங்குவற்கும் அதிகாரம் இல்லாத சபை எனக் குறிப்பிட்டு மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவராகயிருந்த செனடர் நடராஜா தனது பதவியைத் துறந்தார்.

காலத்துக்கு காலம் தமது சுயனலத்துக்குாக பெரும்பான்மைக் கட்சியின் தலைமைகள் வாக்குறுதிகளை அளிப்பதும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதும் பின்னர் பதவிக்கு வந்து சிம்மாசனத்தில் அமர்ந்தவுடன் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றாமல் கைவிடுவதுடன் ஒப்பந்தங்களைக் கிழித்தெரிவதும் இரண்டு பெரும்பாண்மைக் கட்சிகளும் மற்றைய சிறிய ஊதுகுழல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு மாறி மாறி நடைமுறைப்படுத்தியது.

எமது இனத்தின் மிக பலவீனமான செயல்பாடு தலைமைத்துவ போட்டியும் பொது விடயங்களிலாவது ஒற்றுமைப்படாமையுமாகும். 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களை கடந்த போதிலும் இன்றும் இதுவே நடைபெறுகின்றது தெற்கு அரசியல் தலைமைகளிடம் ஏழு சதாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்து ஏமாறுகின்றமை எமது இனத்தின் ஒற்றுமையின்மையே 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைது செய்து பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பமாக திகதிகளும் குறிக்கப்பட்டன.

சட்டமாஅதிபர் திணைக்களத்தில் சட்டமா அதிபராக தனது கடமையை ஆற்றிய சிவா பசுபதி 1975ஆம் ஆண்டிலிருந்து 1988ஆம் ஆண்டுவரை இலங்கை வரலாற்றில் 13 வருடங்கள் சட்டமா அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1983ஆம் ஆண்டின் இனவழிப்பு

குட்டிமணி, தங்கத்துரை, ஜெகனுக்கு எதிராக மேல்நீதிமன்ற நீதிபதி மரண தண்டனை தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து அந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேன்முறையீட்டு விளக்கத்துக்குாக காத்திருந்த வேளையில் யூலை 23 அன்று திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியில் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இலங்கை அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆயுதப் போராட்டத்தில் சிறிய சிறிய தாக்குதல்கள் இடம்பெற்றுவந்த அந்தக் காலகட்டத்தில் ஒரே தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்கதல்கள் அரசுக்கும் இராணுவத்தினருக்கும் பேரிடியாக அமைந்தது இறந்த இராணுவத்தினருடைய உடல்களை வழமைபோன்று அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பாமல் வன்முறைகள் வெடிக்கலாம் என்ற காரணத்தைக் காட்டி பொரளைக் மயானத்தில் உடல்களை அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது

1983ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதி மாலை தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி வரை முன்னாள் அதிபர் ஜே. ஆர். ஜயவர்தனாவின் ஆட்சிக் காலத்தில் அந்தப் பன்னிரண்டு தினங்களும் கொழும்பு மாநகரையும் அதன் சுற்றுப்புற நகரத்தையும் மற்றும் இலங்கைத் தீவின் ஏயை பாகங்களையும் உலுக்கிய கறுப்பு யூலை படுகொலைகளின் 39 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. கடந்த எழுபது வருடகால இன முரண்பாடுகளின் உச்சக்கட்ட உணர்வுகள் ‘கறுப்பு யூலை’ என அழைக்கப்படும் அளவுக்கு ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரத்தில் (இனப்படுகொலையில்) ஏற்பட்ட இழப்புக்கள், பாதிப்புக்கள், கொடூரக் கொலைகள் பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. இது வரலாற்றில் அழிக்கமுடியாத ஒரு கரும்புள்ளி என்பதை யாவரும் அறிவர் எனினும் சில விடயங்களை மட்டும் இங்கே குறிப்பிடவேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

## 53 அரசியல் கைதிகள் படுகொலை

1979ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் வெலிகடை சிறைச்சாலையில் வணபிதா சிங்கராசா, வணபிதா ஜெயதிலகராசா, வணபிதா சின்னையா, வவுனியா காந்திய இயக்கத் தலைவர் டேவிட் ஐயா, கலாநிதி இராஜசுந்தரம், பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன், வைத்தியகலாநிதி ஜெயகுலராசா, யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் முதலான சமய, சமூகப் பெரியார்களும், புத்தி ஜீவிகளும். தங்கத்துரை, தளபதி குட்டிமணி ஜெகன், தேவன், நடேசுதாஸ், சிவபாதம், குமார், ஸ்ரீகுமார், மரியாம்பிள்ளை, குமரகுலசிங்கம் போன்ற முன்னணிப் போராளிகள் உட்பட ஐம்பத்திமூன்று உயிர்கள் 1983ம் ஆண்டு இனக்கலவரம் தொடங்கியதைத் தொடர்ந்து அதிக பாதுகாப்பைக் கொண்ட வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆடிமாதம் 25, 27ஆம் திகதிகளில் 53 கைதிகள், குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட படுகொலை செய்யப்பட்டனர்.

வெலிக்கடைச் சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த இக்கைதிகளைக் கொலை செய்வதற்கான திட்டம் அமைச்சரவை மட்டத்தில் தீட்டப்பட்டிருந்தது. இக்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற காலைவேளை அமைச்சர்களான காமினி திசாநாயக்கவும், அத்துலத் முதலியும் அங்குவந்து சென்றார்கள். 25-07-1983 அன்று கொல்லப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 23 தமிழ்க் கைதிகளது உடல்கள் வெலிக்கடைச் சிறைச்சாலை வாயினுள் கட்டப்பட்டிருந்த புத்தர் சிலைக்குமுன்னால் காட்சிப்படுத்தப்பட்டன. இதேவேளையில் இச்சிறைப்படுகொலையில் 2ம் கட்டத்தில் 17 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். அன்றைய தினம் மேல்மாடியல் தங்கியிருந்த கல்விமான்களையும், சமூகப் பெரியார்களையும் கொல்லவந்த இக்காடையர்கள் மீது அவர்கள் திருப்பித் தாக்கினார்கள்.இந்தத் தாக்குதல்களுக்கு அஞ்சிய சிங்களவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். சிங்களக் காடையர்களோடு சிங்களத்தில் கதைப்பதற்காக சிறைக் கதவுக்கு வெளியே வந்த டாக்டர் இராஜசுந்தரம் சிங்களக் காடையர்களின் கோடரி வெட்டுக்கு இலக்காயி அந்த இடத்திலேயே உயிர்துறந்தார்.

## சட்டரீதியற்ற கொலைகள் 1983

நாட்டில் ஏற்பட்ட தமிழருக்கு எதிரான 1983 ஆம் ஆண்டு இன அழிப்பின்போது சிங்கள கும்பல்களும் இலங்கை ஆயுதப் படைகளைச் சேர்ந்த ஆட்களும் தமிழ் ஆண்களையும் சிறுவர்களையும் சித்திரவதை செய்து கொலை செய்தும் தமிழ் பெண்களையும் சிறுமிகளையும் வன்புணர்வு செய்தும் வதை செய்தும் கொலை செய்தும் தமிழர் வீடுகளையும் வியாபார நிலையங்களையும் சூறையாடியும் தீயிட்டுக் கொளுத்தியும் தமிழ் பகுதிகளில் பெரும் அட்டகாசம் புரிந்தனர். பொலிசாரும் இராணுவத்தினரும் (பெரும்பாலும் சிங்களவர்களாக இருந்தனர்) தமிழருக்கெதிரான இவ்வன்முறை அட்டகாசத்தில் பங்குபற்றினார்கள் அல்லது கண்டும் காணாதிருந்தனர்.

இன அழிப்பின் இரண்டாம் நாளான ஜுலை 25 ஆம் திகதி கொடுமையான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிக்கடை சிறைச்சாலையின் தமிழ் கைதிகள் சிறைக் காவலர்களின் உதவியோடு சிங்கள கைதிகளினால் மிருகத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் கூற்றுப்படி, சிங்கள கைதிகளுள் சிலருக்கு மது வழங்கப்பட்டு தமிழ் கைதிகளை தாக்குமாறு அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கையிலான சிங்கள கைதிகள் கத்திகளோடும் வேறு கூரிய ஆயுதங்களோடும் 35 – 37 தமிழ் கைதிகள் தங்கியிருந்த கட்டிடத்தினுள் நுழைந்தனர். அவர்கள் தமிழ் கைதிகளை கத்தியால் குத்தினர் அடித்தனர் சித்திரவதை செய்தனர். ஒரு சில கைதிகளின் பிறப்புறுப்புகள் வெட்டிச் சிதைக்கப்பட்டன.

குட்டிமணி மற்றும் ஜெகன் ஆகிய இருவரதும் கண்கள் இரும்புக் கம்பிகள் கொண்டு அடித்துச் சிதைக்கப்பட்டதோடு, அவர் தனது தூக்குத் தண்டனை நிறைவேற்றத்துக்குப் பின்னர் சுதந்திர தமிழ் அரசு ஒன்றை தனது கண்களினால் இன்னொரு மனிதர் ஊடாக பார்ப்பதற்கு கனவு கண்டமையினால் அவை தோண்டி எடுக்கப்பட்டன. தாக்குதல்தாரி ஒருவரினால் குட்டிமணியின் நாக்கு வெட்டி எடுக்கப்பட்டதாகவும் அந்நபர் இரத்தத்தைக் குடித்து, "புலி

ஒன்றின் இரத்தத்தை நான் குடித்துவிட்டேன்” என்று கூச்சலிட்டதாகவும் இன்னொரு கதை கூறுகிறது. அதன்பின்னர் அவர் கொலை செய்யப்பட்டு அவரது உடல் சிறைச்சாலை முற்றத்தில் இருந்த ஒரு புத்தர் சிலைக்கு முன்னே போடப்பட்டது.

மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு நிலுவையிலிருந்தபோது குட்டிமணி வெளிக்கடை சிறைச்சாலை வளாகத்தினுள் கொல்லப்பட்டதுடன் வெலிக்கடைச் சிறையில் வெட்டிக் குதறி கொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளது உடல்கள் வெலிக்கடைச் சிறைச்சாலை வாயினுள் காட்சிப்படுத்தப்பட்டன

## ஜே.ஆரின் பரப்புரை

இனவாத அரசியலையே தனது வாழ்வியல் அசைவியக்கமாகவும், ஆயுதமாகவும் 1944ம் ஆண்டு தொடக்கம் கையாண்டுவந்த ஜே.ஆர் 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின் பெறுபேறுகளின் காரணமாக அப்போது 168 ஆசனங்களைக் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் 140 ஆசனங்கள் கைப்பற்றிய ஐ.தே.கட்சி பதவிக்கு வந்தது. பதவிக்கு வந்த ஒரு சில நாட்களில் ஒரு பெரிய இனக்கலவரம் ஏற்பட்டது. அந்தவேளை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் பேசிய அப்போதைய பிரதமர் ஜே.ஆர் அப்பாவிப் பொதுமக்களைப் பார்த்து ‘போரா? சமாதானமா?’ எனக் கேட்டு இனக்கலவரத்தைத் தீவிரப்படுத்தினார். ஆனால் இனக்கலவரத்தின் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலைப்போர் வீச்சுப்பெற்றது.

இராணுவ ஒடுக்குமுறைகளால் தமிழ்த் தேசிய விடுதலைப்போரின் மூச்சையும் வீச்சையும் தம்மால் தடுக்க முடியாது என்பதை யதார்த்தமாகக் கண்ட ஜே.ஆரும் அவரது அமைச்சர்களும் மிகப் பெரும் இனப்படுகொலை ஒன்றுக்குத் தேவையான அகச்சூழலை உருவாக்கினார்கள். வாக்காளர் இடாப்புக்களைத் தேடி எடுத்து தமிழ் வாக்காளரது பெயர்ப்பட்டியலையும் அவர்களது வாழடவிடங்களையும் சேகரித்து பல பிரசுரங்களைத் தயாரித்துக் கொண்டார்கள். இந்த வேளையில் இலண்டனிலிருந்து வெளிவரும் (London Telegraph) இலண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் பின்வருமாறு ஜே.ஆர் பேட்டி கொடுத்தார்.

‘நான் தமிழ் மக்களது கருத்துக்களைப்பற்றி அக்கறைப்படப் போவதில்லை. அவர்களது உயிர்களைப் பற்றியோ உடமைகளைப்பற்றியோ நான் கவலைப்படப்போவதில்லை’. இந்தப் பேட்டி கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி நியூஸ் என்ற ஆங்கிலத்தினசரியிலும் ‘லங்காதீப’ போன்ற சிங்கள செய்தித்தாள்களிலும் பிரசுரம் செய்யப்பட்டன. சிங்கள பௌத்த பேரினவாதிகள் உசுப்பேற்றப்பட்டனர். ஊக்கப்படுத்தப்பட்டனர்.இனப்படுகொலைகளுக்குத் தயார்படுத்தப்பட்டனர். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர்.

## மரண விசாரணைகள் இடம்பெறவில்லை

1983ம் ஆண்டு கறுப்பு யூலையின்போது வெலிக்கடையில் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறைக்கைதிகளின் மரண விசாரணைகள் இடம்பெறவில்லை. பிரேத பரிசோதனைகள்

இடம்பெறவில்லை ஒரு மாஜிஸ்ரேட் அங்கே வந்தார். ஆனால் அவர் எவரது சாட்சியத்தையும் பதிவு செய்யவில்லை. இனப்படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்தப்பியவர்கள் சிலர் இன்னமும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

ஒரு பூரண விசாரணை ஆணையகம் அமைக்கப்பட்டால் பல உண்மைகள் அம்பலத்துக்கு வந்துவிடும் என்பதால் அப்போதைய ஜே.ஆர் அரசு இந்த அரச பயங்கரவாதம் பற்றிய விடயத்தை மூடி மறைத்துவிட்டது.

## பிரதம நீதியரசர் சர்வானந்தா தலைமையில் விசாரணைக்குழு

1983 இனப்படுகொலை தொடர்பான தடயங்கள், சான்றுகள், ஆதாரங்கள் யாவும் மறைக்கப்பட்டுவிட்டன. இவை தொடர்பாக எந்தவொரு விசாரணைக்குழுவும் 1983 காலப்பகுதியைத் தொடர்ந்து அமைக்கப்படவில்லை. 1994இல் சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாகிய பின் முன்னாள் பிரதம நீதியரசர் சுப்பையா சர்வானந்தா தலைமையில் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான குழுவும் (Truth Commission) எந்த உண்மைகளையும் கண்டறியவில்லை.

## சட்ட நூலகத்தின் காரியதரிசி கணேசன் கொலை

கொழும்பில் வசித்த பல சட்டத்தரணிகளின் அசையும் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்டது மட்டுமின்றி கொழும்பு நீதிமன்றில் உள்ள சட்ட நூலகத்தில் காரியதரிசியாக செயலாற்றிய அமைதியான சுபாவம் கொண்ட தமிழ்ச் சட்டத்தரணியான கணேசன் நீதிமன்றிலிருந்து வீடு செல்லும் வழியில் ராஜகிரியவில் வைத்து காடையர்களால் வெறித்தனமாக கொலை செய்யப்பட்டார்.

அரசியல் கைதிகளின் சார்பில் வழக்குக்களில் ஆஜராகி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான முருகேசு.சிவசிதம்பரம், மருதானை நொரிஸ்கனல் வீதியில் இலக்கம் 100 என்ற வீட்டிலேயே வசிந்து வந்தார். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் சிவசிதம்பரம் அவர்கள் வசித்து வந்த மருதானையுள்ள அவரது வீடு காடையர்களால் முற்றாக எரித்து அழித்து சாம்பல் ஆக்கப்பட்டது.

அந்த வீதியால் செல்லும் நேரங்களில் அந்த 100ஆம் இலக்கத்தை பார்க்க நான் தவறுவதில்லை. தற்பொழுது அந்த வீடு இருந்த இடம் வர்த்தக ஸ்தாபனமாக மாற்றப்பட்டிருந்தாலும் அந்த நாட்களின் ஞாபகங்கள் மனத் திரையில் வந்து செல்வதுண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஆஜராகிய பல சட்டத்தரணிகளின் வசிப்பிடங்கள் குறிவைக்கப்பட்டுத் தாக்கப்பட்டன.அந்தக் காலகட்டத்தில் குட்டிமணியின் சட்டத்தரணிகள் என்று அடையாளப்படுத்தப்பட்டிருந்தோம்.

இனக்கலவரத்துக்கு காரணமாகயிருந்தது மட்டுமின்றி யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம் என்று அறிக்கைவிட்ட ஜயவர்தனா இலங்கை வரலாற்றில்

மிகவும் மோசமான இந்த இனக்கலவரத்தை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அமைதிகாத்ததன் மூலம் மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறை புரிந்தவராவார்.

மேலும் மக்கள் முன் தோன்றி உரையாற்றும் பொழுது இத்தனைக்கும் காரணம் எல்ரீரீஈ இராணுவத்தினரை கொன்றதால் சிங்களவர்கள் கொதிப்படைந்து இருக்கின்றார்கள் தனி தேசம் கேட்டு இனி யாரும் இங்கே போராட்டம் நடாத்தக் கூடாது அதற்கு ஏற்றாற்போல் அரசியலமைப்புச் சட்டத்தை நான் மாற்றியமைக்கப் போகின்றேன்.

இக்காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அநேகமானோர் சட்டத்தரணிகளாக இருந்தபோதிலும் பயங்கரவாத, அவசரகாலச் சட்டங்களின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குக்களின் விசாரணைகள் கொழும்பிலேயே நடைபெற்றதாலும் கொழும்பை தமது வதிவிடங்களாக கொண்டிருந்த சட்டத்தரணிகளால் மட்டுமே அரசியல் கைதிகளின் வழக்குகளில் ஆஜராகி வாதாடும் சூழ்நிலை காணப்பட்டது.

## முகாமில் அடைக்களம்

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி நானும் எனது மனைவியும் வசித்த வீடு தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல இன்னல்களுக்கு மத்தியில் உடமைகளை இழந்த நிலையில் 15 நாட்கள் ராஜகிரியவில் அமைக்கப்பட்டிருந் அகதி முகாமில் தங்கினோம் சிறிது நாட்களின் பின்னர் மாற்றுத் துணி கூட இல்லாத நிலையில் பல கசப்பான வேதனை மிக்க அனுபவங்களைச் சுமந்துகொண்டு கப்பலில் காங்கேசன்துறை சென்று பின்னர் எனது ஊரான புங்குடுதீவிற்குச் சென்றடைந்தோம்

இனக்கலவரம் காலத்துக்கு காலம் ஏற்படுவதும் அதனால் ஏற்படத்தப்படும் விளைவுகளைச் சந்திப்பதும் அதனைத் தொடர்ந்து சொந்த ஊருக்கு செல்வதும் என்னைப் பொறுத்தவரையில் மிகவும் பழக்கப் பட்டதாகும் ஏனெனில் 1958ஆம் ஆண்டு 1977ஆம் ஆண்டு மீண்டும் 1981ஆம் ஆண்டு இறுதியாக 1983ஆம் ஆண்டுவரை இரண்டுமுறை கப்பலிலும் இரண்டு முறை தரைமார்கமாகவும் சொந்த மண்ணை நோக்கி சென்றமை என்றும் நினைவிலிருந்து அழியாத வேதனை மிக்க நினைவுகளாகும்

1981ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் இரத்தினபுரியில் எனது தந்தையாரால் நடாத்தி வந்த வாத்தக நிலையம் எரிக்கப்பட்டதையடுத்தும் 1983ஆம்ஆண்டு இனக்கலவரத்தை தொடாந்து நான் என் பிறந்த மண்ணிற்க் வர நேர்ந்ததால் என்னை ஊர்காவல்துறை யாழ்ப்பாண நீதிமன்றங்களில் தொழில் புரியும்படி எனது பெற்றோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அந்தகாலகட்டத்தில் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணியான என். சிறிகாந்தா பிரபல முன்னனி சட்டத்தரணியாக திகழுந்தார் நான் அவரை சந்தித்த முதல்

நாளன்றே என்னை ஊக்கப்படுத்தியது மட்டுமின்றி என்னை ஊர்காவல்துறை நீதிமன்றில் தொழில் புரியும்படி கேட்டுக்கொண்டதுடன் எனக்கு சகல உதவியும் செய்வதாகக் கூறிய அந்த ஒரு வார்த்தை இன்றும் என்றும் என்மனதில் நிறைந்திருக்கின்றது

சட்டத்துறையில் இவ்வாறு ஊக்கமளித்து உதவி புரிவது மிகவும் அரிது இந்த விடத்தில் நாங்கள் சட்டத்தொழில் தொடங்கிய பொழுது எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த சிரேஷ்ட சட்டத்தரணிகளான காலம் சென்றவர்களான முருகேசு சிவசிதம்பரம் சிவா ராஜரட்னம். (தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சேய் குமார் இராஜரத்தினத்தின் தந்தை) சிவானந்தம் அசோசியேட்சின் நிறுவனர் சிவானந்தம் மற்றும் .நவரட்ணம் (கரிகாலன்) ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். மகேந்திரன். மோதிலால்நேரு. எம்.எல்.எம் அமீன் ஆகியோர் இன்றும் என்றும் மறக்கமுடியாதவர்களே

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 25ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி வரை அந்தப் பன்னிரண்டு தினங்களும் உலுக்கிய கறுப்பு யூலை படுகொலைகளின் நாற்பதாவது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

## அரசியல் கைதிகளுக்காக மேல் நீதிமன்றங்களில் ஆஜராகிய சட்டத்தரணிகள்

கொழும்பு மேல் நீதிமன்றங்களில் தமிழ் அரசியல் கைதிகளுக்காக முருகேசு சிவசிதம்பரம். நடேசன் சத்தியேந்திரா மோதிலால் நேரு, ஜி.குமாரலிங்கம், பாலா தம்பு, சிவாராஜரட்ணம் R.E.தம்பிரட்ணம். குமார்பொன்னம்பலம். மா.இளஞ்செழியன், அப்பாபிள்ளை விநாயகமூர்த்தி, ரவிராஜ். சிறிஸ்கந்தகுமார். K.S.ரட்ணவேல், உருத்திரமூர்த்தி. ஜோய் மகாதேவா அன்டன் புனிதநாயகம், ஆகியோர் முன்னிலையாகி வாதாடினர்.

தமிழ் அரசியல் கைதிகளுக்காக மேல் நீதிமன்றங்களில் ஆஜராகி வாதாடிவந்த திரு. சிவசிதம்பரம் 1989ஆம் ஆண்டு அவரது தோளில் துப்பாக்கிதாரிகளின் குண்டு பாய்ந்த வரைக்கும், 10 வருடங்களாக பயங்கரவாத அவசரகால சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஆஜராயிருந்தார். தமிழ் பேசும் மக்களுக்காகவும் தமிழ் அரசியல் கைதிகளுக்காகவும் எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் தனது கடமையை சரிவரச் செய்த ஒரு தலைவராவார்

பல சட்டத்தரணிகள் கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா,அமெரிக்கா என சென்றுவிட்டனர். தந்தை செல்வாவின் மைந்தன் சந்திரஹாசன் இந்தியா (தமிழ்நாடு) சென்று குடும்பத்துடன் தங்கிவிட்டார். 25 வருடங்களின் பின்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை வந்திருந்தார். மேலும் 1983 ஆண்டு சட்டத்துறையில் எனது வழிகாட்டியும் குருவுமான நவரத்தினம் (கரிகாலன்) 1983ம் ஆண்டு கனடாவிற்கு சென்று 2020ம், 2022ம் ஆண்டுகளில் கொழும்பு வந்த பொழுது அவரை சந்திக்கும் வாய்புகிடைத்தது மேலும் 2002ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையையடுத்து பல சட்டத்தரணிகள் யாழ்ப்பாணம்,

வவுனியா மன்னார் போன்ற தமது சொந்த இடங்களுக்குச் சென்று தொழில் புரிகின்றனர். அரசியல் கைதிகளுக்கு எதிராக அரசினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்களில் நீதிமன்றில் ஆஜராகிய சில சட்டத்தரணிகள் நீதிபதிகளாக பதவியேற்று வடக்கு கிழக்குமாகாண நீதி மன்றங்களில் கடமை புரிகின்றனர்.

அரசியல் கைதிகளின் வழக்குகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சில சிரேஷ்ட் கனிஸ்ட சட்டத்தரணிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சில சட்டத்தரணிகளும் மாத்திரமே தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றங்களில் ஆஜராகின்றனர்.

அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் முன்னர் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் மட்டுமே சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் யுத்தத்தின் பின்னர் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் சில வழக்குக்கள் தற்பொழுது நீர்கொழும்பு, களுத்துறை அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மன்னார் ஆகிய நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன. தற்பொழுது சட்டக் கல்லூரியிலிருந்து வெளியாகும் தமிழ் இளஞ்சட்டதரணிகளின் வரவு மிக மிகக் குறைவாகக் காணப்படுவதுடன் குற்றவியல் வழக்குகளில் ஆஜராக ஓரிரு சட்டத்தரணிகளே கொழும்பில் உள்ளமை கவலைக்குறியது.

## அரசியல் கைதிகளின் வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணிகள் துரோகிகள்

### கௌரிசங்கரி பயங்கரவாத வழக்கறிஞர்

1983ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தில் அசையும் அசையா சொத்துக்களை உறவுகளை இழந்து அதிஸ்டவசமாக உயிருடன் தங்கள் மண்ணிற்கு சென்ற சட்டத்தரணிகளில் ஒரு சில சட்டத்தரணிகளே மீண்டும் கொழும்பு திரும்பினர்

1984ஆம் ஆண்டு கொழும்பு திரும்பிய நாங்கள் மீண்டும் வழக்குகளில் வாதாட தொடங்கினோம்.பயங்கரவாத, அவசரகால சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் நீதிமன்றில் ஆஜராகி வாதாடிய சட்டத்தரணிகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள் சில சட்டத்தரணிகளேயாவர். அரசியல் கைதிகளின் சார்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே மற்றைய மாகாணங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களில் ஆஜராகி வாதாட சட்டத்தரணிகளாக இருந்தால் மட்டும் போதாது எதற்கும் அசையாத மனத்துணிவும் பயமற்றதன்மையும் சட்டரீதியாக தனது கடமையை செய்யும் தைரியமும் மிகவும் அவசியமானதாகும்.

எதையும் தாங்கும் இதயத்தை மட்டுமல்ல எந்த விளைவுகளையும் சந்திக்கும் துணிவும் அவசியமாகின்றது கோரமான யுத்தம் வடக்கு கிழக்கில் நடந்து கொண்டிருகிறது அதேவேளையில் கொழும்பில் அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றங்களில் முக்கிமானதும்

பிரச்சனைக்கு உட்பட்டதுமான பல வழக்குகளில் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஆஜராகி வாதாடவேண்டியிருந்தது.

அரசியல் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் நடைபெறும் பொழுது குற்றம் சாட்டப்பட்டவரும் அவர்களுக்காக வாதாடும் ஓரிரு தமிழ் சட்டத்தரணிகளும் நானும் எனது கனிஸ்ட சட்டத்தரணிகள் மட்டுமே தமிழ்மொழி பேசுபவர்களாக காணப்படும் மற்றைய அனைவருமே பெரும்பான்மை இனத்தை சார்ந்தவர்களாவர்

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அரசினால் வெளியிடப்படும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்யும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம்கோரும் அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும் ஆஜராகும் சில தமிழ் சட்டத்தரணிகள் கடும் விமர்சனத்துக்கு ஆளாக்கப்பட்டிருந்தமை மட்டுமின்றி அரசியல் கைதிகளுக்காக அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்யும் சட்டத்தரணிகள் துரோகிகள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் கார்த்திகை மாதம் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் எனது துணைவியாரான திருமதி கௌரி சங்கரி தவராசா ஆறு அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களையும் சட்டத்தரணிகளான மரியாம்பிள்ளை, வேலுப்பிள்ளை. பொன்னம்பலம், தலா ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் மனுவையும் அந்த மனுக்களுக்காக நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி திருநாவுக்கரசுவின் பெயரையும். இணைத்து சட்டத்தரணிகள் துரோகிகள் என இந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஜனாதிபதி சட்டத்தரணிகளான திரு. வலியமுன மற்றும் ரொமேஷ் டி சில்வாவுடன் கௌரிசங்கரியும் ‘பயங்கரவாத வழக்கறிஞர்’ எனப் பட்டியலிடப்பட்டிருந்தது

சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த ஆறு அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களில் ஊடகவியளாளர்களான முனுசாமி பரமேஸ்வரி, வடிவேலு யசிகரன், யசிகரன் வளர்மதி, தெஹிவளை புகையிரத குண்டு வெடிப்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சங்கரப்பிள்ளை கார்த்திக், பிலியந்தல பேருந்து குண்டு வெடிப்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டஞானதுரைபொன்னம்பலம்ஆகியசந்தேகநபர்களானஐந்துமனுதாரருக்கும் எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு ஐந்து வழக்குகளின் விசாரணைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கையில் அரச தரப்பால் வழக்கை நிருபிக்க போதிய சான்றுகளை முன்வைக்கப்படாத நிலையில் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர் ஆறாவது வழக்கின் மனுதாரரறான சொக்கர் நந்தகுமாருக்கு பிரதான நீதவான் நீதிமன்றினால் பிணை வழுங்கப்படடது. சட்டத்தரணி வேலுப்பிள்ளை பொன்னம்பலம் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கின் மனுதாரரறான கிளிநொச்சி உள்ளூர் ஆட்சி சபையின் ஆணையாளரான ஆழ்வார்ப்பிள்ளை

கந்தையா பாலசுப்பிரமணியத்துக்கு எதிராக எந்தச் சாட்சியமும் இல்லாத நியில் சட்டமா அதிபரின் பரிந்துரையினை அடுத்து விடுதலை செய்யப்பட்டார்.

இதில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது யாதெனில் உயர் நீதிமன்றில் மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்த சட்டத்தரணிகள் கடும் விமர்சனத்துக்கு உள்வாங்கப்பட்டதோடு மனித உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்வது மனித உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கையெனவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிட்டிருந்தது ஆனால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல் மனுக்களினால் மனுதாரர்களில் ஆறுபேர் விடுதலை செய்யப்பட்டதுடன் ஒரு மனுதாரர் பிணையில் விடப்பட்டுள்ளார்

அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தமையினாலேயே சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் விரைவாக குற்றச்சாட்டுப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு அரசியல் கைதிகள் விரைவாக விடுதலை செய்யப்பட்டனர்.



# 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆண்டு வரையிலான முக்கிய 40 வழக்குகள்

# குட்டிமணி, ஜெகநாதன், ஞானவேல் வழக்கு

## 1982–1983 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முதல் வழக்கு

01

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் முதலாவது வழக்காக குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன், ஜெகன் என்ற ஜெகநாதன் கறுப்பன் என்ற ஞானவேல் ஆகிய மூவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குத்தான் நான் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த பின்னர் நான் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகிய முதல் வழக்காகும் அன்றிலிருந்து இன்று வரை நான்கு சகாப்தங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் பல ஆயிரக்கணக்கான வழக்குகளில் நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் வாதாடிய போதிலும் இந்த வழக்கின் நிகழ்வுகள் அழியாத நினைவுகளே.

40 ஆண்டுகளுக்கு முன்னர் குட்டிமணி என்ற பெயர் இலங்கையில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியது. அவருக்கு பெற்றார் இட்ட பெயர் செல்வராஜா யோகச்சந்திரன் என்பதாகும். அவர் 1970களில் இலங்கையில் தமிழ் ஈழ போராட்டக் குழுக்கள் மக்களுக்கான விடுதலையை இலக்காகக் கொண்டு செயற்பாட்டு வடிவம் பெறத்தொடங்கிய போது டெலோ இயக்கத்தின் தளபதியாகத் திகழ்ந்தார். 1983 ஜூலை 25 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் அவரும் ஒருவராவார்.

1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி நடைபெற்ற நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளையிலும், இரட்டைக் கொலையுடனும் தொடர்புடையவர்கள் என அரசினால் சந்தேகிக்கப்பட்டிருந்த டெலோ இயக்கத்தின் தலைவரான தங்கத்துரை என அழைக்கப்படும் நடராஜா தங்கவேல், குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன், தேவன் என்கின்ற செல்வதுரை சிவசுப்பிரமணியம், கறுப்பன் என்ற ஞானவேல், நடேசதாசன், ஜெகநாதன் என்ற ஜெகன் ஆகியோருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்களை சட்டமா அதிபர் சிவாபசுபதி கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.



1. நீர்வேலி வங்கியை கொள்ளையிடுகையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த கான்ஸ்டபில் சிவனேசன் கொலை வழக்கு
2. நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கு

முதல் வழக்கில் எதிரிகளாக குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகிய மூவரும் இரண்டாவது வழக்கில் குட்டிமணி, தங்கத்துரை, நடேசதாசன், தேவன் ஆகிய நால்வரும் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். சிவனேசன் கொலை வழக்கின் எதிரிகளான குட்டிமணி, ஜெகன் ஆகிய இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது மூன்றாவது எதிரியான கறுப்பன் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பில் பிரதி சொலிசிடர் ஜெனரல் திலக் மாரபன, சிரேஷ்ட சட்டத்தரணி சுனில் டி சில்வா, கனிஷ்ட சட்டத்தரணிகளாக மொகான் பீரிசும் காந்திலால் குமாரசிறியும் ஆஜராகியிருந்தனர். இதில் விசேட அம்சம் யாதெனில் இந்த வழக்கை தாக்கல் செய்த சட்டமா அதிபர் சிவாபசுபதியைத் தொடர்ந்து இந்த வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிடர் ஜெனரல் திலக் மாரபன. சுனில் டி சில்வாவும் கனிஷ்ட சட்டத்தரணியாக மொகான் பீரிசும் சட்டமா அதிபராக பதவி வகித்ததுடன் பின்னர் மொகான் பீரீஸ் பின்னர் பிரதம நீதியரசராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

குட்டிமணி, ஜெகன், கறுப்பன் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி முருகேசு சிவசிதம்பரம், நவரட்ணம் (கரிகாலன்), உருத்திரமூர்த்தி சிறிஸ்கந்தகுமார் ஆகியோருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

1981ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் திகதி படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச்செல்வதற்காக பருத்தித்துறைக்குப் பக்கத்தில் மணற்காட்டுக் கடற்கரையில் வள்ளத்துக்காக சில மணிநேரம் காத்திருந்தனர் ஆனால் குறித்த வள்ளம் குறிக்கப்பட்ட நேரத்துக்கு வராத நிலையில் மாலை மூன்றேகால் மணியளவில் கடற்படையினரும் பொலிசாரும் அவர்களைச் சுற்றிவளைத்தனர். குட்டிமணியை கைது செய்ய முயற்சித்த வேளையில் தனது கையில் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே

நெற்றியில் சுட்டு உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற போது தங்கத்துரை கைத்துப்பாக்கியை தட்டிவிட குறி சற்றுத்தவறி தலையில் சூட்டுக்காயத்துடன் குட்டிமணி மயங்கி கீழே சாய்ந்தார். பின்னர் இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக ஆனையிறவுத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு கொழும்புக்கு அழைத்துவரப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில் டெலோவின் மற்றுமொரு முக்கிய உறுப்பினரான ஜெகன் என்று அழைக்கப்படும் ஜெகநாதனும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சிலநாட்களில் மற்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.

கொடூரமாகச் சித்தரவதை புரிந்தே பொலிசார் மேலதிக விசாரணைகளை நடாத்தினர். தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்கையில் பொலிசார் தங்களை எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதை குட்டிமணியும் ஜெகனும் தமது சாட்சியங்களில் பதிவு செய்தனர்.

“எங்களைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தபோது சட்டத்தரணிகள், உறவினர்கள், நண்பர்கள் எவரும் சந்திக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டு தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு பலமாதங்கள் தடுப்புக் காவலில் வைத்து தொடர்ச்சியாக வன்மமிகு தாக்குதலில் மனிதாபிமானற்று ஈடுபட்டதுடன் இழிவுபடுத்தியும் வந்தனர். விலங்கிடப்பட்ட நிலையில் பல மணித்தியாலங்கள் தொங்கவிட்டனர். முழுமையாக நிர்வாணப்படுத்தி நீண்டநேரம் துப்பாக்கியின் பின்புறத்தாலும் நீண்ட நேரம் தாக்குதல் நடத்தி தலைகீழாகத்தொங்கவிட்டு இரும்புக் கம்பிகளை பிறப்புறுப்பில் உட்செலுத்தியதுடன் சிறுநீரும் கழிவறைக் கழிவு நீரும் பலவந்தமாகப் பருக்கப்பட்டு இரவு பகல் என்று தொடர்ச்சியாகத் தூங்கவிடாது விசாரித்தார்கள். மிளகாய்த் தூளை உடல் முழுவதும் பூசிவிடுவதோடு மிளகாயை எரித்து அதன் புகையைச் சுவாசிக்கச் செய்தார்கள். மருத்துவ சிகிச்சை முற்றாக மறுக்கப்பட்டிருந்தது”

துரிதகதியில் வழக்கை முடிக்க வேண்டும் என்பதற்காக விசாரணைகள் தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் நடைபெற்றன. அரச தரப்பினரதும் எதிர்த்தரப்பினரதும் வாதப் பிரதிவாதங்களின் பின்னர் தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்படும் நாளில் நீதிமன்றில் பெருந்திரளான பார்வையாளர்கள் கூடியிருந்தனர்.

1983ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி நீதிபதியால் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கிய பின்னர் நீதிபதி குட்டிமணியிடமும் ஜெகனிடமும் அவர்களது இறுதி ஆசை என்ன என்று வினவியபோது அனைவரையும் ஆச்சரியப்படுத்தி கண்ணீர்மல்கச் செய்த தனது இறுதி விருப்பைக் குட்டிமணி தெரிவித்தார்.

## குட்டிமணியின் இறுதி விருப்பம்

“நான் எந்தக் குற்றமும் புரிந்த குற்றவாளியல்ல. நான் ஒரு குற்றமற்ற மனிதன். நான் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டு, இந்த வழக்கில் சாட்சியமாக

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் கைச்சாத்திடுமாறு சித்திரவதையின் மூலம் நிர்ப்பந்திக்கப்பட்டேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படுகிறேன். இந்த நீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட ஆணை தொடர்பாக, நான் எனது ஒரு சில அடிப்படை கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வழக்கில் இன்று வழங்கப்படும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழ் ஈழத்தைத் தாபிப்பதற்கான புதியதோர் உத்வேகத்தை, வளமான உரத்தை, ஊக்கத்தை, உந்துதலளிக்கும் காரணத்தை வழங்கும். இதுதான் ஒரேயொரு வழக்காக இருக்காது. பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரில் இந்த நீதிமன்றத்தின் முன்னே இன்னும் பல தமிழ் இளைஞர்கள் கொண்டுவரப்படுவார்கள். இது தொடருகின்றபோது, வழங்கப்படும் தண்டனை தமிழரின் விடுதலைக்கு உட்சாகமளிக்கும். நான் தமிழ் ஈழத்தில் தூக்கிடப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனது முக்கிய உறுப்புகள் அவை தேவைப்படுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனது கண்கள் கண்பார்வையற்ற ஒருவருக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அக்கண்களினால் என்றோ ஒரு நாள் நான் தமிழ் ஈழத்தைக் காணக் கூடியதாக இருக்கும். எனது உடல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்திற்கு வழங்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு எல்லாம் முடிந்து விடப் போவதில்லை என்னைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக் கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள்"

## ஜெகனின் இறுதி விருப்பம்

"நான் குற்றமற்றவன். இராணுவமும் சீ.ஐ.டீ. பொலிசும் என்னைச் சித்திரவதைப் படுத்தி ஏதோ சில ஆவணங்களில் எனது கையொப்பத்தைப் பெற்று, அவ்வாவணங்களை எனது வாக்குமூலமாகப் பொய்யாக இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். இந்த பொய்யான சாட்சியங்களின் அடிப்படையில் நான் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளேன். நான் தூக்கிலிடப்படலாம். எனினும் தமிழ் ஈழம் மலர்வதை யாரும் தடுக்க முடியாது. சுதந்திரம் எனது பிறப்புரிமை. இந்த உரிமை எனக்கு மறுக்கப்பட்டுள்ளது. எனக்கு இந்த உரிமை கிடைக்காவிடினும், என்னைப் பின்தொடர்ந்து வரும் தமிழ் இளைஞர்கள் சுதந்திரத்திற்கான இந்த உரிமையைக் கொண்டிருப்பார்கள். யாரிடமிருந்தும் எந்த கருணையையும் நான் கேட்கவில்லை. இம்மரண தண்டனை எவ்வித காரணமோ அல்லது நீதியோ இன்றி இது என்மீது விதிக்கப்பட்டுள்ளது. நான் தமிழ் ஈழத்தில் தூக்கிலிடப்பட்டு, எனது உடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திற்கு வழங்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனது கண்கள் கண்பார்வையற்ற ஒருவருக்கு வழங்கப்படவேண்டும். தமிழீழம் மலரட்டும். நீடூழி வாழ்க தமிழ் ஈழம்."

மரண தண்டனை விதிக்கப்பட்டதும் கைவிலங்குகள் மாட்டப்பட்ட நிலையில் நீதிமன்றுக்கு வெளியே கொண்டு வரப்பட்டனர். விலங்கிடப்பட்ட உயர்த்திய கைகளினால் குட்டிமணி கூட்டத்தினருக்குக் கையசைக்கின்றார். அவரது வலது பக்கத்தில் ஜெகன் காணப்படுகிறார். விடுவிக்கப்பட்டு பின்னர் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட ஞானவேலு அவரது இடது பக்கத்தில் இருக்கிறார். அங்கு நின்று கொண்டிருந்த தினபதி பத்திரிகையின் நீதிமன்ற

நிருபர் நடேசப் பிள்ளை வித்தியாதரன், வீரகேசரி பத்திரிகையின் நிருபர் வரதராஜா உட்பட ஊடகவியளாளர்களையும் மக்களையும் பார்த்து இறுதியாகக் குட்டிமணி கூறிய வசனம் "பிரிவோம் சந்திப்போம்" என்பதே.

மரண தண்டனைத் தீர்ப்பையடுத்து குட்டிமணி தண்டனை நிறைவேற்றத்துக்காகக் காத்திருப்பதற்கென வெலிக்கடை அதிஉயர்பாதுகாப்புச்சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிங்கள மற்றும் தமிழ் கைதிகள் என்ற இரு சாராரும் இருந்தனர். கொலை, கற்பழிப்பு, கொள்ளை முதலிய குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற கைதிகளுக்கு மத்தியில் இனத்தின் சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்த சுதந்திரப் போராளிகளாக அவர்கள் இருவரும் திகழ்ந்தார்கள். இன ரீதியான மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சிங்கள, தமிழ் கைதிகள் வெவ்வேறாக வைக்கப்பட்டிருந்தனர்.

1981-1982 கால கட்டத்தில் குட்டிமணியென்றால் தெரியாதவர்களே கிடையாத அளவுக்கு மிகவும் பிரபல்யமாகி இருந்தார். வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றம் வந்தவர்களை விட வசீகரத் தோற்றமுள்ள குட்டிமணியை பார்பதற்காக வந்த பார்வையாளர்களே மேல்நீதிமன்றில் அதிகம். அதிகளவு பல்கலைக்கழக மாணவ மாணவிகள் ஏராளமான பொதுமக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் என மேல் நீதி மன்று நிரம்பி மக்களால் வழிந்தது.

## நவரட்ணம் (கரிகாலன்)

குட்டிமணி சிறையிலிருக்கும் பொழுது 1982 ஓகஸ்ட் 1 ஆம் திகதி அப்போதைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் T.திருநாவுக்கரசு இறந்த பின்னர் சட்டத்தரணி நவரட்னத்தை (கரிகாலன்) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைத்துவம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கும்படி வேண்டிக் கொண்ட வேளையில் தனக்குக் கிடைத்த அப்பதவியை ஏற்க மறுத்த சட்டத்தரணி நவரட்ணம் அப்பதவிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணியை நியமிக்கும்படி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமையத்துவத்திடம் வேண்டுகோளை முன்வைத்தார்.

"1981ம் ஆண்டு ஐரிஸ் குடியரசு அமைப்பின் போராளிகள் சிறையில் நடாத்திய உண்ணாவிரதப் போராட்டத்தைச் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்காக உண்ணாவிரதப் போராளியான பொபி சான்ட் (Bobby sands) நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டது போல மரண தண்டணை விதிக்கப்பட்ட செல்வராஜா யோகச்சந்திரனை (குட்டிமணி) ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைச் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு போக முடியும் எனவே குட்டிமணியை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதுதான் இச்சந்தர்ப்பத்தில் முக்கியமானது" என்று அவர் உறுதிபடச் சொன்னது அனைவருக்கும் சரியாகவே பட்டது. அதனைத் தொடர்ந்து குட்டிமணி நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஆயினும் அவருக்கு வழங்கப்பட்ட

மரணதண்டனைத் தீர்ப்பை முன்வைத்து அது செல்லாது என அறிவிக்கப்பட்டது. ஆன போதும் நாடாளுமன்ற உறுப்பினராக குட்டிமணி சத்தியப் பிரமாணம் செய்துகொள்வதற்காக அவரை சிறையிலிருந்து ஒருபோதும் விடுவிக்கப்போவதில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் பிரய தெல்கொட அறிவித்தார். ஆயினும் மூன்று மாதங்களுக்குள் சத்தியப் பிரமாணம் செய்ய முடியாத நிலையில் அப்பதவி காலாவதியாவதற்கு ஒருநாள் முன்னதாக குட்டிமணி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்தார். அதனைத் தொடர்ந்து சட்டத்தரணி நவரட்ணம் தவிர்க்கப்பட்டு அவ்வெற்றிடத்துக்கு நீலன் திருச்செல்வம் நியமிக்கப்பட்டார்.



மிக உயர்ந்த மனிதர் சட்டத்தரணி நவரட்ணம், அவர் என்றும் தமிழர் அரசியலில் முன்மாதிரிதான்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் இதுதாக்கல் செய்யப்பட்டது. எனது குருநாதர் சட்டத்தரணி நவரட்ணம் (கரிகாலன்) அவர்கள் செயற்பட்டமை கூடுதல் பெருமையாகும். சட்டத்தரணி நவரட்ணம் எப்போதும் எதையும் ஆழமாகப்பார்க்கும்பண்புகொண்டவர். மிகவும் அமைதியான சுபாவங்கொண்ட மிடுக்கான செயற்பாட்டாளர். இவ்வழக்கின் விசாரணை நடந்து கொண்டிருக்கையில் தமிழ் நாட்டிலுள்ள பாண்டி பஜாரில் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் துப்பாக்கியால் ஒருவரையொருவர் சுட்டுக் கொல்ல முயற்சித்ததைத் தொடர்ந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி சட்டத்தரணி நவரட்ணத்துக்குக் கிடைத்தது அவ்வேளையில் சட்டத்தரணி நவரட்ணம் (கரிகாலன்) “போராட்டம் நடாத்தும் பொடியங்கள் தாங்கள் ஒரு நாளும் ஒற்றுமையாக மாட்டார்கள். ஆனால் இராணுவத்துடன் சேர்ந்தாலும் அதற்கு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை” என்றார். அவரது கணிப்பு பிற்காலங்களில் நிஜமானது சில இயக்கங்கள் இராணுவத்துடன் இணைந்து செயல்பட்டமை தெரிந்ததே. அந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாயிருந்த சட்டத்தரணிகளான ஆலாலசுந்தரம், தங்கத்துரை ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் நடைபெறும் வேளையில் நீதிமன்றம் வந்து தம்மாலான ஒத்தாசையை வழங்குவதுண்டு.

குட்டிமணி மரண தண்டனைத் தீர்ப்பின் கீழ் இருந்தபோது அவரது நியமனம் வரத்தமானியில் வெளியிடப்பட்டது. வெற்றிடமாகவிருந்த பாராளுமன்ற இருக்கைக்குக் குட்டிமணியை நியமித்தமைக்கான காரணத்தை விளக்குவதற்காக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முக்கியஸ்தர்கள் ஐந்து காரணங்களை உள்ளடக்கினர். அவற்றுள் இரண்டு மிக முக்கியமானவையாகும்:

(1) குட்டிமணியின் பெயர் நியமனமானது, பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய நிறுவனங்கள் மூலம் குறிப்பாக நாட்டின் தமிழ் இளைஞர்கள்மீது காலத்துக்குக் காலம் இழைக்கப்படும் அரச பயங்கரவாதத்துக்கு எதிரான ஓர் அடையாள எதிர்ப்பாகும்.

(2) அது குட்டிமணி மற்றும் ஜெகன் ஆகியோர்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிரான ஓர் எதிர்ப்பாகும்

இந்தளவுக்கு அறிக்கை வெளியிடுமளவுக்கு தமிழர் அரசியல் சிந்தனையில் புதிய கண்ணோட்டத்தைப் பாய்ச்சி உயிர்ப்பூட்டிய சட்டத்தரணி நவரட்ணம் தமிழ் மக்களின் மரியாதைக்கும் மதிப்புக்கும் என்றும் உரியவரே. இப்போது தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் பதவிக்காகவும் எதனையும் செய்யத் தயராக இருக்கும் அரசியல்வாதிகளின் பண்பற்ற செயற்பாடுகளோடு ஒப்பிடுகையில் சட்டத்தரணி நவரட்ணம் மிக உயரந்த மனிதர். அவர் மீளவும் குட்டிமணியின் இடத்துக்கு நியமிக்கப்படாமை வருத்தத்துக்குரியதே.

## சிரேஷ்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கில் ஆஜராகிய சிரேஸஷ்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா வழக்கு தொகுப்புரையில் குறிப்பிடுகையில்,

"இந்த வழக்கு ஒரு சாதாரண வழக்கல்ல. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு. இவ்வழக்கின் எதிரிகள் தமது இனமக்களின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் என்று நான் இங்கு கூறியுள்ளேன். விடுதலை வேட்கையும் சுதந்திர தாகமும் என்றுமே வளர்ந்து வரக்கூடியவை. இக்கொள்கைகளை கொண்டவர்கள் இவர்கள். அடக்குமுறைகளினால் ஒழித்து கட்டிவிட முடியாது. எமது இனத்தை சேர்ந்த இவர்கள் முன்னிலையில் என்னை நான் மிகவும் சிறியவனாக மதித்து தலை வணங்குகின்றேன்" நீர்வேலி வழக்கு தொகுப்புரையில் சிரேஷ்ட சட்டத்தரணி நடேசன் சத்தியேந்திரா கூறியவை 19 பெப்ரவரி 1983 ஆம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமானது.

# முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கொலை வழக்கு

1989-1994 Mariadas vs The State (1995) 1 SLR 96

02

1977.07.21 ஆம் திகதி இடம்பெற்ற எட்டாவது பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியடைந்து ஜே.ஆர் ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. எட்டாவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க் கட்சியானது. கூட்டணியின் தலைவரான அ.அமிர்தலிங்கம் 04.08.1977 முதல் 24.10.1983 வரை எதிர்க்கட்சித் தலைவரானார். முதன் முறையாக தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட காலப் பிரிவும் இதுவேயாகும். முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையைப் பெற்ற அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி மாலை 7.35 மணியளவில் கொழும்பு 07 புல்லர்ஸ்லேன், இலக்கம் 410/27 இலக்க வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டு பதபதைப்போடு கீழ் மாடியிலிருந்து மேல்மாடிக்கு ஓடிச்சென்ற அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி கண்ட காட்சி உள்ளே யோகேஸ்வரன் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். முருகேசு சிவசிதம்பரம் அதிக குருதி வெளியேற்றத்தாலும் அதிர்ச்சியினாலும் மயக்கமுற்றிருந்தார். அமிர்தலிங்கம் அமரத்துவம் அடைந்திருந்தார்.

கொலையில் ஈடுபட்ட ஆயுததாரிகளான ராசலிங்கம் அரவிந்தன் அல்லது விசு, அலோசியஸ் லியோன் அல்லது பீட்டர் கந்தையா, சிவகுமாரன் அல்லது அறிவு என்ற மூவரும் சம்பவ இடத்திலேயே அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆயினும் இந்தக் கொலைச் சம்பவத்தில் நான்கு இளைஞர்கள் சம்பந்தப் பட்டிருந்ததாக பொலிசாரின் புலன் விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் கொலையில் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் கொம்பனித் தெரு பொலிஸ்



நிலையத்தில் இரண்டு வருடங்களாக தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கொலையில் ஈடுபட்ட ஆயுததாரிகளான ராசலிங்கம் அரவிந்தன் அல்லது விசு, அலோசியஸ் லியோன் அல்லது பீட்டர் கந்தையா, சிவகுமாரன் அல்லது அறிவு என்ற மூவருடன் சேர்ந்து அமிர்தலிங்கம் என்பவரின் மரணத்தை விளைவிப்பதற்கான சதி செய்ததாகப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தைப் புரிந்ததாக 1991ஆம் ஆண்டு ஆடி மாதம் 06ஆம் திகதி வின்சன்ட் வில்லியம் மரியதாசுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கொலைச் சம்பவம் நடைபெற்ற பொழுது கொலை நடைபெற்ற வீட்டில் தங்கியிருந்த, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான முருகேசு சிவசிதம்பரம் திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம், சரோஜினி யோகேஸ்வரன், சோமசுந்தரம் சேனாதிராஜா மற்றும் பாதுகாப்புக்காகக் கடமையிலிருந்த பொலிசார் ஆகியோரின் வாக்குமூலங்களின் பிரதிகளும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் இணைக்கப்பட்டிருந்தது.

குற்றப்பத்திரத்தில் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த வில்லியம் மரியதாசின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன, புலன்விசாரணை செய்த அதிகாரியான ஆனந்த கல்கமுவ, சட்ட வைத்திய அதிகாரிகளான திருமதி காரியவசம், பிரேமரத்ன, சோமசுந்தரம் நிரஞ்ஜன், அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களாகக் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆகியோர் உட்பட 27 சாட்சிகளும் சட்டவைத்திய பரிசோதனை, அறிக்கைகள், பிரேத பரிசோதனை அறிக்கைகள் உட்பட 16 தடயப் பொருட்களும் சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்து. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி T.B.வீரசூரிய முன்னிலையில் 1992ஆம் ஆண்டு மாசி மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## உண்மை விளம்பல் விசாரணை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதியான மரியதாசினால் சுய விருப்பத்தில் பொலிசாருக்கு கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரியான வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் தனது சொந்த விருப்பத்தில் சுயாதீனமாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கினாரா? அல்லது சுயவிருப்பின்றி பலவந்தமாகப் பெறப்பட்டதா? என்ற உண்மை விளம்பல் விசாரணை முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விசாரணையில் அரசு தரப்பில் எதிரியான மரியதாசின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்று கூறப்பட்ட வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பத்தின் பெயரில் பொலிசாருக்கு வழங்கப்பட்டது, என்பதை நிரூபிப்பதற்காக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன அரசுதரப்பின் முதல் சாட்சியாக அழைக்கப்பட்டார்.

## பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேனவின் சாட்சியம்

தனது சாட்சியத்தில் எதிரி தனது சுய விருப்பத்தின் பேரில் தனக்குக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக கூறிய பொழுதிலும் எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகக்கொடுக்கப் படவில்லையெனவும் 10-08-1989, 11-08-1989, 12-08-1998, 13-08-1989 ஆகிய திகதிகளில் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் எதிரியை துன்புறுத்தி சித்திரவதை செய்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பொலிசார் பலவந்தமாக பெற்றுள்ளார்கள் என எதிரி தரப்பு வாதத்தில் முன்வைக்கப்பட்டதுடன், சித்திரவதையினிடையே குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தில் பலவந்தமாக கையெழுத்துப் பெறப்பட்டுள்ளதாக எதிரியின் தரப்பில் வாதிடப்பட்டது.

மேலும் எதிரி போதியளவு ஆங்கில அறிவு அற்றவரெனவும் ஆங்கிலத்தில் பதியப்பட்டுள்ள இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை எதிரி புரிந்து கொள்ளவில்லையெனவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் என்ன பதியப்பட்டுள்ளது என்பதை எதிரிக்கு பொலிசாரினால் வாசித்து காட்டப்படவில்லையெனவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து எதிரிக்கு விளங்கப்படுத்தியதாக எந்தவித பதிவும் பதியப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மிக முக்கிய விடயமானது யாதெனில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தட்டெழுத்துச் செய்த முக்கிய சாட்சியான பீரிஸ் என்ற சாட்சி அரசு தரப்பினால் சாட்சியத்துக்கு அழைக்கப்படவில்லை. மேலும் தட்டெழுத்துச் செய்த பீரிஸ் தான்தான் தட்டெழுத்துச் செய்ததாக உறுதி செய்கையில், பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஆரியசேன தனக்கு கூறியதையே தான் தட்டெழுத்துச் செய்ததாகக் கூறியிருந்தமை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரியவருகிற விடயம் யாதெனில் பொலிஸ் அத்தியட்சகர் ஆரியசேன கூறிய விடயங்களே 27 பக்கங்கள் தட்டெழுத்தாளரான பீரிஸினால் தட்டெழுத்துச் செய்யப்பட்டுள்ளன. குற்ற ஒப்புதல் சுயமாக கொடுக்கப்பட்டதா அல்லது பலவந்தமாகப் பெறப்பட்டதா என்ற விசாரணையின் முடிவில் நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகவே அளிக்கப்பட்டதாகத் கட்டளை வழங்கியதுடன் அரச தரப்பினருக்கு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைச் சாட்சியமாக ஏற்று வழக்கில் அடையாளப்படுத்தவும் மேல் நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கினார்.

அதை தொடர்ந்து எதிரியினால் சுயமாக வழங்கப்பட்டதாக கட்டளைவழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அரச தரப்பின் முக்கியமான சான்றாகவும் எதிரிக்கு பாதகமான

சான்றாகவும் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒப்புறுதிப்படுத்தும் மற்றைய சாட்சிகளை அழைத்து பிரதான வழக்கைத் தொடர்ந்து நடாத்துவதற்காகத் திகதி குறிப்பிடப்பட்டது.

## பாணந்துறை மேல்நீதிமன்றில் விசாரணை

இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய பாணந்துறை மேல் நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமையினால் இந்த வழக்கும் பாணந்துறை மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் எதிரியின் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி பாணந்துறை வந்து இந்த வழக்கைத் தொடர்ந்து நடாத்துவதற்கு பாதுகாப்புக் காரணங்களினாலும் சில தனிப்பட்ட காரணங்களினாலும் பின்வாங்கினர். அதனால் தனிமையில் சென்று பாணந்துறை மேல்நீதிமன்றத்தில் ஆறு மாதங்கள் இந்த வழக்கை தொடர்ந்து நடாத்த வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது.

இந்தவழக்கில்தொடர்ந்துஅரசுதரப்பினால்சாட்சியமளிக்கஅழைக்கப்பட்டஉதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த கல்கமுவ தனது சாட்சியத்தில் தான் எதிரி தங்கியிருந்த மாடிவீட்டை சோதனையிட்டபொழுது அங்கு கைக்குண்டு ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேலும் எதிரிகள் சதித்திட்டம் தீட்டிய இரகசிய தகவல்களும் வரைபடங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் சாட்சியமளித்தார். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரியான நிஸங்கவின் சாட்சியமும் அரச தரப்பால் நெறிப்படுத்தப்பட்டது.

அரசதரப்பு சாட்சிகள் என்னால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அரச தரப்பு சட்டத்தரணி புவனேக அலுவிகார (தற்பொழுது புவனேக அலுவிகார உயர் நீதிமன்ற நீதியரசராவார்) சாட்சிகளை மறு விசாரணை செய்ததுடன் சட்டவைத்திய பரிசோதனை, அறிக்கைகளையும் பிரேத பரிசோதனை அறிக்கைகளையும் நீதிமன்றில் சமர்ப்பித்து அரச தரப்பு வழக்கை முடித்துக் கொண்டார் அதனைத் தொடர்ந்து அரச தரப்பும் எதிரி சார்பிலும் எழுத்து மூலமான சமர்ப்பணத்தை நீதிமன்றிற்கு சமர்பித்ததும் தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஏழு வருடம் கடும்காவல் தண்டனை

மேல் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய தனது தீர்ப்பில் 1993.11.19 எதிராளி மரியதாசினால் சுயவிருப்பத்தின் பேரில் வழங்கப்பட்டதாக நீதிமன்றினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் தன்னார்வத் தன்மையிலும் மற்றைய சான்றுகளின் அடிப்படையிலும் இந்த வழக்கின் எதிரியான மரியதாஸ்க்கு எதிராக அரசினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்துக்கிடமின்றி அரசதரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தனது தீர்ப்பில் கூறியதுடன் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஏழு வருட கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு

மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கிய இந்தத் தீர்ப்புக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு 1994 ஆரம்பத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மார்கழி 18இல் முடிவடைந்தது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எக்டா யாப்பா, குணசேகர ஆகியோர்களால் வழக்குத் தீர்ப்பு 1995ஆம் ஆண்டு மாசி மாதம் 08 ஆம் திகதி வழங்கப்பட்டது. தீர்ப்பில் எதிரியாகிய மரியதாஸ் விடுதலை செய்யப்பட்டார்.

நீதியரசர் குழாமில் அங்கம் வகித்த நீதியரசர்களான குணசேகர, எக்டர் யாபா ஆகியோரது தீர்ப்பு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் மிக முக்கியமான தீர்ப்பாக அமைந்தது. Mariadas Vs The State (1995) SLR, எதிரியினால் வழங்கப்பட்டதான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக பெறப்படவில்லையெனவும் பல சட்ட நடைமுறைக் குறைபாடுகள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்த நீதியரசர்கள் மேல்நீதிமன்றில் விசாரணை முடிவில் எதிரி தரப்பினரால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக பெறப்படவில்லையென முன்வைக்கப்பட்ட சகல ஆட்சேபனைகளையும் கவனத்தில் எடுத்து நீதியரசர்கள் தமது தீர்ப்பில் அதனைத் பதிவுசெய்துள்ளனர்.

அரசினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல்செய்யப்பட்ட பல வழக்குகளில் அரசியல் கைதிகள் விடுதலையாவதற்கு இந்த முக்கியமான தீர்ப்புக் காரணமாக அமைந்தது.

## சாட்சிகளின் வாக்குமூலங்கள்

கொலை நடந்த இடமான புல்லர்ஸ்லேன் 410/27 இலக்கத்தைக் கொண்ட வீட்டில் கொலை நடந்த நேரத்தில் அதாவது 13-07-1989 அன்று மாலை 7மணி 35 நிமிடமளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்ற வேளையில் நேரடியாகக் கண்கண்ட சாட்சியாகயிருந்த முருகேசு.சிவசிதம்பரம், சம்பவம் நடந்த இடத்தில் தங்கியிருந்த மற்றைய சாட்சிகளான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா, திருமதி யோகேஸ்வரன், மெய்ப்பாதுகாவலர்களான வேலுப்பிள்ளை லெச்சுமணன், நாராயணசாமி, சத்தியமூர்த்தி, ஆராச்சிலாகே நிசங்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர் தம்பிராஜா கந்தசாமி ஆகியோரின் வாக்குமூலங்கள் பொலிசாரினால் பதியப்பட்டிருந்தன. இந்த சாட்சிகள் தங்களது பொலிஸ் வாக்குமூலத்தில் மிக தெளிவாக நடந்த சம்பவத்தை விளக்கியுள்ளனர்.

13-07-1989 அன்று பிரதான வாசலில் கடமையிலிருந்த சத்தியமூர்த்தி, வேலுப்பிள்ளை லெச்சுமணன், தமது வாக்குமூலத்தில் கூறியதாவது சம்பவம் நடந்த அன்று காலை 6மணி 45 நிமிடம் அளவில் ஒரு மஞ்சள் நிற வாடகைக்கார் பிரதான நுழைவாசலின் (Main gate) முன் வந்து நின்றதாகவும் அதிலிருந்து மூன்று இளைஞர்கள் இறங்கி வந்து பிரதான வாசல் வழியாக வீட்டினுள் பிரவேசிக்க முற்படுகையில் கடமையிலிருந்த சத்திய மூர்த்தி அம்மூவரினதும் அடையாளத்தைப் பரிசோதனை செய்வதற்காக முற்படுகையில் வீட்டின்

மேல்மாடியின் வராந்தாவில் நின்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அம்மூவரையும் எந்தவித சோதனையும் இன்றி உள்ளே அனுமதிக்கும்படி கூறியதையடுத்து மூன்று இளைஞர்களும் எந்தவித சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் வீட்டுக்குள் செல்ல அனுமதித்ததாக கூறியுள்ளார்.

மற்றைய பாதுகாப்பு உத்தியோஸ்தரான வேலுப்பிள்ளை லெட்சுமணன் தனது வாக்குமூலத்தில் அந்த இளைஞர் மூவரையும் எந்தவித சோதனையும் செய்வதற்கு முன்பே யோகேஸ்வரன் அவர்களை நோக்கி வாங்க வாங்க (Come,Come) என்று கூறி உள்ளே அழைத்ததாகவும் யோகேஸ்வரனைச் சந்திக்க வருபவர்களை எந்தவித பாதுகாப்பு பரிசோதனையும் செய்யக் கூடாதென்று தங்களுக்கு யோகேஸ்வரன் ஏற்கனவே கடுமையான உத்தரவு வழங்கியிருந்ததாகவும் அதனால் யோகேஸ்வரனைக் காண வருபவர்களிடம் அடையாள அட்டையை மட்டும் பார்த்துப் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு எந்தவித உடல் ரீதியான சோதனையுமின்றி உள்ளே அனுமதிப்பதாகவும் கூறியிருந்தனர்.

தாங்கள் வந்தவர்களைச் சோதிக்க முற்பட்டபோது யோகேஸ்வரன் சோதிக்க வேண்டாம் என்று மேல்மாடியில் நின்று கூப்பிட்டு வந்தவர்களை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றுவிட்டதாக பாதுகாப்பு உத்தியோஸ்தர்கள் மாவை சேனாதிராஜாவிடமும் கூறியுள்ளனர். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரிடமிருந்து தங்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களோ உத்தரவுகளோ வழங்கப்படாததால் அவர்களைப் சந்திக்க வருபவர்களை தாங்கள் முற்றுமுழுதாக சோதனையிட்ட பின்பே உட்செல்ல அனுமதிப்பதாகவும் கூறியுள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் நடைபெற்ற தினமான 1989 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் பதிவுப் புத்தகத்தின்படி இந்த மூன்று துப்பாக்கிதாரர்களின் ஒருவரான அலோசியஸ் 06-07-1989, 07-07-1989, 11-07-1989 ஆகிய மூன்று தினங்களிலும் யோகேஸ்வரனைப் பார்ப்பதற்கென இந்த வீட்டுக்கு வருகை தந்துள்ளமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13-07-1989அன்று வீட்டின் உட்பகுதிக்கு வந்த மூவரில் இருவர் மேல்மாடி நோக்கிச் சென்றுள்ளனர். ஒருவர் கீழ்மாடியில் தங்கியுள்ளார். அமிர்தலிங்கத்தைப் பார்க்க வேண்டுமென மூன்று இளைஞர்கள் வந்துள்ள விடயம் அமிர்தலிங்கத்திற்குத் தெரியப்படுத்தப்பட்ட பொழுது அமிர்தலிங்கம் வந்தவர்களைக் காண மேல்மாடி நோக்கிச் செல்லுகையில் சேனாதிராஜாவிடம் அமிர்தலிங்கம் கூறியுள்ளார் "மூன்று இளைஞர்கள் என்னைப் பார்க்க வந்துள்ளார்கள் நான் கொழும்பு தாஜ்ஹோட்டலில் இந்திய இராஜதந்திரியின் விருந்துக்கு செல்ல வேண்டும்" மென்று கூறிய பொழுது மாவை சேனாதிராஜா அமிர்தலிங்கத்திடம் நீங்கள் சென்று பேசுங்கள் என்று கூறியுள்ளார். வந்தவர்கள் யோகேஸ்வரன், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரைச் சந்திக்க வந்தமையால் மாவை சேனாதிராஜா இந்த சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதே வேளையில் அமிர்தலிங்கத்தின் மகன் வைத்தியர் காண்டீபனிடமிருந்து தொலைபேசி அழைப்பும் லண்டனில் இருந்து வரவே அமிர்தலிங்கத்தின் துணைவி

மங்கையற்கரசி தனது கணவரிடம் மகனின் தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாகவும் மகனிடம் உரையாடும்படியும் கூறியுள்ளார். அப்பொழுது தன்னைக் காணச் சில முக்கியமான பிரமுகர்கள் வந்துள்ளனர். அவர்களைச் சந்தித்து விட்டு மிக விரைவில் வருவதாகக் கூறியபடி அமிர்தலிங்கம் வந்திருந்த இளைஞர்களைக் காண மேல் மாடி நோக்கிச் சென்றிருக்கிறார்.

அவ்வேளையில் யார் தனது கணவரைக் காண வந்துள்ளார்கள் என்பதை மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அறிந்திருக்கவில்லை. ஆகவே யார் தனது கணவரை காணவந்தவர்களைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சோதனைச் செய்தபின்னரா உட்செல்ல அனுமதித்தனர் என பாதுகாப்பு அதிகாரிகளைக் கேட்டபொழுது யோகேஸ்வரனைப் பார்ப்பதாக வந்தவர்கள் என்றும் அதனால் அவர்களைப் பரிசோதனை செய்ய முடியவில்லையென்றும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் மேல் மாடியில் நடந்த சம்பவத்தை சிவசிதம்பரம் அவர்கள் தனது வாக்குமூலத்தில் கூறும்பொழுது அமிர்தலிங்கமும் தானும் யோகேஸ்வரனும் மேல்மாடிக்கு வந்த இரண்டு இளைஞர்களுடன் சுமூகமாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும், ஏறத்தாள ஒரு மணித்தியாலயம் வரை பேச்சுவார்த்தை நடந்ததாகவும் அப்பேச்சுவார்த்தை சினேகபூர்வமான பேச்சுவார்த்தையாகவும் இடைக்கிடையே தமாசான விடயங்கள் பேசப்பட்டு யாவரும் சிரித்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தபொழுது இரவு 7மணி 35 நிமிடமளவில் அங்கு வந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் திடீரென தனது இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அமிர்தலிங்கத்தின் தலையை நோக்கிச் சுட்டதாகவும் மற்றைய இளைஞர் தன்னை சுட்டதாகவும் அச்சூடு தனது வலது தோள்ப்பட்டையை நோக்கிப் பாய்ந்ததாகவும் அப்படித் தங்கள் மீது துப்பாக்கியால் சுடுவார்கள் என்பதை தாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லையென்றும் கூறியிருந்தார்.

யோகேஸ்வரனை மட்டும் குற்றம் காண்பது எனது நோக்கமல்ல இந்த சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் சப் இன்ஸ்பெக்டர் கந்தசாமி அமிர்தலிங்கத்திடம் பாதுகாப்பு சம்பந்தமாக உள்ள குறைபாடுகளைக் கூறி எவராகயிருந்தாலும் சந்திக்க வருபவர்கள் பாதுகாப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். அப்பொழுது அமிர்தலிங்கம் கந்தசாமியிடம் கூறியுள்ளார். “நாங்கள் எங்களிடம் பேச்சுவார்த்தைக்கு வரும் பொடியன்களை உடல் ரீதியாக பாதுகாப்புப் பரிசோதனை செய்தால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள்” எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த சூழ்நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மாவை சேனாதிராஜா தனக்கு தெரிந்த, தான் கண்ட சம்பவங்களை நீதவான் நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியம் அளித்ததோடு பிரேத பரிசோதனையில் இறந்த உடல்களை அடையாளமும் காட்டியுள்ளார்.

## மரியதாஸ் மீண்டும் கைது 2009

14-07-1989 அன்று பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு சுமார் ஏழு வருடங்களாக நடைபெற்ற நீதிமன்ற விசாரணயின் பின் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிரபராதி என விடுதலை செய்யப்பட்ட வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் மீண்டும் 16 வருடங்களின் பின்னர் இறுதிப் போர் முடிவடைந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் வவுனியாவில் அமைந்திருந்த முகாமில் வைத்து மீண்டும் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகக் கொழும்பு கொண்டுவரப்பட்டிருந்தார். அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பொட்டு அம்மானின் பிள்ளைகளுக்கும் மற்றைய மாணவர்களுக்கும் வகுப்புக்களை நடாத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தடுப்பு காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

1989ஆம் ஆண்டு தனது கணவருக்கு விடுதலைபெற்றுத் தரும்படி தனது 6 மாதக் கைக்குழந்தையுடன் வந்த மரியதாசின் மனைவி மீண்டும் 20 ஆண்டுகளின் பின்னர் 2009ஆம் ஆண்டு தனது 21 வயது மகனுடன் வந்து தனது கணவர் கைதுசெய்யப்பட்டிருப்பதையும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதையும் கண்கள் கலங்கியநிலையில் பதற்றத்துடன் தனது கணவரை மீட்டுத் தரும்படி வேண்டிக் கொண்டது எமது சட்டத்துறை அனுபவத்தில் மறக்க முடியாத சம்பவமாகும். மரியதாசின் மனைவி சுன்னாகம் கந்தரோடையில் பிரபல ஆயுர்வேத வைத்தியராகயிருந்த ஜோர்ஜ் பரியாரியின் மகளாவார்.

1971ஆம் ஆண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உதைபந்தாட்டக் குழுவில் விளையாடிய பொழுது குழுவில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஏற்படும் நெளிவு, சுளிவுகளுக்கு வைத்தியம் செய்ய ஜோர்ஜ் பரியாரிடையே நாங்கள் செல்வது வழக்கம். மீண்டும் மரியதாஸின் விடுதலைக்காக உயர் நீதிமன்றில் அவரது விடுதலை வேண்டி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரியதாஸ் கொழும்பு நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் முன் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் சட்டமா அதிபரினால் மரியதாசுக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மரியதாஸ் சார்பாக எமது வேண்டுகோளை அடுத்து சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் மேல் நீதிமன்ற விசாரணையில் ஆஜராகினார் விசாரணை முடிவில் அரச தரப்பினால் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில் மரியதாஸ் நிரபராதியென வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் அவர்களினால் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் ஒரு குற்றச்சாட்டிலிருந்து விடுதலையாவதே கேள்விக் குறியாக காணப்படும் சூழ்நிலையில் யுத்தகாலத்தில் ஒரு குற்றச்சாட்டிலிருந்தும் யுத்தம் முடிவடைந்த பின்னர் இன்னொரு குற்றச்சாட்டிலிருந்தும் ஒரு அரசியல் கைதி விடுதலையாகி தனது குடும்பத்துடன் இணைந்துள்ளமை ஒரு விதிவிலக்கான

சம்பவமே. அவர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தனது மனைவியுடனும் மகனுடனும் கொழும்பு வந்து எங்களுக்கு நன்றி கூறி விடைபெற்ற காட்சி மறக்க முடியாத நினைவே

அமிர்தலிங்கம் கொலை வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் கொலை நடந்த இடத்திலேயே மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர். மரியதாஸ் பொலிசாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் படி மரியதாஸ் ஒரு சூழ்நிலைக் கைதியேயாவார். சிறையில் இருக்க வேண்டிய சிலர் வெளியே இருக்கின்றார்கள். வெளியே இருக்க வேண்டிய பல சூழ்நிலைக் கைதிகள் உள்ளே இருக்கின்றார்கள். இது வேதனைக்குரியது மட்டுமின்றி நியாயப்படுத்த முடியாததுமாகும்.

மற்றவர்கள் மீது வைக்கும் அதீத நம்பிக்கையும் தனது பாதுகாப்பில் கவனம் இன்மையும் தமது பாதுகாவலர்களின் கடமையைச் சரிவரச் செய்வதற்கு அனுமதியாமையும் இந்தத் துயர சம்பவத்துக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இந்தக் கொலைச் சம்பவத்தின் புலன் விசாரணைகளில் கொலையை நேரில் பார்த்த சாட்சிகளதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாக்கு மூலங்களிலிருந்தும் எதிர்பார்க்காத பல விடயங்களை நான் அறியக் கூடியதாகயிருந்த பொழுதும் அவற்றை முற்று முழுதாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதால் அவ்விடயங்கள் சிலருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்பதால் அவ்விடயங்களை தவிர்ந்து விடுவது நல்லதே.

# புலிகளின் உளவாளி அகிலனின் விடுதலை

1991

03

1991 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி கொழும்பு, வெள்ளவத்தைக் கடற்கரையில் கை, கால், உடலைச் சுற்றி கயிற்றினால் கட்டப்பட்ட சடலமொன்று பொலிசாரால் மீட்கப்பட்டது. இது தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத்துறையைச் சேர்ந்த அகிலன் என்பவரது சடலமென வெள்ளவத்தை பொலிசாரினால் அடையாளம் காணப்பட்டதோடு தேடப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உளவாளியெனவும் கூறப்பட்டது. இந்தப் பிரேதத்தைப் பற்றிய விபரங்கள் சகல ஊடகங்களிலும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஊடகங்கள் மூலம் இதனை அறிந்து கொண்ட அகிலனின் தாயார் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்து களுபோவில அரச வைத்தியசாலையில் பிண அறையில் வைத்து இறந்த உடலை தமனது மகன் என அடையாளம் காட்டினார்.

இந்தத் தாயாரின் கணவர் ஏற்கனவே இறந்துவிட்டார். அவர்களுக்கிருந்த ஒற்றை மகனும் சடலமாகக் கிடைத்துள்ளார். தமது ஒரே ஒரு சகோதரத்தை இறுதியாக ஒரு முறை பார்ப்பதற்காகவும் அவரது ஈமக்கிரியை யாழ்ப்பாணத்தில் நடாத்தவும் ஐந்து சகோதரிகளும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் ஆர்வம் கொண்டிருந்தனர். வைத்தியசாலைப் பிணவறையில வைக்கப்பட்டிருந்த தனது ஒரே மகனின் சடலத்தைத் தன்னிடம் கையளிக்கும்படி அந்தத் தாய் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கெஞ்சிக் கேட்டும் அவர் சடலத்தைக் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அத்தாய் என்னிடம் வந்து எப்படியாயினும் தனது மகனின் சடலத்தைத் தன்னிடம் ஒப்படைக்க வழி செய்து தரும்படி கண்கலங்கி நின்றார். அவரை ஆசுவாசப்படுத்தி ஆறுதல் வார்த்தைகள் கூறி தெம்பாக இருக்கச் செய்த கௌரி சங்கரி, உங்கள் மகனின் சடலம் உங்கள் விருப்பப்படி ஈமச் சடங்குகளுக்காகக் கிடைக்கும் என்றும் உறுதியளித்தார்.

## பொறுப்பதிகாரியின் கபடத்தனம்

இந்தத் தாயாரின் நியாயமான வேண்டுகோளுக்கு அமைய வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் லூகொடவைச் சென்று சந்தித்து இறந்த உடலைப் பாரமெடுக்கத் தாயார் வந்திருப்பதைக் கூறி ஈமைக்கிரியைகளைச் செய்வதற்காக உடலைத் தாயாரிடம் ஒப்படைக்கும் படி வேண்டிக்கொண்டேன். அதற்கு சரத் லூகொட "பயங்கரவாதிகளின் இறந்த உடலை உறவினருக்கு சட்டத்தின்படி கையளிக்க வேண்டிய அவசியமில்லை. அவசரகால ஒழுங்கு விதியின் பிரகாரம் தேசிய பாதுகாப்புக்கருதி பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இறந்த உடலை அரச செலவில் தகனம் செய்தலுக்கோ அல்லது அடக்கம் செய்தலுக்கோ பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அதிகாரம் உண்டு அவரது அனுமதியைப் பெற்று இறந்த உடலை தகனம் செய்ய தீர்மானித்துள்ளோம்" என்று பதிலளித்தார்.

தாயாரினதும் சகோதரிகளினதும் பரிதாபகரமான நிலைமையையும் தாயாரின் நியாயமான கோரிக்கையையும் எடுத்துக் கூறியதுடன் அவசரகாலச் சட்டத்தின் பிரிவு56 (2)இன்படி தேசிய பாதுகாப்புக்கோ அல்லது பொது ஒழுங்கைப் பேணுவதற்கோ ஏதேனும் அச்சுறுத்தல் காணப்படாத விடத்து உரிமைகோரும் உறவினர்களிடம் இறந்த உடலை நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய ஒப்படைக்க வேண்டும் என அவசரகால ஒழுங்குவிதியில் கூறப்பட்டுள்ளதையும் தெளிவுபடுத்தினேன். யாழ்ப்பாணத்தில் இறுதிக்கடனை முடிக்க குடும்ப அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படமாட்டாது. எனவே இந்தத் தாயாரின் நியாயமான வேண்டுகோளை சட்டத்தின்படி மட்டுமின்றி மனிதாபிமானத்தின் அடிப்படையிலாவது நிறைவேற்றும்படி வேண்டிக் கொண்டதையடுத்து எங்களை மறுநாள் காலை 11 மணிக்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி கூறினார்.

பொலிஸ் நிலையத்திலிருந்து அந்தத் தாயாருடன் வெளியேறுகையில் பிரதான வாசலருகில் எனக்கு நன்கு அறிமுகமான உதவிப் பொலிஸ் பரிசோதகர் "என்ன விடயம் இந்தப் பக்கம்" என்று வினவினார். நான் விடயத்தைக் கூற, அவர் "நீங்கள் எதிர்பார்பது போல இந்தப் பொறுப்பதிகாரியிடமிருந்து எந்தவிதமான சாதகமான பதிலும் உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. உங்களை இவர் ஏமாற்றிவிடுவார் இவரை நம்பவேண்டாம் இதற்கு ஒரே ஒரு வழி கொழும்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து உங்கள் நிலைமையை எடுத்துக் கூறினால் நிச்சயமாக நீங்கள் எதிர்பார்ப்பது நடக்கும்" என்று கூறினார்.

## பிரதிப்பொலிஸ் மாஅதிபர் ஏ.எஸ்.செனவிரத்னவின் மனிதாபிமானம்

கொழும்புப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் நேர்மையானவரும் மனிதத்தன்மை உள்ளவரும் என்பதை நான் ஏற்கனவே அறிந்திருந்ததினாலும் அந்தத் தாயின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் மறு நாள் காலை 8.30 மணியளவில் நான் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.எஸ்.செனவிரத்னவைச்

சந்திப்பதற்காக அவரது காரியாலயத்துக்குச் சென்றேன். காலை 9.30 மணியளவில் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. விளக்கமாக சகல விடயங்களையும் கூறி மனிதாபிமான அடிப்படையில் இறந்த உடலை தாயாரிடம் ஒப்படைக்கும்படி கேட்டதையடுத்து, அவர் தனது காரியதரிசியிடம் வெள்ளவத்தைப் பொறுப்பதிகாரியை தொலைபேசி மூலம் தன்னை தொடர்பு கொள்ளச் சொல்லும்படி கூறினார்.அவ் வேளையில் வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி "உங்களைப் பார்ப்பதற்காக வாசல் கதவருகில் தான் காத்து கொண்டு நிற்கிறார்" என்று காரியதரிசி பதிலளிக்க " அவரை உடனடியாக உள்ளே வரச்சொல்லுங்கள்" என்றார். அவர் உள்ளே வந்ததும் "இறந்த தனது மகனின் உடலைப் பாரமெடுக்க தாயார் வந்திருக்கிறார். எனவே உடலை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள்" என்றார் பிரதி பொலிஸ்மா அதிபர்.

வெள்ளவத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரியோ என் முன்னிலையிலேயே, அரசசெலவில் அடக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட பத்திரங்களைக் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் நீட்டி "அவசரகாலச்சட்டத்தின் 56ஆம் பிரிவின்படி உறவினரிடம் சடலத்தை ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை. சடலத்தைத் தாயாரிடம் பாரம் கொடுத்தாலும் அவர்கள் யாழ்பாணத்துக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளனர் அதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம், அதனால் அரச செலவில் அடக்கம் செய்வதற்கான உங்களின் அனுமதியைப் பெறவே நான் வந்திருக்கின்றேன்" என்றார்.

அவ்வேளையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொறுப்பதிகாரியைப் பார்த்து "இறந்தவர் புலிகளின் உளவுத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும். சடலத்தையே தன்னிடம் ஒப்படைக்கும்படி தாயார் கேட்கின்றார் அவ்வாறு ஒப்படைப்பதால் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படப்போவதில்லை எனவே உடனடியாக தாயாரின் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்" என்று உத்தரவிட்டுவிட்டு, என்னிடம் "சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு பொலிசாரால் எந்த பாதுகாப்பும் கொடுக்க முடியாது. ஏனெனில் வவுனியாவுக்கு அப்பால் இந்திய அமைதிப்படை இருக்கின்றது. அனுராதபுரம் வரைக்கும் கொண்டுசெல்வதற்கு மட்டும்தான் பொலிசார் பொறுப்பு. மிகுதியை நீங்களே பார்த்துக் கொள்ளவேண்டும்" என்றார்

அகிலனின் தாயாரையும் என்னையும் காலை தன்னை வந்து சந்திக்கும்படி எனக்குக் கூறிய பொறுப்பதிகாரி இறந்த உடலை தாயார் யாழ் கொண்டு செல்வதை தடுத்து தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுமென பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கூறி உடலை இங்கேயே தகனம் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டமை என்னை திகைப்படையவைத்தது,

வவுனியாவுக்கு அப்பால் கொண்டு செல்வதை எமது பொறுப்பில் எடுத்துக்கொண்டோம். அதற்கான சகல ஆயத்தங்களையும் நானும் எனது துணைவியார் கௌரி சங்கரி இந்த விடயத்தில் எடுத்துக் கொண்ட சிரத்தை என்றும் மறக்கவியலாதவொன்று. அனைத்துத் தரப்பினரோடும் தொடர்பினை ஏற்படுத்தி சுமூகமாகப் பேசி, கனிஷ்ட சட்டத்தரணிகளை திறம்பட வழிநடாத்தி ஏற்பாடுகளை நிறைவாகச் செய்து முடித்தார். அகிலனின் வித்துடல் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காக அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. யாழ்பாணத்தைச்

சென்றடையும்வரை கௌரிசங்கரி அனைத்துத் தரப்போடும் தொடர்பிலேயே இருந்தார். பொறுப்பெடுக்கும் ஒரு பணியை திறம்பட முழுமையாக முடிக்கவென அவர்கொள்ளும் அதீத ஆர்வம் பலரையும் திகைப்படையச் செய்யும்.

சட்டம் மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்டது மனிதனுக்காக சட்டமேயன்றி சட்டத்திற்காக மனிதனல்ல சட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்டத்தை பாதுகாக்கும் சட்டத்தை நிலைநாட்டும் எத்தனை உயர் அரச அதிகாரிகள் இதனை அறிவார்கள்? அறிந்திருந்தாலும் நடைமுறைப்படுத்துகின்றார்களா? மற்றவர்கள் விடயத்தில் சட்டத்தைப்பற்றி நீதி நியாயம் நேர்மையைப் பற்றிப் பேசும் உயர் பதவியிலுள்ள பல அரச அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல மற்றைய பொறுப்பு வாய்ந்த துறைகளில் உயர் பதவி வகிப்பவர்கள் கூட தங்களது சொந்த நலனுக்காக உறவுகளுக்காக அல்லது ஏதோ ஒரு காரணத்துக்காக தாங்கள் கடைப்பிடித்த நேர்மையை ஒரு நொடிப்பொழுதில் தவறவிட்டதை சமூகம் கண்டிருக்கின்றது. இதைத்தான் தனக்கு ஒரு நீதி ஊருக்கு ஒரு நீதி என்று கூறப்படும்.

வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரியான சரத் லூகொட உதவிப் பொலிஸ் மாஅதிபராக பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் (Colombo Crime Division) பணிப்பாளராக 2005ம்ஆண்டு கடமையாற்றிய காலத்தில். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கொலை முயற்சி வழக்குகள் என்பன சரத் லூகொடவின் நேரடிக் கண்காணிப்பின் கீழேயே புலன் விசாரணைகள் நடைபெற்ற பின்னர் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வெள்ளவத்தை சம்பவத்தின் 25 வருடங்களின் பின்னர் அரச தரப்பு பிரதான சாட்சியான கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சரத் லூகொட என்னால் மேற்கூறப்பட்ட இந்த இரண்டு வழக்குகளிலும் பல மணிநேரம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த வழக்குக்குகளின் விசாரணை முடிவுற்ற நிலையில் இந்த வழக்குக்களில் சட்டமா அதிபரினால் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட ஆரோக்கிய நாதன், சந்திரபோஸ் இருவரும் மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர். தற்பொழுது பொலிஸ் சேவையிலிருந்து பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சரத் லூகொட ஒய்வும் பெற்றுள்ளார்.

# டென்மார்க்கிலிருந்து நாடுகடத்தப்பட்ட சித்ரா கைதும் விடுதலையும்

(டென்மார்க் ஊடகவியலாளர்கள் நால்வர் கைதும் விடுதலையும்– 1996)

04

**இல. 13 துரதிஷ்டமா?**

(1) 1996ஆம் ஆண்டு மேற்கத்தைய நாடுகளான இங்கிலாந்து, ஜேர்மனி, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று அகதி அந்தஸ்து கோரியோர் 240,000 ஆயிரம் பேர். இதில் இலங்கையைச் சேர்ந்த (10,000) பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் அகதி அந்தஸ்து (Asylum Seekers) கோரி மேற்கத்தைய நாடுகளை நோக்கி வந்தபடியால் முதலில் இங்கிலாந்து அகதி அந்தஸ்து கோருபவருக்கான தங்கள் நாட்டுச் சட்டத்தையும் நிர்வாகத்தையும் பல புதிய விதிகளை உட்புகுத்தி கடினப்படுத்தியது. இங்கிலாந்தைத் தொடர்ந்து மற்றைய ஐரோப்பிய நாடுகளும் அகதி அந்தஸ்து கோரும் சட்டங்களைக் கடுமையாக்கியது

(2) 1996 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அகதி அந்தஸ்து கோரிய இலங்கையர்களை திருப்பி அனுப்பிவிடுங்கள், எந்தப் பிரச்சினைக்கும் உள்ளாக மாாட்டார்கள் என்ற கருத்தைக் கொண்டிருந்த பல மேற்கத்தைய நாடுகள் எடுத்திருந்த முடிவை சித்திரர் ராஜேந்திர்னின் கைதும் தடுத்துவைப்புக்கும் மாற்றியமைத்தது 1996ம்ஆண்டில் சித்திரா விடுதலையான பின்னர் மேற்கத்தய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரியவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பொழுது இறுக்கமான போக்கைக் கைவிட்டு மிக நெகிழ்வுத் தன்மையுடன் கவனமாகக் கையாண்டமைதான் மிக முக்கியமான விடயமாகும்

(3) சித்திராவுக்கு எது அதிர்ஷ்டமற்ற இலக்கமாக இருந்ததோ அதே அதிஸ்டமற்ற 13ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு டென்மார்க்கின் நான்கு ஊடகவியலாளர்களும் இரவோடு இரவாக இந்நாட்டிலிருந்து திருப்பி British Airways விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டனர் டென்மார்க ஊடகவியளாளர்கள் நால்வரையும் கைது செய்தமைக்கோ தடுத்து வைக்கப்பட்டமைக்கோ திருப்பி அனுப்பப்பட்டமைக்கோ எந்தக் காரணமும் கூறப்படவில்லை.

(4) **பத்திரிகையாளர் மேல் கடுங்கோபத்துடனிருந்த ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பிழையான பொறுப்பற்ற தகவல்களை வழங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அனுபவிப்பது பத்திரிகைச் சுதந்திரமல்ல காட்டுக் கழுதையின் சுதந்திரம் என்று நிட்டம்புவையில் நடைபெற்ற கூட்டத்தில் கூறியிருந்தார். (What these newspapers enjoy is not press freedom but freedom of the Wild ass")**

## சித்ரா ராஜேந்திரன்

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சித்ரா தனது 15ஆவது வயதில் டென்மார்க் நாட்டுக்குச் சென்று தனது சிறிய தாயாரின் பராமரிப்பில் தங்கியிருந்து டென்மார்க் அரசிடம் அகதி அந்தஸ்தையும் கோரியிருந்த நிலையில் 1995ஆம் ஆண்டிலிருந்து 1996ஆம் ஆண்டு வரை (Danish) மொழியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இக்காலப்பகுதியில்தான் இங்கிலாந்து தம்மிடம் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கான சட்டத்தையும் நிர்வாகத்தையும் பல புதிய விதிகளை உட்புகுத்திக் கடினப்படுத்தியது. இங்கிலாந்தைத் தொடர்ந்து ஜேர்மனி, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளும் அகதி அந்தஸ்து கோரும் சட்டங்களைக் கடுமையாக்கின. இக்காலப் பகுதியில் இந்நாடுகளிடம் அகதி அந்தஸ்து கோரியோர் (Asylum Seekers) தொகை 240,000 பேராகும். இதில் இலங்கையைச் சேர்ந்த (10,000) பத்தாயிரத்துக்கு மேற்பட்டோரும் இருந்தனர்.

## இல. 13 துரதிஷ்டமா?

பெரும்பான்மையான ஐரோப்பியர் மனதில் இல. 13 துரதிஸ்டவசமான இலக்கமாகக் கருதப்பட்டு வந்தது. இது சித்திராவின் வாழ்க்கையிலும் நிரூபணமாகியிருந்தது. 12 தமிழ் அகதிகளின் நிரந்தர குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் டெனிஸ் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் 13வது விண்ணப்பமாக சித்திராவின் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டு டெனிஸ் அதிகாரிகளினால் இரண்டு வாரங்களாக சித்திரா தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அத்துடன் சித்ராவின் மேன்முறையீடானது டென்மார்க்கின் குறைகேள் அதிகாரியின் (ombudsman) இறுதி முடிவு வருவதற்கு முன்னர் டென்மார்க் அதிகாரிகள் இலங்கையில் எந்தப் பிரச்சினையுமில்லையென்றும் அகதிகள் திரும்ப அனுப்பப்படுவதனால் அவர்களுக்கு எந்த ஆபத்துமில்லையெனவும் தீர்மானித்து சித்ராவை இலங்கைக்கு அனுப்ப முடிவெடுத்திருந்தனர்.

சித்திராவின் கைதுக்கெதிராகவும் இலங்கைக்குத் திருப்பியனுப்பும் தீர்மானத்துக்கு எதிராகவும் சித்திராவுடன் ஒன்றாகப் பயின்ற மாணவ மாணவிகளாலும் கல்லூரி ஆசிரியர்களாலும் மனித உரிமை அமைப்புகளாலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் டென்மார்க் ஊடகங்களில் முக்கிய செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. சுயேட்சையான நிறுவனங்களாலும் நிதி சேகரிக்கப்பட்டு, சித்திராவின் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் டெனிஸ் அதிகாரிகள் சித்திராவை இலங்கைக்கு மீண்டும் நாடுகடத்த முடிவெடுத்தனர். 1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாம் திகதி சித்திராவை இரண்டு டெனிஸ் அதிகாரிகள் இலங்கைக்கு விமானம்

மூலம் நாடுகடத்திக் கொண்டு வந்து இலங்கையின் குடிவரவு, குடியகழ்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

சித்திரா கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தடைந்தபோது சித்திராவிடம் கடவுச்சீட்டோ, ஆள் அடையாள அட்டையோ இருக்கவில்லை. பிறப்பு அத்தாட்சிச் சான்றுப் பத்திரமும் டென்மார்க் குடியகழ்வு குடிவரவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவுப் பத்திரமும் மட்டுமே உடமையில் இருந்தன.

சித்திரா இலங்கைக்கு நாடுகடத்தப்படும் தகவல் சித்திராவின் மாமனாருக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் சித்திராவை அழைத்துச் செல்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு மாமனாரும் அவரது மகனும் வந்திருந்தனர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளினதோ அல்லது பொலிஸ் அதிகாரிகளினதோ எந்தவிதச் சோதனைக்கும் உட்படுத்தப்படாத சித்திரா விமான நிலையத்திலிருந்து வெளியேறி அவரது மாமனாருடன் தெஹிவளையில் அமைந்திருந்த வீட்டை வந்தடைந்தார்.

## சித்ரா கைது

1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மூன்றாம் திகதி தெஹிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் கைது செய்யப்பட்டு அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். இச்செய்தி உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள் இலந்திரனியல் ஊடகங்களில் முக்கிய பேசுபொருளாக மாற, சித்திரா கைது விவகாரம் டென்மார்க்கின் பிரபலமான அனைத்து ஊடகங்களினதும் பத்திரிகைகளினதும் முக்கிய செய்தியாகியது. டென்மார்க் ஊடகவியளாளர்கள் நான்கு பேர் தகவல் சேகரிப்புக்காக உடனடியாக இலங்கை வந்தடைந்தனர்.

இந்நிலையில் சித்திராவின் உறவினர்களும் டென்மார்க்கில் சித்திராவின் அகதி அந்தஸ்த்து விண்ணப்பத்தை ஆதரித்து சித்திரா சார்பாக வாதாடிய டென்மார்க் நாட்டு சொலிசிட்டர் கிறிஸ்டல் பால்க்வொன்னர் (Danish solicitor Christel FalkWoenner) என்னையும் எனது துணைவியாரையும் தொடர்பு கொண்டு சித்திராவின் விடுதலைக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

## விடுதலைப் புலிகளுக்கு டென்மார்கில் நிதி சேகரிப்பு

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மசிறி லியனகே மற்றும் பிரதம பொலிஸ் பரிசோதகர். தென்னக்கோன் ஆகியோருடன் இணைந்து தெஹிவளை பொலிசாரால் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்று மேலதிக விசாரணைகளை நடாத்தியது. சித்திரா பொலிசாரினால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் சித்திராவிடமிருந்து எந்தவொரு தொடர்பும் கிடைக்காததால் பொலிஸ்மா அதிபரைத் தொடர்புகொள்ள எத்தணித்தார்கள். இந்நிலையில் பொலிஸ் தலைமை காரியாலயத்திலிருந்து சித்திராவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவும் சித்திரா தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக டென்மார்க்கில் நிதி சேகரிப்பதாக இன்டர்போல் பொலிஸாரிடமிருந்து

நம்பகத்தன்மையுடைய தகவல் வந்துள்ளதாகவும் அந்தத் தகவலின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவதாகவும் காரணம் கூறப்பட்டது.

சித்திரா டென்மார்க்கை விட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதையடுத்து கைதானதைத் தொடர்ந்து அவரது கைதும் தடுத்துவைப்பும் டென்மார்க்கிலுள்ள பிரபல்யமான ஊடகங்களில் வெளியானதையடுத்து அது சம்பந்தமான செய்திகளை சேகரிக்க டென்மார்க்கிலிருந்து இலங்கை வந்தடைந்த [1] Ole Hoff Lund of TV 3 Denmark, [2] Morten Jastrup of the Information newspaper, [3] Nidgm Ue Mego of Politken [4] Jenson Jens Mollar of TV 2 Denmark. ஆகிய நான்கு ஊடகவியலாளர்களும் அன்றைய தினமே தெகிவளை பொலிஸ் நிலையம் சென்று சித்திராவை சந்தித்ததுடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு எந்தப் பிரச்சனைகளும் இல்லையென்பதால் திருப்பி அனுப்பப்பட்ட சித்ராவை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தமையையும் அதன் முழு விபரங்களையும் டென்மார்க் மேலும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள சகல ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்தனர். இச் செய்தி முக்கிய செய்தியாக பல நாடுகளினதும் முன்னணி ஊடகங்களில் கவனம் பெற்றது.

## டென்மார்க் ஊடகவியளாளர்கள் கைது

1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 06ம் திகதி அன்று இலங்கைப் புலனாய்வுத் துறையினர் ஊடகவியலாளர்கள் தங்கியிருந்த ஹோட்டல்களான இன்ரர்கென்டினல் (Hotel Intercontinentel), கிரான்ட் ஒரியன்ட் (Grand Orient Hotel) ஆகிய ஹோட்டல்களுக்கு சென்று ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட உடமைகளை சோதனையிட்டதுடன் நால்வரையும் கைது செய்து தடுத்து வைத்தார்கள்.

டென்மார்க் நாட்டின் ஊடகவியலாளர்கள் இலங்கைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியானது சர்வதேசரீதியில் மிகவும் பரபரப்புடையதாக அமைந்திருந்தது. தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பெற பொலிசார் நடவடிக்கை எடுத்த வேளையில் தாங்கள் வாக்குமூலம் அளிப்பதாகவிருந்தால் தங்கள் நலனைக் கவனிக்கும் சட்டத்தரணியின் முன்பே வாக்குமூலம் கொடுப்போம் என்று உறுதியாக இருந்தனர். இந்நிலையில் நான்கு பத்திரிகையாளர்களும் டென்மார்க் வதிவிடப்பிரதிநிதி (Consul-General) பல்தி பிஜோன் ரஷ்முசேனைத் (Palte Bjorn Rasmussen) தொடர்புகொண்டு தங்கள் சார்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தங்கள் நலனை கவனிப்பதற்காகவும் என்னையும் எனது துணைவியாரையும் நியமிக்கும்படி வேண்டிக்கொண்டிருந்தனர். அதன்படி டென்மார்க் வதிவிடப்பிரதிநிதியின் வேண்டுகோளுக்கு இணங்க சித்திராவின் கைது, அவசரகால விதியின்கீழ் தடுத்து வைப்பு என்பவற்றுடன் நான்கு டென்மார்க் ஊடகவியலாளர்களின் நலனையும் கவனிக்க தொடங்கினோம்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ஊடகவியலாளர்களின் வாக்குமூலங்களும் எம் முன்னிலையில் பதியப்பட்டு தொடர்ந்தும் அவர்கள் கல்கிசை (Beach Way Hotel) பீச்வேய்

ஹோட்டலுக்கு கொண்டு செல்லப்பட்டு அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பலத்த பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களை உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ மனித உரிமை ஆர்வலர்களோ சந்திப்பதையோ நேர்காணல் செய்வதையோ அல்லது புகைப்படம் எடுப்பதையோ அன்றைய பொலிஸ் மா அதிபர் W.B.ராஜகுருவின் உத்தரவினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

டென்மார்க் அரசு தனது அரச பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அப்பிரதிநிதியுடன் மேலும் நான்கு ஊடகங்களின் பிரதான ஆசிரியர்களும் இலங்கை வந்து வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். அத்துடன் டென்மார்க்கின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளரும் இன்னும் சில அரச அதிகாரிகளும் இலங்கை வந்து வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், புனர்வாழ்வு அமைச்சர் M.H.M.அஸ்ரப், பொலிஸ்மா அதிபர் W.B.ராஜகுரு ஆகியோரைச் சந்தித்து சித்திரா தொடர்பிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ஊடகவியளாளர்கள் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊடகவியளாளர்களின் மனைவிமார் டென்மார்க்கிலிருந்து இங்கேயுள்ள வதிவிடப்பிரதிநிதியுடனும் என்னுடனும் எனது துணைவியாருடனும் தமது கணவர்மாரின் நிலையை அறியத் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் திருப்திகரமான நம்பிக்கையூட்டும் தகவல்களை ஆறுதலுக்காக கௌரி சங்கரி வழங்கிக் கொண்டிருந்தார். அவர்களது தொலைபேசி அழைப்புகளுக்கு எந்நேரமும் பதில் அளித்ததோடு அவர்களை ஆசுவாசப்படுத்தும் செயற்பாட்டில் துளியளவும் அவர் குறை வைக்கவில்லை. வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகைகள், சுதந்திர ஊடக அமையம் (Free Media Movement) ஆகியன இந்தக் கைதுகளுக்கும் தடுப்புக் காவல் உத்தரவுக்கும் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

## ஊடகவியளாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற முடிவு

1996ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 06ஆம் திகதி வழங்கப்பட்ட ஏழு நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவு 13ஆம் திகதி முடிவுக்கு வந்ததும் கல்கிசை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மசிறி லியனகேயிடம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியளாளர்களின் விடுதலையைப் பற்றி வினவியபோது பாதுகாப்பு அமைச்சு நான்கு ஊடகவியளாளர்களையும் நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான முடிவை எடுத்துள்ளது எனக் கூறினார். நான்கு ஊடகவியளாளர்களையும் என்ன காரணத்திற்காக எப்பொழுது நாடுகடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என வினவியபொழுது அந்தக் கேள்விக்கு பொலிஸ் அத்தியட்சகர் எந்த நேரமும் முதலில் கிடைக்கும் பிரிட்டிஸ் எயார்வேய்ஸ் (British Airways) விமானத்தின் மூலம் அவர்கள். நாடு கடத்தப்படுவர். விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்புவதற்கான காரணம் கூறப்படுமென்று என்னிடம் கூறினார்.

நான்கு ஊடகவியளாளர்களையும் அவர்களது நாட்டிற்கு உடனடியாக திருப்பி அனுப்ப பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்ட முடிவு நான்கு ஊடகவியளாளர்களுக்கும் அவர்களது துணைவிகளுக்கும் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. சித்திராவுக்கு எது அதிர்ஷ்டமற்ற இலக்கமாக இருந்ததோ அதே 13ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு நான்கு ஊடகவியலாளர்களும் இரவோடு இரவாக இந்நாட்டிலிருந்து British Airways விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டனர். டென்மார்க ஊடகவியளாளர்கள் நால்வரையும் கைது செய்தமைக்கோ தடுத்து வைக்கப்பட்டமைக்கோ திருப்பி அனுப்பப்பட்டமைக்கோ எந்தக் காரணமும் கூறப்படவில்லை.

## ஊடகவியலாளர்கள் மீதான ஜனாதிபதி சந்திரிக்காவின் கடும் கோபம்

அன்றைய காலகட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பத்திரிகையாளர் மீது கடும் கோபத்திலிருந்தார். அதற்கான பிரதான காரணம் யாதெனில் வடக்கில் பணியிலிருந்த இராணுவத்திற்கு உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஆனால் ஜனாதிபதி தனது பிறந்தநாள் விழாவை மிகவும் கோலாகலமாகபிரமாண்டமாக நள்ளிரவுவரை கொண்டாடினார் என்றும் விழாவில் சந்திரிக்கா குமாரதுங்க நடந்துகொண்ட முறையையும் விமர்சித்து நாளாந்த சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் கட்டுரைகளை வெளியிட்டிருந்தன. இதனையடுத்து குற்றப்புலனாய்வுப்பிரிவு பொலிசார் சன்டே லீடர் (Sunday Leader) சண்டே ரைம்ஸ் (Sunday Times) ஆகிய இரண்டு பத்திரிகைக்கும் எதிராக வழக்கு தொடர்ந்திருந்தார்கள்.)

நிட்டம்புவையில் நடைபெற்ற கூட்டத்தில் பத்திரிகையாளார் மேல் கடுங்கோபத்துடனிருந்த சந்திரிக்கா குமாரதுங்க பிழையான பொறுப்பற்ற தகவல்களை வழங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் அனுபவிப்பது பத்திரிகைச் சுதந்திரமல்ல காட்டுக்கழுதையின் சுதந்திரம் என்று கூறியிருந்தார்.

‘What these newspapers enjoy is not press freedom but freedom of the Wild ass”

வீரகேசரி பத்திரிகையின் நிருபரான இராசையா செல்வராஜா சித்திரா கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டதனையும் பொலிசாரின் புலன் விசாரணைகளைப் பற்றியும் விபரமாக பத்திரிகையில் வெளியிட்டமைக்காக பொலிசாரினால் அழைக்கப்பட்டு பத்திரிக்கையில் வெளியிட்ட விபரங்கள் எங்கிருந்து பெறப்பட்டதென விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

## ஊடகவியலாளர் சந்துங் ஜயசேகர கைது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடகவியலாளர் சந்துங் ஜயசேகர (Sri Lanka Broadcasting=Journalisi Sandung Jayasekara) டென்மார்க் ஊடகவியலாளர்களுடன் தகவல்களை பரிமாரிக்கொள்வதுடன் டென்மார்க் ஊடகவியலாளர்களுக்கு தகவல்களை வழங்கியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

## சித்திரா நீதிமன்றில்

இந்நிலையில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்திரா, கல்கிசை நீதிமன்றின் பிரதான நீதவான் சரத் ஆப்ரு முன் ஆஜர்படுத்தப்பட்டார். உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மனித உரிமை அமைப்புக்களைச் சார்ந்த அதிகாரிகள் என பலர் நீதிமன்றம் வந்திருந்தனர். பிணை மனு விசாரணையின் போது சித்திராவின் சார்பில் நீதிமன்றின் கவனத்துக்கு முன்வைக்கப்பட்ட விடயம் யாதெனில் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையிலோ அல்லது மேலதிக அறிக்கையிலோ சித்திராவுக்குப் புலிகளுடன் தொடர் உண்டு எனக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவிதமான சான்றும் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை.

சித்திரா டென்மார்க் செல்வதற்கு முன்னர் 1991ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டுவரை புலிகள் அமைப்பில் (Nurse) மருத்துவத் தாதியாக இருந்தவரெனவும் சித்திராவின் இரு சகோதரர்கள் புலிகள் அமைப்பிலிருந்த போது ராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டதாகவும் பொலிசாரின் முதல் அறிக்கையில் கூறப்பட்டிருந்ததேயன்றி கைது செய்து தடுத்து வைத்தமைக்கு ஏற்கனவே தடுப்புக் காவல் உத்தரவில் கூறப்பட்ட காரணமான டென்மார்க்கில் புலிகளுக்காக நிதி சேகரித்தார் என்ற விடயம் பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடன் சித்திராவுக்கு தொடர்பு உண்டெனத் தமக்குக் கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் சித்திராவை கைது செய்து விசாரணை நடாத்தியதாகப் பொலிசார் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதிலும் அதற்கான எந்தச் சான்றும் பொலிசாரினால் முன்வைக்கப்படவில்லை. உண்மைக்குப் புறம்பான தகவலினால் சந்தேகத்தின் அடிப்படையில் சித்திரா கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சித்திராவை அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க முடியும் ஆனால் இன்றுடன் தடுப்புக்காவல் உத்தரவு செயலிழந்து விட்டது. தடுப்புக்காவல் உத்தரவு காலாவதியானது மட்டுமின்றி எந்தவிதமான சான்றுகளும் பொலிசாரினால் முன்வைக்கப்படாத நிலையில் சித்திராவை இந்த நீதிமன்றம் விடுதலை செய்யவேண்டும் அல்லது பிணையிலாவது விடுதலை செய்யப்பட வேண்டும் எனச் சந்தேக நபரான சித்திரா தரப்பில் நான் எனது சமர்ப்பணத்தை முன்வைத்தேன்.

## சித்திரா சரீரப்பிணையில் விடுதலை

பொலிஸாரினதும் எதிர்த்தரப்பான எங்கள் வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி சித்திராவை சரீரப்பிணையில் விடுதலை செய்தார் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து வெளியே வந்த சித்திராவைப் பாரமெடுக்க அவரது உறவினர்கள் எவருமே நீதிமன்றுக்கு வரவில்லை. எனவே சித்திராவை பாரமெடுக்கவும் அவரை எங்கே தங்கவைப்பது போன்ற பிரச்சினைகள் உருவாகின. சித்திராவைத் தனியாக எங்கும் தங்கவைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் பெண்புலியென முத்திரை குத்தப்பட்டுத்

தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்திரா பிணையில் விடப்பட்டது மிக முக்கிய செய்தியாக சகல தொலைக்காட்சிகளிலும் ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் வெளிவந்ததையடுத்து அவரது பெயர் அக்காலகட்டத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்தபடியால் பாதுகாப்பாகத் தங்கவைக்கக் கூடிய இடங்களில் சித்திரா தங்குவதற்கு இடமளிக்க மறுத்துவிட்டனர். பல பெண்கள் தங்கும் விடுதிகளிலும் பீதியின் காரணமாக மறுத்துவிட்டனர்.

இறுதியில் இலங்கையிலிருந்த உற்றாரோ உறவினரோ அல்லது சமூக அமைப்புக்களோ சித்ராவைப் பாரமெடுத்து தற்காலிமாகவேனும் தஞ்சம் கொடுக்கவோ குறைந்தது ஆறுதல் கூறவோ பயத்தின் காரணமாக முன்வராத நிலையில் எங்கள் வீட்டிலேயேலேயே அவரைத் தங்கவைத்தோம். இது தொடர்பில் இனியென்னவிதமான எதிர்வினைகள் வந்தாலும் பரவாயில்லை சித்ராவுக்கு நாம் அடைக்கலம் கொடுத்தாகவேண்டியது நமது கடமை என்று கௌரி சங்கரி என்னிடம் உறுதியாகக் கூறும்போது அவரது மனவுறுதியும் நெகிழ்வான முடிவும் மனிதாபிமானத்தின் அடையாளமாகவே தெரிந்தன. அவர் இப்படியொரு முடிவைத்தான் எடுப்பார் என்பது எனக்கு முன்கூட்டியே தெரியும்.

## சித்ரா விடுதலையும் மீண்டும் டென்மார்க் பயணமும்

சித்திராவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொலிசார் பல விசாரணை அறிக்கைகளை நீதி மன்றில் தாக்கல் செய்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சித்திராவுக்கு எந்தத் தொடர்பும் இருந்ததாகப் பொலிசாரினால் நீதிமன்றில் எந்தச் சான்றும் முன்வைக்கப்படாத நிலையில் நீதிமன்றம் சித்ராவை விடுதலை செய்தது.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்று முடிவெடுத்து சித்திராவை இலங்கைக்கு நாடு கடத்திய டென்மார்க அரசாங்கமே இலங்கைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றினால் விடுதலைபெற்ற சித்திராவை மீண்டும் தனது நாட்டுக்கு அழைத்துக்கொண்டது.

இங்கு எல்லா உறவினர்களும் தமக்கும் ஏதும் சிக்கல் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக பின்வாங்கியிருந்த நிலையில் வழக்கு முடியும் வரை எமது வீட்டிலேயே தங்கவைத்து விடுதலையானதும் எமது வாகனத்திலேயே கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்று சித்திராவை மீண்டும் டென்மார்க்குக்கு வழியனுப்பி வைத்தோம். இந்நேரத்தில் கௌரி சங்கரி எடுத்த உறுதியான முடிவுகள் கட்டாயம் பதிவு செய்யப்படவேண்டியதாகும். ஏனெனில் எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் ஓர் அபலைப் பெண்ணை அவள் எதிர்கொண்ட சிக்கலில் இருந்து முற்றாக விடுவித்து அவளது பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்தி அதற்காக பொறுப்பையும் சுமந்து அர்ப்பணிப்போடு காரியமாற்றும் கௌரி சங்கரியின் முனைப்பான செயல் எப்போதுமே வியந்து நோக்க வைக்கும்.

## சித்தராவுக்கு டென்மார்க்கில் வரவேற்பு

சித்திரா விடுதலை பெற்று டென்மார்க் விமான நிலையத்தையடைந்த வேளை, அவரை இலங்கைக்கு நாடு கடத்தும் தீர்மானத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து ஆர்ப்பாட்டங்களை நடாத்திய சக கல்லூரி மாணவிகளும் ஆசிரியர்களும் ஊடகவியளாளர்களும் விமானநிலையத்துக்கு வந்து சித்திராவை ஆரத்தழுவி கட்டியனைத்து தமது அன்பை வெளிப்படுத்தி வரவேற்று அழைத்துச் சென்றுள்ளனர்.

1996ம்ஆண்டில் சித்திரா விடுதலையான பின்னர் மேற்கத்தேய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரிய இலங்கையர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பொழுது இறுக்கமான போக்கைக் கைவிட்டு மிக நெகிழ்வுத் தன்மையுடன் கவனமாகக் கையாண்டமைக்கு 1996ஆம் அண்டில் சித்திராவின் விடுதலை முக்கிய காரணமாக அமைகின்றது.

சிலருக்குப் பிரச்சினை வந்தாலும் அது பலருக்கு நன்மையளிக்கும் என்பது சித்திராவின் வழக்கு மூலம் அறிந்து கொண்ட பாடம் எனலாம். சித்திரா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் டென்மாாக் ஊடகவியலாளர்கள் சித்திராவின் நலனைக் கவனிக்க இங்கு வந்தமையினால் கைது செய்யப்பட்ட சில வாரங்களில் சித்திரா விடுதலை செய்யப்படும் சூழ்நிலை உருவாகியது.

சித்திரா விடுதலை செய்யப்பட்டமைக்கு பல காரணங்கள் இருந்த போதிலும் சர்வதேச ராஜதந்திர தலையீடு முக்கியமான காரணமாக அமைந்தது நான்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் படாமலிருந்திருந்தால் சித்திராவின் விரைவான விடுதலை ஒரு கேள்விக் குறியே? 1996ஆம் ஆண்டு நாடுகடத்தப்பட்ட நான்கு பத்திரிகையாளர்களில் இருவர் 2010 ஆம்ஆண்டு பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக (Press Conference) இலங்கை வந்த பொழுது எம்மைச் சந்தித்து உரையாடிச் சென்றனர். தற்பொழுது சித்திரா டென்மார்க்கில் தனது குடும்பத்துடன் நிம்மதியாக வசித்து வருகின்றார்.

# ஐரிஸ் தாயும் மகனும் இணைந்தனர்

1996

05

**(1) மகனைத்தேடி இலங்கை வந்த ஐரிஸ் பெண் ஜோன் விடுதலைப் புலிகளின் உளவாளி.**

**(2) இலங்கை நீதித்துறை வரலாற்றில் உயர் நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக பாலியல் பலாத்காரம் புரிந்ததாக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதல் குற்றவியல் வழக்கு்**

**(3) நீதிபதி சரத் டி ஆப்ரு 2014ம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்று கடமையிலிருந்தபோது 2015ம் ஆண்டு அவரது வீட்டில் கடமையாற்றிய பணிப்பெண்ணை பாலியல் பலாத்காரம் புரிந்ததாக 2016ம் ஆண்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில் வீட்டின் மேல்மாடியிலிருந்து கீழே விழுந்து மரணமடைந்தார்.**

வட அயர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோன் (John) இங்கிலாந்தில் வசித்த இலங்கையரான டேவிட் ரட்ணம் என்பவரை 1991ஆம் ஆண்டு லண்டனில் திருமணம் முடித்தார். 1992ஆம் ஆண்டு இவர்களுக்கு ஆண்குழந்தையொன்று கிடைக்கப்பெற்றது. இந்தக் குழந்தைக்கு யோசுவா Joshua எனப் பெயரிட்டனர். 1993ம் ஆண்டு குடும்பப் பிரச்சினை காரணமாக லண்டன் நீதிமன்றத்தில் விவாகரத்துப் பெற்றனர். குழந்தையை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றிய தீர்ப்பில் குழந்தை 6 மாதங்கள் தந்தையான டேவிட் ரட்ணத்துடனும் மிகுதி 6 மாதம் தாயாரான ஜோனிடமும் கொடுக்கப்பட்டது.

1993ம் ஆண்டிலிருந்து 1996ஆம் ஆண்டு முற்பகுதி வரை குழந்தை யோசுவா நீதிமன்றத் தீர்ப்பின்படி இருவருடனும் மாறி மாறி இருந்து வந்த வேளையில் 1996ம் ஆண்டு

ஒக்டோபர் மாதம் டேவிட் ரட்ணம் யோசுவாவை இலங்கைக்கு அழைத்துக் கொண்டு வந்து குருநாகலையில் சொந்தமாக தென்னந்தோட்டம் ஒன்றை வாங்கிதுடன் வேறு ஒரு பெண்ணைத் திருமணமும் முடித்துக்கொண்டு அங்கேயே மகனுடன் தங்கிவிட்டார்.

மகன் ஜோசுவாவை 6 மாதம் முடிந்த பின்னரும் தன்னிடம் டேவிட் ஒப்படைக்காத காரணத்தினால் மகனைத் தேடி டேவிட்டின் வீட்டிற்குப் போனபொழுது இருவருக்கும் சொந்தமான மனையை 82ஆயிரம் (82,000 pounds) பிரித்தானிய பவுன்ஸ்சுக்கு டேவிட்ரட்னம் விற்பனை செய்த விடயமும் பணத்துடன் தனது மகனையும் அழைத்துக் கொண்டு இலங்கை போன விடயம் தெரியவந்த வேளையில். ஒருகணம் அதிர்ச்சியடைந்த ஜோன், தனது மகனைத் தேடி உடனடியாக இலங்கை வந்து சேர்ந்தார்.

லண்டனில் உள்ள அவரது (Solicitor) வழக்கறிஞர் மூலம் எம்மைத் தொடர்புகொண்ட ஜோன் இலங்கை வந்த பின்னர் தனக்குள்ள ஒரே சொத்து தனது மகனெனவும், தனது மகன் இருக்கும் இடத்தை அறியத்தந்தால் தன்னாலான சன்மானத்தைத் தருவதாகவும் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார்.

பின்னர் தனது மகனும் முன்னாள் கணவருமான டேவிட் ரட்ணம் குருநாகலையில் இருப்பது தெரியவரவே குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் ஜோனின் சார்பாக ரட்னத்தை பிரதிவாதியாக குறிப்பிட்டு தாபரிப்பு (Custody) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்ட டேவிட் ரட்ணம் நீதிமன்றில் ஆஜராகத் தவறியடையடுத்து மாவட்ட நீதிபதி L.T.B. தெகிதெனியினால் (தற்போது உயர்நீதிமன்ற நீதியரசராக கடமை புரிகின்றார்.) பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் ஆட்கொணர்வு மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த விசாரணைகளில் தனது நாட்டு பிரஜையான ஜோனின் நலனைக் கருத்திற்கொண்டு இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரக அதிகாரிகள், நீதிமன்றம் வந்து விசாரணைகளைப் பார்வையிட்ட நிலையில் கல்கிசை நீதிமன்றத்தில் ஜோன் சார்பாகப் பராமரிப்பு (Maintenance) வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு மாதம் 50,000 ரூபாய் பராமரிப்பாகத் தரும்படி மனுவில் கோரப்பட்டிருந்தது

இந்நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது வழக்கில் ஆஜராகியிருந்த பிரதிவாதியான டேவிட் ரட்ணத்தின் சட்டத்தரணி -குழந்தை யோசுவாவைத் தாயாரிடம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்காததை அடுத்து யோசுவா அவரது தாயாரிடம் நீதிமன்றத்தில் வைத்து கையளிக்கப்பட்டார்.

## புலிகளின் சட்டத்தரணி

இந்த வழக்குகளில் முக்கியத்துவம் யாதெனில், தனது மகன் தனக்குக் கிடைத்ததை தொடர்ந்து கல்கிசை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பராமரிப்பு வழக்கை (Maintenance) வாபஸ் வாங்குவதற்காக நீதிமன்றிற்கு வந்திருந்த வேளையில் ஜோனையும் அவருக்காக வாதாடிய என்னையும் பி.பி.சி தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றை நடாத்தியது.

அந்த நேர்காணல் நடந்துகொண்டிருக்கும் பொழுது கல்கிசை நீதிமன்றத்தில் பணிபுரியும் சில சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்தில் நேர்காணல் எடுக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்ததுடன், ஜோன் ஒரு வட அயர்லாந்துப் (ஐரிஸ்) பெண்ணென்றும் அவரது முன்னாள் கணவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்றும், எனவே விடுதலைப் புலிகளுக்கும் ஐரிஸ் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கலாமெனக் கூறியதுடன், இந்த வழக்கில் நான் நீதிமன்றில் ஆஜராகியதனால் நான் புலிகளின் சட்டத்தரணியென முத்திரை குத்தி கல்கிசை மாவட்ட நீதிபதிக்கும் பிரதான நீதவானுக்கும் வாய்மூலமாகவும் எழுத்துமூலமாகவும் முறைப்பாடு செய்தனர்.

மறுநாள் நான் வேறு வழக்கொன்றிற்காக நீதிமன்றம் சென்று எனது வழக்கு கூப்பிடப்படும் வரை நீதிமன்றில் அமர்ந்திருந்த வேளையில் கல்கிசை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் பரிசோதகரான ஜெயகுமார் எனது அருகில் வந்து என்னிடம் ஒரு வாக்குமூலம் எடுக்கவேண்டும் என்று கூறினார்

நான் வாக்குமூலம் கொடுக்க மறுத்ததுடன் யாருடைய முறைப்பாட்டில் நீர் என்னிடம் வாக்குமூலம் பெற வந்துள்ளீர் என்ற நான் கேட்க, பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதிதான் வாக்குமூலம் எடுக்கச் சொன்னதாகவும் கூறினார்

நான் உதவிப் பொலிஸ் பரிசோதகருக்கு எனது கண்ணியத் தொழிலுக்கும் சட்டரீதியான எனது கடமைக்கும் இடையூறு விளைவிக்கிறீர் எனவே உமக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலையை உருவாக்கிவிடாதீர் என கடுமையானதொனியில் எச்சரிக்கை விடும் சூழ்நிலை உருவாகியது.

நீதிமன்றத்தில் பகல் 12 மணியளவில் வழக்குகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் குறித்த பொலிஸ் பரிசோதகர் என்னிடம் வந்து, நீதிபதி அவரது உத்தியோகபூர்வ அறைக்கு வரும்படி அழைப்பதாக கூறினார். நீதிபதியின் அழைப்பை நிராகரித்த நான் பொலிஸ் பரிசோதகரிடம் நான் திறந்த நீதிமன்றத்தில்தான் எனது கடமையைச் செய்ய வந்திருக்கிறேனே தவிர நீதிபதியின் உத்தியோகபூர்வ அறைக்கு செல்லவேண்டிய அவசியம் எனக்கில்லை என நீதிபதியிடம் கூறும்படி கூறிவிட்டு நான் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறினேன்.

அவ்வாறு நான் நீதிமன்றத்தை விட்டுச் செல்லாமல் குறிப்பிட்ட நீதிபதியான சரத் டி ஆப்ருவின் அறைக்குச் சென்றிருந்தால் அந்த நீதிபதி என்னைப் பெரும் பிரச்சனைக்குட்படுத்தி எப்படியோ அவசரகாலச் சட்டத்தின்கீழ் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் என்னைச்



சிக்கவைத்திருப்பார். என்னை சிக்கவைக்க அந்த நீதிபதி பல வழிகளைக் கையாண்டிருந்தார் என இந்த விடயத்தை எனது நண்பரான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் எனக்கு ஏற்கனவே கூறியிருந்தபடியால் நான் நீதிபதி எனக்கு விரித்த வலையிலிருந்து தப்பக்கூடியதாகயிருந்தது.

அதன் பின்னர் இது விடயமாக உடனடியாக நான் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததையடுத்து, நீதிச்சேவைகள் ஆணைக்குழு குறிப்பிட்ட மஜிஸ்ரேட் நீதிபதியான சரத் டி ஆப்ருவின் முன் நான் ஆஜராகிக் கொண்டிருந்த 16 வழக்குக்களையும் மாவட்ட நீதிமன்றிற்கு விசாரணைக்காக அனுப்ப உத்தரவிட்டது. பின்னர் இந்த வழக்குக்கள் அனைத்தும் மாவட்ட நீதிபதி எரிக் பஸநாயக முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமையால் குறிப்பிட்ட நீதவானுக்கு என்மீது மேலும் கடும்கோபத்தை உருவாக்கியது.

தனது மகனை நீதிமன்றத் தீர்ப்பின்படி பெற்றக்கொண்ட ஜோன் தனது மகனுடன் சிறிது நாட்கள் எங்கள் மனையில் தங்கி 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது மகனுடன் (British Airways) பிரிட்டிஸ் எயார்வேய்ஸ் மூலம் அயர்லாந்து சென்றடைந்தார். நானும் எனது மனைவியும் இலண்டன் செல்கின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஜோனும், யோசுவாவும்

இலண்டன் வந்து எங்களைச் சந்தித்துச் செல்வதுண்டு யோசுவா தற்பொழுது 31 வயது வாலிபன்.

இந்த வழக்கில் பல அனுபவங்கள் இருந்தாலும், இந்த வழக்குக்கும் பயங்கரவாத, அவசரகாரச் சட்டங்களுக்கும் எந்த சம்பந்தமில்லாத போதிலும் வழக்கில் ஆஜராகிய என்னை இந்த இரண்டு சட்டங்களில் ஒன்றுக்குள் சிக்கவைக்க அந்த நீதிபதி எடுத்த கடும் முயற்சி என் வாழ்நாளில் மறக்கமுடியாத அழியாத ஞாபகங்களாகும்.

தாயையும் மகனையும் இணைத்து வைக்க எடுத்த முயற்சியில் எதிர்பார்க்காத சில பிரச்சனைகளைச் சந்தித்த போதிலும் பிரிந்திருந்த தாயையும் மகனையும் இணைத்து வைக்க எமக்கு எல்லாம் வல்ல இறைவன் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தான் என்றே கருதுகின்றேன் எல்லாம் அவன் செயல்!

நீதிபதி சரத் டி ஆப்ரு நாட்டிலுள்ள பல நீதிமன்றங்களில் கடமையாற்றிய வேளையில் பல பிரச்சனைகளை உருவாக்கியவர் என்பது சட்டத்துறை நன்கு அறிந்த விடயம்

## நீதியரசருக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு

நீதிபதி சரத் டி ஆப்ரு சட்டக் கல்லூரியிலிருந்து சட்டத்தரணியாக வெளியேறிய பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாகச் சேவையாற்றி பின்னர் நீதித்துறையில் இணைந்து பல பதவி உயர்வுகளைப் பெற்று இறுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வும் பெற்றார்.

நீதிபதி சரத் டி ஆப்ரு 2014ம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்று கடமையிலிருந்தபோது 2015ம் ஆண்டு அவரது வீட்டில் கடமையாற்றிய பணிப்பெண்ணை பாலியல் பலாத்காரம் புரிந்ததாக 2016ம் ஆண்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில் வீட்டின் மேல்மாடியிலிருந்து கீழே விழுந்து மரணமடைந்தார். இலங்கை நீதித்துறை வரலாற்றில் உயர் நீதிமன்ற நீதியரசருக்கு எதிராக பாலியல் பலாத்காரம் புரிந்ததாக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதல் குற்றவியல் வழக்காகும்.

# கலதாரி ஹோட்டல் குண்டுவெடிப்பு

1997 – 2004

06

(1) அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் கைது செய்யப்பட்டவுடன் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து அல்லது பாதுகாப்பு செயலாளரிடமிருந்து தடுத்து வைக்கும் கட்டளையைப் பெற்று தடுத்து வைத்து விசாரிக்கும் காலத்தில் சித்திவதை செய்து அல்லது பயமுறுத்தல் மூலம் அல்லது வாக்குறுதிகளை வழங்கி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்று அதனையே பிரதான சான்றாகக் கொண்டு அரசியல் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதே வழமையான நடைமுறையாகும்.

(2) இந்த வழக்கில் கந்தசாமி பற்குணராசா பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகையில் பொலிசார் கந்தசாமி பற்குணராசாவிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறுவதற்கு முன்னர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தமை கந்தசாமி பற்குணராசா நீதிமன்றினால் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாகும.

(3) உயர்நீதிமன்றத்தில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பொறுப்பதிகாரியின் சத்தியக் கடதாசியினை நிராகரித்ததுடன் சட்டமருத்துவச் சான்றிதழின் பிரகாரம் பற்குணராஜாவுக்கு ஏற்பட்ட சித்திரவதை அதனால் ஏற்பட்ட காயங்கள் மனுதாரரான பற்குணராஜா பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு

**விசாரணைகள் நடாத்தபட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பதனால் அதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மனுதாரரான பற்குணராஜாவிற்கு 60,000 ரூபாவினை நட்டஈடாகக் வழங்கும்படியும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்ன டீ அல்விஸ் 30,000 ரூபாவும் அரசு 30,000 ரூபாவும் வழங்க வேண்டும் எனவும் கட்டளையிட்டனர்.**

**(4) மனுதாரரான (எதிரியான) பற்குணராஜாவிற்கு 30,000 ரூபா நட்டஈடாக வழங்கிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக 1998ம் ஆண்டு கடமையாற்றிய பிரசன்ன டீ அல்விஸ் தற்பொழுது 2021ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராவார்.**

**(5) இந்த வழக்கில் அரச தரப்பில் வழக்கில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி அசல வெங்கபுலி அவர்கள் தற்பொழுது கொழும்பில் உயர் நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றுகின்றார்.**

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள மத்திய வங்கி குண்டுவெடிப்பின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட விசாரணை முடிவில் மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிடிய விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரனுக்கு 200 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்து, பிரபாகரனைக் கைதுசெய்யப் பிடியாணை வழங்கியிருந்த நிலையில் 1997ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதி காலை 6.30 மணியளவில் 47-2074 என்ற இலக்கத்தையுடைய லொறியினுள் அதிசக்தி வாய்ந்த குண்டுகள் முழுமையாக நிரப்பப்பட்டு கொழும்பு கோட்டைக்கு அண்மையில் அமைந்திருந்த ஐந்து நட்சத்திர கலதாரி ஹோட்டல் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகில் குண்டு வெடிக்க வைக்கப்பட்டது.





கொழும்பில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலையடுத்து ஒப்பீட்டளவு அதிக உயிர்ச்சேதங்களையும், உடமைச் சேதங்களையும் ஏற்படுத்தியதுதான் இந்தக் குண்டுத் தாக்குதலேயாகும். கலதாரி ஹோட்டல் வாகனத்தரிப்பிடத்துக்கு அருகாமையில் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்ட அதே வேளையில் பத்துத் தற்கொலைக் குண்டுதாரிகள் துப்பாக்கிச்சூடு நடாத்திய வண்ணம் உலக வர்த்தக மையத்தினுட்புகுந்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்ததாகவும் ஆனால் பொலிசாரினதும் இராணுவத்தினதும் எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாத தற்கொலைக் குண்டுதாரிகளில் மூவர் (Lake House) லேக் ஹவுஸ் கட்டிடத்துக்குள் சென்று அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நிலையில் இராணுவக் கொமாண்டோ தீபால் சுபீன் தலைமையில் சென்ற இராணுவத்தினர் லேக் ஹவுஸ் கட்டிடத்துக்குட்புகுந்து ஒரு தற்கொலை குண்டுதாரியைச் சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து சில நிமிடங்களில் மற்றைய இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகளும் தற்கொலை செய்து கொண்டதையடுத்து லேக் ஹவுஸ் கட்டிடம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மேலும் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் சம்புத்தாலோக விகாரையின் அருகாமையில் உள்ள புகையிரதத் தண்டவாளத்துக்கு அருகாமையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மற்றைய ஐந்து தற்கொலைக் குண்டுதாரிகளும் தொடர்ந்து தேடப்படுவதாகவும் பொலிசாரினால் பத்திரிகையாளர்களுக்கு செய்தி வழுங்கப்பட்டது (Daily News 16/10/1997)

பொலிஸ் மா அதிபர் ராஜகுருவின் தலைமையில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான இந்திரா டி சில்வா, டிகிரி பண்டா திசாநாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ஜயவர்த்தன, ஆகியோரின் மேற்பார்வையில் பொலிசார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்து சம்பவத்தில் தொடர்புபட்ட பாதிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தனர் இந்த விசாரணை அறிக்கையில் வெளிவந்த விடயம் யாதெனில்

## பிரதான குருக்களான தியாகராஜ ஐயர்

மருதானை கப்டன் கார்டன் கோவிலின் பிரதான குருக்களான தியாகராஜா ஐயரின் வாக்குமூலத்தின்படி குண்டுத்தாக்குதல் நடைபெற்ற தினத்தன்று அதிகாலை ஒரு லொறி வந்ததாகவும், அந்த லொறியில் வந்தவர்கள் தங்கள் முயற்சி வெற்றி அளிக்கவேண்டும் எனக்கூறிப் பூஜைவழிபாடு செய்யும்படி தன்னிடம் வேண்டிக்கொண்டதற்கு அமைய தான் பூஜைவழிபாடு செய்த பின்னர் லொறியில் வந்தவர்கள் கோவிலிருந்து புறப்பட்டு சென்றதாக தனது வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தார்.

இந்தக் குண்டுத் தாக்குதலினாலும் தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல்களினாலும்

(1) சம்புத்தாலோக விகாராதிபதி விதானதெரனிய தேரர் கொலை

(2) உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிசங்க தர்மரத்ன கொலை

(3) பாதுகாப்புக் கடமையிலிருந்த ஆறு பாதுகாப்பு சேவையாளர்களும் கொலை

(4) நான்கு கலதாரி ஹாட்டல் ஊழியர்கள் கொலை
(5) இராணுவ கொமாண்டோ கொலை
(6) ஒரு வெளிநாட்டு உல்லாசப்பிரயாணி கொலை
(7) உலக வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிய 16பேர் கொலை
(8) ஐந்து வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் உட்பட 113பேர் காயமடைந்ததனர்
(9) 92 வாகனங்கள் முற்றாக எரிக்கப்பட்டன
(10) உலக வர்த்தக நிலையக் கட்டடம் சேதத்துக்குள்ளானது

மொத்தமாக 10 கோடிக்கு மேல் நஸ்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு அந்தப் புலன் விசாரணை அறிக்கை பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

## கந்தசாமி பற்குணராசா கைது

இந்த வழக்கில் முதல் எதிரியான கந்தசாமி பற்குணராசா, அவரது வீட்டில் வைத்து 1997ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அடுத்த மூன்று சந்தேக நபர்களான தம்பிராஜா லோகநாதன், சின்னத்துரை செல்வரட்ணம் மற்றும் பூபாலபிள்ளை கோணலிங்கம் ஆகியோரை பொலிசாரினால் கைதுசெய்ய முடியாது போன போதிலும் அவர்களது பெயர்களையும் சந்தேக நபர்களாக உள்ளடக்கி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## அடிப்படை மனித உரிமைகள் மனு

வழக்கின் பிரதான, முதல் எதிரியான கந்தசாமி பற்குணராசாவை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை செய்த பொலிசார் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எடுக்கத் தயாராயிருந்த வேளையில் மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவை கைது செய்து தொடர்ந்து தடுத்து வைத்து பொலிஸ் கட்டுக்காவலில் விசாரிக்கப்பட்டபோது மனுதாரர் கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளார் எனவும் மேலும் மனுதாரரின் சுய விருப்பின்றி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பொலிசார் பலவந்தமாக பெற முயற்சிக்கின்றார்கள் எனவும் அதனால்…

சித்திரவதையிலிருந்து சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை, சட்டத்தின்முன் சமத்துவம் மற்றும் சமமான பாதுகாப்புக்களுக்கான உரிமை,ஆகியவற்றுடன் பலவந்தமாகக் கைதுசெய்யப்படுதல்மற்றும்தடுத்துவைக்கப்படுவதிலிருந்துசுதந்திரம்ஆகியஉறுப்புரைகளின் அடிப்படையில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் அடிப்படை மனித உரிமைகள் வழக்கு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரரான கந்தசாமி பற்குணராசா பொலிசாருக்குகுற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க விரும்பவில்லை என்பதைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முதல் நாளன்று மனுதாரர் சார்பில் உயர்நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட விடயம் “மனுதாரர் பொலிஸ் கட்டுக்காவலில் இருக்கும்போது கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளபடியினால் மனுதாரரை உடனடியாக சட்ட வைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தி வைத்திய அறிக்கையினை உயர்நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கும்படி கட்டளையிடும்படி உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செய்த வேண்டுகோளையடுத்து உடனடியாக மனுதாரரை சட்டவைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி சட்டவைத்திய அறிக்கையை பெறும்படி நீதியரசர்கள் கட்டளையிட்டனர்.

கந்தசாமி பற்குணராசாவை பரிசோதித்த சட்டவைத்திய அதிகாரியான முதித விதார பத்திரனவினால் 1997ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ஆம் திகதி தினத்தன்று உயர் நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பி வைத்த மருத்துவ அறிக்கையில் பற்குணராசா பொலிஸ் கட்டுக்காவலில் இருந்த காலத்தில் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளதாகவும் அதனால் பற்குணராசாவின் உடலில் 13 அடித் தழும்புகள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவினால் உயர் நீதிமன்றிற்கு தாக்கல் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றும் சில பொலிசாரும் தன்னை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கி சித்திரவதை செய்தமையால் முழங்காலில் காயங்கள் காணப்படுவதாகவும் அதனால் தன்னால் எழுந்து நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் பொலிசாரின் சித்திவதையினால் தனது உடலில் பல காயங்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கு ஆட்சேபனைத் தெரிவித்ததுடன் மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவுக்கு இந்தக் குண்டுவெடிப்பில் தொடர்பு உண்டு என்பதற்கு விசாரணையில் சான்றுகள் கிடைத்துள்ளதாகவும் அத்துடன் மனுதாரர் தான் புரிந்த குற்றம் சம்பந்தமாக நீதவான் நீதிமன்ற நீதிபதிக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும் சத்தியக்கடதாசி ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

உயர்நீதிமன்றத்தில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பொறுப்பதிகாரியின் சத்தியக் கடதாசியினை நிராகரித்ததுடன் சட்டமருத்துவச் சான்றிதழின் பிரகாரம் பற்குணராசாவுக்கு ஏற்பட்ட சித்திரவதை அதனால் ஏற்பட்ட காயங்கள் மனுதாரரான பற்குணராசா பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடாத்தபட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெளிவாக குறிப்பிடப் பட்டிருப்பதனால் அதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மனுதாரரான பற்குணராசாவுக்கு 60,000 ரூபாவினை நட்டஈடாக வழங்கும்படியும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்ன டீ அல்விஸ் 30,000 ரூபாவும் அரசு 30,000 ரூபாவும் வழங்க வேண்டும் எனவும் கட்டளையிட்டனர்.

## குற்றப்பத்திரம் தாக்கல்

கந்தசாமி பற்குணராசாவின் சார்பாக உயர் நீதிமன்றில் உடனடியாக அடிப்படை மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்த காரணத்தினால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறமுடியாத சூழ்நிலை உருவாகியமையால் பங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கந்தசாமி பற்குணராசாவை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்று விசாரணைகள் முடிவடைந்த நிலையில் 1998ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதி சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றப்பத்திரத்தில் குண்டுவெடிப்பினால் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 16 பொது மக்கள் கொலை செய்யப்பட்டதாகவும், 113 பொது மக்கள் காயமடைந்ததாகவும் 92 வாகனங்கள் முற்றாக எரிக்கப்பட்டதாகவும் உலக வர்த்தக நிலையக் கட்டடம் சேதத்துக்குள்ளானதாகவும் அதனால் மொத்தமாக 10 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறி 16 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட குற்றப்பத்திரமானது கந்தசாமி, பற்குணராசா, தம்பிராஜா லோகநாதன், சின்னத்துரை செல்வரட்ணம் மற்றும் பூபாலபிள்ளை கோணலிங்கம் ஆகியோரை எதிராளிகளாகக் பெயர் குறிப்பிடப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் கந்தசாமி பற்குணராசாவிற்கு எதிரான மேல்நீதிமன்ற வழக்கின் விசாரணையானது மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச முன்னிலையில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வழக்குக்களை விசாரிப்பதற்கென வெலிகடை சிறைச்சாலை வளாகத்துக்குள் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டது.

மேல்நீதிமன்றில் வழக்கு விசாரணை 07 வருடங்களாக நடைபெற்றதுடன் அரச தரப்பில் கந்தசாமி பற்குணராசாவின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த நீதிபதி உட்பட முப்பது சாட்சிகள் சாட்சியமளித்து குறுக்கு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டு விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது.

## ஸ்ரீகுணராசா விடுதலை

2004ஆம் ஆண்டு 24ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச அவர்கள் தனது 64 பக்கங்களைக் கொண்டமைந்த தீர்ப்பினை வழங்கினார். நீதிபதி முதலாவது எதிரியான கந்தசாமி பற்குணராசாவை வழக்கிலிருந்து விடுதலை செய்வதாக தனது தீர்ப்பில் கூறி பற்குணராசாவை விடுதலை செய்வதற்கான முக்கிய காரணிகளாகக் கூறியதுயாதெனில்…

அரச தரப்பினர் முதலாவது எதிரி அரசுக்கு எதிராகச் சதி செய்தார் என்பதனை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க அரசதரப்பு தவறிவிட்டது எனவும் மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதவான் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிந்த போதிலும் சந்தேகநபர் தனது சொந்த விருப்பத்திலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தனக்கு வழங்கினார் என்பதை உறுதிப்படுத்தி அத்தாட்சிப் படுத்த நீதவான் தவறியுள்ளார் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வழக்கில் முக்கியமான விடயம் யாதெனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் தொடர்புடைய வழக்குகளில் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே மிக முக்கியமான சாட்சியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் முக்கியத்துவத்தை அறிய இந்தவழக்கின் நிகழ்வுகள் மிக முக்கியமானதாகும்.

கலதாரி ஹோட்டல் அருகாமையில் இந்தக் குண்டுத்தாக்குதலை நடாத்தியதன் மூலம் மிகப் பெரும் அழிவை ஏற்படுத்திய இந்த வழக்கில் முதல் எதிரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த பற்குணராசா குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்ற ஒரேயொரு காரணத்துக்காக ஆத்திரம் கொண்ட பொலிசார் பற்குணராசாவைத் தாக்கி சித்திரவதை புரிந்தமையுடன் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிசார் சுய விருப்பமின்றி பற்குணராசாவிடமிருந்து பெறுவதற்கு முன்னரே மிக விரைவாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசன்னா டி அல்விஸ் மனுதாரர் பற்குணராசாவுக்கு நஸ்டஈடு வழங்கியமையும் பற்குணராசா விடுதலையாவதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது. (பற்குணராசாவிற்கு 30,000 ரூபா நட்டஈடாக வழங்கிய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக 1998ம் ஆண்டு கடமையாற்றிய பிரசன்ன டீ அல்விஸ் தற்பொழுது 2021ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராவார்)

நான் பல வழக்குகளில் தமிழ் அரசியல் கைதிகளுக்காக நீதிமன்றத்தில் வாதாடியிருந்தாலும் இந்த வழக்கின் தீர்ப்பு ஒவ்வொரு தினமும் ஒத்திவைக்கப்படும் பொழுது எதிரியான பற்குணராசா சிறை செல்வாரா அல்லது விடுதலையாகி வீடு செல்வாரா என்பதை எனது அனுபவத்தின் மூலம் கூட தீர்மானிக்க முடியவில்லை. பொதுவாக வழக்குகளின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு விசாரணைகள் முடிவுக்கு வரவிருக்கும் வேளையில் தீர்ப்பு எதிரிக்கு சாதகமாகவா அல்லது பாதகமானதாகவா அமையப்போகின்றது என்பதை ஓரளவுக்கு அனுமானிக்கக் கூடியதாகவிருக்கும் ஆனால் இந்த வழக்கின் தீர்ப்பு எப்படி அமையப்போகிறது என்பது என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது. ஏனெனில் மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு வழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருடகால தண்டனை வழங்கப்பட்ட பின்னர் கொழும்பில் பெரும் மனித அழிவையும் பொருட் சேதாரத்தையும் ஏற்படுத்திய சம்பவம் இந்த வழக்கின் பின்னணியாகும்.

இந்த வழக்கு ஏழு வருடங்களாக 42 தவணைகள் விசாரணை நடைபெற்றிருந்தது இந்த வழக்கில் அன்றைய காலகட்டத்தில் எதிரி விடுதலையாவது நடக்கக்கூடிய விடயமல்ல என்பதே பொதுவான கருத்தாகவிருந்தது இறுதியாக 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09ஆம் திகதி எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து எதிரியை விடுதலை செய்வதாக மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் கந்தசாமி பற்குணராசா பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணை நடைபெறுகையில் பொலிசார் கந்தசாமி பற்குணராசாவிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறுவதற்கு முன்னர் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை

மீறல் மனுவைத் தாக்கல் செய்தமை கந்தசாமி பற்குணராசா நீதிமன்றினால் விடுதலை செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாகும்

அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் கைது செய்யப்பட்டவுடன் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து அல்லது பாதுகாப்பு செயளாளரிடமிருந்து தடுத்துவைக்கும் கட்டளையைப் பெற்று தடுத்து வைத்து விசாரிக்கும் காலத்தில் சித்திரவதை செய்து அல்லது பயமுறுத்தல் மூலம் அல்லது வாக்குறுதிகளை வழங்கி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்று அதனையே பிரதான சான்றாகக் கொண்டு அரசியல் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதே வழமையான நடைமுறையாகும்

மேல் நீதிமன்றம் பற்குணராசாவை விடுதலை செய்த பின்னர் பற்குணராசா தனது மனைவியையும் நான்கு பெண் குழந்தைகளையும் அனைத்துக் கொண்டு நீதி மன்றத்தை விட்டு வெளியேறிய காட்சி அழியாத நினைவுகளே இந்த வழக்கில் அரச தரப்பில் வழக்கில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி வெங்கபுலி அவர்கள் தற்பொழுது உயர் நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றுகின்றார்.

# வர்த்தகர் ராஜன் கைதும் விடுதலையும்

1998–1999 கெபிடல் தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர்

07

**(1) 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பாதுகாப்பு அமைச்சரினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவை நீடிப்பதை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு மூலம் தடை செய்து கைதியை பிணையில் விடுதலை செய்த முதலாவது வழக்கென்பது குறிப்பிடத்தக்கது (Sathasivam Vincendrarajan Vs Attorney General – S.C. 9/1999 )**

**(2) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 9ஆம் பிரிவின்படி பாதுகாப்பு அமைச்சரினால் விடுக்கப்படும் தடுப்புக்காவல் உத்தரவும் அவசரகால ஒழுங்குவிதியின் பிரிவு 19இன் உபபிரிவு (10)இன் கீழ் பாதுகாப்பு செயலாளரால் விடுக்கப்படும் தடுப்புக்காவல் உத்தரவு எந்த நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாதென சட்டமா அதிபர் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தபோதிலும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தற்றுணிபு அதிகாரத்தை பாவித்து குற்றப்புலனாய்வுப் பொலிசாரினால் பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி சதாசிவம் வின்சேந்திரரா ஜாவை இடைக்கால தடை உத்தரவில் பிணையில் விடுதலை செய்த மிக முக்கியமான வழக்கான இந்த வழக்கின் தீர்ப்பு சட்டத்துறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும்.**

## வர்த்தகர் ராஜன் கைது

சமாதான நீதவானும் கைது செய்யப்படும்பொழுது (1999) முன்னாள் தொழில் அமைச்சரின் பிரத்தியேகக் காரியதரிசியும் வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகத்துடன் கொழும்பிலிருந்து தூத்துக்குடி காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்கள் ஊடாக அரச அனுமதி பெற்று கடல் மார்க்கமாக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் புரிந்து வந்த பிரபல தமிழ்

வர்த்தகர் சதாசிவம் வின்சேந்திரராஜன் 1998ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22ஆம் திகதி கொழும்பு புலனாய்வுத்துறைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சதாசிவம் வின்சேந்திரராஜனுக்கு பாதுகாப்பு அமைச்சரினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவையடுத்து குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிசாரினால் 4ஆம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டு குற்றப்புலனாய்வு பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் புண்ணியா டி சில்வாவின் நேரடி கண்காணிப்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வர்த்தகர் 1998ஆம் ஆண்டு காத்திகை மாதம் 22ஆம் திகதி கைது செய்யப்படுவதற்கு முன்னர் 1998ஆம் ஆண்டு 8ஆம் திகதி வெளிநாடு புறப்படவிருந்த மூன்று பயணிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுத்துறை பொலிசாரினால் கைது செய்யப்படடனர்

வெளிநாட்டு நாணய மோசடி செய்யும் நோக்கத்தில் பிழையான தகவல்களை வழங்கி சட்டரீதியற்ற முறையில் சம்பத் வங்கியின் மூலம் பெறப்பட்ட 20ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வெளிநாட்டு பயணக் காசோலைகளை தமது உடமையில் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு பயங்கரவாத சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின்கீழ் குற்றப் புலனாய்வு பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன

1998ஆம் ஆண்டு ஐப்பசி 15ஆம் திகதி இந்த மூன்று சந்தேக நபர்களும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பொழுது பொலிசாரின் முதல் அறிக்கையில் சந்தேக நபர்களான மூன்று பயணிகளின் உடமையிலிருந்து தலா 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய பயணக் காசோலைகள் கைப்பற்றப்பட்டதாகவும் இந்தப் பணத்தை சட்டரீதியற்ற முறையில் உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்ல எத்தனிக்கையிலேயே கைது செய்யப்பட்டதாகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு சட்டரீதியற்ற முறையில் கடத்த முயற்சித்த இந்தக் பயணக் காசோலைகள் புலிகளுக்கு வழங்கப்படுகின்றதா? அதன் மூலம் புலிகள் ஆயுதம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்ய இந்தப் பணம் உபயோகிக்கப்படுகின்றதா? என்பன பற்றிய விசாரணை நடைபெறுவதாகவும் ஆகவே இந்த மூன்று சந்தேக நபர்களையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 7 (2)ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி பொலிசார் வேண்டிக்கொண்டதையடுத்து தடுப்புக் காவலிருந்த மூன்று சந்தேகநபர்களும் நீதிமன்ற உத்தரவையடுத்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டனர்.

குற்றப்புலனாய்வு பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை பல முறைகளில் நடாத்திய பின்னர் 1998ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12ஆம் திகதி மேலதிக விசாரணை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து தாங்கள் மேற்கொண்ட விசாரணையில் இந்த மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிராக இவர்களுக்கு புலிகளுடன் தொடர்பு உண்டு என எந்தச் சான்றும் இதுவரையில் கிடைக்கவில்லையெனவும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் மூன்று சந்தேக நபர்கள் சார்பிலும் முன் வைக்கப்பட்ட சட்ட வாதம் யாதெனில் முக்கிய இரண்டு காரணங்களின் அடிப்படையிலேயே இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர் எனவும் அதில் முதலாவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு ஒவ்வொரு கைதிகளும் 20ஆயிரம் அமெரிக்க டொலர்களை தன்னகத்தே தனியுடைமையில் வைத்திருந்ததாகவும் இரண்டாவது குற்றச்சாட்டு சட்டரீதியற்ற முறையில் கடத்திச்செல்ல முற்பட்ட இந்தப் பயணக் காசோலைகள் புலிகளுக்கு நிதி சேகரிப்பதன் மூலம் புலிகள் ஆயுதங்கள் கொள்வனவு செய்ய உதவி ஒத்தாசை புரிகின்றார்களா என விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் முதல் அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.




மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மேலதிக அறிக்கையில் இந்த மூன்று சந்தேக நபர்களுக்கும் புலிகளுடன் தொடர்பு உண்டு என எந்தச் சான்றும் இதுவரையில் கிடைக்கவில்லையெனவும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்துள்ளனர்

சந்தேகநபர்கள் சார்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வாதத்தில் இலங்கைப் பிரஜை ஒருவர் ஆகக் குறைந்த தொகையாக 20ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பயணக் காசோலைகளை வெளிநாடு செல்கையில் உடமையில் வைத்திருக்க மத்திய வங்கி அனுமதியளித்து உள்ளதெனவும் அத் தொகையை அரச பிரத்தியேக வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் 20ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட பயணக் காசோலைகளை வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் மட்டுமே மத்திய வங்கியிடம் அனுமதி பெறவேண்டும் என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முதல் அறிக்கையையும் விசாரணையின் பின்னர் பல மேலதிக அறிக்கைகளையும் பொலிசார் நீதிமன்றில் தாக்கல் செய்த போதிலும் இன்றுவரை எந்தச் சான்றும் பொலிசாரினால் முன்வைக்கப்படாத நிலையில் மூன்று சந்கே நபர்களையும் வழக்கிலிருந்து விடுதலை செய்யும்படி நீதிமன்றத்தை வேண்டிக்கொள்ளப்பட்டது.

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் மூன்று சந்தேக நபர்களினதும் விசாரணை முடிவடையவில்லையென நீதிமன்றிற்கு தெரிவித்ததுடன் சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர் பொலிசாரின் ஆட்சேபனையை தெரிவித்த போதிலும் எனது வாதத்தை கவனத்தில் கொண்ட நீதிபதி மூன்று சந்தேக நபர்களையும் தலா 25000 ரூபா சீரப் பிணையிலும் 25000/= ரூபா ரொக்கப் பிணையிலும் 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி விடுதலை செய்தார்.

பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் மூன்று சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் வர்த்தகர் சதாசிவம் வின்சேந்திரராஜனை கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பும்படி குற்றப்புலனாய்வுத்துறை பொலிசாரினால் நீதிமன்றை வேண்டிக் கொண்டதையடுத்து நீதிமன்றம் வின்சேந்திரராஜனை நீதி மன்றில் ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பியதையடுத்து மார்கழி மாதம் 10ஆம் திகதி நீதிமன்றில் ஆஜரானார்

## வின்சேந்திரராஜன் கைது

சதாசிவம் வின்சேந்திரராஜனுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி விசாரணை நடைபெறுவதால் வின்சேந்திரராஜன் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதை தடை செய்யும் உத்தரவை வழுங்கும்படி குற்றப்புலனாய்வுத்துறை பொலிசாரினால் நீதிமன்றுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க நீதிமன்றம் வின்சேந்திரராஜன் வெளிநாடு செல்வதை தடைசெய்ததுடன் அந்த உத்தரவுப் பிரதிகள் குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இந் நிலையில் குற்றப்புலனாய்வுத்துறை பொலிசார் 1998 ஆண்டு மார்கழி மாதம் 22ஆம் திகதி வர்த்தகர் சதாசிவம் வின்சேந்திரராஜனை கைது செய்து தடுப்புக்காவல் கட்டளையின் கீழ் விசாரணைகளை நடாத்திய பின்னர் முதல் அறிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

அந்த அறிக்கையில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட மூவருக்கும் இந்த வர்த்தகரே தலா 20ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியதாகவும் இந்த வகையில் புலிகள் ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு சந்தேக நபரான இந்த வர்த்தகர் உதவி ஒத்தாசை புரிவதாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் ஆகவே சந்தேகநபரைத் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரணை நடாத்த பாதுகாப்பு அமைச்சரினால் தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் தடுப்புக்காவல் உத்தரவின் பிரதி ஒன்றும் நீதிமன்றுக்குப் பொலிசாரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

## அடிப்படை மனித உரிமை மீறல் – மனுதாக்கல்

பயங்கரவாத சட்டத்தின் கீழ், சட்டரீதியற்ற முறையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் உயர்நீதி மன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் புலனாய்வுத்துறைப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் புண்ணியா டி சில்வா, புலனாய்வுத்தறை பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பாலித பெரேரா, பொலிஸ்மா அதிபர் லக்கி கொடிதுவக்கு, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் பெயர் குறிப்பிடப்பட்டனர்

இந்தமனு 1999ஆம் ஆண்டு தை மாதமும் அதனைத் தொடர்ந்து மாசி மாதம் 02ஆம் திகதியும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது மனுதாரர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதம், மனுதாரரான வர்த்தகர் 1998ஆம் ஆண்டு கார்த்திகை 22ஆம் திகதி மனுவில் 2ஆம் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்

குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரால் கைது செய்யப்பட்டதாகவும் ஆனால் கைது செய்யப்படும் வேளையில கைது செய்யப்படுவதற்கான காரணம் மனுதாரருக்கு கூறப்படவில்லையெனவும் கைது செய்யப்பட்ட மனுதாரரினால் அரச அனுமதி பெறப்பட்டு சட்டரீதியாக நடாத்தப்பட்டு வந்த கப்பல் கம்பனியின் முழு விபரங்களைப் பற்றியும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடாத்தியதுடன் கொழும்பிலிருந்த கப்பல் கம்பெனியின் தலைமை அலுவலகத்தையும் பொலிசார் சுற்றி வளைத்து சோதனையும் நடாத்தியுள்ளனர்.

## கப்பல் கம்பனியுடன் ஒப்பந்தம்

பிரபல கப்பல் கம்பனியுடன் ஒப்பந்த அடிப்படையில் முன்னர் வர்த்தகத்தை நடாத்தி வந்த இந்திய வியாபாரிகள் கைது செய்யப்பட்ட வர்த்தகரின் கப்பல் கம்பனியுடன் வர்த்தகத்தை நடாத்தி வந்தமையால் ஆத்திரமடைந்த பிரபலமான கப்பல் கம்பனியின் தூண்டுதலின் காரணமாகப் பழிவாங்கும் நோக்கத்தோடு வழங்கப்பட்ட தவறான தகவல்களின் அடிப்படையிலும் வியாபாரப் போட்டியின் காரணமாகவும் மனுதாரர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனவும் வாதிடப்பட்டது.

தமிழ் நாட்டின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கப்பலுக்கு ஒப்பந்த அடிப்படையில் பொருட்களை ஏற்றும் 35 படகுகளில் 31 படகுகளின் உரிமையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் மனுதாரரின் கப்பல் கம்பனியுடன் வர்த்தகத்தை நடாத்தி வந்ததையடுத்தே மனுதாரர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு தற்பொழுது பிணையில் விடப்பட்டிருக்கும் மூன்று சந்தேக நபர்களுக்கும் இந்த வழக்கின் மனுதாரரான வர்த்தகருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லையெனவும் இந்த வழக்கில் சந்தேநபராகக் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகரை புலிகளுடன் தொடர்ப்புடுத்தி புலனாய்வுப் பொலிசாரினால் முதல் அறிக்கை மேலதிக விசாரணை அறிக்கைகள் மஜிஸ்ரேட் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்ட போதிலும் அந்த அறிக்கைகளில் மனுதாரருக்கு புலிகளுடன் தொடர்பு உள்ளது என்பதற்கு எந்தச் சான்றும் முன்வைக்கப்படவில்லை மேலும் மனுதாரரை புலனாய்வுப் பிரிவினர் நியாயமற்ற சந்தேகத்திலும் ஊகத்தின் அடிப்படையிலும் சட்டரீதியற்ற முறையில் கைது செய்து தடுத்து வைத்துள்ளதுடன் புலிகளுடன் மனுதாரர் தொடர்புகளை பேணிவருகின்றார் என்ற இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

## புலிகளுக்கு நிதி உதவி

பிரதிவாதிகள் சார்பாக உயர் நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக மன்றாடியார் நாயகம் சி.ஆர்.டி.சில்வா "வெளிநாட்டு நாணயமாற்று மூலம் புலிகளுக்கு நிதி உதவியளிப்பதாகவும் அந்த நிதியினைக் கொண்டு புலிகள் அரசுக்கு எதிராக போராடுவதற்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதாக நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையிலேயே புலனாய்வுப்பிரிவுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றப்புலனாய்வு பொலிசாரினால் விசாரணை

நடாத்தப்படும் இந்த குற்றச்சாட்டுகள் அரச பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மட்டுமன்றி அரசுக்கு எதிரான சதி என்பன உள்வாங்கப் பட்டுள்ளதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய பாரிய குற்றச்சாட்டுகளாகும்" என நீதிமன்றில் தெரிவித்தார்.

## இந்திய புலனாய்வுத்துறை விசாரணை

மேலும் தனது வாதத்தில் இந்திய புலனாய்வுத்துறையின் அறிக்கையின் பிரகாரம் மனுதாரருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாகவும் இந்தியப் புலனாய்வுத்துறை மனுதாரருக்கு புலிகளுடன் உள்ள தொடர்புகளைப் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அதனால் புலன்விசாரணை முழுமையாகாமல் மனுதாரரை பிணையில் விடுதலை செய்தால் குற்றப்புலனாய்வுப் பொலிசாரால் நடாத்தப்படும் விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுவது மட்டுமின்றி அரச பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தல் ஏற்படும் என தனது வாதத்தில் தெரிவித்து பிணை மனுவுக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்தார்.

அரசதரப்பு வாதத்தை செவிமடுத்த நீதியரசர்கள் மனுதாரருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக இந்திய புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த அறிக்கையை நீதிமன்றிற்கு 1999ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்கும்படி உத்தரவிட்டனர்

## பிணையில் விடுதலை

1999ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதி அன்று இந்த மனு மேலதிக விசாரணைக்காக உயர் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது உயர் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய இந்தியப் புலனாய்வு அறிக்கையை உயர்நீதிமன்றிக்கு சமர்பிக்காமல் 3ஆம் பிரதிவாதியான குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரான கீர்த்தி கஜநாயகாவின் சத்தியகடுதாசியொன்று உயர் நீதிமன்றிற்கு அரச தரப்பால் சமர்ப்பிக்கப்பட்டது.

அரச தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட மூன்றாம் பிரதிவாதியின் சத்தியக் கடுதாசியில் மனுதாரருக்கு புலிகளுடன் வர்த்தகத் தொடர்பு உண்டென்றும் மேலும் புலிகளின் முதலீட்டிலேயே மனுதாரர் வியாபாரத்தை நடாத்திவருகின்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் எந்தவொரு ஆவணச்சான்றும் நீதிமன்றுக்கு அரச தரப்பால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்திய அதிகாரிகளினால் மனுதாரருக்கும் புலிகளுக்கும் தொடர்புள்ளதா என விசாரணை நடைபெறுவதாக சத்தியக் கடதாசியில் குறிப்பிடப்பட்டபோதிலும் நீதிமன்றம் தமது பார்வைக்காக இந்திய புலனாய்வு அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்ட போதிலும் அப்படியான ஒரு அறிக்கையை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றிற்கு சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் குற்றச்சாட்டின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த எந்தவொரு ஆவணமோ அலலது வேறு சான்றுகளோ அரசதரப்பால் நீதிமன்றிக்கு சமர்பிக்கப்படவில்லை

எனவே மனுதாரரை சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் தடுத்துவைத்து விசாரணை நடாத்துவதல்ல சட்டம் எதிர்பார்ப்பது நியாயமான வலுவான சான்று, அவ்வாறு சான்றுகள்

இருந்தால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்படலாம் அவ்வாறான நிலையில் பொலிசாரின் விசாரணையில் நீதிமன்றம் தலையிட முடியாது அந்தச் சூழ்நிலையில் நீதிமன்றம் விசாரணைக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும். ஆனால் சான்று கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தமது சந்தேகத்தை நியாயப்படுத்தும் நோக்கத்தில் சான்றுகளை எதிர்பார்த்து மனுதாரரைத் தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரணை நடாத்தப்படுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாதது. இவை நீதிக்கு புறம்பான நடவடிக்கையென நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதுடன் கைதுக்கான நியாமான காரணங்கள் காட்டப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய Channa Pieris and others Vs Attorney - General 1SLR at page 51 தீர்ப்புக்கு அமைய இந்த வழக்கினை ஆராயும் போது எந்தவித ஆதாரமுமின்றி மூன்றாம் பிரதிவாதியான குற்றப்புலனாய்வு அத்தியட்சகரின் வெறும் ஊகம் அல்லது சந்தேகத்தின் காரணமாகவே மனுதாரர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற முடிவுக்கு வருவதாகவும் பொலிசார் தமது சந்தேகத்துக்கு ஏதாவது சான்றுகள் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதெனவும் எனவே மனுதாரரைத் தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு ஆதாரமற்ற இந்தச் சந்தேகம் மட்டும் போதுமானதல்ல என்றும் குறிப்பிட்டதுடன் மேலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மனுதாரருக்கு புலிகளுடன் தொடர்பு உண்டு என்ற தமது சந்தேகத்தை உறுதிப்படுத்த இன்றுவரையில் எந்தச் சான்றுகளையோ ஆதாரங்களையோ நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கவில்லை இதன் அடிப்படையில் மனுதாரரை தொடர்ந்து தடுத்து வைப்பது நியாயமற்றது எனவும் எனவே தடுப்புக்காவல் உத்தரவை நீடிப்பதைப் பிரதம நீதியரசர் G.P.S.De.சில்வா, நீதியரசர்களான பிரியந்த பெரேரா, சிராணி பண்டாரநாயக ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனுதாரரை நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்தனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் G.P.S.De.சில்வா நீதிச் சேவையிலிருந்து ஒய்வு பெற்று விட்டார் நீதியரசர் பிரியந்த பெரேரா ஓய்வு பெற்ற பின்னர் தற்பொழுது மனித உரிமை ஆணைக்குளுவின் ஆணையாளராகப் பணிபுரிந்து ஒய்வு பெற்ற பின்னர் காலமாகிவிட்டார். இந்த வழக்கில் நீதியரசர்கள் குழாமில் அங்கம் வகித்த சிராணி பண்டாரநாயகா பிரதம நீதியரசராகக் கடமையாற்றியவர், இந்த வழக்கில் அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிடர் ஜெனரல் சி.ஆர். டி. சில்வா சட்டமா அதிபராக பதவி உயர்வுபெற்று ஒய்வு பெற்ற பின்னர் காலமாகி விட்டார்.

## தடுப்புக் காவல் கைதிக்கு பிணை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட கைதிக்கு உயர் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்த முதலாவது வழக்கென்பது குறிப்பிடத்தக்கது.

இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட வேண்டிய விடயம் யாதெனில் உயர் நீதிமன்றினால் 1999ம் ஆண்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட வின்சேந்திரராஜாவிற்கு எதிராக இன்று வரை (2022) எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு வழக்கொன்றும் தாக்கல் செய்யப்படவில்லை. என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். என்பதுடன் சதாசிவம் வின்சேந்திரராஜன் கெபிடல் தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளராவார்.

# தர்மகர்த்தா வீரசுப்பிரமணியம் கொலை

2000–2002–2008

08

2000ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி காலை 9.30 மணியளவில் கொழும்பு 13 கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவான குழந்தைவேலு வீரசுப்பிரமணியம் (வீரன்) கொட்டாஞ்சேனை பொலிசாரால் அவசரகாலத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் மேலதிக விசாரணைக்காக கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரசுப்பிரமணியம் சிறுவயதிலிருந்தே கொழும்பில் கல்வி கற்ற பின்னர் அவரது தந்தையார் கதிரேசன் வீதியில் நடாத்திவந்த வியாபார ஸ்தாபனத்தை தனது சகோதரரான பாலரட்ணத்துடன் இணைந்து நடாத்தி வந்தார். ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி மீது தீராத பக்திகொண்ட அவரது தந்தையார் குழந்தைவேலு தனது இரண்டு ஆண் பிள்ளைகளுக்கும் முருகப் பெருமானின் பெயரான பாலரட்ணம், வீரசுப்பிரமணியம் என முறையே பெயரை வைத்தார்.

ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானமும் வீரசுப்பிரமணியம் நடாத்திய வியாபார ஸ்தாபனமும் கதிரேசன் வீதியில் அருகருகே அமைந்திருந்தன. வீர சுப்பிரமணியம் தனது தொழில் நேரத்தைத் தவிர்ந்த அனைத்து நேரத்திலும் முருகனுக்குச் சேவைசெய்வதையே வழமையாகக் கொண்டிருந்தார்.

## வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு

1989ஆம் ஆண்டில் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் நிர்வாக இயக்குனராக கடமைபுரிந்து கோவில் நிர்வாகத்தை நடாத்திவந்த வீரசுப்பிரமணியம் 2000ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி வழமைபோல் கோவிலுக்குச் சென்றபொழுது கோவிலின் குருக்களான பரமேஸ்வரக்

குருக்கள் கோவிலில் தேங்காய் வைக்கும் அறையில் ஒரு பார்சல் இருப்பதாக வீரசுப்பிரமணியத்திடம் கூறியுள்ளார்.



உடனடியாக அந்தப் பார்சலை வீரசுப்பிரமணியம் திறந்து பார்த்த பொழுது அதற்குள் தற்கொலை அங்கி, பிஸ்டல் 01, கைக்குண்டு 32, வெடிபொருட்கள் அடங்கிய 4 குப்பிகள், டெட்டனேட்டர் 7, சயனைட் வில்லைகள் 08, அத்துடன் “எனது உடலில் வெடிமருந்து உள்ளது. என்னைப் போகவிடு” எனக் குறிப்பிட்டு லெமினேட் செய்யப்பட்ட காட் பத்திரம், பற்றறிகள் எனப் பல பொருட்கள் காணப்பட்டன.

இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த வீரசுப்பிரமணியம் பரமேஸ்வரக் குருக்களிடம் இந்தப் பார்சல் எப்படி கோவிலுக்குள் வந்ததென்று கேட்டுள்ளார். பரமேஸ்வரக் குருக்கள் தனக்கு அதனைப் பற்றி தெரியாது என்று கூறவே, சில நிமிடம் செயலிழந்த வீரசுப்பிரமணியம் அடுத்து என்ன செய்வது என்பதை தீவிரமாக யோசித்துள்ளார்.

பொலிசாருக்கு அறிவிப்பதா இல்லையா, பொலிசாருக்கு அறிவிப்பதன் மூலம் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன, பொலிசாருக்கு அறிவித்தால் தேவஸ்தானத்தின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிடும், பக்தர்கள் தரிசனம் செய்ய வரமாட்டார்கள், ஆகையால் தேவஸ்தானத்தின் பெயரை காப்பாற்ற வேண்டுமெனின் வெடிபொருட்கள் அடங்கிய பொதியை பற்றிய தகவலை பொலிசாருக்கு அறிவிக்காமல் கோவிலிலிருந்து யாருக்கும் தெரியாமல் அகற்றிவிட வேண்டும் என முடிவெடுத்து தனது வாகனத்தில் அந்தப் பொதிகளை ஏற்றிக்கொண்டு களனி ஆற்றில் வீசும் நோக்கத்துடன் புறப்பட்டு களனி ஆற்றுப்பக்கம் செல்லும்போது அப்பகுதியில் அதிகமான சன நடமாட்டம் காணப்பட்டமையால் வத்தளை, எலக்கந்த பாதையிலுள்ள முத்துராஜவெல பகுதியில் உள்ள நீரோடையில் வெடிபொருட்கள் அடங்கியுள்ள பார்சல்களை வீசியுள்ளார்.

வெடிபொருட்கள் அடங்கிய பொதிகள் கோவிலிருந்து வெளியேற்றப்பட்டு நீரோடையில் வீசி ஐந்து மாதங்கள் வரையிலும் எந்தப் பிரச்சனையும் இல்லாதபடியால் முருகன் கோவிலின் பெயரை காப்பாற்றிவிட்டேன் என்ற மனத்திருப்தியோடிருந்த வீரசுப்பிரமணியம், பொலிசாருக்கு தகவல் கூறும் நபரினால் பொலிசாருக்கு கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதுடன் வீரசுப்பிரமணியத்தினால் முத்துராஜவெல பகுதியில் உள்ள நீரோடையில் வீசப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள், தற்கொலை அங்கிகள் அடங்கிய பொதிகள் பொலிசாரால் மீட்கப்பட்டன.

முருகன் கோவிலின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்தினால் பொலிசாருக்குத் தகவல் வழங்காத வீரசுப்பிரமணியத்துக்கு எதிராகப் பயங்கரவாத

தடைச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் தற்கொலை அங்கிகளையும் ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக 20 வருடம் தண்டனை வழங்கக்கூடிய குற்றம் சுமத்தப்பட்டு 2000ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ஆம் திகதி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் பொலிசாருக்கு தகவல் வழங்காத குற்றத்துக்காக வழக்குத் தாக்கல் செய்யாமல் வெடிபொருட்கள், தற்கொலை அங்கிகளை உடமையில் வைத்திருந்ததாகவே வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் வழக்கின் சான்று பொருட்களாக பொலிசாரால் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பிரதான சாட்சியமாகவும் மேலும் 06 சாட்சிகளும் உள்ளடக்கப்பட்டு இந்த வழக்கு விசாரணை 2001ஆம் ஆண்டு ஜப்பசி மாதம் 04ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரா ஏகநாயக்க முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் எதிரி தரப்பில் நீதிமன்றிற்கு தெளிவுபடுத்தியது யாதெனில் எதிரி ஒரு சூழ்நிலைக் கைதியே தவிர எந்தப் பொருட்களையும் உடமையில் வைத்திருக்க வில்லையெனவும் பொலிசாருக்கு தகவல் கொடுக்கத் தவறியது மட்டுமே எதிரி செய்த ஒரே குற்றமெனவும் சட்டத்தின்படி பொலிசாருக்கு தகவல் கொடுக்க வேண்டும் என்பதை எதிரி அறிந்திருக்க வில்லை எனவும் அதுவும் தனது சொந்த நலனுக்காகச் செய்யவில்லையெனவும் கோவிலின் தர்மகர்த்தா என்ற முறையில் கோயிலுக்குக் களங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற ஒரே நன்நோக்கத்தோடு செயற்பட்டாரே தவிர சட்டத்தை உதாசீனம் செய்யும் நோக்கத்துடன் அல்ல. எனவே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுபரிசீலனை செய்து, தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்துக்காக மட்டும் குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் திருத்தி அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை அரசு தரப்பும் ஏற்றுக்கொண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் குற்றப்பத்திரம் திருத்தி அமைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து 2001-11-07இல் எதிரி குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிபதி எதிரிக்கு 1 மாத தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

வீரசுப்பிரமணியத்தின் வழக்கில் அவர் கைதுசெய்யப்பட்ட தினமான 2000ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட காலத்தைப் பார்க்கும் பொழுது ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு மேல் சிறையில் வாடியுள்ளார்.

வீரசுப்பிரமணியம் வெடிபொருட்களையும் தற்கொலை அங்கிகளையும் உடமையில் வைத்திருந்ததாக தாக்கல் செய்யப்பட்டவழக்கில். வீரசுப்பிரமணியம் நிரபராதியென வாதாடி அவருக்கு வழக்கிலிருந்து விடுதலை பெற்றுக் கொடுப்பது கடினமான காரியமல்ல ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு முடியும்வரை பிணை வழங்க நீதிமன்றிற்கு அதிகாரம் இன்மையால் வழக்கு முடியும்வரை பல வருடங்களுக்கு சிறைவாசம் என்பதனை கருத்தில் கொண்டு குற்றப்பத்திரத்தை திருத்தி அமைக்க ஆக்கபூர்வமாக நடவடிக்கை

எடுக்கப்பட்டதையடுத்து வீரசுப்பிரமணியத்துக்கு ஆகக் குறைந்த தண்டணையாக 30 நாள் தண்டணை விதிக்கப்பட்டது.

கேள்வி என்னவெனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்படி 5ஆம் பிரிவின் கீழ் வீரசுப்பிரமணியம் குற்றவாளியாகக் காணப்பட்டாலும் நியாயத்தின்படி வீரசுப்பிரமணியம் செய்ததெல்லாம் முருகன் கோவிலின் பெயர் கெட்டுவிடக்கூடாதென்பதே. அதற்குக் கிடைத்ததுதான் இந்தத் தண்டனை. சட்டத்தின்படி தண்டனை சரியாக இருந்தாலும் நியாயமாகச் சிந்திக்கும் யாராகவிருந்தாலும் ஒரு மனத்தாக்கத்தையும் மனவேதனையையும் உருவாக்கியே தீரும்.

நன்னடத்தை காரணமாக ஒரு மாதச் சிறைத்தண்டணை காலம் குறைக்கப்பட்டதை தொடர்ந்து 17 நாட்கள் சிறையில் தண்டணையை அனுபவித்த வீரசுப்பிரமணியம் விடுதலையான பின்னர் தொடர்ந்தும் சமயம், சமூகம் என பொதுத் தொண்டு புரிந்துவந்தார்

கதிரேசன் வீதியில் அமைந்திருந்த முன்னாள் மைலன் தியேட்டரை வீரமைலன் திருமண மண்டபமாக மாற்றி அதனை நிர்வகித்து வந்ததுடன் வசதியற்ற பெற்றோரின் குடும்பங்களின் திருமணங்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ததுடன் சில வேளைகளில் எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக இந்தத் திருமண மண்டபத்தில் திருமணங்களை நடாத்திக் கொடுத்துள்ளார்.

## வீரசுப்பிரமணியம் சூட்டுக் கொலை 2008

சில வருடங்களின் பின்னர் அதாவது 2008ஆம் ஆண்டு பங்குனி மாதம் 8ஆம் திகதி வீரசுப்பிரமணியம் தர்மகர்த்தாவாகயிருந்த ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்திலிருந்து இரவு 8 மணியளவில் துணைவியாருடன் கொட்டாஞ்சேனையிலிருந்த தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் கடத்தல், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் சில ஆயுததாரிகளினால் வீரசுப்பிரமணியமும் அவரது மனைவியும் சுடப்பட்டனர்.

முதல் துப்பாக்கி ரவை வீரசுப்பிரமணியத்தின் மார்பில் பாய்ந்தது. இரண்டாவது சூடு அவரது மனைவியின் தோளைத் தாக்கியது. வீரசுப்பிரமணியம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமடைந்தார். மனைவி தோளில் சூட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்றிரவே இந்தச் சம்பவத்தைக் எனது உறவினர் ஒருவர் உடனடியாக எனக்கு தொலைபேசி மூலம் அறியத்தந்ததைத் அடுத்து இரவு 10 மணியளவில் நானும் எனது துணைவியாரும் வைத்தியசாலைக்குச் சென்று துப்பாக்கிச் சூட்டுக்கு உட்பட்டிருந்த அவரது மனைவியையும் வேதனையால் அழுது கதறிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த அவர்களது பிள்ளைகளையும் பார்த்து அவர்களுக்கு ஆறுதல்கூறிய காட்சி இன்றும் மனதைவிட்டு அகலாத வேதனை நிறைந்த அனுபவமாக உணர்கின்றேன்

## சடலத்தைத் தகனம் செய்ய நீதிபதி அனுமதி

வீரசுப்பிரமணியம் கொலை செய்யப்பட்டமையால் அவரது இறந்த உடலை இந்து முறைப்படி தகனம் செய்வதற்குப் பொலிசார் முதலில் அனுமதியளிக்க மறுத்து விட்டனர். ஏனெனில் கொலையாளியை கண்டுபிடிக்கவும் மேலதிக விசாரணைக்காகவும் உடலை இந்து முறைப்படி தீயிட்டு தகனம் செய்ய சட்டம் இடமளிப்பதில்லை.

வீரசுப்பிரமணியத்தின் சகோதரன் பாலாவின் வேண்டுகோளையடுத்து இந்துக்களின் முறைப்படி தீயிட்டுத் தகனம் செய்ய அனுமதியளிக்கும்படி நான் நீதிமன்றத்தை வேண்டிக் கொண்டதையடுத்து கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் இந்துக்களின் முறைப்படி தீயிட்டுத் தகனம் செய்ய அனுமதியளித்தார் அதனையடுத்து ஈமைக்கிரிகைகள் இந்து முறைப்படி நடந்து முடிந்தன.

## மஜிஸ்ரெட் விசாரணை

வீரசுப்பிரமணியத்தின் கொலை சம்பந்தமான மஜிஸ்ரெட் விசாரணை கொழும்பு நீதிமன்றில் நடைபெற்றது. வீரசுப்பிரமணியத்தின் மனைவி முதலில் நீதிமன்றில் சாட்சியமளிக்க அச்சத்தின் காரணமாக தயங்கிய போதிலும் பின்னர் எனது வேண்டுகோளையடுத்து நீதிபதியின் உத்தியோகபூர்வ அறையில் விசாரணை நடைபெற்றது. விசாரணையில் தனது கணவருக்குப் பல தொலைபேசி அழைப்புக்கள் வந்ததாகவும், பணம் கேட்டு மிரட்டியதாகவும் மிகவும் அச்சத்தின் மத்தியில் சாட்சியமளித்தார். இன்றுவரை கொலையாளிகள் கைது செய்யப்படவில்லை

09

# நவாப்தீன் கைதும் வழக்கில் விடுதலையும்

2000–2014

## ஐந்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுதலை

**மனநோயாளியான தனது உடன் பிறந்த தங்கையை கடற்படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதால் கடற்படைத் தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் மிகத் தெளிவாக நவாப்தீன் பதிவு செய்திருந்தார்.**

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு யூன் வரையான காலகட்டத்தில் கடற்படையில் இயந்திரவியலாளராகக் கடமையாற்றி வந்த மலைநாட்டைச் சேர்ந்த நூர்டீன் மொகமட் நவாப்தீன் 2000ஆம் ஆண்டு கடற்படை அதிகாரிகளின் முறைப்பாட்டையடுத்து ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொழும்பு பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டார். தடுப்புக் காவல் உத்தரவின்மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த நவாப்தீனுக்கு எதிராக நடைபெற்ற விசாரணை யாதெனில்,

மன்னாரில் உள்ள கடற்படை தலைமையகத்தில் எந்திரவியலாளராகக் கடமையாற்றும் பொழுது கடற்படை வீரராக இருந்து கொண்டு தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள அழைத்ததன் மூலம் அல்லது போதனை செய்தல் அல்லது பணம் செலுத்துதல் அல்லது நிதி திரட்டுதல் அல்லது தகவல்களைக் கொடுத்தல் அதாவது இலங்கை கடற்படையின் வீரராக இருந்துகொண்டு அதன் இயந்திரவியலாளராகச் செயற்பட்டுக் கொண்டு கடற்படை மற்றும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய இரகசியங்களைப் புலிகளுக்குத் வழங்கினார் என்ற கோதாவில் விசாரணைகள் நடாத்தப்பட்டன.

## குற்றச்சாட்டு பத்திரங்கள் தாக்கல்

பயங்கரவாத பிரிவின் விசாரணைகளின் பின்னர் நூர்டீன் மொகமட் நவாப்தீனுக்கு எதிராக 1999 ஆம் ஆண்டு தை மாதத்துக்கும் மார்கழி மாதத்துக்கும் உட்பட்ட காலப்பகுதியில் அரச விரோத எல் ரீ ரீ ஈ இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு உடந்தையாய்ச் செயற்பட்டதாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் தண்டனை வழங்கக் கூடிய 2(1) (ஏ) பிரிவின் கீழ் தனித்தனியாக ஐந்து வழக்குகள் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி சட்டமா அதிபரினால கொழும்பு நீதிமன்றத்தில் மேல் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளில் அரச சாட்சியாக ஒன்பது சாட்சிகளும் வழக்குச் சான்றுப் பொருட்களாக எதிரியான நவாப்தீனால் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திசாநாயக்காவுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம், மருத்துவச் சான்றிதழ் மற்றும் புலிகளுக்கும் நவாப்தீனுக்கும் இடையே ஏற்பட்ட உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவு செய்யப்பட்ட கெஸட் நாடாப் பிரதிகளைக் கொண்ட கோவைகள், ஒலிப்பதிவு செய்த கருவி என்பன குற்றச்சாட்டுப் பத்திரத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.

## உண்மை விளம்பல் விசாரணை

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வழக்குக்களில் முதல் வழக்கு நீதிபதி மாலினி ரணதுங்க முன்னிலையில் 2002ம் ஆண்டு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையில் முதலில் எதிரியினால் வழங்கப்பட்டதாக கூறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் (உண்மை விளம்பல் விசாரணை) சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்டதா? அல்லது பலவந்தமாகப் பெறப்பட்டதா? என்பது பற்றிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியினால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்படவில்லை. எதிரியின் விருப்பமின்றியே பெறப்பட்டதென உறுதியானது.

இந்த ஐந்து வழக்குகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் வழக்கில் சட்டமா அதிபரினால் அரச சாட்சிகளாகக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸ் அதிகாரி காமினி திசாநாயக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மொழி பெயர்த்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் தட்டெழுத்தாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர் இந்த சாட்சிகள் என்னால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த பொலிஸ் அத்தியட்சகர் இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி சுயவிருப்பத்தில் வழங்கியதாக சாட்சியமளித்துள்ள போதிலும் எனது குறுக்கு விசாரணையில் அவரது சாட்சியத்தில் காணப்பட்ட பல முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரிந்தன.

எனது வேண்டுகோளையடுத்து வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இந்த வழக்கின் எதிரியான நவாப்தீனின் உடலில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் தாக்குதலுக்கு உட்பட்டதனால் ஆறு காயங்கள் காணப்பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி சாட்சியமளித்தார்.

அரசதரப்பினதும் விசாரணை முடிவடைந்த பிறகு எதிரி தரப்பினதும் வாத பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிபதி குற்றஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பும் பிணையில் விடுதலையும்

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டதை அடுத்து மேல் நீதிமன்றில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிக்கு 2002ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ஆம் திகதி பிணை வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் மற்றைய சாட்சியங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது ஒலிப்பதிவு செய்த கருவி, தகவல் அடங்கிய கெஸட் நாடாக்களை அரச தரப்புச் சட்டத்தரணி சாட்சிகளின் மூலம் நீதிமன்றில் சமர்ப்பிக்க ஆயத்தமானபொழுது எதிரியின் சார்பில் நான் பூர்வாங்க ஆட்சேபணையொன்றை முன்வைத்தேன். "எதிரிக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்களைப் பதிவு செய்த கெஸட் நாடாக்களை வழக்கின் சான்றுப் பொருட்களில் ஒன்றாக நீதிமன்றில் சாட்சியமாக கொண்டு வரவேண்டுமெனில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு விசாரணைக்குத் திகதி குறிப்பிடும் தினத்திற்கு 45 நாட்களுக்கு முன்னர் எதிர் தரப்புக்கு அறிவித்தல் கொடுக்கப்படவேண்டும் எனச் சான்றுச் கட்டளைச் சட்டத்தில் (Evidence Ordinance Act No 14 of 1995 மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அரசதரப்பில் சாட்சியமாக நெறிப்படுத்தவுள்ள ஒலிபரப்பு நாடாக்களைப் பற்றிய விபரம் அடங்கிய அறிவித்தலை எதிர்தரப்புக்குக் கையளிக்கவில்லை. எனவே இந்த ஒலிபரப்பு நாடாக்காள் சாட்சியமாக நெறிப்படுத்த முடியாது என்ற வாதத்தை நான் முன்வைத்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் இவ் வாதத்தை ஏற்றுக்கொண்டு ஒலிபரப்பு நாடாக்களை அரச சாட்சியமாக ஏற்க மறுப்புத் தெரிவித்தது. ஏனைய சாட்சிகள் அரச தரப்பினரால் 10 வருடங்களாக விசாரணையில் நெறிப்படுத்தப்பட்டு 2010ஆம் ஆண்டு மேமாதம் அரசு தரப்பு விசாரணையை முடித்துக்கொண்டது.

10 வருடங்களாக நடைபெற்ற இந்த விசாரணை முடிவில் இரண்டு பக்க வாதங்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ச எதிரியான நவாப்தீனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு நிரூபிக்கத்தவறி விட்டதெனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டு எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## ஐந்து குற்றச்சாட்டுக்கள்

சட்டமா அதிபரினால நவாப்தீனுக்கு எதிராக ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பிரதான சாட்சியமாகக் கொண்டு தனித் தனியாக ஐந்து குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ஐந்து குற்றச்சாட்டுப் பத்திரங்கள் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஆனால் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் பிரிவு 174(1)ல்

ஆளொருவர் ஒன்றிற்கு மேற்பட்ட ஒரே வகையினவான தவறுகளை அத்தகைய தவறுகளில் முதலாம் தவறிலிருந்து கடைசித் தவறுவரையில் எத்தனை தவறுகளையும் ஓராண்டுகால இடைவெளிக்குள் புரிந்தாரெனக் என குற்றம்சாட்டப்படும் பொழுது ஒரே குற்றப்பகர்வில் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையுமசட்டமா அதிபரினால் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுண்டு என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 175 (1) ஒரே செயற்கோவையாக அமையும் பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர்வரிசையில் ஒரே ஆளினால் ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள் புரியப்பட்டிருப்பின் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றுக்குமாக அவர் குற்றம்சாட்டப்பட்டு ஒரே விளக்கத்தில் விளங்கப்படலாம் என்பதுடன் மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கப்படலாம் என்றும் சட்டதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளுக்கு எதிராக ஒரே தன்மையைக் கொண்ட பல குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் எத்தனையாக விருந்தாலும் மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படுகையில் ஒரு வருட காலத்துக்குள் நடைபெற்ற குற்றங்களாயின் ஒரே குற்றச்சாட்டுப் பத்திரத்தில் உள்ளடக்க முடியும் ஆனால் ஐந்து குற்றச்சாட்டுப் பத்திரங்களும் நவாப்தீனுக்கு எதிராக தனித் தனிக் குற்றச் சாட்டுகளாக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டமையால் தனித் தனியாக ஒவ்வொரு வழக்கும் வாதாட வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதே தன்மை கொண்ட வழக்குக்கள் பலவற்றுக்கு அரசியல் கைதிகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சில அரசியல் கைதிகளுக்கு ஒரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் ஆறு தனித்தனி வழக்குக்கள் தாக்கல் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால் ஒரு வழக்கிலிருந்து விடுதலையானாலும் கூட மற்றைய வழக்குகள் முடிவடையும்வரை சிறையில் தொடர்ந்து அடைபட்டுக் கிடக்க வேண்டியுள்ளதுதான். அரசியல் கைதிகள் நீண்டகாலம் சட்டத்தின்படி கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காமல் தொடர்ந்தும் சிறையில் தடுத்த வைக்கப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாக அமைகின்றது.

அரச தரப்பில் நவாப்தீன் கொடுத்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றைய நான்கு வழக்குகளிலும் சாட்சியமாக பாவிக்கப்பட முடியாத நிலையில் புலிகளுக்கும், நவாப்தீனுக்கும் இடையே நடைபெற்றதாகக் கூறப்படும் உரையாடல்களை அடங்கிய ஒலிபரப்பு நாடாக்களை நவாப்தீனுக்கு எதிராக முக்கிய சாட்சியாக பாவிக்க அரசுதரப்பு முடிவு செய்தது.

## ஒலிபரப்பு நாடாக்கள் முக்கிய சான்று

ஏற்கனவே நடந்துமுடிந்த வழக்கில் ஒலிநாடாக்களைச் சாட்சியமாகப் பாவிக்க எண்ணிய நிலையில் எடுக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையையடுத்து அரச தரப்புக்கு நீதிமன்றம் அதனைப் சாட்சியாகப் பாவிப்பதற்கு அனுமதியளிக்கவில்லை. இப்பொழுது மற்றைய நான்கு வழக்குக்களில் அந்த ஒலிபரப்பு நாடாவைப் பாவிப்பதற்கு 45 நாட்கள் அறிவித்தல் எதிரி தரப்புக்குக் கொடுக்கப்பட்டதுடன் விசாரணைத் திகதியும் குறிப்பிடப்பட்டது.

இந்த வழக்கில் முக்கிய விடயம் யாதெனில் அடுத்த தவணையில் சாட்சிப் பொருட்களாக குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று ஒலிப்பதிவு நாடாக்கள் திறம்படச் செயற்படுகின்றதா எனத் திறந்த நீதிமன்றத்தில் பரீட்சித்துப் பார்க்க திகதி குறிப்பிடப்பட்டது. இந்தக் குறிப்பிடப்பட்ட மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் சரியான முறையில் செயற்படுமாயின் நவாப்தீனுக்கு எதிரான மற்றைய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளச் சாத்தியம் உண்டு. 12 வருடம் பழமை வாய்ந்த மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் செயலிழந்திருந்தால் நவாப்தீன் மற்றைய எல்லா வழக்குகளிலிருந்தும் விடுதலையாகச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் ஆனால் நம்பமுடியாததும் ஆச்சரியமானதுமான விடயம் யாதெனில் மூன்று ஒலிப்பதிவு நாடாக்களும் நீதிமன்றில் பரீட்சித்துப் பார்கையில் திறம்படச் செயல்பட்டன ஆனால் அவை தெளிவற்றுக் காணப்பட்டன. ஆதலால் சிறிது காலத்தில் அரச தரப்பு இந்த வழக்கை தொடர்ந்தும் நடாத்திச் செல்ல முடியாதென நீதிமன்றுக்கு அறிவித்ததும் நவாப்தீன் முழுமையாக சகல வழக்குகளிலிருந்தும் விடுதலை பெற்றார்.

மனநோயாளியான தனது உடன் பிறந்த தங்கையை கடற்படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதால் கடற்படைத் தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதாக குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் மிகத் தெளிவாக நவாப்தீன் குறிப்பிட்டிருந்தபோதிலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்படவில்லை என நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டதாலும் அரசுதரப்பினரால் ஒலிப்பதிவு நாடாக்கள் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட தெளிவின்மையாலும் நவாப்தீனின் விடுதலை சாத்தியமாது.

# காந்தன் கைதும் விடுதலையும்

2001–2006

10

## மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்ட வழக்கு

### குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை?

2001ஆம் ஆண்டு காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் மின்சார சபைக்குச் சொந்தமான பல மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்டன எனக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை மட்டும் சான்றாகக் கொண்டு மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழுங்கப்பட்டதாக நீதிமன்றம் கட்டளை வழங்கிய பின்னர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களின் தன்னார்வத்தன்மை கேள்விக்கு உட்படுவதினால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்து எதிரிகளை தண்டிக்க முடியாது என்ற எனது வாதத்தையேற்று களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி இவ்வழக்கிலிருந்து எதிரியை விடுதலை செய்தார்.

### மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்டன

2001ஆம் ஆண்டு காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் மின்சார சபைக்குச் சொந்தமான பல மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்டன. கைதுசெய்யப்பட்ட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பல இளைஞர்களுக்கு எதிராக நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன பாணந்துறை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் நடைபெற்றன.

சட்டமா அதிபரினால் களுத்துறை,மேல் நீதிமன்றில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினரான செல்வராசா காந்தன் களுத்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த மின்மாற்றியைச்

சேதப்படுத்தியதனால் அரச சொத்துக்குப்பெரும் இழப்பு விளைவித்ததாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## தமிழ் மொழியில் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள்

குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் அதிகமான அரசியல் கைதிகளினால் தமிழிலேயே எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது. குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் அரசியல் கைதிகளால் தமிழ் மொழியில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தால் அவ் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதல்ல வாக்குறுதி, தூண்டுதல், வற்புறுத்தல் மூலம் பெறப்பட்டது என்பதை நீதிமன்ற விசாரணையில் எதிரி சார்பில் நிரூபிப்பது மிகவும் சிரமமான ஒருவிடயமாகும்

எதிரி பொலிஸ் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் தாக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்தார் என்பதை எதிரிதரப்பில் வைத்திய அறிக்கை மூலம் நிருபித்தாலன்றி தமிழ் மொழியில் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் பல வழக்குகளில் கைதிகளால் சுயமாகவே கொடுக்கப்பட்டதுதான் என்ற முடிவுக்குத்தான் நீதிமன்றம் வந்துள்ளது

எதிரிகளால் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்பட்டதா? அல்லது இல்லையா? என்ற உண்மை விளம்பல் விசாரணை முதலில் களுத்துறை மேல்நீதிமன்றில் ஆரம்பமானது. அரச தரப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திசாநாயகவும் மொழிபெயர்ப்பாளரும் சாட்சியம் அளித்தனர்.

இந்த இரண்டு அரச சாட்சியாளர்களையும் நான் குறுக்கு விசாரணை செய்த பின்னர் அரச சட்டத்தரணி தனது வழக்கை முடித்துக் கொண்டதையடுத்து எதிர்த்தரப்பில் எதிராளியை நான் சாட்சியாக அழைத்து அவரது சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டது எதிரி தனது சாட்சியத்தில் தான் சுயமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லையெனவும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது கையால் எழுதித்தரும்படி வற்புறுத்தி அச்சுறுத்தியதனால் தான் எழுதிக் கொடுத்ததாக நீதிமன்றில் சாட்சியம் அளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி எதிரியின் சாட்சியத்தின் நம்பகத்தன்மையில் சந்தேகம் கொண்டு அந்தச் சாட்சியத்தை நிராகரித்து தனது தீர்ப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திசாநாயகவுக்கு சுயவிருப்பத்திலேயே வழங்கப்பட்டுள்ளது எனத் கட்டளை வழங்கினார்.

எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக நீதிமன்றினால் கட்டளை வழங்கப்பட்ட இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கிழக்கு மாகாணத்துத் தலைமையகத்தின் கட்டளையின்படி தானும் இன்னும் சில புலி உறுப்பினர்களும் நாட்டின் பல பகுதிகளில் மின் மாற்றிகளைக் குண்டுகள் வைத்துத் தகர்த்து செயலிழக்கச் செய்ததாக தமிழில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது.

## குற்றச்சாட்டின் பூர்வாங்க விசாரணை நடைபெறவில்லை

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் சான்றாக ஏற்றுக்கொண்ட பின்னர் இதைத்தொடர்ந்து பிரதான விசாரணை தொடர்ந்தது. இதனையடுத்து நான் ஒரு முக்கியமான ஆட்சேபணையை நீதிமன்றின் முன் வைத்தேன்.

மின்சார சபைக்குச் சொந்தமான மின் மாற்றிகளை நாசமாக்கியதாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் மின்மாற்றிகள் நாசம் செய்யப்பட்டதன் மூலம் அரச சொத்துக்கு நாசம் விளைவிக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்த போதிலும் எந்த அரச சொத்து, எப்பொழுது அழிக்கப்பட்டது அதனால் ஏற்படுத்தப்பட்ட சேதாரம் என்ன என்பது பற்றிய பூர்வாங்க விசாரணையைப் பொலிசார் செய்யவுமில்லை வேறு ஒப்புறுதிப்படுத்தும் எந்தச்சான்றுகளையும் அரச தரப்பில் மேல்நீதிமன்றில் முன்வைக்கவுமில்லை

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே பிரதான சாட்சியமாகக்கொண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதெனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை வேறு சான்றுகளால் ஒப்புறுதிப்படுத்த அரச தரப்புத் தவறியுள்ளதுடன் பலவீனமிக்க சான்றான குற்ற ஒப்புதல் சான்றில் மட்டும் தங்கி எதிரியை தண்டிக்கக்கூடாது என்ற சட்டவாதம் முன்வைக்கப்பட்டதுடன் எனது வாதத்தை உறுதிப்படுத்த இந்திய நீதிமன்றத்தின் முக்கியமான பல தீர்ப்புகள் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது (Rajeshwari Singh Vs State of U. P .1987 All cr 324 LJ 848) என்றஇந்தத் தீர்ப்பில் பொலிசாரால் பதிவுசெய்யப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மிகவும் பலவீனமான சான்று என்றும் (Extra Judicial Confession is a very weak type of evidence) அதனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் அவசியமாகும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டதுடன் மேலும் பொலிசாருக்கு கைதியினால் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு பலவீனமான சான்று என்ற அடிப்படையில் நீதிமன்றம் வழக்கு விசாரணையை ஆரம்பிக்கக் கூடாது எனவும் விசாரணையில் வெளிவரும் சான்றுகளும் சூழ்நிலைகளும் உண்மைத்தன்மையுமே பொலிசாருக்கு கொடுக்கபட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு பலவீனமான சான்று என்பதை வெளிப்படுத்துகின்றது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது

இந்தியாவின் உயர் நீதிமன்ற தீர்ப்புக்களான (Mulk Raj V.The State of.U.P.AIR1956 SUPREME COURT 902 (V48C126) & Shankria vs The state of Rajesthan A.I.R 1978 s.c 1248 தீர்ப்புக்களில் கூறப்பட்டுள்ளது யாதெனில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதாக தீர்மானிக்கப்படுமிடத்து அவை சான்றாக பயன்படுத்த முடியும் எனினும் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல்வாக்கு மூலத்தின் தன்னார்வத்தன்மை குறித்து போதுமான, சிறப்பான ஆராய்வு மேற்கொள்ள வேண்டியது மேல் நீதிமன்றத்தின் தலையாய கடமையாகும். வேறு சான்றுகளின்மூலம் ஒப்புறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட வழக்குக்களான Ramasinghe vs State of U.P.A.I.R1967 S.C152 & JaiSingh vs The State A.I.R1967 Delhi 14 தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினைத் தவிர வேறு எந்தச் சான்றுகளும் இல்லாத நிலையில் நீதிமுறைக்கு புறம்பான (Extra Judicial Confession) குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகயிருந்தாலும் நீதிமன்றமானது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விடயத்தில் அதன் தன்னார்வத்தன்மையில் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் திருப்திப்படுமிடத்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை மட்டும் சான்றாகக் கொண்டு தண்டணை வழங்கப்படலாம்

ஆனால் குற்றம் சாட்டப்பட்ட குற்றச்செயல் அந்த குற்றம்சாட்டப்பட்ட காலத்திற்குள் நடைபெற்றுள்ளதா என்பதனை நீதிமன்றம் எதிரி குற்றவாளி என்ற முடிவிற்கு வரமுன்னர் கவனத்தில் கொள்ள வேண்டும் மேலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாக்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர் தண்டிக்கப்படகூடாது என்பதுடன் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை ஆராயப்படவேண்டும் எனவும் இந்தத் தீர்ப்புகள் வலியுறுத்துகின்றமை நீதிமன்றங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது

களுத்துறை, மேல்நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் குற்றத்தைப் புரிந்ததாக எதிரி தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒத்துக் கொண்டிருந்தாலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மைத்தன்மையை ஒப்புறுதிப்படுத்தும் வேறு சான்றுகள் மட்டுமின்றி குற்றச்சாட்டுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் புரியப்பட்டுள்ளன என்பதை அரச தரப்பு நிரூபிக்கத்தவறியதையடுத்து எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

# யாழ் பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜயவர்தன கொலை

2005 –2006

11

### கோபி விடுதலை

2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாண பிரதான பொலிஸ் அத்தியட்சகர் திரு. சால்ஸ் விஜயவர்தன யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவிலில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு மல்லாகத்தில் வைத்து கொலை செய்யப்பட்டதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று யாழ்ப்பாண பொலிஸ் தலைமையகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கையின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கோபி என்றும் வீரபாண்டியன் என்றும் அழைக்கப்படும் கதிரமலை வைதீகனை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் செல்வி சரோஜினி குசலா வீரவர்தன 2005 ஒக்டோபர் 26ம் திகதி உத்தரவிட்டார்.

### வழக்கின் பின்னணி

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக நடந்த சம்பவங்களை விபரிக்கையில் இரு இராணுவ சிப்பாய்கள் முடியலங்கார நிலையத்தில் முடியலங்காரம் செய்கையில் ஒரு இராணுவ வீரர் தவறுதலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் முடியலங்கார நிலையத்தில் இருந்த இரண்டு இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரான் நாவிதன் என அழைக்கப்படும் இளைஞனின் இறப்பையடுத்து யாழ்ப்பாணத்திலும் அதன் புறநகர் பகுதிகளிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தலையிட்ட யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜேவர்தன தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் இணுவிலில் வைத்துக் கடத்தப்பட்டு மல்லாகம் கொண்டு செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

### கோபி கைது

யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜேவர்தனவின் கொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளி மறைந்திருப்பதாக ஒரு இரகசிய தகவல் கிடைத்ததன் பின்னர் பாதுகாப்பு



அணியினர் கொலையாளியை கைது செய்வதற்காக அவ்விடத்துக்கு விரைந்தனர். குறிப்பிட்ட இடத்தினை பொலிசாரும் இராணுவத்தினரும் நெருங்கிய பொழுது குறிப்பிட்ட இடத்தில் மறைந்திருந்த புலி உறுப்பினர்கள் அரசாங்கப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் யாழ்ப்பாண பொலிசை சேர்ந்த சார்ஜண்ட் திலகரத்னவிற்கும் குற்றப் புலானய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் கடும் காயம் ஏற்பட்டதையடுத்து காயமடைந்தவர்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நெஞ்சில் சுடப்பட்ட சாஜண்ட் திலகரத்னவின் நிலைமை மோசமாக உள்ளதென அறிவிக்கப்பட்டு அவரை விமானம் மூலம் கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினராலும் பொலிசாரினாலும் தொடர்ந்து நடாத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையில் யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜேவர்தனவின் கொலையில் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தில் ஒரு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அருகில் 2005.08.17ஆம் திகதி மு.ப. 10.05 மணியளிவில் கைது செய்யப்பட்டார்.

## விசாரணைகள் கொழும்பில்

கோபி என அழைக்கப்படும் கதிரமலை வைதீகனை கைது செய்த பின்னர் பொலிஸ் அத்தியட்சகர் சால்ஸ் விஜேவர்தன கொலை செய்யப்பட்ட மல்லாகத்தில் விடுதலைப் புலிகள் பலமான நிலையில் காணப்பட்டமையால் விடுதலைப் புலிகளின் கடும் அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பாக விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் நடாத்த முடியாமையால் குற்றப்புலன் விசாரணை அதிகாரிகள் விசாரணைகளை கொழும்புக்கு மாற்றும்படி சட்டமா அதிபருக்கு வேண்டுகோள் முன்வைத்ததையடுத்து தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான கோபியை கொழும்புக்கு விமானத்தில் அழைத்து வந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் விசாரணைகளை நடாத்தி விசாரணைகளின் முதல் அறிக்கையையும் மேலதிக விசாரணை அறிக்கைகளையும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

## அடையாள அணிவகுப்பு

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் நடத்தப்பட்ட ஆள் அடையாள அணிவகுப்பின் போது பொலிஸ் அதிகாரிகள் அடங்கலாக எந்தவொரு சாட்சியினாலும் சந்தேக நபரான கோபியை அடையாளம் காணமுடியவில்லை அடையாள அணிவகுப்பின் பின்னர் கோபியை நீதிமன்றில் பொலிசார் ஆஜராக்கிய பொழுது சந்தேக நபரான கோபியை அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்படாமையாலும் விசாரணையில் எந்தவிதமான

குற்றங்களையும் புரிந்ததாக எந்தவித சான்றுகளும் முன்வைக்கப் படாமையாலும் சந்தேக நபரான கதிரமலை வைதீகனை விடுதலை செய்யும்படி எனது வாதத்தை முன்வைத்தேன்

கொழும்பு பிரதான நீதவான் செல்வி சரோஜினி குசலா வீரவர்தன புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரியிடம் இந்த வழக்கின் விசாரணை அறிக்கைகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருப்பதனால் சந்தேக நபரான கதிரமலை வைதீகனை விடுதலை செய்ய நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இன்மையால் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை 2005 ஒக்டோபர் 26ம் திகதி நீதிமன்றுக்கு அறிவிக்கும்படி கட்டளையிட்டார்.

## கதிரமலை வைதீகன் விடுதலை

அடையாள அணிவகுப்பின் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இவ்வழக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் அமைந்துள்ள விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தவேளையில் சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச சட்டத்தரணி சந்தேக நபருக்கு எதிராக குற்றப் பத்திரம் சமர்ப்பிப்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லையென நீதிமன்றுக்கு தெரிவித்ததையடுத்து சந்தேநபரான கதிரமலை வைதீகனை பிரதான நீதவான் விடுதலை செய்தார்.

கோபி எனப்படும் கதிரமலை வைதீகனை நீதிமன்றம் விடுதலை செய்த பின்னர் நீதிமன்றில் இரண்டு வேண்டுகோள்களை முன்வைத்தேன் ஆனால் எனது இரண்டு வேண்டுகோள்களையும் நிறைவேற்ற நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லையெனனக் கூறி எனது இரண்டு வேண்டுகோள்களும் பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதியால் நிராகரிக்கப்பட்டன.

விடுதலையின் பின்னர் தனது உயிருக்கு பாதுகாப்பு வழங்குமாறு கதிரமலை வைதீகன் என்னிடமும் என் துணைவியாரிடமும் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டவுடன் நான் உடனடியாகவே நீதி மன்றத்திடம் கோபி கைது செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டார் என நீதிமன்றத்தில் எடுத்துரைத்ததுடன் கோபியை யாழப்பாணத்துக்குத் திருப்பி அனுப்புவதிலும் அதே வழிமுறைப் பின்பற்றுமாறு பொலிசாருக்கு உத்தரவிடுமாறு நான் நீதிமன்றத்திடம் வேண்டிக் கொண்டேன். ஆனால் பிரதான நீதிபதி சந்தேகநபரை விடுதலை செய்வதற்குத் தனக்கு அதிகாரம் உண்டே தவிர, அதன் பின்னர் விடுதலையான கைதியான கதிரமலை வைதீகனுக்கு பாதுகாப்பு வழங்குதற்கு இந்த நீதிமன்றுக்கு அதிகாரமில்லை என்று கூறி எனது வேண்டுகோளை நிராகரித்தார்.

நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்ட கதிரமலை வைதீகனை பத்திரமாக யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டதையடுத்து கோபி என்றும் வீரபாண்டியன் என்றும் அழைக்கப்படும் கதிரமலை வைதீகன் 2006ம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்றடைந்தார்

# வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை

2005–2018

12

**(1) ஐந்து வருடத்திலிருந்து 26 வருடங்களுக்கு மேல் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் பொழுது அரசு தரப்பில் முன்வைக்கப்படும் மிக முக்கியமான கேள்வி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிலை விடுதலை செய்யும்படி கேட்கிறீர்களா? என்ற கேள்வியே முன்வைக்கப்படும்.**

**(2) கதிர்காமர் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளி என பெயர் குறிப்பிடப்பட்ட இசிதோர் ஆரோக்கியநாதன் 2018ம் ஆண்டு கார்த்திகை மாதம் நீதிமன்றினால் விடுதலை.**

சந்திரிக்கா பண்டார நாயக்க ஜனாதிபதியான பின்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்து அரசின் சார்பில் இந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க அடைவுகளைக் கண்டவர். பல நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தன. இடையறாது தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருந்த அமைச்சர் கதிர்காமர் கொழும்பின் மத்திய பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் புல்லஸ் ஒழுங்கையில் உள்ள அவரது வீட்டில் நீச்சல் தடாகத்தில் நீந்திய பின்னர் 2005 ஒகஸ்ட் 12ஆம் திகதி இரவு சுமார் 10.45 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெளிவிவகார அமைச்சர் லகஸ்மன் கதிர்காமர் துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்டதனை அடுத்து மறு தினமான 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி அவசரகாலச் சட்டம் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

## குற்றப்பத்திரம்



இந்த வழக்கின் குற்றப்பத்திரத்தில் முறையே, வேலுப்பிள்ளை பிரபாகரன், பொட்டு அம்மான் என அழைக்கப்படும் சிவசங்கர், சார்ள்ஸ் மாஸ்டர், கோமதி மணிமேகலை, முத்தையா சகாதேவன் பாபு என அழைக்கப்படும் ஆரோக்கியநாதன் ஆகியோர் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டனர் இந்த வழக்கில் தடயப் பொருட்களாக இயந்திரத்துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், சினைப்பர் வகையான துப்பாக்கி என 19 தடயப் பொருட்களும் 28 சாட்சிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன

பயங்கரவாதத் தடை சட்டத்தின் 31(1) பிரிவின் கீழ் பொருள்கோடப்பட்டுள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரான இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற உறுப்பினரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதவியின் பணிகளில் ஈடுபட்டவருமான லக்ஸ்மன் கதிர்காமர் என்பவரது மரணத்தை விளைவிப்பதற்காக பொதுநோக்குடன் உடந்தையாக அல்லது ஒன்று சேர்ந்து சதி செய்து தவறை புரிந்துள்ளதாகவும் குறித்த சதியின் பிரதிபலனாக பயங்கரவாதத் தடை சட்டத்தின் 3(ஆ)பிரிவுகளின் பிரகாரம் லக்ஸ்மன் கதிர்காமர் என்பவரது மரணத்தைத் விளைவித்ததாக ஏழு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடை சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் 2008ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது

## புதிய குற்றச்சாட்டுப் பத்திரம்

வேலுப்பிள்ளை பிரபாகரன், பொட்டம்மான், சாள்ஸ் மாஸ்டர், மணிமேகலை, முத்தையா சகாதேவன் ஆகிய முதல் நான்கு எதிரிகளும் 2009ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மரணமடைந்து விட்டதாக நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட முதல் நான்கு எதிரிகளையும் குற்றச் சாட்டுப் பத்திரத்திலிருந்து நீக்கி விட்டு முத்தையா சகாதேவன், இசிதோர் ஆரோக்கிய நாதன் ஆகியோர் முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கெதிரான புதிய குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கில் 1ம் எதிரியான முத்தையா சகாதேவனது சார்பில் சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி ஆஜராகி வாதிட்டபோதிலும் முத்தையா சகாதேவனால் பொலிசாருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூல விசாரணையின் பின்னர் நீதி மன்றினால் அரச சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து வழக்கின் மேலதிக விசாரணை நடைபெறுகையில் அவரது சட்டத்தரணி வினாயகமூர்த்தி காலமானார். 13 வருடங்களாக சிறையில் விடுதலைக்காக காத்திருந்த முத்தையா சகாதேவன் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுச் சிறுநீரக நோயினால் சிறையிலேயே மரணமடைந்தார். ஆரோக்கிய நாதனுக்காக நான் தொடர்ந்தும் வாதாடினேன். இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## கொலைச் சம்பவத்தின் பின்னணியில் விடையில்லா வினாக்கள்

கதிர்காமரின் பாதுகாப்புப் பிரிவுத் தலைவரான கெப்டன் மனதுங்க நீச்சல் தடாகத்தைச் சுற்றிலும் வீட்டிலும் ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருந்ததாக நீதவான் நீதிமன்ற விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். அத்துப்பாக்கிச் சூடு தனக்குக் கேட்டதாகவும் தான் திருப்பிச் சுட்டதாகவும் அதன் பின்னர் ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களோடு அமைச்சரை தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அவர் கூறினார்.

## தன்னியக்க ஆயுதம்

கொலையாளி சினைப்பர் ரைபில் ஒன்றைப் பயன்படுத்தியிருந்ததாக பொலிசார் முதலில் கூறினர். எனினும், அது அவ்வாறல்ல என்பதை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதிப்படுத்தியது. கதிர்காமர் ஒரு விசேட ரைபிலினால் கொல்லப்படவில்லை. ஆனால், இலங்கை ஆயுதப் படைகளினால் பயன்படுத்தப்படும் வகையிலான ஒரு தன்னியக்க ஆயுதத்தினாலேயே கொல்லப்பட்டார் என்பதோடு, நாடு முழுவதும் அது தாராளமாகக் கிடைக்கக் கூடியது என்பதே யதார்த்தமாகும்.

அரசுக்குச் சொந்தமான சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரை “கதிர்காமர் ஆயுதப்படையிடமிருந்து களவாடப்பட்ட அல்லது ஓர் ஆயுத வியாபாரியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சப் மெசின் கன் ஒன்றினால் கொல்லப்பட்டார்” என்று மிகவும் ஆச்சரியப்படும் வகையில் கூறியுள்ளது.

## வீதித்தடை

கொலையாளிகளைப் பிடிப்பதற்கு ஏன் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை? மனதுங்கவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கதிர்காமரது உயிரைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டிருந்தாலும் ஏனைய பாதுகாப்புப் படையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததேன்? அத்தகைய சூழ்நிலைகளில், பொலிசாரும் இராணுவத்தினரும் வாகனங்களைச் சோதனை செய்வதற்காக துரிதமாக வீதித் தடைகளை இடுவார்கள். நாட்டின் மிகவும் சிரேஷ்ட அமைச்சரொருவரின் கொலையின் பின்னர், இரண்டு மணித்தியாலங்களுக்கு வீதித்தடையேதும் இடப்படவில்லை. “கொலையாளி தப்பியோடுவதற்கு போதுமான கால அவகாசம் இருந்தது.” என்று சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் த சண்டே ஐலண்ட் பத்திரிகைக்குக் கூறியிருந்தார்.

நீச்சல் தடாகத்திலிருந்து 35 மீட்டர் தொலைவிலிருந்த ஒரு பக்கத்து வீட்டின் மேல்மாடியிலிருந்த ஒரு குளியலறையிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் வந்ததாக பொலிசார் கூறினர். அலுமினியம் பைப்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு கெமரா தாங்கியின் மீது கொலையாளி ரைபல் ஒன்றைப் பொருத்தி குளியலறை ஜன்னலிலிருந்த ஒரு சிறு துவாரத்தினூடே சுட்டார். ஒரு ரொக்கட் லோஞ்சரிலிருந்து கிரனேட் ஒன்று ஏவப்பட்டது எனினும் அது தவறிவிட்டது இவ்லோஞ்சர் அருகிலுள்ள பற்றையிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட தாகவும் கொலையாளி ரைபிலை எடுத்துக் கொண்டு ஒரு சகாவுடன்

தப்பிச்சென்றதாகவும் கொலையாளிகள் சிறிது நேரம் அக்குளியளறையில் இருந்திருக்கலாம் என்றும் பொலிசார் கூறினர். (அதி பாதுகாப்பு வலையத்திலிருந்து கொலையாளி எப்படித் தப்பித்தார்?)

## பாதுகாப்பின் குறைபாடுகள்

அக்கம் பக்கத்து வீடுகள் பாதுகாப்பானவையாக இருப்பதை உறுதிப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததேன்? இரண்டு தசாப்த காலம் ஒரு சிவில் யுத்தத்தில் மூழ்கியிருந்த இலங்கை நீண்டதொரு அரசியல் படுகொலை வரலாற்றைக் கொண்டுள்ளது. அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் விசேடமாகப் பயிற்றப்பட்ட ஆட்கள் அனைத்து அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்றனர். துப்பாக்கிதாரிகள் இருக்கக்கூடிய இடங்களை சோதனையிடுவது VIP வதிவிடங்களைச் சுற்றிலும் அல்லது VIPகள் வாகனங்களில் பயணஞ் செய்யும் போது வழமையாக மேற்கொள்ளப்படும் ஓர் அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். சனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் அடுத்ததாக அதி உயர் பாதுகாப்பு முன்னுரிமையைக் கொண்டிருந்த கதிர்காமருக்கு இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததேன்? Sunday Leader பத்திரிகை கதிர்காமர் கொலையைப் பற்றிய தகவல்களை முக்கிய செய்தியாக வெளியிட்ட அதே வேளையில் கதிர்காமாருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏன் குறைக்கப்பட்டிருந்தது என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தது.

2005 ஒகஸ்ட் 13 ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் – அதாவது கதிர்காமர் கொலை செய்யப்பபட்டு குறைந்தது இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே பொலிசார் தனது வீட்டுக்கு வந்ததாக அடுத்த வீட்டின் சொந்தக்காரர் லக்ஸ்மன் தலையசிங்கம் ஒகஸ்ட் 15 ஆம் திகதி நீதவான் விசாரணையில் கூறினார். (துப்பாக்கிச் சூடு எந்த வீட்டிலிருந்து நடத்தப்பட்டதோ, இந்த வீட்டைக் கொலையின் பின்னர் சோதனையிடுவதற்கு அவ்வளவு நேரம் எடுத்ததேன்?)

## பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை

கதிர்காமரை ஒகஸ்ட் மாதமளவில் கொல்வதற்கான சதித் திட்டமொன்று பற்றிய புலனாய்வுத் தகவல் ஒரு வெளிநாட்டு புலானாய்வு நிறுவனத்திடமிருந்து அந்நாட்டின் புலனாய்வு அமைச்சுப் பணியகத்தின் வாயிலாக கதிர்காமருக்கு ஓர் எச்சரிக்கை கிடைக்கப்பெற்றிருந்ததாக சண்டே டைம்ஸ் முன்கூட்டியே வெளிப்படுத்தியது. சுருக்கமான அவ்வெச்சரிக்கை “அவரைக் கொல்வதற்கான சதித் திட்டமொன்று 2005 ஒகஸ்ட்டில் நிறைவேற்றப்படவுள்ளது” என்று குறிப்பிட்டது. எனினும் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துவற்கு எவ்வித அவசர முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. “மேலதிக பாதுகாப்புக்கான அனுமதி முதலாவது எச்சரிக்கைக் கிடைத்து பதினொரு மாதங்களுக்கு பின்னர் அவர் கொலை செய்யப்பட்ட தினத்திலேயே வழங்கப்பட்டது விசித்திரமானதாகும்”

கதிர்காமர் படுகொலையில் ஊடகத்துக்கு வெளிப்படுத்தப்பட்டவற்றுள் பகிரங்கப்படுத்தப் பட்டிருப்பவைகளில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணையில், சாட்சியங்களின்

வாக்குமூலங்களின் அடிப்படையில், அக்கொலை தொடர்பாக பல விடைகாணப்படாத கேள்விகள் காணப்பட்டமையும் பொரும்பாலானவை ஒன்றில் ஐயத்துக்கிடமானவையாக அல்லது பின்னர் தவறானதாக அல்லது பொய்யானதாக உண்மைக்கு புறம்பானதாகக் இருக்கக் காணப்பட்டதனால் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜராகிய எனக்கு அரச சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்து அரச சாட்சியங்களின் உண்மைத்தன்மையை கேள்விக்குறியாக்கிட முடிந்தது. அதுவே இந்த வழக்கின் இரண்டாம் எதிரியாகிய இசிதோர் ஆரோக்கிய நாதனை மேல் நீதிமன்றம் விடுதலை செய்வதற்கு பெரும் அனுகூலமாக அமைந்தது.

## வழக்கு விசாரணையில்

2008ம் ஆண்டு ஆடி மாதம் முதல் முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முதலாம் இரண்டாம் மூன்றாம் நான்காம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகாத நிலையில் ஐந்தாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி விநாயகமூர்த்தியும் ஆறாம் எதிரியின் சார்பில் நானும் ஆஜராகியதையடுத்து இந்த வழக்கின் மேலதிக விசாரணைக்காக 2009ம் ஆண்டு ஆவணி மாதத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2009ம் ஆண்டு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது 2009ம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் (1) வேலுப்பிள்ளை பிரபாகரன் (2) பொட்டு அம்மான் அல்லது சிவசங்கர் (3) வினோதன் சாள்ஸ் மறுபெயர் சாள்ஸ் மாஸ்டர் (4) கோமதி மதிமேகலா அல்லது மதி ஆகியோர் யுத்தத்தில் மரணித்து விட்டதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கபில வைத்தியரத்ன நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்ததுடன் இந்த முதல் நான்கு எதிரிகளும் மரணமடைந்து விட்டதனால் இந்த வழக்கின் முதல் நான்கு எதிரிகளுடைய பெயர்களும் குற்றச் சாட்டுப் பத்திரத்திலிருந்து மீளப்பெறப்பட்டு 5ம் 6ம் எதிரிகளான சகாதேவன், ஆரோக்கியநாதன் ஆகியோருக்கு எதிராக முதலாம் இரண்டாம் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு புதிய குற்றச்சாட்டுப் பத்திரம் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டது.

## மரணச் சான்றிதழ் எங்கே?

புதிய குற்றச்சாட்டுப் பத்திரம் நீதிமன்றுக்கு பாரப்படுத்துகையில் 6ம் எதிரியாகிய ஆரோக்கியநாதன் சார்பில் ஆஜராகிய நான் நீதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்ததாவது, ஒரு எதிரி இறந்ததாகக் கூறப்படுவதாயின் இறந்தவரின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டியது சட்டத்தில் உள்ள ஒரு பிரதான விடயமாகும். குற்றச்சாட்டுப் பத்திரத்தில் முதல் நான்கு எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதாக அரச தரப்பால் கூறப்படுகின்ற பொழுதிலும் அவ்விருவரினதும் மரண அத்தாட்சிப்பத்திரம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அரச தரப்பில் முதலிரண்டு எதிரிகளும் இறந்துவிட்டதை உறுதிப்படுத்துவதற்குச் சான்றாக அவ்விருவரினதும் மரண அத்தாட்சிப் பத்திரத்தை தாக்கல் செய்யாமல் அவ்விருவரும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதாகக் பாதுகாப்பு அமைச்சிலிருந்து

அரச புலனாய்வுத்துறை பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவனம் ஒன்றையே சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.

இந்த வழக்கில் முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதாக அரசும் அரச ஊடகங்களும் சமூகவலயத்தளங்களும் செய்திகளை வெளியிட்டபோதிலும் அவை சட்டரீதியாக இன்றுவரை உறுதிப்படுத்தப்படாதவை என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன். முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டுஅம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதாக அரச தரப்பால் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் மரணவிசாரணை நடைபெற்று மரண சான்றிதழ் வழங்கப்படாமையினால் மரணத்தை உறுதிப்படுத்த அரச புலனாய்வுத்துறை பணிப்பாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணம் சட்டவலுவற்ற ஆவணமாகும்.

மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யும் சட்டமா அதிபர் விசாரணை முடிவடைய முன்னர் எந்த வேளையிலும் எதிரிக்கு அல்லது எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்த குற்றச்சாட்டுப் பத்திரத்தை மீளப்பெறமுடியும் என்பதுடன் திருத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரத்தை நீதிமன்றில் தாக்கல் செய்யவும் முடியும் ஆனால் இந்த வழக்கில் முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேலுப்பிள்ளை பிரபாகரனும், பொட்டு அம்மானும் யுத்தத்தில் மரணமடைந்துவிட்டதை ஒப்புறுதிப்படுத்த அரச தரப்பு மரண சான்றிதழைத் தாக்கல் செய்யாமல் அரச புலனாய்வுத்துறை பணிப்பாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணத்தைத் தாக்கல் செய்வது சட்டரீதியற்ற செயல்பாடாகும்

இந்த சட்டரீதியற்ற செயல்பாட்டை நீதிமன்றம் அங்கீகரிக்குமாயின் இச்செற்பாடு ஒரு தவறான முன்னுதாரணமாக மாறிவிடும் என எனது ஆட்சேபணையை முன்வைத்த பொழுது எனது ஆட்சேபனைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்ன என்னைப் பார்த்து நீர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் பொட்டம்மானுக்கும் ஆஜராகின்றீரா? என்ற கேள்வியை முன்வைத்தார்.

நான் நீதிமன்றிடம் இந்த வழக்கின் முதலாவது எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமோ இரண்டாவது எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் பொட்டு அம்மானிடமிருந்தோ எந்த விதமான அறிவுறுத்தலும் எனக்கு கிடைக்கவில்லை. நான் 6வது எதிரியாகி இசிதோர் ஆரோக்கியநாதனுக்கு மட்டுமே இந்த வழக்கில் ஆஜராகின்ற போதிலும் நீதியிலுள்ள அக்கறை காரணமாகவும் சட்டத்திலுள்ள விடயங்கள் நீதிமன்றத்தால் கடைப்பிடிக்கப்படவேண்டிய விடயத்தையே ஒரு சட்டத்தரணி என்ற முறையில் நீதிமன்றத்துக்கு எடுத்துரைக்கவேண்டிய கடப்பாடு உள்ளதனாலேயே எனது ஆட்சேபனையை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தேன் என எனது சமர்ப்பணத்தை முடித்த பின்னர்

மேல்நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க எனது ஆட்சேபனையை நிராகரித்து பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்னாவினால் சமர்பிக்கப்பட்ட மரணத்தை

அத்தாட்சிப்படுத்த மேஜர் ஜெனரல் கபில ஹென்னவிதாரணவினால் வழங்கப்பட்ட சட்டவலுவற்ற ஆவணத்தை மரண சான்றிதழுக்கு பதிலாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு இந்த வழக்கின் முத்தையா சகாதேவன். இசிதோர் ஆரோக்கியநாதன் ஆகிய இருகைதிகளுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை 2009ம் ஆண்டு ஆவணி மாதத்துக்கு ஒத்திவைத்தது.

2009ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாவது எதிரியான முத்தையா சகாதேவன். இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதன் ஆகிய இருவருக்கும் எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரத்தில் அரச சாட்சிகளாக 28 சாட்சியங்களின் பெயர்கள் குறிப்பிப்பட்டிருந்த போதிலும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்ன பிரதான சாட்சியங்களான அஜித் விக்கிரமசிங்க, நிரோசன் மனதுங்க ஆகியோரது சாட்சியங்களை மட்டுமே நெறிப்படுத்தினார்.

## அஜித் விக்கிரமசிங்க – சாட்சியம்

தமது சாட்சியத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியதாவது, தான் தனது வீட்டிலிருக்கும் பொழுது 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி இரவு 11 மணியளவில் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் வீட்டில் வைத்து கதிர்காமரைக் கொலைசெய்ய முயற்சி நடந்ததாக தனக்கு தொலைபேசி மூலம் தகவல் கிடைத்ததாகவும், தான் 11.30 மணியளவில் சம்பவம் நடந்த கதிர்காமரின் இலக்கம் 36, புல்லஸ் லேனிலுள்ள வீட்டுக்குவந்து விசாரணை ஆரம்பித்ததாகவும் பின்னர் கதிர்காமர் வீட்டுக்கு அருகில் உள்ள தளையசிங்கம் என்பவருக்குச் சொந்தமான இலக்கம் 42, புல்லஸ் லேன் வீட்டில் முதலாம் மாடியிலிருந்துதான் கதிர்காமரை நோக்கித் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையடுத்துத் தானும் தனது சக பொலிஸ் உத்தியோகத்தர்களும் 42ம் இலக்கத்திலுள்ள தளையசிங்கத்தின் வீட்டை இரவு 11.45 மணியளவில் சோதனையிட்டதாகவும் அந்த வீட்டின் மேல் மாடியிலுள்ள குளியல் அறையில் இருந்து கதிர்காமரை கொலை செய்வதற்குப் பாவிக்கப்பட்ட உபகரணங்கள் வீட்டின் பின்புறமாக வீட்டின் வெளிப்பகுதியில் வீசப்பட்டிருந்த இயந்திரத் துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள் போன்றவற்றைக் கண்டெடுத்ததாகவும் தளையசிங்கத்தின் 42ம் இலக்கத்தைக் கொண்ட முதலாம் மாடியிலிருந்து குளியல் அறையின் யன்னனல் ஊடாகவே தனது வீட்டின் உள்ள நீச்சல் தடாகத்தில் நீராடிவிட்டு வெளியேறிய கதிர்காமரை நோக்கி துப்பாக்கிதாரர்கள் சுட்டார்கள் என தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார்.

## குறுக்கு விசாரணை

இந்த சாட்சியத்தை நான் குறுக்கு விசாரணை செய்தபொழுது, இந்த சாட்சி கடந்த 8 தினங்களாக 100 பக்கத்துக்கும் மேற்பட்ட சாட்சியத்தினை இந்நீதிமன்றிற்கு அளித்துள்ள போதிலும் இந்த சம்பவத்தின் மூன்று தினங்களுக்குப் பின்னர் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு அதாவது 15-08-2005 அன்று இக்கொலை விசாரணை சம்பந்தமாக இவரால் கொடுக்கப்பட்ட அறிக்கை இரண்டு பக்கம் மட்டுமேயுள்ளது.

மேலும் சம்பவம் நடந்த இடம் கதிர்காமருக்குச் சொந்தமான புல்லஸ்லேன் 36ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. அதன் அருகாமையில் அடுத்த காணியிலே சூடு நடந்ததாகக் கூறப்படும் தளையசிங்கத்துக்குச் சொந்தமான 42ம் இலக்க வீடு அமைந்துள்ளது. மேலும் இந்த இரண்டு வீட்டிற்கும் இடைப்பட உள்ள ஒழுங்கையில் (Lane) 16 வீடுகள் அமைந்துள்ளன. ஆனால் சாட்சி 5 வீடுகள் மட்டுமே அமைந்துள்ளன எனக் கூறியுள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் கொலையாளி தப்பிச் செல்வது சுலபமான விடயமல்ல. அத்துடன் இந்தப்பகுதி மிகவும் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியாகும். இந்த சாட்சியத்தின்படி கொலை சம்பவம் நடந்து இரண்டு மணித்தியாலயங்களுக்கு பிறகே சந்தேகத்துக்குட்பட்ட 42ம் இலக்க தளையசிங்கத்தின் வீட்டுக்கு பொலிசார் சென்றுள்ளார். இந்த இரண்டு வீட்டுக்கும் உள்ள இடைவெளி 13 அடிகூட இல்லை. மேலும் கதிர்காமரின் பாதுகாப்புக்காக 50 க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் 20ற்கு மேற்பட்ட பொலிசாரும் சம்பவம் நடந்த இடத்திலேயே அந்த நேரத்தில் இருந்துள்ளனர். இருந்தும் இந்த சாட்சி மேலும் சில பொலிசாருடன் 11.40 மணியளவில்தான் முதன் முதலாக தளையசிங்கத்தின் வீட்டுக்கு விசாரணைக்காகச் சென்றுள்ளார். இந்தப் பொலிஸ் அத்தியட்சகரின் சாட்சி சம்பவம் நடந்த இடத்துக்கு வரும் வரையில் எந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தரும் இல 42ல் அமைந்துள்ள வீட்டுக்குவிசாரணக்கு செல்லவில்லை என்பதை இந்த சாட்சியே ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் இந்தச் சம்பவம் நடைபெற்றபோது பொலிசார் சம்பவம் நடந்த சில மணித்தியாலத்துக்கு பிறகே தனது வீட்டுக்குவந்ததாக தளையசிங்கம் நீதவான் நீதிமன்ற விசாரணையில் கூறியுள்ளார்.

மேலும் என்னால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபொழுது சாட்சி நீதிமன்றத்தில் கூறியதாவது தளையசிங்கத்தின் வீட்டின் முன்பகுதி மதில் ஐந்து அடி உயரமெனவும், தான் பிரதான கதவைத் தட்டியதாகவும் ஒருவரும் வெளியே வராத படியால் அந்த ஐந்தடி மதில் மீது ஏறிப்பாய்ந்து உட்சென்றதாகவும் அதன்பின்னர் தூக்கக் கலக்கத்தில் இருந்த தளையசிங்கம் தங்களை உள்ளே அழைத்துச் சென்றதாகவும் சாட்சி குறிப்பிட்டார்.

ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக ஏற்றுக்கொள்ள முடியாத விடயமென்பது மிகத் தெளிவாகத் தெரியவரும் கதிர்காமரின் வீடு சுற்றிவர 30 அடிக்குமேல் உயரமுள்ள சுவர்களைக் கொண்டிருந்ததோடு ஏறத்தாழ தளையசிங்கத்தின் வீட்டுச் சுவர்களும் 30அடி வரை உயரமாக அமைந்துள்ளது. எனவே தளையசிங்கத்துக்கு சொந்தமான புல்லர்ஸ்லேனில் அமைந்துள்ள 42ம் இலக்க வீட்டின் மேல் மாடியிலிருந்து கதிர்காமரை நோக்கி துப்பாக்கியால் சுடுவது சாத்தியமான விடயமல்ல. நான் மேலும் நீதிமன்றிற்குத் தெரிவித்ததாவது

## விசாரணைக்கு முன் பார்வையிட வேண்டும்

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மிக அண்மையிலேயே நடத்தப்பட்டிருக்க வேண்டுமெனவும் எனவே இதன் உண்மைத்தன்மையை அறிந்துகொள்வதற்கு இந்த நீதிமன்றம் கொலைச்சம்பவம் நடந்ததாகக் கூறும் கதிர்காமருக்குச் சொந்தமான புல்லஸ்லேன் 36ம் இலக்க வீட்டையும் தளையசிங்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் புல்லஸ்லேன் 42ம் இலக்க வீட்டையும் அடுத்த விசாரணைக்கு

முன் பார்வையிடவேண்டும் எனவும் அவ்வாறு இந்த நீதிமன்றம் சம்பவம் நடந்தாகக் கூறப்படும் இடத்தைப் பார்வையிட்டால் இந்த வழக்கினைக் கொண்டுசெல்ல சுலபமாக இருப்பதுமட்டுமின்றி சம்பவத்தினதும் சாட்சியினதும் உண்மைத்தன்மையும் வெளிப்பட வாய்ப்புண்டு. என நான் நீதிமன்றின் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி கொலைச்சம்பவம் நடந்ததாகக் கூறும் கதிர்காமருக்குச் சொந்தமான புல்லஸ்லேன் 36ம் இலக்க வீட்டையும் தளையசிங்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் புல்லஸ் லேன் 42ம் இலக்க வீட்டையும் பார்வையிட நாள் குறிக்கப்பட்டு கொலைச் சம்பவம் நடைபெற்ற இடமும் அதனை அண்மித்த இடங்களும் பார்வையிடப்பட்டன.

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

அரச தரப்பில் பிரதான சாட்சியங்களை நெறிப்படுத்தியதில் கதிர்காமரை கொலை செய்ய இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது என்பது மட்டுமே சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டது மட்டுமேயன்றி குற்றம் சாட்டப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக எந்தச் சாட்சியமும் முன்வைக்கப்படாத நிலையில் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட சகாதேவனும் ஆரோக்கிய நாதனும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பில் வழங்கியதாக கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டுவர உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வழக்கின் முதலாம் எதிரியான முத்தையா சகாதேவனால் பயங்கரவாத தடைப்பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மை தொடர்பிலான விசாரணையில் அரசதரப்பின் சாட்சியங்களும் எதிரி தரப்பு சாட்சியங்களும் விசாரித்து நிறைவடைந்ததையடுத்து முதலாம் எதிரியான முத்தையா சகாதேவனால் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதாக மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிமசிங்க கட்டளை வழங்கியதையடுத்து அந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் முதலாம் எதிரியான முத்தையா சகாதேவனுக்கு எதிரான அரச தரப்பிற்கு ஆதரவான சான்றாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

## ஆரோக்கியநாதனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிமசிங்க பதவி உயர்வு பெற்றதையடுத்து இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கிய நாதனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேயகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அரச தரப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த உதவிப் பொலிஸ் அதிகாரி ஜே.ஆர். ஜயவர்த்தன, மொழி பெயர்ப்பாளராகச் செயல்பட்ட உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட, சட்ட வைத்திய அதிகாரி எச்.பி. விஜயவர்த்தன, தட்டெழுத்தாளர் ஆகியோர் பிரதி மன்றாடியார் நாயகம் கபில வைத்தியரட்னவின் நெறிப்படுத்தலில் சாட்சியமளித்தனர்.

2ம் எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதன் சார்பில் இசிதோர் ஆரோக்கியநாதனின் சாட்சியமும் இசிதோர் ஆரோக்கியநாதன் தடுப்புக்காவலிலிருந்த காலத்தில் பொலிசாரின் கொடூரமான தாக்குதல்களால் உடலில் ஏற்படுத்தப்பட்ட காயங்களை ஒப்புறுதிப்படுத்துவதற்காக எதிரிதரப்பால் சாட்சியம் அளிப்பதற்கு அழைக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரி சமீர குணவர்தனவின் சாட்சியமும் நெறிப்படுத்தப்பட்டது

## வைத்திய அதிகாரி எச்.பி. விஜயவர்த்தன

இந்த வழக்கில் 2ம் எதிரியான இசிதோர் ஆரோக்கிய நாதன் வழக்கு விசாரணையில் அரச சாட்சியாக சாட்சியம் அளிக்க அரச தரப்பால் அழைக்கப்பட்ட உதவிச் சட்ட வைத்திய அதிகாரி எச்.பி. விஜயவர்த்தனவின் சாட்சியத்தை அரச சட்டத்தரணி நெறிப்படுத்திய போது கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் சாந்த 2005ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி 2ஆம் எதிரியான ஆரோக்கியநாதனை தன்முன்னிலையில் வைத்திய பரிசோதனைக்கு முன்னிலைப் படுத்தியதாகவும் தான் எதிரியிடம் வினவியபொழுது பொலிசார் பொல்லினால் தன்னை தாக்கியதாக எதிரி கூறியதாகவும் ஆனால் தான் எதிரியை உடல் பரிசோதனை செய்தபொழுது எதிரியின் உடலில் பொலிசார் தாக்கியதற்கான எந்தக் காயங்களோ அல்லது தளும்புகளோ காணப்படவில்லையென்றும் சட்ட வைத்திய அதிகாரி சாட்சியமளித்ததையடுத்து அரச சட்டத்தரணி சட்ட வைத்திய அறிக்கையை நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் 2ம் எதிரியின் சார்பில் ஆஜரான நான் எதிரியின் சார்பில் சட்ட வைத்திய அதிகாரியை குறுக்கு விசாரணை செய்கையில், நீர் அரச சட்டத்தரணியின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது நீர் எதிரியை உடல் பரிசோதனை செய்த பொழுது எதிரியின் உடலில் பொலிசார் தாக்கியதற்கான எந்தக் காயங்களோ அல்லது தளும்புகளோ காணப்படவில்லையென சாட்சியமளித்துள்ளீர், ஆனால் 2005ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் சாந்த இந்த எதிரியை வைத்திய பரிசோதனைக்காக உமக்கு முன்னிலைப்படுத்திய பொழுது தடிகளாலும் கேபல் வயர்களாலும் இரும்பு கம்பிகளினாலும் தாக்கி பொலிசார் எதிரியை சித்திவதை புரிந்ததால் இந்த எதிரியின் உடலில் 13 தளும்புகள் காணப்பட்டன, ஆனால் உண்மையை மறைத்து பொலிஸ் சார்பாக சாட்சியமளிக்கும் நோக்கில் உண்மைக்கு மாறாக சட்ட வைத்திய அறிக்கையையும் தயாரித்தது மட்டுமின்றி பொய்ச் சாட்சியமும் அளித்துள்ளீர் என சாட்சியைப் பார்த்து கூறியபொழுது

## வைத்திய அதிகாரிக்கு மார்புவலி

அரச சாட்சியான சட்ட வைத்திய அதிகாரி தனக்கு மார்புவலி ஏற்படுவதாக நீதிமன்றில் தெரிவித்தபோது நான் சாட்சியை நோக்கி கௌரவமான வைத்தியத் தொழில் புரியும் நீர் சத்தியப்பிரமாணம் செய்து நீதிமன்றில் அரசுக்கு சார்பாக உண்மையை மறைத்து பொய்ச் சாட்சியம் அளித்தால் நெஞ்சு வலி வரத்தான் செய்யும் எனக் கூறிய பொழுது எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரியை கேள்விக்குட்படுத்துகின்றீர் என மேல் நீதிமன்ற நீதிபதி கேள்வி எழுப்பிய வேளையில் எனது மேலதிக வாதத்தில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்ததாவது, சட்டமா அதிபரினால் இந்த வழக்கு 2008ம் ஆண்டு

இந்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் எதிரி தரப்பில் ஆஜராகிய நான் இந்த வழக்கின் 2ம் எதிரியாகிய இசிதோர் ஆரோக்கியநாதனை சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர்படுத்தி வைத்திய அறிக்கையை கோரும்படி இந்த நீதிமன்றில் விண்ணப்பித்தேன் எனது வேண்டுகோளையடுத்து நீதிமன்றம் 2ம் எதிரியை சட்ட வைத்திய அதிகாரிமுன் கொண்டுசென்று சட்டவைத்திய அறிக்கையை பெறும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்ததையடுத்து இந்த வழக்கின் 2ம் எதிரி சட்ட வைத்திய அதிகாரி சமீர குணவர்த்தன முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

## 23 காயத் தளும்புகள்

வைத்திய பரிசோதனையின் பின்னர் உதவி சட்ட வைத்திய அதிகாரியினால் இந்த நீதிமன்றிற்கு அனுப்பப்பட்டுள்ள சட்ட வைத்திய அறிக்கையில் எதிரியின் உடலில் 23 காயத் தளும்புகள் உள்ளன என்பதுடன் இந்த காயத் தளும்புகளில் பொலிசார் பொல்லுகளாலும் கேபல் வயர்களாலும் இரும்பு கம்பிகளினாலும் தாக்கியதால் 13 காயத் தளும்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த காயத்தளும்புகள் எதிரி பொலிசாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைத்து விசாரித்த காலத்திலேயே ஏற்பட்டுள்ளது எனவும் மேலும் 2000ம் ஆண்டு எதிரி சத்திர சிகிச்சைக்கு உட்பட்டதனால் உடலில் 10 தளும்புகள் உள்ளதாகவும் மொத்தமாக எதிரியின் உடலில் 23 காயத் தளும்புகள் உள்ளன என்பதனையும் சட்டவைத்திய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும் இந்த நீதிமன்றின் கட்டளையின் பிரகாரம் எதிரியை வைத்திய பரிசோதனை செய்து இந்த நீதிமன்றிற்கு சட்ட வைத்திய அதிகாரி சமீர குணவர்த்தனவினால் அனுப்பப்பட்ட சட்ட வைத்திய அறிக்கை இந்த வழக்குக் கோவையில் உள்வாங்கப்பட்டுள்ளது ஆனால் அரச தரப்பில் சாட்சியமளிக்கும் வைத்திய அதிகாரி எச்.பி. விஜயவர்த்தன சட்ட வைத்திய அறிக்கையில் எதிரியின் உடலில் எந்த விதமான காயத் தளும்புகளும் உள்ளதாக குறிப்பிடவில்லை பொலிசார் தாக்கியதால் எதிரியின் உடலில் நிரந்தரமாக ஏற்பட்டுள்ள காயத்தளும்புகளை இன்றும் இந்த நீதிமன்றம் பார்வையிடலாம் என எனது வாதத்தை முன்வைத்தேன்.

## பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் ஒரே நேரத்தில் இரண்டு வாக்குமூலம் பதிவுசெய்தது எப்படி?

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி மதியம் 14.30 மணிக்கு பதியப்பட்டதாகவும் பதியும் பொழுது பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளராகச் செயல்பட்டதாகவும் அரச தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன.

குறுக்கு விசாரணையில், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி மதியம் 14.30 மணிக்கு பதியப்பட்டதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும்

பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதனும் தட்டெழுத்தாளரும் சாட்சியமளித்தனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படும் பொழுது பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி மதியம் 14.30 மணிக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டாரென அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் உண்மைக்கு புறப்பானவை என நீதிமன்றில் சாட்சியங்கள் மூலமும் ஆவணங்கள் மூலமும் எனது வாதத்தில் முன்வைக்கப்பட்டது.

## நகுலா பத்மநாதனின் வாக்குமூலம்

எதிரி தரப்பால் நீதிமன்றில் சமர்ப்பித்த ஆவணத்தில் குற்ற ஒப்பதல் வாக்குமூலம் பதியப்பட்டதாக அரசதரப்பால் கூறப்படும் அதேநாளில் அதே நேரத்தில் அதாவது 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி மதியம் 14.30 மணிக்கு நகுலா பத்மநாதன் என்ற வேறு ஒரு கைதியின் வாக்கு மூலத்தை பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் பதிவு செய்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தை நீதிமன்றில் சமர்பித்ததுடன் ஒரேநாளில் ஒரே நேரத்தில் இருவேறு கைதிகளின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய முடியாதென்பதால் பொலிஸ் பரிசோதகர். இரங்கநாதனின் சாட்சியம் உண்மைக்கு புறம்பானதென்பதாலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படும் பொழுது பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டார் என நீதிமன்றிற்கு வழங்கிய சாட்சியம் உண்மைக்கு புறம்பானது மட்டுமின்றி நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்பாடாகும் என்பதனையும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்தேன்.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு

முதலாம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பாலித பெர்னான்டாவினது சாட்சியத்தினைத் தொடர்ந்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அத்தியட்சகராகயிருந்து விசாரணைகளை நடாத்திய சரத் லூகொட தனது சாட்சியத்தில் இரண்டாம் எதிரியான ஆரோக்கியநாதனை 2005ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஒரு மணி முப்பது நிமிடமளவில் கைது செய்ததாக சாட்சியம் அளித்திருந்தார். ஆனாலும் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதியே கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசாரினால் கடத்திச் செல்லப்பட்டு கொம்பனித்தெரு இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள இரகசிய இடமொன்றுக்கு கொண்டுசென்று மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் எனஅதனை ஆரோக்கியநாதனின் மனைவி பொலிசார் கைது செய்ததாகக் கூறும் ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி காலையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

## ஆட்கொணர்வு மனு

மேலும் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதியே பொலிசார் தன்னை கடத்திக் கொண்டுசென்று சித்திவதை செய்தனர் என ஆரோக்கியநாதன் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்த பிரதியும் ஆட்கொணர்வு மனுவின் பிரதியும் நீதிமன்றத்திற்கு

சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கிய நாதனுக்கு எதிராக மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேயகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததையடுத்து.

## அரச சட்டத்தரணி நவாவி தனது சமர்ப்பணத்தில்

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட இந்த வழக்கின் இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதன் 2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ம்திகதி பொலிசாரின் எந்த விதமான சித்திரவதையும் அச்சுறுதலும் இல்லாமல் சுய விருப்பத்திலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே ஆர். ஜயவர்தனவிற்கு வழங்கியுள்ளார் என அரச சட்டத்தரணி தனது வாதத்தை முன்வைத்தபோது

## 2ம் எதிரி சார்பில் எனது சமர்ப்பணத்தில்

இந்த வழக்கின். இரண்டாம் எதிரி தனது சாட்சியத்தில் தான் சுய விருப்பத்தில் எந்த வாக்குமூலமும் உதவிப் பொலிஸ் அத்தயட்சகருக்கு வழங்கவில்லையெனவும் தன்னை கைது செய்த தினத்திலிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இடும்வரை பொலிசார் சித்தரவதை செய்ததாகவும் தனது உடலில் சித்திரவதையினால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை நீதிமன்றம் அனுமதித்தால் நீதிமன்றிற்கு காட்டமுடியும் எனவும் சாட்சியமளித்தார். சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தை நான் குறுக்கு விசாரணை செய்கையில் சட்ட வைத்திய அதிகாரி இரண்டாம் எதிரியின் உடலில் சித்திவதையால் ஏற்பட்ட கடும் காயங்கள் இரண்டாம் எதிரி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்களென தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுளார் இதன் மூலம் சித்திரவதை செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன் மேலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படும் பொழுது: பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி மதியம் 14.30 மணிக்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் இரண்டாம் எதிரிக்கும் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டார் என அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் உண்மைக்கு புறப்பானவை என நீதிமன்றில் சாட்சியங்கள் மூலமும் ஆவணங்கள் மூலமும் எதிரிதரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதாடியதுடன்

எதிரிதரப்பால் நீதிமன்றில் சமர்பித்த ஆவணத்தில் குற்ற ஒப்பதல் வாக்குமூலம் பதியப்பட்டதாக அரசதரப்பால் கூறப்படும் அதே நாளில் அதே நேரத்தில நகுலா பத்மநாதன் என்ற வேறு ஒரு கைதியின் வாக்குமூலத்தை பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதன் பதிவு செய்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தை நீதிமன்றில் சமர்ப்பித்ததுடன் ஒரேநாளில் ஒரே நேரத்தில் இருவேறு கைதிகளின் வாக்கு மூலங்களை பதிவு செய்ய முடியாதென்பதால் பொலிஸ் பரிசோதகர் இரங்கநாதனின் சாட்சியம் உண்மைக்கு புறப்பானதென்பதாலும் எதிரியின் உடலில் பொலிசாரினால் சித்திரவதை செய்தமைக்கான காயங்கள் சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாலும் குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டதல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால்

குற்றஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிக்கும்படி வாதாடப்பட்டது. இரு தரப்பினரதும் வாத பிரதிவாதங்களையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபயகோன் தனது கட்டளையில் எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்படவில்லையென அரச தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

## 12 அல்ல 24 வருடங்கள் சிறையிருக்க நேர்ந்தாலும் தவராசாவே எனது சட்டத்தரணி

இடைப்பட்ட காலத்தில் நான் சிங்கப்பூரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கின்றது. அப்போது ஆரோக்கிய நாதனைப் பார்த்து நீதிபதி "உமக்கு வேறு ஒரு சட்டத்தரணியை வைத்துக்கொள்ளும்" என்ற போது அவர் "எனது சட்டத்தரணி தவராசாவேதான், 12 அல்ல 24 வருடங்கள் சிறையில் இருக்க நேர்ந்தாலும் பரவாயில்லை, அவர் சுகம்பெற்று வந்து எனக்காக வாதாடி விடுதலை பெற்றுத் தருவார்" என்று உறுதியாகக் கூறியதை நீதிபதி பின்னொருநாளில் என்னிடம் விதந்து கூறினார்.



ஆரோக்கிய நாதனின் நம்பிக்கை வீண்போகவில்லை. விரைவாகவே நான் குணமடைந்து வந்து அவருக்காக ஆஜராகினேன். இறுதியில் அவரும் 2018ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் விடுதலையாகினார்.



# ஞானகோன் கைதும் விடுதலையும்

2005

*(I had been treated very fairly but I was under tremendous mental pressure underwent mentel toture)*

1993ஆம் ஆண்டு 12 வருடங்களுக்கு முன்னர் தனது குடும்பத்தாருடன் அவுஸ்திரேலியாவிற்குக் குடிபெயர்ந்த கப்பலோட்டும் சாள்ஸ் செல்வகுமார் ஞானக்கோன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமாரின் நண்பராவார். தெஹிவளை இலக்கம் 36, நிக்காபே வீதியில் அமைந்திருந்த குடிமனையில் அவுஸ்திரேலிய பிரஜையான அரசசார்பற்ற அமைப்பைச் சார்ந்த கார்தசியன் ஸ்டோக் (*Carcasian Stock*) என்பவருடன் வசித்து வந்ததுடன் அவர் அம்பாந்தோட்டையில் அரசசார்பற்ற அமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

லக்ஸ்மன் கதிர்காமர் கொலைச் சம்பவத்தில் தொடர்புபட்ட புலி உறுப்பினர்கள் தங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து இராணுவத்தினர் 2005.10.05 திகதி அந்த வீட்டை சுற்றிவளைத்து அங்கு தங்கியிருந்த *Carcasian Stock*யிடம் சில கேள்விகளைக் கேட்டதுடன் கதிர்காமரின் நெருங்கிய நண்பரான அவுஸ்திரேலிய பிரஜையான சாள்ஸ் செல்வகுமார் ஞானக்கோனை அந்த வீட்டிலிருந்து கைது செய்து தெஹிவளை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

## கதிர்காமர் கொலை செய்யப்படமாட்டார்

'ஞானக்கோன் கதிர்காமருடன் நண்பராகி அவர் கொலை செய்யப்படமாட்டாரென அவருக்கு உறுதியளித்து, அவரது பாதுகாப்பை தளர்த்துவதற்குத் தூண்டினாரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்' என்று இலங்கை ஊடகங்கள் அறிக்கையிட்டன. ஞானக்கோனை கைது செய்த தெஹிவளை பொலிசார் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு குற்றப் புலனாய்வுப் பொலிசார் விசாரணை நடாத்திய பின்னர் இறுதியாக பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவிடம் கையளித்து விசாரணைகள் நடாத்தப்பட்டன.

## கதிர்காமர் எனது நெருங்கிய நண்பன்



கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரது விசாரணையின் போது ஞானக்கோன் தனது வாக்கு மூலத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தனது நெருங்கிய நண்பரெனவும் தனக்கும் புலிகளுக்குமிடையே எந்தத் தொடர்பும் இல்லையெனவும் ஆனால் தான் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவரெனவும் தெரிவித்திருந்ததோடு தான் கதிர்காமரின் நண்பர் என்பதற்காக புலிகள் தமக்கு ஒரு அச்சுறுத்தலும் விடவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் பாதுகாப்புச் செயலாளரிடம் இருந்து 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை நடாத்த தடுப்புக் காவல் உத்தரவை பெற்றிருந்த நிலையில் 2005.10.24ஆம் திகதி முதல் அறிக்கை ஒன்றினை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீரவர்த்தன முன்னிலையில் தாக்கல் செய்திருந்தனர்.

இராணுவத்துக்கு கிடைக்கப் பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையிலேயே அவுஸ்திரேலிய பிரஜையான ஞானக்கோனை கைது செய்ததாகவும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகள் நடைபெறுவதாகவும் அவுஸ்திரேலிய பிரஜையான ஞானக்கோனின் கடவுச் சீட்டை நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## ஆட்கொணர்வு மறுதாக்கல்

கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஞானக்கோன் விரைவாக விடுதலையாகும் சூழ்நிலை காணப்படாததினால் மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுவொன்று சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் ஞானக்கோன் கடும் சுகவீனத்துக்கு ஆளான நிலையில் நவலோக வைத்தியசாலை அவசரச் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

2005.12.19ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது கதிர்காமர் கொலையில் மனுதாரரான ஞானக்கோனுக்கு எதிராக எந்தச் சான்றும் அரச தரப்பினரால் முன்வைக்கப்படாத நிலையில் ஞானக்கோன் விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட ஞானக்கோன் ஊடகவியலாளர்களிடம் *(I had been treated very fairly but I was under tremendous mental preasure under went mentel toture)* எந்தக் குற்றமும் புரியாத தன்னை 55 நாட்கள் தடுத்து வைத்தனர். விசாரணை மேற்கொண்ட பொலிசார் தன்னை மனதாபிமானத்தோடு நடாத்திய போதிலும் உளவியல் ரீதியான சித்திரவதைக்கும் தாக்கத்துக்கும் உள்ளாக்கினர், புலிகளுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாத எனது விடயத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கம் அக்கறை எடுத்திருந்தால் நான் முன்னரே விடுதலையாகியிருக்கலாம்” எனக் குறிப்பிட்டார்.

# மேஜர் துவான் நிஸாம் முத்தலிப், மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க கொலை முயற்சி

2006 – 2017

14

2006ம் ஆண்டு வைகாசி மாதம் பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரான வாசுகோபால், 2005ம் ஆண்டு இலங்கைத் தரைப்படையை சேர்ந்த மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவையும் மேஜர் முத்தலிபையும் குண்டுவைத்துக் கொலை செய்யச் சதித்திட்டமிட்டதாக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் 2009ம் ஆண்டு கொழும்பு விசேட மேல் நீதிமன்றிலும் T56 தன்னியக்க ஆயுதத்தை உடமையில் மறைத்து வைத்திருந்ததாக நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் ஒரு வழக்குமாக மூன்று வழக்குகளைத் தாக்கல் செயயப்பட்டன.

## சாட்சியங்களின் முரண்பாடும் விடுதலையும்

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கினால் ஏற்படும் சட்ட விளைவுகளை தான் விளங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார். மேலும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் எதிரி மிகக் கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையினால் ஏற்பட்ட பல காயவடுக்கல் சட்ட வைத்திய அதிகாரியின் சட்ட வைத்திய அறிக்கையிலும் சாட்சியத்திலும் உறுதிப்படுத்தப்பட்டன. எதிரி இந்த நீதிமன்றில் சாட்சியம் வழங்கிய பொழுது பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் தன்னை சித்திரவதைப்படுத்தி வாக்கு மூலத்தை பெற்றுக் கொண்டார்கள் என்பதுடன் தனது சொந்த விருப்பத்தில் தான் எந்த வாக்கு மூலமும் பொலிசாருக்கு வழங்கவில்லையென சாட்சியம் அளித்துள்ளார். சிரேஷ்ட அரச சட்டத்தரணி எதிரியை நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்த போதிலும் எதிரியின் சாட்சியத்தின் நிலைப்பாட்டில் எந்த முரண்பாட்டையும் அரச தரப்பால் முன்வைக்க முடியவில்லை. எனவே அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதபிரதிவாதத்தை செவிமடுத்த நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாகப் பெறப்படவில்லை என கட்டளையிட்டு குற்ற ஒப்புதல்



வாக்குமூலத்தை நிராகரித்து கட்டளையிட்டார். மேலும் வேறு சாட்சிகளையும் அரச தரப்பு முன்வைக்கவில்லை எனவே எதிரியை சகல குற்றச் சாட்டுக்களிலிருந்தும் விடுதலை செய்யும்படி எனது வாதம் முன்வைக்கப்பட்டது. அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதப் பிரதிவாதத்தையடுத்து கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க எதிரியை இரண்டு வழக்கிலிருந்தும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## நீர்கொழும்பு மேல் நீதிமன்றில்



அதே நேரம் T56 ரக தன்னியக்க ஆயுதத்தை உடமையில் வைத்திருந்ததாக நீர்கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மற்றுமொரு வழக்கும் போதிய ஆதாரங்களும் சாட்சிகளும் இன்மையாலும் மறைத்து வைத்திருந்ததாகச் சொல்லப்பட்ட தானியங்கித் துப்பாக்கியை மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கத் தவறியதாலும். குற்றச்சாட்டு சந்தேகத்துக்கிடமின்றி அரச தரப்பால் நிரூபிக்கப்படாத காரணத்தாலும் இந்த வழக்கிலிருந்தும் குற்றஞ்சாட்டப்பட்ட கைதி வாசுகோபால் தஜருபனை விடுவிக்கும் படி எனது சமர்ப்பணத்தில் முன் வைத்தேன். இங்கும் அரச தரப்பு சாட்சிகளுக்கிடையே இருந்த முரண்பாடுகள் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இறுதியில் 12 வருடங்களின் பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதியினால் வாசுகோபால் தஜருபன் விடுதலை செய்யப்பட்டார். அவரை அழைத்துச் செல்ல அவரது உறவினர்கள் ஆர்வத்தோடு வந்திருந்தார்கள்.

# காலி கடற்படை முகாம் தாக்குதல் வழக்கு

2006 – 2022

15

## குற்றச்சாட்டு பத்திரம்

காலி தெற்கு கடற்படை முகாம் தாக்குதல் சம்பவத்தின் விசாரணைகளின் பின்னர் 2006ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ம் திகதி காலி தெற்கு கடற்படை முகாமைத் தாக்கி கடற்படையை சேர்ந்த கனக சுரங்கவுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் 22 பேருக்கு கடும் காயங்களை ஏற்படுத்திக் கொலை செய்வதற்கு எத்தனித்ததாக 23 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கந்தையா இளங்கோ, நிசாந்த எதிரிசிங்க, குணரத்ன கஜவீர, வைரமுத்து சரோஜா, மற்றும் பந்துல கவீர குணரத்ண ஆகிய ஐந்து சந்தேக நபர்களாலும் சுய விருப்பில் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும் 77 சாட்சிகளும் 27 தடயப்பொருட்களும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் அரச தரப்பு சான்றாகப் பெயரிடப்பட்டு காலி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

2012ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் முதலாம் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கந்தையா இளங்கோவினால் சுயவிருப்பில் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்ட குற்ற ஒப்பதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணையில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி அரசதரப்பு சாட்சியாளர்களின் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

பயங்கரவாதத் தடைப்பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு இந்த வழக்கின் முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் தொடர்பிலான விசாரணையில் அரச தரப்பில் அரச சாட்சிகள் சாட்சியமளித்ததை தொடர்ந்து எதிரி தரப்பில் அரச சாட்சியங்களை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் முதலாம்

எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்ட கந்தையா இளங்கோ சாட்சியமளித்ததையடுத்து அரசதரப்பின் சாட்சியங்களும் முதலாம் எதிரி தரப்பு சாட்சியங்களும் விசாரித்து நிறைவடைந்தது.

## அரச சிரேஷ்ட சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த வழக்கின் முதலாம் எதிரியான கந்தையா இளங்கோ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய செயல்பாட்டாளர் என்பதுடன் எதிரி 1995ம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு வந்து புலித் தலைமையகத்தின் கட்டளையின் பிரகாரம் விடுதலைப் புலிகளால் இராணுவத்துக்கு எதிராக மேற்கொண்ட பல தாக்குதலில் முக்கிய பங்கு வகித்ததுடன் அரச படைகளுக்கு எதிராக யுத்தக் களத்தில் தாக்குதல்களை நடாத்திய போது கண்ணிவெடியில் சிக்கியே இந்த எதிரி ஒரு காலை இழந்ததுள்ளார் மேலும்

எதிரியின் உடலில் உள்ள காயங்கள் ஆயுதப் பயிற்சியினாலும் ஆயுதப் போராட்டத்திலும் ஏற்பட்ட காயங்கள் என்பதுடன் பொலிசாரின் எந்த விதமான சித்திரவதையும், அச்சுறுதலும் இல்லாமல் சுய விருப்பத்திலேயே எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார். அரச தரப்பு சான்றாக முன்வைக்கபட்டுள்ள குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக எதிரியினால் வழங்கப்பட்ட வாக்குமூலமாகையால் அந்த வாக்கு மூலத்தை எதிரியினால் சுயமாக வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமென கட்டளையிட்டு அதனை அரச தரப்பு சான்றாக ஏற்கும்படி தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்

## எனது சமர்ப்பணத்தில்

சிரேஷ்ட அரச சட்டத்தரணியின் சமர்ப்பணத்துக்கு நான் கடும் ஆட்சேபணை தெரிவித்து நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ள முடியாததும் சட்டரீதியற்றதுமான அரச சட்டத்தரணியின் வாதத்தை நீதிமன்று நிராகரிக்கும்படி நீதிமன்றை வேண்டிக்கொண்டதோடு, இந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டதா?



இல்லையா என்பதை மட்டுமே தீர்மானிக்க நடைபெறும் விசாரணையாகும். குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியினால் கூறப்பட்டுள்ள வாக்குமூலத்தின் உள்ளடக்கங்களை 'குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்பட்டுள்ளது என நீதிமன்று கட்டளை வழங்கினால் மட்டுமே' அந்த உள்ளடக்கங்களை அரச தரப்பு எதிரிக்கு எதிரான சான்றாக பிரதான வழக்கு விளக்கத்தில் மற்றைய சாட்சியங்களை ஒப்புறுதிப்படுத்த முன்வைக்கலாம். ஆனால் இந்த வழக்கில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி, நீதிமன்றத்தில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை முடிவடைந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு முன்னர் உண்மை விளம்பல் விசாரணையில் எதிரியை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் பதியப்பட்டுள்ள உள்ளடக்கத்தில் உள்ள சில சம்பவங்களின் பதிவுகளை எதிரியிடம் கேள்விகளாக முன்வைத்த பொழுது நான் ஆட்சேபனை தெரிவித்தேன்.

நீதிமன்றத்தில் உண்மை விளம்பல் விசாரணை முடிவடைந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதாக நீதிமன்றம் கட்டளையிட்டால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அடங்கியுள்ள உள்ளடக்கங்களை மற்றைய அரச தரப்பு சுயாதீன சான்றுகளின் மூலம் ஒப்புறுதிப்படுத்தலாம் அல்லது நீதிமன்றம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையில் கட்டளை வழங்கலாம். ஆனால் அரச சட்டத்தரணி உண்மை விளம்பல் விசாரணை முடிவடைந்த நிலையில் தனது சமர்ப்பணத்தில் நடைபெற்றது உண்மை விளம்பல் விசாரணை என்பதனை கவனத்தில் கொள்ளாது முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவினால் வழங்கப்பட்டதாக அரச தரப்பினால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்ட உள்ளடக்கங்களில் ஒரு பகுதியான "எனது உடலில் உள்ள காயங்கள் ஆயுதப் பயிற்சியினாலும் ஆயுதப்போராட்டத்திலும் ஏற்பட்ட காயங்கள் என்பதனையும் மேலும் அரச படைகளுக்கு எதிராக யுத்தக்களத்தில் தாக்குதல்களை நடாத்திய போது கண்ணிவெடியில் சிக்கியே நான் ஒரு காலை இழந்தேன்" என குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் எதிரி கூறியதாக பதியப்பட்டுள்ளதை உண்மை விளம்பல் விசாரணையில் கேள்விகளாக முன்வைத்தமை மட்டுமின்றி தனது சமர்ப்பணத்தில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தமையும் சட்டரீதியற்ற செயல்பாடு மட்டுமின்றி நீதிமன்றினைத் திசை திருப்பும் செயல்பாடாகும்.

உண்மை விளம்பல் விசாரணை பிரதான வழக்கு விசாரணையல்ல என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவருதோடு முதலாம் எதிரி தனது சாட்சியத்தில் தான் சுய விருப்பத்தில் எந்த வாக்குமூலமும் பொலிசாருக்கு வழங்கவில்லையெனச் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 2009ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புப் பொலிசார் தன்னை பூசா முகாமுக்குக் கொண்டு வந்து தடுத்து வைத்து விசாரணை நடாத்திய பொழுது விசாரணையாளரான இம்தியாஸ் தன்னிடம் அரசாங்கம் 12.000 போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கியுள்ளது உமக்கு ஒரு காலும் இல்லை நீ உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் காண்பிக்கும் இடத்தில் கையெழுத்து வைத்தால் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் உனக்கு விடுதலை வாங்கித் தருவார் அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்புவார்கள் எனத் தனக்கு வாக்குறுதி அளித்ததினால்

தன்னை விடுதலை செய்வார்கள் என்ற நம்பிக்கையில் தான் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்து வைக்கும்படி காட்டிய இடத்தில் கையெழுத்து வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

## கன்னிவெடியில் சிக்கி காலை இழந்தேன்

மேலும் முதலாம் எதிரி தனது சாட்சியத்தில் தனக்கு எவ்வாறு உடலில் காயங்கள் ஏற்பட்டன எந்த சூழ்நிலையில் தனது காலை இழக்க நேர்ந்தது என்பதை தனது சாட்சியத்தில் குறிப்பிடும் பொழுது விமான குண்டுத் தாக்குதலிருந்து தப்பிக்க தானும் மக்களுடன் சிதறி ஒடிய பொழுது தான் கண்ணிவெடியில் சிக்கி காலை இழந்ததுடன் உடலில் பல காயங்கள் ஏற்பட்டதாகவும் நூற்றுக்கணக்கான பொது மக்களும் படு காயங்களுக்கு உள்ளானார்கள் எனவும் எதிரி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் எதிரியால் சுய விருப்பில் வழங்கப்பட்டதாக அரச தரப்பினரால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பத்தில் வழங்கப்படவில்லை என்பதுடன் பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் எதிரியை விடுதலை செய்வதாக வாக்குறுதி வழங்கி பெறப்பட்ட வாக்குமூலம் என்பது அரச தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணையிலும் எதிரியின் சாட்சியத்தின் மூலமும் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதே உறுதிப்படுத்தப்பட்ட நிகழ்வு அத்தோடு இந்த வழக்கில் அரச தரப்பால் இரண்டு சட்ட வைத்திய அறிக்கைகளை தாக்கல் செய்து இரண்டு சட்ட வைத்திய அதிகாரிகள் சாட்சியம் அளித்தனர் அந்த சாட்சியங்களிலும் அறிக்கைகளிலும் எதிரியின் கால் அகற்றப்பட்டமை மேலும் பல காயங்கள் எதிரியின் உடலில் உள்ளமை மிக தெளிவாக விபரமாகப் பதியப்பட்டுள்ளன எதிரி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதியில் பொலிசார் தாக்கியதால் ஏற்பட்ட காயங்கள் என எதிரி இந்த நீதிமன்றில் சாட்சியம் அளித்திருக்கலாம் ஆனால் எதிரி தனது சாட்சியத்தில் 1999ம்ஆண்டு புதுக்குடியிருப்பில் விமானப்படைக் குண்டுத்தாக்குதல் நடாத்தியதால் தான் காலை இழந்ததாக நடந்த உண்மைச் சம்பவத்தை இந்த நீதிமன்றில் சாட்சியம் அளித்துள்ளார் என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் எனது சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது.

இரு தரப்பினரதும் வாத பிரதிவாதங்களையடுத்து காலி மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன எதிரிதரப்பின் சட்ட வாதத்தை ஏற்று அரச சான்றாக சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்படவில்லையென அரச தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

4ம் எதிரி இவ்வழக்கில் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்ததை அடுத்து மேல்நீதிமன்றத்தால் 2ம் 3ம் 5ம் எதிரிகளது உண்மை விளம்பல் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2ம் 3ம் 5ம் எதிரிகளது உண்லம விளம்பல் விசாரணைகளின் முடிவுகளுக்காக இந்த வழக்கின் முதலாம் எதிரியாகிய இளங்கோ சிறையிலேயே காத்துக்கிடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எமது வழக்கு விசாரணைகளில் உள்ள சட்ட நடைமுறைகளின் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் வரை இத்தகைய அர்த்தமற்ற காத்திருப்புகள் தவிர்க்கப்பட இயலாதவை.

# ரவிராஜ் சுட்டுக்கொலை

2006 – 2016

16

குமார் பொன்னம்பலத்தினை கொலை செய்த அதே பாணியில் ஏறத்தாழ 15 வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளுக்காக வழக்குக்களில் ஆஜராகிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் – 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ஆம் திகதி காலை 7 மணிக்கும் 8 மணிக்கும்மிடையே “தெரண” தொலைக்காட்சி நேர் காணலில் சிங்கள மொழியில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டு வீடு திரும்பிய பின்னர், நீதிமன்றத்திற்கு வரும் வழியில் அவரது இல்லத்திற்கு சற்றுத் தொலைவில் காலை 8.45 மணியளவில் இராணுவம் பொலிசார் பாதுகாப்பு வழங்கும் அதிபாதுகாப்பு நிறைந்த நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தைக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத துப்பாக்கிதாரிகள் ரவிராஜின் வாகனத்திற்கு மிக அருகில் வந்து ரவிராஜ் மீதும் மெய்ப்பாதுகாவலர்கள் மீதும் சரமாரியாகச் சுட்டிருக்கின்றனர் சம்பவத்தில் படுகாயமடைந்த ரவிராஜ் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் தலைப் பகுதியில் ஏற்பட்ட கடுங்காயம் காரணமாக சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார்.

சம்பவம் நடைபெற்ற தினம் நீர்கொழும்பு நீதிமன்றத்திற்கு சென்று கொண்டிருந்த பொழுது ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியை எனது துணைவியார் தொலைபேசி மூலம் எனக்குத் தெரிவித்தார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதுடன் உடனடியாக கொழும்பு திரும்பினேன். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒரு அறையில் ரவிராஜின் இறந்த உடல் வைக்கப்பட்டிருந்தது. அறையினுள்ளே சென்று ரவிராஜின் இறந்த உடலைப் பார்த்த காட்சி இன்னும் என் மனதைவிட்டு நீங்காத, மறக்கமுடியாத வேதனை நிறைந்த ஒரு சம்பவமாகும்.

இலங்கை சட்டத்தரணிகளின் சங்கத்தில் ரவிராஜ் ஒரு உறுப்பினராகயிருந்த போதிலும் அவரது இறுதிக்கிரியையில் கலந்து கொள்வதையோ அவரது உடலுக்கு இறுதி மரியாதை






செய்வதையோ சட்டத்தரணிகள் சங்கம் தவிர்த்தது பொதுவாக சங்கத்தின் உறுப்பினர்கள் யாராயினும் இறக்கும் இடத்து இறந்தவரின் இறுதிக்கிரிகையில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்துவதுதான் சங்கத்தின் பாரம்பரியமான மரபு ஆனால் தனது சட்டத்தொழில் நிமிர்த்தம் நீதிமன்றம் வரும் வழியில் சுட்டுக்கொல்லப்பட்ட ரவிராஜின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்வதையோ அவரது உடலுக்கு இறுதி மரியாதை செய்வதையோ சட்டத்தரணிகள் சங்கம் தவிர்த்தது ஏன்? தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளுக்காக குரல் கொடுத்தமையினாலா?

## நீதிமன்றத்தின் அனுமதி

ரவிராஜின் பூதவுடலை அவரது ஊரான சாவகச்சேரிக்கு எடுத்துச்சென்று இந்து முறைப்படி சமயசடங்குகளை நடாத்த நீதிமன்றின் அனுமதி பெறுவதற்காக நீதவான் நீதிமன்ற நீதிபதி இசடீனை அணுகியபொழுது சில இடர்பாடுகளுக்கு மத்தியிலும் உடனடியாக நீதிமன்ற அனுமதியை வழங்கினார்

ரவிராஜ் கொலை செய்யப்படுவற்கு முன்னர் தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு கூறியதற்கு அமைய அவரது பூதவுடல் அவரது ஊரான சாவகச்சேரிக்கு எடுத்துச்செல்லவிருந்த நாளுக்கு முதல் நாள் இரவு நானும் எனது துணைவியாரும் நூற்றுக்கு மேற்பட்ட ரவிராஜோடு நெருங்கிப் பழகிய தமிழ் சிங்கள, முஸ்லிம் சட்டத்தரணிகளை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களுடன் இணைந்து மறுநாள் காலை 6 மணிக்கு ரவிராஜின் பூதவுடலை சட்டத்தரணிகளான நாங்கள் பாரமெடுத்தோம்.

ரவிராஜின் பூதவுடலை ஊர்வலமாக கொண்டு செல்கையில் பல நூற்றுக்கணக்கான தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்கள் இறுதி மரியாதைசெலுத்தி விட்டு பூதவுடலை அவரது சொந்த ஊரான சாவகச்சேரிக்கு எடுத்துச் செல்வதற்காக குடும்பத்தினரிடமும் உறவினர்களிடமும்

பாரம் கொடுத்ததைத் அடுத்து பூதவுடல் விமானமூலம் யாழ் எடுத்துச் செல்லப்பட்டு ரவிராஜ் பிறந்த மண்ணான சாவகச்சேரியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## மூன்று சந்தேக நபர்கள்

ரவிராஜ் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து மூன்று சந்தேக நபர்கள் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி இசடீன் அவர்கள் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். ரவிராஜின் குடும்ப நலனைக் கவனிக்கும் சட்டத்தரணியாக நான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன். பொலிசார் நீதிமன்றத்தில் இந்தக் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரை நீதிமன்றுக்குக் கொண்டு வந்திருந்தனர் அந்த மூன்று சந்தேக நபர்களும் என்னை விறைத்த முகத்துடன் முறைத்துப் பார்த்த கொடூரமான பார்வை அடுத்தது நீதான் என்பது போன்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

தமிழ் அரசியல் கைதிகளின் மேலும் அதிக அக்கறை காட்டியது மட்டுமின்றி கொழும்பில் தமிழ் மக்கள் காணாமல் போதல், வெள்ளைவான் கடத்தல், கப்பம் என்பன யுத்த காலத்தில உக்கிரம் அடைந்திருந்த வேளையில் பல போராட்டங்களில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் சதிகாரர்களால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டமை, தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் கைதிகளையும் பொறுத்தவரையில் மாபெரும் இழப்புத்தான்.

## சிங்கள மொழிப் புலமை

வடக்குக் கிழக்கைச் சார்ந்த தமிழ் மக்கள் மட்டுமின்றி தெற்கு மேற்கு என நாட்டின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் முகம் கொடுத்த பிரச்சனைகளை துன்பங்களை துயரங்களை பெரும்பான்மை இனத்திற்கு அவர்களது மொழியிலேயே ஊடகங்கள், தொலைக்காட்சி நேர்காணல் மூலம் எடுத்துரைத்த ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை செய்யப்பட்டமை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

ரவிராஜ் கொலை செய்யப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் மேல் நீதிமன்றில் அவரைச் சந்தித்த வேளையில் அவரது பாதுகாப்பில் கவனம் செலுத்தும்படி நான் ரவியிடம் கூறிய வேளையில் ரவி என்னிடம் கூறியது யாதெனில் தவா அண்ணா பயந்து என்னதான் செய்வது நடக்கின்றபடி நடக்கட்டும் என்பதே. அந்தச் சந்திப்புத்தான் ரவி கொலை செய்யப்படுவதற்கு முன்னர் நான் இறுதியாக ரவியை சந்தித்த கடைசிச் சந்தர்ப்பம் கோழைகளின் துப்பாக்கிக் குண்டு பட்டு மரணமடைந்த போதிலும் இறந்தும் தமிழ் மக்கள் மனதில் இறவாத மறையாத இடத்தைப்பிடித்தவர் ரவி.

தனி மனிதன் மீதோ அல்லது குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றியோ விமர்சனக் கனைகளைக் தொடுப்பவர்கள் எதிர் விமர்சனங்களை தாங்கும் அதற்கு அதே முறையில் பதில் வழங்கும் சக்தியையும் உடையவராகயிருக்க வேண்டும். கருத்துக்களுக்கு கருத்துக்களால் சந்திக்க முடியாதவர்கள் விமர்சனங்களை எதிர் விமர்சனங்களினால் பதிலளிக்க முடியாதவர்கள்

ஆயுதங்களை பாவித்து எதிர் கருத்துக்களை அழிக்க நினைப்பது இயலாமையும் பச்சோந்தித்தனமுமே அன்றி வேறொன்றில்லை.

## மேல் நீதிமன்ற வழக்கு விசாரணை

2006ம் ஆண்டு ரவிராஜின் கொலைச் சம்பவத்தையடுத்து 2016ம் ஆண்டு மேல் நீதி மன்றத்தில் சட்டமா அதிபரினால் கடற்படை புலனாய்வுப்பிரிவினர் மூவர் உட்பட ஐவரை எதிரிகளாகப் பெயர் குறிப்பிட்டு வழக்கத் தாக்கல் செய்யப்பட்டது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வழக்கு விசாரணையை மூன்று நீதிபதிகள் கொண்ட ட்ரைல் அட் பார் முறையில் முன்னெடுப்பதே சிறந்தது என்று மாவை சேனாதிராஜா அவர்களுக்கு நான் ஆலோசனை வழங்கினேன். ஆயினும் இடையில் நடந்த சில விடயங்கள் அந்த வழக்கு விசாரணைகளில் நான் ரவிராஜின் குடும்ப நலன் சார்பில் பிரசன்னமாவதைத் தவிர்த்துவிட் ஜூரி சபை முன்னிலையில் இடம் பெற்ற வழக்கு விசாரணையில் சட்டத்தரணி விரான் அங்கட்டலும் சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஏ சுமந்திரனும் ரவிராஜின் குடும்ப நலன் சார்பில் ஆஜராகினர். ஜூரிசபை மூலம் இந்த வழக்கில் நீதியை நிலைநாட்டுவது சாத்தியமானதாகத் தென்படவில்லை அதனாலேயே நான் அதைத் தவிர்ந்து கொள்ளுமாறு ஆலோசனை வழங்கி இருந்தேன். ஆயினும் இந்த வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக முன்னிலையில் விசாரணை இடம் பெற்று 2016ம் ஆண்டு டிசெம்பர் 24ம் திகதி வரலாற்றில் முதன் முதலாக நடுஇரவில் 12.15 மணிக்கு ஐந்து எதிரிகளையும் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் எனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மிக முக்கியமானது. மிக முக்கியமான அனைத்து முன்னணி வழக்குகளிலும் எனது பிரசன்னமும் அடிப்படை உரிமைகள் வழக்குகளைத் தாக்கல் செய்து அவற்றை உரிய முறையில் நிலைப்படுத்திய கௌரி சங்கரியின் இடைவிடாத ஒழுங்கமைந்த சீரான தொடர்முயற்சியும் தான் அப்படியொரு அச்சுறுத்தலை ஏற்படுத்தின. அதற்காக நாங்கள் இருவரும் ஓயவில்லை. இது குறித்துக் கலந்துரையாடும் போது வாழும் வரை மக்களுக்கும் மனிதத்துக்கும் நீதியை நிலைநாட்டஎமது கடமையை செய்வோம் நமது பணியை காலம் பாரத்துக்கொள்ளும் என்று புன்னகையோடு உறுதியாக கௌரி கூறிய வார்த்தைகள் இன்றும் பசுமையாக என் மனதில் உள்ளது. கௌரி சங்கரி எந்த சூழ்நிலையிலும் கொஞ்சம் கூட அச்சப்படவுமில்லை சலனப்படவுமில்லை. அதுவே எனக்கு மலையளவு பலத்தைத் தந்தது.

ஆனால் இக்காலப்பகுதியில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை பல்வேறு நண்பர்கள் அக்கறையுடன் சுட்டிக் காட்டியதோடு பாதுகாப்பில் கூடுதல் கவனம் எடுக்கும்படியும் வேண்டிக் கொண்டார்கள். எல்லாம் ஓய்வுக்கு வந்தது போல் தென்பட்டாலும் இன்னும் நான் எனது நீதித்துறைச் செயற்பாடுகளில் ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கின்றேன். காலம் மௌனமாகத்தான் இருக்கின்றது.

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கொலை முயற்சி

2006–2018

17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, சரத் பொன்சேகா ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக 2009ம் ஆண்டு பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட கனகரட்னம் ஆதித்தனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு கடும் ஆட்சேபனையை தெரிவித்ததுடன் எனது சமர்ப்பணத்தில் கனகரெட்னம் ஆதித்தனால் சுய விருப்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சருக்கு வழங்கியதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அரச சாட்சியமாக கொண்டு கொழும்பு மேல் நீதிமன்றில் இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் ஒரு வழக்குமாக மூன்று வழக்குகள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன.

1) **யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் 1995ம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில் இணைந்து கிளிநொச்சியில் ஆயுதப் பயிற்சி பெற்றதாக ஒரு குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது**

2) **ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி கொலை. முயற்சியில் ஈடுபட்டதாக கனகரட்னம் ஆதித்யன் மற்றும் கந்தவனம் கோகுல்நாதன் ஆகிய இருவருக்கும். எதிராக. எதிரிகளால் வழக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 13 சாட்சிகளாக அரச சாட்சிகளாக குறிப்பிட்டு 2009 ஆண்டு சுதந்திர தின விழாவிலும். தியத்தலாவ. இராணுவ முகாமிலும். மேற்குறிப்பிட்ட. அரசியல்**



**பிரமுகர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.**

**(3) பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராகிய பசீர்அலி மொகமட் என்பவரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி 2006 ம் ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுப் பாதுகாப்புப் பிரிவை சேர்ந்த 3 கொமாண்டோ உட்பட மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் மேலும் பத்து பொது மக்களுக்கு கடும் காயத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு கனகரத்தினம் ஆதித்தன் மற்றும் இருவருக்கும். எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.**

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது அரச சட்டத்தரணியால் அரசதரப்பு சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லையென யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் 29-07-2015ல் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்தார். மீண்டும் இந்த வழக்கு மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் வழக்கைத் தொடர்ந்து நடாத்த வேறு சாட்சியங்கள் இல்லையென அரசசட்டத்தரணி

நீதிமன்றிற்கு தெரியப்படுத்தியதையடுத்து எதிரி 17-09-2015ல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

அரசியல் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாகக் கொண்டு நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஒரு மேல் நீதிமன்றம் அரச தரப்பு சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சான்றாக ஏற்க மறுத்து எதிரியை விடுதலை செய்திருந்தால் மற்றைய மேல் நீதிமன்றங்களில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப்பெறுவதே 1979ம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறையாகயிருந்தது. ஆனால் சட்டமா அதிபர் இந்த நீதிமன்றில் தாக்கல் செய்த இரண்டு வழக்குகளையும் மீளப் பெறாமல் அரச சட்டத்தரணி யாழுப்பாண மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மீண்டும் இந்த வழக்கில் உண்மை விளம்பல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென கோரிக்கையை முன்வைப்பதை நான் கடுமையாக ஆட்சேபித்தேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979ம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு முதல் வழக்காக நீர்வேலி வங்கிக் கொள்ளையிடுகையில் கான்டபிள் சிவனேசனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 1982ம் ஆண்டு குட்டிமணி, , ஜெகன் கறுப்பன் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது இந்த வழக்கில் நான் கனிஷ்ட சட்டத்தரணியாக ஆஜராகியதிலிருந்து இன்று வரை கடந்த 40 ஆண்டுகளாக அரசியல் கைதிகளுக்காக ஆயிரக்கணக்கான வழக்குகளில ஆஜராகியுள்ளேன். யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பால் அரச தரப்பு அதிருப்தியடைந்திருந்தால் அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுவையோ அல்லது மேன்முறையீட்டையோ தாக்கல் செய்யவேண்டும் ஆனால் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவில்லை.

## வழமையான நடைமுறையை தவிர்த்த சட்டமா அதிபர்

அரசியல் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாகக் கொண்டு நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஒரு மேல் நீதிமன்றம் அரச தரப்புச் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சான்றாக ஏற்க மறுத்து எதிரியை விடுதலை செய்திருந்தால் மற்றைய மேல் நீதிமன்றங்களில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப்பெறுவதே சட்டரீதியான நடைமுறையாகும் அதனையே சட்டமா அதிபர் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது.

ஆனால் இந்த வழக்கில் வழமையான நடைமுறையை சட்டமா அதிபர் பின்பற்றாமல் அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு மாறாக இந்த வழக்கு விசாரணையை சட்டமா அதிபரின்

வேண்டுகோளை அடுத்து இந்த நீதிமன்றம் விசாரணைகளை நடாத்தி முடித்துள்ளது. அரசியலைம்பின் உறுப்புரையில் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது.

## மேல் நீதிமன்றம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் நீதி நிர்வாகத்துக்கான முதல் நிலை நீதிமன்றங்கள் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றங்கள் குடும்ப நீதி மன்றங்கள் நீதவான் நீதிமன்றங்கள் ஆரம்ப நீதிமன்றங்கள் ஆகியனவாக இருக்கவேண்டுமென நீதித்துறை சட்டத்தின் பிரிவு 2 விதித்துரைக்கின்றது. எனவே குடியரசின் ஒரு மேல் நீதிமன்றம் குறித்தே அது குறிப்பிடுகின்றது. உறுப்புரை 154P (1) விற்கமைய மாகாண மேல் நீதிமன்றங்களை ஏற்படுத்திய அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தம் 1987 கார்த்திகை 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டதன் பின்னரும்கூட, அரசியலமைப்பின் 111(1)ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 2 மாற்றமேதுமின்றி இன்னும் அப்படியே வைக்கப்பட்டுள்ளது. மாகாண மேல் நீதிமன்றங்களுக்கான நீதிபதிகள் மேல் நீதி மன்ற நீதிபதிகள் மத்தியிலிருந்தே (தெரிவு செய்யப்பட்டு) நியமிக்கப்படுகின்றனர். எனவே, மாகாண மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மாகாணம் தொடர்புபட்ட குற்றவியல் விடயங்களை (விசாரித்து) தீர்ப்பளிக்கின்றனர் என்பதைவிட, அரசியலமைப்பின் 111 ஆம் உறுப்புரையினால் தாபிக்கப்பட்டு இன்னும் வழக்கிலிருக்கும் இலங்கையின் மேல் நீதிமன்றங்களுக்குரிய குற்றவியல் விடயங்களை அவர்கள் (விசாரித்து) தீர்ப்பளிக்கின்றனர்.

1987ஆம்ஆண்டிலோஅல்லதுஅதற்குப்பின்னரோஅரசியலமைப்புத்திருத்ததிற்கமைவாக திருத்தப்படாத (முன்னைய) அரசியலமைப்பின் 105(1) ஆம் உறுப்புரையில் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது. அத்துடன், அரசியலமைப்பின் 154*P*(3)ஆம் உறுப்புரைதான் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கு பல நியாயாதிக்கங்களை வழங்குகின்றது அத்துடன், அரசியலமைப்பின் 154*P*(3)(*a*) ஆம் உறுப்புரைக்கமைய, ஒவ்வொரு மாகாண மேல் நீதி மன்றமும் “மாகாணத்தினுள் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கையின் மேல் நீதிமன்றங்களின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தை சட்டத்திற்கமைய பிரயோகிக்க வேண்டும்”. இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் இன்னும் தனியொரு நீதிமன்றமாகவே உள்ளது என்பதை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை இந்த நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது எதிரியின் சார்பில் முன் வைக்கப்படும் முதல் நிலை சட்ட வாதமாகும்.

## பல முக்கியமான முரண்பாடுகள்

மேலும் அரச தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்கையில் பல முக்கியமான முரண்பாடுகள் இந்த நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. என்பதுடன் உதவிபொலிஸ் அத்தியட்சகர் முன்பு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதும் சாட்சியத்தில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது 20-07-2010ம் ஆண்டு காலை 9மணி

35நிமிடத்திற்கு எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது கையால் பதிவு செய்யத் தொடங்கி பகல் 2மணி வரைக்கும் எந்த இடைவெளியுமின்றி தொடர்ந்து பதிவு செய்ததாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்துள்ள நிலையில் காலை 11மணி 30 நிமிடங்கள் நீர் ஆகாரத்திற்காக நிறுத்தப்பட்டதாக மொழிபெயர்ப்பாளர் சாட்சியமளித்துள்ளார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் எழுதப்பட்டிருந்தால் இந்த பாரிய சாட்சிய முரண்பாடுகள் ஏற்படமுடியாது.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கினால் ஏற்படும் சட்ட விளைவுகளை தான் விளங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

2009ம் ஆண்டு வெள்ளை வானில் கடத்தப்பட்டு பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட கனகரெட்னம் ஆதித்தன் 2009ம் ஆண்டிலிருந்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவு 15(1) கீழ் வழங்கப்பட்ட வழக்கு விசாரணை முடியும் வரையிலான தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தொடர்ந்து தனிமையில் தொடர்ந்து எட்டு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் ஆனால் அரச தரப்பு தடுப்புக் காவல் உத்தரவின் பிரதியை நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை எனவே சட்டரீதியான தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதனை அரசதரப்பு நிரூபிக்கத் தவறியுள்ளது.

## 23 காயத் தழும்புகள்

சட்ட வைத்திய அதிகாரியின் சட்ட அறிக்கையிலும் சாட்சியத்திலும் எதிரியின் உடலில் 23 காயத் தழும்புகளும் சிகரெட்டினால் ஆறு இடங்களில் சூடுவைக்கப்பட்ட காயங்களும் காணப்படுவதும் அக் காயங்களின் தழும்புகள் பயங்கரவாதத் தடைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தினுள் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்பதனை சட்ட வைத்திய அதிகாரி குறுக்கு விசாரணையில் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆகவே இந்த நீதிமன்றம் சட்டரீதியற்ற, எதிரியினால் சுயமாக வழங்கப்படாத, ஏற்கனவே யாழ் மேல் நீதிமன்றத்தினால் சாட்சியமாக ஏற்க மறுத்து நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இந்த நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும் என்ற கோதாவில் எனது வாதம் முன்வைக்கப்பட்டது.

அரச சட்டத்தரணியினதும் எதிரி தரப்பில் எனது சமர்ப்பணத்தையும் அடுத்து கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க எதிரியினால் வழக்கப்பட்ட குற்ற ஒப்பதல் வாக்குமூலமானது பொலிஸ் அதிகாரிக்கு சுயமாக வழங்கப்பட்டதென கட்டளை வழங்கினார். அரச தரப்பால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை நீதிமன்றம் எதிரிக்கு எதிரான சான்றாக முன்மொழிந்தது.

## பிரதான விசாரணைகள்

அரச சட்டத்தரணி எதிரியாகப் பெயர் குறிப்பிப்பட்டிருக்கும் ஆதித்தியன் கனகரட்னம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கவும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் ஒப்புறுதிப்படுத்தவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரின் மெய்ப்பாதுகாலர்களை அழைத்து சாட்சியங்களை நெறிப்படுத்தி அரச தரப்புச் சட்டத்தரணி வழக்கை நிறைவு செய்து முடித்துக்கொண்டார்

இவ்வழக்கின் எதிரிதரப்பில் ஆஜரான எனது சமர்ப்பணத்தில்

1. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றதாக பொலிஸ் விசாரணையில் உறுதிப்படுத்தப்படவேண்டும் ஆனால் இந்த வழக்கில் எந்த விசாரணை அதிகாரிகளும் சாட்சியம் அளிக்கவில்லையென்பதுடன் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதற்கான எந்தவிதமான சான்றுகளும் அரச தரப்பால் நீதிமன்றின் முன் வைக்கப்படவில்லை

2. எதிரியினால் வழக்கப்பட்ட குற்ற ஒப்பதல் வாக்குமூலமானது சுயமாக வழங்கப்பட்டதென இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான சான்றாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளதெனினும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் பதியப்பட்டுள்ள அல்லது கூறப்பட்டுள்ள சம்பவங்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்காக எந்தவிதமான சுயாதீன சான்றுகளையோ அல்லது வேறு சான்றுகளையோ அரச தரப்பால் முன்வைக்க முடியவில்லை

இந்த வழக்கில் அரசியல் பிரமுகர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதிலும் எதிரிகள் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆனவர்கள் என்றோ அல்லது இருவருக்கும் இடையே சதி செய்வதற்கு எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழிமூலமாகவோ உடன்பாடு இருந்ததென்றோ எந்தவிதமான சான்றுகளையும் அரச தரப்பு நிரூபிக்கவில்லை என்பதையும் நீதிமன்றம் கவனத்தில் கொண்டு மூன்றாம் எதிரியை விடுதலை செய்யமாறு எனது வாதத்தை முன்வைத்தேன்.

## ஆதித்தியன் விடுதலை

அரச தரப்பினதும் எதிரி தரப்பினதும் வாதபிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேயகோன் தனது தீர்ப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது சுயமாக வழங்கப்பட்டதென நீதிமன்றம் கட்டளை வழங்கியதையடுத்து அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றில் அரசதரப்பு சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் பதியப்பட்டுள்ள குறிப்பிட்ட சம்பவங்களில் எதிரி தொடர்புபட்டுள்ளதுடன்

அந்தச் சம்பவங்கள் நடைபெற்றன என்பதனை அரசதரப்பு வேறு சான்றுகளினால் ஒப்புறுதிப்படுத்தவில்லை.

எதிரிதரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு பிரமுகர்களை கொலை செய்ய எதிரிகள் சதித்திட்டம் தீட்டி கொலைமுயற்சிக்கு எத்தனித்தனர் என அரச தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிரியை விடுதலை செய்வதாக தீர்ப்பு வழங்கினார்

## மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க நீதிபதியின் கட்டளை அதிர்சியளித்தது

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க இந்த வழக்கின் எதிரியான கனகரட்னம் ஆதித்தியன் வழங்கியதாக கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்ட வாக்குமூலமென கட்டளை வழங்கி அதனை அரசதரப்பு சான்றாக ஏற்றுக்கொண்டமை எனக்கு எதிர்பார்க்காத அதிர்ச்சியையும் ஆச்சரியமானதுமான உணர்வை ஏற்படுத்தியது.

## நீதிபதியின் கட்டளைக்கு எதிராக மீளாய்வு மனு தாக்கல் செய்யவில்லை.

எனது சட்டதுறை அனுபவம். நான்கு தசாப்தங்களை கடந்த நிலையில் நான் ஆஜராகிய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொழுது வழக்கின் கட்டளை அல்லது தீர்ப்பு சட்டரீதியாக எப்படி அமையும் என்பதில் எனது கணிப்பு தவறுவதில்லை ஆனால் இந்த வழக்கில் எனது கணிப்பு தவறவில்லை தவறவைக்கப்பட்டது. அதற்கு சில காரணங்கள் உண்டெனினும் அவற்றை நான் குறிப்பிட விரும்பவில்லை. குற்ற ஒப்பதல் வாக்கு மூலத்தின் உண்மை விளம்பல் விசாரணையில் நீதிபதி பியசேன ரணசிங்க வழங்கிய கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு. நீதிமன்றில். மீளாய்வு மனுவை தாக்கல் செய்யம்படி சில சட்டத் தரணிகள். எனக்கு ஆலோசனை வழங்கிய போதிலும் நான் காலத்தையும் நடைமுறை சாத்தியபாடுகளையும் கவனத்தில் கொண்டு கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க வழங்கிய கட்டளைக்கு எதிராக. மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுத்தாக்கல் செய்யவில்லை. மேன் முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு மனுத்தாக்கல். செய்திருந்தால் மேல் நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடை உத்தரவைப் பெற்றிருக்கலாம். மேன் முறையீட்டு நீதிமன்றில். இடைக்கால தடை உத்தரவைப். பெற்ற பின்னர் மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வுமனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை முடிவடைய பல வருடங்களாகும். ஏற்கனவே 2009ம் ஆண்டிலிருந்து 2019ம் ஆண்டுவரை தடுப்புக்காவலில் இருக்கும் ஆதித்தியன் மேன் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை. தடுப்புக்காவலில் தொடர்ந்து காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படும் சூழ்நிலையை தவிர்ப்பதற்காக மேன் முறையீட்டு. நீதிமன்றில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்யவில்லை.

குற்ற ஒப்பதல் வாக்கு மூலம் கைதியினால் சுயமாக வழங்கப்பட்டது என மேல் நீதிமன்றம் கட்டளையிட்டால் பெரும்பான்மையான வழக்குகள் அரச தரப்புக்குச் சாதகமாகவே இறுதித் தீர்ப்புகள் அமையுமெனினும் விதிவிலக்காகவே எதிரிக்கு சாதகமான தீர்ப்புகள் அமைவதுண்டு ஆனால் இந்த வழக்கில் இறுதியாக ஆதித்தனை நிரபராதியென விடுதலை செய்யப்படுவார் என்ற அதீத நம்பிக்கை எனக்கிருந்தது இந்த வழக்கில் எதிரிக்கு சாதகமான இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டமைக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கட்டளை வழங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க ஓய்வு பெற்றமையும் ஒரு காரணமே சில பக்கங்களை இங்கே பதிவதை தவிர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆதித்தனுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளில் இரண்டு வழக்குகளில் விடுதலையான போதிலும் மூன்றாவது வழக்கான பாகிஸ்தான் தூதுவர் கொலை முயற்சி வழக்கில் மகர தடுப்பு முகாமில் தடுப்புக்காவலில் தனிமையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம். சுயமாக எதிரியினால் வழங்கப்பட்ட வாக்குமூலம் என நீதிமன்றம் கட்டளை வழங்கியதும் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்யாமல் பிரதான வழக்குக்குச் சென்றமையே ஆதித்தியன் இந்த வழக்கிலிருந்து விரைவாக விடுதலையாவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் கொலை முயற்சி 2006 –2022


18

இறுதி யுத்தம் ஆரம்பமாகிய காலப்பகுதியில்தான் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராகிய பஷீர் வாலி மொகமத்தை இலக்கு வைத்து திட்டமிடப்பட்ட குண்டுத்தாக்குல் ஒன்று 2006.08.14 ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் உயர் ஸ்தானிகர் உயிர் தப்பினாலும் அவரது பாதுகாப்புக் கடமையில் இருந்த ஏழு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதோடு சுற்றிலும் இருந்த பொதுமக்களில் பத்துப் பேர் வரையில் காயமடைந்தார்கள். இத்தாக்குதல் நடந்து சொற்ப வேளையிலேயே இது தமிழீழவிடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் என்ற செய்தி ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டது.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் பஷீர் வாலி முஹம்மத் என்பவரை கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டி 2006 ஆம் ஆகஸ்ட் மாதம் 14 ஆந் திகதி நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுப் பாதுகாப்புப் பிரிவை சேர்ந்த ஏழு இராணுவ அதிகாரிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் மேலும் பத்துப் பொதுமக்களுக்கு கடும் காயத்தை ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கனகரத்தினம் ஆதித்தன் உட்பட மேலும் இருவருக்கு எதிராகவும் கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## குற்றம் ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஒரே சாட்சியான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. நிலையில் எனது வாதத்தை பிரதான விசாரணையில் அரச தரப்புச் சான்றாக 74 சாட்சியங்கள் அழைக்கப்பட்டு 68 சாட்சியங்கள் சாட்சியளிக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வழக்கின் 3ம் எதிரியான கனகரத்தினம் அவர்களுக்கு எதிராக இந்தக்குற்றச் சாட்டுகள் தொடர்புசெய்யப்பட்டு எந்த சான்றுகளும் முன்வைக்கப்படவில்லை. **இதுவரை முன்னிலைப்படுத்தப்பட்ட அரச தரப்புச் சாட்சிகள்**



**குண்டு வெடிப்புத் தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்தது என்பதை மட்டுமே உறுதிப்படுத்துகின்றன.** அதை நாங்களும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆம் உண்மையில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நடைபெற்று அதில் சிலர் கொல்லப்பட்டார்கள்தான் ஆனால் இங்கு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஆதித்தனுக்கு எதிரான ஒரு சாட்சியைத்தானும் அரச தரப்பால் சமர்ப்பிக்க முடியவில்லை. இந்த வழக்கிலிருந்து அவரை விடுவிக்குமாறு எனது சமர்பணத்தில் வேண்டிக் கொண்டேன். அரச சிரேஷ்டசட்டத்தரணி நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்ததுயாதெனில் அரச சாட்சிகளாக இன்னும் சில சாட்சிகளை அரச தரப்பில் கொண்டுவரயிருப்பதாக கூறி 74 சாட்சிகளின் பெயர்பட்டியலை நீதிமன்றிற்கு சமர்பித்து சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பும்படி வேண்டிக்கொண்டதையடுத்து சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கின் மேலதிக விசாரணைக்கு திகதியிடப்பட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன.

# பாதுகாப்புச் செயலாளர் கொலைமுயற்சி வழக்கு

2006 –2011

19

பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு ரவிகுமாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் 08ஆம் 17ஆம் 26ஆம் திகதிகளில் விசாரணைக்கு வரும் பொழுதெல்லாம் ரவிகுமார் சோகமாகவே காணப்படுவார் அதற்கு ரவிகுமார் கூறும் காரணம் 8ஆம் இலக்கம் தனக்கு ஒத்துவராத இலக்கம் அடிக்கடி பிரச்சனைகளை உண்டுபண்ணும் எனக் கூறிவந்த ரவிகுமார் விடுதலையான அன்று கூறிய விடயம் யாதெனில் உயர் நீதிமன்றத்தில் என்னைவிடுதலை செய்ய தீமானித்திருப்பதாக அரச சட்டத்தரணி தெரிவித்த திகதி 2011ம் ஆண்டு ஆனி மாதம் 26 திகதி (கூட்டு 08) பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் என்னை விடுதலை செய்த திகதி 2011ம் ஆண்டு ஆடி மாதம் 08ஆம் திகதி எந்த இலக்கம் எனக்கு ஒத்துவராது என கருதினேனோ அந்த 8ஆம் நம்பர் என்னை விடுதலை செய்துவிட்டது.

இறுதி யுத்தம் தொடங்கிவிட்டிருந்த நிலையில் 2006.12.01 காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இளைய சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ச அலரி மாளிகையில் நடைபெறயிருந்த பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் (Security Council Meeting) கலந்து கொள்வதற்காக கொள்ளுப்பிட்டி தர்மபால வீதியில் அமைந்துள்ள பித்தலசந்தி என்ற இடத்துக்கு அருகாமையில் தனது பாதுகாவலர்களுடன் பயணித்துக் கொண்டிருக்கையில் முச்சக்கர வண்டியில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கவைத்துப் பாதுகாப்பு செயலாளரை கொலைசெய்ய முயற்சித்ததாகவும் இத்தாக்குதலில் பாதுகாப்புச் செயலாளர் மயிரிழையில் உயிர் தப்ப இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டதுடன் ஏழு பாதுகாப்புப் படையினர் படுகாயம் அடைந்ததாகவும் அரச பொதுச் சொத்துக்களுக்கு பெருஞ்சேதம் விளைவித்ததாகவும் குறிப்பிட்டு கறுவாத்தோட்டப் பொலிசாரினால் பொலிஸ் அறிக்கையொன்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

## மூவர் கைது

முதலில் இந்த விசாரணைகளைக் கறுவாத்தோட்டப் பொலிசார் மேற்கொண்ட போதிலும் பின்னர் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின்கீழ் குற்றப்புலனாய்வுத் துறைப் பொலிசாரிடம் விசாரணை பாரம் கொடுக்கப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடாத்திக் கொண்டிருக்கும் பொழுது மோதரை பொலிஸ் பிரிவினரால் மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்டபகுதியில் நடந்த குண்டுவெடிப்பு குற்றச்செயல்கள் சம்பந்தமாக அந்தப் பகுதியைச் சோதனையிட்டுக் கொண்டிருக்கும் பொழுது மூன்று நபர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட அந்த மூன்று நபர்களையும் விசாரணை செய்யும்போது பாதுகாப்பு செயலாளரை கொலைசெய்ய முயற்சி செய்த வழக்கில் தேடப்படும் சந்தேகநபர்கள் இவர்களென அடையாளம் காணப்பட்டதையடுத்து பொலிசார் அம்மூவரையும் குற்றப்புலனாய்வுப் பொலிசாருக்குப் பாரங்கொடுக்காமல் தாங்களே அம்மூவருக்கும் எதிராகத் தடுப்புக்காவல் உத்தரவுபெற்று விசாரணையை நடாத்தினர். கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை பொலிசார் மேலதிக விசாரணை செய்த வேளையில், உண்டியல் மார்க்கமாகத் தனக்கு வந்த ரூபா ஐந்து இலட்சம் பணத்தை வெள்ளவத்தையிலுள்ள நாணய மாற்று நிறுவனத்தில் (Money Changer) தான் பெற்றுக் கொண்டதாகவும் அந்தப் பணத்திலேயே பாதுகாப்புச் செயலாளரைக் கொலைசெய்ய முயற்சித்த தற்கொலைக் குண்டுதாரி, முச்சக்கர வண்டியை வாங்கியதாகவும கைதுசெய்யப்பட்ட நபர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ரவிக்குமார் கடத்தல்

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இங்கிலாந்துப் பிரஜையான அருணாசலம் ரவிக்குமார் வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையம் நடாத்தி வந்தார். 2008ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 8ஆம் திகதி இரவு தனது தொழில் ஸ்தாபனத்தில் இருந்து வேலை முடிந்து பம்பலபிட்டியில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லும் வழியில் வெள்ளை வேனில் வந்த சிலரால் கடத்திச் செல்லப்பட்டார். அன்றிரவு வழமைபோல் ரவிகுமார் வீடு வந்து சேராமையால் கலக்கம் அடைந்த ரவிகுமாரின் மனைவியும் உறவினரும் தங்களால் முடிந்தளவு தேடிப்பார்த்ததையடுத்து கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

மேலும் அந்த முச்சக்கரவண்டியே கொலை முயற்சிக்கு பாவிக்கப்பட்டதாகவும் பொலிசாருக்கு வாக்குமூலம் அளித்ததைத் தொடர்ந்து ரவிகுமார் கொலைமுயற்சிக்கு உடந்தையாக இருந்துள்ளதாக சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுவதாகவும் ஆகையால் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுப்புக்காவல் உத்தரவில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடைபெறுவதாகவும் கூறப்பட்டு கறுவாத்தோட்டப் பொலிசாரினால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் விசாரணையின் முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த சம்பவம் பற்றிய விசாரணையை முதலில் கறுவாத்தோட்டப் பொலிஸார் நடாத்தியதாகவும் பின்னர் பொலிஸ்மா அதிபரின் கட்டளையின் பிரகாரம் குற்றப்புலனாய்வுப்

பிரிவினரிடம் மேலதிக விசாரணை கையளிக்கப்பட்டது முதல் அறிக்கையை கறுவாத்தோட்டப் பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தபோதிலும் மேலதிக அறிக்கைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரே தாக்கல் செய்தனர்.

விசாரணைகளின் தொடர்ச்சியினையடுத்து மீண்டும் ஒரு இந்துமதகுரு உட்பட மூன்று சந்தேக நபர்களை பொலிசார் கைது செய்தனர் இவர்களில் மலயாலபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட ஆறாவது சந்தேகநபர் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் வவுனியா மகாவித்தியாலய தடுப்புமுகாமில் வைத்து. கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் மத்துகம பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டார்.

ஏழாவது சந்தேகநபர் 2009ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 08ஆம் திகதி திருகோணமலைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்பட்ட பின்னர் காலித்துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு தென்மாகாணப் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் விசாரிக்கபபட்டு கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

முதலாவது சந்தேக நபராக பொலிசாரினால் வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்ட ரவிகுமார் உட்பட ஏழு சந்தேக நபர்களையும் ஒரு கொலை முயற்சி அறிக்கையின் அடிப்படையில் முதலில் கறுவாத்தோட்டப் பொலிஸ் பின்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், கொட்டாஞ்சேனை, காலி, மத்துகம, திருகோணமலை என ஆறு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணை நடாத்திய ஒரே வழக்கு இதுதான்.

இந்த வழக்கில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வுப் பொலிசார் நடாத்திவந்த விசாரணையில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை குற்றப்புலனாய்வுப் பொலிசாரிடம் கையளிக்காமல் கொட்டாஞ்சேனைப் பொலிசார் விசாரணைகளை நடாத்திவந்த அதே வேளையில் மேலும் காலி, மத்துகம, திருகோணமலை பொலிஸாருமாக ஆறு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை நடாத்தினர். சந்தேக நபர்களைக் கைது செய்த கொட்டாஞ்சேனைப் பொலிசார் சந்தேநபர்களை பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய குற்றப்புலனாய்வுப் பொலிசாரிடம் ஒப்படைக்காமல் கைதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு விசாரணைகளை தாங்களே மேற்கொள்ளுவதுடன் மேலதிக அறிக்கைகளையும் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்

மேலும்ஒவ்வொருவழக்குத்தவணையிலும்வெவ்வேறுபொலிஸ்நிலையங்களிலுமிருந்து சந்தேக நபர்களைக் கொண்டுவந்து நீதிமன்றுக்கு ஆஜர் படுத்தினர். வருடக்கணக்காக விசாரணைகள் நடைபெற்றபோதிலும் விசாரணைகள் முடிவடைவதாகத் தெரியவில்லை, பொலிஸ் திணைக்கள நடைமுறையின்படி பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளில் முன்னேற்றம் எதுவும் காணப்படாத முக்கியமான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பொலிசாருக்கு பாரம் கொடுப்பதே நடைமுறை.

## சட்டரீதியான நாணயமாற்று நிறுவனம்

முதலாவது சந்தேக நபரான ரவிக்குமார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரியின் அனுசரணையில் நான் ஆஜராகி இருந்தேன். எனது வாதத்தில், ரவிக்குமார் சட்டரீதியாக அரசிடமிருந்து அனுமதி பெற்று வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணய மாற்று நிறுவனத்தை நடாத்தி வந்துள்ளார் பணத்தைப் பெறவந்தவரின் அடையாளத்தை அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னர் பணம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைதான் சகல நாணய மாற்று நிறுவனங்கள் அரச வங்கிகள், தனியார் வங்கிகள், வெஸ்டன்யுனியன் (Western Union) என்பவற்றினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பணத்தை பெற வந்தவர்களின் அடையாளம் உறுதிப்படுத்தப்படுமே தவிர எதற்காக இந்தப் பணம் என்ற கேள்வி கேட்கப்படுவதில்லை அரச வங்கியின் மூலம் இந்தப் பணம் மீளப்பெறப்பட்டிருந்தால் பணத்தை வழங்கிய வங்கி அதிகாரியை கைது செய்ய முடியுமா?

ரவிகுமார் பொலிசாருக்கு வழங்கிய தனது வாக்குமூலத்தில் நடந்தவற்றினை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் சந்தே நபரான ரவிகுமாருக்கு எதிராக எந்த விதமான சான்றும் பொலிசாரினால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையிலோ அல்லது மேலதிக விசாரணை அறிக்கைகளிலோ குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தப்படவேண்டுமாயின் பொலிஸ் மாஅதிபரின் உத்தரவுக்கமைய மீண்டும் குற்றப் புலனாய்வுப் பொலிசாரிடம் விசாரணையைப் பாரம் கொடுத்து விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவிடும்படி நீதிமன்றத்தை வேண்டிக்கொண்டதை அடுத்து பிரதான நீதவான் நிசந்த அப்புஆராச்சி சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும்படி பொலிசாருக்கு கட்டளையிட்டார்.

பொலிசார் தரப்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச சட்டத்தரணி எனது வேண்டுகோளுக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் இந்தக் குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானதெனவும் பாதுகாப்புச் செயலாளரைக் கொலை செய்ய எத்தனித்துள்ளதோடு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளதாகவும் ஏழு பாதுகாப்பு படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் மேலும் அரச பொதுச் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதால் விசாரணைகளை பொலிசார் பலமுனைகளில் நடாத்துவதாகவும் அதனாலேயே இத்தகைய நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் தெரிவித்தார். அன்றைய தினம் விசாரணைகளை நடாத்தும் ஆறு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் பலர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

## அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

கைது செய்யப்பட்ட பின்னர் ரவிக்குமார் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த நிலையில் ரவிகுமாரின் கைதும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் சட்டத்துக்கு முரனானது என உயர்நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் கூறப்பட்ட விடயமானது, மனுதாரரான

ரவிக்குமார் இலங்கையில் பிறந்திருந்தாலும் பிரித்தானிய பிரஜையாவார் பிரித்தானியாவில் (Nayaki Estates) என்ற பெயரில் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தை பதிவுசெய்து வியாபாரத்தை நடாத்திவந்ததுடன் வெளிநாட்டு நாணய மாற்று வர்த்தகத்தையும் நடாத்திவந்துள்ளார் அவரது மூன்று பிள்ளைகளும் மனைவியும் பிரித்தானியாவிலே வசிக்கின்றனர். 2005ஆம் ஆண்டு கடும் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதித்திருந்த தனது தாயாரை பார்ப்பதற்காக இலங்கை வந்த ரவிகுமார் தாயாரின் சுகவீனத்தின் காரணமாக தாயாரைத் தனிமைப்படுத்த்திவிட்டு பிரித்தானியாவுக்குத் திரும்பிச் செல்லக் கூடிய சூழ்நிலைகள் காணப்படாமையால் பிரித்தானியாவில் தான் நடாத்திவந்த வர்த்தகத்தின் கிளையொன்றை வெள்ளவத்தையில் திறந்து வெளிநாட்டு நாணய மாற்று நிறுவனத்தை நடாத்தி வந்தாக மனுவில் தெரிவிக்கப்பட்டது.

வழமையாக பல வாடிக்கையாளர்கள் நாணயமாற்றுதலுக்காக மனுதாரரின் தொழில் நிறுவனத்துக்கு வந்து செல்வதாகவும் அவர்களின் அடையாளத்தை அடையாள அட்டை மற்றைய ஆவணங்கள் மூலமும் உறுதிப்படுத்திய பின்னர் வாடிக்கையாளர்களுக்கு நிறுவனத்தின் முகாமையாளர் பணத்தை வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டது. இந்த வழக்கு விசாரணையில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களுக்கும் மனுதாரருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையெனவும் மனுதாரர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஒருநாளும் சந்தேக நபர்களை கண்டதில்லையெனவும் இந்தக் கொலை முயற்சிக்கும் மனுதாரருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையெனவும மனுவில் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரரான ரவிகுமார் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சட்டரீதியற்ற கைது தடுத்துவைக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படைமனித உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டு விளக்கத்துக்கான திகதி குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் பிரதான நீதவான் நீதிமன்றுக்கு பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட மேலதிக அறிக்கைகளில் கொலை முயற்சிக்கு உடந்தையாக ரவிகுமார் செயல்பட்டிருக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த போதிலும் பொலிசாரின் விசாரணைகளில் எந்தச் சான்றுகளும் ரவிகுமாருக்கு எதிராக காணப்படுவதாக பொலிசாரினால் நீதிமன்றிற்கு தாக்கல் செய்யப்பட்ட எந்த அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசாருக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க மறுப்பு தெரிவித்திருந்த ரவிகுமார் பிரதான நீதவானுக்கு குற்றவியல் சட்டக்கோவை பிரிவு 127(1)ஆம் பிரிவின்கீழ் தனக்கும் பாதுகாப்புச் செயலாலரின் கொலை முயற்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமோ எதுவித தொடர்போ இல்லையெனவும் சந்தேகத்தின் அடிப்படையிலேயே தான் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் வாக்குமூலம் அளித்திருந்தார்.

## ரவிக்குமார் பிணையில் விடுதலை

இந்த நிகழ்வுகளின் அடிப்படையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ரவிக்குமார் சார்பாக பிணைமனுவொன்று தாக்கல் செய்யப்பட்டு வாதாடப்பட்டது அந்த மனுவின் விசாரணையின்

பின்னர் ரவிக்குமாரை நிபந்தனையில் பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். அதன் பின்னர் நடந்தவை மிகவும் எதிர்பார்க்காத நிகழ்வுகளாகும்.

## ரவிக்குமாரை மீண்டும் கைதுசெய்ய நடவடிக்கை

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ரவிக்குமாரை மீண்டும் கைது செய்வதற்காக பொலிசார் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து (ஜனாதிபதி) தடுப்புக்காவல் உத்தரவு ஒன்றைப் பெற்று ரவிக்குமாரை மீண்டும் கைது செய்ய தயாராக இருந்தனர். மீண்டும் கைது செய்ய எடுத்த நடவடிக்கை எங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டமையால் உடனடியாக இரண்டாவது முறையாக ஒரே நாளில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது உயர்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் ரவிக்குமாரை மீண்டும் கைது செய்வதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டதோடு மனுதாரரான ரவிகுமார் மீண்டும் கைது செய்யப்படவேண்டும் என அரச சட்டத்தரணி வாதாடினார்.

மனுதாரரின் சார்பில் உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு புதிய தடுப்புக் காவல் உத்தரவில் மனுதாரர் ஏற்கனவே கைது செய்யப்பட்டபொழுது கூறப்பட்ட அதே காரணங்களும் அதையொத்த காரணங்களும் காணப்படுகின்றனவே தவிர வேறு எந்த புதிய சான்றுகளோ அல்லது தடையுத்தரவை நியாயப்படுத்தும் நியாயமான காரணங்களோ காணப்படவில்லை அத்துடன் ஏற்கனவே மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்படும் பொழுது மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மனுதாரரான ரவிக்குமார் மீறவில்லையெனவும் உயர்நீதிமன்றின் நீதியரசர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

## நடமாடும் சுதந்திரத்தை பொலிசார் தடை செய்யக்கூடாது

இரண்டு பக்க வாதங்களையும் மிகக் கவனமாகச் செவிமடுத்த நீதியரசர்கள் குழாமில் தலைமை வகித்த பிரதம நீதியரசர் பொலிசார் குற்றச்சாட்டுக்களை உருவாக்கும் தொழிற்சாலைகளாக செயற்படக் கூடாதெனவும் நிரூபிக்கப்படக்கூடிய அவசியமான சான்றுகள் காணப்படுமிடத்து மட்டுமே தனிமனித சுதந்திரத்தை பாதிக்கக் கூடிய தடுப்புக் காவல் உத்தரவை பெற வேண்டுமென கடுமையாக எச்சரித்தார்.

மனுதாரர் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளதால் மனுதாரரை மீண்டும் கைது செய்யக் கூடாதென்பதுடன் மனுதாரரின் நடமாடும் சுதந்திரத்தை பொலிசார் தடை செய்யக்கூடாது எனவும் நீதியரசர்களினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது இதனையடுத்து பாதுகாப்புச் செயலாளரினால் வழங்கப்பட்ட இரண்டாவது தடுப்புக்காவல் உத்தரவு நடைமுறைப் படுத்தப்படமாட்டாது என அரச சட்டத்தரணி உத்தரவாதம் ஒன்றையும் உயர்நீதிமன்றுக்கு வழங்கினார்.

இதில் முக்கியமான விடயம் யாதெனில் இரண்டாம் முறை ரவிக்குமாருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவு எங்களுக்குத் தெரியாமலோ அல்லது நாம்

அறியாமலோ அல்லது எங்கள் கவனத்துக்கு கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால் ரவிக்குமார் மீண்டும் எந்த அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பார்.

வழக்கு விசாரணை தொடர்ந்து கொண்டிருந்தது மற்றைய ஆறு சந்தேக நபர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து ஒவ்வொரு தவணையிலும் நீதிமன்றம் அழைத்துவரப்படுவர். ரவிக்குமாரும் ஒவ்வொரு தவணைகளிலும் நீதிமன்றில் தவறாது ஆஜராகிக்கொண்டிருக்கையில், உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி மனுதாரருக்கு எதிரான விசாரணையை ஆறு பொலிஸ்நிலையங்களை சேர்ந்த பொலிசாரினால் விசாரணை நடாத்தப்பட்டதாகவும் ஆனால் மனுதாரருக்கு எதிராக எந்தச் சான்றும் இல்லாததனால் மனுதாரரை விடுதலை செய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மனுதாரரை விடுதலை செய்வதற்கான பணிப்புரையை பிரதம நீதவான் நீதிமன்றுக்கு அனுப்பவுள்ளதாகவும் நீதியரசர்களுக்கு அறிவித்தார்.

ஒவ்வொருநாளும் தன்னை விடுதலை செய்வதற்கான அறிவுறுத்தல் பிரதான நீதவான் நீதிமன்றிற்கு எப்பொழுது வரும் என ரவிகுமார் ஆவலோடுகாத்திருந்தார். 8ஆம் இலக்கம் தனக்கு பிரச்சினை தரக்கூடியது என்று நியுமோரொலொஜிப் படி நம்பிக்கை கொண்டிருந்த ரவிகுமார் கைது செய்யப்பட்டதும் 8ஆம் திகதிதான் அதனால் 8,17,26 ஆம் திகதிகளில் அவர் மிகவும் மனமுடைந்து காணப்படுவார். 2011ஆம் ஆண்டு ஆடி மாதம் 6ஆம் திகதிவரை சட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து எந்த அறிவுறுத்தலும் பிரதான நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு கிடைக்கப்பெறாத காரணத்தினால் தனக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையையிழந்து மனமுடைந்து போயிருந்த வேளையில் ஆடி மாதம் 7ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து ரவிகுமாரை விடுதலை செய்வதற்கான அறிவுறுத்தல் நீதவான் நீதிமன்றப் பதிவாளருக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. 08ஆம் திகதி அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## கடவுச் சீட்டு கையளிப்பு

ரவிகுமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீண்டும் 2011ஆம் ஆண்டு ஆடிமாதம் 8ஆம் திகதி உயர் நீதிமன்றில் அழைக்கப்படவிருந்த நிலையில் அன்றைய தினமே பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சட்டமா அதிபரினால் அனுப்பப்பட்ட விடுதலை செய்வதற்கான சட்டமாஅதிபரின் சம்மதத்துக்கு அமைய பிரதான நீதிமன்ற நீதவான் ரவிகுமாரை வழக்கிலிருந்து விடுதலை செய்தார் பிணை நிபந்தனையின் நீதிமன்றக் கட்டுப்பாட்டிலிருந்த ரவிக்குமாரின் கடவுச் சீட்டையும் அன்றைய தினமே ரவிகுமாரிடம் ஒப்படைக்கும்படியும் நாட்டைவிட்டு வெளியேறாமல் ஏற்கனவே விதிக்கப்பட்ட தடையையும் நீக்குவதோடு அந்த உத்தரவையும் அதன் பிரதியையும் உடனடியாக விமானநிலைய குடிவரவு குடியகழ்வு அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தும்

படியும் பிரதான நீதவான் நீதிமன்றத்தை நான் வேண்டிக் கொண்டதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நீதிமன்ற பதிவாளரினால் அன்றைய தினமே கடவுச்சீட்டு ரவிகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## குடிவரவு குடியகழ்வு சட்டத்தின் கீழ் மீண்டும் கைதா?

உயர்நீதிமன்றில் ரவிகுமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீண்டும் 2011ஆம் ஆண்டு ஆடி மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது இந்த மனுவின் பிரதிவாதியான சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சட்டத்தரணி பாதுகாப்புச் செயலாளர் கொலை முயற்சியில் மனுதாரருக்கு எதிராக எந்தச்சான்றும் இல்லாத காரணத்தினால் மனுதாரரை அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யும்படி பிரதான நீதவான் நீதிமன்றிற்கு அறிவித்திருப்பதாகவும் ஆனால் குடிவரவு குடியகழ்வு சட்டத்தின் கீழ் மனுதாரரான ரவிகுமார் குற்றங்கள் புரிந்துள்ளார் எனவும் எனவே குறிப்பிடப்பட்ட குற்றங்களை விசாரணை செய்து வழக்குத்தாக்கல் செய்யவிருப்பதாக நீதியரசர்கள் குழாமுக்குத் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு ஆடிமாதம் 8ஆம் திகதி உயர் நீதிமன்றில் மனுதாரரான ரவிகுமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு அழைக்கப்படவிருந்த நிலையில் அன்றைய தினமே காலை நான் பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து ரவிகுமார் விடுதலை செய்யப்பட்டவுடன் கடவுச்சீட்டை மீளப்பெற்றதனால் மீண்டும் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார். பிரதான நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யாமல் இருந்திருந்தால் கோட்டாபய கொலை முயற்சி வழக்கில் விடுதலை செய்யப்பட்டு குடிவரவு குடியகழ்வு சட்டத்தின் கீழ் பொலிசாரினால் மீண்டும் கைது செய்யப்பட்டிருப்பார். நொடியேனும் தாமதிக்காமல் நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுவதொன்றே தீர்வாகத் தெரிந்தது. 2011ஆம் ஆண்டு ஆடிமாதம் 8ஆம் திகதி விடுதலையான ரவிகுமார் அன்றைய தினமே என்னோடு பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து அன்றிரவே என்னோடு சிங்கப்பூர் சென்று சிங்கப்பூரிலிருந்து லண்டன் நோக்கி பயணமானார். அதன் பின்னர்தான் எனக்கும் கௌரிசங்கரிக்கும் நிம்மதிப் பெருமூச்சு விடக் கூடியதாகவிருந்தது.

## நிரபராதி தண்டிக்கப்படலாமா?

இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சி பற்றிய செய்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஊடகங்கள் தொலைக்காட்சிகள் மற்றும் இணையத்தளங்களிலும் முக்கிய செய்தியாகக் காணப்பட்டது. பாதுகாப்புச் செயலாளர் மீது கொலை முயற்சி நடைபெற்றமை உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேசரீதியாகவும் முக்கியமான செய்தியாகும் அப்படியான சூழ்நிலையில் இந்தக் கொலை முயற்சியில் ரவிகுமாருக்கு ஏதாவது தொடர்போ அல்லது சம்பந்தமோ இருந்திருப்பின் சம்பவத்தின் பின்னர் சில சந்தேக நபர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பின்னரும் தான் கைது செய்யப்படும் வரை பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்திருந்த அவர் இலங்கையில் தொடர்ந்து தங்கி இருப்பாரா? என்ற கேள்வி எழுகின்றது.

எந்தவித குற்றமும் புரியாமல் 2008ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ஆம் திகதி வரை தடுப்புக்காவல் உத்தரவில் தடுப்பு முகாமிலும் வெலிகடைச்சிறைச்சாலையிலும்தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மூன்று வருடங்களின் பின்னர் எந்தவிதமான குற்றமும் மின்றி 2011ஆம் ஆண்டு ஆடி மாதம் 08ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். தனது சொந்த மண்ணில் தனது வயதான நோய்வாய்ப்பட்ட தாயை பராமரித்துக் கொண்டு வர்த்தகத்தை செய்யும் நோக்கில் வந்து சேர்ந்த பிரித்தானிய பிரஜையான ரவிகுமார் செய்யாத குற்றத்துக்காக தண்டணை அனுபவித்தார். இந்த நிர்க்கதியான நிலைமை மிகவும் வேதனைப்படவேண்டிய விடயமாகும்


*விடுதலையான 08-08-2011*
*கட்டுநாயக விமான நிலையத்தில்*

கைது செய்யப்பட்ட மற்றைய ஆறு சந்தேகநபர்களில் ஐந்து சந்தேக நபர்கள் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் 2013ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்படடது. இந்த வழக்கில் மூன்றாம் நான்காம் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் மற்றைய எதிரிகளுக்கு எதிரான வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. சந்தர்ப்ப சூழ்நிலை ஒருவரை எப்படி சிக்கலில் மாட்டிவிடும் என்பதற்கு இந்த வழக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

# கோட்டாபய ராஜபக்ச கொலை முயற்சி?

## 2006 – 2020 (புற்றுநோயாளி 14 வருடத்தின் பின் விடுதலை)

20

சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய பிரதி சொலிசிடர் ஜெனரல் ரோகாந்த அபேசூரிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததையடுத்து தனது சமர்ப்பணத்தில்

பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் நான்காம் எதிரியான செல்வச்சந்திரனை தடுத்து வைத்து விசாரணை செய்த காலத்தில் கைதியை தாக்கவோ சித்திரவதை செய்யவில்லையெனவும் வழக்கிலிருந்து விடுதலையாவதற்காக தனது உடலில் பத்து கடும் காயங்களை கைதி தானே தன்னைத் தாக்கி சுய காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என வாதத்தை முன்வைத்ததுடன் கோத்தபாய கொலை முயற்சி தாக்குதலின் எதிரி சதியில் ஈடுபட்டதையும் கொலை முயற்சிக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக தனது சொந்த விருப்பத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார் எனவே எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச தரப்பில் எதிரிக்கு எதிரான சான்றாக நெறிப்படுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிடவேண்டும் என வாதத்தை முன் வைத்தார்

### நான்காம் எதிரிசார்பில் எனது சமர்ப்பணத்தில்

இந்த வழக்கில் எதிரியின் சாட்சியங்களை அரசதரப்பு நிறைவு செய்ததையடுத்து நான்காம் எதிரியான செல்வசந்திரன் சந்திரபோஸின் சாட்சியத்தினை நான் நெறிப்படுத்துகையில எதிரி தனது சாட்சியத்தில்

1993ம் ஆண்டு புற்றுநோய்க்கு சிகிட்சை பெறுவதற்காக கொழும்பு வந்து மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வரும்பொழுது கொழும்பில் 2006ம்ஆண்டு தன்னை பயங்கரவாத புலனாய்வு பிரிவுப் பொலிசார் கைது செய்து தடுத்து



வைத்து சித்திரவதை செய்து தன்னிடம் வாக்குமூலம் பெற்றதாக தனது சாட்சித்தில் தெரிவித்ததுடன், 2009ம் ஆண்டு ஆடி மாதம் 14ம் திகதி காலை பொலிசார் வைத்தியப் பரிசோதனைக்கு சட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் கணேசுஷ் முன்னிலையில் கொண்டுசென்றபொழுது தன்னை பொலிசார் சித்திரவதை செய்ததையும் அதனால் தனக்கு ஏற்பட்ட கடும்காயங்களையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் காட்டியபொழுது சட்ட வைத்திய அதிகாரி காயங்களை பார்வையிட்டு பரிசோதனை செய்ய மறுத்ததுடன் பொலிசார் சித்திரவதை செய்ததையோ அதனால் ஏற்பட்ட காயங்களைப் பற்றிய விபரங்களையோ சட்ட வைத்திய அறிக்கையில் பதிவு செய்தால் தனக்கும் பிரச்சனை எனக்கும் பிரச்சனை வரும் என கூறி தன்னை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தவில்லையென சாட்சியமளித்தார்.

மேலும் தனது சாட்சியத்தில் 2009ம் ஆண்டு ஆடி மாதம் 14ம் திகதி மாலை ஏற்கனவே தட்டெழுத்து செய்யப்பட்டிருந்த சில ஆவணங்களில் பலவந்தமாக கையொப்பங்களைப் பெற்ற பின்னர் மறுதினம் 15ம் திகதி பொலிசார் தன்னை சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயுரதன் முன்னிலைப்படுத்திய பொழுது பொலிசார் சித்திரவதை செய்ததையும் அதனால ஏற்பட்ட கடும்காயங்களையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் காட்டியபொழுது சட்ட வைத்திய அதிகாரி காயங்களை பார்வையிட்டு உடற்பரிசோதனை செய்ததுடன் பொலிசார் செய்த சித்திரவதைகளை நீதிமன்றுக்கு முறையிடும்படியும் ஆலோசனை வழங்கினார்.

## நீதிமன்றில் முறையீடு

சட்ட வைத்திய அதிகாரியின் காரியாலயத்திலிருந்து பொலிசார் தன்னை நீதிமன்றில் ஆஜராக்கிய பொழுது பொலிசார் தன்னை சித்திரவதை செய்ததை நீதிமன்றிலும் முறையிட்டதாக சாட்சியம் அளித்ததுடன் மேலும் தனது சாட்சியத்தில் 2012ம் ஆண்டு மற்றும் சட்டரீதியற்ற கைதும் தடுத்து வைப்பும் மற்றும் சித்திரவதைக்கும் எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு உயர் நீதிமன்றினால் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அரச தரப்பில் சாட்சிமளித்த சட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் கணேஷ் பொலிசார் கைதியை தாக்கி சித்திரவதை புரிந்ததற்கான எந்தக் காயங்களும் கைதியின் உடலில் காணப்படவில்லையென சட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டதுடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

எனினும் இவ்வழக்கில் எதிரித் தரப்பால் சான்றுக்கு அழைக்கப்பட்ட சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயுரதனின் சாட்சியமும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்திரபோஸ் செல்வச்சந்திரனினால் மன்றுக்கு வழங்கப்பட்ட சாட்சியமும் குற்றஞ்சாட்டப்பட்டவரை சித்திரவதை செய்ததன் மூலம் ஏற்பட்ட காயங்களும், சட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் கணேஷின் சாட்சியம் உண்மைக்கு புறம்பான பொலிசாருக்கு சார்பான சாட்சியம், என்பது நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

## சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதன்

எதிரிம தரப்பின் சாட்சியமாக சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதனின் சாட்சியத்தில் புற்றுநோயாளியான கைதியை பொலிசார் சித்திரவதை செய்ததினால் கைதியின் உடலில் பன்னிரண்டு கடுங்காயங்கள் காணப்படுவதாகவும் அந்தக் காயங்கள் கைதி தடுப்புப் காவலில் பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலத்தில் ஏற்பட்ட காயங்கள் என சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் சாட்சியமளித்ததுடன் சட்ட மருத்துவ அறிக்கையையும் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

சட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் கணேசுஷின் சாட்சியத்தின்படிமுதலில் எதிரியின் உடலில் எந்தக் காயங்களும் இல்லையென வாதத்தை முன்வைத்த பிரதி சொலிசிடர் ஜெனரல் எதிரித்தரப்பால் சான்றுக்கு அழைக்கப்பட்டு சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயுரதன் எதிரியின் உடலில் 12 காயங்கள் காணப்படுவதாக சாட்சியமளித்ததன் பின்னர் கைதியின் உடலிலுள்ள காயங்கள் பொலிசாரின் சித்திரவதையால் ஏற்பட்டவையல்ல எதிரித் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டவை என்ற கற்பனை வாதத்தை முன்வைத்தார். ஆனால் கைதியின் உடலிலுள்ள காயங்கள் ஏற்பட்டுள்ள இடங்கள் மற்றும் காயங்களின் தன்மையை பரிசீலனை செய்த சட்ட வைத்திய அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதன் கைதியான சந்திரபோஸின் உடலில் காணப்படும் காயங்கள் கைதி தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட சுயகாயங்கள் அல்ல அவை சித்திரவதை மூலம் ஏற்பட்ட காயங்கள் என சாட்சியம் அளித்துள்ளார் என்பதை எதிரிதரப்பின் சார்பில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன்

அரச தரப்பினதும் எதிரித் தரப்பினதும் வாத பிரதி வாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் சட்ட வைத்திய அதிகாரி சுப்பிரமணியம் கணேசுஷின் சாட்சியத்தை நிராகரித்ததுடன் சட்ட வைத்திய அதிகாரியான உருத்திரமூர்த்தி மயுரதனின் சாட்சியத்தின்படி கைதியின் உடலில் காணப்படும் காயங்கள் கைதியினால் சுயமாக ஏற்படுத்திக் கொண்ட காயங்கள் அல்ல பொலிசாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என எதிரித்தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவே அரச தரப்பால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி கட்டளை வழங்கினார். குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் வேறு சான்றுகள் இல்லாத நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படவேண்டும். என்ற எனது

வாதத்தை அரசதரப்பில் ஆஜராகிய அரசுசட்டத்தரணி எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து "தொடர்ந்து சிறையில் வைப்பது எந்தச் சட்டத்தின் கீழ்" என்று அரச தரப்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணியிடம் மேல் நீதிமன்ற நீதிபதி கேள்வி எழுப்பினார்.

## பிரதான வழக்கு விசாரணை

இந்த வழக்கின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சான்றாக ஏற்க மேல் நீதிமன்றம் நிராகரித்ததையடுத்து பிரதான விளக்கத்துக்காக நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது எனது சமர்ப்பணத்தில் "இந்த வழக்கின் நான்காம் எதிரியான சந்திரபோஸ் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ மீது கொலை முயற்சித் தாக்குதல் நடாத்தப்படுவதற்கு முன்னரே 2006ம் ஆண்டு நவம்பர் 26ம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை புரிந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாகக் கொண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நான்காம் எதிரிக்கு சுயமாக வழங்கப்பட்ட வாக்கு மூலம் அல்ல என இந்த நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது. இந்த வாக்குமூலத்தைத் தவிர வேறு எந்தச் சான்றுகளையும் சட்டமா அதிபர் திணைக்களம் சான்றாக குற்றப்பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்பது மட்டுமின்றி இந்தகௌரவ நீதிமன்றம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சான்றாக ஏற்க மறுத்து நிராகரித்த தினத்திலிருந்து கடந்த நான்கு மாதங்களாக நான்காம் சந்தேக நபருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க இந்த வழக்கைத் தொடர்ந்து நடாத்த சாட்சியம் உள்ளதா என்பதை நீதிமன்றிற்கு அறிவிக்காமல் தொடர்ந்து தவணை கோருவது பதின்மூன்று வருடங்களுக்கு மேல் சிறைவாசம் அனுபவிக்கும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இந்தக் கைதிக்கு எதிராக சாட்சியங்கள் இல்லாமல் சாட்சியங்களை முன்வைக்காமல் தொடர்ந்து தடுத்து வைப்பது சட்டரீதியற்ற செயல்பாடாகும் சான்று இருந்தால் வழக்கை தொடர்ந்து நடாத்தவேண்டும் சான்றில்லையெனில் எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

## நீதிபதி அரசதரப்பிடம் கேள்வி

அரச தரப்பில் ஆஜராகிய பிரதி சொலிசிடர் ஜெனரல் ரோகாந்த அபேசூரியவை நோக்கி மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி நீதிமன்றம் இந்த வழக்கின் கோவையை நன்கு பரிசோதித்த பொழுது நான்காம் எதிரிக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடாத்த எந்தச் சான்றுகளும் இல்லை என்பதை நீதிமன்றம் அவதானித்துள்ளதாகவும் எனவே சான்றுகள் இல்லாத முன்வைக்கப்படாத நிலையில் நான்காம் எதிரியை விடுதலை செய்யாமல் எந்தச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறையில் தடுத்து வைப்பது என்ற கேள்வியை முன்வைத்த பொழுது அரச சட்டவாதி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை தவிர வேறு சான்றுகள் இல்லை என்பதனை ஏற்றுக்கொள்வதாகவும் அரச தரப்புக்கு ஓரிருநாட்கள் ஒரு சந்தர்ப்பத்தை தரும்படியும் கேட்டுக் கொண்டார்





அரச தரப்பின் இந்த வேண்டுகோளை கவனத்தில் எடுத்த நீதிபதி இறுதியாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதாக எதிர்த்தரப்பை பார்த்துக் கூறி 2019ம்ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதிக்கு இந்த வழக்கை ஒத்திவைத்தார். மீள விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வேளையில் சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான அரச சட்டவாதி இந்த வழக்கின் சட்டமா அதிபர் வழக்கை தொடர்ந்து நடாத்த சான்றுகள் உண்டா என்பதை தீர்மானிக்க மேலும் கால அவகாசம் கோரிய போது அதற்கு எதிர்த் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததுடன் சட்டமா அதிபர் வழக்கை தொடர்ந்து நடாத்த சான்றுகளை நீதிமன்றில் முன்வைக்கப்படாவிடின் குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிமன்றம் விடுதலை செய்ய சட்டரீதியான அதிகாரம் உண்டு என சட்ட அறிக்கைகளை ஆதாரமாகக் முன்வைத்ததை தொடர்ந்து அரச தரப்பினதும் எதிர்த் தரப்பினதும் வாதத்தை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி எதிர்த் தரப்பின் வாதத்தையேற்று சந்திரபோஸ் செல்வச் சந்திரனை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

கைது செய்யப்படும் பொழுது புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த சந்திரபோஸ் செல்வச்சந்திரன் 2019ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட பின்னர் ஒரு வருட காலத்தில் மரணமடைந்தார் என்பது மனவேதனைக்குரிய விடயமாகும்

# ஊடகவியளாளர் பரமேஸ்வரி, சுகந்திகா கைது

2006

21

பயங்கரவாதச் சட்டமும் அவசரகால ஒழுங்கு விதிகளும் நடைமுறைக்கு வந்தபின்னர் ஜனநாயகத்தின் வழிநின்று அரசியல் அமைப்பு மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான கடமையைச் செய்த பல ஊடகவியலாளர்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. இலங்கை வரலாற்றில் ஆங்கிலேயரிடமிருந்து இரத்தம் சிந்தாமலேயே சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து தொடர்ச்சியாக இனமுரண்பாட்டையுடைத்து சமூகவியல் மாற்றத்தை ஜனநாயக வழியில் ஏற்படுத்த முனைந்த பல ஊடகவியலாளர்கள் உயிர் அச்சுறுத்தலுக்கும் தாக்குதல்களுக்கும் உட்படுத்தப்பட்டது மட்டுமின்றி 40கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிலர் இந்தச் சட்டங்களின் கீழ் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் கைது எனக்கூறி தடுத்துவைக்கப்பட்டனர்.

2006ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஊடகத்துறையைச் சேர்ந்த முனுசாமி பரமேஸ்வரி, சுகந்திகா தம்பிராஜா, யசிகரன் வடிவேலு, வளர்மதி யசிகரன், நடேசபிள்ளை வித்தியாதரன் ஆகியோர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின்கீழ் தடுத்துவைக்கப்பட்டு இறுதியில் விடுதலை செய்யப்பட்டனர். முதல் நால்வருக்கும் சுவிட்சர்லாந்து அரசாங்கம் தங்கள் நாட்டில் புகலிடம் கொடுத்தது. இந்நாட்டில் ஊடக சுதந்திரத்தை நிறுவுவது மட்டுமல்ல அதை நிலைநாட்டுவதும் சிரமமானது ஊடகப் பயங்கரவாதத்தை தடுத்து நிறுத்துவதும் சாத்தியமற்றது.

## பரமேஸ்வரியும் சுகந்திகாவும் கைது

மௌபிம வாராந்த பத்திரிகையின் நிருபரான முனுசாமி பரமேஸ்வரியும், சக்தி தொலைக்காட்சியில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமையாற்றிய சுகந்திகா தம்பிராஜாவும் வெள்ளவத்தையில் பெண்கள் விடுதியில் தங்கியிருந்த வேளையில் 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ம் திகதி இரவு 9 மணியளவில் சுகந்திகா தம்பிராஜாவுக்கு ஒரு



தொலைபேசி அழைப்பு வந்தது. "உங்கள் சகோதரரை வெள்ளவத்தை சவோய் தியேட்டருக்கு அருகாமையில் வைத்து வெள்ளைவானில் வந்தவர்கள் கடத்திச் செல்ல முயற்சிக்கிறார்கள். உடனடியாக சவோய் தியேட்டருக்கு அருகாமைக்கு வாருங்கள்"

அதே நபர் பரமேஸ்வரியுடனும் தொடர்புகொண்டு இதே விடயத்தைக் கூறியதையடுத்து உடனடியாக பரமேஸ்வரியும், சுகந்தியும் சவோய் தியேட்டருக்கு அருகாமையில் வரும்பொழுது, இலக்கத் தகடு இல்லாத வெள்ளை வேனில் வந்த சிலரால் இவ்விருவரும் பலாத்காரமாக வாகனத்தில் ஏற்றப்பட்டு கடத்திச் செல்லப்படும் பொழுது சுகந்திகாவின் தம்பியார் ஏற்கனவே கடத்தப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில் வாகனத்தின் உள்ளிருந்துள்ளார். பின்னர் இம்மூவரும் பயங்கரவாத தடைப்பிரிவு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்றுத் தடுத்து வைக்கப்பட்டனர்.

## பரமேஸ்வரியும் சுகந்தியும் தற்கொலைக் குண்டுதாரிகள்

கிழக்கு மாகாணத்தின் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகந்திகா தம்பிராஜா, ஒரு தற்கொலைக் குண்டுதாரி என்றும், கொழும்புக்கு தற்கொலைத் தாக்குதலுக்காக புலிகள் இயக்கத்தினால் அனுப்பப்பட்டவரென்றும், அவர் தற்கொலைத் தாக்குதலை நடாத்துவதற்குப் பரமேஸ்வரி உடந்தையாகயிருந்து தங்குமிட வசதி செய்துள்ளாரென்றும் பொலிசாரால்

கூறப்பட்டது. இதேவேளை கைதுசெய்யப்பட்ட மறுதினம் வெளியாகிய மூன்று சிங்களப் பத்திரிகைகள் "பரமேஸ்வரியின் நண்பியான சுகந்திகா தம்பிராஜாவினை விசாரணை செய்த பொழுது சுகந்திகா தனது வாக்குமூலத்தில் 10 கிலோ எடையுள்ள தற்கொலை வெடிகுண்டைப்பற்றிக் கூறியுள்ளதாகவும் அதனைக் கைப்பற்ற பொலிசார் நடவடிக்கை எடுப்பதாகவும்" முதல் பக்கத்தில் முக்கிய செய்தியாகப் போட்டிருந்தன. அதே வேளை பரமேஸ்வரியையும் சுகந்திகாவையும் கடத்திச் செல்வதற்கு பொலிசார் பயன்படுத்திய சுகந்திகாவின் தம்பியார் எந்தக் குற்றச்சாட்டுமின்றி பொலிசாரால் விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாத தடைப்பிரிவுப் பொலிசாரால் அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பரமேஸ்வரியும் சுகந்திகா தம்பிராஜாவும் 2007ஆம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். ஆனால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் இவர்கள் இருவரையும் தொடர்ந்து விசாரிக்க வேண்டியுள்ளதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இவர்களுக்கு எதிராக எந்த சான்றும் இருப்பதாகவோ அல்லது சிங்கள பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த 10 கிலோ வெடிகுண்டைப் பற்றியோ எதுவுமே பொலிசாரின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

2007ஆம் ஆண்டு பங்குனி மாதம் 09ம் திகதி அன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் அன்றைய தினம் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட மேலதிக அறிக்கையில் மேலதிக விசாரணை நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததே தவிர இவர்களுக்கு எதிராக எந்த சாட்சியமும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் எந்தச் சான்றும் இல்லாமல் தொடர்ந்தும் சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் தடுப்புக் காவல் உத்தரவை பெற்று தடுப்புக்காவலை தொடர்ந்து நீடிப்பதன் மூலம் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பயங்கரவாத தடைப்பிரிவுப் பொலிசாரால் சட்டரீதியற்றமுறையில் கடத்தப்பட்டு அவசரகால ஒழுங்குவிதியின் கீழ் பின்னர் கைது எனக்கூறி எந்தவித சான்றுகளுமின்றி தொடர்ந்தும் தடுத்துவைத்தல் போன்றவற்றைக் கண்டித்து உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களின் மூலம் பத்திரிகையாளர்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தனர்.

## மனித உரிமை மீறல் மனு

தொடர்ந்தும் இவ்வழக்கு எத்திசையில் பொலிசாரால் நகர்த்தப்படும் என்பதைத் துல்லியமாகக் கணித்துக் கொண்ட எனது மனைவி சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மனித உரிமை மீறல் பற்றிய அடிப்படைகளோடு வலுவான மனுவொன்றைத் தாக்கல் செய்வதே இவர்களை விடுதலை செய்வதற்கு வழிவகுக்கும் என்பதனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ, பயங்கரவாத தடைப்பிரிவுப் பொறுப்பதிகாரி பிரசன்னா டி அல்விஸ், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு உயர்நீதிமன்றத்தில் அடிப்படைமனித உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவில் சித்திரவதையிலிருந்து சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை, சட்டத்தின்முன்

சமத்துவம் மற்றும் சமமான பாதுகாப்புகளுக்கான உரிமை, சாதியம், மொழி, அரசியல் கருத்து என்பன காரணமாக பாரபட்சம் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை, வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவற்றுடன் பலவந்தமாகக் கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுத்துவைக்கப்படுவதிலிருந்து சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

## மனு விசாரணைக்கு ஏற்பு

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முதல் நாளன்றே இந்த மனுவை தொடர்ந்தும் விசாரணை செய்ய அனுமதியளிப்பதாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அறிவித்தனர். பரமேஸ்வரி சார்பாக தாக்கல் செய்திருந்த இந்த மனுவில், தான் ஒரு இந்திய வம்சாவளிப் பெண் எனவும் மலைநாட்டிலுள்ள கம்பளை தனது ஊரெனவும் தான் சிறிதுகாலம் வீரகேசரி பத்திரிகையிலும் பின்னர் கடத்திச் செல்லப்படும் பொழுது மௌபிம என்ற வாராந்த சிங்கள பத்திரிகையின் நிருபராக கடமையாற்றியதாகவும் தானும் சுகந்திகா தம்பிராஜாவும் வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் விடுதியில் தங்கியிருந்ததாகவும், பத்திரிகை நிருபரான தான் பல முக்கிய அரசியல் பிரமுகர்களையும் அரச உயர் அதிகாரிகளையும் பொலிஸ் அதிகாரிகளையும் நேர்காணல் கண்டு அதனையே பத்திரிகையில் பிரசுரித்ததாகவும் அதைத் தவிர தான் எந்தவித சட்டவிரோதமான காரியத்திலும் ஈடுபடவில்லையெனவும் கூறியிருந்தார்.

பத்திரிகை நிருபர் என்றமுறையில் தனது கடமையையே புரிந்துள்ளதாகவும் தன்னை என்ன காரணத்துக்காக கைது செய்து தடுத்து வைத்துள்ளார்கள் என்று கூறப்படவில்லையெனவும் தன்னைக் கடத்தியவர்களில் ஒருவர் தன்னைப் பயமுறுத்தி நீர் இனிமேல் மௌபிம பத்திரிகை காரியாலயத்தில் வேலை செய்யக்கூடாது. அத்துடன் எந்தப் பத்திரிகைக்கும் இனிமேல் எழுதவும் கூடாது என அச்சுறுத்தியதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டதுடன், தன்னைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது நேரடியாகவே ஜனநாயகத்துக்கும் பத்திரிகை சுதந்திரத்திரத்துக்கும் கொடுக்கப்பட்ட அடி எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டது.

## தலை நகரத்தில் ஊடகவியலாளர்கள் போராட்டம்

பரமேஸ்வரி தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைத்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் உடனடியாக விடுதலை செய்யக்கோரியும் பரமேஸ்வரி சார்பாக சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் (Sri Lanka Muslim Media Forum) பெடரேசன் ஒப் மீடியா எம்புளொயஸ் டிரேட் யூனியன் (Federation of Media Employers Trade Union) பிரீ மீடியா மூவ்மன்ட் (Free Media Movement) சிறிலங்கா தமிழ் மீடியா (Sri Lanka Tamil Media Alliance) ஆகிய நான்கு அமைப்புக்களையும் கொண்ட இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (Sri Lanka Working Journalists Association) தமது கடும் எதிர்ப்பை வெளிக்காட்டி பரமேஸ்வரியை விடுதலை செய்யும்படி பல போராட்டங்களை தலைநகரத்தில் பல இடங்களில் தொடர்ச்சியாக நடாத்தின.

இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து (FMM) சுதந்திர பத்திரிகையாளர் அமைப்பு தனது அறிக்கையில் தங்களுடைய பிரதிநிதிகள் பரமேஸ்வரியை சென்று பார்வையிட பொலிஸ் அதிகாரிகளிடம் அனுமதி கோரியதாகவும் ஆனால் சக பத்திரிகையாளர்களான தமக்கு அனுமதி மறுக்கப்பட்டமையால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல போராட்டங்களை நடாத்த இருப்பதாகவும் அறிவித்தது.

## பரமேஸ்வரி விடுதலை

பரமேஸ்வரி சார்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு விசாரணைக்கு வந்த வேளையில் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிசாரின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி றொசிகா டி சில்வா மனுதாரரான பரமேஸ்வரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரமில்லையெனவும் எந்தவித சான்றும் இல்லாத காரணத்தால் பரமேஸ்வரியை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் பரமேஸ்வரியை விடுதலை செய்யும்படி பிரதான நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்திருப்பதாகவும் உயர்நீதிமன்றில் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பரமேஸ்வரி விடுதலை செய்யப்படவுள்ள விடயம் பத்திரிகைத்துறைக்குத் தெரியவந்ததையடுத்து நூற்றுக்கணக்கான பத்திரிகைத் துறையைச் சேர்ந்தோரும் பரமேஸ்வரி பணிபுரிந்த பத்திரிகையான மௌபிமவின் நிர்வாகிகளும் நீதிமன்ற வாயிலில் பேனையால் செய்யப்பட்ட மாலைகள், மலர்ச்செண்டுகள் என்பவற்றுடன் நிறைந்து காணப்பட்டனர்.

நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பரமேஸ்வரி நீதிமன்றுக்கு வெளியே வந்தபொழுது அவருக்கு பேனாமாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்ச்செண்டும் கொடுத்து தமது சந்தோசத்தைத் தெரிவித்தனர். பரமேஸ்வரி வெளியே வந்து தனக்காக பாடுபட்ட சகல பத்திரிகை அமைப்புக்களுக்கும், சக நண்பர்களுக்கும் தனக்காக நீதிமன்றில் வாதாடிய சட்டத்தரணிகளுக்கும் நன்றி கூறினார்.

இந்த விடுதலையையடுத்து (Sri Lanka Working Journalist Associations) இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சட்டமா அதிபர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட மௌபிம பத்திரிகையின் நிருபர் பரமேஸ்வரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு சான்று இல்லையென கூறி அவரை விடுதலை செய்ததற்காக சட்டமா அதிபரின் முடிவை வரவேற்றதுடன் இது உண்மைக்கும், நீதிக்கும் கிடைத்த வெற்றியென்றும் ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நான்கு மாதம் வரை தடுத்து வைக்கப்பட்டமை துரதிஸ்டவசமானது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் மூன்று சிங்கள பத்திரிகையிலும் சுகந்திகா தம்பிராஜாவின் வாக்குமூலத்தில் கூறப்பட்டதாகப் புனையப்பட்ட பத்துக் கிலோ எடைகொண்ட மனிதவெடிகுண்டு பற்றிய செய்தி முற்றுமுழுதாக தீயநோக்குடன் மூன்று பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டமை வெளிச்சத்துக்கு வந்துள்ளதெனவும் பயங்கரவாதச் தடைச்சட்டத்தினைத்

தவறான நோக்கத்தில் பயன்படுத்தி ஊடகவியலாளாரிடையே பிளவை ஏற்படுத்த இந்தச்சட்டம் பாவிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு அறிக்கையை வெளியிடப்பட்டது.

## சுகந்திகா ஒரு தற்கொலைக் குண்டுதாரி

இந்த வழக்கின் இன்னுமொரு முக்கிய நிகழ்வு யாதெனில் பரமேஸ்வரி சார்பாக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழங்கு நடந்து கொண்டிருந்த வேளையில் உயர் நீதிமன்றுக்கு பரமேஸ்வரியை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக அரச சட்டத்தரணி உயர்நீதி மன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களம் எழுத்து மூலமாக அப்போதயை பொலிஸ் மா அதிபருக்கு பரமேஸ்வரியையும் அவருடன் சேர்த்துக் கைதுசெய்யப்பட்ட சுகன்தி தம்பிராஜாவையும் விடுதலை செய்யும்படி அறிவுறுத்தல் அனுப்பியிருந்தது.

இந்த அறிவுறுத்தல் அனுப்பிய வேளையில் புலனாய்வுப் பிரிவினர் தமது விசாரணை அறிக்கையில் பரமேஸ்வரியுடன் கைதுசெய்யப்பட்ட சுகந்திகா தம்பிராஜா நன்கு பயிற்றப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியெனவும், தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடாத்த கொழும்புக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கையைப் பார்த்த பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் உடனடியாக சுகந்திகாவின் விடுதலை சம்பந்தமாக மீள்பரிசீலனை செய்யும்படி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கேட்டிருந்தனர்.

அத்துடன் பொலிஸ் மா அதிபரான விக்டர் பெரேரா சுகன்தியை விடுதலை செய்ய சட்டமா அதிபர் எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்யும்படி சட்டமா அதிபரை வேண்டிக்கொண்டதுடன், சுகன்தியை புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் பின்தொடர்ந்து விசாரணை மேற்கொண்டதுடன் அவரைப்பற்றிய சகல விபரங்களையும் தகவல்களையும் பெற்று சுகந்திகா ஒரு தற்கொலைக் குண்டுதாரி என்பதற்கு விசாரணையில் பல சாட்சியங்கள் உள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து சுகந்திகாவை விடுதலை செய்ய எடுத்த முடிவு சட்டமா அதிபரினால் திருப்பி அழைக்கப்பட்டது. (Daily Mirror 31-03-2007, Page A9)

இதில் குறிப்பிட்டு விசேடமாக குறிப்பிட வேண்டிய சம்பவம் யாதெனில் பரமேஸ்வரியுடன் கைது செய்யப்பட்ட சுகந்திகாவையும் விடுதலை செய்யும்படி பிரதான நீதவான் நீதிமன்றிக்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தல் அனுப்பிய பின்னர் சுகந்திகாவின் விடுதலை உத்தரவு மீளப்பெறப்பட்டதுதான்

பரமேஸ்வரி மட்டுமே உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆனால் சுகந்திகா தம்பிராஜா அடிப்படை மனித உரிமை வழக்கினை பொலிசாருக்கு எதிராக தாக்கல் செய்ய விரும்பாத காரணத்தினால். அடிப்படை மனித உரிமை வழக்கினை தாக்கல் செய்ய முன்வரவில்லை. பரமேஸ்வரி சார்பில் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை வழக்குத் தாக்கல் செய்யப்படாது விட்டிருந்தால் சுகந்திகாவுக்கு ஏற்பட்ட அதேநிலைதான் பரமேஸ்வரிக்கும் ஏற்பட்டிருக்கும். உயர்நீதிமன்றில் சுகந்திகா

சார்பில் அடிப்படை மனித உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சுகந்திகாயை விடுதலை செய்ய சட்டமா அதிபர் முடிவெடுத்து அந்த விடுதலை செய்யும் முடிவை உயர்நீதிமன்றில் அறிவித்திருந்தால் சுகந்திகா தம்பிராஜாவின் விடுதலையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றுக்கு அனுப்பிய பின்னர் சட்டமா அதிபரினால் மீளப் பெற்றிருக்க முடியாது.

## சுகந்திகா விடுதலை

கைதுசெய்யப்பட்ட தினத்திலிருந்து தொடர்ந்து 16 மாதங்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு பல கோணங்களில் விசாரணை நடாத்திய பொலிசாரினாலும் தற்கொலைக் குண்டுதாரி சுகந்திகாயென்றும் சுகந்திகாக்கு எதிராக பல சான்றுகள் உள்ளதாகவும் கூறிய அப்போதைய பொலிஸ்மா அதிபராலும் சுகந்திகாக்கு எதிராக எந்தச்சான்றும் வழக்கில் முன்வைக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

இவரது விடுதலையை அடுத்து பி.பி.சி. சிங்கள சேவை (BBC Sinhala.com) பொலிஸ் பேச்சாளரான என்.ஏ.இளங்கக்கோனிடம் (ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர்) இந்த விடுதலை சம்பந்தமாக நேர்காணல் கண்டபொழுது ஏன் சுகந்திகா தம்பிராஜா ஒரு தற்கொலைக் குண்டுதாரி எனப் பத்திரிகை மூலம் பாரிய விளம்பரம் கொடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொடுத்த பதில், “அவ்வாறு அவர் ஒரு தற்கொலைக் குண்டுதாரி என பாரிய விளம்பரம் கொடுத்ததற்கு பத்திரிகையாளர்களே பொறுப்புக் கூறவேண்டுமென்றும், அவ்வாறு பத்திரிகைகளில் பிரசுரிக்குமுன் உண்மையான தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்புகொண்டு தகவலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தியே பத்திரிகையில் பிரசுரித்திருக்க வேண்டும்” என்றும் கூறியுள்ளார்.

இந்த வழக்கில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டு நான்கு மாதங்களில் விடுதலையான பரமேஸ்வரியும் 16 மாதங்களின் பின் விடுதலையான சுகந்திகாவும் செய்யாத தவறுக்காக தண்டிக்கப்பட்டனர் அதிலும் கைது செய்யப்பட்ட பரமேஸ்வரி கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து நான்கு மாதங்களில விடுதலை செய்யப்பட்டபொழுது விடுதலை செய்யப்பட வேண்டிய சுகந்திகாவை மேலும் 12 மாதங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்த போதிலும் பொலிசாருக்கு எந்தவிதமான சான்றும் கிடைக்கவில்லையாம்.

சில சமூக விசமிகள் திட்டமிட்டு பிழையான தகவல்களை பொலிசாருக்கு வழங்கி பரமேஸ்வரியையும் சுகந்திகாவையும் (பெண் புலி 10 கிலோகுண்டு) பழிவாங்கும் நோக்கத்தில் செயல்பட்டுள்ளனர்(எதிரிகள் உள்ளே) தமக்கு வழங்கப்பட்டது உண்மைக்கு மாறான தகவல் என்பதைக் கண்டுபிடிக்க பொலிசாருக்கு 16 மாதம் தேவைப்பட்டுள்ளதுதான் வியப்புக்குறியது எது எப்படி நடந்த போதிலும்

சில உடகவியலாளர்கள் தவறான உண்மைக்கு புறம்பாக செய்திகளை வெளியிட்டிருந்தாலும் கூட பெரும்பாலான சக ஊடகவியலாளர்கள் பரமேஸ்வரியின்

விடுதலைக்காக முன்னின்று உழைத்தனர். பரமேஸ்வரியும் சுகந்திகாவும் கடுமையாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் நீதி கேட்டு ஒற்றுமையாகப் பாடுபட்டமைக்கும் நியாயத்துக்கும் கிடைத்த வெற்றியென்றால் அது மிகையாகாது.

சுகந்திகா தம்பிராஜாவுக்கு சுவிட்சர்லாந்து நாடு அகதி அந்தஸ்து வழங்கிய போதிலும் அங்கு செல்ல விமானக் கட்டணத்தைச் செலுத்தும் வசதி சுகந்திகாவுக்கு இருக்கவில்லை. இதற்கான வசதியும் செய்து கொடுத்து சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி வைத்தோம். அதற்காக கௌரி சங்கரி எடுத்துக் கொண்ட அக்கறை மிகவும் முக்கியமானது. ஏனெனில் தனது இரத்த சகோதரமொன்றுக்கு எப்படியெல்லாம் ஈடுபாட்டுடன் உதவுவதற்கு முயற்சி எடுப்பாரோ அப்படியே அவர் சிரத்தையெடுத்துக்கொண்டார். அதுதான் கௌரியின் இயல்பு.

# புலனாய்வாளர் தர்மதாச விடுதலை

2007–2019

## புலனாய்வாளர் தர்மதாச விடுதலை 2007–2019

1. பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நஸ்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும். 12 வருடங்களின் பின்னர் நிரபராதியென விடுதலையான கைதிக்கு நஸ்டஈடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டமையையடுத்து ரூபா 55,23,808.18 இழப்பீடு அரச தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.

2. புலனாய்வு அதிகாரி தர்மதாச பயங்கரவாதத்தடைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட தினத்தில்தான் மகன் பிறந்தான் மகனை சிறைச்சாலைக்கு அழைத்து வரவேண்டாம் என மனைவிக்கு வேண்டுகோள் 12 வருட சிறைவாசத்தின்பின் விடுதலையான தினம் முதல் முதலாக தன் மகனை சந்தித்த தந்தை

3. சிறையில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டதனால் தற்பொழுது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்த சுத்திகரிப்பு நிலைக்கு தள்ளப்பட்டு 2021ம் ஆண்டு மார்கழி மாதம் காலமானார்.

கொழும்பு-08 பொரளை பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இரகசியமாக இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் புலனாய்வு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துர்யலாகே தர்மதாச 2007ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அரசபுலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத்

தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை நடாத்திய பின்னர் சட்டமா அதிபரினால் துர்யலாகே தர்மதாசவுக்கு எதிராக அவரால் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பில் வழக்கப்பட்டதாக அரச தரப்பினால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 12 சாட்சியங்களை அரச சாட்சிகளாகக் குறிப்பிட்டு மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் 2010ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

(1) RDX 23 கிராம் தனி உடமையில் வைத்திருந்தமை
(2) 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சைனைட் வில்லைகளை் தனி உடமையில் வைத்திருந்தமை
(3) பாதுகாப்பு இரகசியங்களை புலிகளின் உளவுத் துறைக்கு வழங்கியமை

இந்தவழக்கில் முக்கிய சான்றாக அரசதரப்பில் முன் வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உண்மைத் தன்மையறிய உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட போது கொழும்பு பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ.ரணசிங்கவின் சாட்சியத்தினை அரச சட்டத்தரணி நெறிப்படுத்திய பின்னர் எதிராளி தரப்பின் குறுக்கு விசாரணைக்காக காலம் வழுங்கப்பட்டது. பொலிஸ் அத்தியட்சகர்



எஸ் எல் ஏ ரணசிங்கவின் சாட்சியத்தினை எதிராளி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய நீதிமன்றத்தினால் பல தவணைகள் வழங்கப்பட்ட போதிலும் அரச சாட்சியான பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காமையினால் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட 2010ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டு வரை விசாரணைகள் நடைபெறவில்லை.

2007ம் ஆண்டு கைது செய்யப்பட்ட புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான தர்மதாசவுக்கு எதிராக 2010ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இன்மையால விரக்தியடைந்த கைதியும் குடும்பத்தாரும் இந்த வழக்கை எடுத்து நடாத்துமாறு எமக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவரின் ஊடாக அன்பான வேண்டுகோள் விடுத்ததையடுத்தும் மேலும் இந்த வழக்கை நடாத்திய சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இந்த வழக்கை எடுத்து நடாத்தத் தீர்மானித்தோம்.

இந்த வழக்கு 2017ம் ஆண்டு சித்திரை மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றின் கவனத்துக்கு எனது சமர்ப்பணத்தில் கொண்டுவரப்பட்டதாவது,

2007ம் ஆண்டு பயங்கரவாதத் தடைப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கொழும்பு பொரல்ல புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான தர்மதாசவுக்கு எதிராகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாகவும் 23கிராம் ஆர்டிஎஸ் வெடிமருந்தும் 35 துப்பாக்கிரவைகளையும் 8 சையினட் வில்லைகளையும் உடமையில் வைத்திருந்ததாகவும் 2010ம ஆண்டு பங்குனிமாதம் முதலாம் திகதி சட்டமா அதிபரினால் இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பின் முக்கிய சாட்சியான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ.ரணசிங்கவுக்கு கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் இந்த நீதிமன்றில் ஆஜராகும்படி கடந்த 7 வருடங்களாக பல அழைப்பாணைகளை அனுப்பிய போதிலும் இந்த அரசசாட்சி இந்த நீதிமன்றில் ஆஜராகவில்லை மேலும்

## 7 வருடங்களாக நீதிமன்ற வருகைதராத அரசசாட்சி

பொலிஸ் அத்தியட்சகரான இந்த சாட்சி நிதி மோசடி வழக்கில் தொடர்புபட்டுள்ளதாக பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளமையினால் நீதிமன்றில் ஆஜராக முடியாமைக்கான காரணங்களாக முன்னர் கூறப்பட்டது. கடந்த சில வருடங்களாக சுகவீனம் காரணமாக நீதிமன்றுக்கு சமுகமளிக்க முடியவில்லையென நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் பலவருடங்களாக அரசதரப்பால் கூறப்படுகின்றன. மேலும் இந்த சாட்சி நீதிமன்றம் வருகை தராமையால் எதிராளி தரப்பில் இந்த சாட்சியை ஏழு வருடங்களாக குறுக்கு விசாரணை செய்ய முடியாதுள்ளதனால் எதிராளி தொடர்ந்தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணைகள் நியாயமான நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களால் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் காலதாமதமாகலாம் ஆனால் அரச சாட்சியான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.

எல்.ஏ.ரணசிங்க ஏழு வருடங்களாக வழக்கு விசாரணைக்கு நியாயமான காரணங்களின்றி வருகை தராமையான அவரது நடவடிக்கைகள் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்பாடாகும்.

கடந்த தவணை அரசதரப்புக்கு இறுதித் தவணையாக வழங்கப்பட்டது ஆனால் இன்றும் இந்த அரச சாட்சி நீதிமன்றுக்கு சமூகமளிக்கவில்லை இந்த வழக்கின் எதிராளி கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து கடந்த 10 வருடங்களாக எந்தவித விசாரணையோ அல்லது விடுதலையும் இன்றி தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளார். இந்த எதிராளிக்கு எதிரான வழக்கில் விசாரணை முடிவடைந்து நீதிமன்றம் குற்றவாளியாகத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் முழுத் தண்டனைக் காலத்தையும் நிறைவு செய்து பல வருடங்களுக்க முன்னரே விடுதலையாகியிருப்பார். இந்தக் கைதி எந்தவித விசாரணையுமின்றி 10 வருடகாலம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்தமையை சட்டமா அதிபர் திணைக்களம் விதிவிலக்கான சூழ்நிலையென கவனத்தில் எடுத்து இந்த நீதிமன்றம் பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்காமல் இருந்திருக்கலாம், ஆனால் எதிராளி தரப்பில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டவேளையில் சட்டமா அதிபரின் ஆட்சேபனையால் இந்த நீதிமன்றம் இந்தக் கைதிக்கு பிணை வழங்கவில்லை, எனவே சட்டமா அதிபர் வழக்கை நடாத்தி முடிக்க வேண்டும் அல்லது இந்த நீதிமன்றம் கைதியை விடுதலை செய்ய வேண்டும் என வாதத்தை முன்வைத்ததையடுத்து,

## பொலிஸ் அத்தியட்சகருக்கு நிதிமன்ற பிடியாணை

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க அரச சாட்சியின் பொறுப்பற்றபோக்குக் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டதுடன் அரச சாட்சியான பயங்கரவாதத் தடைப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ.ரணசிங்கவை கைதுசெய்து நீதிமன்றில் பாரப்படுத்தும் படி பகிரங்க பிடியாணை பிறப்பித்ததுடன் பிடியாணையை உடனடியாக செயற்படுத்தும்படி பொலிசாருக்கு கட்டளையிட்டதுடன் மேலதிக விசாரணையை 2017 ஆகஸ்ட் மாதம் 29ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

குறித்த திகதியில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது இந்த வழக்கின் முக்கிய சாட்சியான பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ.ரணசிங்க ஏழு வருடங்களின். பின்னர் மருத்துவ சான்றிதழ்களுடன் நீதிமன்றில் ஆஜராகி தான் கடும் சுகவீனம் அடைந்திருந்ததாகவும் மேலும் நிதிமோசடியில் தொடர்புபட்டுள்ளதாக பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டமையும் நீதிமன்றில் இந்த வழக்குக்கு ஆஜராகாமைக்கான காரணங்களென தெரிவித்ததை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்படி பணித்ததையடுத்து விசாரணைகள் தொடர்ந்தன.

உண்மை விளம்பல் விசாரணையில் அரசதரப்பினால் சாட்சியமாகஅழைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ.ரணசிங்க உப பொலிஸ் பரிசோதகர் ஆப்தீன்.சட்டவைத்திய அதிகாரி மடவெல. உப பொலிஸ் பரிசோதகர் சாமிலி ஆகியோரது சாட்சியங்களும் எதிராளி தரப்பில் எதிராளியாகிய துர்யலாகே தர்மதாசவின் சாட்சியமும் எனது வேண்டுகோளுக்கு

இணங்க நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று மூன்று மாதங்களில் நிறைவடைந்தது. குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உண்மைத் தன்மையையறிய நடாத்தப்பட்ட உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததுடன் அரச சட்டத்தரணியினதும் எதிராளி தரப்பினதும் சட்ட நிகழ்வு சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளை வழங்குவதற்காக நீதிபதி 2017ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

## குற்றஒப்புதல் வாக்குமூலம் சான்றாக ஏற்பு

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க தனது கட்டளையில் பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ.ரணசிங்கவுக்கு எதிராளி தனது கையினாலேயே எழுதிக் கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிராளியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டுள்ளதாக 2017ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ம் திகதி கட்டளை வழங்கினார்.

## குற்றத்தை மறுதலித்த கைதி

கைதியாகிய தர்மதாசவினால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்பட்டதென நீதிமன்றம் கட்டளை வழங்கிய பின்னர் 2018ம்ஆண்டு இந்த வழக்கு பிரதான விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றம் எதிராளியை நோக்கி நீர் வழங்கிய குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பில் வழங்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது மேலும் 2007ம் ஆண்டிலிருந்து சிறையில் உள்ளீர் உமக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படவில்லை அவசர கால ஒழுங்கு விதியின் கீழேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே தொடர்ந்து வழக்கை கொண்டு செல்லாமல் குற்றத்தை ஒத்துக் கொண்டால் குறைந்த தண்டனை வழங்க முடியும் என கூறியதுடன் எதிராளியின் நிலைப்பாட்டை நீதிமன்றுக்குத் தெரிவிக்கும்படி எனக்கு அறிவுறுத்தல் வழங்கி நீதிமன்ற செயற்பாடுகள் 30 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது நீதிமன்ற செயல்பாடுகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நான் தர்மதாசவிடம் குற்றத்தை ஒத்துக் கொண்டு சிறிய காலத் தண்டனை பெற சம்மதமா என வினவினேன்.

## மகனைப் பார்க்க மறுத்த கைதி

அதற்கு தர்மதாச என்னிடம், நான் கண்டியைப் பிறப்பிமாகக் கொண்டவன் எனது குடும்பம் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் மத்திய மாகாணத்திலேயே வசிக்கின்றனர். பயங்கரவாதத் தடைப் பிரிவினர் என்னைக் கைது செய்த தினமான 2007ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதிதான் எனது கடைசி மகன் பிறந்தான். 11 வருடங்களாக என் பிள்ளையை நான் காணவில்லை. என் பிள்ளையை சிறைச் சாலைக்கு கொண்டுவந்து என்னிடம் காட்ட வேண்டாம் என உறுதியாக என் மனைவியிடம் கூறியுள்ளேன். விசாரணையுமின்றி விடுதலையுமின்றி இந்த வழக்கு முடிவுக்கு வராதநிலையிலேயே எமது அமைச்சர் எஸ் பி திசாநாயக மூலம் உங்களின் உதவியை நாடினோம். நான் கைது செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்து விட்டன நான் குற்றத்தை ஒத்துக் கொண்டு சிறிய தண்டனையை

அனுபவித்து விடுதலையானாலும் எனது ஊரான கண்டிக்கு செல்லமுடியாது அதனாலேயே நான் குற்றத்தை ஒத்துக் கொள்ளவில்லை நான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது இந்தக் குற்றங்களை ஒத்துக்கொண்டு தண்டணையின் பின்னர் எனது ஊருக்கு செல்லமுடியுமா? எனது குடும்பத்தை உற்றாரும் உறவினரும் ஒதுக்கி வைத்துள்ளமையால் எனது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் நான் 11வருடங்களாக நீரிழிவு நோயினாலும் கடந்த இரண்டு வருடங்களாக எனது சிறுநீரகம் செயல் இழந்து பாதிக்கப்பட்டுள்ளேன் முறையான வைத்தியமும் எனக்கு கிடைப்பதில்லை வழக்கு முடிவடையும் வரை நான் உயிருடன் இருப்பேனா என்பதில் எனக்கு பலத்த சந்தேகம் உண்டு இந்த வழக்கு முடிவடைய எத்தனை வருடங்களானாலும் பரவாயில்லை நான் நிரபராதியென விடுதலை பெற்று வீடு செல்லவேண்டும் அல்லது தண்டணை பெற்று சிறையிலேயே மடியவேண்டும் என்பதுதான் எனது ஆசை.

> **“எனக்கு நீங்கள் விடுதலை வேண்டித் தருவீர்கள் என்ற நம்பிக்கை என் மனைவிக்கும் என் குடும்பத்தாருக்கும் உண்டு ஆகையால் நான் குற்றத்தை ஒத்துக்கொள்ளப்போவதில்லை நீங்கள் வழக்கை நடாத்துங்கள் ஐயா”**

இந்த வழக்கின் எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள துர்யலாகே தர்மதாசமீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை ஏற்றுக்கொண்டு குறைந்த கால தண்டணை பெறுதற்கு விருப்பம் தெரிவிக்காததை நீதிமன்றிற்கு தெரியப்படுத்திய பின்னர் பிரதான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு அரச தரப்பு சாட்சிகளாக பொலிஸ் பரிசோதகர் ஹேமசந்திர, பொலிஸ் பரிசோதகர் மொகமட் ஆப்தீன், அரசபகுப்பாளர்களான ஏ.வலியங்க மற்றும் மடவெல,ஆகிய சாட்சியங்களை அரச சட்டத்தரணி நெறிப்படுத்தினார்.

## சாட்சிய முரண்பாடுகள்.

அரச புலனாய்வுத்துறை அதிகாரியான துர்யலாகே தர்மதாசவுக்கு எதிராக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் சட்டமாஅதிபரினால் 2010ம் ஆண்டு கொழும்புமேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிராளியின் உடமையில் இருந்து RDX 23 கிராம் கைப்பற்றப்பட்டதாக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது

இந்தகுற்றச்சாட்டை ஒப்புறுதிப்படுத்த அரசதரப்பில் சாட்சிமளிக்க அரசபகுப்பாளர் ஏ.வலியங்க அழைக்கப்பட்டு அவரது சாட்சியத்தின் மூலம் RDX 23 கிராம் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு ஒப்புறுதிப்படுத்தப்பட்டது ஆனால் அரச சாட்சியான பொலிஸ் பரிசோதகர் ஹேமசந்திர தனதுசாட்சியத்தில் RDX 3 கிராம் வெடிபொருளை எதிராளியின் உடமையிலிருந்து கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார் எனவே அரச சாட்சிகளான அரசபகுப்பாளர் ஏ.வலியங்கவின் சாட்சியமும் பொலிஸ் பரிசோதகர் ஹேமசந்திரவின் சாட்சியமும் பாரிய முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

மேலும் இந்தவழக்கில் எதிராளியின் உடமையில் இருந்து8 சைனைட் வில்லைகளை கைப்பற்றியதாக பொலிஸ பரிசோதகர் ஹேமசந்திர சாட்சியமளித்துள்ள போதிலும் வழக்கின் சான்றுப் பொருளாக 8 சைனைட் வில்லைகள் அரசதரப்பால் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என்பதும் எனது சமர்ப்பணத்தில நீதிமன்றின் கவனத்துக்குகொண்டு வரப்பட்டது. பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸ் பரிசோதகர் ஹேமசந்திர தனது சாட்சியத்தில் இந்த வழக்கின் எதிராளியான துரயலாகே தர்மதாசாவை 2007ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி பொரளையில் அமைந்துள்ள அரசபுலனாய்வுப் பிரிவுக்கு சென்று கைது செய்த தினத்தில் மேலும் 19 சந்தேக நபர்களை கைதுசெய்து அவர்களின் உடமையிலிருந்தும் வெடிபொருட்களை கைப்பற்றிதாகவும் சாட்சியமளித்தார். ஆனால் குறுக்கு விசாரணையில் கைதிகளின் உடமையிலிருந்து கைப்பற்றி அரசபகுப்பாளர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட சான்றுப் பொருட்களில் பலமுரண்பாடுகளை சாட்சியான பொலிஸ் பரிசோதகர் குறுக்குவிசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகர் தனது சாட்சியத்தில் மிகத் தெளிவாக எதிராளியான துரயலாகே தர்மதாசாவின் தனிஉடமையிலிருந்து RDX3கிராமை கைப்பற்றியதாகச் சாட்சியமளித்துள்ளார் ஆனால் அரசபகுப்பாளர் ஏ.வலியங்கவின் சாட்சியத்தின்படி RDX23 கிராமாகும். RDX3கிராம் எவ்வாறு RDX23 கிராமாகியது என்பதற்கான நியாயமான நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கம் அரசதரப்பால் முன்வைக்கப்படவில்லை என்ற விடயமும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

எதிராளியாகிய துரயலாகே தர்மதாசவினால் வழக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் 'சுயமாக வழங்கப்பட்ட வாக்குமூலமென' நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளபோதிலும் துரயலாகே தர்மதாச தனது கையினாலேயே சிங்கள மொழியில் எழுதிக் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ளடக்கத்தில் உள்ள பதிவுகளில் தர்மதாச மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பற்றிய நிகழ்வுகள் நடைபெற்றதாக எந்தப் பதிவும் உள்வாங்கப்படவில்லை என்பதுடன் பொலிஸ் விசாரணையிலும் எந்தச் சாட்சியங்களும் ஒப்புறுதிப்படவில்லை என்பதையும் நீதிமன்றத்தின கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. சட்டமா அதிபரினால் புலனாய்வுத் துறை அதிகாரியான துரயலாகே தர்மதாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்தவழக்கில் அரசதரப்பினால் வழங்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியத்திலும் மற்றும் சான்றுப் பொருட்களிலும் காணப்பட்ட முரண்பாடுகளை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு எதிராளியை விடுதலை செய்யவேண்டுமென்ற வாதம் என்னால் முன்வைக்கப்பட்டது.

## தர்மதாச விடுதலை

அரச தரப்பினதும் எதிராளிகள் தரப்பினதும் வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி தனது தீர்ப்பில் எதிராளிதரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளிமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசதரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை விடுதலைசெய்தார்.

## 12 வருடங்களின் பின்னர் விடுதலையான தர்மதாசவுக்கு அரசு ரூபா 55,23,808.18 இழப்பீடு.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நஸ்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும். 12 வருடங்களின் பின்னர் நிரபராதியென விடுதலையான கைதிக்கு நஸ்டஈடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டமையையடுத்து ரூபா 55,23,808.18 இழப்பீடு அரச தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.



2019ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ்மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசியலமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சிறுநீரக பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த தர்மதாஸ சிறுநீரகக் கோளாறால் அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால் அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்த போது தர்மதாஸ அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையாலேயே அவரின் நோய் தீவிர நிலைமைக்குச்

சென்றுள்ளது. இப்போது அவரின் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்தச் சுத்திகரிப்புச் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். மனுதாரருக்கு உரிய சிகிச்சையும், பராமரிப்பும் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான மோசமான நிலையை அடைந்திருக்க மாட்டார் தர்மதாஸ வின் இந்நிலைக்கு பொலிஸாரும், சிறைச்சாலை தரப்பினரும், சட்ட மா அதிபருமே காரணம் எனக் குற்றம் சாட்டி நீதியான நிவாரணத்தைக் கோரி உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில் ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றிவிட்டது அரசாங்கம். தர்மதாச குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ நஷ்டஈடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர் சிறையில் இருந்தபோது மாமியாரின் ஓய்வூதியப் பணமே தர்மதாஸவின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையை கொண்டு செல்ல உதவியது. தர்மதாஸ விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வூதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்க வேண்டிய அவலம் தொடர்கின்றது. என மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கையில் தர்மதாச 2021ம் ஆண்டு மார்கழி மாதம் மரணமடைந்ததையடுத்து தர்மதாசவின் மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில் ரூபா 55,23,808.18 விற்கான இழப்பீடு அரசினால் 2022.06.24ஆம் திகதி தர்மதாசவின் மனைவிக்கு வழங்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் குண்டுவெடிப்பு ராஜீவ் விடுதலை

2007 – 2014

23

கொழும்பில் 2007ஆம் 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று பாரிய குண்டுவெடிப்பு சம்பவங்களிலும் இராணுவ அதிகாரிகளின் மரணத்திலும் தொடர்புடையவரென பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பத்மநாதன் ராஜீவுக்கு எதிராக

**(1) 24-05-2007ல் புறக்கோட்டை றெக்ளமேசன் வீதி முதலாம் குறுக்குத் தெருவில் பஸ் வண்டியில் நடாத்திய குண்டு வெடிப்பில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டு 15 பொது மக்கள் படுகாயமடைந்தமை**

**(2) 30.12.2007ல் கொம்பனித்தெரு குண்டுத் தாக்குதலில் ஒரு இராணுவீரர் கொல்லப்பட்டு 10 பொது மக்கள் படுகாயமடைந்தமை**

**(3) 30.07.2008ல் கொழும்பு மோதரையில் புலிகளின் தற்கொலை குண்டுதாரியினால் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிசார் உட்பட ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொலிசாரினால் விசாரணைகள் நடாத்தப்பட்டன**

இந்தத் தொடர் குண்டு வெடிப்புக்கள் மற்றும் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்து 27 இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்

கைது செய்யப்பட்ட 27 இளைஞர்களில் 10வது சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்ட பத்மநாதன் ராஜீவ் ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகக் கொண்டதுடன் வெளிநாடு

செல்வதற்காக கதிரேசன் வீதியில் அமைந்துள்ள அடுக்கு மாடி வீட்டில் தங்கியிருந்த வேளையில் 07.04.2008ல் கொட்டாஞ்சேனை பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

பத்மநாதன் ராஜீவை கைது செய்த பொலிசார் இந்தக் கைதினைத் தொடர்ந்து சந்தேக நபரான பத்மநாதன் ராஜீவின் இல்லத்தில் தண்ணீர் தொட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி -56 துவக்கு, ரி-56 மகசின் நான்கும், குண்டுகள் 115-எஸ்எம்ஜி லோன்ஜர் துவக்கு ஒன்றும் அதன் குண்டுகள். 194 பற்றரிகள், சீ-4 மருந்து ஐந்து கிலோவையும் பொலிசார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட பத்மநாதன் ராஜீவ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, பொலிசாரினால் விசாரணைகள் நடாத்தப்பட்டதுடன் புதுக்கடை பிரதான நீதவான் நீதிமன்றம், புதுக்கடை மேலதிக நீதவான் நீதிமன்றம், கோட்டை நீதவான் நீதிமன்றமங்களில் விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.

## குற்றச்சாட்டுப் பத்திரங்கள்

(1) கொம்பனித்தெரு நிப்பொன் ஒட்டலுக்கு அருகாமையில் குண்டுதாக்குதலை நடாத்தி 30.12.2007ல் லெப்டினட் திசாநாயக முதியாசலாகே திசாநாயகாவுக்கு மரணத்தை ஏற்படுத்தியதுடன் கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக பல இடங்களில் ஆயுதங்களையும் தற்கொலை அங்கிகளையும் மறைத்து வைத்ததாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 2(1) பிரிவின் கீழ் 20 ஆண்டுகள் தண்டனை வழங்கக்கூடிய ஒரு குற்றச்சாட்டுப் பத்திரமும்.

(2) கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைப்பதற்காக புலிகள் இயக்கத்தை சார்ந்த ஆனந்த வர்மன், விஜயன் ஆகியோருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாகவும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டமையை நன்கு தெரிந்து கொண்டும் பொலிசாருக்கு தகவல் வழங்கவில்லை யென ஒரு குற்றச்சாட்டுப் பத்திரமுமாக இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இரண்டு வழக்குகள் சட்டமா அதிபரினால் பத்மநாதன் ராஜீவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

கைதியான பத்மநாதன் ராஜிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

கொம்பனித்தெரு நிப்பொன் ஒட்டலுக்கு அருகாமையில் குண்டுதாக்குதலை நடாத்தி 30.12.2007ல் லெப்டினட் திசாநாயக முதியாசலாகே திசாநாயகாவிற்கு மரணத்தை ஏற்படுத்தியமை பொதுச் சொத்திற்கு சேதாரம் விளைவித்தமைக்கான குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு அரசதரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே சான்று எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதென அரச தரப்பினால் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமேயாகும்.

எதிரியினால் சுயவிருப்பத்தில் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டதாக கூறப்பட்டு அரச தரப்பின் முக்கிய சான்றாக சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அழகான தமிழில் பத்துப் பக்கங்கள் எழுதப்பட்டிருந்ததுடன் எதிரி தான் புரிந்த குற்றங்கள் பற்றிய முழு விபரங்களையும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார் ஆனால் சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் கைதியான பத்மநாதன் ராஜிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில்.

30.12.2007ல் கொம்பனித் தெரு குண்டுத் தாக்கதலில் தான் பங்குபற்றியதாகவோ அல்லது தாக்குதலை நடாத்தின புலிகள் இயக்கத்தை சார்ந்த ஆனந்த வர்மன் விஜயன் ஆகியோருக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாகவோ லெப்டினட் முதியானசலாகே திசாநாயகாவிற்கு மரணத்தை ஏற்படுத்தியதாகவோ குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்தவிடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

எதிரியினால் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் இறுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயவிருப்பில் தனக்கு வழங்கப்பட்டதாக அந்த வாக்குமூலத்தை ஒப்புறுதிப்படுத்தி கையெழுத்திடவேண்டும் ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிசில் த சில்வா ஒப்புறுதிப்படுத்தி கையெழுத்திடவில்லை என்பதையும் தனது சாட்சியத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஒப்புறுதிப்படுத்தப்படாத ஒப்புதல் வாக்குமூலம் சட்டவலு அற்ற வாக்குமூலமாகும் என்பதுடன் குற்ற ஒப்புதல் வாக்கு மூலமென அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட ஆவணத்தில் எதிரி எந்தவிதமான குற்றத்தையும் தான் புரிந்ததாக ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கப்படவில்லை சட்டமா அதிபரினால் எந்தச் சான்றுகளும் அற்ற நிலையிலேயே இந்தக் குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இந்த வழக்கின் குற்றச்சாட்டை நிரூபிக்க அரச தரப்பால் வேறு எந்தவிதமான சான்றும் முன்வைக்கப்படவில்லை என்பதை நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து எதிரியான பத்மநாதன் ராஜீவ் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

## ஒத்திவைக்கப்பட்ட தண்டனை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5(1)ஆம் பிரிவின் தகவல் கொடுக்க தவறிய குற்றத்தை புரிந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது மேல் நீதிமன்ற நீதிபதி மொறாயஸ் எதிரியிடம் குற்றத்தை ஒத்துக்கொள்ள தயாரா என வினவிய பொழுது எனது சமர்ப்பணத்தில்

பாதுகாப்பு செயளாளர் தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது பற்றியோ விடுதலை சம்பந்தமாக பாதுகாப்புச் செயளாளரோ, நீதி அமைச்சரோ அல்லது சட்டமா அதிபரோ எந்தவிதமான நடவடிக்கையும்

எடுக்கவில்லை. காலத்திற்கு காலம் பதவியில் இருப்பவர்கள் கைதிகளுக்கு வாக்குறுதிகளை வழங்கி விடுகின்றார்கள் அதனை நம்பி கைதிகளும் தங்களுக்கு பிணையோ அல்லது புனர்வாழ்வோ விடுதலையோ கிடைக்கும் என நம்பி பின்னர் ஏமாந்து விடுகின்றனர் ஆனால் இன்றுவரை ஒன்றும் நடைபெறவில்லை நீதி மன்ற தீர்ப்புக்களால் மட்டுமே அரசியல் கைதிகளின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறியுள்ளன.

மந்திரி சபையின் பேச்சாளர் கேகெலிய ரம்புக்வெல்ல பத்திரிகையாளர் மாநாட்டில் 12ஆயிரம் கைதிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாகவும் விடுதலை செய்யப்பட்டவர்களில் கொலைக் குற்றம் புரிந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டதாக கூறியுள்ளார் ஆனால் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்களில் இளைஞர்கள் பெண்கள் குழந்தைகள் என பலநூற்றுக்கணக்கானோர் பல வருடங்களாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் சில கைதிகள் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் இந்த விடயத்தை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும் என்பதனாலேயே இந்த விபரங்களை இங்கே முன்வைக்கின்றேன்

இந்த இரண்டாவது வழக்கில் ஆயுதங்களை தமது வீட்டில் மறைத்து வைத்த சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்களை பொலிசாருக்கு வழங்கத் தவறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எதிரியின் வயதான தாயாருக்கு எதிரி ஒரேயொரு ஆண் பிள்ளையென்பதுடன் எதிரி இருதயநோயால் பாதிக்கப்பட்ட 30வயது இளைஞராவார் எதிரி சிறையில் கழித்த காலத்தை கருத்தில்கொண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்குமாறு நான் எனது சமர்ப்பணத்தில் நீதிமன்றத்தை வேண்டிக் கொண்டதையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி மொராயஸ் எதிரிக்கு ஒரு வருடத்திற்கான ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை வழங்கினார் இதனையடுத்து பத்மநாதன் ராஜீவ் ஆறுவருட சிறைவாழ்கையிலிருந்து விடுதலையானார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு எதிரான வழக்கு

2008–2009

24

## பொங்குதமிழ் நிகழ்வு

**இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 157அ(1) இலங்கையின் ஆள்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று தாபிக்கப்படுவதற்கு ஆளெவரும் இலங்கைக்கு அல்லது இலங்கைக்கு வெளியில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல், ஆக்கமளித்தல், ஊக்குவித்தல், நிதியுதவுதல். ஊக்கமளித்தல் அல்லது பரிந்துரைத்தல் ஆகாது**

## கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல்

இலங்கை அரசியலமைப்பு 157(1) ஆம் உறுப்புரை மீறப்படும் வகையில் இலங்கை அரசாங்கத்துக்குள் வேறுதனி இராச்சியத்தை அமைப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்கு உள்ளேயோ அல்லது மறைமுகமாகவோ இலங்கைக்கு உள்ளேயோ அல்லது இலங்கைக்கு வெளியேயோ ஆதரவு அளித்தல், உடந்தையாகயிருத்தல், பணம் சேகரித்தல் போன்றவற்றில் ஈடுபடமாட்டோம் என்றும் இலங்கை அரசியலமைப்புக்கு எதிராக நாம் நடந்து கொள்ளவோ அரசியலமைப்புச் சட்டசரத்துக்களை மீறமாட்டோம் என்றும் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் சத்தியப்பிரமாணம் எடுத்தபின்னர், எஸ். ஜெயானந்தமூர்த்தி, அரியநேதிரன், எஸ். கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாடுகளில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் இலங்கை அரசியலமைப்புக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்குடன் அரசியலமைப்பையும் தாம் எடுத்த சத்தியப் பிரமாணத்தையும் மீறியதன் மூலம் பயங்கரவாதச் தடைசட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தைப் புரிந்துள்ளார்கள் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவளித்து நான்கு நாடாளுமன்றஉறுப்பினர்களும் ஜேர்மனியிலும் அவுஸ்திரேலியாவிலும் ஆற்றிய உரையடங்கிய ஒலி நாடாக்களுக்குக் கிடைத்துள்ளதாகவும்,பொலிஸ்மாஅதிபரின் முறைப் பாட்டையடுத்து புலன்



விசாரணை நடைபெறுவதாகவும் குறிப்பிட்டு, பொலிஸ்மாஅதிபர் 28-10-2008ல் நாடாளுமன்றஉறுப்பினர்கள் நால்வருக்கும் எதிராக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்துக்கு (C.I.D) செய்த முறைப்பாட்டையடுத்து இலங்கை அரசியலமைப்பு 157(1)ஆம் உறுப்புரையின் கீழும் தண்டனை சட்டகோவை 15ஆம் இலக்க 2006ஆம் ஆண்டுசட்டத்தின் 120ஆம் பிரிவின்கீழும் குற்றம் புரிந்துள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் 2008ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் திகதி முதல் தகவல் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

## ஜேர்மனியில் பொங்கு தமிழ் நிகழ்வு

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 157(1) உறுப்புரை மீறப்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேதிரன், எஸ்.கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், 2006ஆம் ஆண்டு ஆனிமாதம் 28ஆம் திகதி ஜேர்மனியின் நாடாளுமன்றத்துக்கு முன்பாக நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் கூடியிருந்தபுலம் பெயர்ந்தமக்கள் மத்தியில் ஈழத்தைப் பெறப் போராடும் தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் நடாத்தும் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும்படி உரையாற்றியதன் காரணமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் 2008ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழீழத்துக்கு ஆதரவாக உரையாற்றியதுடன் இலங்கை இராணுவத்தை அவமதிக்கும் விதத்திலும் உரையாற்றியமையாலும் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேதிரன் எஸ்.கஜேந்திரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து வாக்கு மூலங்கள் பெறப் பட்டுள்ளதெனவும் தமது வாக்கு மூலத்தில் தாங்கள் ஜேர்மனியில் ஆற்றிய உரைதான் என்பதைமுதல் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துக் கொண்டுள்ளதாகவும்,பொலிசாரின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்ததுடன் அந்த ஒலிநாடா உரையின் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகள் நீதிமன்றத்துக்கு கையளிக்கப்பட்டன.

## அவுஸ்திரேலியாவில் பொங்கு தமிழ் நிகழ்வு

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழீழத்துக்கு ஆதரவாக உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் வெளிநாட்டிலுள்ளதால் அவரது வாக்குமூலம் பெறப்படவில்லை எனவும், இது சம்பந்தமாக நாடாளுமன்ற

சபாநாயகருக்கும் அறிவிக்கப் பட்டதாகவும்,அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. முதல் தகவல் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தொடர்ந்து விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பும் படியும் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதைத் தடைசெய்யும்படி குடிவரவு, குடியகல்வு, விமான-நிலையப் பிரிவுக்கு உத்தரவிடும்படியும் நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த தமதுஅறிக்கையில் கோரியிருந்தனர்

## பூர்வாங்க ஆட்சேபனை

இந்நிலையில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் நீதிமன்றில் ஆஜராகி முன் வைத்த பூர்வாங்க ஆட்சேபனையில் இந்த நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் அறிக்கையின் பிரகாரம் அரசியலமைப்புப் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரையை நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீறியுள்ளதனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தை புரிந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## உயர்நீதி மன்ற நியாயாதிக்கம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தை எவரேனும் புரிந்திருந்தால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யமுடியும் ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1)ஆம் உறுப்புரை மீறப்படுமிடத்து நாட்டிலுள்ள உயர்நீதிமன்றத்திலும் (Supreme Court) மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் (Court of Appeal) மட்டுமே வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 157(1)ஆம் உறுப்புரை மீறப்படுமிடத்து, நீதவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யவோ அல்லது விசாரணை செய்யவோ சட்டப்படியான நியாயாதிக்கம் நீதவான் நீதிமன்றுக்குக் (Jurisdiction) கிடையாது. அரசியலமைப்புப் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரையின் கீழ் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொண்டசத்தியப் பிரமாணத்தை மீறும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒருகட்சியைச் சார்ந்தவராகயிருந்து, அக் கட்சியின் முக்கிய பொறுப்பை வகிப்பவராக இருப்பின் அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு எவரேனும் இலங்கைப் பிரஜை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அந்த வழக்கின் விசாரணைகளின் பின் அரசியலமைப்புப் சட்டத்தின் 157(1) ஆம் உறுப்புரை மீறியது நிரூபிக்கப்படுமிடத்து அந்தஅரசியல் கட்சியைத் தடைசெய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு-உண்டு.

## மேன்முறையீட்டு நீதிமன்ற நியாயாதிக்கம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரேனும் தனிப்பட்டமுறையில் அரசியலமைப்பின் உறுப்புரை 157(1) மீறுமிடத்து இலங்கைப் பிரஜையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அந்த குற்றச்சாட்டுக்கு சட்டமா அதிபர் குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு அல்லது உறுப்பினர்களுக்கு எதிராகத் தாக்கல்

செய்து சாட்சிகளையும் அழைத்து முழு விசாரணை நடாத்தப்படவேண்டும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமிடத்துக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் பதவி பறிபோவதுடன் சிறைத் தண்டனையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தக் குற்றஞ்சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்குவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் உறுப்புரைகளை எவரேனும் மீறினால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்திலும் மேன் முறையீட்டு நீதிமன்றத்திலும் இந்தநாட்டின் பிரஜைகளான ஒரு தனிமனிதனுக்கு இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கும் செல்லசட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருந்த போதிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையின் தலைமை அதிகாரியான பொலிஸ்மா அதிபர், தான் ஒரு இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் சட்டத்தின் பிரகாரம் உயர்நீதிமன்றத்துக்கோ அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கோ செல்லாமல் சரியான சட்ட ஆலோசனையைப் கூடப் பெறாமல் தனது முறைப்பாட்டை குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறையிட்டதைத் தொடர்ந்து, நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் பொழுது எந்ததெந்த நீதிமன்றங்களுக்கு அந்தமனுவை விசாரணை செய்ய அதிகாரம் உண்டு என்பதனை மிகத் தெளிவாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கையில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 157(1)ஆம் உறுப்புரை மீறப்படும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேதிரன், எஸ். கஜேந்திரன், மு.சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தினை மீறியுள்ளார்கள் என வழக்குத் தாக்கல் செய்ததுதான் வியப்புக்குரியது.

தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆம்பிரிவு

> *தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் சுமத்தப்படும் குற்றங்கள் அனைத்தும் நாட்டுக்குள் புரியப்பட்டவையாக இருக்கவேண்டும். அப்படி நாட்டுக்குள் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பில் ஆராயும் நியாயாதிக்கமே தண்டனைச் சட்டக் கோவைக்கு உட்பட்டதாகும். ஆனால், இங்கு நான்கு எம்.பிக்களும் புரிந்ததாகக் கூறப்படும் தவறு அல்லது அவர்கள் ஆற்றியவை என்று கூறப்படும் உரைகள் நாட்டுக்கு வெளியே இடம்பெற்றவையாகும். எனவே, இந்த விவகாரத்தை இந்த நீதிமன்றம் விசாரிப்பதற்கு முகாந்திரமே இல்லை. ஆகவே, இந்த நான்கு எம்.பிக்களுக்கும் எதிரான இந்த வழக்கு விசாரணையை முடிவுறுத்துமாறு உத்தரவிடும்படி வாதம் முன்வைக்கப்பட்டதுடன் மேலும் எனது சமர்பணத்தில்*

## சட்டத்தின் முன் யாவரும் சமனா?

2006ஆம் ஆண்டு ஆனி மாதம் 28ஆம் திகதி ஐரோப்பாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியில் ஆற்றிய உரைக்காக ஏறத்தாள இரண்டரை வருடங்களுக்கு பின்னர் பொலிஸ்மா-அதிபர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அரசாங்கத்துக்கும்

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே 2002ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டின் பலபாகங்களிலும் விசேடமாக 2005, 2006ம் ஆண்டுகளில் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றுள்ளன, வவுனியா, யாழ்ப்பாணம், நுவரெலியா போன்ற இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அந்தக் கால கட்டத்தில் அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள், பலசிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பெரும்பான்மைக் கட்சிகளின் தலைவர்கள் இப்படி எத்தனையோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட போதிலும் சட்டத்தின் முன் யாவரும் சமம் எனின் உள்நாட்டில் நடந்த பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் உரையாற்றியவர்களுக்கு எதிராக எந்த வழக்கும் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை. வெளிநாட்டில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் உரையாற்றிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மட்டும் வழக்குத் தொடுக்கப்பட்டமை உள்நோக்கங்கொண்ட செயற்பாடாகும். என்ற விடயத்தையும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது

நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடும் படியும் அவர்களது, வெளிநாட்டுப் பிரயாணத்தை தடை செய்யவேண்டியும் நீதிமன்றத்தை வேண்டியிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் வாதத்தைக் கேட்டு முதலில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட நீதிபதி, பின்னர் எனது மேற்கூறப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை கவனத்தில் கொண்ட நீதிபதி நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு கொடுத்த அறிவித்தலை மீளப்பெற்று இந்தவழக்கு சம்பந்தமாக சட்டமாஅதிபரின் ஆலோசனையைப் பெறும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

## பயணத் தடை

நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாடு செல்வதைத் தடைசெய்யக்கோரி பொலிசார் வேண்டிக் கொண்ட விண்ணப்பத்தையும் பிரதான நீதிபதி நிராகரித்த நிலையில் இந்த வழக்கானது சட்டமாஅதிபரின் ஆலோசனைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு நாட்களில் அதாவது 2008ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ம் திகதி அன்று குற்றம் சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ப.அரியநேதிரன் தனது வைத்தியத்துக்காக இந்தியாவின் தமிழ்நாடு செல்ல கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்குச் சென்றிருந்தபோது குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அவரை நாட்டை விட்டுசெல்ல அனுமதிக்க முடியாது என்று கூறி கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவுக் காரியாலயத்தில் பாரம் கொடுத்தனர். குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் தனது பிரயாணத்தை தடுப்பதற்கான காரணம் என்னவென்றும் அந்தக் குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் கேள்விஎழுப்பியுள்ளார். அவருக்கு கிடைத்த பதில் என்னவெனில் மேலதிகாரியின் உத்தரவின் பேரிலே பிரயாணத்தை தடுத்து நிறுத்தினோம் என்பதுதான் பின்னர் தனது தமிழ் நாட்டுப் பிரயாணம் தடைப்பட்டதால் தனது வைத்தியத்தை தொடர-முடியாதநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேதிரன் விமான-நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணக்கு வந்தபொழுது நாட்டின் மக்களின் பிரதிநிதியான ஒருநாடாளுமன்ற உறுப்பினரின் வெளிநாட்டுப் பயணத்தை தடைசெய்வதற்கு யாருடைய உத்தரவின் பெயரில் எந்தச் சட்டத்தின்-கீழ் என்றவாதம் முன்வைக்கப்பட்டது. நீதிமன்றத்தால் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கப்படாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ப.அரியநேந்திரனின் இவரது வெளிநாட்டு பயணம் தடுத்து நிறுத்தப்பட்டது சட்டவிரோதமான செயல் மட்டுமன்றி அடிப்படை மனிதஉரிமை மீறல் என்பதும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

## சட்டமாஅதிபரின் ஆலோசனை

இந்த வழக்கு 2009ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பொங்கு தமிழ் நிகழ்வில் தாங்கள் உரையாற்றியதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் இலங்கை அரசியலமைப்பு 157(1)ஆம் உறுப்புரையின் கீழும் தண்டனை சட்டகோவை 15ஆம் இலக்க 2006ஆம் ஆண்டுசட்டத்தின் 120ஆம் பிரிவின்கீழும் குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய தேவையான நேரடி சாட்சியங்களோ அல்லது சூழ்நிலை சாட்சியங்களோ இல்லாத நிலையில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லையென சட்டமா அதிபர் முடிவெடுத்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அதிகாரி விஜயரத்ன வாசல நீதிமன்றிற்கு அறிவித்ததையடுத்து கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் நிசந்த அப்புஆராச்சி நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விடுதலை செய்து வழக்கை தள்ளுப்படி செய்தார்

# மின் மாற்று நிலையத்தை தகர்த்தெறிய சதி

2008–2018

(ஜெயராம் ராமநாதன் ஏழு வழக்குகளிலிருந்தும் விடுதலை)

25

2008.02.03ஆம் திகதி பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் இரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்ட யாழ் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ரமேஸ் என அழைக்கப்படும் ஜெயராம் இராமநாதன் பத்து வருடங்களின் பின்னர் மேல் நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக 2010ம் ஆண்டு ஏழு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## கொழும்பு மேல் நீதிமன்றில் நான்கு வழக்குகள்

கொழும்புலிருந்து கட்டுநாயக செல்லும் புகையிரதத்திற்கு வெடிகுண்டு வைத்து தகர்க்க சதித் திட்டம் தீட்டியதாகவும் இராணுவத்தின் உயர் அதிகாரியின் நடவடிக்கைகளை வேவு பார்த்து புலித் தலைமையகத்துக்கு தகவல் வழங்கியதாகவும் கடும் சேதம் விளைவிக்க கூடிய குண்டுகளை உடமையில் வைத்திருந்ததாகவும் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனித்தனியாக நான்கு வழக்குகள் சட்டமா அதிபரினால் கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்சார நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்க்தெறியச் சதித் திட்டம் தீட்டியதாகவும் இராணுவத்தின் உயர் அதிகாரியின் நடவடிக்கைகளை வேவு பார்த்துப் புலித் தலைமையகத்துக்கு தகவல் வழங்கியதாகவும் கடும் சேதம் விளைவிக்க கூடிய மூன்று குண்டுகளை உடமையில் வைத்திருந்ததாகவும் மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தனித் தனியாக மூன்று குற்றச்சாட்டுப் பத்திரங்கள் நீர் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

2011இல் இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அரச சட்டத்தரணி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவிட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மொழி பெயர்த்த பொலிஸ் சாஜன், தட்டெழுத்தாளர், சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரது சாட்சியங்களின் சாட்சியத்தை நெறிப்படுத்தியதுடன் எதிராளி கைக்குண்டுகளை உடமையில் வைத்திருந்ததான குற்றச் சாட்டுக்களை நீருபிக்க எதிராளியை கைது செய்த பொலிஸ் பரிசோதகர் மற்றும் எதிராளியின் சாட்சியங்களும் நிறைவடைந்ததையடுத்து இரு தரப்பினதும் எழுத்து மூலமான சமர்ப்பணம் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்டது.

## எதிராளி தரப்பில் எனது வாதத்திலும் எழுத்து மூல சமர்ப்பணத்திலும்

(1) குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை எதிராளியை சித்திர வதை செய்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கையெழுத்திட்டுள்ளார் என்பதனையும் குறுக்கு விசாரணையில் எதிராளி தரப்பால் நிரூபிக்கப்பட்டது.

(2) எதிராளியின் உடலில் எதிராளிக்கு ஒன்பது காயங்கள் ஏற்பட்டுள்ளமை தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் பொலிசாரினால் புரியப்பட்ட சித்திரவதை மூலம் ஏற்படுத்தப்பட்ட காயங்களென்பதை அரச தரப்புச் சாட்சியான சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தை குறுக்கு விசாரணையில் உறுதிப் படுத்தியமையடுத்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எதிராளியினால் சுயமாக வழங்கப்பட வில்லையென நீதிமன்றம் கட்டளை வழங்கியது

## பிரதான விசாரணை

(1) குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் உண்மை விளம்பல் விசாரணையில் எதிராளியினால் சுயமாக வழங்கப்பட வில்லையென நீதிமன்றம் கட்டளை வழங்கியமை

(2) கொழும்பிலிருந்து கட்டுநாயக்க செல்லும் புகையிரதத்துக்கு வெடி குண்டு வைத்து தகர்க்க எதிராளி ஆயத்தம் செய்கையில் எதிராளியின் உடமையிலிருந்து கைப்பற்றப்பட்டதாக அரச தரப்பால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சான்றுப் பொருட்களான வெடிகுண்டுகள் எதிராளியின் தனி உடமையிலிந்து கைப்பற்றப் பட்டன (Chain of production) என்பதனை அரச தரப்பு நிரூபிக்கவில்லை என்பதுடன் அரச தரப்புச் சாட்சியங்களின் முரண்பாடுகளையும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

(3) அரச தரப்பினால் முன்வைக்கப்பட்ட அரச தரப்பு சாட்சியாளர்களில் சட்டவைத்திய அதிகாரியின் சாட்சியம் உட்பட குறுக்கு விசாரணையில் வெளிக் கொண்டுவரப்பட்ட பல முரண்பாடுகளை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டமை எதிரிதரப்பில் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து

அரச சட்டத்தரணியினதும் எதிராளி தரப்பில் எனது வாதத்தையும். மற்றும் இரண்டு பக்க எழுத்து மூலமான சமர்பணத்தையும் கவனத்தில் கொண்ட கொழும்பு விசேட மேல் நீதி மன்ற நீதிபதி பியசேன ரணசிங்க தனது தீர்ப்பில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எதிராளியிடமிருந்து சுயமாக பெறப்பட வில்லையென்பதுடன். அரச தரப்பால் எதிராளிக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றச் சாட்டுக்களில் ஒன்று கூட நிரூபிக்கபடவில்லை என எதிராளியான ரமேஸ் நான்கு வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டதாக தீர்ப்பு வழங்கினார்.

## நீர் கொழும்பு மேல் நீதிமன்றில்

(1) வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்மாற்றியைக் குண்டு வைத்து தகர்க் தெறியச் சதித் திட்டம் தீட்டினார்

(2) இராணுவத்தின் உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகளை வேவு பார்த்து புலித் தலைமையகத்துக்கு தகவல் வழங்கினார்

(3) கடும்சேதம் விளைவிக்க கூடிய குண்டுகளை உடமையில் வைத்திருந்ததார் எனவும்

மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தனித் தனியாக மூன்று குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நீர் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணையில் கொழும்பு மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் நீர் கொழும்பு மேல் நீதிமன்றில் முன் வைக்கப் பட்டதுடன் வத்தளை எலகந்தையில் அமைந்துள்ள மின்சார. நிலையத்தைக் குண்டு வைத்து தகர்க் தெறியச் சதித் தீட்டிய எதிராளி மூன்று குண்டுகளை உடமையில் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட போதிலும் அரச சாட்சி சான்றுப் பொருளாக நீதிமன்றில் முன் வைக்கப்பட்ட வெடி குண்டுகளை அடையாளப்படுத்தாமல் முரண்பாடான சாட்சியத்தை நீதிமன்றில் வழங்கியதையடுத்து அரச சட்டத்தரணி வழக்கைத் தொடர்ந்து நடாத்தவில்லையென நீதிமன்றுக்கு அறிவித்தார்.

நீர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி மடவெல தனது தீர்ப்பில் அரச தரப்பால் எதிராளிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒரு குற்றச்சாட்டுக் கூட நிரூபிக்கப்படவில்லை என தீர்ப்பு வழங்கி ஜெயராம் இராமநாதனை மூன்று வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்தார்.

இறுதியில் ஏழு வழக்குகளில் இருந்தும் பத்து வருடங்களின் பின்னர் அவர் விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் கடற்படையினரால் ஐந்து மாணவர்கள் உட்பட 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

2008–2022

26

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எந்த விதமான தயக்கமுமின்றி துணிந்து இந்த ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்யாது விட்டிருந்தால் இங்கு பேசப்பட்ட அத்தனை உண்மைகளும் சாட்சியங்களே இல்லாமல் மறைந்துபோய் இருக்கும்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்தகரனனாகொட உட்பட 14 கடற்படையினருக்கு எதிராக 667 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கொழும்பு விசேட ரயல் அட் பார் மேல்நீதிமன்றத்தில் சட்டமாஅதிபரினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு இந்தவழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது 14ம்எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்தகரன்னாகொட உட்பட மற்றைய 13 எதிரிகளுக்குமாக ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகள் உட்பட 75 சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

(1) திருகோணமலையில் கடற்படையினரின் கன்சைட் இரகசிய தடுப்பு சித்திரவதை முகாமும் முல்லைத்தீவில் இயங்கிய கோத்தாபய இராணுவ வதைமுகாமும் சட்டரீதியாக வெளிக் கொண்டுவரப்பட்டமை.

(2) சட்டமாஅதிபர் திணைக்களத்தில் உயர் அதிகாரிகளாக கடமையாற்றிய பிரதிமன்றாடியார் நாயகம் சவீந்திர பெர்னான்டோ, மன்றாடியார் நாயகம் சுகந்தகம்லத் ஆகிய இருவரும் இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ஐந்து மாணவர்கள் உட்பட 11 தமிழ் இளைஞர்களின் கடத்தல் தொடர்பாக புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளில் சந்தேக நபர்களான கடற்படை அதிகாரிகளுக்கு சார்பாக எவ்வாறு தலையிட்டனர் என்பதனை குற்றப் புலனாய்வுத் திணைக்கள

(CID) அத்தியட்சகர் சானி அபேசேக்கர திறந்த நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியமை சட்டச் சமூகமெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

(3) 11 தமிழ் இளைஞர்களின் கடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேக்கர 2019ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு தென்மாகான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் செயளாளராக நியமிக்கப்பட்டதையடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதை எதிர்த்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேக்கர உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

(4) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் 5 மாணவர்கள் உட்பட 11 தமிழ்,முஸ்லீம். இளைஞர்களின் கடத்தல் தொடர்பான விசாரணைகளை நடாத்திய பொழுது மறைக்கப்பட்ட பல திடுக்கிடும் தகவல்களான திருகோணமலையில் கடற்படையினரின் கன்சைட் இரகசிய தடுப்பு சித்திரவதை முகாம். முல்லைத்தீவில் இயங்கிய கோத்தாபய இராணுவ வதை முகாமையும் சட்டரீதியாக வெளிக்கொண்டு வருவதற்கு நீதி மன்றத்தில் நடைபெற்ற ஆட்கொணர்வு மனு விசாரணையில் சாட்சியமளித்த புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த டி சில்வா வழங்கிய முழு ஒத்துழைப்பே முக்கிய காரணங்களாகும். (2019ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் ஏற்பட்டஆட்சி மாற்றத்தின் பின்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த டி சில்வா சுவிட்ஸ்லாந்து நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்)



## ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல்

தெகிவளையில் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி இரவு 10 மணியளவில் மூன்று தமிழ் இளைஞர்களும் அவர்களது நண்பர்களான இரண்டு முஸ்லிம் இளைஞர்களும் பயணம் செய்த வாகனத்தோடு கடத்தப்பட்டனர். கடற்படையினரால் கடத்தப்பட்ட ஐந்து

மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில் கடத்தப்பட்டுக் காணாமல் போன மாணவர்களின் பெற்றோர்களை மனுதாரர்களாகப் பெயர் குறிப்பிட்டு சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்ட வேளையில் சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிமாகக் கொண்ட ஐந்து மாணவர்களில் நாகநாதன் ரஜிவ் என்ற மாணவன் 18.09.2008 அன்று மருத்துவ மேற்படிப்புக்காக வெளிநாடு செல்ல இருந்த நிலையில் தனது நண்பர்களான மற்றைய நான்கு மாணவர்களுக்கும் இரவுவிருந்தொன்றினை வழங்க செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி உணவு விடுதிக்கு சென்று, விருந்து வழங்கிவிட்டு திரும்பி வந்தவேளையிலேயே் 5 மாணவர்களும் தெஹிவளை பாலத்துக்கு அருகாமையில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டனர். கொட்டாஞ்சேனை, வத்தளை பகுதிகளை வதிவிடமாகக் கொண்ட மேலும் ஆறு இளைஞர்களுமாக 11 இளைஞர்கள் கடற்படையினரால் வெள்ளை வானில் கடத்தபட்டனர்.

கடத்தப்பட்ட 11 இளைஞர்களின் பெற்றோர் உறவினர்கள் கொட்டாஞ்சேனை வத்தளை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை செய்தபோதிலும் கடத்தப்பட்டவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் கடத்தப்பட்ட 5 மாணவர்களில் இருவரான ரஜீவ் நாகநாதனும் விஸ்வநாதன் பிரதீப் என்ற மாணவனும் தங்களைக் கடற்படையினர் கடத்தி வைத்துள்ளதாகவும் கடற்படையை சேர்ந்த கடத்தல்காரர்கள் கேட்கும் தொகையை கொடுத்து தங்களை காப்பாற்றும் படியும் தமது தாய் தந்தையருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர் கடத்தல்காரர்களை தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளை மீட்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்த போதிலும் முயற்சிகள் பலனளிக்கவில்லை இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி கடத்தப்பட்ட ஐந்து இளைஞர்களில் மூன்று இளைஞர்கள் சார்பில் மாணவன் ராஜீவ் நாகநாதன் சார்பில் அவரது தாயார் சரோஜா நாகநாதனும் பிரதீப் என்ற மாணவன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும் மாணவன் திலகேஸ்வரன் சார்பில் அவரது தாயார் காவேரி ராமலிங்கத்தையும் மனுதாரர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு ஆட்கொணர்வு மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா தாக்கல் செய்திருந்தார்.

கொழும்பில் வைத்துக் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டதனால் மட்டும் சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுப் பத்திரம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவில்லை கடத்தப்பட்ட ஐந்து மாணவர்களும் (3 தமிழ் மாணவர்கள் 2 முஸ்லீம் மாணவர்கள்) மற்றைய ஆறு இளைஞர்களும் கொழும்பிலேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்றதுடன் வடகிழக்கோடு எந்தத் தொடர்பும் அற்றவர்கள் என்பது மட்டுமின்றி விடுதலைப் புலிகளுடனோ வேறு எந்த சட்டரீதியற்ற அமைப்புக்களுடனோ எந்தவித தொடர்போ சம்பந்தமோ இவர்களுக்கு இருக்கவில்லை என்பதை புலனாய்வுப் பிரிவின் விசேட பொறுப்பதிகாரி நிசாந்த சில்வாவின் சாட்சியத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டது மேலும் 11 இளைஞர்களை கடற்படையினர் கடத்தியது கப்பம் பெறுவதற்காக என்பதனைக் கடத்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள்

மற்றும் உறவினர்கள் நீதிமன்றில் சாட்சியம் அளிக்கையில் கூறிய சாட்சியத்தை புலனாய்வுப் பிரிவு விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்தில் ஒப்புறுதிப்படுத்தப்பட்டது.

## கடற்படைத்தளபதி கரன்னாகொட முறைப்பாடு

கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னாகொடவின் உத்தரவுகளையும் கட்டளைகளையும் உடனுக்கு உடன் நிறைவேற்றபவராகவும் மிகவும் நெருக்கமானவராகவும நம்பிக்கைக்குரியவராகவும் செயல்பட்ட கடற்படை லெப்டினெண்ட கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக 2009 மே 28 ஆம் திகதி கொழும்பு குற்றப் பிரிவு (CCD) பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவுக்கு லெப்டினெண்ட கொமாண்டர் சம்பத் முனசிங்கவிற்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருந்ததாகவும் மோசடியான நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் அவர்மீது குற்றஞ் சாட்டி ஒரு எழுதப்பட்ட முறைப்பாட்டை செய்தார். இந்த முறைப்பாட்டு விசாரணைகளை கொழும்பு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றியதையடுத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடற்படை லெப்டினெண்ட கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பித்து கடற்படை லெப்டினெண்ட கொமாண்டர் சம்பத் முனசிங்கவின் உத்தியோக பூர்வ படுக்கை அறையைச் சோதனை செய்கையில் அந்த அறையிலிருந்து பல அடையாள அட்டைகளும் கடவுச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டு விசாரணைகள ஆரம்பிக்கப்பட்டு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. மேலும் இந்த விசாரணையில் கடற்படை லெப்டினெண்ட கொமாண்டர் சம்பத் முனசிங்க மாணவர் கடத்தலில் முக்கிய பிதான பங்கு வகித்தமையுடன் இந்தக் கடத்தலில் தொடர்பு பட்ட கடற்படை அதிகாரிகளின் செயற்பாடுகளும் இந்த விசாரணையில் வெளிக் கொண்டு வரப்பட்டு விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.

## ஆட்கொணர்வு மனுவிசாரணை

ஆட்கொணர்வு மனுவிசாரணையில் ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் மனுதாரர்கள் சார்பில் ஐந்து இளைஞர்களில் மாணவன் ராஜீவ் நாகநாதன் தாயார் சரோஜா நாகநாதன் கடத்தப்பட்ட பிரதீப் விஸ்வநாதன் சார்பில் அவரது தந்தையார் விஸ்வநாதனும் மாணவனான திலகேஸ்வரன் ராமலிங்கம் சார்பில் அவரது தாயார் காவேரி ராமலிங்கமும் கொழும்பு நீதவான் நீதிமன்றில் சாட்சியம் அளித்ததுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை பிரிவினரால் கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கைகளில் உள்ளடக்கங்களை கோட்டை நீதவான் நீதிமன்ற பதிவாளரின் சாட்சியத்தின் மூலமும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா, கடற்படையை சார்ந்த ஜோன் கொத்தலாவெல, அலுத் கெதர உபுல் பண்டார, அட்ரியன் சம்பத், எம்.ஏ ஜயதிலக, ரஞ்ஜித் முனசிங்க, லுதினன் கமாண்டர் வெலகுமார ஆகியோர் மனுதாரர்களின் முக்கிய சாட்சியாளர்களாக அழைக்கப்பட்டு சாட்சியாளர்களின் சாட்சியங்களை நான் நெறிப்படுத்துகையில் பல எதிர்பாராத திடுக்கிடும் விடயங்கள் வெளிக் கொண்டு வரப்பட்டன.

## குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை நிசாந்த டி சில்வா

புலனாய்வுப் பிரிவின் விடேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியான நிசாந்த டி சில்வாவின் சாட்சியத்தினை நான் நெறிப்படுத்துகையில் தனது சாட்சியத்தில், தெகிவளையில் வைத்து கடத்தப்பட்ட ஐந்து மாணவர் உட்பட மொத்தம் 11 பேர் கடற்படையினரால் கடத்தப்பட்டு முதலில் சைத்திய வீதியிலும் பின்னர் திருகோணமலை கடற்படை சித்திரவதை முகாமில் அடைத்து வைத்ததுடன் மாணவர்களை விடுதலை செய்வதற்குக் கப்பமாக ஒவ்வொருவரிடமும் ஒரு கோடி ரூபா கோரியுள்ளதாகவும் சான்று காணப்படுவதாகவும் 42 சாட்சியங்களை விசாரணைக்கு உட்படுத்திதுடன் சைத்திய வீதியிலுள்ள தடுப்பு முகாமையும் திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை சித்திரவதை முகாமையும் தனது தலைமையில் விசாரணைக்குழு சென்று பார்வையிட்டு விசாரணை நடாத்தியதில் வெளிவந்த சான்றுகளின் அடிப்படையிலேயே சாட்சியம் அளிப்பதாக சாட்சி நீதிமன்றில் தெரிவித்ததுடன் மேலும் தனது சாட்சியத்தில்.

## திருகோணமலை இரகசிய தடுப்பு முகாம்

ஐந்து மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவத்துடன் கடற்படையை சேர்ந்த லுதினன் கமாண்டர்களான சுமித் ரணசிங்க, ஹெட்டிஆராச்சி, பிரசாத் சந்தன், சம்பத் முனசிங்க ஆகிய நால்வருக்கும் எதிராகச் சான்று உள்ளதென சாட்சியமளிததுடன் கடற்படைப் முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தமையை முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவும் முன்னாள் கடற்படை பேச்சாளர் திசாநாயகாவும் நன்கு அறிந்திருந்ததாகவும் தனது சாட்சியத்தில் தெரிவித்ததுடன். தளபதி வசந்த கரன்னாகொட நினைந்திருந்தால் இந்த மாணவர்களை விடுதலை செய்திருக்கலாம். எனவும் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியினால் இந்த நீதிமன்றுக்கு பாரப்படுத்திய பகுப்பாய்வு அறிக்கையில் திருகோணமலையில் கடற்படையினரின் இரகசிய தடுப்பு முகாமில் கண்டெடுக்கப்பட்ட பெரும் தொகையான எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்கள் காணப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கன்சைட் இரகசிய தடுப்பு முகாமும் மற்றும் முல்லைத்தீவில் கோத்தபாய இராணுவ வதைமுகாமும் இயங்கியதாக சான்றுகள் மூலம் வெளிக் கொண்டுவரப்பட்டதுடன் இவ்விருவதை முகாம்களிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை அரச அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலம் முதன்முதலாக இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டது. லுதினன் கமாண்டர் ஜோன் கொத்தலாவெல குமாரவின் சாட்சியத்தின் மூலம் லுதினன் கமாண்டர் ஜோன் கொத்தலாவெல குமாரவின் சாட்சியத்தின் மூலம் லுடினட் கொமாண்டர் ரணசிங்க பெடிகே சுமித் ரணசிங்கவின் கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை இரகசிய தடுப்பு முகாமில் கடத்தப்பட்ட 5 இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அலுத் கெதர உபுல் பண்டாரவின் சாட்சியத்தில் ஐந்து இளைஞர்களும் கடத்தப்படடு கைது செய்யப்பட்டு திருகோணமலை இரகசிய தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் கொழும்பு

கோட்டைக்கு அருகாமையில் சைத்திய வீதியில் அமைந்துள்ள 'பிட்டுபம்புவ' என்ற இடத்தில் லுடினட்கேர்னல் ஹெட்டிஆராச்சி பிரசாதத்தின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது வெளிக் கொண்டுவரப்பட்டது.

ஆட்கொணர்வு மனு விசாரணையில் மிக முக்கியமானதும் சட்டரீதியாக நிரூபிக்கப்பட வேண்டிய விடயங்கள் மனுதாரர்களது சாட்சியங்கள் மூலமும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளது சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட மாணவர்களை அரசகடற்படையினரே கடத்தியுள்ளதுடன் சித்திரவதை முகாமில் தடுத்தும் வைத்திருந்தனர் என்பவை மனுதாரர்களின் சாட்சியம் மட்டுமின்றி அரச அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது எனவே கடற்படையினரே மாணவர்களை கடத்திச் சென்றுள்ளனர். கடத்தப்பட்ட மாணவர்களை கடத்திச் சென்றுள்ளனர். மாணவர்கள் கடற்படையினரின் அதாவது அரச கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் தொடர்ந்தும் அரச கட்டுப்பாட்டில் உள்ளனர் எனவே அரசு இதற்கு பொறுப்புக்கூற கட்டுப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பிக்க போதிய சான்றுகள் இந்த ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது என எனது எழுத்துமூல சமர்ப்பணத்தில் பதிவிடப்பட்டது.

## மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

மாணவர்கள் கடற்படையினரின் அதாவது அரச கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் தொடர்ந்தும் அரச கட்டுப்பாட்டில் உள்ளனர் எனவே அரசு இதற்கு பொறுப்புக்கூற கட்டுப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பிக்க போதிய சான்றுகள் இந்த ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது என எழுத்தமூல சமர்பணத்தில் பதிவிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டமையே சட்டமா அதிபர் அட்மிரல் வசந்த கரன்னாகொட, கடற்படை ஊடக பேச்சாளர் டி.கே.பி. தசநாயக, லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்க, திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த கன்சைட் நிலத்தடி இரகசியவதை முகாம் பொறுப்பதிகாரி சுமித் ரணசிங்கவுடன் மேலும் 9 கடற்படை வீரர்களுமாக 14 சந்தேக நபர்களை எதிரிகளாக பெயர் குறிப்பிப்பட்டு சட்டமா அதிபரினால் 667 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இந்த கடத்தல் காணாமல் ஆக்கல் குறித்த வழக்கு விசேட ரயல் அட் பார் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது

## ஜனாதிபதி ஆணைக்குழு

2015ம் ஆண்டு தை மாதம் 8ம் திகதி முதல் 2019ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ம் திகதிவரையிலான காலப்பகுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களை சேகரிப்பதற்காக ஆட்சி மாற்றத்தின் பின்னர் 2020ம் ஆண்டு தை மாதம் விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக ஜனாதிபதியினால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொட, கடற்படை ஊடக பேச்சாளர் டி.கே.பி. தசநாயக ஆகிய இருவரும் 11 இளைஞர்கள் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் தங்கள் இருவரையும் எதிரிகளாக பெயர் குறிப்பிட்டு விசேட ரயல் அட் பார் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதாகவும் அரசியல் பழிவாங்கும் நோக்கத்திலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தங்களின் பெயர்களை குற்றப்பத்திரிகையிலிருந்து நீக்கும்படி சட்டமா அதிபருக்கு உத்தரவிடும்படி முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்

இந்த முறைப்பாட்டையடுத்து ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னாகொட, கடற்படை ஊடக பேச்சாளர் டி.கே. பி. தசநாயக ஆகிய இருவருடைய முறைப்பாட்டை விசாரணை செய்து ஜனாதிபதிக்கு சிபார்சுகளை முன்வைக்கும்வரை வசந்த கரன்னாகொடை மற்றும் தசநாயக ஆகியோர் தொடர்பிலான வழக்கு விசாரணை மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கையையும் சட்டமா அதிபர் அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்ற அதிகாரி ஒருவரினால் முன்னெடுக்கப்பட கூடாது என ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது

2019ம்ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டு 2020ம் ஆண்டு தை மாதம் 24ம் திகதி பிரதிவாதிகளுக்கு குற்றச்சாட்டுப்பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. எனவே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபரின் செயல்பாடுகளில் தலையிடவோ அல்லது சட்டமா அதிபருக்கு உத்தரவு வழங்கவோ முடியாது எனவே வழக்கு விசாரணைகளை இடைநிறுத்தும்படி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு வழங்கியுள்ள கட்டளை சட்டவலுவற்றதாகும்

## சட்டமா அதிபருக்கு கட்டளையிட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அதிகாரமில்லை

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச் சாட்டுப்பத்திரத்தில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, கடற்படை ஊடக பேச்சாளர் டி.கே. பி. தசநாயக ஆகிய இருவருடன் மற்றும் 12 கடற்படையினருமாக 14 பிரதிவாதிகளுக்கு எதிராக ஆட்கடத்தல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் 2008,2009ம் ஆண்டுகளில் கடத்தப்பட்டவர்களின் பெரும்பான்மையினர் தமிழர்கள் எனவும் கடத்தப்பட்டு திருகோணமலை கடற்படை முகாமில் தடுத்து வைத்து சிலரிடமிருந்து கப்பமாக பணம் கோரப்பட்டதாகவும் பின்னர் கொலை செய்யப்பட்டு இறந்த உடல்கள் சிதைக்கப்பட்டு வீசப்பட்டதற்கான சான்றுகள் உண்டெனவும் அந்த அறிக்கையில்

குறிப்பிடப்படடதுடன், இந்த வழக்கு தற்பொழுது நீதிமன்றத்தில் விசாரணைக்காக திகதி குறிப்பிடப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சட்டமா அதிபருக்கு கட்டளையிடவோ அல்லது நெறிப்படுத்துவதற்கோ எந்த அதிகாரமும் இல்லையென குறிப்பிட்டதுடன் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நெறிப்படுத்தலுக்கு சட்டமா அதிபர் கட்டுப்பட்டவரல்ல எனக் குறிப்பிட்டு 2020ம் ஆண்டு தை மாதம் 24ம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நீதித்துறைக்கு எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவோ வழிப்படுத்தவோ அல்லது பரிந்துரைக்கவோ அதிகாரமில்லை 11 இளைஞர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட இந்த வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட கடற்படைச் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி தசநாயக ஆகியோர் மீதான விசாரணைகளை நிறுத்துமாறு அறிவித்துள்ளமை நீதித்துறையின் சுயாதீனத்தில் தலையிடும் சட்டரீதியற்ற செயல்பாடாகும். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள விசேட ரயல் அட் பார் மேல் நீதிமன்றின் செயல்பாடுகளில் தலையீடு செய்ய முடியாது என்பதுடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் ஒரு ஆணைக்குழு எடுக்கும் முடிவு அல்லது நிலைப்பாட்டை நீதிமன்றம் சாட்சியாக ஏற்றுக் கொள்ள முடியாது அது குறித்து சுயாதீன நீதிமன்ற கட்டமைப்புக்குள் விசாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விசேட ரயல் அட்பார் மேல் நீதிமன்றம் கடந்த 2019ம்ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ளது எனினும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இவ்வருடம் தை மாதம் 9ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது அப்படியிருக்கையில் இம்மன்றின் செயல்பாடுகளை நிறுத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை மேல் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நிறுத்துதல் தொடர்பாக தீர்மானம் எடுக்க உயர் நீதிமன்றத்தின் ஊடாக மட்டுமே முடியும்.

கரன்னாகொடவும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி தசநாயக்கவும் தங்களை அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கத்தில் கொழும்பில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 இளைஞர்களின் வழக்கில் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை முடியும்வரை குற்றப்பத்திரம் கையளிப்பதை இடைநிறுத்தி வைக்கும்படியும் அவ்வாறில்லாமல் குற்றப்பத்திரங்களை நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கையளித்து வழக்கை நடாத்துமானால் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படலாம் என்ற வாதத்தை முன்வைத்தனர்.

## தேசிய பாதுகாப்பும் கப்பம் கோரப்பட்ட கொலைகளும்

இந்த வழக்கு விசாரணையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இரகசிய தகவல்கள் வெளிப்படுமாயின் அரசியலமைப்பின் 106(3) ஆம் உறுப்புரைக்கமைய அவ்வாறான

தகவல்கள் குறித்து இடம்பெறும் சாட்சி விசாரணைகளை இரகசிய முறையில் முன்னெடுக்க கட்டமைப்பு உள்ளது மேலும் இந்த வழக்கு தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்டதா என்ற வாதம் முன்வைக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் இந்த வழக்கில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச் சாட்டுப் பத்திரத்தில் எதிரிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் கடற்படைப் பிரதானியான வசந்த கரன்னாகொடவும் அவரது கட்டளையின் பிரகாரம் செயல்பட்ட கடற்படையினருமாவர். உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் காலத்தில் 2008ம் ஆண்டின் இறுதிக் காலங்களிலும் 2009ம்ஆண்டின் முற்பகுதியிலும்தான் கொழும்பில் இளைஞர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். ஆட்கொணர்வு மனு விசாரணையில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒவ்வொரு பெற்றோர்களிடம் ஒருகோடி ரூபா கப்பம் கோரியதாக இந்த வழக்கு விசாரணையில் பெற்றோர் சாட்சியம் அளித்துள்ளனர் தேசிய பாதுகாப்புக்கும் கப்பம் கோரப்பட்டு கொலை செய்யப்பட்ட விடயத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை.

## மேல் நீதிமன்ற வழக்கை இடைநிறுத்திய உயர் நீதிமன்றம்

நான் நிசாந்த சில்வாவின் சாட்சியத்தை நெறிப்படுத்துகையில் நிசாந்த சில்வா தனது சாட்சியத்தில் கடத்தப் பட்டவர்களுக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் எந்தத் தொடர்பும் அற்றவர்களென சாட்சியமளித்துள்ளார். சட்டவிரோதச் செயல்களைச் செய்துவிட்டு தேசிய பாதுகாப்பைக் காரணங்காட்டி குற்றவாளிகள் தப்பித்துப் போக எக்காரணங்கொண்டும் சட்டம் இடமளிக்கக் கூடாது. இதுதான் நமது நீதித்துறை மீது நாம் கொண்டிருக்கும் இறுதி நம்பிக்கையை உயிர்ப்போடு இருக்கச் செய்வதாக அமையுமெனினும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ததையடுத்து உயர் நீதிமன்றம் மேல் நீதிமன்றில் நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கை இடைநிறுத்த உத்தரவு வழங்கியுள்ளது. அதன் பின்னர் வசந்த கருனாகொட வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எந்தவிதமான தயக்கமுமின்றி துணிந்து இந்த ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்யாது விட்டிருந்தால் இங்கு பேசப்பட்ட அத்தனை உண்மைகளும் சாட்சியங்களே இல்லாமல் மறைந்து போய் இருக்கும்.

# மோகனருபன் கைதும் விடுதலையும்

(தடுப்புக்காவல் உத்தரவுகளும்) 2008–2015

27

*Gowry Shangary Thavarasha Vs Attonerney General SC 173/2008*

## குற்றச்சாட்டுகள்

தியாகராஜா மோகனருபன் அல்லது சுப்பிரமணியம் சிவதாசன் அல்லது முரளி என அழைக்கப்படும் இந்தக் கைதி, சொற்களின் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது கட்புலனாகும் காட்சிகள் மூலம் அல்லது வேறு வகையான முறையொன்றினூடு கொழும்பில் வன்செயல்கள் இடம் பெறுவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது ஏற்பாடு செய்ய நாடி, அரச விரோத எல்ரீரீஈ இயக்கத்தில் சேர்ந்து அதன் உளவுப் பிரிவில் உறுப்பினராகச் செயற்பட்டதோடு குறித்த இயக்கத்தின் ஓர் உறுப்பினரான அகிலன் மற்றும் இலங்கை பொலிஸ் புலனாய்வு திணைக்களத்தில் சேவையாற்றிய தர்மதாச என்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரால் வழங்கப்பட்ட இலங்கை பொலிஸார் வசம் வைத்திருந்த எவையேனும் இரகசிய எழுத்தாவணங்களை டிஜிட்டல் தொழிநுட்ப முறையைப் பயன்படுத்தி பெற்றுக் கொண்டு அவற்றை எல்ரீரீஈ இயக்கத்துக்குக் கொடுத்துதவியதன் 10 சீருடைகளை மேற்கூறப்பட்ட எல்ரீரீஈ இயக்கத்தின் உளவுத் தகவல் பிரிவின் பொறுப்பாளரான கபில அம்மான் என்பவருக்குப் பெற்றுக் கொடுத்ததுடன் முன்னாள் கடற்படைத் தளபதி தயா சந்திரகிரியை தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை புரிய சதி செய்ததாகவும் 1988ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க மற்றும் 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் 2(1)(ஏ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(2) (11) பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்பட வேண்டிய குற்றத்தைப் புரிந்துள்ளதாக வெலிகடைச் சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தியாகராஜா மோகனருபனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2009.10.26ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

## அரச சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் மனுதாக்கல்

மேல் நீதிமன்றில் விளக்கத்துக்காக பல முறை திகதி குறிப்பிடப்பட்டு விளக்கத்திற்காக அரச சாட்சியாளர்களுக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அரச சட்டத்தரணி மேல் நீதிமன்றில் 29.02.2012 ஆம் திகதி நகர்த்தல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த முன் நகர்த்தல் பத்திரம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிசாரின் வேண்டுகோளையடுத்து பாதுகாப்புச் செயளாளரின் உத்தரவின் பிரகாரம் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த எதிராளியான தியாகராஜா மோகனருபனை விளக்க மறியல் கட்டுப்பாட்டிலிருந்து மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிசாரிடம் பாரம் கொடுக்கும்படி பாதுகாப்புச் செயளாளரின் உத்தரவின் பிரதியை இணைத்து தாக்கல் செய்யப்பட்டது

## அவசரகால ஒழுங்குவிதிகள் துஷ்பிரயோகம்

அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் கைது செய்யப்படும் கைதிகளை அவசரகால ஒழுங்கு விதியின் 19(1)ஆம் 21(2)பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் 90 நாட்கள் காலத்திற்கு தடுத்துவைத்து விசாரணை செய்யமுடியுமெனினும் அந்தக் குறிப்பிட்ட 90 நாள்கள் முடிவடைய முன்னர் (Mandatorily) குறிப்பிட்ட கைதிக்கு எதிராக எந்தவித சான்றுகளும் இல்லாதவிடத்து அந்தக் கைதியை தடுப்புக்காவலுக்கு பொறுப்பாக கடமை புரியும் அதிகாரியினால் விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது நியாயாதிக்கம் உள்ள நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி சிறைச்சாலை பிசுக்காலின் கட்டுப்பாட்டிற்கு அந்தக் கைதி ஒப்படைக்கப்படவேண்டும் என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 90 நாட்கள் முடிவடைந்த நிலையிலும் மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சிறைச்சாலையில் பிசுக்காலின் கட்டுக்காப்புக்கு அரசியல் கைதிகளைச் சட்டரீதியாக மாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை பொலிசார் கடைப்பிடிக்காமல் நீண்ட காலமாக வருடக்கணக்காக தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை நடாத்திவந்த நிலையில்

## உயர் நீதிமன்றில் மனு

பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு 90 நாட்களுக்கு மேல் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவில் சட்டரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்னா டி அல்விஸ், பணிப்பாளர் சந்திரா வாகிஸ்டர், பாதுகாப்புச் செயளாளர் கோத்தபாய ராஜபக்ஸ, சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் பெயர் குறிப்பிட்டு உயர் நீதிமன்றில் தடுப்புக்காவல் கைதியான தியாகராஜா மோகனருபன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்தார்.

## இடைக்கால உத்தரவு

உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் நீதியரசர்களான சிராணி பண்டாரநாயக, ராஜா பெர்னான்டோ, சலீம் மர்சூப் ஆகிய நீதியரசர்கள்

மனுதாரரான மோகனருபனை உடனடியாக சிறைச்சாலை பிசுக்காலின் கட்டுக்காப்புக்கு மாற்றும்படி 2008ஆம் ஆண்டு ஆடி மாதம் 29ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்து. உயர் நீதிமன்றின் இந்தத் உத்தரவையடுத்து மனுதாரரான மோகனருபன் உடனடியாக வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதுடன் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் நீண்ட காலமாக தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட பல அரசியல் கைதிகள் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிரதான நீதவானின் உத்தரவுக்கமைய சிறைச்சாலைகளின் (Custody of the Fiscal) கட்டுக்காப்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## தடுப்புக் காவல் உத்தரவு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட மனுதாரரான மோகனருபனை மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரும் நோக்கத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 9(1) பிரிவின்படி பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியிடமிருந்து தடுப்புக் காவல் உத்தரவு ஒன்றினை 2009.10.08ஆம் திகதி பெற்று மனுதாரரான மோகனருபனை மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பிரிவுக்குக் கொண்டு வந்து விசாரணைகளை நடாத்தத் தொடங்கினர்.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவில் தியாக ராஜா மோகனருபன் அல்லது முரளி என அழைக்கப்படும் இந்தக் கைதி புலிகளின் உளவுச் துறையை சேர்ந்த உளவாளியெனவும் முன்னாள் கடற்படை தளபதி தயா சந்திரகிறியை தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை புரிய சதி செய்துள்ளாரெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது

பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிசார் நீதிமன்ற அனுமதியின்றி மீண்டும் விசாரணைக்கென மனுதாரரான மோகனருபனை சிறைச்சாலைக் கட்டுப்பாட்டிலிருந்து பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுக்கு மேலதிக விசாரணைக்காக கொண்டுச் செல்லப்பட்டமையையானது உயர் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. உயர் நீதிமன்றின் நீதியரசர்கள் பொலிசாரின் இந்த நடவடிக்கைகள் சட்டத்துக்கு முரணானது மட்டுமின்றி இச் செயலானது நீதிமன்றினால் சகித்துக் கொள்ள முடியாததென தமது தீர்ப்பை 2009.12.16ஆம் திகதி வழங்கியதன் பின்னர் பொலிசாரினால் மோகனருபன் மீண்டும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார் (கௌரிசங்கரி தவராசா எதிர் சட்டமா அதிபர்) (Gowry Shangary Thavarasha Vs Attorney-Genaral S.C. 173/2008)

## அரச சட்டத்தரணி முன்நகர்த்தல் பத்திரம் தாக்குதல்.

29-02-2012ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் நிலைய புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விளக்கத்திற்காக எதிராளியின் சார்பில் நான் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த வேளையில் நீதிமன்றத்தினால் மோகனருபன் என பெயர் கூப்பிடப்பட்ட வேளையில் அரச சட்டத்தரணி தனது விண்ணப்பத்தை முன்வைத்தார்

அவ்வேளையில்தான் அரச சட்டத்தரணி நீதிமன்றத்தை வேண்டிக் கொண்ட விண்ணப்பம் யாது என்பது எனக்கு தெரியவந்தது

இந்த மனு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த வேளையில் அரச சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் விளக்க மறியலில் வைக்கப்பட்டு விசாரணைக்காக காத்திருக்கும் இந்த அரசியல் கைதியை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிசாரிடம் ஒப்படைக்கும்படி அரச சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவைப் பற்றிய எந்தவிதமான அறிவித்தலையோ பாதுகாப்புச் செயளாளாரின் உத்தரவின் பிரதியையோ எதிராளி தரப்பு சட்டத்தரணியாகிய எனக்கு வழங்காமல் இந்த முன்நகர்த்தல் பத்திரத்தை அரச சட்டத்தரணி தாக்கல் செய்துள்ளார் என்பதை நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்ததுடன் விளக்க மறியலில் இருந்த மனுதாரரை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு பொலிசார் நீதிமன்ற அனுமதியின்றி முன்னர் விசாரணைக்கென பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டு சென்றமை சட்டத்துக்கு முரனானது மட்டுமின்றி இச் செயலானது நீதிமன்றினால் சகித்துக் கொள்ள முடியாததென ஏற்கனவே உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மனுதாரரான தியாகராஜா மோகனருபனை தடுப்புக் காவலிலிருந்து விளக்கமறியலுக்கு உட்படுத்தும் படி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு அமையவே இந்த வழக்கில் எதிராளியாகக் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் தியாகராஜா மோகனருபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ ார் தமது கட்டுக்காப்பிலிருந்து மோகனருபனை நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியல் கட்டுப்பாட்டிற்கு பாரம் கொடுத்தனர். பின்னர் மேல் நீதிமன்றில் குற்றப்பகர்வு தாக்கல் செய்யப்பட்டு விளக்கத்திற்காக பல தவணைகள் நீதிமன்றினால் திகதி குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்ல இந்த முன் நகர்த்தல் மனு தாக்கல் செய்யப்படடது.

## உயர் நீதி மன்ற தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும்.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட 10ஆம் இலக்க 1982ஆம் ஆண்டுச்சட்டத்தின் 15ஆம் அ (1) ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் கைதி விளக்க மறியலிருந்து விளக்கத்திற்கு நீதிமன்றம் கொண்டுவரப்படுவதனால் அரச பாதுகாப்பிற்கும் பொது அமைதிக்கும் பங்கம் விளையும் சாத்தியங்கள் காணப்படுவதாக கருதுமிடத்து விளக்கம் முடியும்வரை கைதியை எங்கு தடுத்து வைக்கப்பட வேண்டும் என்ற முடிவெடுக்க சட்டத்தில் இடமிருந்த போதிலும் இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது இந்த உயர் நீதிமன்ற தீர்ப்பை மீறும் வகையில் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவிற்கு அமைய மீண்டும் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்வது உயர் நீதிமன்றின் தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும் என நீதிமன்றிற்கு எனது வாதத்தில் முன் வைக்கப்பட்டது.

## நீதியும் நியாயமான விளக்கம்

நீதியும் நியாயுமான விளக்கம் நடைபெறு வேண்டுமாயின் எதிராளி சட்டரீதியான விளக்க மறியலில் இருந்து விளக்க தினத்தன்று நீதிமன்றிற்கு கொண்டு வரப்படவேண்டும் விசேடமாக குற்றஒப்பதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குட்படுத்துகையில் உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்படுகின்றது இவ் விசாரணை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் வேளையில் பொலிசாரின் கட்டுப்பாட்டிலிருந்து எதிரியை விளக்கத்திற்காக நீதிமன்றிற்கு கொண்டு வரும் வேளையில் பொலிசாரின் பாதுகாப்பில் இருக்கும் அரசியல் கைதியினால் பொலிசாருக்கு எதிராக சாட்சியம் அளிக்க முடியுமா? பொலிசாரின் கட்டுப்பாட்டிலிருந்து விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு கொண்டுவரும் நிலையில் நீதியும் நியாயமும் சுதந்திரமுமான விசாரணையை எதிர்பார்க்க முடியுமா? என நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது

## நகர்த்தல் மனுப்பத்திரம் மீளப்பெறல்

இந்த வழக்கு 09.03.2012 ஆம் திகதி நீதிமன்றத்தினால் மேலதிக விளக்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதியான தியாகராஜா மோகனருபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கும்படி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த நகர்த்தல் பத்திரம் வாபஸ் பெற்றுக் கொள்வதாக அரச சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்ததையடுத்து அரச சட்டத்தரணியால் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுப்படி செய்த மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஸ வழக்கு விசாரணையை 2012ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் எதிராளியை மீண்டும் விளக்கமறியலுக்கு கொண்டு செல்லும்படி சிறை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இந்த மனு மேல் நீதிமன்றில் வாத பிரதிவாதங்களுக்காக அழைக்கப்பட்ட மூன்று தினங்களிலும் மோகனருபனை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் நீதிமன்றிற்கு சமூகமளித்திருந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றும் மூன்று அதிகாரிகளும் நீதிமன்றின் உத்தரவையடுத்து மிகவும் ஏமாற்றத்துடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய காட்சி மறக்க முடியாத காட்சியாகும்

இந்த மனு மீதான விசாரணை நடைபெறுகையில் நீதிமன்றம் வந்திருந்த உடகவியலாளர் ஒருவரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிலிருந்து மோகனருபனை அழைத்துச் செல்வதற்காக நீதிமன்றம் வந்திருந்த உதவிப் பொலிஸ் பரிசோதர் கூறியுள்ளார் சட்டத்தரணி தவராசா நாங்கள் முன்நகர்த்தல் மனு தாக்கல் செய்த அன்றைய தினம் நீதிமன்றில் சமூகம் அளிப்பார் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை அதிஸ்டவசமாக மோகனருபன் தப்பிவிட்டான்

அரச சட்டத்தரணியினால் முன்நகர்த்தல் மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று நான் நீதிமன்றில் தெஹிவளை பொலிஸ் நிலைய புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விளக்கத்துக்காக நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்ததினால் பொலிசாரின்

சூழ்ச்சியை முறியடிக்கக் கூடியதாகயிருந்தது அதிஸ்ட வசமாக மோகனருபன் பொலிஸார் விரித்த வலையிலிருந்து தப்பிக்கொண்டார்.

எல்ரீரீஈ இயக்கத்தின் உளவுத்துறையை சார்தவர்களும் கொழும்பில் உளவு பார்த்தவர்களுமாக சில தமிழ் அரசியல் கைதிகள் பாதுகாப்புச் செயளாளரின் உத்தரவின் பிரகாரம் மேல் நீதிமன்றினால் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு வழக்கு விசாரணை தினத்தன்று நீதிமன்றம் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் கைதியான தியாகராஜா மோகனருபனை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கும்படி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அரச சட்டத்தரணி நீதிமன்றிற்கு அறிவித்தமைக்கு முக்கியகாரணம் யாதெனில் அரச தரப்பினதும் எதிராளி தரப்பினதும் வாத பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு அமைய அரச தரப்பு வேண்டுகோளை மேல்நீதிமன்றம் நிராகரித்தால் அந்தத் கட்டளையின் பின்னர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட மற்றைய அரசியல் கைதிகளை பூசா தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்வதில் ஏற்படப்போகும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்காகவே தாக்கல் செய்த நகர்த்தல் மனுவை அரச சட்டத்தரணி வாபஸ் பெறப்பட்டமைக்கான முக்கிய காரணமாகும்.

2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட மோகனரூபன் 2015ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

# ஊடகவியளாளர் யசிதரன் வளர்மதி கைதும் விடுதலையும்

2008–2009

28

## பத்திரிகை ஆசிரியர் திசநாயகத்திற்கு 20 வருட தண்டனை வெளியீட்டாளர் யசிகரன் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முடிவடைந்து சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட ஒரே கைதி திசநாயகம் மட்டுமே. விடுதலையின் பின்னர் அமெரிக்காவில் வசிக்கின்றார்

### யசிதரன் வளர்மதி கைது

ஈகுவாலிட்டிகிராபிக்ஸ் 'Ekwality Graphics (Pvt) Ltd நிறுவனத்தின் உரிமையாளரும் நன்கு அறியப்பட்ட பத்திரிகை வெளியீட்டாளருமான வடிவேலு யசிகரனும் சக்தி தொலைக்காட்சி நிகழ்சி தயாரிப்பாளரான அவரது மனைவி வளர்மதியும் 06-03-2008ஆம் திகதி கொட்டாஞ்சேனையிலுள்ள ஜெம்பட்டா வீதியிலுள்ள அச்சகத்திலிருக்கும் பொழுது பயங்கரவாததடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் காலை 10 மணியளவில் கைது செய்யப்பட்டனர். அவர்களது கணணி மற்றும் அச்சக இயந்திரங்களும் பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

### J.S. திசநாயகம் கைது

அதைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட யசிகரனையும் வளர்மதியையும் பார்வையிடச் சென்ற சண்டே டைம்ஸ் (Sunday Times) பத்திரிகையின் கட்டுரையாளரும் அவுட்ரீச்ல் (www.outreachsl.com) இணையத்தளம் நோத் இஸ்டர்ன் மாதாந்த பத்திரிகையின் (North Eastern Monthly) ஆசிரியருமான






ஊடகவியளாளர் திசநாயகம் 2008.03.07ம் திகதி பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸ் தலைமையகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். பின்னர் செய்தியாளர் சித்சிரி விஜயதுங்க, படப்பிடிப்பாளர் கயன் வசந்தரங்க, ஒளித் தொகுப்பாளர் உதயம் ஆகியோரும் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஈகுவாலிட்டி கிராபிக்ஸ் 'EkwalityGraphics" என்ற பெயர் கொண்ட அச்சகத்தின் பணிப்பாளர்களில் யசிகரனும் அவரது மனைவி வளர்மதியும், சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியரான சிவகுமார் மட்டுமே பொலிசாரால் கைது நடைபெறும் பொழுது இலங்கையில் இருந்தவர்கள். 08-03-2008ஆம் திகதி சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியரும், அச்சகத்தின் ஒரு பணிப்பாளரும், சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளருமான சிவகுமார், சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவரான சுனந்த தேசப்பிரியவுடன் பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸ்

பிரிவுக்குச் சென்றுள்ளார். மற்றைய ஐந்து பத்திரிகைத் துறையை சேர்ந்தவர்களுக்கும் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் 15 மணி நேர விசாரணையின் பின்னர் அச்சகத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சிவகுமார் பொலிஸ் நிலையத்திலிருந்தே விடுதலைசெய்யப்பட்டார்.

## பல சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்

2003ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் பல சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் இருந்த போதிலும் சில சிறுவர் இல்லங்களின் பராமரிப்பு, பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இதில் நான்கு சிறுவர் இல்லங்களான, விபுலானந்தா சிறுவர் இல்லம், கதிரொளி சிறுவர் இல்லம், மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், யோகசுவாமி சைவமகளிர் இல்லம் என்பனவற்றின் பராமரிப்பு கேள்விக்குட்பட்டிருந்தது. யசிகரன் "உதவி" 'uthavi.net' என்ற இணையத் தளத்தினூடாக இந்த சிறுவர் இல்லங்களின் நிலையை உலகிலுள்ள பல அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அறியத் தந்ததையடுத்து, ஜேர்மனியை தளமாகக் கொண்டியங்கிய 'Kriegswai Senhilfe Sri Lanka eV' என்ற அமைப்புப் பிரதி நிதிகள் இலங்கை வந்து மட்டக்களப்புக்குச் சென்று சிறுவர் இல்லங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டன. "உதவி" அரசியல், மதசார்பற்ற ஒரு ஊடகக் கூட்டுவேலையாக இயங்கியது. இந்தக் கூட்டு வேலைத்திட்டத்தின் உதவியாளராக மட்டுமே யசிகரன் இயங்கினார்.

200க்கு மேற்பட்ட அநாதைகள், சிறுவர் இல்லங்களுக்கான நிதி சேகரிப்பு Kriegswaisenhite –Sri-Lanka e.V ஜேர்மன் நாட்டில் ஜேர்மன் அரசாங்கத்தினால் வரி விலக்களிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கை அரசாங்கத்தாலும் உறுதிப் படுத்தப்பட்டு இலங்கை அரசாங்க அதிகாரிகளாலேயே சிறுவர் இல்லங்களின் கணக்கு அறிக்கைகள் வருடா வருடம் ஜேர்மனியில் இயங்கும் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. புலிகள் இயக்கத்தினர் திருகோணமலை வீதி மட்டக்களப்பில் யசிதரனினால் நடாத்தப்பட்டுவந்த "தமிழிச்சி" அச்சகத்தின் பொருட்களை எடுத்துச்சென்ற பிறகு யசிகரன் கொழும்பு வந்து கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில் 'Ekwality Graphics Pvt' என்ற பெயரில் அச்சகத்தை நடாத்தி வந்தார். இந்த அச்சகத்திலேயே பத்திரிகையாளர் J.S.திசநாயகத்தை ஆசிரியராகக் கொண்ட 'North East Herald' என்ற பத்திரிகையும், சிவகுமாரை ஆசிரியராகக் கொண்ட "சரிநிகர்" என்ற பத்திரிகையும் அச்சிட்டு வெளியிடப்பட்டு வந்தன.

வளர்மதி பயங்கரவாதத்தடைப் பிரிவுப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் சக்தி தொலைக்காட்சியில் கடமைக்கு வரமுடியாத சூழ்நிலையை சக்தி நிர்வாகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி சக்தி தொலைக்காட்சி நிறுவனம் வளர்மதியை வேலையிலிருந்து இடைநிறுத்தியது.

06-03-2008, 07-03-2008 ஆகிய தினங்களில் கைதாகித் தடுப்புக் காவலிலிருந்த ஊடகவியலாளர்களான யசிகரன், வளர்மதி, திசநாயகம் ஆகியோரின் கைதுகளுக்கு எதிராக பத்திரிகை உலகம் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

## எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு

உள்நாட்டு ஊடகங்கள் மட்டுமன்றி மேலும் (Paris) பாரிசை தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு விடுத்த அறிக்கையில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நிலைகுறித்து ஆழ்ந்த கவலையடைந்ததுடன் இவர்கள் ஏன் தடுத்துவைக்கப் பட்டிருக்கின்றார்கள் என்பதற்கான காரணத்தை இலங்கை அரசு தெளிவு படுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

விடுதலை புலிகளிடமிருந்து ஊடகவியலாளர்கள் பணம் பெற்றனர் எனப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிசார் குற்றம் சாட்டியுள்ளனர் எனக் கூறப்பட்டது. எனினும் இதுகுறித்த விசாரணையை தாம் மேற்கொண்ட பொழுது குறிப்பிட்ட நிதி ஜேர்மனியை தலைமையகமாக கொண்டு இயங்கும் அரசசார்பற்ற மன்றமொன்றிடம் இருந்தும், புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களிடமிருந்தும் அவர்களுக்குக் கிடைத்துள்ளது என்பதை உறுதி செய்யமுடிந்தது என ஊடக சுதந்திர அமைப்புத் தெரிவித்திருந்தது.

மேலும் Facilitating Local Initiatves for Conflict Transformation (FLICT) இணையத்தளத்தின் எழுத்தாளர் அவுட்ரீச் www.outreachsl.com எனும் இணையத்தளத்துக்காகவும் உதவியற்ற தமிழ் மாணவர்களுக்கு உதவுவதற்காகவுமே வடிவேலு யசிகரனும், ஜே. எஸ். திசநாயகம் என்ற பத்திரிகையாளரும் நிதியை வெளிநாட்டிலிருந்து பெற்றனர். மேலும் கிழக்கு மாகாண மாணவர்களுக்கு உதவ ஜேர்மனியிலுள்ள தமிழர்களிடமிருந்து. யசிகரன் நிதியுதவி பெற்றமையும் உறுதியாகியிருக்கிறது.

## சர்வதேச மன்னிப்புச் சபையின் வேண்டுகோள்

யசிகரன் மீது ஏற்றுக் கொள்ளத்தக்க குற்றம் ஏதும் இல்லாதவிடத்து அவரை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் என்று கோரும் பிரசார நடவடிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை ஆரம்பித்தது. இலங்கை ஜனாதிபதி, பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் உட்பட முக்கியஸ்தர்களுக்குக் கடிதங்களை அனுப்பியதுடன் மனித உரிமை அமைப்புக்களையும் பொதுமக்களையும் அதில் இணையுமாறும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியது. யசிகரன் பொலிசாரால் தாக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளார் என்பதையும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் வெளியிட்டிருந்ததுடன் அதற்கு தனது கண்டனத்தையும் பதிவுசெய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

Ekwality Graphics பதிப்பகத்தை நடாத்திவந்த வேளையில் 2008.03.06ஆம் திகதி கைதான யசிகரனும் வளர்மதியும் தொடர்ந்து பாதுகாப்பு செயலாளரின் தடுப்புக் காவல்

உத்தரவின்கீழ் பயங்கரவாத பொலிஸ் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் ஜே.எஸ் திசநாயகமும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவர்களுடன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட செய்தியாளர் சித்சிறி விஜேசிங்க, படப்பிடிப்பாளர் கயன வசந்தரங்கா, உதயன் ஆகியோர் 2008.03.19ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

## குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள்

தடுத்து வைக்கப்பட்டிருந்த யசிகரன், வளர்மதி, ஜே.எஸ் திசநாயகம் ஆகிய மூவரிடமும் பொலிசார் வாக்குமூலங்களைப் பெற்று விசாரணை நடாத்திவந்த வேளையில். திசநாயகம் யசிதரன் ஆகிய இருவரிடமிருந்தும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தன. திசநாயகத்தின் வாக்குமூலம் அவரின் கையால் தமிழில் எழுதப்பட்டிருந்தது.

முதன் முதலில் 2008 வைகாசி 23ம் திகதி அன்று யசிகரனையும், வளர்மதியையும் திசநாயகத்தையும் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிசாரால் கொண்டுவரப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையில் தன்னைத் தாக்கி துன்புறுத்தி சித்திரவதை செய்து தனது விருப்பத்துக்கு மாறாக வற்புறுத்தி தனது கையெழுத்தை பெற்று குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தை பொலிசார் தயார்படுத்தியுள்ளனர் என யசிகரன் என்னிடம் முறையிட்டார்.

## யசிகரன் சித்திரவதை

பயங்கரவாதப் பிரிவுப் பொறுப்பதிகாரியும் மற்றும் சில பொலிசாரும் யசிகரனை தாக்கி சித்திரவதை செய்து பலவந்தமாக குற்ற ஒப்புதல்வாக்கு மூலத்தை யசிகரனிடமிருந்து பெற்ற விடயத்தைக் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து நீதிபதி யசிகரனைச் சட்ட வைத்திய அதிகாரியிடம் அன்றைய தினமே உடனடியாக கொண்டுசென்று சட்டவைத்திய அறிக்கையை பெற்று அதனை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார். அன்றைய தினமே பொலிசார் யசிகரனைச் சட்ட வைத்திய அதிகாரி. A. மயூரதன் முன்னிலையில் முன்னிலைப் படுத்திய பின்னர் மீண்டும் பயங்கரவாதப் பிரிவு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று தாங்கள் ஏற்கனவே தாக்கி சித்திரவதை செய்தமையை நீதிமன்றிற்கு முறையிட்ட காரணத்தால் ஏற்பட்ட கோபத்தின் காரணமாக மீண்டும் அன்றிரவு கடுமையாகத் தாக்கி மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளனர்.

2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் அன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்டபொழுது யசிகரன் தன்னைப் பொலிசார் 2008ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி சட்டவைத்திய அதிகாரியிடம் கொண்டுசென்று மீண்டும் பயங்கரவாத பிரிவு பொலிஸ் தலைமையகத்திற்கு அழைத்து வந்து தன்னை தாக்கிய துன்புறுத்திய சம்பவத்தை நீதிமன்றில் முறையிடுமாறு கண்ணீர்மல்க என்னிடம் முறையிட்டார்.

நான் யசிகரனிடம், நீங்களே நீதிமன்றத்தில் நடந்த சம்பவத்தை நீதிபதியிடம் கூறுவதுதான் பொருத்தமானது எனக்கூறி நீதிபதியிடம் எனது கட்சிக்காரர் யசிகரன் உங்களிடம் தன்னை

பொலிசார் தாக்கியதை முறையிட விரும்புகிறார் என்று கூற உடனடியாக பிரதான நீதிபதி நிசந்த அப்பு ஆராய்ச்சி, தமிழ் மொழிபெயர்ப்பாளரை அழைத்ததைத் தொடர்ந்து யசிகரன் 23-05-2008 அன்று இரவு பொலிசார் தன்னைத் தாக்கித் துன்புறுத்தியதை மிகவும் வேதனையுடன் அழுது கொண்டே நீதிபதிக்கு முறையிட்டார். பொலிசாரை கடுமையாக எச்சரித்த நீதிபதி அன்றைய தினமே 27-05-2008 அன்று யசிகரனை மீண்டும் சட்டவைத்திய அதிகாரியிடம் கொண்டு செல்லும்படி உத்தரவு பிறப்பித்து மேலதிக விசாரணைக்காகவும் சட்ட மருத்துவ அறிக்கைக்காகவும் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய யசிகரனை பொலிசார் சட்டவைத்திய அதிகாரியான லோகநாதன் முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பாதுகாப்பு செயலாளரின் அல்லது பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவில் பொலிசாரின் கட்டுக்காப்பில் இருக்கும்பொழுது பொதுவாக பயத்தின் காரணமாக எந்தக் கைதியும் பொலிசாருக்கு எதிராக எந்த முறைப்பாட்டையும் நீதிபதிக்குக் கூறுவதில்லை. பொலிஸ் கட்டுப்பாட்டில் தடுத்து வைத்திருக்கின்ற காலத்தில் தாங்கள் பொலிசாரினால் தாக்கப்பட்டதை துன்புறுத்தப்பட்டதை நீதிபதிக்கு முறையிட்டால் அதன் பின் விளைவுகளை கைதிகள் நன்கு அறிவர். ஆனால் யசிகரன் பொலிசார் தன்னைத் தாக்கியதையும் சித்திரவதைக்கு உட்படுத்தியதையும் நீதிபதிக்கு முறைப்பாடு செய்ய முதலில் தயக்கம் காட்டிய போதிலும் எனது அறிவுறுத்தலின் பிரகாரம் விபரமாக நீதிபதியிடம் கண்ணீர்மல்க முறையிட்டதை நீதிமன்றத்திற்கு வழக்குக்காக வந்திருந்தவர்களும் நீதிமன்றம் வந்திருந்த பொலிஸ் அதிகாரிகளும் சிறைச்சாலை அதிகாரிகளும் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் சட்டத்தரணிகளும் சக கைதிகளும் ஒருகணம் திகைத்து யசிகரனை நோக்கி வேதனை கலந்த ஆச்சரியப்பார்வை பார்த்தனர் மேலும் யசிகரனோடு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஊடகவியளாளர் திசநாயகம் பொலிஸார் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தாமல் எதிரிக்கூட்டில் அமைதியாக நின்று கொண்டிருந்தார். பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசார் வளர்மதியிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாத காரணத்தால் வளர்மதி எந்த முறைப்பாட்டையும் நீதிபதிக்கு செய்யவில்லை.

## அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள்

யசிகரன் பொலிசாரால் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்பட்டமைக்காக நீதிகோரி அரசுக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப் பட்ட முதல் தினத்தன்றே யசிகரன் பொலிசாரால் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை உயர் நீதிமன்ற நீதியரசர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து நீதியரசர்கள் யசிகரனை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி மருத்துவ அறிக்கையை பெறும்படி கட்டளை பிறப்பித்தனர் திசநாயகமும் தனது சட்டத்தரணி மூலம் உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## மாறுபட்ட சட்ட வைத்திய அறிக்கைகள்

உயர்நிதிமன்ற உத்தரவையடுத்து ஏற்கனவே யசிகரனை பரிசோதனை செய்த சட்ட மருத்துவர்களான மயுரதன் மற்றும் லோகநாதன் ஆகியோரது சட்ட மருத்துவ அறிக்கைகள் ஏற்கனவே சட்ட வைத்திய அதிகாரியினால் உயர் நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது இரண்டு சட்டவைத்திய அறிக்கைகளிலும் யசிகரன் பொலிசாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்பட்டிருந்ததாக தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இரண்டு சட்ட வைத்திய அறிக்கைகளும் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதையோ அந்த மருத்துவ அறிக்கைகளின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகளை சிரேஷ்ட சட்டத்தரணி உயர்நீதிமன்ற பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்ததையோ பயங்கரவாத பிரிவு பொலிசார் அறிந்திருக்கவில்லை இந்த நிலையில் இந்த வழக்கு பிரதான நீதிபதி விடுமுறையில் இருந்த வேளையில் மேலதிக நீதிபதி குமாரி அபேரட்ணவின் முன்னிலையில் மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்டபொழுது 2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ம் திகதி யசிகரனை பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரியான மயூரதனினதும் 2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதி சட்டவைத்திய அதிகாரி லோகநாதனினதும் மருத்துவ அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்காமல் பயங்கரவாத பிரிவு பொலிசார் நீதிமன்றத்தை திசை திருப்பும் நோக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் 23ம் திகதி யசிகரனைப் மீண்டும் சட்ட வைத்திய அதிகாரியான ரத்நாயகவின் முன் கொண்டு சென்று சட்ட வைத்திய அறிக்கையொன்றை பெற்று அந்த அறிக்கையை மட்டும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையில் யசிகரனின் உடலில் பொலிசாரால் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட காயங்களைப் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க இருக்கவில்லை.

## பொலிசாரை கடுமையா எச்சரித்த நீதிபதி

இந்நிலைமையில் எனது சமர்ப்பணத்தை 2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ம் திகதியும் 2008ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் திகதியும் பிரதான நீதவானின் உத்தரவின் பின்னர் யசிகரன் சட்ட வைத்திய அதிகாரிகளான மயுதரனினதும் மற்றும் லோகநாதனனினதும் முன்னிலையில் கொண்டு சென்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சட்ட மருத்துவ அறிக்கையைப் பெற்றுள்ளனர். இந்த இரண்டு சட்டவைத்திய அறிக்கைகளையும் இன்றுவரை நீதிமன்றில் சமர்ப்பிக்காத பயங்கரவாதப் பிரிவுப் பொலிசார் நீதிமன்றத்தைத் திசைதிருப்பும் வகையில் 2008ஆம் ஆண்டு ஆனி மாதம் 23மம் திகதி சட்ட வைத்திய அதிகாரியான ரட்நாயகாவிடமிருந்து பெற்ற சட்ட மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்பித்து உண்மைச் சம்பவத்தை மறைக்க முயற்சிக்கின்றனர். இச்செயல் மிகவும் பாரதூரமான செயல் மட்டுமின்றி நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலுமாகும் பயங்கரவாத பிரிவு பொலிசாரால் தற்பொழுது நீதிமன்றுக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கும் சட்டவைத்தியரான ரட்னாயகாவின் மருத்துவ அறிக்கையின்படி யசிகரனுக்கு எந்தவித காயங்களும் உடலில் இல்லையென குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆனால் யசிகரனை பிரதான நீதிமன்ற நீதிபதியினதும் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் உத்தரவுக்கமைய் பரிசோதனை செய்த சட்ட மருத்துவ வைத்தியர்களான மயுதரனினதும் லோகநாதனினது மருத்துவ அறிக்கைகளின் பிரகாரம் யசிகரனின் உடலில் பொலிஸ் கட்டுப்பாட்டில் யசிகரன் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்துள் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டதனால் யசிகரனின் உடலில் பல காயங்கள் இருப்பதாக தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது என்பதனை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் உயர்நீதிமன்ற பதிவாளரிடமிருந்து சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவினால் ஏற்கனவே பெறப்பட்டிருந்த அத்தாட்சிப் படுத்தப்பட்டிருந்த மருத்துவ அறிக்கைகளின் பிரதிகள் இரண்டையும் நீதிமன்றிக்கு சமர்ப்பித்ததுடன் 2008ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் 27ஆம் திகதிகளில் யசிகரனை பரிசோதனை செய்த சட்டவைத்திய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட யசிகரனின் இரண்டு சட்டவைத்திய அறிக்கைகளையும் உடனடியாக நீதிமன்றத்தில் சமர்பிக்கும்படி பயங்கரவாத பிரிவு பொலிசாருக்கு உத்தரவிடும்படி நீதவானை வேண்டிக் கொண்டதையடுத்து மேற்கூறப்பட்ட இரண்டு சட்டவைத்திய அறிக்கைகளையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி பொலிசாருக்கு நீதவான் குமாரி அபேயரத்ன கட்டளையிட்டதுடன் நீதிமன்றத்தைத் திசைதிருப்பும் வகையில் நடந்து கொண்டமைக்காக பொலிசாரைக் கடுமையாக எச்சரித்தார்.

யசிகரன், வளர்மதி சார்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு உயர்நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது இந்த மனுவை விசாரணைக்கு முதல் தினத்தன்றே உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு விசாரணைக்கான திகதியையும் குறிப்பிட்டிருந்தது. பயங்கரவாதப் தடைப் பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த யசிகரன், வளர்மதி, திசநாயகம் ஆகியோரது புலன்விசாரணைகளை நிறைவு செய்த பொலிசார் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு விசாரணை அறிக்கைக் கோவையை அனுப்பி வைத்தனர்.

## குற்றப்பத்திரம் தாக்கல்

2008ஆம் ஆண்டு ஆவணி மாதம் 11ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் எதிராக பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால ஒழுங்குவிதி ஆகியவையின் கீழ் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் யசிகரனுக்கு North Eastern Monthly பத்திரிகையை அச்சிட்டு அரசுக்கு எதிராகச் சதிசெய்தமை, வெளிநாடுகளிலிருந்து புலிகளுக்காக நிதி சேகரித்ததாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. நான்காவது குற்றச்சாட்டு மேற்கூறப்பட்ட மூன்று குற்றத்தையும் புரிந்த யசிகரனுக்கு உதவி ஒத்தாசை வழுங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு ஒப்புதல் வாக்குமூலமோ வேறு எந்தச் சான்றுகளோ இன்றி வளர்மதிக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. திசநாயகத்திற்கு எதிராக தனித்தனியாக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றச்சாட்டுப் பத்திரம் மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் (இனக்கலவரத்தைத் தூண்டும் விதத்தில் கட்டுரை வரைந்ததாக)

தாக்கல் செய்யப்பட்டது. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் யாதெனில் யசிகரன், வளர்மதி, திசநாயகம் மூவருக்கும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டன. திசநாயகத்திற்கு எதிராக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் கட்டுரை எழுதியதாகவும் யசிகரனுக்கு எதிராக அந்தக் கட்டுரையைப் பிரசுரித்தாகவும் மேலும் திசநாயகம், யசிகரன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவும் பொருட்டு வெளிநாட்டிலிருந்து நிதி பெற்றதாகக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்ட போதிலும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த குற்றச்சாட்டுகளாகக் காணப்பட்ட போதிலும் சட்டமா அதிபரினால் தனித்தனியாக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வெவ்வேறு மேல்நீதிமன்றங்களில் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டன.

பொதுவாக ஒரு குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் ஒரே அறிக்கையின் கீழ் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு நீதவான் நீதிமன்றில ஆஜர் செய்யப்படுவர் திசநாயகம், யசிகரன் வளர்மதி ஆகிய மூவருக்கும் எதிராக ஒரு வழக்கு கோவையின் கீழேயே நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஒரே செயற்கோவையாக அமைந்த குற்றச்சாட்டுக்களான கட்டுரையை எழுதிய திசநாயகத்தை எதிரியாக குறிப்பிட்டு நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றப்பத்திரம் 01ஆம் இலக்க மேல் நீதிமன்றிலும் கட்டுரையை பிரசுரித்த யசிகரனுக்கும் யசிகரனுக்கு உதவி புரிந்ததாக வளர்மதிக்கும் எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 04ஆம் இலக்க மேல்நீதிமன்றிலும் குற்றப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன. பொதுவாக ஒரே தன்மையை கொண்ட ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர் வரிசையில் வரும் புரியப்பட்டதாக கூறப்படும் தவறுகளுக்கு அல்லது குற்றங்களுக்கு ஒரு குற்றச்சாட்டுபத்திரத்தில் மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படமுடியும் அவ்வாறு பல வழக்குகள் மேல்நீதிமன்றில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டன இன்றும் செய்யப்படுகின்றன. ஆனால் திசநாயகத்திற்கும் யசிகரனுக்கும் இரண்டு வெவ்வேறு மேல் நீதிமன்றில் தனித்தனியாக குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டமைக்கு சில காரணங்கள் இருந்திருக்கலாம். நோக்கம் என்னவாகயிருந்தாலும் இறுதியில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் வழக்கில் இருந்து விடுதலையாவற்கு இரண்டு வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தது சாதகமாகவே அமைந்ததெனலாம்.

## திசாநாயக்கத்தின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

கொழும்பு முதலாம் இலக்க மேல் நீதிமன்றத்தில் திசநாயகத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முதலில் நீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திசநாயகத்தினால் சொந்த விருப்பத்தின் பேரில் தமிழில் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம். திசநாயகத்தினால் சுயவிருப்பத்தின் பேரில் கொடுக்கப்படவில்லையெனவும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்திற்கு எதிராக சாட்சியாகக் கொண்டு வரப்படுவதற்கு எதிரியான திசநாயகத்தின் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா நீதிமன்றில் எதிர்ப்புத் தெரிவித்தார்

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகக் கொடுக்கப்பட்டதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்காக உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பமாகியது. இதில் ஒரு முக்கியவிடயம் யாதெனில் திசநாயகம் ஆங்கில மொழியிலேயே பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதுபவர் அதிகமான வேளைகளில் ஆங்கில மொழியில் உரையாடுபவர் ஆனால் திசநாயகத்தினால் சுயவிருப்பத்தின் பேரில் பொலிசாருக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தமிழில் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதா?

ஊடகவியளாளர் திசநாயகத்தினால் பயங்கரவாதப் பிரிவு பொலிசாருக்கு தமிழில் கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்தினால் சுய விருப்பத்தின்பேரில் கொடுக்கப்படவில்லை என திசநாயகம் தனது சாட்சியத்தில் கூறியபொழுதிலும் அந்த சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளாத மேல் நீதிமன்ற நீதிபதி தீபாளி விஜேயசுந்தர திசநாயகத்தின் சாட்சியத்தை நிராகரித்ததுடன் திசநாயகத்தினால் கொடுக்கப்பட்டதென அரசினால் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்தினால் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதாக உண்மை விளம்பல் *(Voir Dire)* விசாரணையின் முடிவில் கட்டளை வழங்கினார்.

## யசிகரனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம்

யசிகரன், வளர்மதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் 4ஆம் இலக்க நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. யசிகரன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிசும் வளர்மதிக்காக நானும் ஆஜராகினோம். யசிகரன், வளர்மதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வளர்மதியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாத காரணத்தினால் யசிகரனால் சுய விருப்பத்தில் பொலிசாருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட சிங்கள மொழியில் பதியப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அரச சட்டத்தரணி அரச தரப்புச் சான்றாக நீதிமன்றில் சமர்ப்பிக்க முற்படுகையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் பெறப்படவில்லையென எதிரிதரப்பில் ஆட்சேபனை எடுத்ததையடுத்து குற்றஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாகக் கொடுக்கப்பட்டதா? அல்லது தூண்டுதல், அச்சுறுத்தல், வாக்குறுதி மூலம் பெறப்பட்டதா? என்ற *(Voir Dire)* உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

திசநாயகத்தின் மீது சுமத்தப்பட்ட வழக்கு மேல் நீதிமன்றத்தில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் பொழுது யசிகரன், வளர்மதி ஆகியோரின் வழக்கும் நீதிபதி குமுதினி விக்ரமசிங்கவின் முன்னிலையில் ஆரம்பமானது. தொடர்ச்சியாக இந்த வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் யசிகரன், வளர்மதிக்கு எதிரான வழக்கு விசாரணை 2008.11.3ஆம் திகதி ஆரம்பமாகி 2009.10.13ஆம் திகதி வரை 14 தவணைகள் விசாரணை நடைபெற்று வந்தது. திசநாயகத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்ச்சியாக குறுகிய கால இடைவெளியல் மிக வேகமாக விசாரணைகள் நடைபெற்ற போதிலும் யசிகரன் வளர்மதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு குறுகிய கால இடைவெளியின்றி வழமைபோல மேல்நீதிமன்றத்தால் தவணை கொடுக்கப்பட்டு மற்றைய வழக்குக்களைப்போல திகதி குறிப்பிடப்பட்டு சாதாரண நடைமுறையில் விசாரணை நடை பெற்று கொண்டிருந்து.

## அமெரிக்க அதிபர் ஒபாமாவும் திசாநாயக்கத்தின் விடுதலையும்

அமெரிக்க அதிபர் ஒபாமா திசநாயகத்தின் விடுதலையில் அக்கறை கொண்டுள்ளபடியினால்தான் திசநாயகத்திற்கு எதிரான மேல்நீதிமன்ற விசாரணைகள் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் மிக விரைவில் திசநாயகம் விடுதலையாகி விடுவார் என்று வாந்தி பரவியது. இதனால் சிறிது குழப்பமடைந்த யசிகரனும் வளர்மதியும் என்னிடம் "திசநாயகத்தின் வழக்கு விசாரணைகள் மிகக் குறுகிய திகதி வழங்கப்பட்டு விசாரணைகள் முடிவடையும் கட்டத்துக்கு வந்துவிட்டது திசநாயகம் விடுதலை செய்யப்படுவார் என சிறைச்சாலையிலும் பேசிக்கொள்கின்றார்கள் எங்களுக்கு எதிரான வழக்கையும் குறுகிய திகதியெடுத்து மிக விரைவாக நடாத்தி முடித்து எங்களுக்கு மிக விரைவில் விடுதலை வேண்டித் தாருங்கள்" என வேதனையுடன் கூறினர்.

"இந்த வழக்கு சர்வதேசரீதியில் மிக முக்கியம் வாய்ந்த வழக்காக காணப்படுவதினால் விரைவாக இந்த வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. என்ற ஒரு காரணத்தினால் மட்டும் திசநாயகம் விடுதலை செய்யப்படுவார் என்ற முடிவுக்கு வந்து விடமுடியாது. வழக்கின் முடிவு திசநாயகத்திற்கு சாதகமாகவோ பாதகமாகவோ அமையலாம் திசநாயகத்தை விடுதலை செய்யும் நோக்கம் அரசுக்கு இருக்குமானால் சட்டமா அதிபரினால் வழக்கை மீளப்பெறவும் முடியும். வழக்கு விரைவாக முடிந்து சாதகமாக தீர்ப்பு வந்தால் அந்தத் தீர்ப்பு உங்களுடைய வழக்கிலும் சாதகமாக அமையும். எந்தச் சூழ்நிலையிலாவது திசநாயகத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சட்டமா அதிபர் மீளப்பெற்றுக் கொண்டாலும் அதுவும் நடந்துகொண்டிருக்கின்ற உங்கள் வழக்குக்கு சாதகமான முடிவைக் கொண்டுவரும். அந்த வழக்கைப் பின்தொடர்ந்து உங்களுக்கு எதிரான வழக்கை நடாத்தி செல்வதனால் மட்டுமே ஒரு சாதகமான முடிவை எதிர்பார்க்க முடியும். வழக்கை விரைவாக யார் நடாத்திக் கொண்டு போகின்றார்கள் எனபதல்ல, சூழ்நிலையைக் களநிலையை கருத்தில் கொள்ளாமல் வழக்கை விரைவாக முடித்துத் தண்டணையைப் பெற்று சிறைக்கு செல்வதா? அல்லது சூழ்நிலையை கருத்தில் எடுத்து நிதானமாக செயல்பட்டு விடுதலையடைவதா? தாமதமானாலும் முடிவு சாதகமாக அமையவேண்டும் அதுதான் நிதானத்தின் வெற்றி" என எனது நீண்ட அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைதியாக விளங்கப் படுத்திய பின்னர் இருவரும் மனதைத் தேற்றிக்கொண்டனர்.

மேல்நீதிமன்ற விசாரணையின் போது யசிகரன் தனது சாட்சியத்தில் தான் தடுப்புக் காவலில் இருந்த காலத்தில் பொலிசார் தன்னைத் துண்புறுத்தி சித்திரவதை செய்து தன்னிடம் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை பெற்றனர் என்பதை நீதிபதிக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியதுடன் தன்னை முதன் முதலாக பொலிசார் பிரதான நீதவான் முன்னர் ஆஜர் படுத்திய பொழுது கொழும்பு பிரதம நீதவானுக்கு தான் முறையிட்டதையும் மேல் நீதிமன்றில் விபரமாக விபரித்தார்.

இந்நிலையில் திசநாயகத்தின் வழக்கில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக அவரது விருப்பத்தின் பேரிலேயே கொடுக்கப்பட்டதாக நீதிபதி திபாலி விஜயசுந்தர தனது

தீர்ப்பில் குறிப்பிட்டிருந்ததைத் தொடர்ந்து. திசநாயகத்திற்கு எதிரான பிரதான வழக்கு மேல்நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. வழக்கின் முடிவில் திசநாயகத்தின் சாட்சியத்தையடுத்து தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## திசநாயகத்திற்கு 20 வருட தண்டனை

திசநாயகத்தின் வழக்கு தீர்ப்பு மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட இருந்த அன்று பெருந்திரளான மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், பல வெளிநாட்டு தூதுவராலயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர்.

தனது தீர்ப்பில் நீதிபதி கூறியதாவது, திசநாயகத்துக்கு எதிரான வழக்கில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் அரச தரப்பால் நிரூபிக்கப்பட்டிருப்பதாகக்கூறி ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் ஐந்து வருடப்படி நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் இருபது வருட தண்டனை விதித்தார். நீதிமன்றமே ஒரு கணம் நிசப்தமானது.

இந்தத் தீர்ப்பை கேள்விப்பட்டு அதிர்ச்சியும் கலக்கமுமடைந்த யசிகரனும் வளர்மதியும் தங்கள் வழக்கின் மீது முழு நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். இதே முடிவுதான் தங்களுக்கும் ஏற்படப் போகின்றது என கண்ணீருடன் கலங்கினர். அவர்களுடைய வழக்கைத் தொடந்து நடாத்துகையில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் ஆறுதல் கூறுவதே ஒரு ஆறுதலாக உணர்ந்தோம். அவர்களுடைய மன வலிமையை சிதையாது காக்க கௌரி சங்கரி எடுத்துக் கொண்ட கரிசனை மிகவும் உணர்வுபூர்வமானது.

யசிகரன் தனக்கு ஏற்பட்ட துன்பங்களாலும், வேதனைகளாலும் நம்பிக்கையைச் சிறிது இழந்திருந்தாலும் அமைதியான சுபாவம் கொண்ட வளர்மதி நம்பிக்கை இழக்கவில்லை. இந்நிலையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் சார்பாக யசிகரனின் சட்டவிரோத கைது, தடுத்துவைப்பு, சித்திரவதை என்ற பிரிவுகளின் அடிப்படையில் வழக்கினை விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் திகதி குறிப்பிட்டது. யசிகரனை பரிசோதனை செய்த சட்ட மருத்துவ வைத்தியர்களான. மயூரதன் லோகநாதன் ஆகியோரின் சட்டவைத்திய அறிக்கை உயர்நீதிமன்றத்தில் உயர்நீதிமன்றப் பதிவாளரினால் வரவழைக்கப்பட்டது

## அடிப்படை உரிமை மீறல் மனு மீளப்பெறல்

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இருந்த நிலையில், மேல் நீதிமன்றத்தில் யசிகரன், வளர்மதியின் மேலதிக விசாரணை 2009.10.13ஆம் திகதியன்று நடந்துகொண்டிருக்கையில் உயர்நீதிமன்றில் யசிகரன் சார்பில் அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை யசிகரன் மீளப்பெற்றுக் கொண்டால் அரசினால் யசிகரனுக்கும், வளர்மதிக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்டு மேல்நீதிமன்றில் நடந்துகொண்டிருக்கும் வழக்கை அரசு மீளப்பெற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகியது. (சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிருபிக்க போதிய

சாட்சியங்கள் இல்லையெனின் எந்த நிபந்தனையும் இன்றி அரசினால் எதிரிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் ஆனால் இங்கே? மீளப்பெறும் நிபந்தனை)

உயர்நீதிமன்னத்தில் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து விசாரணையை நடாத்திக் கொண்டுசெல்லும் வேளையில் யசிகரனுக்குச் சார்பாக தீர்ப்புக் கிடைக்கப்படலாம். ஏனெனில் யசிகரன் தாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டமைக்குச் சான்றாகச் சட்டவைத்திய அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மேல் நீதிமன்ற வழக்கிலும் யசிகரன் தாக்கப்பட்டது, சித்திரவதை செய்யப்பட்டது என்பது தெளிவான சாட்சியங்களாக கொடுக்கப்பட்டிருந்தது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெற்றதாக அரசினால் எந்த சூழ்நிலையிலும் நிருபிக்க முடியாது. வழக்கின் முடிவுகள் சட்டத்தின்படி யசிகரனுக்கும், வளர்மதிக்கும் சார்பாக அமைந்திருந்தாலும் தொடர்ந்து வழக்கு முடியும் வரையும் சிறையில் வாடும் யசிகரனையும், வளர்மதியினதும் நீண்ட தூர நன்மையைப் பார்ப்பதா அல்லது நீதி வெல்ல வேண்டும் எனத் தொடர்ந்து வழக்கினைக் தொடர்ந்து கொண்டு நடாத்துவதா? இதுதான் எம்முன் நின்ற பிரதான கேள்வி!

மேலும் வளர்மதி உளரீதியாக மட்டுமின்றி உடல்ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகியிருந்தார். இரண்டாவது சத்திரசிகிச்சை அவருக்குச் செய்யவேண்டியிருந்தது. அத்துடன் யசிகரனின் தந்தை சகோதரிகள் உறவினர்கள் பட்ட துன்பம் மேலும் முக்கியமாக கைதுசெய்யப்பட்ட காலத்திலிருந்து 20 மாதங்கள் வரையில் தொடர்ந்து பயங்கரவாத பொலிஸ் பிரிவிலும் சிறையிலும் தொடர்ந்து அடைக்கப்பட்டமை. இக்காரணங்களையெல்லாம் கருத்திற்கொண்டு யசிகரன், வளர்மதி சார்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விசாரணைக்கு வரவிருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை யசிகரன், வளர்மதி மற்றும் அவர்களின் இரத்த உறவுகளின் வேண்டுகோளையடுத்து வாபஸ் பெறுவதென நாங்கள் தீர்மானித்தோம்.

2009ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26-ம் திகதி காலை மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெறவிருந்த வேளையில் உயர் நீதிமன்றத்தில் யசிகரன் வளர்மதி சார்பாக தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மனுதாரர்களான யசிகரன் வளர்மதியின் வேண்டுகோளையடுத்து மீளப்பெறப்பட்டது

## யசிகரன் வளர்மதி விடுதலை

அன்றைய தினம் 12 மணியளவில் அரச சட்டத்தரணி மேல் நீதிமன்றிற்கு அறிவித்ததாவது, யசிகரன், வளர்மதிக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கைச் சட்டமா அதிபர் தொடர்ந்து நடாத்த உத்தேசிக்கவில்லை எனக் கூறியதையடுத்து நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க தனது தீர்ப்பில், முதலாவது எதிரியான யசிகரன் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கமூலம் சுயமாகக் பெறப்பட்டது என நிரூபிக்க அரச தரப்பால் இதுவரை அழைக்கப்பட்ட சாட்சியங்களினால் எந்தச் சான்றும் முன்வைக்கப்படவில்லை மேலும் இந்த வழக்கை அரசதரப்பு தொடர்ந்து நடாத்தினாலும் சான்றுகள் கிடைக்குமா என்ற சந்தேகம் நீதிமன்றிக்கு உண்டு. அத்துடன் இரண்டாவது எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள வளர்மதிக்கு

எதிராக எந்த சாட்சியங்களும் இருப்பதாக தெரியவில்லையெனவும் இந்நிலையில் அரசதரப்பு குற்றச்சாட்டுப் பத்திரத்தை மீளப்பெறுவதனால் அதன் அடிப்படையில் யசிதரனையும், வளர்மதியையும் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

Ekwality Graphics (Pvt) ltd பணிப்பாளர்கள் ஆறு பேரில் வளர்மதியும் ஒரு பணிப்பாளர் என்பதைத்தவிர அவர் செய்த குற்றம் பத்திரிகையாளர் யசிகரனை காதலித்து திருமணம் முடித்ததாலா? இந்நிறுவனத்தின் பணிப்பாளர் என்ற ரீதியில் கைதுசெய்யப்பட்டிருந்தால், இந்நிறுவனத்தின் மற்றையவொரு பணிப்பாளரான சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியரான சிவகுமார் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு அன்றைய தினமே விடுதலையாகியதைப் பார்க்கும்போது பணிப்பாளர் என்றரீதியில் வளர்மதி கைதுசெய்யப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டப் நான்காம் பிரிவின்படியும் அவசரகால ஒழுங்குவிதி 7(1)இன் படியும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை அந்த நபரோ அல்லது நபர்களோ மேல்நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, குற்றவாளியாகக் காணப்படுபவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அரச உடமையாக்கச் சட்டத்தில் இடமுண்டு. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்படும்பொழுது அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டு வழக்கின் தடயப்பொருட்களாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ்வாறு குறிப்பிடப்படாமல் இருந்தாலும் அந்தப் பொருட்கள், உடமைகள், கைப்பற்றப்பட்ட அசையும், அசையாத சொத்துக்கள் விடுதலையானவருக்கு திரும்பக் கையளிக்கப்படவேண்டும். இதுவே சட்டம்.

யசிதரன் வளர்மதி இருவரும் கைது செய்யப்படும்பொழுது யசிகரனால் நடாத்தப்பட்ட 'Ekwality Graphics (Pvt) Ltd. அச்சகத்தை சீல் வைத்ததுடன் அவரால் பாவிக்கப்பட்ட வாகனத்திலிருந்து மேலும் அச்சக இயந்திரங்கள் உட்பட 63 பொருட்கள் பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. யசிகரன் வழக்கிலிருந்து விடுபட்ட பின்னர் தனக்கு சொந்தமான இந்தப் பொருட்களையும், வாகனத்தையும் தனக்குத் திரும்பத் தரும்படி நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க இருந்த வேளையில் 2009.11.19ம் திகதி அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தார்.

அந்த விண்ணப்பமாவது 2009ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1583/12 இன் பிரகாரம் பயங்கரவாதப் பிரிவுப் பொலிசார், பொலிஸ் மா அதிபர் மூலம் பாதுகாப்பு அமைச்சருக்கு (Defence Minister) இந்த வழக்கின் தடயப் பொருட்களை அரச உடமையாக்க உத்தரவு தரும்படி அறிவித்துள்ளதாக தெரியப்படுத்தியுள்ளதாகவும் இன்னும் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து தங்களுக்கு அறிவித்தல் வரவில்லையெனவும், ஆகவே நீதிமன்றினால் விடுதலைசெய்யப்பட்ட யசிகரனுக்கு அவரது உடமையிலிருந்து பொலிசாரினால் கைப்பற்றப்பட்ட பொருட்களைக் கையளிக்க வேண்டாம் எனக் வேண்டிக்கொண்டார்.

குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதி, 7(1)ன் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு (ஜனாதிபதிக்கு) அரச உடமையாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு அரச உடமையாக்குவதாயின் குறிப்பிட்ட அசையும், அசையாச் சொத்துகளை அரச உடமையாக்க முன்னர் அதன் உரிமையாளரின் வேண்டுகோளையும் கேட்டு விசாரணை நடாத்தியே அரச உடமையாக்கும் கட்டளையிடப்படவேண்டும். ஆனால் 2009.12.14ஆம் திகதி அரச சட்டத்தரணியால் மேல் நீதிமன்றுக்குக் கையளிக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டது யாதெனில் பாதுகாப்பு அமைச்சரினால் 2009.12.04ஆம் திகதி இந்த வழக்கின் தடயப்பொருட்களாக கூறப்பட்டிருந்த 63 பொருட்களையும் அரசுடமை ஆக்கப்பட்டுவிட்டது என்றே கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

## உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

அரசுடமையாக்கப்படப் போவதைப் பற்றி எந்த அறிவித்தலும் யசிகரனுக்குக் கிடைக்காத காரணத்தினால், பொருட்கள் அரசுடமையாக்குவது சம்பந்தமாக எந்த விசாரணையும் நடாத்தாமல் பாதுகாப்பு அமைச்சரினால் இவை அரசுடமையாக்கப்பட்டதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு நடாத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல்நீதிமன்றத்தினால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்ட ஒருவரின் உடமைகள் அரசு உடமையாக்கப்பட்ட சம்பவம் இதுவாகத்தானிருக்கும். இதில் பரிதாபத்திற்குரிய விடயம் யாதெனில் யசிகரனினால் திருகோணமலை வீதி, மட்டக்களப்பில் நடாத்தப்பட்டு வந்த தமிழிச்சி அச்சகத்தின் முழுப் பொருட்களையும் 2003 அன்று விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றனர். 2009ஆம் ஆண்டு ஜெம்பட்டா வீதியில் யசிகரனால் நடாத்தப்பட்ட *Ekwality Graphics* காரியாலயத்தில் இருந்த முழுப்பொருட்களையும் யசிகரன் வழக்கில் விடுதலையான பின்னர் அரசுடமையாக்கிக் கொண்டுள்ளது மேளத்திற்கு இரண்டுபக்கமும் அடிதான்.

## திசாநாயக்கத்தின் 20 வருட கால சிறை , யசிகரனின் விடுதலை.

மேல் நீதிமன்றத்தால் யசிகரன், வளர்மதி விடுதலை செய்யப்பட்டதும் பத்திரிகையாளர் திசநாயகத்திற்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும் பலர் மனதில் சில நியாயக் கேள்விகள் எழும்பியிருந்தன. 'Northern Eastern Monthtly Magazine' பத்திரிகையில் கட்டுரையை எழுதியவருக்கு 20 வருட சிறைத் தண்டனை, ஆனால் அந்தப்பத்திரிகையில் பிரசுரித்த யசிகரன் எப்படி விடுதலையானார் என்பதே அந்த மில்லியன் டாலர் *(Million Dollar Question)* கேள்வியாக இருந்தது யசிகரன், வளர்மதிக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் இவ்விருவரும் விடுதலையானதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும், அவசரகால விதியின் கீழும் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முக்கிய சான்றாக அரசு தரப்பில்

முன்வைக்கப்படுவது, எதிரியினால் கொடுக்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே. அரசினால் இந்தச் சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் குற்றச்சாட்டு பத்திரத்தில் அரச தரப்பின் முக்கிய சான்றாகக் குறிப்பிடப்படுவது குற்ற ஒப்புதல் வாக்குமூலமேயாகும். ஆயுதங்கள், வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்டிருந்தாலும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல் ஒரு வீதமான குற்றச்சாட்டப் பத்திரங்களைக்கூட காணக்கூடியதாக இருக்காது. ஆனால் ஆயுதங்கள், வெடிபொருட்களோடு கைது செய்யப்படுபவர்கள் பயங்கர ஆயுதங்களை உடமையில் வைத்திருததாகக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்து எதிரிகள் தண்டிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு.ஆனால் வேறு எந்தவித சாட்சியமில்லாதவிடத்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பிரதான சான்றாகக் கொண்டு அரசு குற்றச்சாட்டுப்பத்திரங்களை தாக்கல் செய்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் இன உணர்வினைத் தூண்டக்கூடிய முறையில் எழுதுவதும், பிரசுரிப்பதும் குற்றமென பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரிவு 2(H) கூறுகின்றது. அதற்கு தண்டனை 5 வருடத்திலிருந்து 20 வருடம் எனச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து இவர்கள் இருவரையும் தண்டித்திருக்கலாமே, ஏன். திசநாயகத்தை மட்டும் குற்றவாளியாக்கிவிட்டு யசிகரன் விடுதலை செய்யப்பட்டார்!

இந்தக் கேள்வி பலர் மனதில் எழுந்த ஒரு முக்கியமான கேள்வி .இதற்கான விடை யாதெனில், திசநாயகத்தினால் தமிழில் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகக் கொடுக்கப்பட்டதாக நீதிபதி கட்டளை வழங்கிவிட்ட நிலையில், பொதுவாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் அடங்கியுள்ள விடயங்களின் அடிப்படையிலேயே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மேல்நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

அரசியல் கைதியினால் சுயவிருப்பத்தின்பேரில் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமானதென நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அது அரச தரப்புக் முக்கிய சாட்சியாக மாறிவிடுகின்றது. அதனைத் தொடர்ந்து பிரதான வழக்கு தொடர்ந்து நடாத்தப்படும் அந்த விசாரணையில் வெளிவரும் சாட்சியங்களின் நம்பகத்தன்மையின் அடிப்படையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியாலேயே கொடுக்கப்பட்ட விபரங்கள் தான் புரிந்ததாகக் கூறிய குற்றங்களை உறுதிப்படுத்த நீதிமன்றத்தில் மற்றைய அரச சாட்சியங்களினால் கொடுக்கப்பட்ட மற்றைய சான்றுகள் ஒப்புறுதிப்படுத்தும் சான்றாக (Corroborative Evidence & Supprting Evidence) துணைபுரிகின்றன. இந்நிலையில் குற்றச்சாட்டுக்கள் ஒப்புவிக்கப்பட்டு எதிரி குற்றவாளியாக காணப்பட்டு தண்டனைக்கு உட்படுகின்றார்கள்.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினைக் கொடுத்தவர்களுக்கு எதிரான சான்றாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும் அதனை மட்டும் வைத்து எதிரியைத் தண்டித்துவிட முடியாது என்பதற்கு சில வழக்குகளின் தீர்ப்புக்கள் நல்ல எடுத்துக்காட்டாக இருந்தபோதிலும் பொதுவாக

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சுயமானதும் நம்பகத்தன்மையுள்ளதும் என நீதிமன்றம் திருப்திப்பட்டால் பின்னர் வழக்கில் எதிரி விடுதலையாவது என்பது மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலேயே ஏற்படுகின்றது.

திசநாயகம் தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுத்திருந்த விடயங்கள் சுயமாகக் கொடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலும் மேலும் திசநாயகத்தினால் வரையப்பட்ட கட்டுரை இனங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தகூடியதெனவும் அரசினால் அழைக்கப்பட்ட மற்றைய அரச சாட்சிகள் கொடுத்த சான்றுகளின் அடிப்படையிலும் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்களுக்கு சட்டத்தின் பிரகாரம் குறைந்தது 5 வருட தண்டணையிலிந்து ஆகக்கூடிய தண்டணையாக 20 வருடம் வரை தண்டணை வழுங்கும் அதிகாரம் நீதி மன்றத்துக்கு இருந்த போதிலும் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் ஆகக் குறைந்த தண்டணையாக தலா 5 வருடப்படி மொத்தமாக 20 வருட தண்டனை விதிக்கப்பட்டது.

## சர்வதேச ரீதியில் அதியுச்ச தண்டனை

சர்வதேசரீதியில் ஒரு பத்திகையாளருக்கு கட்டுரையாளருக்கு ஒரு கட்டுரைக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டவிடத்து 20 வருடசிறைத்தண்டனை வழங்கப்பட்ட வழக்கு இந்த வழக்கு ஒன்றாகத்தானிருக்கும். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல், இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்திய கட்டுரையை எழுதியுள்ளார் என பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரிவு 2(h) இன் அடிப்படையில் மட்டும் குற்றச்சாட்டை சுமத்தியிருந்ததால் திசநாயகத்திற்கு எதிராக ஒரேயொரு குற்றச்சாடடை மட்டுமே சுமத்தியிருக்க முடியும். மற்றைய 3 குற்றச்சாட்டுக்களையும் நிரூபித்திருக்க முடியாது. இதனாலேயே இனங்களுக்கிடையே குரோதத்தைத் தூண்டும் வகையில் கட்டுரை வரைந்தமைக்கு மட்டும் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யாமல் நிதி சேகரித்தமை, சதி செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு அந்தக் குற்றச்சாட்டுகளைய் நிரூபிப்பதற்காக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பயன்படுத்தப்பட்டது.

அதேபோன்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் மற்றைய சாட்சிகளின் அடிப்படையிலும் வழக்கு தாக்கல் செய்தபடியால் யசிகரனுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. கட்டுரையைப் பிரசுரித்ததற்காக மட்டும் எனில் ஒரே ஒரு குற்றச்சாட்டு அடங்கிய குற்றப்பத்திரம் மட்டுமே தாக்கல் செய்திருக்க முடியும். கட்டுரையை வரைந்த திசநாயகத்திற்கும் அதனைப் பிரசுரித்த யசிகரனுக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவு *2(h)* இன் படி தண்டனை விதிக்கக்கூடிய குற்றச்சாட்டை புரிந்துள்ளனர் என்று மட்டும் குற்றப்பத்திரிகையினைத் தாக்கல் செய்வதாயின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவசியப்பட்டிருக்காது. இருவரும் தண்டிக்கப்பட்டிருக்கலாம். அல்லது விடுதலை செய்யப்பட்டிருக்கலாம்.

North Eastern Monthly பத்திரிகையில் கட்டுரை வரைந்தது திசநாயகம். அதனைப் பிரசுரித்தது யசிகரன் என்பதை நிரூபிப்பதற்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவசியமில்லாதது. கட்டுரை வரைந்ததையும் அதனை பிரசுரித்ததையும் இருவரும் மறுத்திருக்கவும் முடியாது. ஆனால் பத்திரிகையில் கட்டுரையை எழுதியது, பிரசுரித்து இனக்குரோதத்தைத் தூ ண்டும் விதத்தில் எழுதப்பட்டதா? இல்லையா? என்பது சாட்சியங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியதொன்றாகும். இனக்குரோதத்தைத் தூண்டும் வகையில் அந்தக்குறிப்பிட்ட கட்டுரை எழுதப்படவில்லை என்பதை நீதிமன்றிக்கு தெளிவுபடுத்த பல முக்கிய பொறுப்பு வாய்ந்த சமூகத்தில் நல்ல மதிப்புடைய சுயாதீனமான பல சாட்சிகள் நீதிமன்றில் திசநாயகத்திற்கு சார்பாக சாட்சியம் அளித்தபோதிலும் அவையெதுவுமே நீதியின் காதில் விழவில்லை.

திசநாயகத்தின் கையினாலேயே பொலிசாருக்கு எழுதிக்கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திசநாயகத்தினால் சுயமாகவே பொலிஸ் அத்தியட்சகருக்க வழங்கப்பட்டுள்ளது என நீதிபதி கட்டளை வழங்கிய பின்னர் திசநாயகம் பத்திரிகைக்கு கொடுத்த அறிக்கையில் தன்னை விடுதலை செய்வதாக பொலிசார் தனக்கு வாக்குறுதி அளித்ததனால் தான் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிசாருக்கு வழங்கியதாக குறிப்பிட்டிருந்தார். தம்மை விடுதலை செய்வதாக வாக்குறுதி கொடுத்து குற்ற ஒப்புதல் வாக்கமூத்தை பதிவு செய்து கொண்ட பொலிஸ ார் கொடுத்த வாக்குறுதியின்படி தம்மை விடுதலை செய்யாமல் தமக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அரசியல் கைதிகளில் பெரும்பான்மையானோர் பொலிசாரின் தூண்டுதல்களையும் வாக்குறுதிகளையும் நம்பி குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை தமது தாய்மொழியான தமிழ் மொழியிலேயே எழுதிக்கொடுத்துள்ளதுடன் ஏற்கனவே பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எனக் கூறப்படும் ஆவணங்களிலும் தம்மை விடுதலை செய்துவிடுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் கையெழுத்தும் வைத்துள்ளனர். பொலிஸ் நிலையங்களில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளை நீதிமன்ற உத்தரவை யடுத்து சிறைச்சாலைக்கு மாற்றிய பின்பே நீதிபதிக்கு எந்தவித அச்சமுமின்றி தாங்கள் தாக்கப்பட்ட துன்புறுத்தப்பட்ட விடயத்தை அல்லது சுயவிருப்பம்மின்றி பலவந்தமாக வாக்கு மூலத்தை பொலிசார் பெற்றனர் என நீதிபதிக்கு முறையிடும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் பல அரசியல் கைதிகள் பொலிசாரின் கட்டுப்பாட்டில் தடுப்புக் காவலில் இருக்கையில் தமக்கு நேர்ந்த இன்னல்களையும் தம்மிடம் எந்த சூழ்நிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதனையும் பொலிஸாரின் வாக்குறுதிகளை நம்பியும் நீதிபதிக்கு முறையிட்டால் பொலிஸார் தம்மை சித்திரவதைக்கு உட்படுத்துவார்கள் என்ற காரணங்களினாலும் தமது சட்டத்தரணிகளுக்கே நடந்தவற்றை முற்றாக கூறாமல் தவிர்த்து விடுகின்றனர் அதனால் கைதிகள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள் எந்த முறைப்பாட்டையும் நீதிபதிகளுக்கு முறையிடும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுகின்றன.

பொதுவாக நீதிமன்றம் எதிர்பார்ப்பது யாதெனில் கைதியொருவர் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் பொலிசாரின் கட்டப்பாட்டிலிருக்கும் வேளையில் பொலிசாரால் நீதிமன்றுக்கு

முதன் முதலாக அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் கைதி ஏதாவது முறைப்பாட்டை நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வர எண்ணியிருந்தால் அந்த முறைப்பாட்டைத் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே நீதிபதிக்கு முறையிடவேண்டும்.

மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தபின் அந்த விசாரணையின்போது தாம் சுயமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. அச்சுறுத்தி அல்லது தூண்டுதல் மூலமே பெறப்பட்டதென எதிரியினால் நீதிமன்றில் சாட்சியம் அளித்தாலும் அதன் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே காணப்படும். திசநாயகம் மட்டுமல்ல எத்தனையோ கைதிகளின் வழக்கு விசாரணைக்கு வந்த பிறகே தம்மிடம் எப்படிக் குற்ற ஒப்புதல் வாக்கமூலம் எந்தச் மூழ்நிலையில் பெறப்பட்டது என்பதைக் கூறுகின்றனர். கிணற்றில் விழுந்தவன் எப்படியும் வெளியே வரத்தான் முயற்சிப்பான். தான் பிடித்துக்கொண்டு கிணற்றிலிருந்து மேலே வரத் தனக்கு கொடுக்கபபட்டது கயிறா அல்லது பாம்பா என்பதைக் கவனிக்கும் நிலையில் பாதிக்கப்பட்டவரின் மனநிலை காணப்படமாட்டாது. வாக்குறுதி தூ ண்டுதல் அல்லது துன்புறுத்தல் காரணமாகவே அந்த அடிப்படையிலேயே தன்னிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக முதல் சந்தர்ப்பத்தில் நீதவானிடம் கூறப்படாமல் விட்டதற்காக திசநாயகத்தை குறை கூறமுடியாது. ஏனெனில் தனக்கு பொலிஸ் கொடுத்த வாக்குறுதி, தூண்டுதல் இரண்டையும் எந்தக் கைதியும் நம்பும் சூழ்நிலையே பொலிசாரின் கட்டுக்காவலிலிருக்கும்பொழுது ஏற்பட வாய்ப்புண்டு.

திசநாயகத்திற்கு 20 வருட தண்டனை வழங்கியாகிவிட்டது. யசிகரன், வளர்மதியின் வழக்கின் முடிவு என்ன என்ன நிலையில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. அதேவேளையில் யசிகரன் மேல்நீதிமன்றத்தில் பொலிசார் தன்னைத் தாக்கிக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர் என்பதை மிகத் தெளிவாக சாட்சியமாகக் கொடுத்து முடிந்துவிட்டது.அரச தரப்புச் சட்டத்தரணி எத்தனையோ குறுக்குக் கேள்விகளை (Cross Examination) யசிகரனிடம் கேட்ட பொழுதிலும் யசிகரனின் சாட்சியத்தில் எந்த முரண்பாட்டையும் காணமுடியவில்லை. அடுத்ததாக யசிகரனைப் பரிசோதனை செய்த சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்துக்காக யசிகரன் சார்பில் நீதிமன்றில் ஆஜராக திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில் முக்கியமான விடயம் யாதெனில் யசிகரன் சார்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மூன்று பிரிவுகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சட்டமுறையற்ற கைது, இரண்டாவது சட்டமுறையற்ற தடுப்புக்காவல், மூன்றாவது சித்திரவதை செய்யப்பட்டமை, இந்த மூன்றில் கைதும் தடுப்புக்காவலும் சட்டமுறையானது என கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் பொழுது கைதும், தடுத்துவைப்பும் சட்டரீதியானதென உயர் நீதிமன்றத்தில் நியாயப்படுத்தப்படுகின்றன.

ஆனால் இரண்டு சட்ட வைத்திய அதிகாரிகளின் மருத்துவச் சான்றின்படி யசிகரன் பொலிஸ் கட்டுக்காப்பில் இருந்த காலத்தில் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்

என்பதை நிரூபிக்க இந்த இரண்டு சட்டவைத்திய அறிக்கைகளும் போதுமானதாகின்றது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிசார் தனது சுயவிருப்பமின்றி பலாத்காரமாக தன்னைத் தாக்கி சித்திரவதை செய்து பெற்றனர் என பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே யசிகரன் மனத்துணிவுடன் நீதிபதிக்கு முறையிட்டமை, சட்டவைத்திய அதிகாரிகளின் சட்ட மருத்துவ அறிக்கைகள் பெறப்பட்டமை உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை போன்ற முக்கிய விடயங்களை யசிகரன், வளர்மதியின் விடுதலைக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

## திசாநாயகம் பிணையில் விடுதலை

திசநாயகம், யசிகரன் வளர்மதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், சர்வதேசரீதியாக கவனத்தை ஈர்ந்த வழக்குகளாகும். மேலும் மூத்த பத்திரிகையாளர் திசநாயகத்திற்கு 20 வருட தண்டனை வழங்கியது சர்வதேசத்தின் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இதே வேளையில் மேல் நீதிமன்றத்தினால் 20 வருட தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திசநாயகம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக 2009.11.15ஆம் திகதி அவரது சட்டத்தரணிகள் மூலமாக மேன்முறையீடு செய்தார். அத்துடன் பிணை மனுவொன்றையும் தாக்கல் செய்திருந்தார். திசநாயகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு 2010.01.11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கியது.

## திசநாயகம் பொதுமன்னிப்பில் விடுதலை

திசநாயகத்திற்கு 2009ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி 20 வருட சிறைத் தண்டனை நீதிமன்றால் கொடுக்கப்பட்ட பின்னர் இவரை பொதுமன்னிப்பில் விடும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் உலக ஊடக சுந்திரதினமான (World Press Freeedom Day) 2010.05.03ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபஸ்சவினால் பொதுமன்னிப்புவழங்கப்பட்டது. ஊடகவியளாளர் திசநாயகம் ஜனாதிபதி மகிந்த ராஜபஸ்சவின் ஊடக ஆலோசகராகவும் கடமையாற்றியவர்

பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முடிவடைந்து சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபஸ்சவினால் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட ஒரே கைதி திசநாயகம் மட்டுமே. விடுதலையின் பின்னர் அமெரிக்காவில் வசிக்கின்றார்.

## யசிகரனுக்கும் வளர்மதியும் சுவிஸில் (SWISS)

யசிகரன் வளர்மதி இருவருக்கும் சுவிற்சர்லாந்து நாடு அகதி அந்தஸ்து வழங்கியது அதே வேளையில் தனிப்பட்ட உடமைகளை அரசுடமையாக்கியமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குதொடர்ந்து திகதி குறிப்பிடப்பட்டு தற்போது 13 வருடங்களாகியும் (2022) வழக்கு முடிவடையவில்லை.

கூறவேண்டிய விடயத்தை கூறவேண்டிய இடத்திலும் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்திலும் செய்யாது விடின் விளைவுகளைச் சந்திக்க வேண்டியேவரும் அமைதி பொன் போன்றது அமைதியாக இருக்க வேண்டிய நேரங்களும் உண்டு என்பதில் எந்தமாற்றுக் கருத்தும் இருக்க முடியாது எனினும் அமைதி எல்லாச் சூழ்நிலையிலும் உதவி செய்யாது. அவசியமான தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பேசாமடந்தையாக இருப்பதுஅதனை தவிர்ப்பது சந்தர்ப்பத்தை நழுவ விடுவது சிலவேளைகளில் வாழ்கையில் பல சோதனைகளை சந்திக்க வைத்து விடும். தண்டணையையும் வழங்கிவிடும்

# சிறுமி சோபிகா

2009

29

**2009ம் ஆண்டு மே மாதம் இறுதி யுத்தம் முடிவுற்ற பின்னர் ஆனி மாதம் அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது மனித உரிமை மீறல் மனு இதுவாகும்.**

இந்த மனுவில் மனுதாரராக சட்டத்தரணி அன்ன பாக்கியம் சிதம்பரப் பிள்ளையின் பெயர் குறிப்பிடப் பட்டதுடன் யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலாளர், யாழ்.படைகளின் தளபதி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பட்டாணிச்சிப் புளியங்குளம் கிராம சேவையாளர், வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா அரச அதிபர், வவுனியா சைவப்பிரகாச நலன்புரி நிலைய கிராம சேவையாளர், வன்னிப் படைகளின் தளபதி, நலன்புரிநிலைய இணைப்பதிகாரி ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

யுத்தம் நடந்த காலத்தில் 2008ஆம் ஆண்டு ஷெல்கள் வீழ்ந்ததால் பெற்றோரிடமிருந்து இடம்பெயர்ந்த 13 வயதையுடைய சோபிகாவை பெற்றோர் தங்கியிருந்த வவுனியா நலன்புரி நிலையத்துக்கு அழைத்துச் சென்று பெற்றோரிடம் பாரம்கொடுக்கும்படி பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவையடுத்து சிறுமி சோபிகா பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டாள்

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த யுத்தத்தின் காரணமாக புளியம்பொக்கணையில் வசித்த வந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மாணிக்கராஜா சிவபாக்கியம், சோபிகா சுரேந்திரநாதன் ஜெயராணி சுரேந்திரநாதன், பொன்னுச்சாமி சுரேந்திரநாதன், நேசனா சுரேந்திரநாதன் ஆகியோர் சுதந்திரபுரம் பிள்ளையார் கோயில் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததால் பிரிந்து புளியம்பொக்கணையில் இருந்து விசுவமடுவுக்கு 2008 டிசெம்பர் மாதம் இடம்பெயர்ந்தனர். குடும்ப அங்கத்தவர்களில் மாணிக்கராஜா சிவபாக்கியம், சோபிகா சுரேந்திரநாதன் கொடிகாமம் நலன்புரி நிலையத்திலும் ஜெயராணி சுரேந்திரநாதன்,

பொன்னுச்சாமி சுரேந்திரநாதன், நேசனா சுரேந்திரநாதன் வவுனியா நலன்புரி நிலையத்திலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த இரத்த உறவுகளை யுத்தம் முடிவடைந்த பின்னர் இணைப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் எந்த முயற்சியும் பயன்தராத நிலையில் யுத்தம் முடிவடைந்த ஒரு மாதத்தில் 2009 ஆம் ஆண்டு ஆனி மாதம் மனுதாரர்களின் இரத்த உறவினரான சட்டத்தரணி அன்னபாக்கியம் சிதம்பரப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா இடம்பெயந்த ஐவர் சார்பாக அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்தார்.

மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு. மனுதாரர்களில் ஒருவரான சிவபாக்கியத்துக்கு 68வயது. மற்றொரு மனுதாரரான ஜெயராணி கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணியாற்றி வந்தவர், ஜெயராணியின் கணவரான சுரேந்திரநாதன் பரந்தன் ப.நோ.கூ.சங்கத்தில் பணியாற்றி வந்தார். 13 வயதான சோபிகா, 10 வயதான நேசனா ஆகியோர் அவர்களின் பிள்ளைகளாவர்

நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சுதந்திரபுரம் பிள்ளையார் கோயில் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததால் பாதுகாப்புத் தேடி ஒடியதால் குடும்பம் பிரிந்து விட்டது. 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி குடும்பத்தில் ஒரு பகுதியினர் விசுவமடுவுக்கும் மற்றப் பகுதியினர் புதுமாத்தளனுக்கும் சென்று விட்டனர்.

ஷெல்கள் வீழ்ந்ததால் பாதுகாப்புத் தேடி ஒடிவந்த 2, 3, 5 ஆம் மனுதாரர்களை இராணுவம் பிடித்து வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை நலன்புரி நிலையத்துக்கு கொண்டு சென்றனர். ஷெல் தாக்குதலில் 1,4ஆம் மனுதாரர்களான மாணிக்கராஜா சிவபாக்கியமும், சோபிகாவும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு படகு மூலம் கூட்டிச்செல்லப்பட்டு பின்னர் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டனர். அங்கிருந்து கொடிகாமம் நலன்புரி நிலையத்துக்கு மாற்றப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

13 வயதையுடைய சிறுமியான சோபிகா ஷெல்கள் வீழ்ந்ததால் பாதுகாப்புத் தேடி ஒடிய நிலையில் தனது பெற்றோரையும் தங்கையையும் பிரிந்து தனது பாட்டியுடன் கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். மாணிக்கராஜா சிவபாக்கியம் வேப்பங்குளத்தில் உள்ள அவரது வீட்டுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அவரது பேர்த்தியான சோபிகா 13 வயதுடையவர் என்ற காரணத்தால் அவருடன் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. காயமடைந்த நிலையில் உள்ள சோபிகாவை தனிமையில் விட்டுச் செல்ல முடியாத சூழ்நிலையில் மாணிக்கராஜா சிவபாக்கியம் தொடர்ந்தும் கொடிகாமம் முகாமில் தங்கியுள்ளார். மனுதாரர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ளனர். முகாம்களில் இருந்து மனுதாரர்கள் விடுவிக்கப்பட்டால் குடும்பத்தினர் ஒன்றாக வாழ அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். எனவே அவர்கள் ஒன்றிணைவதற்கு நீதிமன்றம் ஏற்பாடு செய்ய வேண்டும், இப்படி மனுவில் கோரப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஜெகத் பாலபட்டபெண்டி, சந்திரா ஏக்கநாயக்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்த வேளையில் இந்தமனுவை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம் மனுவை விசாரணைக்கு ஏற்று பிரஸ்தாப மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள் தமது ஆட்சேபங்களை 2009ஆம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தது. மனுதாரர்களினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விளக்கத்துக்கு எடுக்கப்பட்ட போது இரண்டு பக்க வாத பிரதிவாதங்களையும் செவிமடுத்த நீதியரசர் குழாம் கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 1, 4ஆம் மனுதாரர்களான மாணிக்கராஜா சிவபாக்கியத்தையும் சோபிகா சுரேந்திரநாதனையும் 2, 3, 5ஆம் மனுதாரர்களான ஜெயராணி சுரேந்திரநாதன், பொன்னுச்சாமி சுரேந்திரநாதன், நேசனா சுரேந்திரநாதன் ஆகியோர் தங்க வைக்கப்பட்டுள்ள வவுனியா நலன்புரி நிலையத்திற்கு அழைத்துச் சென்று பாரம்கொடுக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பளித்தனர். அதன்படி பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தனர்.

# ஊடகவியளாளர் வித்தியாதரன் கைதும் விடுதலையும

2009

30

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டத்தில், 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய புலிகளின் இலகுரக விமானம் இரண்டு கொழும்பிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அருகாமையிலும் நடத்திய தாக்குதலில் மூத்த ஊடகவியளாளரான வித்தியாதரனுக்கும் தொடர்புண்டு என்ற சந்தேகத்தில் அவரைச் சட்டத்துக்கு முரணான வகையில் கடத்திச் சென்று, பின்னர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸாரினால் கூறப்பட்ட வழக்கு சர்வதேச நீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாகும்.

அவ்வேளையில் “உதயன்“, “சுடர் ஒளி“ பத்திரிகைகளின் ஆசிரியரான நடேசபிள்ளை வித்தியாதரன் யுத்தச் செய்திகளையும், உள்வீட்டுத் தகவல்களையும், யுத்தத்தால் தமிழர் பிரதேசம் எதிர்கொண்ட பேரிழப்புகளையும், பாதிப்புகளையும் பரபரப்பாக அம்பலமாக்கி, சர்வதேச ரீதியில் அவற்றைத் துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஊடகவியலாளராகக் கருதப்பட்டார். யுத்தப் பிரதேசங்களில் இடம்பெறும் அட்டூழியங்களை படங்கள் மற்றும் ஆதாரங்களுடன் வெளியிடுவதன் மூலம் உண்மைகளை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தும் மனித உரிமை ஆர்வலராகவும் அவர் பார்க்கப்பட்டார்.

அந்தப் பணி காரணமாக இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரின் கடும் சீற்றத்துக்கும் எரிச்சலுக்கும் வித்தியாதரன் உள்ளாகி இருந்தார். அதனால் அவருக்கும் ஏதும் விபரீதங்கள் நடக்கலாம் என்பது எதிர்பார்க்கப்பட்டது. வித்தியாதரன் கடத்தப்படுவதற்கு முதல் நாள் அவரை அவரது கொழும்பு “சுடர் ஒளி“ அலுவலகத்தில் நேரடியாகப் பேட்டி கண்ட ஆஸ்திரேலிய தொலைக்காட்சி ஒன்றின் செய்தியாளர் அமோஸ் என்பவர் அது பற்றி அவரிடம் நேரடியாகவே கேட்டபோது,



“ஆம். நண்பர் பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்கவுக்கு இப்போது நடந்திருப்பதைப் பார்க்கும் போது நாங்களும் வீட்டை விட்டுப் புறப்பட்டால் மீண்டும் உயிரோடு வீடு திரும்புவோமா என்பது தெரியாத மிக நெருக்கடியான சமயம் இது. ஆனாலும் எமது மக்களுக்கு நாங்கள் எங்கள் பேனா மூலம் பணியாற்ற வேண்டிய மிக இக்கட்டான காலகட்டம் இது. எந்த நெருக்கடி வந்தாலும் எதிர்கொண்டு உண்மைகளை வெளிக் கொணரும் எங்கள் பணி செய்வோம்.” - என்று வித்தியாதரன் பேட்டி அளித்திருந்தார்.

அடுத்த நாள் அந்தப் பத்திரிகையாளர் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை பேட்டி காண பாதுகாப்பு அமைச்சுக்குள் நுழைந்த சமயம், அவரது கைத்தொலைபேசிக்கு வித்தியாதரன் இனம் தெரியாதவர்களால் வெள்ளை வானில் கடத்தப்பட்டார் என்ற செய்தி வந்தது. பாதுகாப்புச் செயலாளரை நேரில் பார்த்த அந்த ஆஸ்திரேலிய செய்தியாளர் தமது முதல் கேள்வியாக “உதயன்“, “சுடர் ஒளி“ பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரனுக்கு என்ன நடந்தது என்று கேட்டார்.

## வித்தியாதரன் ஒரு பயங்கரவாதி.

“அவர் ஒரு பயங்கரவாதி. ஊடகவியலாளர் என்ற பெயரில் செயற்படும் அவரின் கைகளிலும் இரத்தக் கறைகள் உண்டு. அவரைப் பாதுகாக்க முயன்றீர்களானால் நீங்களும் அந்தக் குற்றத்தைப் புரிந்தவர்கள் ஆவீர்கள். கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு அவரும் பொறுப்பு. அவர் ஒரு பயங்கரவாதி என்பதை பொறுப்புடன் நான் கூறிக் கொள்கிறேன். நாங்கள் அவரைக் கைது செய்வோம் இல்லை... இல்லை கைது செய்து விட்டோம். அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம்” என்று ஒரு புறம் தடுமாற்றத்துடனும் மறுபுறும் கடும் சீற்றத்துடனும் அவர் பதிலளிக்கும் காணொளிக் காட்சியை, வித்தியாதரன் கடத்தப்பட்டு பின்னர், அது கைதாக அறிவிக்கப்பட்டு, சில மணி நேரங்களில் ஆஸ்திரேலியா தொலைக்காட்சி முதலில் ஒளிபரப்பியது. அது சமூக ஊடகங்களிலும் வைரலாகப் பரவியது. அதை பார்த்த பலரும் வித்தியாதரன் இப்போதைக்கு வெளியே வர வாய்ப்பேயில்லை என்று தான் கருதினார்கள்.

ஆனால் நீதிவான் நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் நாங்கள் விரைந்து நடத்திய சட்டப் போராட்டமும், மக்களின் முன்னால் அவர் பற்றிய செய்திகள் எடுத்துச் செல்லப்பட்ட விதமும், “பயங்கரவாதி“ என்று பாதுகாப்பு செயலாளரால் பொதுவெளியில் பகிரங்கமாகக் கூறப்பட்டு பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த

வித்தியாதரனை சுற்றவாளி என்ற உண்மையை அம்பலப்படுத்தி, இரண்டு மாதங்களில் அவரை நீதிமன்றம் மூலம் வெளியே கொண்டு வர வாய்ப்பு அளித்தது.

## வித்தியாதரன் கடத்தல்

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி. வன்னியில் யுத்தம் உக்கிரத்தை எட்டியிருந்த காலம். தனது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு இறுதியஞ்சலி செலுத்துவதற்காக கல்கிசைச் சந்தியில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலைக்கு வித்தியாதரன் சென்றிருந்த வேளையில் பல பொதுமக்கள் முன்னிலையில், ஆள்கள் பார்த்திருக்க காலை 9மணி 55 நிமிடமளவில் வெள்ளை வானில் வந்த சிலரால் ஆயுதமுனையில் பலாத்காரமாக வானில் ஏற்றப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார்.

அந்தக் கடத்தலைத் தடுக்க முயன்ற வித்தியாதரனின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் ஆயுததாரிகளான கடத்தல்காரர்களுக்கும் இடையில் பெரும் களேபரமே அங்கு நடைபெற்றது. உடைகள் கிழிக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்புறமாக விலங்கிடப்பட்ட நிலையில் வெள்ளைவானுக்குள் தூக்கி வீசப்பட்ட நிலையில் வித்தியாதரன் காணாமல்போனார்.

இந்தச் செய்தி சில நிமிடங்களில் சர்வதேச ஊடகங்கள் பரபரப்பாக வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. ஊடகவியலாளர்கள் தராக்கி சிவராம், லஸந்த விக்கிரமதுங்க போன்றோருக்கு நேர்ந்த கதி வித்தியாதரனுக்கும் நேரலாம் என அஞ்சப்பட்டது.

வித்தியாதரன் கடத்தப்பட்ட சில மணித்தியாலங்களில் தெமட்டக்கொட பகுதியில் அமைந்துள்ள கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவு தலைமையகத்திற்கு (Colombo Crime Division) அருகாமையில் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் தூக்கிவீசப்பட்ட அதே நேரத்தில், இன்னும் சிலர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு உரித்தான வாகனத்தில் வந்து கடத்தப்பட்ட வித்தியாதரனை அங்கிருந்து கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் தலைமையகத்திற்கு கொண்டுசென்றுள்ளனர். அங்கு அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

வித்தியாதரன் கடத்தப்பட்ட செய்தி அன்று பகல்நேரச் செய்தியாக வானொலியில் அறிவிக்கப்பட்டதையடுத்து இந்தச் செய்தி பத்திரிகை உலகத்திற்கு மட்டுமன்றி அனைவரையும் ஒருகணம் திகைப்பிற்குள்ளாக்கியது. உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். சர்வதேச அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள் பலவும் வித்தியாதரனுக்காகக் குரல் எழுப்பின.

யுத்தத்தின் உக்கிரக் கட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் ஒலித்த ஒரு குரல் - எழுதிச் சென்ற ஒரு பேனா - திட்டமிட்டு முடக்கப்பட்டதாகவே உலகம் பார்த்தது. அதனால் அவரின் சட்டத்தரணிகளாக அவரை மீட்டெடுக்க நாங்கள் மேற்கொண்ட சட்டப் போராட்டமும்

உள்நாட்டிலும், சர்வதேச மற்றும் இராஜதந்திரத் தரப்புகளிலும் உற்று அவதானிக்கப்பட்டன. பாதுகாப்புத் தரப்புக்கும் அதனால் எம் மீது வன்மம் இருந்தது.

## வித்தியாதரன் தடுப்புக்காவலில்

வித்தியாதரன் பாதுகாப்பு செயலாளரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தொடர்ந்து கொழும்புக் குற்றத்தடுப்புப் பிரிவில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கொழும்பிலிருந்த வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், சர்வதேச மன்னிப்பு சபை போன்றவை வித்தியாதரனைக் கடத்தியமையை ஆட்சேபித்து, 2006ஆம் ஆண்டிலிருந்து இப்படிப் பல பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளமையைக் குறிப்பிட்டு, தமது கண்டனத்தைத் தெரிவித்து, என்ன காரணத்திற்காக அவர் கடத்தப்பட்டார் என்ற கேள்வியை எழுப்பி, அவரை விடுதலை செய்யும்படியும் கேட்டுக்கொண்டன.

வித்தியாதரன் கடத்தப்பட்டமையை மறுதலித்த ஊடக அமைச்சர் வித்தியாதரன் கடத்தப்படவில்லையெனவும், கைதுசெய்யப்பட்டுள்ளாரெனவும் வித்தியாதரன் புலிகளின் இரண்டு விமானங்கள் (Suicide air mission) வந்து கொழும்பைத் தாக்கிய விடயம் சம்பந்தமாக புலிகளுடன் தொலைபேசித் தொடர்புகளைக் கொண்டுள்ளார் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார் எனவும் கூறியிருந்தார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றார் என்றும், வித்தியாதரனைப் பொலிஸார் கைது செய்யும் பொழுது வித்தியாதரன் ஒரு பத்திரிகையாளர் என்பது பொலிஸாருக்குத் தெரியாது என்றும் தனது ஊடக சந்திப்பில் ஊடக அமைச்சர் பிரிய தர்சன யாப்பா மேலும் கூறியிருந்தார்.

வித்தியாதரனுக்கும் இந்த விமானத் தாக்குதல்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்பதை அறிவதற்காக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தமது விசாரணையில், வித்தியாதரனுடன் பழகியவர்கள் அவரது நண்பர்கள் தொலைபேசிமூலம் வித்தியாதரனைத் தொடர்புகொண்டவர்களின் நூற்றிற்கு மேற்பட்ட தொலைபேசி அழைப்புக்கள், வங்கிக் கணக்குகள் அனைத்தையும் விசாரணைக்கு உட்படுத்தினர். விசாரணை நடாத்திய பொலிஸ ரால் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாதத் தடைப் பொலிஸ் பிரிவு, தேசிய புவனாய்வுப் பணியகம் ஆகியவை எல்லாம் தனித் தனியாகவும் வித்தியாதரனுக்கு எதிராக வெவ்வேறு முனைகளில் விசாரணை நடத்தின. தடுப்புக்காவலில் வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு முனைகளில் வித்தியாதரனைக் குடைந்தனர்.

விசாரணை நடத்திய தரப்புகளிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டு புலன் விசாரணைகள் தொடர்ந்தன.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் சிறிய ரக விமானம் கொழும்பிலும், கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அருகாமையிலும் நடத்திய இந்தத் தாக்குதல்கள் சர்வதேச ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளாக அனைந்தன. அவை பற்றிய செய்திகளை மற்றைய ஊடகங்களுக்குக் கிடைக்காத நுணுக்கமான உள்வீட்டு விவரங்களுடன் முந்திக் கொண்டு, தனது பத்திரிகைகளில் வித்தியாதரன் வெளியிட்டமையும், அதன் பின்னர் வித்தியாதரன் வெள்ளை வானில் கடத்தப்பட்டமையும், பல்வேறு தரப்புகளின் அழுத்தங்களை அடுத்து சில மணிநேரத்திலேயே அக்கட்டத்தல் கைதாக்கப்பட்டமையும், அவரின் தடுத்துவைப்பும் உலகிலுள்ள ஏராளமான ஊடகங்களிலும், இணையத்தளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் மிக முக்கிய செய்திகளாகக் காணப்பட்டன.

## உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்.

நாள்கள் ஓடிக்கொண்டிருந்தன. வித்தியாதரன் விடுதலை செய்யப்படும் சூழ்நிலை காணப்படாத காரணத்தால் நீதிமன்றம் செல்வது தவிர்க்க முடியாதது என்ற நிலையில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டு, வித்தியாதரனை சட்டரீதியற்ற முறையில் கைது செய்து தடுத்து வைத்துள்ளமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பத்திரிகையாளர் நடேசபிள்ளை வித்தியாதரன். சட்டரீதியற்ற முறையில் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் காவல் உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை தொடர்ந்து (25-03-2009) புதன் கிழமையன்று உயர்நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ. கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க, அதன் உதவிப் பரிசோதகர் ஏ.ஜி.டி.பி. விஜேரத்ன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர, பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு அடிப்படைமனித உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு, சித்திரவதையிலிருந்து சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை, சட்டத்தின்முன் சமத்துவம் மற்றும் சமமான பாதுகாப்புக்களுக்கான உரிமை, சாகியம், மொழி, அரசியல் கருத்து என்பன காரணமாக பாரபட்சம் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை, வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவற்றுடன் பலவந்தமாகக் கைதுசெய்யப்படுதல் மற்றும் தடுத்துவைக்கப்படுவதிலிருந்து சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது.

பத்திரிகையாளர்களதும் ஊடகத் தொழில் துறையில் பணிபுரியும் நபர்களதும் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து சம்பந்தமாக இந்த நாட்டில் சமூக - அரசியல் சூழல் துரிதமாக மோசமடைந்து வந்துள்ளது என்று சுடர் ஒளி, உதயன் ஆகிய செய்தித்தாள்களின் ஆசிரியரான

மனுதாரர் வித்தியாதரன் சார்பில் மனுவில் தெரிவிக்கப்பட்டமையுடன் நாட்டில் உள்ள பத்திரிகையாளர்கள், ஊடகப் பணியாளர்கள் ஆகியோர் சம்பந்தமாக படுகொலை, கடத்தல், தாக்குதல், துன்புறுத்தல் ஆகிய அவமதிக்கத்தக்க அநேக சம்பவங்கள் சமீபத்தில் நடந்துள்ளன என்று மனுவில் மேலும் தெளிவாக குறிப்பிடப்பட்டது.

இந்தக் கொடூரமான மனித உரிமைத் துஸ்பிரயோகங்களை இழைத்தவர்கள் தமது செயற்பாடுகள் அல்லது செயலின்மை மற்றும் குரூரமான உதாசீனம் மூலம் பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் ஆகிய இருதரப்பினரதும் அடிப்படை உரிமைகளை மீறியிருக்கின்றனர் என்றும் கடந்த பத்து ஆண்டுகளின்போது அறிவிக்கப்பட்டுள்ள துன்புறுத்தல், தாக்குதல், கடத்தல் முயற்சி, படுகொலை முயற்சி, ஊழியர்கள் படுகொலை செய்யப்படுதல் ஆகியன சம்பந்தப்பட்ட எண்ணற்ற பல சம்பவங்கள் யாவும் தமது செய்தித்தாள்களான சுடர்ஒளி, உதயன் ஆகியவற்றை மௌனிக்கச் செய்யும் நோக்கத்தைக் கொண்டிருந்தன என்றும் மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருந்தார்.

வித்தியாதரன் ஆசிரியராகப் பணிபுரியும் செய்தித்தாள்களில் அவரது கட்டுரைகள் சிலவற்றின் கருத்துக்கள், அபிப்பிராயங்கள் காரணமாகத் மனுதாரர் பழிவாங்கப்பட்டிருக்கிறார் எனவும், கொழும்பு குற்றப்பிரிவுக்கு வித்தியாதரன் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி அழைக்கப்பட்டார் எனவும், குறிப்பிட செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு கட்டுரைகள் தொடர்பில் ஆறு மணித்தியாலங்கள் விசாரிக்கப்பட்டு, அதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைத்தொடர்ந்து பெப்ரவரி 25ஆம் திகதி இனந்தெரியாத சில பொலிஸ் அதிகாரிகள் கொழும்பிலுள்ள “சுடர் ஒளி“ செய்தித்தாள் அலுவலகத்தில் தேடுதலை நடத்தியமையுடன் குறிப்பிட்ட செய்தித்தாளின் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊழியர்களின் பெயர்கள், பதவிகள், முகவரிகள் ஆகியன அடங்கிய பட்டியலைத் தருமாறு கோரினர் என்றும் மனுவில் விவரிக்கப்பட்டது.

அதன் பின்னரே அடுத்த நாள், பெப்ரவரி 26ஆம் திகதியன்று பொலிஸ் சீருடையில் இருந்த மூன்று பேரும் சாதாரண உடையிலிருந்த மூன்று பேருமாக ஆறுபேர் கல்கிஸைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மகிந்த மலர்ச்சாலைக்கு முன்பாக இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் வந்து சனநடமாட்டம் அதிகளவில் காணப்படும் அந்தப்பகுதியில் பலர் முன்னிலையில் வித்தயாதரனின் நடமாடும் சுதந்திரத்திற்கு தடையேற்படுத்தி வெள்ளை வானில் பலவந்தமாக ஏற்றிக் கடத்திச் சென்றனர் எனவும் மனுவில்மேலும் தெரிவிக்கப்பட்டது.

வித்தியாதரன் கைது செய்யப்பட்டமை தேவையான பிடிவிறாந்து இல்லாமல் மேற்கொள்ளப்பட்டமையால் இது கடத்தலே என்றும், பின்னர் அது கைதாக மாற்றப்பட்டதாகவும் குறிப்பிட்ட விமானத் தாக்குதல் தினத்தன்று மனுதாரர் மேற்கொண்ட பெரும் எண்ணிக்கையிலான தொலைபேசி அழைப்புக்கள் காரணமாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் மனுதாரர் எப்படியோ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விமானத் தாக்குதலை

ஒருங்கிணைத்தார் என்ற ஆத்திரமூட்டக் கூடியதும் ஆதாரமற்றதுமான குற்றச்சாட்டின் காரணமாகவே கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை மனுதாரர் பின்னர் தெரிந்து கொண்டார் எனவும் மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டது.

தமது மைத்துனரின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாகத் தமக்கும் தமது சகோதரி உட்பட குறிப்பிட்ட வேறு சிலருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல்களைக் குறிப்பிட்ட சில அதிகாரிகள் (ஒட்டுக் கேட்டு) செவிமடுத்ததன் காரணமாகவே இந்தக் குழப்ப நிலை தோன்றியது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டது.

தனது மைத்துனர் பெப்ரவரி 20ஆம் திகதி பாரிசிலிருந்து நாடு திரும்பவிருந்தார் எனவும், விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் விமானத் தாக்குதலுக்குப் பின்னர் உடனடியாகவே கொழும்புக்கு வரவிருந்த விமானங்கள் இந்தியாவுக்குத் திசைதிருப்பப்பட்டமையைக் கேள்விப்பட்டு, தமது சகோதரியும் மைத்துனரும் கலக்கமடைந்தனர் என்றும், விமான இலக்கம், விமானப் பயணத் தினம், விமானம் புறப்படும் நேரம், விமானம் இறங்கும் நேரம் ஆகியனவற்றை தனது மைத்துனர் தமக்கு அறியத்தராத காரணத்தினால் பிரான்ஸில் தமது மைத்துனர் தங்கியிருந்த இடத்தில் வசித்துவரும் நபர்களுடனும், உறவினர்களிடமும் பலமுறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல்களைத் தாம் கோரினார் என மனுவில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வந்த கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிசார், பயங்கரவாத தடுப்புப் பிரிவு, குற்றப்புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு எனப் பல பிரிவுகளினாலும் வித்தியாதரனுக்குப் புலிகளுடன் ஏதேனும் சட்ட முறையற்ற தொடர்பு உண்டா என நுணுக்கமாகத் துருவித் துருவி ஆராயப்பட்டது.

## பொலிசார் எம்மீது கடும்கோபம்

உயர்நீதிமன்றில் மனுதாரரான வித்தியாதரன் சார்பில் அரசிற்கும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமை வித்தியாதரனின் வழக்குக்காக நீதிமன்றில் ஆஜராகிய பொலிசாருக்கு எம் மீது பெரும் மனக்கசப்பையும் கடும் கோபத்தையும் ஏற்படுத்தியது.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நீதிமன்றில் வாதாடும் பொழுதும், பொலிசாருக்கு எதிராக பிரபல்யமானதும் பிரச்சினைக்குட்பட்டதுமான அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் பொழுதும் வெளிப்படையாக கூறமுடியாத அச்சுறுத்தல்களையும் அசௌகரியங்களையும் நாம் சந்திப்பதுண்டு. அதே விடயங்கள் வித்தியாதரனின் வழக்கை ஒட்டியும் நடந்தன.

யுத்தம் இறுதிக்கட்டத்தை - உக்கிர உச்சக்கட்டத்தை - அண்மித்திருந்த வேளையில் - வித்தியாதரன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். இந்தச் சூழ்நிலையில்தான்

நியாயம் கிடைக்க வேண்டும், மனித உரிமை பாதுகாக்கப்படவேண்டும், வித்தியாதரன் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த வழக்கு சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவினால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

பொலிசாருக்கும் அரசிற்கும் எதிராக மனு தயாரிக்கப்பட்டு, அந்த மனுவுடன் இணைக்கப்பட்ட சத்தியக் கடுதாசியில் சமாதான நீதவானை வித்தியாதரன் தடுத்துவைக்கப்பட்டிருந்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, வித்தியாதரனிடம் கையெழுத்துப் பெறப்பட்டு உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர் நீதிமன்றில் மனுதாரர் சார்பாக வாதாட முன்வந்து வழக்கில் ஆஜரானார்.

வித்தியாதரனை தடுத்துவைத்து பல கோணங்களில் பொலிசார் விசாரணைகளை நடாத்திய போதிலும் வித்தியாதரன் மேல் சுமத்தப்பட்ட அத்திவாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு எந்த விதமான சான்றுகளும் பொலிசாரின் விசாரணையில் வெளிவரவில்லை.

உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் விசாரணைக்கு எடுக்கப்பட உயர்நீதிமன்றதினால் திகதி குறிக்கப்பட்டிருந்த நிலையில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் வித்தியாதரனைக் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் அழைத்து வந்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

## வித்தியாதரன் விடுதலை

வித்தியாதரனை தொடர்ந்து தடுத்து வைப்பதற்கு எந்தச் சான்றுமில்லாத நிலையில், வித்தியாதரனை விடுதலை செய்யும்படி நான் நீதிமன்றத்தினை வேண்டிக் கொண்டபோது வித்தியாதரனை விடுதலை செய்வதற்கு பொலிசார் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில், கோட்டை பிரதான நீதிவான் கியான் பிலபிடிய வித்தியாதரனிடம் நீதிமன்றத்திற்கு ஏதாவது சொல்ல வேண்டி இருக்கின்றதா என்று கேட்டதையடுத்து வித்தியாதரன், தான் கடத்தப்பட்டபோது தாக்குதலுக்கும் மோசமான சிரமங்களுக்கும் உட்பட்டார் எனவும் அவமானப்படுத்தப்படும் விதத்தில் கீழ்த் தரமாகவும், கேவலமாகவும், மன உளைச்சலுக்கு உள்ளாகும் விதத்திலும் நடத்தப்பட்டார் எனவும் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறும் நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் கொழும்பு கோட்டை நீதவான், பாதுகாப்பு வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லை யெனவும், பாதுகாப்பு வழங்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கே உண்டென்றும் தெரிவித்து வித்தியாதரனை விடுதலை செய்தார்.

மூத்த ஊடகவியளாளரான வித்தியாதரனைக் கடத்திச் சென்று தடுத்து வைத்து பல கோணங்களில் விசாரணைகளை நடாத்தியபோதிலும் எந்த விதமான சான்றும் பொலிசாருக்கு கிடைக்கவில்லை. எனினும் ஊடகவியலாளனுக்குரிய நெஞ்சுரத்துடன் தடுப்புக் காவலில் அந்த விசாரணகளை எதிர்கொண்ட வித்தியாதரன், வெளியில் அவருக்காக நாம் நடத்திய

சட்டப்போராட்டத்துக்கும், தடுப்புக் காவல் அழுத்தங்களை எதிர்கொண்டபடி ஒத்துழைத்தார். அதுவே அவரை விடுவிக்கும் எமது முயற்சிக்குக் கடைசியில் வெற்றியை வாங்கித் தந்தது.

பிழையான - உண்மைக்குப் புறம்பான - தகவல்களின் அடிப்படையில் வித்தியாதரன் மட்டுமல்ல ஆயிரக்கணக்கான சூழ்நிலைக் கைதிகள் உருவாக்கப்பட்டனர்.

# சேலான் வங்கி முகாமையாளர் விடுதலை

2009–2013

31

**2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி வங்கியில் கடமையில் இருந்த வேளையில் தீடிரென காலை 9 மணியளவில் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரை தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகளை நடாத்திய பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த முதல் விசாரணை அறிக்கையில் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானுடன் தொடர்பு உள்ளதாக பயங்கரவாதத் தடைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பிரபல தனியார் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பிரசன்னா முதலிகேயினால் விடுதலை செய்யப்பட்டார்.**

## அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல்

1989ஆம் வங்கிச் சேவையில் இணைந்த சந்தேகநபர் வவுனியா. கொட்டகல. அஸ்கிரிய. தெகிவல ஆகிய இடங்களில் சேவையாற்றியதாகவும் 2002ஆம் ஆண்டு பலமுறை வன்னிக்கு சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானை சந்தித்துள்ளதுடன் பொட்டு அம்மானின் வேண்டுகோளையடுத்து புலி உறுப்பினர்களுக்கு பல வங்கிக் கணக்குக்களை கொழும்பில் ஆரம்பித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வங்கிக் கணக்குக்களின் ஊடாக வெளிநாட்டிலிருந்து பெரும் தொகையான நிதி புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிசாரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது இந்நிலையில் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரை கைது செய்து தடுத்து வைத்துள்ளமை சட்டரீதியற்றதென உயர் நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்ததையடுத்து மனுதாரரான வங்கியின முகாமையாளரை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் சார்பில் எனது சமர்ப்பணத்தில் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தும் பொழுது பொலிசாரினால் முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அந்த அறிக்கையில் எல் டி டி ஈ இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானை சந்கே நபர் சந்தித்துள்ளதுடன் பொட்டு அம்மானின் வேண்டுகோளையடுத்து புலி உறுப்பினர்களுக்கு பல வங்கிக் கணக்குக்களை ஆரம்பித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2009ஆம் ஆண்டிலிருந்து 4 வருடங்களாக இருபது மேலதிக விசாரணை அறிக்கைகள் பொலிசாரினால் இந்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன ஆனால் இந்த விசாரணை அறிக்கைளில் சந்தேக நபருக்கு புலிகளுடன் தொடர்புள்ளதாக எந்தச் சான்றும் பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட மேலதிக அறிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

சந்தேக நபரிடமிருந்து பொலிசார் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தில் தனக்கும் புலிகளுக்கும் எந்த விதமானதொடர்பும் இல்லையெனவும் வங்கிக் கணக்குக்களை ஆரம்பித்தவர்கள் வங்கியின் வாடிக்கையாளர்கள் எனவும் அவர்களுக்கு புலிகளுடன் தொடர்பு உள்ளதா என்பதை தான் அறிந்திருக்கவில்லையெனவும் தான் எந்தக் குற்றமும் புரியவில்லை என தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார். இதனை பொலிசார் தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து பொலிசார் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர் ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை எனவே வழக்குத் தாக்கல் செய்வதற்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லாத நிலையில் சந்தேக நபரை விடுதலை செய்யவேண்டும் சான்றுகள் இருந்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என எனது வாதத்தில் குறிப்பிட்டதுடன் சந்தேக நபர்மீது மேற்கொண்ட விசாரணையின் முற்றுமுழுதான விசாரணை அறிக்கைகளை நீதிமன்றில் தாக்கல் செய்ய பொலிசாருக்கு உத்தரவிடும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இரண்டு பக்க வாதத்தையும்யடுத்து முற்றுமுழுதான விசாரணை அறிக்கைகளை நவம்பர் மாதம் 3ஆம் திகதி தாக்கல் செய்யும் படி பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்ததையடுத்து இந்த வழக்கு 3.12.2013 நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் சந்தேக நபரான வங்கி முகாமையாளரை விடுதலை செய்யும்படி அறிக்கையொன்றை நீதிமன்றில் தாக்கல் செய்ததையடுத்து நீதவான் நீதிமன்ற நீதிபதி சந்கே நபரான வங்கி முகாமையாளரை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தார்.

# சாந்ததேவன், கோமகன் விடுதலை

2009 – 2016

32

கணேசரத்னம் சாந்ததேவன், முருகையா கோமகன் ஆகிய இருவருக்கும் எதிராக 2004.10.25 இராணுவத்துடன் சேர்ந்து கடமையாற்றிய கருணா அணியின் உறுப்பினர்களான தங்கராஜா தப்பரமூர்த்தி, செங்குராஜா நல்லையா, குகராஜா, ராஜா ராசவேலி ஆகிய நான்கு பேருக்கும் மரணத்தை ஏற்படுத்த எல்.ரீ.ரீ இயக்கத்தின் தலைவர்களின் ஒருவரான நியுட்டனுடன் சேர்ந்து சதித் திட்டம் தீட்டியதாகவும் எல்.ரீ.ரீ இயக்கத்திற்கு உதவி ஒத்தாசை வழங்கியதாகவும் சட்டமா அதிபரினால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை மட்டும் சான்றாகக் கொண்டு வவுனியா மேல் நீதிமன்றில் தனித்தனியாக இரண்டு வழக்கும் கொழும்பு மேல் நீதிமன்றில் இருவருக்கும் எதிராக ஒரு வழக்கும் 2012.07.05ம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

கணேசரத்னம் சாந்ததேவனுக்கு எதிராக 2000ம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில் இணைந்து கபில அம்மான் சங்கீதன் மற்றும் மாதவ மாஸ்டரின் கீழ் ஆயுதப் பயிற்சி பெற்றதாக ஒரு குற்றச்சாட்டும் 2003ம் ஆண்டு முருகையா கோமகன் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில் இணைந்து கிளிநொச்சியில் ஆயுதப் பயிற்சி பெற்றதாக ஒரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு இருவருக்கும் எதிராக தனித்தனியாக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

சட்டமா அதிபரினால் இந்த இரண்டு அரசியல் கைதிகளுக்கும் எதிராக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் அரச சாட்சியமாகக் கொண்டு மொத்தமாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன் அவற்றில் வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.




## வவுனியா மேல் நீதிமன்றினால் எதிரிகள் விடுதலை

கணேசரட்னம் சாந்ததேவனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு குற்றஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஒசான் ஹேவாவிதாரன, மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன் சியாப்தீன், தட்டெழுத்தாளர் சுபோதா ஆகியோரது சாட்சியங்களும் வழக்கின் எதிராளியான கணேசரத்னம் சாந்ததேவனின் சாட்சியத்தையும் பரிசீலனைசெய்த வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி குற்றஒப்புதல் வாக்குமூலம் எதிராளியினால் சுயமாக வழுங்கப்படவில்லையென குற்றஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து 16.07.2014 ம் திகதி கட்டளை வழங்கினார்.

வவுனியாமேல் நீதிமன்றில் கணேசரட்ணம் சாந்ததேவன் மீதுதாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2013ம் ஆண்டு தைமாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணையில் எதிராளியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக சட்டமா அதிபரினால் சான்றாக முன் வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் எதிராளிக்கு எதிராக வேறுசான்றுகள் இல்லையெனவும் வழக்கை தொடர்ந்து நடாத்தவில்லையெனவும் அரசசட்டவாதி நீதிமன்றுக்கு தெரிவித்ததையடுத்து எதிராளியான கணேசரட்ணம் சாந்ததேவனை வவுனியாமேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ வி சந்திரமணி விடுதலை செய்தார்.

## கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணை

கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய முடியும். ஆனால் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியால் நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மீண்டும் இந்த நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்த முடியாது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர குற்றச்சாட்டுக்களை நிறுபிக்க வேறு சாட்சியங்கள் இருப்பின் இந்த நீதிமன்றினால் இந்த வழக்கை விசாரிக்கமுடியும். ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர வேறு எந்தச்சான்றும் குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. என்று நான் எனது வாதத்தை முன்வைத்தேன்.

அரச சட்டத்தரணி தனது வாதத்தில் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பு இந்த நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாதென்றும் ஆகவே விசாரணையை ஆரம்பிக்கும்படி நீதிமன்றத்தை வேண்டிக்கொண்ட வேளை அரச சட்டத்தரணியின் சமர்பணத்திற்கு கடும் ஆட்சேபணை தெரிவித்து எனது வாதத்தில்

பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சான்றாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் கடந்த 34 வருடங்களாக பல நூற்றுக்கணக்கான வழக்குகளில் நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் ஆஜராகியுள்ளேன். ஆனால் எனது அனுபவத்தில் முதன்முறையாக மேல் நீதிமன்ற நீதிபதியால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை இந்நீதிமன்றம் விசாரணை செய்யவேண்டுமென சட்டமா அதிபரின் பிரதிநிதியான அரச சட்டத்தரணி கோருவது வியப்புக்குரியது. குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் நிராகரிக்கப்பட்டு வழக்கில் வேறு சான்றுகள் இல்லாதவிடத்து எதிராளி விடுதலை செய்யப்படவேண்டுமே தவிர வவுனியா மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை இந்நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும் எனக்கோருவதற்கு சட்டத்தில் இடமில்லை. ஆணித்தரமாக நீதிமன்றை வலியுறுத்தினேன்.

## வடக்கும் தெற்கும் இரண்டு நாடுகளா?

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதிகள் நிராகரித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விசாரணைசெய்ய வேண்டுமென சட்டமா அதிபர் கோருவது வடக்கும் தெற்கும் இரண்டு நாடுகளா? என்ற கேள்வியை ஏற்படுத்துகின்றது. வடக்கிலும் தெற்கிலும் இரு வேறு சட்டமா அதிபர்களா செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகம் உருவாகின்றது என்று மன்றில் கேள்வி எழுப்பினேன்.

வவுனியா மேல் நீதிமன்றில் கணேசரட்னம் சாந்ததேவன், முருகையா கோமகன் ஆகிய இருவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2013ம், 2014ம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணையில் எதிராளியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக சட்டமா அதிபரினால் சான்றாக முன் வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் எதிராளிக்கு எதிராக வேறுசான்றுகள் இல்லையெனவும் வழக்கை தொடர்ந்து நடாத்தவில்லையெனவும் அரச சட்டவாதி நீதிமன்றுக்கு தெரிவித்ததையடுத்து வவுனியா மேல் நீதிமன்றம் எதிராளியான கணேசரட்னம் சாந்ததேவனை முருகையா கோமகன் ஆகிய இருவரையும் விடுதலை செய்தது.

இந்த நீதிமன்றில் கணேசரட்னம் சாந்ததேவன், முருகையா கோமகன் இருவருக்கும் எதிராக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை சான்றாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கிலும் உள்ள ஒரேயொரு சான்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியால நிராகரிக்கப்பபட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமேயாகும்

மேலும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ வி. சந்திரமணி அவர்களினால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டு வழக்கிலிருந்து எதிராளியான கணேசரட்னம்

சாந்ததேவன் விடுதலையான தீர்ப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதியை அரச சட்டத்தரணிக்கும் இந்த நீதிமன்றிற்கும் கையளித்த போதிலும் சட்டமா அதிபர் இந்த வழக்கை வாபஸ் பெறாமல் தொடர்ந்து நடாத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையேற்ற இந்த நீதிமன்றம் இந்த வழக்கின் உண்மை விளம்பல் விசாரணையை ஆரம்பித்துள்ளது இந்த வழக்கில் இரண்டாம் எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டிருகும் முருகையா கோமகன் மீது வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் எதிராளிக்கு எதிராக வேறுசான்றுகள் இல்லையெனவும் வழக்கை தொடர்ந்து நடாத்தவில்லையெனவும் அரச சட்டவாதி நீதிமன்றுக்குத் தெரிவித்ததையடுத்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ அ.பிரேம் சங்கர் எதிராளியை விடுதலை செய்துள்ளார்.

ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் பல குற்றச்சாடடுப்பத்திரங்களை சட்டமா அதிபர் பல மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ளார் ஆனால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தால் வேறு சான்றுகள் இல்லாதவிடத்து மற்றைய மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை சட்டமா அதிபர் மீளப்பெறுவதுதான் 2013ம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது அந்த சட்டரீதியான நடைமுறை இங்கே மீறப்பட்டுள்ளது. இவ்வாறான நிருவாகக் கோளாருச் செயல்பாடுகளால் அரசியல் கைதிகள் சட்டரீதியாக விடுதலை செய்யப்படாமல் வருடக்கணக்கில் தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டுள்ளமையை கவனத்தில் கொள்ள இம்மன்று முனைய வேண்டும். என்று தெளிவாக நீதிமன்றை வேண்டிக்கொண்டதையடுத்து நீதிபதி சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை நீதிமன்றிற்கு அறிவிக்கும்படி தவணை வழங்கி வழக்கை ஒத்திவைத்தார். மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவேளையில் அரச சட்டத்தரணி சட்டமா அதிபர் வழக்கை தொடர்ந்து நடாத்தவில்லையென தீர்மானம் எடுத்துள்ளதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து சாந்ததேவன், முருகையா கோமகன்ஆகிய இருவரும் 2016ம் ஆண்டு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

சில வழக்குகள் எதிர்பாராத சவால்களைக் கொண்டு வந்து நிறுத்தும். அவற்றை எதிர்கொள்வதும் என்னையும் கௌரியையும் நம்பிவந்து எதிர்பார்ப்புகளை மொத்தமாக எம்மீது சாற்றிவிட்டு விடுதலையாவோம் என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் அரசியல் கைதிகளின் எதிர்பார்ப்புகளை சட்டத்தின் முன்னால் வென்று நிலைநிறுத்துவது கிட்டத்தட்ட ஒரு போர்களத்துக்கு ஒப்பாகவே இருக்கும். நாங்கள் இருவரும் இணந்து செயற்படுகின்றபடியால் அக்களத்தை எதிர்கொள்வது அவ்வளவு சிரமமாக இருந்ததில்லை.

யாழ் மாநகரசபையின் முன்னான் உறுப்பினரான முருகையா கோமகன் விடுதலையான பின்னர் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல்கொடுக்கும் குரல்அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கினைப்பாளராக செயல்படுகின்றார்

# சயந்தன் தற்கொலையா? கொலையா?

2008 –2012

33

2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி வெள்ளவத்தையில் உள்ள 37வது ஒழுங்கையில் தொடர்மாடிக் கட்டிடங்களைக் கொண்ட இலக்கம் 55, 7/1 மாடி வீட்டில் தற்கொலைக் குண்டுதாரி தங்கியிருப்பதாகக் கிடைக்கப் பெற்ற தகவலைத் தொடர்ந்து அந்த இடத்தைப் பரிசோதிப்பதற்காக வெள்ளவத்தைப் பொலிசார் அங்கு சென்றனர். அந்தத் தற்கொலைக் குண்டுதாரி என்று சொல்லப்படுகின்ற மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவன் தங்கியிருந்த மாடிவீட்டினைச் சோதனை செய்து கொண்டிருந்ததாகவும் அப்பொழுது தற்கொலைக் குண்டுதாரி என்று கூறப்படும் இளைஞர் மாடிவீட்டிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டதாகவும் பொலிசாரினால் கூறப்பட்டது?

மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவன் தாமோதரம்பிள்ளை சயந்தனின் இறந்த உடல் களுபோவில வைத்தியசாலை பிணவறையில் இருந்ததுடன் (2009) இந்தச் சம்பவத்தின் பின்னர் அந்த மாடி வீட்டில் வசித்துவந்த இறந்தவரின் தாயாரான ஜெகசோதி தாமோதரம்பிள்ளை மற்றும் சகோதரியான சுதர்சினி தாமோதரம்பிள்ளை ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்த வெள்ளவத்தைப் பொலிசார் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் மாஅதிபரின் உத்தரவுக்கு அமைய கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசாரிடம் பாரம் கொடுத்தனர்.

37வது ஒழுங்கையில் இலக்கம் 55 7/1 மாடி வீட்டில் இந்தச் சம்பவம் நடைபெற்ற வேளையில் இதே மாடி வீட்டில் மற்றைய இரண்டு அறைகளிலும் வாடகைக்கு தங்கியிருந்த ஜெயராஜா ஜெயருபன், நடராஜா புஸ்பராஜா ஆகிய இளைஞர்களை விசாரணையின் பின்னர் விடுதலை செய்த கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசார் அவசரகாலச் சட்டத்தின்கீழ் பாதுகாப்புச் செயளாளரின் தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்று தாயையும் மகளையும் தடுத்துவைத்து நீண்ட விசாரணைகளை நடாத்தி பல வாக்கு மூலங்களையும் பெற்றிருந்தனர். தற்கொலை செய்து கொண்டதாக பொலிசாரால் சொல்லப்பட்ட சயந்தனின் உடல் மரண விசாரணையின்

பின்னர் களுபோவில வைத்தியசாலை பிரேத அறைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க முக்கியமான விடயம் யாதெனில் இறந்தவரின் உடலை யாரும் உரிமை கோராத காரணத்தினாலும் அரச செலவில் அடக்கம் செய்யப்படாத காரணத்தாலும் தொடர்ந்தும் இறந்த உடல் களுபோவில வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

## அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல்

சயந்தனின் தாயார், சகோதரி இருவருக்கும் எதிராக சயந்தன் நான்கு தற்கொலை அங்கியைகளையும் வெடி பொருட்களையும் வீட்டில் வைத்திருந்தமைக்கு உதவி ஒத்தாசை புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தாயையும் மகளையும் கைது செய்து தடுத்து வைத்துள்ளமை சட்ட முறையற்றதென இவர்கள் சார்பில் உயர் நீதிமன்றில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் 2008.10. 16ஆம் திகதி அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படடது.

இந்த மனுக்கள் 2009.02.02ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது பொலிசாரினால் நடாத்தப்பட்ட புலன்விசாரணைகள் முடிவடைந்துவிட்டதாகவும் எனவே மனுதாரர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதா? அல்லது விடுதலை செய்வதா? என்பதை அடுத்த தவணையன்று தீர்மானிப்பதாக அரச சட்டத்தரணி நீதிமன்றிற்கு தெரிவித்திருந்தார்.

2010ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29ஆம் திகதி இந்த மனு மீண்டும் விசாரணைக்காக வந்த வேளையில் மனுதாரர்களை விடுவிக்க சட்டமா அதிபர் ஏற்கனவே தீர்மானித்துள்ளதாக அரச சட்டத்தரணி நீதிமன்றுக்கு தெரிவித்திருந்த போதிலும் மனுதாரர்களான தாய்க்கும் மகளுக்கும் எதிராக வழக்குத் தொடுக்க தற்பொழுது சான்றுகள் கிடைக்கப்பெற்றிருப்பதால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் மனுதாரர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளதாக உயர்நீதிமன்றிற்கு அரசதரப்பால் தெரிவிக்கப்பட்டது.

## மேல் நீதிமன்றில் குற்றப்பகர்வுகள் தாக்கல்

2008ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதிக்கும் 2009ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் சயந்தனின் உடமையிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெடி பொருட்களை பொலிசார் கைப்பற்றியதாகவும் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்றனர் அல்லது ஆயத்தமாகின்றனர் அல்லது புரிந்துள்ளனர் எனத் தெரிந்திருந்தும் அல்லது நம்புவதற்கான நியாயமான காரணங்கள் இருந்தும் அதனை பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கத் தவறியதன் மூலம் குறித்த சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளதாக குற்றப்பகர்வில் குறிப்பிட்டு 2010.07.30 ஜெகசோதி தாமோதரம்பிள்ளை சுதர்சினி தாமோதரம்பிள்ளை ஆகிய தாய்க்கும் மகளுக்கும் எதிராக சட்டமா அதிபரினால் தனித்தனியாக இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

## வழக்கின் சான்றுப் பொருட்கள்

தனித்தனியாக தாய்க்கும் மகளுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த குற்றச்சாட்டுப் பத்திரங்களிலும் வழக்குத் தொடுனரால் அதாவது சட்ட மா அதிபரினால் வழக்கின் சான்றுப் பொருட்களாக நான்கு தற்கொலைப்படை அங்கிகள் (Suicide Jacket) உட்பட 21 சான்றுப் பொருட்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தன

1) வி.ஜே.எஸ்.001 உடைய சிவப்பு நிற சீ4, 10கிலோகிராம் நிறையுடைய தற்கொலைப்படை அங்கியொன்று
2) எஸ்.இ.ஆர்.இ ஜே,005 எம்.சி. 4,21கிலோ கிராம் எடையுடைய சாம்பல்நிற தற்கொலைப்படை அங்கியொன்று
3) வி.ஜே.எஸ்.002 முழுமையாக்கப்பட்ட வெடிப்பொறி முறை, கறுப்பு மற்றும் சாம்பல் நிற வெடிப்பொருட்கள் அடங்கிய தற் கொலைப்படை அங்கியொன்று.
4) வி.ஜே.பி. 001 முழுமையாக்கப்பட்ட வெடிப்பொறி முறை, கறுப்பு மற்றும் சாம்பல் நிற வெடிப்பொருட்கள் அடங்கிய தற்கொலைப்படை அங்கியொன்று.
5) மைக்ரோ வகை(*Micro*) பிஸ்டல்(1) ரவைகள் 35
6) சீ4 எம்.சி.370 கிலோ கிராம் 1.5 அடங்கிய பார்சலொன்று
7) 9 வெட் உடைய எனஜிசர் வகை பற்றரிகள் மூன்று.
8) மின்சார டெடனேடர் நான்கு.
9) எம்.ஆர். 3062-31 நேர கட்டுப்பாடுடைய தொலை இயக்கக் கருவியொன்று.
10) எம் டி. 3062-31 தொலை இயக்கக் கருவியொன்று.
11) எம். டி. 2044 தொலை இயக்கக் கருவியொன்று.
12) எம்.ஆர்.2044 நேர கட்டுப்பாடுடைய தொலை இயக்க கருவி ஒன்று.
13) பி.டி.1824 நேர கட்டுப்பாடுடைய வெடிப்பொறி நீல நிறக் கருவி ஒன்று.
14) பி ஆர். 1824 உடைய நேரக் கட்டுப்பாடுடைய வெடிப் பொறிகொண்ட நீல நிற கருவி ஒன்று.
15) பி.டி. 3026 நேரக் கட்டுப்பாடுடைய நீல நிற கருவி. ஒன்று
16) குண்டு தயாரிப்பதற்காக பயன்படும் வெடிப்பொறி முறை 06 வயர்கள் மற்றும்வேறு பொருட்கள் அடங்கிய பொதியொன்று.
17) கிராமின் ரக ஜி.பி.எஸ்.72 ரக ஜி.பி.எஸ்.ஒன்று
18) அதி தொழில் நுட்பம் வாய்ந்த எண்டனா பலகை அடங்கிய பொதியொன்று.
19) சினைத் வகை வில்லைகள் மற்றும்
20) 12 சாவிகள் அடங்கிய வீட்டு சாவிக்கொத்து
21) வீட்டின் பிரதான வாயிலின் சாவியொன்று

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5ஆம் பிரிவைப் பற்றிப் பார்க்குமிடத்து இந்தப் பிரிவின்படி எவராயினும் அரசுக்கு எதிரான குற்றத்தைப் புரிவதற்கு எத்தனிக்கிறார் அல்லது ஆயத்தமாகின்றனர் அல்லது புரிந்துள்ளனர், பற்றிய தகவல்கள் தெரிந்திருந்தால், அவரது நடவடிக்கைகளை அறிந்திருந்தால் அதுபற்றி பொலிசாருக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்கத் தவறும் பட்சத்தில் அந்நபர் குற்றவாளியென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் வேளையில் இந்தப்பிரிவின் கீழ் ஆகக் கூடியதாக 7 வருடங்களுக்கு மேற்படாமல் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட சட்டத்தில் இடமுண்டு.

5ஆம்பிரிவின் முக்கிய அம்சம் யாதெனில் எவராவது நபர் அல்லது நபர்கள் அரசிற்கு எதிரான குற்றம் குற்றம் புரிந்தால் அவ்வாறு குற்றம் புரிந்தவரின் நடத்தையைத் தெரிந்துகொண்டு நமக்கேன் வீண்வம்பு என்றிருந்தால் பொலிசாருக்கு தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்துக்கு ஆளாக்கப்படுகிறார். இதன்படி நாமுண்டு நம் வேலையுண்டு என்று இருக்க முடியாது இது தான் பயங்கரவாத சட்டம் ("Ommission become an offence" )

தகவல் கொடுக்காமைக்கான 5ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் கூடியது 7 வருடமெனவும் குறைந்த தண்டனையைத் தீர்மானிக்கும் அதிகாரம் நீதிபதிக்குண்டு. பிரிவு 5இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்குகளில் குற்றத்தை ஒப்புக்கொள்பவர்களுக்கு ஆகக் குறைந்தது நீதிமன்றம் கலையும் வரை தண்டனை விதிக்கப்பட்டது அல்லது 3 மாதம் அல்லது 6 மாதம் 1 வருடமென தண்டணை விதிக்கப்பட்டது. 7 வருடங்களுக்கு உட்பட்ட காலத்திற்குள் ஒத்திவைக்கப்பட்ட தண்டனையோ அல்லது சிறைத் தண்டனையையோ வழங்கப்பட்டது. சட்டத்தில் வரையப்பட்டுள்ள சலுகைகள் சட்டரீதியாக குற்றம் சாட்டப்பட்ட அரசியல் கைதிகளுக்கு குற்றத்தின் தன்மையைப் பொறுத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் தண்டணை காலத்தை தீர்மானிக்கின்றனர் தகவல் கொடுக்கத்தவறிய விடயம் பாரதூரமானதெனில் (தற்கொலை குண்டுதாரியைப் பற்றித் தெரிந்து கொண்டு பொலிசாருக்கு தகவல் கொடுக்காமை, வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வெளியே உள்ள மாகாணங்களில் தற்கொலைப்படை அங்கிகள், வெடிப்பதார்த்தங்கள், வெடி குண்டுகள் விசேடமாக கொழும்பில் கைப்பற்றப்படும் பொழுது) தண்டணைக் காலம் குறைந்தது மூன்றிலிருந்து ஐந்து வருடங்கள்வரை வழங்கப்பட்டுள்ளன.

## ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டணை

யுத்தம் நடைபெற்ற காலங்களில் மேல்நீதிமன்ற நீதிபதிகள் குற்றத்தை ஒத்துக்கொண்ட அரசியல் கைதிகளுக்கு (பாரதூரமான குற்றங்களைத் தவிர) அதிகமான வழக்குக்களில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைதான் விதித்திருந்தனர். ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் அதிகமான வழக்குகளில் சிறிது காலம் என்றாலும் 12மாதத்திலிருந்து 24 மாதம் வரை சிறைத்தண்டனைதான் அதிகமாக விதிக்கப்படுகிறது சில வழக்குக்களில் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுகின்றனர். முன்னாள் சட்டமா அதிபரான திலக் மாரபன அவர்கள் மேல் நீதிமன்றத்தில் தான் ஆஜராகும் வழக்கொன்றிற்கு வந்திருந்த வேளையில் அவருடன் உரையாடுகையில் நான் அவரிடம் நீங்கள் சட்டமா அதிபராகக் கடமையாற்றுகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 5ஆம் பிரிவில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பயங்கரவாத

தடைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்க நீதிமன்றிற்கு அதிகாரம் இல்லாத போதும் நீதிமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்கியது யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச சட்டத்தரணிகள் எந்தவிதமான ஆட்சேபனைகளையும் முன்வைக்கவில்லை. யுத்தமும் முடிந்துவிட்டது அமைதி திரும்பிவிட்டதென கூறப்படுகின்ற போதிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் குற்றவாளியாக் காணப்படுபவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை பயங்கரவாத தடைச் சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ் வழங்க நீதிமன்றிற்கு அதிகாரம் இல்லை என்ற ஆட்சேபனையை தற்பொழுது அரச சட்டத்தரணிகள் முன்வைப்பதனால் சிறிய காலம் என்றாலும் சிறைத்தண்டனையையே நீதிமன்றங்கள் வழங்குகின்றன என வினவியபோது முன்னால் சட்டமா அதிபர் என்னிடம் “சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள சட்டரீதியான கடமையிலிருந்து விலகிச்செல்வது அல்லது அதனை தவிர்ப்பது குற்றம் என பயங்கரவாத தடைச்சட்டத்தில் 5ஆம் பிரிவு பொருள்படுகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தில் 5ஆம் பிரிவு உள்வாங்கப்பட்டதின் நோக்கம் அரசுக்கு எதிராக செயல்படுபவர்களைப் பற்றிய தகவல்களை தெரிந்திருந்தால் அவற்றை பொலிசாருக்கு வழங்காமை சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றமாகும். எனினும் அக்குற்றத்தைப் புரிந்தவர்களை சிறைத்தண்டனை வழங்கித் தண்டிப்பதல்ல இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை குற்றம் புரிந்தவர்களுக்கு வழங்குவதே அதன் நோக்கமாகுமாகும் அதனால்தான் நீதிபதிக்கு ஆகக் குறைந்த தண்டணையை தீர்மானிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட அந்தத் தாயார் என்னிடம் கேட்ட முதல் கேள்வி நாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை எனது மகனின் இறுதிக்கடனை செய்து முடிக்கவேண்டியுள்ளது எப்பொழுது விடுதலையாவோம்? மிக விரைவாக எப்பிடியும் கெதியாக எங்களுக்கு விடுதலை வாங்கித்தாருங்கள் என்றனர். அந்தத் தாயாரையும் சகோதரியையும் ஒரளவுக்கு என்னால் முடிந்தளவு சில ஆறுதல் படுத்தும் வார்த்தைகளைக் கூறிவிட்டு உங்களை உடனடியாக விடுதலை செய்யக்கூடிய சாத்தியமில்லை. ஆகையால் யாராவது உங்கள் மகனின் உடலைப் பாரமெடுக்க வந்தால் நீதிமன்றத்தின் மூலம் உடலைப் பாரமெடுத்து இறுதிக்கிரியைகளைச் செய்யமுடியும். இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள உங்களுக்கு நீதிமன்றத்தினால் அனுமதி பெற்றுத் தரமுடியுமென கூறினேன்.

ஆனால் எந்த உறவினரும் இறந்த உடலைப் பாரமெடுக்க வரவில்லை. நியாயமான பயமே அதற்குக் காரணமாக அமைந்தது. தாய்க்கும் மகளுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த இரண்டு வழக்குகளும் 2011ஆம் ஆண்டு தை மாதம் 12ஆம் திகதி மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப் பட்ட வேளையில் எதிரிகளை நோக்கி நோக்கி நீதிமன்றத்தால் கேட்கப்பட்ட கேள்வி “சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்கு நீர் குற்றவாளியா? அல்லது சுற்றவாளியா? இந்தக் கேள்வி வழக்கின் எதிரிகளாக குறிப்பிடப்பட்டிருந்த சுழ்நிலைக் கைதிகளான தாயிடமும் மகளிடமும் முறையே கேட்கப்பட்டது”

## நாங்கள் சுற்றவாளிகள்

இருவரும் தாங்கள் சுற்றவாளிகள் என்றதையடுத்து நீதிமன்றம் வழக்குகளின் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தது. இந்தச் சட்டங்களின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் நீதிபதிகளுக்கு இல்லாமையினாலும் வழக்கு விசாரணை மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டாலும் வருடக்கணக்கில் வழக்கு விசாரணை முடிவடையாமல் பல காரணங்களால் நீண்டகாலம் விசாரணை இழுத்தடிக்கப்படுவதனாலும் சில வேளைகளில் வழக்கின் தன்யைமைப் பொறுத்து குற்றம் புரிந்திருந்தாலும் குற்றம் புரியவில்லையென்றாலும் 5ஆம் பிரிவுக்குட்பட்ட வழக்காயின் குற்றத்தைத் ஒத்துக்கொண்டு சிறிய தண்டனையைப் பெற்று சிறையில் இருந்து வெளியேறுவது மிக யதார்த்தமாகக் காணப்பட்டது இப்போதும் காணப்படுகின்றது.

ஆனால் இதற்கு விதிவிலக்கானவர்களும் நேர்மைக்காக உண்மைக்காக தாங்கள் எவ்வளவு காலம் சிறையில் வாடினாலும் பரவாயில்லை தனது மகனின் இறந்த உடல் அடக்கம் செய்யப்படாமல் தொடாந்து கலுபோவில அரச வைத்தியசாலை பிண அறையில் வைக்கப்பட்டிருந்தாலும் பரவாயில்லை செய்யாத குற்றத்துக்காக தங்கள்மீது சாட்டப்பட்ட குற்றத்தை ஒத்துக்கொண்டு சிறையிலிருந்து வெளியே வந்து என் மகனின் இறுதிக்கிரிகையை செய்வதைவிட எத்தனை வருடங்கள் சிறையில் நானும் என் மகளும் அடைபட்டுக்கிடந்தாலும் அதனைப்பற்றி நாங்கள் கவலைப்படப் போவதில்லை எங்களுக்கு நியாயம் கிடைக்க வேணடும். நாங்கள் எந்தக் குற்றமும் புரியவில்லை. புரியாத குற்றத்திற்காக நீங்கள் வழக்கை வாதாடுங்கள் வழக்கில் நாங்கள் குற்றமற்றவர்கள் என்று இந்த நீதிமன்றம் எங்களை என்று விடுதலை செய்கின்றதோ அன்றும் எனது மகனின் இறந்த உடல் அடக்கம் செய்யப்படாமல் இருந்தால் நான் எனது மகனின் இறுதிக்கிரியைகளை செய்து முடிப்பேன் என்று அந்த தமிழ்த் தாயும் மகளும் கூறிய வார்த்தைகள் உண்மையில்பாற்பட்டு உறுதியாய் வெளிப்பட்டன.

முப்பது மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் தாயினது உறுதி தளர்ந்தது. தனது மகளின் எதிர்காலத்துக்காகவேனும் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக மன்றில் ஏற்றுக்கொள்ள அவர் தயாராக இருந்தார். மேல் நீதிமன்ற விசாரணை ஆரம்பிக்கப்படாததால் விரத்தியின் உச்சத்திற்கு சென்ற தாயும் மகளும் 2011.10.20ஆம் திகதி தாங்கள் எந்தக்குற்றமும் செய்யாத போதிலும் தங்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு குற்றத்தை ஒத்துக்கொண்டு குறுகியகாலத் தண்டணையை அனுபவித்து சிறையைவிட்டு விடுதலையாகிச் செல்லத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. அன்றைய தினமே குற்றச்சாட்டுப்பத்திரங்கள் இந்த வழக்கில் எதிரிகளாகக் பெயர் குறிப்பிடப்பட்ட தாயையும் மகளையும் நோக்கி நீதிமன்றத்தினால் அவர்களால் புரியப்பட்டதாக குற்றச்சாட்டுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களுககு நீர் குற்றவாளியா? அல்லது சுற்றவாளியா? இந்தக் கேள்வி வழக்கின் எதிரிகளாக குறிப்பிடப்பட்டிருந்த சுழ்நிலைக் கைதிகளான மகளிடமும் தாயிடமும் முறையே கேட்கப்பட்டது.

குற்றச்சாட்டுக்களை தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் தாயும் மகளும் ஒத்துக்கொண்டதை அடுத்து தண்டணைக் காலத்தை குறைப்பதற்கு எதிரியின் சார்பில் நான் நீதிமன்றில் எனது சமர்ப்பணத்தில்

> "இந்த வழக்கின் எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இந்தத் தாயையும் மகளையும் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்து குற்றத்தடுப்புப் பிரிவில் விசாரணைக்காக தடுத்து வைத்திருந்த காலகட்டத்தில் இருவரிடமும் தலா மூன்று வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். ஆனால் ஒரு வாக்கு மூலத்திலும் இங்கே வழக்கின் தடயப்பொருட்களாக நீதிமன்றிக்கு கொண்டுவரப்பட்டுள்ள வெடிப் பதார்த்தம் அடங்கிய நான்கு தற்கொலைப்படை அங்கிகளைப் பற்றியோ மற்றைய வெடிப்பொருட்களைப் பற்றியோ தங்களுக்குத் எதுவுமே தெரியாதது மட்டுமின்றி தாம் இந்த வெடிப்பொருட்களை அறிந்திருக்கவும் இல்லையென தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்"

37வது ஒழுங்கையில் இலக்கம் 55 7/1 மாடி வீட்டை சோதனையிடும் பொழுது மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களை தாங்கள் கைப்பற்றியதன் பின்னரே மாடி வீட்டிலிருந்து மாணவன் சயந்தன் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிசார் கூறுகின்றனர். ஆனால் வீட்டுக்குள் வந்த பொலிசார் முதலில் மகனை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததாக இறந்தவரின் தாயாரான இந்த வழக்கின் முதலாம் எதிரி ஜெகசோதி தாமோதரம்பிள்ளை கூறியுள்ளார். எனவே சயந்தன்- என்ற மாணவனது மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்குக்களில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பிரதான சான்றாக இணைக்கப்படுவது மிகவும் வழமையானதாகும் ஆனால் விசாரணைக் காலத்தில் சந்தேக நபர்களாகயிருந்த இந்தத் தாயிடமும் மகளிடமுமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறவுமில்லை இவ்இருவரும் பொலிசாருக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கவும் இல்லை.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாரினால் மட்டுமின்றி பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸார், குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் என பலகோணங்களில் விசாரணை நடாத்தப்பட்ட போதிலும் குற்றப்பகர்வில் அரச சாட்சியாகக் பெயர் குறிப்பிட்டிருக்கும் (சான்றுப் பொருட்களை கைப்பற்றியதாகக் கூறுகின்ற) பொலிஸ் உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு எந்தச்சாட்சிகளும் குற்றப்பகர்வில் உள்வாங்கப்படவில்லை. மேலும் சட்டமா அதிபரினால் வழக்கின் சான்றுப் பொருட்களாக நான்கு தற்கொலைப்படை அங்கிகள் (Suicide Jacket) உட்பட 21 சான்றுப் பொருட்கள் பெயர் குறிப்பிடப்பட்டு இந்த நீதிமன்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பொலிஸார் தமது விசாரணை அறிக்கைகளிலும் தமது பதிவுகளிலும் வாக்குமூலங்களிலும் இந்தச் சான்றுப் பொருட்களை தற்கொலை செய்து கொண்ட சயந்தனின் அறையிலிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறியிருந்தனர். நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள வழக்கின் சான்றுப் பொருட்களை 10 அடி நீளமும் 10அடி அகலமும் கொண்ட அறையில் மறைத்து வைப்பது சாத்தியமா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது துாரதிஸ்டவசமான தவிர்க்க

முடியாத சூழ்நிலையில் குற்றச்சாட்டுக்களை ஒத்துக்கொள்வதால் பொலிசார் நடாத்திய விசாரணைகளைப் பற்றியோ அல்லது உண்மையில் என்ன நடந்தது என்பதைப் பற்றியோ இந்த நீதிமன்றில் எடுத்துரைப்பதற்கு சட்டம் அனுமதியளிக்காத காரணத்தினால் அவற்றைத் தவிர்த்துக் கொள்கின்றேன்.

இந்த வழக்கின் எதிரிகளாகக் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் தாயும் மகளும் பொலிசாருக்கு இறந்த மகனின் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களை வழங்கத் தவறியுள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் மட்டுமே இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. பிணை வழங்கும் அதிகாரம் மேல் நீதிமன்றிற்கு இருந்திருந்தால் குற்றச் சாட்டுக்களை ஒத்துக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது பிணை வழங்கும் அதிகாரம் இல்லாத காரணத்தினால் குற்றச் சாட்டுக்களை ஒத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகியது."

எனவே எதிரிகள் சார்பாக மனிதாபிமான அடிப்படையில் நீதிமன்றில் முன்வைத்த விடயங்களை கருத்தில் கொண்டு நியாயமான தண்டனையை வழங்கும்படி வேண்டிக்கொண்டேன்

அரச சட்டத்தரணி தமது சமர்ப்பணத்தில் கூறியது யாதெனில் இந்த வழக்கின் எதிரிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5ஆம் பரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ள போதிலும் அந்தக் குற்றங்கள் மிகவும் பாரதூரமான குற்றங்களாகும் பயங்கரமான குண்டுத் தாக்குதல்களை கொழும்பில் நடாத்தும் நோக்கத்துடனேயே வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட நான்கு தற்கொலைப்படை அங்கிகளையும் (Suicide Jacket) வெடிப்பொருட்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

தற்கொலைப்படை அங்கிகளையும் (Suicide Jacket) வெடிப்பொருட்களையும் பொலிசார் எதிரிகள் வசித்த தொடர் மாடி வீட்டிலிருந்தே கைப்பற்றியுள்ளனர். பொலிசார் கைப்பற்றியதன் பின்னரே பொருட்களை மறைத்து வைத்திருந்த நபர் மாடி வீட்டிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார் இந்தத் தற்கொலை அங்கிகளும் வெடிபொருட்களும் பாவிக்கப்பட்டிருந்தால் பல உயிர்ச்சேதங்களும் பொருட்சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம்.

குற்றங்களின் தன்மையைப் பொறுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் ஏழு வருடங்களுக்கு மேற்படாத தண்டனை வழங்க நீதிமன்றிற்கு அதிகாரம் உண்டெனவும் இந்த இரண்டு எதிரிகளும் பொலிசாருக்கு தகவல் கொடுக்கத் தவறிய விடயம் பாரதூரமானதெனவும் என்பதனை கவனத்தில் எடுத்து தண்டனை வழங்குமாறு அரச சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில் நீதிமன்றத்தை வேண்டிக் கொண்டார்

இரண்டு பக்க சமர்ப்பணங்களைச் செவிமடுத்த நீதிபதி சுனில் ராஜபக்ஸ மகளுக்கு 15 மாதத் தண்டனையும் தாயாரின் வயதைக் கவனத்தில் கொண்டு 12 மாதத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார் தீர்ப்பு வாசிக்கப்பட்ட பின்னர் நீதிபதி தாயையும் மகளையும் நோக்கி உங்கள் சட்டத்தரணியும் அரச தரப்பு சட்டத்தரணியும் நீதி மன்றுக்கு எடுத்துரைத்த

விடயங்களை கவனத்தில் எடுத்து மிகக் குறைவான தண்டனையையே வழங்கியுள்ளேன் சிறைச்சாலையில் நன்னடத்தைகான காலம் கழிக்கப்படும் பொழுது சிறிய காலத்தில் நீங்கள் விடுதலையாகி விடுவீர்கள் என கூறினார்.

இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய சுனில் ராஜபக்ஷ 2000ம் ஆண்டு முதல் கடந்த 12வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகால ஒழுங்கு விதிகள் ஆகிய சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குக்களை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளார். தற்கொலைப்படை அங்கிகள் (Suicide Jacket) வெடிப்பொருட்கள் என்பனவற்றை உடமையில் வைத்திருந்தமை பற்றிய தகவலை தெரிந்து கொண்டு அல்லது அறிந்து கொண்டு பொலிசாருக்குத் தகவல் வழங்காத குற்றத்திற்கு இந்த வழக்கிலேயே ஆகக் குறைந்த தண்டணை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வருட தண்டணை வழங்கப்பட்ட தாயார் தண்டணைக் காலம் நன்நடத்தை காரணமாக குறைக்கப்பட்டதையடுத்து 2012ஆம் ஆண்டு ஆனி மாதமும் மகளின் தண்டணை காலம் நன்நடத்தை காரணமாக குறைக்கப்பட்டதையடுத்து 2012ஆம் ஆண்டு ஐப்பசி மாதமும் விடுதலையாகினர். ஆயிரம் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என சட்டம் சாத்தான் வேதம் ஓதுவதைப் போல் பிரகடனப்படுத்திக்கொண்டே இருக்க, இங்கே நிரபராதிகள் சூழ்நிலையின் காரணமாக தண்டிக்கப்பட்டு விட்டார்கள்.

# சுவிஸ் கருணாகரன் விடுதலை

2010–2013

34

**விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதி உதவி அளித்ததாக இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் நிரபராதி என நீதிமன்றம் விடுதலை செய்த முதல் வழக்கு இந்த வழக்காகும்**

2007ஆம் ஆண்டு தை மாதத்திற்கும் மார்கழி மாதத்திற்கும் உட்பட்ட காலப்பகுதியில் அரச விரோத தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு 228 மில்லியன் ரூபா நிதி உதவி பெற்றுக் கொடுத்து புலிகளுக்கு நிதி உதவி வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரசதரப்பு சாட்சியங்களையும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையும் நிராகரித்த மேல் நீதி மன்ற நீதிபதி லலித் ஜயசூரிய சுவிஸ் பிரஜையும் பேர்ன் மாநிலத்தில் 'தாய் வீடு' பணமாற்று நிறுவனத்தின் உரிமையாளருமான நடராஜா கருணாகரனை விடுதலை செய்தார்.

நடராஜா கருணாகரன் இலங்கை வங்கியுடன் பணமாற்று வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட, இலங்கை வங்கியின் வேண்டுகோளையடுத்து, இலங்கை வந்து இன்டர் கொண்டினல் ஹோட்டலில் தங்கியிருக்கையில் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

## அடிப்படை மனித உரிமை மீறல் மனு

பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட கருணாகரன் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியின் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பொலிசார் விசாரணை மேற்கொண்ட நிலையில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, நடராஜா



கருணாகரனின் கைதும் தடுப்புக் காவலும் சட்டரீதியற்றதென உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்தார்.

## குற்றச் சாட்டுப் பத்திரம் தாக்கல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் தண்டனை வழங்கக் கூடிய 2(1) (ஏ) பிரிவின் கீழ் 2013ஆம் ஆண்டு தை மாதம் 11ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் நடராஜா கருணாகரனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

## நீதிபதியின் கட்டளை

2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் 29ம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் நடராசா கருணாகரன் சுயவிருப்பத்தில் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகாவுக்கு வழங்கியதாக அரசு தரப்பினால் முன் வைக்கப்பட்ட முக்கிய சான்றான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டதா? அல்லது பொலிஸ் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தடுப்புக் காவல் கைதியான நடராசா கருணாகரனின் சுயவிருப்பமின்றி பதியப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமா? என்பதற்கான உண்மை விளம்பல் விசாரணையில் கட்டளை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி தனது கட்டளையில், சட்டமா அதிபரினால் அரச சாட்சிகளாக நடராசா கருணாகரனிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்ற பொலிஸ் அதிகாரி ஜகத் பொன்சேகா குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மொழி பெயர்த்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் சியாப்டீன் பொலிஸ் தட்டெழுத்தாளர் லலிதா ஆகியோர்

சாட்சியமளித்தனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகா இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி சுயவிருப்பத்தில் தனக்கு வழங்கியதாக சாட்சியமளித்துள்ள போதிலும் எதிரி தரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையில் பொலிஸ் அத்தியட்சகரின் சாட்சியத்தில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றது.

மேலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படுவதற்கு முன்னர் எதிராளி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸ் அத்தியட்சகரான தனக்கு வழங்குவதால் அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிரான சான்றாக பாவிக்கப்படலாம் என்பதையோ அல்லது சட்டரீதியாக எதிரி குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்க வேண்டிய கடப்பாடு எதிரிக்கு இல்லையென்பதையோ பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகா குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு முன்னர் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்க வருபவருக்கு அவ்வாறு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கினால் ஏற்படும் சட்ட விளைவுகளைதான் விளங்கப்படுத்தவில்லை என்பதை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குறுக்கு விசாரணையில் ஏற்றுக்கொண்டுள்ளார் மேலும்

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படுவதற்கு முன்னரும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்பட்ட பின்னரும் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் சியாப்டீன் எதிரி தமிழில் கூறியதை சிங்களத்தில் பொலிஸ் அத்தியட்சகருக்குச் மொழி பெயர்த்ததில் பல குறைபாடுகள் காணப்படுகின்றது. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்பட்ட பின்னர் பதிவின் இறுதியில் மொழி பெயர்பாளர் சியாப்டீன் மொழி பெயர்த்ததாக உறுதிப்படுத்தி கையொப்பம் இடவில்லை என்பதையும் எதிரி தரப்பு சட்டத்தரணி குறுக்கு விசாரணையில் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன் கையெழுத்திட்டு ஒப்புறுதிப்படுத்தாத ஆவணம் சட்டவலுவற்ற ஆவணமாகும் மேலும் 15 வருடங்கள் பயங்கரவாதத் தடைப் பிரிவில் கடமையாற்றி 50 மேற்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களுக்கு மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றிய மொழிபெயர்ப்பாளர் சியாப்டீன் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மொழி பெயர்த்ததாக ஒப்புறுதிப்படுத்தி கையொப்பம் இடாமை சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்யும் பொழுது தட்டெழுத்தாளரான கடமையாற்றிய லலிதா குறுக்கு விசாரணையில் பொலிஸ் அத்தியட்சகர் கூறியவற்றை தான் தட்டெழுத்து செய்ததாக சாட்சியம் அளித்துள்ளாரேயன்றி எதிரி பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கிய வாக்குமூலத்தை தான் தட்டெழுத்து செய்ததாக சாட்சியத்தில் கூறவில்லை, சட்டரீதியாக இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதியப்படவில்லை என்பது தெளிவாகின்றது எதிரியின் சட்டத்தரணியால் இந் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட *Mariadas Vs The State (1995) 1SLR96* மரியதாஸ் எதிர் அரசு வழக்கின் தீர்ப்பினை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்வதுடன் உண்மை விளம்பல் விசாரணையில் அரச தரப்பு சாட்சிகளது சாட்சியங்கள் நம்பகத்தன்மையில் நியாயமான சந்தேகங்கள் எழுகின்றமையால் இந்த வழக்கின் அரசதரப்பு சாட்சியமாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இந்த நீதிமன்றம் நிராகரிப்பதாக கட்டளையிட்டார்.

## கருணாகரன் விடுதலை

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணையில் நீதிமன்றம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிப்பதாக கட்டளையிட்ட பின்னர் இந்த வழக்கின் விளக்கத்தை தொடர்ந்து நடாத்த எதிரிக்கு எதிராக வேறு சாட்சியங்கள் உள்ளதெனில் அரச தரப்பு சாட்சியங்களை அழைக்கலாம் என மேல் நீதிமன்ற நீதிபதி அரச சட்டத்தரணியை நோக்கி கூறிய பொழுது அரச சட்டத்தரணி இந்த வழக்கின் எதிரியாகிய நடராஜா கருணாகரனுக்கு எதிராக தொடர்ந்து வழக்கை கொண்டு நடாத்த வேறு சாட்சியங்களோ சான்றுகளோ இல்லையென நீதிமன்றுக்குத் தெரிவித்ததையடுத்து நடராஜா கருணாகரனை விடுதலை செய்வதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# வேலமாலிதனும் லட்சுமி காந்தனும் கைதும் விடுதலையும்

2013

35

**தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட ஒழுங்கமைப்பாளரான வேலமாலிதன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் செயலாளர் பொன்னம்பலம் லட்சுமி காந்தன் கைதும் விடுதலையும்.**

2013.01.12ஆம் திகதி அன்று பகல் 2.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனின் கிளிநொச்சி மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் காரியாலத்துக்கு பிற்பகல் 2.30 மணியளவில் மூன்று வாகனங்களில் சிவில் உடையில் வந்த சுமார் 20 பொலிசார் அலுவலகத்தின் உள்ளே வந்ததும் வேலமாலிதன் என்பவர் இங்கே உள்ளாரா என விசாரித்த போது வேலமாலிதன் தன்னை அடையாளப்படுத்தியதும் அவரையும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் பொன்னம்பலம் லட்சுமி காந்தனையும் கைது செய்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் தாங்கள் வந்த மூன்று வாகனங்களில் ஒன்றில் ஏற்றி காத்திருக்குமாறு இருவரையும் பணித்த பின்னர், கிளிநொச்சி மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் காரியாலத்துக்குள் மீண்டும் சென்று சில நிமிடங்களில் வருகை தந்த பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் வேலமாலிதனையும் பொன்னம்பலம் லட்சுமி காந்தனையும் வெடிமருந்துகள் காரியாலயத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறி கைதுசெய்து பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கொழும்புத் தலைமையகத்துக்குக் கொண்டு வந்து பயங்கரவாத புலனாய்வு பிரிவு தலைமைக் காரியாலயத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றம் செய்தனர்

## மனித உரிமை வழக்கு தாக்கல்

அருணாசலம் வேலமாலிதனையும் பொன்னம்பலம் லட்சுமிகாந்தனையும் ஜனாதிபதியின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைத்து விசாரணைகளை பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் மேற்கொண்ட நிலையில் இருவரும் சட்டரீதியற்ற முறையில் கைது செய்து



தடுப்புக்காவல் உத்தரவைப் பெற்று தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்ய முடிவெடுக்கப்பட்டது.

## சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மனுதாரர்.

வேலமாலிதனும் லட்சுமி காந்தனும் காலி தடுப்புக்காவலில் பூசா தடுப்பு முகாமில தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் இருவரது பெயரிலும் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்ய அவர்களது கையெழுத்துக்களை பெறமுடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் வேண்டுகோளையடுத்து சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தானே மனுதாரராக இரண்டு கைதிகளினதும் சார்பில் சத்தியக்கடுதாசியில் தானே கையெழுத்திட்டு தனது பெயரில் இரண்டு அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் கௌரி சங்கரி இப்படித் தானே மனுதாரராக மாறிச் செயற்படுவார். தான் எடுத்துக்கொண்ட வழக்கை சிறப்பாகச் செவ்வனே செய்து முடிக்க வேண்டி அவர் எடுத்துக் கொள்ளும் சிரத்தைகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டு ஆச்சரியப்பட்டுமிருக்கின்றேன்.

இம்மனுவில் கோட்டபாய ராஜபக்ச - பாதுகாப்பு செயளாளர், சந்திரா வாகிஸ்ட - பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பயங்கரவாதத்தடைப் பிரிவு, என்.கே. இளங்கக்கோன் - பொலிஸ்மா அதிபர், கே.ஆர். பெரேரர் -பயங்கரவாதத்தடைப் பிரிவின் பொறுப்பதிகாரி, புசா தடுப்புமுகாம் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா இரண்டு அடிப்படை மனித உரிமை மனுக்களை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட ஒழுங்கமைப்பாளரான வேலமாலிதன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் செயலாளர் பொன்னம்பலம் லட்சுமி காந்தன் ஆகியோர் சார்பாக உயர் நீதிமன்றில் தனித்தனியாக் தாக்கல் செய்தார்.

## விசாரணை

பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் தடுத்து வைத்து நடாத்தப்பட்ட விசாரணைகளில் இந்த இரண்டு கைதிகளுக்கும் எதிராக எந்த வித சட்டரீதியற்ற செயல்பாட்டிற்கான சான்றுகளும் காணப்படாதவிடத்து பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தடுப்புப் காவல் உத்தரவை மீண்டும் மூன்று மாதங்களுக்கு நீடிக்காமல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அப்போது எனது வாதத்தில்

## தடுப்புக்காவல் சட்டரீதியற்றது

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்கையில் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் சான்றுகள் காணப்படின் அல்லது சான்றுகளை பெறுவதற்காக மேலதிக விசாரணைக்காக என காரணம் காட்டி தடுப்புக் காவல் உத்தரவை நீடித்து கைதிகளை சாட்சியம் கிடைக்கும்வரை தொடர்ந்து 18 மாதங்கள் தடுத்து வைப்பதே வழமையாகும். ஆனால், இந்த வழக்கில் இந்த இரண்டு கைதிகளையும் கைது செய்த பயங்கரவாதத்தடைப் பிரிவுப் பொலிசார் தடுப்புக் காவல் உத்தரவு முடிவடைந்த பின்னர் மேலும் முதல் மூன்று மாத தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்காமல் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளமை சட்டரீயற்ற தடுப்புக்காவலாகும். மேலும் தடுப்புக்காவல் உத்தரவை நீடிக்க விண்ணப்பிக்காத நிலையில் இந்தக் கைதிகளை நீதிமன்றின்முன் ஆஜர்படுத்தி விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்ற கட்டுப்பாட்டில் சிறையிலிடப் படவேண்டும் என்று உறுதியாக முன்வைத்தேன்.

## வெடிபொருட்கள் எங்கே?

பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் இந்த சந்தேக நபர்கள் வெடிமருந்துகளை தனி உடமையில் வைத்திருந்ததாவே விசாரணையின் முதல் அறிக்கையில் பதிவு செய்து இந்த நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர் மேலும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதிலும் கைப்பற்றப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வெடிபொருட்கள் இந்த நீதிமன்றுக்குக் கொண்டு வரப்படவுமில்லை, அரச பகுப்பாய்வாளர் திணைக்களகத்துக்கு நீதிமன்றால் அனுப்பப்படவுமில்லை, ஆகவே கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்திலிருந்து வெடிமருந்து, எவையும் கைப்பற்றப்படவில்லை வழக்கின் சான்றுப் பொருளென பொலிசாரினால் கூறப்படும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டிருந்தால் இந்த நீதிமன்றிற்கு கொண்டுவரப்பட்டு அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு நீதிமன்றத்தின் ஊடாக அனுப்பப்பட்டிருக்கும். சந்தேக நபர்களான இருவரையும் கைது செய்தமையும் தடுத்து வைக்கப்பட்டமையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மீதான தனிப்பட்ட குரோதத்தினாலே என்பது அரச தரப்பு தாக்கல் செய்துள்ள முதல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை ஒப்புறுதிப்படுத்த எந்தவிதமான சான்றுகளையும் மேலதிக அறிக்கைகளில் குறிப்பிடாமை வெளிப்படையாக தெரியப்படுத்துகின்றது.

## வேலமாலிதன். லட்சுமி காந்தன் விடுதலை

சட்டரீதியற்ற கைதும் தடுத்து வைத்தலுக்கும் எதிராக உயர் நீதிமன்றில் தனித்தனியாக இரண்டு அடிப்படை மனித உரிமை மனுக்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதனையும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து நீதிபதி பயங்கரவாத புலனாய்வு பிரிவுப் பொலிசாரிடம் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று நீதிமன்றுக்கு அறிவிக்கும்படி கட்டளையிட்டார்

பிரதான நீதவான் நீதிமன்றில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி சந்தேக நபர்களை விடுதலை செய்ய ஆட்சேபணை தெரிவிக்காமையடுத்து அருணாசலம் வேலமாலிதனையும் பொன்னம்பலம் லட்சுமி காந்தனையும் கைது செய்யப்பட்டு 13 மாதங்களின் பின்னர் கொழும்பு பிரதம நீதவான் விடுதலை செய்தார்.

இந்த வழக்கில் அருணாசலம் வேலமாலிதன் மற்றும் பொன்னம்பலம் லட்சுமி காந்தன் சார்பாக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு வந்தபொழுது சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் ஆஜரானார்

# பெண் கடற்புலிகளின் தலைவி பகிரதி விடுதலை

2015 – 2016

36

**(1) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 10 நாட்களில் பிணையில் விடுதலைசெய்யப்பட்டமுதல் அரசியல் கைதி.**

**(2) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட பகிரதி முருகேசுவின் ஒரே மகளான ஒன்பது வயதான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் நாட்டவராகையினால் தாயினதும் மகளினதும் விரைவான விடுதலை சாத்தியமானது.**

1998ம் பிரான்ஸ் நாட்டுக்கு சென்றிருந்த மீலா என்ற பகிரதி முருகேசு சுகவீனம் அடைந்திருந்த தனது தாயாரையும் உறவினர்களையும் பார்ப்பதற்காக இலங்கை வந்து சில வாரங்கள் தங்கி மீண்டும் பிரான்ஸ் செல்வதற்காக 2015.03.02 திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்குத் தனது ஒன்பது வயது மகளுடன் வந்த போது பயங்கரவாதத் தடைப்பரிவுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். தாயைப் பிரிய மறுத்த பிரான்ஸ் குடியுரிமையைக் கொண்ட பகிரதியின் ஒரே மகளான பார்கவியும் பயங்கரவாதத் தடைப் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை நடாத்தப்பட்ட பத்து நாட்களும் பகிரதி தனது தாயுடன் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்.

சந்தேக நபரான பகிரதி முருகேசுவுக்கு எதிராக விசாரணையை நடாத்திய பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிசார் சந்தேக நபரான பகிரதி முருகேசுவையும் அவரது மகளான பார்கவியையும் பத்து நாட்கள் தடுப்புக் காவலின் பின்னர் கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு அழைத்துவந்து விசாரணையின் முதல் அறிக்கையையும் தாக்கல் செய்தனர். அந்த அறிக்கையில் 1991ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் பயிற்சிகள் பெற்ற பின்னர் 1996ஆம் ஆண்டு கடற் புலிகள் பிரிவில் இணைவதற்கு முன்னர் நான்கு



ஆண்டுகள் அவர் ஒரு தொடர்பாடல் உத்தியோகத்தராகப் பணியாற்றிய சந்தேக நபரான பகிரதி முருகேசு சாம்ராஜ் என அழைக்கப்படும் சிவ சுப்பிரமணியம் ஜெயகணேசை விடுதலைப் புலிகள் அமைப்பின் சம்மதத்துடன் திருமணம் முடித்தார். திருமணத்தின் பின்னர் பகிரதி முருகேசுவும் அவரது கணவரும் விடுதலைப் புலிகளின் மேலதிகாரிகளின் ஆசீர்வாதத்தோடு அவ்வியக்கத்தின் சர்வதேச செயற்பாடுகளின் சர்வதேசப் பிரிவு இயக்குனர்களாக செயற்படுவதற்காக 2005ஆம் ஆண்டு பிரான்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சந்தேக நபரான பகிரதி பிரான்ஸ் நாட்டுக்கு குடிபெயர்வதற்கு முன்னர் கடற் புலிகளின் மகளிர் பிரிவின் ஒரு தலைவியாக பணியாற்றினார். என பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

## பிணை மனு

பகிரதி முருகேசு சார்பாக பிணை வழங்கும்படி நீதிமன்றுக்கு முன்வைக்கப்பட்ட எனது சமர்ப்பணத்தில் இந்த வழக்கின் சந்தேக நபரான பகிரதி முருகேசு 2005 ஆம் ஆண்டிலிருந்து பிரான்சில் வாழ்ந்து வருகிறார். தனது ஒன்பது வயது மகளுடன் 2015ம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் திகதி கிளிநொச்சியில் வசிக்கும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளியான தனது தாயைரைப் பார்வையிட்டு ஆறுதல் கூறுவதற்காவே இந்த நாட்டுக்கு வருகை தந்தார். கிளிநொச்சியில் தனது தாயார் வீட்டிலிருந்து புறப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் இரகசியப் பொலிசார் அவரை விசாரித்தனர் எனினும் அவரை கைது செய்வதற்கு அப்போது எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வழக்கில் சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் ஒன்பது வயதுடைய ஒரே மகளான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் பிரஜை, பிரெஞ் மொழியில் மட்டுமே தேர்ச்சியுடையவராகையால் இவ்விசாரணை காலத்தில் அவரது கல்வியை தொடர்தல், இருப்பிடம் தொடர்பில் பல விடயங்களைக் கவனத்திற் கொண்டு பிணை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு மட்டுமே உள்ளபடியால் சட்டமா அதிபர் திணைக்களம் நிபந்தனை அடிப்படையிலான பிணையில் சந்தேக நபரை விடுதலை செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து

கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆட்டிகல சந்தேக நபரான பகீரதி முருகேசுவை மூன்று நிபந்தனைகளுக்கமைய பிணை வழங்கினார்

(1) இரண்டு வாரங்களுக்கொருமுறை முப.9 மணிக்கும் நற்பகல் 12 மணிக்குமிடையில் ஒரு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகவேண்டும்,

(2) அவரது கடவுச்சீட்டு நீதிமன்றுக்கு கையளிக்க வேண்டும்

(3) ரூபா 200,000 ரொக்கப் பிணைவிதிக்கப்பட்டது. அதனை அவரது சகோதரர் செலுத்தினார்.

பிணை வழங்கப்பட்டு தாயும் மகளும் நீதிமன்றத்திலிருந்து வெளியேறும் பொழுது நீதிபதி, நீதிமன்ற பதிவாளர், வழக்குத் தொடர்வர்களான பொலிசார், வழக்கு விசாரணைக்கு வந்திருந்த வழக்காளிகள், சாட்சியமளிக்க நீதிமன்றம் வருகை தந்தவர்கள், பார்வையாளர்கள் அனைவரது உணர்வுபூர்வமான பார்வைகள் சிறுமி பார்கவி மீதே விழுந்தன.

இந்த வழக்கில் சந்தேக நபரான பகிரதி முருகேசுவுக்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டதையடுத்து தொடர்ந்து மேலதிக விசாரணை மேற்கொண்ட பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிசார் ஒவ்வொரு தவணையிலும் மேலதிக விசாரணை அறிக்கைகளைத் தாக்கல் செய்தனர். பகிரதி முருகேசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 10 நாட்களில் பிணையில் விடுதலை செய்யப்பட்ட முதல் அரசியல் கைதி.

## விசாரணை அறிக்கைகள்

சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ் என அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் ஜெயகணேஷ் தற்போது தமிழ் ஈழவிடுதலைப் புலிகளிகளுக்குச் சொந்தமாகவிருந்த உலகெங்குமுள்ள ஏறத்தாழ 200 சேவைநிலையங்களையும் தாய்லாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலுள்ள பல சிறப்பங்காடிகளையும் ஐவரிகோஸ்ட்டில் அமைந்துள்ள துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தி செய்யும் ஒருதொழிற்சாலையையும் முகாமைத்துவம் செய்வதாகவும் சாம்ராஜ் பிரான்சுக்குச் சென்றதன் நோக்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு வலையமைப்பொன்றை கட்டியெழுப்புவதாகும் என்று புலனாய்வு விசாரணையில் தெரியவந்ததாகவும் மேலும் சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ் காஸ்ட்ரோவின் ஒருநெருக்கமான உதவியாளராவார்.

“நிதியை தனியாகக் கையாள்வதில் காஸ்ட்ரோ கேபியை நம்பாததால் காஸ்ட்ரோவுக்கு அறிக்கையிடுவதற்காக சாம்ராஜ் அனுப்பி வைக்கப்பட்டதுடன் புலம் பெயர்ந்த தமிழர்களுடன் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் வெளிநாட்டு கிளைகளை நிருவகித்த நெடியவனோடு சாம்ராஜ் செயற்பட்டதாக அறிக்கையில் பதியப்பட்டதுடன் மேலும் அந்த மேலதிக அறிக்கையில் கூறப்பட்டதாவது

ஒஸ்லோவைத் தளமாகக் கொண்டு இயங்கிய நெடியவன் உலகெங்கும் பல்வேறு தீயவழிகளிலெல்லாம் நிதிதிரட்டியபோது, சாம்ராஜ் அயுதங்களை கொள்வனவுசெய்து அப்பணத்தைச் செலவிட்டதுடன் சாம்ராஜ் சர்வதேச ஆயுத வியாரிகளோடு தொடர்புகொண்டு செயற்பட்டு இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்காக ஆயுதங்களை கொள்வனவு செய்தார். அவரது பணிகளுள் மேலும் நிதிகளை உருவாக்கும் முகமாக வெளிநாடுகளில் பாதுகாப்பான இடங்களில் பணத்தை முதலீடு செய்வதும் சந்தேக நபரின் கணவரால் செயல்படுத்தப்பட்டதெனவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மேலும் அந்த அறிக்கையில். தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், சாம்ராஜினால் கையாளப்பட்ட நிதிகள் அவரிடமே இருந்தன, அதனைப் பெறுவதற்கு கேபி எனும் பத்மநாதன் அனுமதிக்கப்படவில்லை.

## புத்துயிரூட்டல்

2010ஆம் ஆண்டின் பின்னர் சாம்ராஜின் வகிபாகம் மாறியது தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு புத்துயிரளிப்பதற்காக அவர் நெடியவனோடு பணியாற்றத் தொடங்கினார். அவரது அண்மைக்கால செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் இளைஞர் நிகழ்வுகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் நிதியளிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்ட 2013 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, சாம்ராஜ் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகள் அணியினதும் பணத்தை சுத்தப்படுத்தல், ஆயுத மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் மனிதக் கடத்தல் போன்ற குற்றவியல் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள் மூலம் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதிசேகரிப்பதற்குப் பொறுப்பான அவ்வியக்கத்தின் குற்றவியல் சர்வதேச பிரிவினதும் ஓர் அங்கமாவார்.

இக்குழுவின் செயற்பாடுகள் 2010ம் ஆண்டு ஆரம்பத்தில் ஆரம்பித்தன. சாம்ராஜின் குழு உறுப்பினர்கள் இலங்கையில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கிய இராணுவ நடவடிக்கைகளின் இறுதிக் கட்டங்களில் தப்பியோடிய ஒரு சிரேஸ்ட புலனாய்வுப் பிரிவு உறுப்பினரான வினாயகம், அச்சுதன் மற்றும் சங்கர் ஆகியோராவார். எனக் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

## வழக்குத் தொடுக்க வேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும்

2015ம்ஆண்டு பங்குனி மாதம் 2ம் திகதி கட்டுநாயக விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகக் கொண்ட பகிரதி முருகேசு கொழும்பு நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டு 15 மாதங்கள் கடந்த நிலையில் சந்தேக நபருக்கு எதிராக விசாரணைகளை நடாத்திய பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிசார் சந்தேக

நபரான பகிரதி முருகேசுவின் முன்னாள் கணவரான சாம்ராஜுக்கு எதிராக பாரதுாரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி அறிக்கைகளை மட்டும் தாக்கல் செய்துள்ளனர். சந்தேக நபரான பகிரதி முருகேசுவின் கணவரான சாம்ராஜ்க்கு எதிராவே பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிசார் பல குற்றச் சாட்டுக்களை சுமத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் சந்தேக நபரான பகிரதி முருகேசு கடற் புலிகளின் மகளிர் பிரிவின் ஒரு தலைவியாக பணியாற்றினார் என பயங்கரவாதப் புலனாய்வுப் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்த போதிலும் அதனை உறுதிப்படுத்த எந்தச் சான்றுகளையும் முன்வைக்கவில்லை. அறிக்கைகளை மட்டும் சான்றாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என எனது வாதத்தை முன்வைத்ததுடன், மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் காணப்படின் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட சந்தேக நபரான பகிரதி முருகேசு விடுதலை செய்யப்படவேண்டும்.

பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைக் கொண்ட பகிரதி முருகேசுவின் ஒரேமகள் அவரது தாயார் கைது செய்யப்பட்டதிலிருந்து கடந்த 15 மாதங்களாக தனது பிறந்த நாட்டுக்கு செல்ல முடியாததினால் கல்வியை தொடரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது எனவே இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு சந்தேக நபருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய போதிய சான்றுகள் உள்ளனவா என பயங்கரவாதத் தடைப் பொலிசார் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்றுசட்டமாஅதிபரின் நிலைப்பாட்டை இந்த நீதிமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும் என எனது வாதம் முன்வைக்கப்பட்டதையடுத்து சட்டமா அதிபரின் ஆலோசனைப் பெற்று நீதிமன்றிற்கு அறிவிக்கும்படிபொலிசாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்

2016ம் ஆண்டு மே மாதம் இந்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமாஅதிபரின் ஆலோசனைப் பெற்று சந்தேகநபரான பகிரதி முருகேசுவை விடுதலை செய்ய எடுக்கப்பட்ட முடிவின் பிரதியை பொலிசார் நீதிமன்றில் சமர்ப்பித்ததையடுத்து கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி அருணி ஆட்டிகல பகிரதி முருகேசுவை விடுதலைசெய்தார்.

## தூதரக உதவி

பகிரதி முருகேசுவின் ஒரே மகளான பார்கவி பிறப்பால் ஒரு பிரெஞ் நாட்டவராகையினால் பிரெஞ் துாதரகம் அவருக்கு துாதரக உதவிகளை வழங்கியது. அச்சிறுமி பிரெஞ் மொழியில் மட்டுமே தேர்ச்சியுடையவராகையால் இவ் விசாரணை காலத்தில் அவரது கல்வி தொடர்பாக பிரெஞ் துாதரகம் கரிசனை வெளியிட்டமை தாயும் மகளும் விரைவாக விடுதலையாவதற்கு முக்கிய காரணமாகும்.

# விஜயகலா மகேஸ்வரன் கைதும் பிணையும்

37

**தண்டனைச் சட்டக் கோவை -** SEC 120
**பற்றின்மையைத் தூண்டி விடுதல் அல்லது தூண்டிவிட எத்தனித்தல்**

பேசப்படும் அல்லது வாசிக்க கருதப்படும் சொற்கள் மூலம் அல்லது சைகைகள் மூலம் அல்லது கட்புலக்காட்சிகள் மூலம் அல்லது வேறுவகையான ஜனாதிபதியின் அல்லது இலங்கையில் உள்ள அவரது அரசாங்கத்துக்கு எதிராகப் பற்றின்மை உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற அல்லது நீதிநிர்வாகந் தொடர்பில் வெறுப்பினை அல்லது அவமதிப்பினைத் தூண்டிவிடுகின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைச் சட்டமுறைவழிகளல்லாத வேறுவிதமாக மாற்றுவிக்கும் படி இலங்கை மக்களைத் தூண்டிவிடுகின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற அல்லது குடியரசின் மக்களுக்கிடையில் அதிருப்தியயை அல்லது பற்றின்மையை ஏற்படுத்த அல்லது அத்தகைய குடிகளின் வெவ்வேறு வகுப்பினரிடையில் விரோதத்தையும் பகையையும் மேம்படுத்த எத்தனிக்கின்ற எவரும் தண்டணைச் சட்டக்கோவை 120ம் பிரிவின் கீழ் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சாதாரண மறியலினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஜனாதிபதி அல்லது இலங்கையிலுள்ள குடியரசின் அரசாங்கம் பிழை நெறிப்படுத்தத்தப்பட்டது அல்லது கையாண்ட நடவடிக்கையில் பிழையிழைத்துள்ளது எனக் காட்டக் கருதல் அரசாங்கத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் அல்லது நீதி நிருவாகத்தில் பிழை அல்லது பழுது உண்டென அவ்விதம் காட்டப்பட்ட பிழை அல்லது பழுதினைத் திருத்தும் நோக்கத்துடன் எடுத்துகாட்டுதல் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தைச் சட்டமுறையான வழிகளில் மாற்றுவிக்க எத்தனிக்கும்படி குடியரசின் மக்களை தூண்டுகின்ற அல்லது குடியரசின் மக்களுக்குள் பல்வேறு வகுப்பினருக்கிடையே வெறுப்பு அல்லது விரோத வளர்ச்சியை உண்டாக்குந் தன்மையுள்ள கருமங்களை அகற்றுவதற்காக அவற்றை சுட்டிகாட்டுதல் தவறொன்றாகாது.

## 120 வது பிரிவின் கீழ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது:

2018ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி யாழுப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற அரச வைபவத்தில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் தண்டனைச் சட்டக்கோவை 120 பிரிவின் படி தண்டனை வழுங்கக் கூடிய குற்றத்தை புரிந்துள்ளார் என பொலிசாரால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது

இந்த வழக்கில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சார்பில் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணத்தில்

2018ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி யாழ்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற அரச வைபவத்தில் நாட்டின் சட்டம் ஒழுங்கு அமைச்சர் முன்னிலையில் விஜயகலா மகேஸ்வரன் ஆற்றிய உரையில் வடக்கில் சட்டம் ஒழுங்கு சீராக செயல்படுத்தப்படாமையால் பல கொலை கொள்ளைகள் நடைபெறுவதுடன் 6 வயது சிறுமி கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தை போன்றதொரு நிர்வாகம் இருந்திருந்தால் இவ்வாறான குற்றச் செயல்கள் நடைபெற மாட்டாது என்பதையே குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றியதாக அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது ஆனால் அந்த உரையின் உள்ளடக்கத்தை கவனத்தில் எடுத்து பாதுகாப்பு அமைச்சு முறையாக செயல் பட்டிருக்குமானால் இன்றைய நாட்டின் நெருக்கடி சூழ் நிலை அனர்த்தங்களைக் கூட தடுத்திருக்கலாம். வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வன்முறைக் கலாச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகங்கள், சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன. பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, போதைவஸ்து பாவனை போன்ற வன்முறைகள் அதிகரித்துள்ளன.

சுழிப்புரத்தில் ஆறு வயதுச் சிறுமி ரெஜினா கடத்திச் செல்லப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். வட்டுகோட்டையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அவரது கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட 69 வயதுடைய பெண்ணொருவரின் வீட்டுக்குள் ஓட்டைப் பிரித்து இறங்கிய இருவரினால் கணவருக்கு முன்னால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன் வீட்டிலிருந்த நகைகளும் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதனை விட மானிப்பாயில் வயோதிபப் பெண் கழுத்து நெரித்து கொல்லப்பட்டுளார். பல்வேறு இடங்களிலும் வாள்வெட்டுச் சம்பவங்களினால் பெரும்பாதிப்புக்கள் ஏற்றப்பட்டுள்ளன. இவ்வாறு சிறுவர்கள், பெண்கள், மீதான வன்முறைகள் அதிகரித்தமை அவரது மனதில் தாக்கத்தை ஏட்படுத்திருந்தது. பெண் என்ற வகையிலும்




இந்த நிலைமையினால் ஆத்திரமுற்றே உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவரது வார்த்தைகள் வெளிவந்திருந்தன. வன்முறை கலாசாரத்தை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலேயே அவரது உரை அமைந்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற துஸ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. அத்தகைய நிர்வாகம் ஒன்றினை தற்போது நாம் ஏற்படுத்த வேண்டும் என்று கருத்தியதாகவே அவரது கருத்து அமைந்திருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளை மீள எழச் செய்ய வேண்டும் என்றோ தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எற்பட வேண்டும் என்ற நோக்கத்திலோ அல்லது இனங்களிடையே விரிசலை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலோ எந்தவித கருத்துக்களையும் அவர் தெரிவிக்கவில்லை. என்று நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் மேலும்

விஜயகலா மகேஸ்வரன் அளித்த தன்னுடைய விளக்கத்தில் தமிழ் மக்கள் பாதிப்பின்றி நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும் அதற்கத்தான் ஐக்கிய தேசியக் கட்சி பாடுபட்டு வருகிறது. அந்த வகையில் என்னுடைய கருத்துக்கள் உதாரணங்களாகவே அமைந்திருந்தன. புலிகள் பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களது ஆட்சிக் காலத்தில் வடக்கில் இறுக்கமான சட்டங்கள் இருந்தன. அத்தகைய நிர்வாகம் தற்போது தேவை என்ற ஆதங்கமே என்னுடைய பேச்சில் மேலெழுந்திருந்தது.

ஆறு வயதுச் சிறுமியின் படுகொலை, ,வயோதிபப் பெண் மீதான பாலியல் வல்லுறவு, வயோதிபப் பெண் கழுத்து வெட்டிப் படுகொலை போன்ற சம்பவங்கள் எனது மனதை பாதித்திருந்தன. இதனால் ஆத்திரமுற்றே பேசும் போது வார்த்தைகளில் தடுமாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் இருந்த காலத்தில் வடக்கில் இருந்த நிர்வாகத்தைப் போன்று எமது அரசாங்கம் நிர்வாகத்தை உருவாக்கி வன்முறைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே எனது நோக்கமாக இருந்தது. எனது உரையின் இறுதிப் பகுதியில் எமது கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைத்தால் தான் நிம்மதி எற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையிலேயே புலிகளை மீள உருவாக்க வேண்டும் என்பது சந்தேக நபரின் நோக்கமாக இருந்தால் நான் எனது கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதை கூறியிருக்க மாட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைவரும் பிரதமருமான ரணில் விக்கரமசிங்கவின் ஆட்சி காலத்திலேயே புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் எமது ஐக்கிய தேசியக் கட்சியின் தனித்த ஆட்சி உருவானால் தான் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்றும் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்

மேலும் ஆரம்ப உரையின் போது ஆறு வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு தற்கொலை செய்து கொண்டதாக உரையாற்றிமை தவறானதாகும். சிறுமி தற்கொலை செய்யவில்லை கொல்லப்பட்டார். ஆனால், ஆத்திரம் மேலீட்டால் வார்த்தைப் பிரயோகம் தடுமாறியுள்ளது. அதேபோன்றே விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தைப் போன்றதொரு நிர்வாகத்தை எமது அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என கூறுவதற்கு பதிலாக வார்த்தைகள் தவறியுள்ளன. இதனைவிடுத்து, எவ்வித உள்நோக்கத்திலோ அல்லது விடுதலைப்புலிகளை மீள உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திலோ தான் உரையாற்றவில்லை எனக் கூறியுள்ளார் அவ்வாறு, செயற்பட வேண்டிய அவசியமும் தனக்கு இல்லை. வன்முறைகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளை தான் ஆதரிக்க வேண்டிய அவசியம் இல்லை. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிறுமி மீதான படுகொலை, வயோதிபப் பெண்கள் மீதான வன்முறைகள் தன்னை மிகவும் பாதித்திருந்தன. இதனாலேயே, உணர்ச்சிவசப்பட நிலையில் வார்த்தைகள் தடுமாறியுள்ளன. தனது முழுமையான உரையை

அவதானித்தால் தான் பல இடங்களில் தடுமாற்றம் அடைவதும் உணர்ச்சிவசப்படுவதும் தெரிகிறது. வன்முறைகளற்ற வகையில் வடக்கில் அமைதி திரும்ப வேண்டும் என்பதே தனது நோக்கமாகும். அதற்கு எமது ஐக்கிய தேசிய கட்சியின் தனி அரசாங்கம் உருவாக வேண்டும் என்ற வகையிலேயே தனது உரை அமைத்துள்ளதுள்ளதாக கூறிப்பிட்டுள்ளார்.

என்ற விடயங்களை நீதிமன்றம் கவனத்தில் கொண்டு சந்தேக நபரான விஜயகலா மகேஸ்வரனை பிணையில் விடுதலை செய்யும்படி நீதிமன்றத்தை வேண்டிக்கொண்டதையடுத்து கைது செய்யப்பட்ட அன்றைய தினமே நீதிமன்றம் விஜயகலா மகேஸ்வரனை பிணையில் விடுதலை செய்தது.

# சி.ஐ.டி.யின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கைதும் பிணையும்

2020–2021

38

இலங்கையில் நேர்மையான திறமையான சில அதிகாரிகள் பொலிஸ் துறைக்குள் நட்சத்திரமாகச் ஜொலிப்பார்கள் அப்படிப்பட்டவர்களில் ஒருவராகத்தான் சி.ஐ.டி.யின் முன்னாள் பணிப்பாளர் சானி அபேசேகரவைப் பார்க்க முடிந்தது. குற்றப்புலனாய்வுப் பிரிவால் முன்னகர்த்தப்பட்ட வழக்குகளில் மிக முக்கியமான பல திருப்பங்களைக் கொண்டு வந்து சேர்த்தது கொழும்பில் ஐந்து மாணவர்கள் கடற்படையால் கடத்தப்பட்ட சம்பவமாகும். இது பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர்ந்தது. முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கருணாகொடவைக் குற்றவாளிகள் தரப்பில் கொண்டுவந்து நிறுத்தியது. அதற்கெல்லாம் காரணம் நியாயமான அதிகாரிகள் பொறுப்புள்ள இருக்கையில் இருந்தமைதான் என்பது தெளிவானது. அவரது வழிகாட்டுதலில் செயற்பட்ட அதிகாரிகள் திறம்பட்டவர்களாகவும் நேர்மையோடும் இருந்தார்கள். அந்த நேர்மைக்கு நாம் தலைவணங்க வேண்டும். அதனால்தான் அவருக்கு ஒரு பிரச்சினை வரும் போது சட்டரீதியிலான உதவிகளை வழங்க நாம் தயாராக இருந்தோம்.

## சானி அபேசேகர கைதும் பிணை மனுவும்

பம்பலபிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுத கிடங்கு விவகார விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைது செய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கியதாக கூறி, சானி அபேசேகர உட்பட மூன்று சி.ஐ.டி. அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறித்த சி.ஐ.டி. அதிகாரிகள் கம்பஹா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த பிணை மனு 2020 டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே, மேல் நீதிமன்றின் உத்தரவை மீளாய்வு செய்து தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி சானி அபேசேகர சார்பில்,தானே



மனுதாரராக மேன் முறையீட்டு மன்றில் மீளாய்வு மனு சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவால் தாக்கல் செய்யப்பட்டது

பிணைமனுவை தாக்கல் செய்ததையடுத்து சானி அபேசேகரவுக்கு பிணை கோரி வாதங்களை முன் வைத்த சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரொயா பிணை சட்டத்துக்கு அமைய பிணை வழங்க அதிகாரம் இருந்தும், கம்பஹா மேல் நீதிமன்றம் அதனை நிராகரித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். தவறான வழி நடாத்தல் காரணமாக அது இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்ட அவர், மனுதாரர் மீது முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் பிணை வழங்க முடியும் எனவும் அதற்கு விசேட காரணிகள் கூட அவசியமற்றது என வாதிட்டார்.

'பொலிச் பரிசோதகர் நிசாந்த சில்வாவைப் போன்று நாட்டை விட்டு சென்று விடலாம் என கூறி பிணைக்கு எதிர்ப்பு முன் வைக்கின்றனர். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நிசாந்த சில்வா போன்றோர் நாட்டை விட்டு செல்லும் போதும் நாம் போகவில்லை. எதற்கும் முகம் கொடுக்க தயாராக நாம் இங்கேயே இருந்தோம். விசாரணையாளர்களின் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினோம். எங்கும் மறைந்திருக்கவில்லை. கைது செய்யும் போது கூட ஒத்துழைப்பு வழங்கினோம். அப்படி இருக்கையில் எமக்கு இப்போது நாட்டை விட்டு தப்பிச் செல்ல வேண்டிய தேவை இல்லை. அத்துடன் எமது வெளிநாட்டு பயணங்கள் தடைச் செய்யப்பட்டுள்ளன. நாம் பதவியில் கூட இல்லை. அதனால் எந்த விசாரணைகளில் கூட எமக்கு தலையீடு செய்ய முடியாது. எனவே எமக்கு பிணையளிப்பதில் எந்த சிக்கலும் இல்லை. என சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரயா வாதிட்டார்.

சானி அபேசேகர உள்ளிட்டோருக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பிணை வழங்குவது குறித்து ஆராய விசேஷட காரணிகள் அவசியம் இல்லை எனினும், அவரது உடல் நிலை தொடர்பிலான விடயங்களை பிணை வழங்குவதற்கான விஷேட காரணியாக சட்டத்தரணி கொரயா முன் வைத்தார். மேன் முறையீட்டு நீதிமன்றம் சானி அபேசேகரவின் உடல் நிலை தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் அறிக்கை கோரியிருந்த போதும் இன்னும் அது முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. அதனைச் சமர்ப்பிக்க மன்று பதிவாளருக்கு கட்டளையிட வேண்டும் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் வழிகாட்டலுக்கமைய சானி அபேசேகரவின் மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்து வாதம் முன்வைக்கப்பட்டது.



எவ்வாறாயினும் சானி அபேசேகர பிணையளிக்க சட்டமா அதிபர் சார்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் ரொஹந்த அபேசூரிய, விசாரணைகள் நிறைவடையாத நிலையில் அவர்களுக்கு பிணையளிப்பதை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டார். சஞ்ஜீவனீ எனும் பெண்ணின் வாக்குமூலம் இவ்விசாரணைகளுக்கு அவசியமாவதாகவும் அவர் வெளிநாட்டில் உள்ள நிலையில் அதனை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில் சானி அபேசேகர சார்பில் ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரனி விரான் கொராயா, சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தார். பிணை தொடர்பில் தீர்மானமெடுக்க விசாரணை நிறைவடைய வேண்டிய எந்த அவசியமும் சட்டத்தில் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார். எனவே நீதிமன்றம் பொருத்தம் என கருதும் எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் பிணையளிக்குமாறு அவர் மன்றைக் கோரியதையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் சானி அபேசேகரவிற்கு பிணை வழங்கியது.

# உதயன் பத்திரிகை நிர்வாக இயக்குநர் விடுதலை

2021

39

## யாழ்பாண பொலிஸ் பொறுப்பதிகாரி தனிப்பட்ட குரோதம் காரணமாக தாக்கல் செய்த வழக்கு

உதயன் பத்திரிகையில் 2020.11.26ஆம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படத்துடன் அவரது பிறந்த நாளன்று செய்தி வெளியாகியிருந்தது. இந்தச் செய்தி தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் முறைப்பாட்டுக்கு அமைவாக தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 120ன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன், ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகியோர் சந்தேக நபர்களாகப் பொலிஸாரால் பெயரிடப்பட்டிருந்தனர். நவம்பர் 26 ஆம் திகதியன்று, புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த தினத்தையொட்டி அவருடைய புகைப்படத்தையும் செய்தியையும் வெளியிட்டதாகக் கூறி, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தொடுக்கப்பட்ட வழக்கில் இருந்து, உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி ஆகியோர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் 2021 பங்குனி மாதம் 19ம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

## வழக்குத் தாக்கல் BR/1705/PC/20

யாழ்பாண பொலிசாரினால் இந் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பொது இடத்தில் பொது எண்ணத்துடன் பொது மக்களை ஒன்றுகூட்டி வழக்குத் தொடுனரால் குறிப்பிடப்பட்டதான மாவீரர் நிகழ்வை நடாத்துவதற்கு 1979ம் ஆண்டுடின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 106(1) இன் கீழ் இந்த வழக்கில் முதலாவதாக பெயர் குறிப்பிப்பட்டிருக்கும் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன்



மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகியோருக்கு இந்த நீதிமன்றம் 2020ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் திகதி தடை உத்தரவு வழங்கியிருந்தது.

2020.12.4ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் நீதிமன்றில் மேலதிக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேலதிக அறிக்கையில் ஏற்கனவே மாவீரர் நிகழ்வை நடாத்துவதற்கு நீதிமன்றினால் தடைவிதித்து கட்டளை வழங்கப்பட்டிருந்தது என்றும் அந்தக் கட்டளையை மீறியதுடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உருவப்படத்தையும் செய்தியையும் வெளியிட்டனர் என்றும் அந்த செய்தி இனங்களுக்கு இடையே பற்றின்னைமையை துாண்டிவிட்டு முரண்பாட்டை ஏற்படுத்துவதான தண்டணைச சட்டக்கோவையின் 120ம் பிரிவின் கீழ் தண்டணை வழங்கக்கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக ஒரு குற்றச்சாட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்த நாள் கொண்டாட்டம் உட்பட பிரபலயப்படுத்தும் விதத்தில் எந்தவித செயல்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடாதென கௌரவ நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தடை உத்தரவு மீறப்பட்டமையானது நீதிமன்ற கட்டளைச் சட்டத்தின்55(1)ம் பிரிவின் கீழ் தண்டணைத்குரிய குற்றமாகும் என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரியான சேனக பண்டார கையெழுத்திட்டு தாக்கல் செய்த மேலதிக அறிக்கையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவே இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் என குறிப்பிடப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது

2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக அறிக்கையில் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகிய இருவரிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாகவும், அவர்களை முதலாவது, இரண்டாவது சந்தேக நபர்களாகப் பெயர் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்குத் தொடுனர்களான பொலிசார் தமது சமர்பணத்தில். சந்தேக

நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் இருவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே வழக்குக் கோவையை சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காக அனுப்பி வைத்து, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள கால அவகாசத்தை பொலிஸார் மன்றில் கோரினர்.

உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சார்பில் மன்றில் முன்வைக்கப்பட்ட எனது சமர்பணத்தில்

## பூர்வாங்க ஆட்சேபனைகள்

இந்த வழக்கில் இந் நீதிமன்றில் யாழ்பாண பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட (B)பி அறிக்கையான முதல் அறிக்கை மற்றும் விசாரணை அறிக்கைகளான மேலதிக அறிக்கைகள் குற்றவியல் சட்டக்கோவையின் விதிகளுக்கு அமைவாகத் தாக்கல் செய்யாது, விதிகளுக்கு முரணாவே பொலிசார் தாக்கல் செய்துள்ளனர்

## குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 109(5)

குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 109(5) பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பதிகாரி பிடியாணையின்றிக் கைது செய்யத் தகு தவறொன்றாகவிருப்பின் அல்லது சமாதானக் குலைவொன்று ஏற்பட்டு கலகம் ஏற்படக்கூடிய குற்றத்தைப் புரிந்திருந்தால் பொலிஸ் பொறுப்பதிகாரி அத்தகைய தவறு தொடர்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ளதான நீதவான் நீதிமன்றிற்கு அறிக்கையொன்றினை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் அவ்வாறு அறிக்கை தாக்கல் செய்யப்படாவிட்டால் அவர் தனது மேலதிகாரிக்கு அந்த விடயத்தைக் கொண்டு சென்றிருக்க வேண்டும். மேலதிகாரியால் விசாரணையாளர் நியமிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென 1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 109(5)ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இந்த விடயத்தை தங்களின் கவனத்துக்கு கொண்டுவரவுமில்லை. கௌரவ நீதிமன்றில் அறிக்கை சமர்பிக்கவுமில்லையென்பது மட்டுமன்றி தனது மேலதிகாரிக்கு அந்த விடயத்தைக் கொண்டு சென்று ஆலோசனைப் பெறாமல் தனக்கு கீழ் சேவையாற்றும் பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு தானே முறைப்பாடு செய்ததுடன் அந்த கீழ் நிலை அதிகாரியிடம் விசாணையை கையளிக்கப்பட்டமையான இச் செயல்பாடு 1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 109(5)ம் பிரிவிற்கு முரணான சட்டரீதியற்ற செயல்பாடாகும்.

## குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு (113)

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு (113) படி ஒரு முறைப்பாட்டை விசாரணை செய்யும் பொலிஸ் அலுவலர் எவரும் இவ்வத்தியாயத்தின் கீழ்ப் புலனாய்வு எதனையும் செய்துள்ளபோது அவர் அத்தகைய புலனாய்வின் முடிவினை பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக உள்ள பொறுப்பதிகாரிக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென

1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு (113) ல் குறிப்பிப்பட்டுள்ளது. இந்த வழக்கில் யாழ்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தனக்கு கீழ் கடமையாற்றும் பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனக பண்டாரவிற்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் அந்த முறைப்பாட்டை தான் விசாரணை செய்வதாகவும் பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனக பண்டார இந்த நீதிமன்றில் அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் முறைப்பாட்டாளாரன யாழ்-பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பிரசாத் பெர்னான்டோ செய்த முறைப்பாட்டை பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனக பண்டார புலனாய்வு செய்துள்ளபோது அத்தகைய புலனாய்வின் முடிவினை முறைப்பாட்டாளரான பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்க முடியுமா? முறைப்பாட்டாளர் விசாரணை அதிகாரியின் மேலதிகாரியாக செயற்படமுடியுமா?என்ற கேள்விகள் எழுகின்றன. இது 1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு (113)ல் குறிப்பிப்பட்டுள்ளமைக்கு முரண்பட்ட சட்டரீதியற்ற செயல்பாடாகும்.

## குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 115(1)

குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 115(1) Summary of Statement பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் (பொறுப்பதிகாரி) அல்லது விசாரணையாளர் ஒரு முறைப்பாட்டினை புலனாய்வு செய்யும் பொழுது விசாரிக்கப்பட்ட சாட்சிகாரர் ஒவ்வொருவராலும் அவ்விடயம் தொடர்பில் விசாரணையாளருக்கு வழங்கப்பட்ட கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் சுருக்கமொன்றுடன் சேர்த்து விடயத்தின் அறிக்கையொன்றினை அவ்விடயத்தில் நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றில் தாக்கல் செய்யவேண்டுமென குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 115(1)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த வழக்கில் பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனக பண்டார கையெழுத்திட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையில் சாட்சிக்காரரின் சாட்சியங்களின் சுருக்கமெதுவும் நீதிமன்றில் தாக்கல் செய்த எந்த அறிக்கைகளில் உள்வாங்கப்படவில்லையென்பதுடன், இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் யார் என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முறைப்பாட்டாளரின் முறைப்பாட்டின் சுருக்கமெதுவும் முதல் அறிக்கையிலோ அல்லது மேலதிக அறிக்கைகளிலோ பதியப்பட்டு இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை

இது 1979ம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 115(1) ல் குறிப்பிப்பட்டுள்ளமைக்கு முரண்பட்ட சட்டரீதியற்ற செயல்பாடாகுமென வாதத்தை முன்வைத்து இப்பிரிவின் கீழ் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரதி நீதிமன்றுக்கு கையளிக்கப்பட்டது JAYASINGHE Vs AG 50 NLR 202

# தண்டனை சட்டக்கோவையின் 127ம் பிரிவு சட்ட மா அதிபரின் அங்கீகாரம்

தண்டணைச் சட்டக் கோவையின் அத்தியாயம் (vi) பிரிவு 114 தொடக்கம் 127 வரையான பிரிவுகள் அரசிற்கு எதிரான தவறுகளைக் குறிப்பிடுகின்றது இந்தப் பிரிவுகளில் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதாயின் அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்புணர்ச்சியை தூண்டிவிடுகின்ற அல்லது தூண்டிவிட எத்தனிக்கின்ற ஒரு தேவைப்பாடு இருத்தல் வேண்டும் அத்துடன் தண்டணை சட்டக்கோவையின் (vi) அத்தியாயத்தின் கீழ் வழக்கொன்றை தொடர்வதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் எழுத்திலாலான அதிகாரமளிப்பும் தேவைப்படுத்தப்பட்டுள்ளது அவ்வாறான எழுத்திலாலான அதிகாரமளிப்பு எதுவும் இல்லாதவிடத்து வழக்குத்தொடுனரால் வழக்கொன்றை தொடரமுடியாது.

நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதாயின் தண்டணை சட்டக்கோவையின் 127ம் பிரிவின் கீழ் சட்டமா அதிபரின் எழுத்திலாலான அங்கீகாரத்தடன் அல்லாது இவ்வத்தியாயத்தின் கீழ்க் குற்ற வழக்கெதுவும் தொடரப்படுதலாகாது என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இந்த வழக்கை தாக்கல் செய்த யாழ்பாண பொலிசார் சட்டமா அதிபரின் எழுத்து மூலமான அங்கீகாரத்தை பெறாமல் யாழ்பாண பொலிஸ் நிலைய பலதரப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனக பண்டார, உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகிய இருவரையும் முதலாவது சந்தேகநபர், இரண்டாவது சந்தேகநபர் என்று பெயர் குறிப்பிட்டு இந்த நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளதுடன் இன்று (19.03.2021) வழக்குக் கோவையை சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காக அனுப்பி வைத்து, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள கால அவகாசத்தை பொலிஸார் மன்றில் கோருகின்றமைக்கு உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சார்பில் நீதிமன்றில் எனனால் கடும் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

பிணை வழங்கப்படமுடியாத அரசுக்கு எதிரான குற்றங்களாயின் முறைப்பாட்டைப் பெற்ற பொலிசாரினால் விசாரணைகள் நடத்தப்பட்டு, அந்த விசாரணை அறிக்கைகள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு, இனங்களுக்கு இடையிலான முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்ற முடிவுக்குச் சட்டமா அதிபர் வரும் வரையில் பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்க முடியாது. குற்றம் நடைபெற்றிருக்கிறது, அவர்களிடம் வாக்குமூலம் பெற்று அவர்களைச் சந்தேகநபர்களாக்கி நீதிமன்றில் தோன்றும்படி சட்டமா அதிபர் எழுத்தமூலமான அறிவுறுத்தல் பொலிசாருக்கு வழங்கப்படவேண்டும் ஆனால் இந்த வழக்கில் சட்டமா அதிபருக்கு விசாரணை அறிக்கைகள் அனுப்பப்பட்டு சட்ட மா அதிபரின் எழுத்திலாலான அங்கீகாரத்தை பெறாமல் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகிய இருவரையும் சந்தேக நபர்களளென பெயர் குறிப்பிட்டு குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளமை தண்டணை சட்டக்கோவையின் 127ம் பிரிவிற்கு முரணான சட்டரீதியற்ற செயல்பாடாகும். சட்டமா அதிபரின் எழுத்திலாலான அங்கீகாரத்தை பெறாமல் தண்டணைச் சட்டக்கோவை பிரிவு 120இன் கீழ் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு சட்டமா அதிபரின் எழுத்து

மூலமான அங்கீகாரம் இல்லை என்பதையும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு மூன்று பூர்வாங்க ஆட்சேபனைகளை முன்வைத்ததுடன் மேலும் எனது சமர்பணத்தில்

## தண்டணைச் சட்டக் கோவையின் 120ம் பிரிவின் தேவைப்பாடுகள்

அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரமும் கருத்து வெளியிடும் சுதந்திரமும் இலங்கை தண்டணைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் மூலமாக இல்லாதொழித்தலாகாது என உயர் நீதிமன்றம் 05-11-2015ம் ஆண்டு வழங்கிய Sisira Kumara Wahalathanthiri Vs AG SC/FR/768/2009 தீர்ப்பில் கூறப்பட்டுள்ளுமையை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன் மேலும் அந்தத் தீர்ப்பில் 120 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் அதன் விளக்கமும் பேச்சுச் சுதந்திரமும் கருத்து வெளியிடும் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது அத்துடன் குறித்த பிரிவில் தரப்பட்டுள்ள விளக்கமும் சந்தேகத்துக்கு இடமின்றி இந்நிலையை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன் அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான சொற்பதங்கள் பயன்படுத்தினாலும் அத்தகைய செயலினால் பொது மக்களின் உணர்வுகளைத் துாண்டாத அத்துடன் பொதுமக்களிடையே அமைதியின்மையை தூண்டாத செயல் தொடர்பில் ஒருவருக்கு எதிராக 120ம் பிரிவின் கீழ் வழக்கொன்றை தொடர்வதற்கு குறித்த பிரிவை அடிப்படையாக பயன்படுத்திக் கொள்ளல் ஆகாது என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரதி நீதிமன்றிற்கு கையளிக்கப்பட்டது.

மேலும்எனதுசமர்பணத்தில்வடக்கிலும்தெற்கிலும்வெளிவந்தபத்திரிகைகளின்செய்திகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினேன். 2020ம் ஆண்டு கார்திகை மாதம் 26ம் திகதி வெளியான உதயன் பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் மற்றும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தில் எந்தவிதமான இனமுரண்பாடும் இல்லை. இந்த விடயம் உதயன் பத்திரிகையில் மட்டும் வெளியாகவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற வலம்புரிப் பத்திரிகை, காலைக்கதிர் பத்திரிகை என்பனவும் அதே தினத்தில் படங்களுடன் செய்திகள் பிரசுரித்திருக்கின்றன. தெற்கில் இருந்து வெளிவரும் லங்காதீப பத்திரிகை, டெய்லி மிரர் என்பவற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் வெளியாகியிருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படமும் செய்திகளும் பொது மக்களின் உணர்வுகளையோ அமைதியின்மையையோ தூ ண்டடவுமில்லை அத்துடன் பொதுமக்களிடையே அமைதியின்மையை உணர்வுகளையோ தூண்டியதாக எந்தப் பொலிஸ் நிலையத்திலும் எவரினாலும் எந்த விதமான முறைப்பாடும் வழங்கப்படாத நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது தனக்கிருந்த தனிப்பட்ட குரோதம் காரணமாக தானே முறைப்பாட்டாளனாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

## தனிப்பட்ட குரோதம்

பெண் ஒருவர் தனது கணவருக்கு எதிராக முறைப்பாட்டை பதிவுசெய்ய யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்திருந்தவேளை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய

பொறுப்பதிகாரி பெண்மணியின் முறைப்பாட்டை பாரம் எடுக்காமையால் அந்தப் பெண்மணி பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்தார் என 2020ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தியே இந்தத் தனிப்பட்ட குரோதத்துக் ஒரே காரணமாகும் அந்தச் செய்தியால் தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற கடும் கோபத்தில் 2020ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ம்ஆம் திகதி உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகிய இருவரையும் சட்டமா அதிபரின் எழுத்துமூலமான அங்கீகாரத்தை பெறாமல் அவசர அவசரமாக சந்தேக நபர்களளென பெயர் குறிப்பிட்டு இருவருக்கும் எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

மேலதிக அறிக்கையை தாக்கல் செய்த பின்னர் அன்றைய தினமே 2020ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23ம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பான விசாரணைக்கு யாழ்பாண பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவுக்கு 2020ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் ஆம் திகதி வரும்படி 2020ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ம்ஆம் திகதி ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் ஆகிய இருவருக்கும் பொறுப்பதிகாரின் அறிவுறுத்தலுக்கு அமைய அழைப்பாணை கையளிக்கப்பட்டது

## சரவணபவண் விடுதலை

வேலுப்பிள்ளை பிரபாகரன் உருவப்படத்தையும் செய்தியையும் வெளியிட்டனர் என்றும் அந்த செய்தி இனங்களுக்கு இடையே பற்றின்னைமையை துாண்டிவிட்டு முரண்பாட்டை ஏற்படுத்துவதான தண்டணைச சட்டக்கோவையின் 120ம் பிரிவின் கீழ் தண்டணை வழுங்கக்கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதிலும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியினால் எந்தவித பொது மக்களின் உணர்வுகளையோ அமைதியின்மையையோ துாண்டப்படவுமில்லை அத்துடன் பொதுமக்களிடையே அமைதியின்மையை உணர்வுகளையோ துாண்டாத துாண்டப்படாத செயல் தொடர்பில் ஒருவருக்கு எதிராக 120ம் பிரிவின் கீழ் வழக்கொன்றை தொடர்வதற்கு குறித்த பிரிவை அடிப்படையாக பயன்படுத்திக் கொள்ளல் ஆகாது உயர் நீதிமன்றம் 05-11-2015ம் ஆண்டு வழங்கிய Sisira Kumara Wahalathanthiri Vs AG SC/FR/768/2009 தீர்ப்பில் கூறப்பட்டுள்ளமையை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் சட்டரீதியற்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சார்பில் முன்வைக்கப்பட்ட சட்டரீதியான பூர்வாங்க ஆட்சேபனைகளை கவனத்தில் கொண்டு ஈஸ்வரபாதம் சரவணபவனை விடுதலை செய்யும்படி எனது சமர்ப்பனம் முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப் அமுதன் சார்பாக (2ம் சந்தேக நபர்) ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது சமர்பணத்தில் "நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் எழுத்திலான சட்டம் கிடையாது. அது ஆங்கிலேயப் பொதுச் சட்டம். இவ்வாறானதொரு நிலையில் எந்த நீதிமன்றுக்கு எவ்வாறான நியாயாதிக்கம் இருக்கின்றது

என்று சொல்கின்ற சட்டப் பிரிவைக் குறிப்பிட்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது சட்டபூர்வமற்றது. ஏனெனில் தவறு என்ன விதமானது எங்கே வரையறுக்கப்பட்டிருக்கின்றது என்பது சொல்லப்படவேண்டும். எழுத்திலான சட்டம் இல்லை என்றால் அதனைச் சொல்ல முடியாது. அடிப்படையிலேயே இந்த வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்க முடியாது. எனவே நிராகரிக்கப்பட வேண்டும். அத்துடன் தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆவது பிரிவின் கீழே சட்டமா அதிபரின் முதல் அனுமதியில்லாமல் வழக்குத் தொடர்ந்திருக்க முடியாதுவென ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் வாதத்துடன் எனது வாதத்தையும் முன்வைக்கிறேன். அடிப்படையற்ற வழக்கு என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் நிறைவுறுத்தப்பட வேண்டும். குற்றவியல் சட்டநடவடிக்கை கோவையின் 133ஆவது பிரிவின் கீழ் நீதிவான் ஒருவருக்கு சந்தேகம் எழுந்தால் மாத்திரம்தான் அவர் சட்டமா அதிபருக்கு பாரப்படுத்த முடியுமே தவிர, பொலிஸாருக்கு ஏற்படுகின்ற எல்லா சந்தேகங்களுக்கும் நீதிமன்றத்திலே இருந்து சட்டமா அதிபருக்கு அனுப்ப முடியாது, என்று தனது வாதத்தை முன்வைத்தார்.

## நீதிமன்ற உத்தரவு

இந்த வாதங்களின் அடிப்படையில் பொலிஸாரிடம் நீதிவான் சில விடயங்களை வினவினார். இறுதியில் இந்த வழக்குத் தொடர்பில் மேலதிக விசாரணை செய்வதானால் செய்யலாம். ஆனால் உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மற்றும் உதயன் ஆசிரிய பீடப் பிரதிநிதி கு.டிலீப்அமுதன் ஆகியோர் சந்தேகநபர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டதிலிருந்து விடுவிக்கப்படுகின்றார்கள். வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டால் இருவரும் முன்னிலையாகவேண்டும். ஏன நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

# முன்னாள் மாகாண ஆளுநர் அசாத் சாலி கைதும் விடுதலையும்

40

## அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் 2021ம் ஆண்டு சித்திரை மாதம் 5 ஆம் திகதி அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று அசாத் சாலி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசாத் சாலி சார்பில், தன்னையே மனுதாரராக பெயரிட்டு, சிரேஸ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இம்மனுவை தாக்கல் செய்திருந்தார். சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர், புலனாய்வுப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, குறித்த அமைச்சின் செயலர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரால் ஜகத் அல்விஸ் ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில் முன்னாள் மேல் மாகாண ஆளுனர் அசாத் சாலி 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வண்ணமும் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலும் செயற்பட்டதன் மூலம் தண்டணைச் சட்டக்கோவையின் 120 ஆம் அத்தியாயம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 2ம் பிரிவின் கீழும் குற்றம் ஒன்றினை புரிந்துள்ளதாக கூறி குற்ற புலனாய்வுப் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னனியில் மேலதிக விசாரணைக்காக குற்ற புலனாய்வு திணைக்களத்தினர் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியிடம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் அசாத் சாலியை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த கைதும்



தடுத்து வைப்பும் அரசியல் அமைப்பின் 12(1) உறுப்புரை பிரகாரம் சட்டத்தின் முன்னர் அனைவரும் சமன் எனும் உறுப்புரையை மீறுவதாக அமைந்துள்ளதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், 12(2) உறுப்புரையின் பிரகாரம், இன, மத, மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை, பிறந்த இடம் உள்ளிட்ட எந்த காரனியையும் அடிப்படையாகக் கொண்டும் பாகுபாடு காட்டப்படலாகாது எனும் விடயமும் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார். இதனைவிட அரசியலமைப்பின் 13(1), 13(2) ஆம் உறுப்புரைகளில் கூறப்பட்டுள்ள சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடைமுறைக்கு மாற்றமாக ஒருவர் கைது செய்யப்படல் கூடாது, கைது செய்யப்படும் போது அவர் கைது செய்யப்படுவதற்கான காரணம் அவருக்கு கூறப்படல் வேண்டும் மற்றும் கைது செய்யப்படும் நபர் அண்மையில் உள்ள நீதிமன்றில் ஆஜர் செய்யப்படல் வேண்டும் போன்ற விடயங்களை மீறுவதாக அசாத் சாலியின் கைதும் தடுத்து வைப்பும் அமைந்துள்ளதாக அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியலமைப்பின் 14(1) ஆம் உறுப்புரையூடக வழங்கப்பட்டுள்ள, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அரசியலமைப்பின் உறுப்புரைகளை மீறுவதாக அசாத் சாலியின் கைது அமைந்துள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் காவல் உத்தரவு சட்டவலுவற்றதென தீர்ப்பரிவிக்குமாறும் இடை க்கால தடை உத்தரவு வழங்கி கைதியான அசாத் சாலியை விடுதலை செய்யும்படியும் இம்மனு ஊடாக கோரப்படடது.

## மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம்

அசாத் சால்லிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் 2778/2021 எனும் இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடுத்துள்ளார். அதில் அசாத் சாலிக்கு எதிராக இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

01) 21 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில், கொழும்பு மேல் நீதிமன்ற அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஊடக

சந்திப்பொன்றினை நடாத்தி மத, இன பேதங்களை தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறி 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் 2 (1) ஏ பிரிவுடன் இணைத்து பார்க்க வேண்டிய 2 (2) (ஈ) அத்தியாயத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றினை அசாத் சாலி புரிந்துள்ளதாக முதல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

02) அத்துடன் இதே சம்பவம் காரணமாக 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் 3 (1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து பார்க்க வேண்டிய 3 (3) ஆம் உறுப்புரையின் கீழ் தண்டனைக் குரிய குற்றம் ஒன்றினை அசாத் சாலி புரிந்துள்ளதாக அவர் மீது முன் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது குற்றச்சாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக சட்ட மா அதிபரால் 56 சாட்சியாளர்களின் பெயர் பட்டியல் மேல் நீதிமன்றுக்கு பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சான்றுப் பொருட்களாக இறுவெட்டுக்கள், மெமரி சிப், ஊடக சந்திப்பு பிரதி, கடிதம் ஒன்று ஆகியனவும் சட்ட மா அதிபரால் முன் வைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு, அச்சட்டத்தின் கீழ் மிக குறுகிய காலத்தில் (3 மாதங்கள்) மேல் நீதிமன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு ஊடாக இது சாத்தியப்பட்டது, நிர்வாக தடுப்புக் காவலில் கைதி இருக்கும் போதே தாக்கல் செய்யப்பட்ட முதல் குற்றப்பத்திரிகையாகவும் இது கருதப்பட்டது.

## அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணை

அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றின் நீதியரசர்களான முர்து பெர்ணான்டோ, எஸ்.துரைராஜா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட போதே, மனுதாரர் சார்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறும் நிலையில், அவரை தற்போதைய சூழலில் சுகாதாரத் துறையின் அனுமதியுடன் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றுக்கு மாற்ற முடியும் என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா வாதங்களை முன் வைத்ததுடன், 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி தாக்கல் செய்த நகர்த்தல் பத்திரத்தையும் அடிப்படையாக கொண்டு, விடயங்களை தெளிவுபடுத்தினார். மார்ச் மாதம் 16 ஆம் திகதி அசாத்சாலி சுகயீனம் காரணமாக தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும், அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் தற்போது அவர் சாதாரண சிகிச்சை அறையான (வோர்ட்) 49 ஆம் அறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அங்கு தற்போதும் அவர் சிகிச்சைப் பெறுவதாகவும் கூறினார்.

எனினும், தற்போது நாட்டில் நிலவும் கொவிட் தொற்றுடன் கூடிய சூழலில், அசாத் சாலியை உடனடியாக கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவொன்றில் (மேச்சன் வோர்ட்) சிகிச்சைப் பெற அனுமதிக்கப்படல் வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா வாதிட்டார்.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அசாத் சாலிக்கு முடியுமான அனைத்து மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டதாக கூறினார்.இதன்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸிடம் திறந்த மன்றில் கேள்ள்வி எழுப்பிய நீதியரசர் எஸ். துரைராஜா, இன்று நாட்டில் நிலவும் சூழலில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் வைத்து மாரடைப்புக்கு உள்ளாகியுள்ள இவ்வழக்கின் கைதிக்கு சிகிச்சையளிக்கும் வசதி உள்ளதா என வினவினார். அதற்கு பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் அவ்வாறன வசதிகள் இல்லை என குறிப்பிட்டார். எனினும், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் கோரிக்கையில் தனக்கு ஆட்சேபனை இல்லை எனவும், கட்டணம் செலுத்தும் சிகிச்சை பிரிவுக்கு தடுப்புக் காவல் கைதியை மாற்றுவதாக இருந்தால் சுகாதாரத் துறையினரின் அனுமதியுடன் அது இடம்பெறல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந் நிலையில் விடயங்களை ஆராய்ந்த நீதியர்சர்கள் குழாம், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதுடன், சுகாதார அதிகாரிகளின் அனுமதியுடன் அசாத் சாலியை கட்டணம் செலுத்தும் சிகிச்சை பிரிவொன்றில் சேர்க்க அனுமதியளித்தது.

## முன்னால் மேல் மாகாண ஆளுனர் அசாட் சாலிக்கு பாதிப்பு ஏற்பட்டால் குற்றப்புலனாய்வுத் திணைக்களமே பொறுப்பு – சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஜனாதிபதியின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னால் மேல் மாகாண ஆளுனர் அசாட் சாலியின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக வைத்திய சிகிச்சை அவசியப்படுவதாகவும் இந் நிலையில் தேவையான வைத்திய வசதிகள் உடனடியாக வழங்கப்படாத காரணத்தினால் தடுப்புக் காவலில் உள்ள அசாத் சாலியின் உடல்நிலை பாதிக்கப்பட்டால் அதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களமே பொறுப்புக் கூறவேண்டுமென முன்னால் மேல் மாகாண ஆளுனர் அசாட் சாலியின் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா அசாட் சாலியின் மனைவியின் அறிவுறுதலுக்கு அமைய அவசர கடிதங்களை அசாட் சாலியின் கைதும் தடுத்தவைப்பும் சட்டரீதியற்றதுவென உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பொறுப்பதிகாரிக்கு கையளித்துள்ளார்

## அசாத் சாலிக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு எதிராக மூன்று மாதங்களுக்குள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கர்வாத தடை சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டம் ஆகியவற்றின் கீழ் சட்ட மா அதிபரினால் -இரு குற்றச்சாட்டுக்கள், 56 சாட்சியாளர்களின் பட்டியல் முன் வைத்து மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கு இந்த வழக்காகும். அசாட்சாலி ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இவ்வழக்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் உயர் நீதிமன்றுக்கு அறிவித்தார்.

## அடிப்படை உரிமை மீறல் மனுவும் விசாரணையில்

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் அசாத் சாலி சார்பில், தன்னையே மனுதாரராக பெயரிட்டு, சிரேஸ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தாக்கல் செய்துள்ள 97/2021 எனும் அடிப்படை உரிமை மீறல் மனுஉயர் நீதிமன்றில் விசாரணையில் குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுவானது , உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட மற்றும் ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகியோர் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டபோது மனுதாரர் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி சட்டத்தரணிகளான பயிஸ் முஸ்தபா, மைத்திரி குணரத்ன மற்றும் சிரேஸ்ட சட்டத்தரணி என்.எம். சஹீத் உள்ளிட்ட குழுவினர் ஆஜராகி வாதத்தை முன்வைத்தனர்

பிரதிவாதிகளுக்காக அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் பிரசன்னமாகி அசாத்சாலி இரு விடயங்களை மையப்படுத்தி 2021 மார்ச் 16 ஆம் திகதி கைது செய்யப்ப்ட்டிருந்தார். ஒன்று கடந்த 2021 மார்ச் 9 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில், இன, மத குழுக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக ஊடக சந்திப்பொன்றினை நடாத்தி வெளியிட்ட கருத்துக்களை மையபப்படுத்தியதாகும். மற்றையது மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு விவகார சந்தேக நபர்களுக்கு உதவியளித்தமை தொடர்பிலான விவகார விசாரணையாகும். இந்த விசாரணைகள் தொடர்கின்றன. எனினும் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

இறுதியில் அசாத் சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சட்ட மா அதிபரினால் 2778/2021 எனும் இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டார்,

## *Final Journey... Mrs. Gowry Shangary Thavarasha*



# At the Memorial event organized by the BASL







# At the Memorial event organized by the Thanthai Selva Welfare Soceity in Colombo












## At the Memorial event organized in Canada













## At the Memorial event organized in Swiss













# நன்றி நவில்கின்றோம்

இந்நூலுக்கு அணிந்துரையொன்றை அச்சொட்டான அழகிய நறுக்கிய வார்த்தைகளால் அழுங்கரிப்பாகத் தந்த உயர் நீதிமன்ற நீதியரசர் துரைராஜா அவர்களுக்கும்

நானும் கௌரியும் ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து கடும் நெருக்கடிக்கு மத்தியிலும் இறுதி வரை நின்று எல்லாவற்றையும் கவனித்துக்கொண்ட பெவல் ஸ்ட்ரீட நிறுவனப் - பணிப்பாளர் எஸ்.என். குமார் ஆசியன் இன்டெர்நெஷனல் ட்ரேடிங் பணிப்பாளர்.எம்.ஆர்.எம்.ரிஸ்வி அவர்களுக்கும்.

கௌரியின் இறுதி யாத்திரை நிகழ்வுகளில் எல்லாவித இடர்களையும் தாண்டி நின்று செயற்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் துரைராஜா அவர்களுக்கும் கனிஷ்ட சட்டத்தரணிகளான தர்மஜா தர்மராஜா, பிருந்தா சந்திரகேஷ், ஆர்னொல்ட் பிரியந்தன் மற்றும் விஜயன் சாந்த குமார் அவர்களுக்கும்

கௌரியின் இறுதி யாத்திரை நிகழ்வுகளில் பல இடர்களையும் தாண்டி வருகை தந்து அஞ்சலி செலுத்திய நீதிமன்ற நீதியரசர்கள் நீதிபதிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகள், சிரேஷ்ட கனிஷ்ட சட்டத்தரணிகள், உறவினர்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் உட்பட அனைத்து நல்உள்ளங்களுக்கும்

கௌரி நினைவு மலர்களான “கௌரி சரிதம்” மற்றும் கௌரி : நீதிக்கான குரல்” ஆக்க பணிகளை திறம்பட ஆற்றிய நல்லுங்களுக்கும்

இந்நூலுக்காக கௌரி பற்றிய தமது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதோடு இரங்கல் தெரிவித்த நீதியரசர்கள், நீதிபதிகள், ஜனாதிபதி சட்டத்தரணிகள் சிரேஷ்ட கனிஷ்ட சட்டத்தரணிகள், சட்டத்துறைச் செயற்பாட்டாளர்கள் அரசியல் பிரமுகர்கள், நண்பர்கள், உறவுகள் உட்பட அனைவருக்கும்

நூலாக்கப் பணிகளில் ஆரம்பம் முதல் இறுதிவரை அர்ப்பணிப்புடன் ஈடுபட்டதோடு அனைத்துக் கட்டுரைகளையும் செம்மைப்படுத்தி இந்நூலுக்கு சிறந்த குறிப்பும் எழுதிய எழுத்தாளரும் ஊடகவியலாளருமான முஸ்டீன் அவர்களுக்கும்

கௌரி சங்கரியின் நினைவுப் பாடலை இசையமைத்த ஆஸ்வரி பசால் மற்றும் கௌரி சங்கரி பற்றிய நினைவுப் பாடல் எழுதிய முஸ்டீன் அவர்களுக்கும்

கௌரி சங்கரி பற்றிய ஆவணப்படத்தைத் தயாரித்த கனிஷ்ட சட்டத்தரணி தர்மராஜா தர்மஜா அவர்களுக்கும்

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்ட யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளர் திரு பொன். விமலேந்திரன், செல்வி அருண்ணியா, செல்வி இலக்ஷிணியா அவர்களுக்கும்

இந்நூலைப் பதிப்பித்த எஸ்.ஐ.எம் பதிப்பகம் – காவத்தமுனை அவர்களுக்கும்

இந்நூலின் வெளியீட்டு நிகழ்வுக்கு ஒத்துழைப்பு நல்கிய குளோபல் டவர் நிறுவனத்தின் பணிப்பாளர் பீலிக்ஸ் செல்வதுரை, உதவிப்பணிப்பாளர், கொட்பிரி விஜயரட்னம் பெர்ணான்டோ மற்றும் பணியாளர்களுக்கும்

கௌரி சங்கரியின் இழப்பை அறிந்து உடனடியாக ஆழ்ந்த இரங்கலை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும்

கௌரி சங்கரியின் இழப்பை அறிந்து உடனடியாக ஆழ்ந்த இரங்கலை வெளியிட்ட சுவிட்சர்லாந்தின் இலங்கைக்கான தூதரகத்திற்கும்

கௌரியின் பிரிவாற்றவொனாச் சூழலை நினைவேந்தல் நிகழ்வுகளால் நெகிழ்வுகொள்ளச் செய்த சுவிட்சர்லாந்து-புங்குடுதீவு அனைத்துப் பாடசாலைகளின் பழையமாணவர் நலன் விரும்பிகள் சங்கம், கனடா- புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் மற்றும் கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றம் மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கௌரி சங்கரியின் இழப்பை அறிந்து ஆழ்ந்த இரங்கலை வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு, யாழ் மாவட்டக் கிளை,

கௌரி சங்கரியைக் குறித்து செய்தி பகிர்ந்து கொண்ட ஊடகங்கள், வீரகேசரி, தினக்குரல்,தமிழன்,சக்தி ரிவி,உதயன் குழுமம்,லங்கா சிறி. சமூகம், ரியுப் தமிழ், காலைக்கதிர், வலைப்பதிவர்கள், இணையத்தளங்கள், சமூக ஊடகங்கங்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் இவ்விடத்தில் மிக நெகிழ்வோடும் நன்றியுடனும் அனைவரையும் நினைவுகூர்கின்றேன்.

இங்ஙனம்
**அன்புக் கனவர் மற்றும் குடும்பத்தினர்**



*Author:*
*K.V. Thavarasha P.C.*



இந்நூலை ஆழமாக வாசிக்கின்ற போது
எனக்கேற்பட்ட ஒரேயொரு உணர்வு
"சட்டத்தரணிகளாக இருந்து கொண்டே
தனது மக்களுக்காக இத்தனை தைரியமாகக்
களத்தில் நின்று எல்லாச் சவால்களையும்
எதிர்கொள்ளும் திறன் எத்தனை பேருக்கு
இருக்கும் என்பதுதான்."
என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்த
முக்கியமான விடயமும் அதுதான்.
சட்ட ரீதியில் ஒரு வழக்கை எதிர்கொள்ளுதல்
என்பது பொதுவானது. முழுக்க முழுக்க
மனிதாபிமானத்தோடும் கருணையோடும்
காருண்யத்தோடும் எப்போதுமே இயங்குதல்
என்பது சாதாரணமானதல்ல.
தவராசாவும் கௌரி சங்கரியும் இந்த
விடயத்தில் ஒருவர்க்கொருவர்
சளைத்தவர்களே அல்ல.
ஒத்த இயல்புடைய இருவர் எப்படியெல்லாம்
முரண்களேயில்லாமல் ஒருமித்துப் பயணிக்க
முடியும் என்பதற்கு இவர்கள் இருவரும்
நமக்கு முன்னால் இருக்கின்ற நடைமுறை
உதாரணம் என்றே சொல்ல முடியும்.

—

*உயர் நீதிமன்ற நீதியரசர்*

**எஸ். துரைராஜா** *P.C.*
உயர் நீதி மன்றம்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

ISBN 978-955-1447-25-0

9 789551 447250

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195